# தோஸ்த்

# தமிழ் உரை

## பதினோராம் வகுப்பு

(இது ஓர் ஆடியோ - வீடியோ - ஆன்லைன் - டிஜிட்டல் வழிகாட்டி நூல்)

# 11

ஆன்லைனில் இந்தப் புத்தகத்தை இலவசமாகப் படிக்க ஸ்கேன் செய்யவும் !

எண்ணமும் எழுத்தும்

தமிழகத் தொழில்நுட்பப் புலவர்க் குழு
TAMILNADU TECHNICAL & DIGITAL SCHOLORS ASSOCIATION

## தமிழ்ப்பாடம்

| பார்க்கலாம் | படிக்கலாம் | கேட்கலாம் | எழுதலாம் |
|---|---|---|---|
| dhosth.org | ONLINE DIGITAL BOOK | DHOSTH TV YOU-TUBE CHANNEL | examport.in |
| |  | | EXAM PORT FREE ONLINE MOCK TEST |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# DHOSTH PUBLICATIONS


TUTICORIN-PALAYANKOTTAI-CHENNAI

CONTACT.NO. - 8 1 4 4 4 4 7 8 1 1

## PUBLISHERS

SRI.SANKARANARAYANAN & SRI.V. MUTHUKUMAR CHOZHAGAR

| ADDRESS | E-MAIL ID- WEBSITE | WHATS APP |
|---|---|---|
| SAKTHI COPIER<br>NO.36A, II STREET<br>SUBBIAHPURAM<br>TUTICORIN-628003 | dhosthassociation@gmail.com<br>www.dhosth.org<br>www.examport.in | To get the Digital & physical copy of competitive exam materials<br>6385524257 |

BANK DETAILS

| | |
|---|---|
| NAME | DHOSTH ASSOCIATION |
| BANK NAME | KARUR VYSA BANK |
| ACCOUNT NO | 1202115000014363 |
| IFSC CODE | KVBL00010202 |
| MICR CODE | 6270530041 |



## Warning

All Rights reserved. No part of this publication may be reproduced, stored in retrieval system or transmitted, in any form or by any means, without the prior permission in writing of **Dhosth Publications** or as expressly permitted by law, by license or under terms agreed with the appropriate reprographics rights organisation. Enquiries concerning reproduction outside the scope of the above should be sent to the rights department, **Dhosth Publications**. You must not circulate this work in any other form and you must impose this same condition on any acquirer.


Price - Rs. 399/-

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பொதுப்பாயிரம்

அன்பிற்கினிய மாணாக்கர்களே! நீங்கள் நிறைந்த அறிவும் நீடுபுகழும் ஆயுள் வளமும் அதிக மதிப்பெண்களும் பெற்று சிறந்து விளங்க "தோஸ்த் நிறுவனம்" சார்பாக மனம் நிறைந்த வாழ்த்தையும் பாராட்டையும் முதற்கண் தெரிவிக்கின்றோம். பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்களின் நிலை உணர்ந்தும், நலன் விரும்பியும், மொழிப்பாடத்தில் அவர்கள் உயர்ந்த நிலை எய்த தலைசிறந்த ஆசிரியர்கள் - தொழில்நுட்ப வழிகாட்டிகள் - வானொலி வர்ணனையாளர்கள் ஆகியோர் இணைந்து கடுமையாக உழைத்ததன் விளைச்சலே இந்நூல், தமிழகத்தில் முதன்முறையாக புதிய தொழில் நுட்ப முறையில் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது. பெரும் இலக்கியக் கூடங்களில் பாராட்டுகளைப் பெற்றது பரிசுகளுக்கு இந்நூல் முன்மொழியப்பட்டது. காரணம் இதுவரை வந்த நூல்கள் அனைத்தும் பருப்பொருள் நிலையிலேயே நின்று பாடங்களை உணர்த்த, இந்நூல் மட்டும் பருப்பொருளாகவும் நுண்பொருளாகவும் விளங்குகின்ற பேராற்றலைப் பெற்றுள்ளது. கையடக்கத்தில் கண்டும், காதுகளால் கேட்டும், கைப்பேசியால் தேய்த்தும், இணையதளத்தில் இணைந்தும் இந்தப் பெருநூலைப் பயின்று பயன்பெறலாம் என்பது திண்ணம். இவ்வகையில் இந்நூல் உருவாகக் காரணமாயிருந்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் நன்றிப் படையல் விரித்து காணிக்கையாக்குகின்றோம்.

## இந்நூலை நீங்கள் வாங்குவதால் பயன்பெறுவோர்

**1. விழிமாற்றுத்திறனாளிகள் (கண்பார்வையற்றோர்)**
**2. செவிமாற்றுத்திறனாளிகள் (காது கேளாதோர்)**
**3. உடல் மாற்றுத்திறனாளிகள். (ஊனம் உற்றோர்)**
**4. மொழிசார்கற்றல் குறைபாடுடையோர்**
**5. மெல்லக் கற்கும் திறனுடையோர்**
**6. அன்புமிகு. திருநங்கையர்**
**7. வீடில்லா மாணவர்கள்**
**8. HIV / பெரு நோயால் பாதிக்கப்பட்டோரின் பிள்ளைகள்**
**9. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ளோர்.**
**10. சீர்திருத்த பள்ளி மாணவர்கள்**
**11. சிறைச்சாலையில் பொதுத் தேர்வு எழுதுவோர்கள்**
**12. உண்டி உறைவிடப் பள்ளி மாணவர்கள்**
**13. ஆதரவற்றோர் பெண்கள் விடுதிகளில் தங்கியுள்ளவர்கள்**
**14. ஆதரவற்றோர் ஆண்கள் விடுதிகளில் தங்கியுள்ளவர்கள்**
**15. பள்ளிச் செல்ல இயலா தனித்தேர்வர்கள்**
**16. இன்னும் பலர்.**

**இந்நூல் கட்டணமின்றி உங்கள் உதவியால் வழங்க உள்ளதால் வளமான பாரதம் வலிமையான தமிழகம் உருவாக நாம் அனைவரும் இணைந்து நற்செயல் ஆற்றுவோம்!**

**வாழ்க பாரதம்!** **வாழ்க பாரத மக்கள்!**

**நன்றியுடன்**
**தோஸ்த் நிறுவனம்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தோஸ்த் தமிழ் உரை

## பதினோராம் வகுப்பு

**(இது ஓர் ஆடியோ - வீடியோ - ஆன்லைன் - டிஜிட்டல் வழிகாட்டி புத்தகம்)**

**சிறப்புப் பாயிரம்**

**முதன்மைச் சிறப்பு - விடை அமைத்தல்**

★ புதிய பாடத்திட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ளது

★ அரசு அறிவித்த வினாத்தாள் வடிவமைப்பு. (NEW MODEL BLUE PRINT)

★ எளிய விளக்கங்கள். ★ தேர்வு நோக்கில் வினா விடைகள்.

★ அரசு விடைக்குறிப்பின் அடிப்படையில் விடைகள்

★ இயல் அடிப்படையில் விடைகள்.

★ தொழில் நுட்ப வகையில் உரைப் பயன்பாடு

**பாட வகைப்பாடு**

★ கவிதைப்பேழை (செய்யுள்) ★ உரைநடை உலகம்

★ கற்கண்டு (இலக்கணம்) ★ விரிவானம் (துணைப்பாடம்)

★ மொழித்திறன் பயிற்சி

**கூடுதல் வினா விடைகள்**

★ ஒரு மதிப்பெண் ★ இரண்டு மதிப்பெண் ★ நான்கு மதிப்பெண்

★ ஆறு மதிப்பெண் ★ வினாத்தாள்கள்

**தோஸ்த் தமிழ் உரை மூலம்**
**பார்க்கலாம் - படிக்கலாம் - கேட்கலாம் -- எழுதலாம் - வெல்லலாம்**
**அப்துல் கலாம் ஆகலாம்**

★ பொதுத்தேர்வு - போட்டித்தேர்வு நோக்கில் வினாத்தாள்கள்.

★ நீங்களும் ஆசிரியராகலாம் அரசுப்பணியாளராகலாம் IAS/IFS/IRS ஆகலாம்.

★ இரட்டைச் சிறப்பு - தொழில் நுட்பப் பயன்பாடு QR CODE BENEFITS

**காணொளிப் பாடப் பதிவுகள் (VIDEO CLASSES )**

★ DHOSTH.in ( கற்றலுக்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டது)

★ DHOSTH.in வழியாக அறிவியல் முறை கையெழுத்துப் பயிற்சி (Scientific cursive writing )

★ தேர்வை எவ்வாறு எதிர் கொள்வது? ஆசிரியர்களின் இணையவழி வழிகாட்டுதல்.

★ IIT - தமிழ்வழிக் கற்றல்

www.Padasalai.Net

**QR CODE மூலம் கிடைப்பன. (ஆண்டுதோறும் மாற்றம் பெறுவன)**

★ இயல் அடிப்படையில் அடைவுத்தேர்வு வினாத்தாள்கள்.
★ மாதத்தேர்வு வினாத்தாள்கள் (ஆண்டுதோறும் மாறும் வினாத்தாள்) .
★ காலாண்டு வினாத்தாள் ★ அரையாண்டு வினாத்தாள்
★ முழு ஆண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் - விடைகள்.
★ அரசுப் பொதுத்தேர்வின் வினாத்தாளுக்கான விடைக்குறிப்புகள்

**கேட்கலாம்**

**இந்த உரையை இலவசமாக VIP TV வழியாக ஆன்லைனில் கேட்கும் வசதி**

★ கேட்பொலிப் பாடப் பதிவுகள் (AUDIO LESSONS)
★ தோஸ்த் உரையின் அனைத்துப்பாடங்களையும் கேட்கலாம்
(கற்றலின் கேட்டல் நன்று )
★ மனப்பாடப் பாடல்களையெல்லாம் பாடலாகக் கேட்கலாம்.

**தேர்வுச்சூரன் பகுதி**

★ இணையவழியில் ஒரு மதிப்பெண் தேர்வுகளை எழுதி வெற்றி பெற்றுப் பரிசு பெறுதல் (www.examport.in)
★ வருங்கால ஆன்லைன் தேர்வுகளை எதிர்கொள்ள முன்னோடியாக எழுதிப்பார்க்கலாம்.
★ IAS/ IFS / IRS மாதிரித் தேர்வு
★ TET ஆசிரியர் தகுதித் தேர்வு
★ TNPSC
★ மருத்துவ நுழைவுத்தேர்வு
★ IIT மாதிரித் தேர்வுகள் எழுதுதல்

**அப்துல் கலாம் ஆகலாம்**

**இந்த உரையைப் பயன்படுத்தும் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தோஸ்த் அமைப்பின் வருங்காலத்திட்டங்கள்**

★ DDS & (DHOSTH DIGITAL SCHOOLS ) தோஸ்த் டிஜிட்டல் பள்ளி.
★ தோஸ்த் இணையவழி வகுப்புகளை webinar மூலம் கற்றல்.
★ ஐயங்கள் தீர்க்கும் மாலை நேரப் பாடச்சாலை
★ WHATS APP வகுப்புகள்
★ தமிழ்வழியில் IAS/IFS/IRS போன்ற தேர்வுகள் எழுதுவதற்கான வழிகாட்டல்.
★ தமிழ்ப்புலவன் தேர்வுகள்.

www.Padasalai.Net

# பொதுத் தேர்வு வினாத்தாள் திட்ட வரைவு
## BLUE PRINT

**மேல்நிலை முதலாம் ஆண்டு**

**பொதுத் தமிழ் வினாத்தாள்**

**கால அளவு : 15 + 3.00 மணி நேரம்** **மொத்த மதிப்பெண்கள்: 90**

**I . பலவுள் தெரிக.**

**(அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**(ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

**வினா. எண். 1 முதல் 6 வரை - ( செய்யுளும் உரைநடையும் )** **6x1=6**

**செய்யுள் பகுதி**

★ ஆசிரியர் பெயர் ★ நூல் பெயர் ★ முக்கிய வரிகள்

★ பாட்டுடைத் தலைவன், தலைவி - பெயர்கள் ★ யார் கூற்று ?

★ சொல்லும் பொருளும் ★ திருக்குறள் - படம் கொடுத்துக் குறள் கண்டறிதல்

★ இணையான பாடல்/ கவிதை வரிகள் கொடுத்துக் குறள் கண்டறிதல்

★ குறளின் முக்கிய வரிகள் கொடுத்து பொருளை அறிதல்

**உரைநடை**

★ பாடத்தலைப்பு ★ ஆசிரியர் பெயர் ★ ஆசியரின் சிறப்பு

★ பாடப்பகுதிக்குள் வரும் முக்கிய வரிகள் ★ கூற்றுகள்

★ நுழையும் முன் ★ பெட்டிச் செய்திகள்

**வினா. எண், 7 முதல் 14 வரை** **8x1=8**

**(இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)**

**இலக்கணம்**

★ இலக்கணக்குறிப்பு ★ புணர்ச்சி விதி ★ பகுபத உறுப்புகள் ★ பாடல்-பாவகை

**துணைப்பாடம்**

★ பாடத் தலைப்பு ★ ஆசிரியர் பெயர் ★ பாடத்தின் மையக்கருத்து

★ நுழையும் முன் ★ பெட்டிச் செய்திகள் ★ கதை மாந்தர் பெயர் ★ கதை

**மொழிப்பயிற்சி**

★ பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல் ★ பிறமொழிச்சொற்களைத் தமிழாக்குதல்

★ வேர்ச்சொல் - வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றுதல் ★ கலைச்சொல் எழுதுதல்

★ ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாற்றுதல் ★ மயங்கொலிச் சொற்கள்

★ பொருள் பொருத்துதல் ★ மரபுத் தொடருக்குப் பொருள் தேர்தல்

★ நிறுத்தற்குறிகள் இடுதல்

**II. இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்**

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**வினா எண்.15 முதல் 18 (செய்யுள் பகுதி குறுவினாக்கள்)** **3x2=4**

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x2=4**

**வினா எண். 19 முதல் 21 வரை (உரைநடைப் பகுதி குறுவினாக்கள்)**

**இ) எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7x2=14**

**வினா எண். 22 முதல் 30 வரை (இலக்கணம், மொழிப்பயிற்சி)**

**இலக்கணம்**

- ★ இலக்கண வினாக்கள் ★ பிரித்து எழுதி புணர்ச்சி விதி தருக
- ★ பகுபத உறுப்பிலக்கணம் தருக

**மொழிப்பயிற்சி**

- ★ பொருள் வேறுபாடு அறிந்து தொடரில் அமைக்க
- ★ மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைக்க
- ★ மரபுப்பிழை நீக்கி எழுதுக
- ★ தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக
- ★ வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக
- ★ பிறமொழிச் சொற்களுக்குத் தமிழ்ச்சொல் எழுதுக
- ★ உரிய நிறுத்தற்குறியிட்டு எழுதுக
- ★ விடைக்கேற்ற வினா அமைக்க
- ★ சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் எழுதிப் பொருளை அறிந்து தொடரமைக்க

III. **ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x4=8**

**வினா எண். 31 முதல் 33 வரை (செய்யுள்)**

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x4=8**

**வினா எண். 34 - 36 (உரைநடை)**

**இ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3x4=12**

**வினா என். 37 முதல் 40 வரை (மொழித்திறன் பயிற்சிகள்)**

**(மாற்றுவினா) குறிப்பு - காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.**

**மொழித்திறன் பயிற்சிகள்**

- ★ இலக்கிய நயம் பாராட்டல் ★ மொழிப்பெயர்ப்பு (பழமொழிகள்/பத்தி)
- ★ அணி இலக்கணம் ★ திணை அல்லது துறை விளக்கம்
- ★ கவிதை எழுதுதல் ★ பத்தி வினா விடை ★ பழமொழிக்கேற்ற வாழ்க்கை விளக்கம்

IV. **இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க**

**அ) கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வினாக்களில் ஒன்றனைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3x6=12**

**வினா எண். 41 - செய்யுள்**

**வினா எண். 42 - உரைநடை**

**வினா எண். 43 - துணைப்பாடம்**

**(நாடக வடிவம், கதையும் கருப்பொருளும் சிதையாமல் சுருக்குதல்)**

V. **அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

**வினா எண். 44**

**அ) மனப்பாடப் பாடல்**

**ஆ) தொடங்கும் அல்லது முடியும் திருக்குறள்**

XXX****************************************************************************XXX

www.Padasalai.Net

# 11ஆம் வகுப்பு பொதுத்தமிழ்

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | மனப்பாடப் பாடல்கள் | 1 |
| | **நம்மை அளப்போம்** | |
| 2. | இயல் 1 | 5 |
| 3. | இயல் 2 | 19 |
| 4. | இயல் 3 | 31 |
| 5. | இயல் 4 | 52 |
| 6. | இயல் 5 | 64 |
| 7. | இயல் 6 | 78 |
| 8. | இயல் 7 | 86 |
| 9. | இயல் 8 | 96 |
| | **சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள் (கூடுதல் குறுவினா - சிறுவினா - நெடுவினா)** | |
| 10. | உரைநடை உலகம் | 106 |
| 11. | கவிதைப் பேழை | 147 |
| 12. | விரிவானம் | 183 |
| 13. | இனிக்கும் இலக்கணம் | 187 |
| 14. | திருக்குறள் | 199 |
| 15. | விரிவானம் - நாடக வடிவம் | 204 |
| | **ஒருவரிச் செய்திகள் கவிதைப் பேழை** | |
| 16. | நூற்பெயர் - ஆசிரியர் பெயர் | 210 |
| 17. | ஆசிரியர் குறிப்பு | 210 |
| 18. | நூல் குறிப்பு | 214 |
| 19. | முக்கிய வரிகள் | 218 |
| 20. | யார் கூற்று? | 222 |
| 21. | சொல் - பொருள் | 223 |
| | **உரைநடை உலகம்** | |
| 22. | நூற்பெயர் - ஆசிரியர் பெயர் | 225 |
| 23. | ஆசிரியர் குறிப்பு | 225 |
| 24. | முக்கிய வரிகள் | 226 |
| 25. | கூற்றுகள் | 236 |
| 26. | நுழையும் முன் | 236 |
| 27. | பெட்டிச் செய்திகள் | 238 |
| | **விரிவானம்** | |
| 28. | நூற்பெயர் - ஆசிரியர் பெயர் | 240 |


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 29. | பாடத்தின் மையக்கருத்து | 241 |
| 30. | நுழையும் முன் | 242 |
| 31. | பெட்டிச் செய்திகள் | 244 |
| 32. | கதை மாந்தர் பெயர் | 246 |
| | **இலக்கணக் குறிப்பு** | |
| 33. | இலக்கணக் குறிப்பு | 247 |
| 34. | புணர்ச்சி விதிகள் | 251 |
| 35. | பகுபத உறுப்பிலக்கணம் | 254 |
| 36. | பாடல் - பாவகை | 257 |
| | **மொழிப்பயிற்சி (ஒரு மதிப்பெண், இரண்டு மதிப்பெண்)** | |
| 37. | பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல் | 258 |
| 38. | பிறமொழிச் சொற்களுக்கு இணையாக தமிழ்ச்சொற்கள் | 258 |
| 39. | வேர்ச்சொல்லை - வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையால் அணையும் பெயராக்குக | 261 |
| 40. | கலைச்சொற்கள் | 263 |
| 41. | சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க | 268 |
| 42. | மயங்கொலிச் சொற்கள் பொருளும் தொடரும் | 271 |
| 43. | பொருள் பொருத்துக | 277 |
| 44. | மரபுத் தொடர்கள் பொருளும் தொடரும் | 279 |
| 45. | நிறுத்தக்குறியீடுகள் | 283 |
| 46. | மரபுச் சொற்கள் பொருளும் பிழைநீக்கி எழுதுதலும் | 292 |
| 47. | தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக | 294 |
| 48. | வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக | 296 |
| 49. | விடைக்கேற்ற வினா அமைக்க | 305 |
| 50. | தொகைச்சொல்லை விரித்தெழுதுக | 309 |
| 51. | வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக | 310 |
| 52. | உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்தல் | 312 |
| 53. | இருபொருள் தருக | 315 |
| 54. | இரண்டு சொற்றொடர்களாக்குக | 316 |
| 55. | தொடர் மாற்றம் | 316 |
| 56. | பழமொழிகளை ஒழுங்குபடுத்துக. | 317 |
| | **மொழித்திறன் பயிற்சி (நான்கு மதிப்பெண்)** | |
| 57. | இலக்கிய நயம் பாராட்டுக | 318 |
| 58. | அணி இலக்கணம் | 336 |
| 59. | திணை மற்றும் துறை விளக்கம் | 338 |
| 60. | பழமொழிக்கேற்ற வாழ்க்கை நிகழ்வு எழுதுதல் | 345 |
| 61. | கவிதை எழுதுதல் | 355 |
| 62. | ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்க (பழமொழிகள் / பொன்மொழிகள்) | 356 |
| 63. | பத்தியைப் படித்து வினாக்கேற்ற விடை எழுதுக (செவி மாற்றுத்திறனாளிகளுக்கான மாற்று வினா) | 367 |


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| மொழியை ஆள்வோம் | | |
|---|---|---|
| 64. | சான்றோர் சித்திரம் | 372 |
| 65. | எண்ணங்கள் எழுத்தாக்குக | 382 |
| 66. | சித்திரக்கவி | 387 |
| 67. | படித்துப் பார்த்துப் படைக்க | 388 |
| 68. | வரைபடம் கொண்டு விவரிக்க | 388 |
| 69. | சொல்லெடுத்துத் தொடர் அமைக்க | 389 |
| 70. | விளம்பரத்தைப் பத்தியாக மாற்றுதல் | 389 |
| 71. | அறிவிப்புப் பதாகை | 390 |
| 72. | கடிதம் எழுதுதல் | 390 |
| 73. | வேர்ச்சொற்களைக் கொண்டு இலக்கணக் குறிப்பு உருவாக்குதல் | 392 |
| 74. | புதிர்கள் | 394 |
| 75. | மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடிக்க | 396 |
| 76. | குறுக்கெழுத்துப் புதிர் | 397 |
| 77. | கட்டுரை எழுதுக | 398 |
| 78. | உரை எழுதுவோம் | 400 |
| 79. | தன் விவரக் குறிப்பு எழுதுக | 401 |
| 80. | சீர், அடிகளை ஒழுங்கு செய்க | 402 |
| 81. | பத்தியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுதல் | 404 |
| 82. | குறிப்புகளைக் கொண்டு பத்தியாக எழுதுதல் | 408 |
| 83. | உவமைகளைப் பட்டியலிடுக | 410 |
| 84. | உரையாடலாக மாற்றுக | 410 |
| 85. | அலகிடுதல் | 411 |
| 86. | நிற்க அதற்குத் தக | 412 |
| 87. | அறிவை விரிவு செய் | 414 |
| 88. | நூலிலுள்ள விரைவுக் குறியீடுகள் | 415 |
| 89. | நேர மேலாண்மை | 415 |
| 90. | மாதிரி வினாத்தாள் | 416 |


மனப்பாடப் பாடல்களை ஒலி (Audio) வடிவில் கேட்க Scan செய்யவும்.

www.Padasalai.Net

# மனப்பாடப் பாடல்கள்

## யுகத்தின் பாடல்

“ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை”

பாவகை: **புதுக்கவிதை** ஆசிரியர்: **சு. வில்வரத்தினம்**

## நன்னூல்

“ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே

காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.”

பா வகை: **நேரிசை ஆசிரியப்பா** ஆசிரியர்: **பவணந்தி முனிவர்**

## காவியம்

“சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.”

பாவகை: **புதுக்கவிதை** ஆசிரியர்: **பிரமிள்**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## குறுந்தொகை

"அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே."

பா வகை: நேரிசை ஆசிரியப்பா ஆசிரியர்: வெள்ளிவீதியார்

## புறநானூறு

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே."

பா வகை: நேரிசை ஆசிரியப்பா ஆசிரியர்: கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

## திருக்குறள்

### அடக்கமுடைமை

1) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

2) யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

3) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

### ஒப்புரவறிதல்

4) தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு

5) மருந்தாகித் தப்ப மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## புகழ்

6) தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

7) வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்

## நிலையாமை

8) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு

## துறவு

9) யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

10) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

## வலியறிதல்

11) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்

12) அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்

13) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உள்போல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

## காலமறிதல்

14) ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்

## குறிப்பறிதல்

15) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

## பகைத்திறம் தெளிதல்

16) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

17) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து

## மருந்து

18) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



19) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

**இரவச்சம்**

20) இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்

## புரட்சிக்கவி

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின்தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?"

பா வகை: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆசிரியர்: பாரதிதாசன்

## தொலைந்து போனவர்கள்

"உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் - வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

தின்றேன் என்பாய் அணுஅணுவாய் - உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் - பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

'நான்' என்பாய் அது நீயில்லை - வெறும்
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை - அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு."

பா வகை: சிந்து ஆசிரியர்: அப்துல் ரகுமான்



சில பிரச்னைகளுக்கு தீர்வே காலம்தான்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# இயல் ஒன்று
# மொழி
# என்னுயிர் என்பேன்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1) தவறான இணையைத் தேர்வு செய்க**

அ) மொழி + ஆளுமை = உயிர் + உயிர் இ) கடல் + அலை = உயிர் + மெய்
ஆ) தமிழ் + உணர்வு = மெய் + உயிர் ஈ) மண் + வளம் = மெய் + மெய்

**விடை இ) கடல் + அலை = உயிர் + மெய்**

**2) கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.**




அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர்மாற்றம் செய்த முதல்வர் (3) விடை: **அண்ணா**

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் (10) விடை: **கலியாண சுந்தரனார்**

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்ற பாடியவர் (6) விடை: **பாரதிதாசன்**

ஈ) பொதுவுடைமைக்கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர் (2) விடை: **ஜீவா**

**3) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

**விடை : காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.**

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

**விடை : முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வாராமல் போகாது.**

இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்

**விடை : காலத்திற்கு ஏற்றதுபோல் புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்**

ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கணும்

**விடை: ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்**

உ) தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனா பதட்டமாயிரும்

**விடை: தேர்வெழுத வேகமாகப் போகவும் நேரம் கழித்துப் போனால் பதற்றமாகும்.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4) **வினாக்கள் :**

**அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

➔ மொழிக்கு முதலில் வரும் மொத்த எழுத்துகள் = 22

➔ மொழிக்கு முதலில் வரும் உயிரெழுத்துகள் =12 **(அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ)**

➔ மொழிக்கு முதலில் வரும் மெய்யெழுத்துகள் =10 **(க் ச் த் ப் ங் ஞ் ந் ம் ய் வ்)**

➔ மெய்யெழுத்துக்கள், உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வரும்.

**ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.**

➔ மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் = 24

➔ மொழிக்கு இறுதியில் வரும் உயிரெழுத்துகள் =12 **(அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ)**

➔ மொழிக்கு இறுதியில் வரும் மெய்யெழுத்துகள் =11 **(ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பல | பலா | கரி | தீ | கொடு | பூ | நகை | நொ | கோ | கௌ | உரிஞ் |
| கண் | வெறிந் | அறம் | பொன் | தாய் | பார் | கால் | தெவ் | வாழ் | கேள் | |

**கூடுதல் தகவல்**

➔ பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் **குற்றியலுகர எழுத்தையும்** சேர்த்துக் கொள்வர்.

➔ எ.கா - எட்**டு** பந்**து**

**இ) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.**

➔ நிலைமொழியின் இறுதியெழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் எழுத்துவடிவம் உயிர் என்பதால் அஃது உயிரீறு எனப்படும்.

★ எ.கா. : மணி(ண் + **இ**) + மாலை = மணிமாலை = **உயிரீறு**

➔ நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது மெய்யீறு எனப்படும்.

★ எ.கா. : பொ**ன்** + வண்டு = பொன்வண்டு = **மெய்யீறு**

**ஈ) உயிர்முதல், மெய்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.**

➔ வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அஃது உயிர்முதல் எனப்படும்.

★ எ.கா. வாழை + **இ**லை = வாழையிலை = **உயிர்முதல்**

➔ வருமொழியின் முதலெழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில்நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது மெய்முதல் எனப்படும்.

★ எ.கா. : தமிழ் + நிலம் (**ந்** + இ) = தமிழ் நிலம் = **மெய்முதல்**

**உ) குரங்குக்குட்டி - குற்றியலுகரப் புணர்ச்சியை விளக்குக?**

➔ குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி

**"மென்தொடர்மொழி வேற்றுமைக்கண் வல்லினம்வரின் வல்லெழுத்து மிகுதலுமுண்டு"** என்னும் விதிப்படி குரங்கு + க் + குட்டி **குரங்குக்குட்டி** என்றானது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நம்மை அளப்போம்

பலவுள் தெரிக

**1) பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.**

அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்

இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதைமொழியும்

i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ

**விடை: iii) ஆ, ஈ**

**2) "கபாட புரங்களைக் காவுக்கொண்ட பின்னும்**

**காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடிமோனையைத் தெரிவு செய்க**

அ) கபாடபுரங்களை = காவுகொண்ட ஆ) காலத்தால் = கனிமங்கள்

இ) கபாட புரங்களை = காலத்தால் ஈ) காலத்தால் = சாகாத

**விடை: இ) கபாட புரங்களை - காலத்தால், முதல் எழுத்து ஒன்றி வந்துள்ளது**

**3) பாயிரம் இல்லது . . . . . . . . அன்றே**

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

**விடை: ஆ) பனுவல்**

4) **"ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைகிறது" இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.**

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்

ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை

இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது

ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்து மொழி எளிமையானது

**விடை: இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது**

**5) மொழி முதல் எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.**

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

**விடை: அ) அன்னம், கிண்ணம்**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குறுவினா

**1) பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**

**'பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது' - விளக்கம்:-**

➔ பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சிக்கு மிக அருகில் உள்ளது.

★ எழுத்துமொழி அப்படியன்று, எழுதுவதை மட்டும்தான் கை செய்கிறது.

★ பேசும் வாய், எழுதும் கையைக் காட்டிலும் உணர்ச்சியை அதிகமாக வெளிப்படுத்துகிறது.

➔ எனவே பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்திமிக்கது ஆகும்.

**2) என் அம்மை, ஒற்றியெடுத்த**
**நெற்றிமண் அழகே!**
**வழிவழி நினதடி தொழுதவர்,**
**உழுதவர், விதைத்தவர்,**
**வியர்த்தவர்க்கெல்லாம்**
**நிறைமணி தந்தவளே!**

**- இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**

**வினையால் அணையும் பெயர்கள்:-**

➔ தொழுதவர் ✶ உழுதவர் ✶ விதைத்தவர் ✶ வியர்த்தவர்

**கூடுதல் தகவல்:-**

**<u>வினையால் அணையும் பெயர் - விளக்கம்</u>**

★ ஒரு வினைமுற்று, வினையை உணர்த்தாமல் அவ்வினைக்குரிய கருத்தாவை உணர்த்தும்.

★ எழுவாயாக நின்று வேற்றுமை உருபுகளை ஏற்றும் ஏற்காமலும் வரும்.

**3) 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?**

**பாயிரம் பற்றி நான் அறியும் கருத்து:-**

➔ பாயிரம் என்பது ஒரு **புத்தகத்திற்கு ( நூலுக்கு) முகம்** போன்றது.

➔ **புத்தகத்தின் சிறப்பையும் எழுதிய ஆசிரியர் சிறப்பையும்** அறியலாம்.

➔ ஆயிரம் சிறப்பு அந்தப் புத்தகத்திற்கு இருந்தாலும்

➔ **பாயிரம் இல்லை என்றால் அந்த புத்தகத்திற்குப் பயனில்லை**

➔ பாயிரம் இரண்டு வகைப்படும். அவை: **பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம்**

**சிறப்புச் செய்தி**

<u>நன்னூல்</u>

**"ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்**
**பாயிரம் இல்லது பனுவல் அன்றே"** - <u>பவணந்தி முனிவர்</u>





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?**

| சொற்கள் | ஈற்றெழுத்து (கடைசி எழுத்து) | வகை |
|---|---|---|
| உயிரெழுத்து | த் + உ | உயிர் ஈறு |
| பன்னிரண்டு | ட் + உ | உயிர் ஈறு |
| திருக்குறள் | ள் | மெய் ஈறு |
| நாலடியார் | ர் | மெய் ஈறு |

**5) இனம், மொழி குறித்த "இரசூல் கம்சதேவ்" பார்வையைக் குறிப்பிடுக.**

**இனம் மொழி குறித்த "இரசூல் கம்சதேவ்" பார்வை**

இரசூல் கம்சதேவ் கவிதை

**"தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை,**

**வேரில்லாத மரம், கூடில்லாத பறவை."** - இரசூல் கம்சதேவ்

**கவிதையின் உட்பொருள்**

★ வேரில்லாத மரம் வீழ்ந்து விடும், கூடு இல்லாத பறவை இறந்துவிடும்

★ அது போல கவிதை என்பது, அந்த மொழி பேசும் மக்களின் இனத்தின் சிறப்பை எடுத்துச் சொல்ல வேண்டும். இல்லையேல் விரைவில் அம்மொழியும் அழியும்.

**சிறுவினா**

**1) சு. வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது?**

**தமிழ்த்தாய்க்கு, வில்வரத்தினம் பல்லாண்டு வாழ்த்து பாடியது பொருந்தும் முறை**

➔ தமிழ்த்தாயே! என் அம்மையே!

➔ ஒற்றி எடுத்த மண்ணை நெற்றியில் திலகமாகச் சூடி அழகாய் இருப்பவளே!

➔ நிலமானது தன்னைத் தொழுது, உழுது, விதைத்து, வியர்வை சிந்த உழைத்தவருக்கு நிறைந்த நெல்மணிகளைத் தரும்.

➔ அதைப்போல உன் திருவடிகளைத் தொழுதவர், அறிவால் ஆழ உழுதவர், நற்கருத்துகளை நூலில் விதைத்தவர், தமிழ் வளர வியர்வை சிந்த உழைத்தவருக்கெல்லாம் நிறைந்த புகழைத் தந்தவளே!

➔ பல யுகங்களைக் கடந்து வந்தவளே! நீ மேன்மேலும் பல்லாண்டுகள் வாழ வேண்டும் என்று போற்றுகிறார்.

➔ எனவே, இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழுக்குப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும் என்று கவிஞர் கூறுவது மிகவும் பொருத்தமானதாகும்.

**2) நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?**

**நூலின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் குறிப்பிடுவன**

**நூலின் இயல்பு**

★ **"ஒரு நூலானது இவ்வகைக் கருத்துகளைச் சிறப்பாகச் சொல்கிறது"** என்பது நூலின் இயல்பாகும்

**ஆசிரியர் இயல்பு**

★ நூல் **ஆசிரியரின் கல்வித் தகுதிகள், சிறப்புகள்** போன்றவற்றைக் கூறுவது ஆசிரியரின் இயல்பாகும்

**கற்பிக்கும் முறை**

★ நூலைக் கற்பிக்கும் **ஆசிரியருக்கு உள்ள கல்வி அறிவும்,** இது போன்ற பல நூல்களைப் படித்த **அனுபவ அறிவும் வேண்டும்** என்பது கற்பிக்கும் முறையாகும்

**மாணவர் இயல்பு**

★ நூலைக் கற்கவிருக்கும் **மாணவரின் தகுதியைப்பற்றி கூறுவது** மாணவர் இயல்பாகும்.

**கற்கும் முறை**

★ இந்த நூலை இவ்வகையில் கற்றால் சிறப்படையலாம் என்பது போன்ற **நுணுக்க முறைகளைத் தெளிவாகக் கூறுவது கற்கும் முறையாகும்**

**சிறப்புச் செய்தி**

நன்னூல் நூற்பா

**"நூலே நுவல்வோன் நுவலும் திறனே**
**கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்**
**எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம்" -** பவணந்தி முனிவர்

**3) 'என்னுயிர் தமிழ் மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.**

**என்னுயிர் தமிழ் மொழி என்பேன்**

★ நான் அடிப்படையில் தமிழ்ப்பற்று மிக்கவன்.
★ எங்கள் பெற்றோர் எனக்கு நற்றமிழில் 'நறுமுகை' என்றே பெயர் சூட்டினர்.
★ நான் தொடக்கக் கல்வி முதலே தமிழ்வழியில் பயின்று வருகிறேன்.
★ என் பேச்சும் எழுத்தும் தனித்தமிழிலேயே இருக்கும்.
★ நான் என் நண்பர்களிடம் தனித்தமிழில் மட்டுமே பேசுகின்றேன்.
★ நான் வலிந்து சென்று பிறமொழியைப் பேசுவதில்லை.
★ என் தாய்மொழியைப் பேசும்போதும் எழுதும்போதும் உள்ளத்தில் உறுதி பிறக்கிறது.
★ அன்பு ஊற்றாகப் பெருக்கெடுக்கிறது. ➔ பண்பு படிக்கப் படிக்க வளர்கிறது.
★ தமிழ்மணச் சோலையில் நானும் ஒரு மலராக இருக்கவே விரும்புகின்றேன்
★ எனவே என்னுயிர் தமிழ்மொழி என்பேன்

**கூடுதல் தகவல்**

★ என் தாய்மொழியில் எல்லாச் சொற்களும் பொருளும் உள்ளன என்பேன்.
★ தமிழில் இல்லாதவை எவையும் பிறமொழியில் இல்லை என்பேன்.
★ இலக்கியச் சொற்பொழிவில் கலந்து கொள்கிறேன்.
★ கம்பன் கழகங்களில் தமிழ்க் கனிச்சாறு பருகுகின்றேன்,
★ புதுக்கவிதை, மரபுக்கவிதை, கட்டுரை, உரைநடை, சொற்போர் போன்றவற்றில் கலந்து வெற்றி பெற்றுள்ளேன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) கூற்று - குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று நினைவுகூறத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.**

**கவிதை**

**"கூண்டு திறந்தது**
**சிறகடிக்கவா?**
**இல்லை! சீட்டெடுக்க" கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?**

**குறியீடு விளக்கம்**

➔ **நேரடியாக ஒன்றைக் குறிக்காமல் வேறு ஒரு பொருளால் உணர்த்துவது குறியீடு** ஆகும்.

➔ கூண்டு திறந்தபோதும் பறக்காமல், சீட்டெடுக்கும் கிளியின் வாழ்க்கை

★ '**அடிமை வாழ்க்கை**' என்று இக்கவிதை உணர்த்துகின்றது.

**5) மொழிமுதல், இறுதி எழுத்துக்கள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.**

**மொழிமுதல் எழுத்துகள்**

★ மொழிமுதல், எழுத்துகள் 22

★ உயிர் = 12 அவை = **அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ**

★ மெய் = 10 அவை = **க் ங் ச் ஞ் த் ந் ப் ம் ய் வ்**

| உயிர் எழுத்துகள் | பெயர்ச்சொற்கள் | மெய் எழுத்துகள் | பெயர் சொற்கள் |
|---|---|---|---|
| அ | அம்மா | க் (க் + அ = க) | கண்ணன் |
| ஆ | ஆடு | ங் (ங் + அ = ங) | ஙனம் (இடம்) |
| இ | இலை | ச் (ச் + அ = ச) | சங்கம் |
| ஈ | ஈ (ஓர் உயிரி) | ஞ் (ஞ் + அ = ஞ) | ஞமலி ( நாய்) |
| உ | உரல் | த் (த் + அ = த) | தந்தை |
| ஊ | ஊஞ்சல் | ந் (ந் + அ = ந) | நத்தை |
| எ | எட்டு | ப் (ப் + அ = ப) | பம்பரம் |
| ஏ | ஏணி | ம் (ம் + ஆ = மா) | மாமா |
| ஐ | ஐவர் | ய் (ய் + ஆ = யா) | யானை |
| ஒ | ஒட்டகம் | வ் (வ் + அ = வ) | வணக்கம் |
| ஓ | ஓடம் | | |
| ஔ | ஔவையார் | | |

**மொழி இறுதி எழுத்துகள் 24**

★ உயிர் 12 அவை - **அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ.**

★ மெய் 11 அவை - **ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள்**

| உயிர் எழுத்துகள் | சொற்கள் | மெய் எழுத்துகள் | சொற்கள் |
|---|---|---|---|
| அ | பல (ல் + அ) | ஞ் | உரிஞ் (உரிஞ்சுதல்) |
| ஆ | நிலா (ல் + ஆ) | ண் | கண் |
| இ | நரி (ர் + இ) | ந் | பொருந் (உடன்படு) |
| ஈ | தீ (த் + ஈ) | ம் | மரம் |
| உ | வரவு (வ் + உ) | ன் | பொன் |
| ஊ | பூ (ப் + ஊ) | ய் | நாய் |
| எ | சேஎ(எருது) (ச் + எ) | ர் | கார் (கருமை) |
| ஏ | தே (த் + ஏ) | ல் | கால் |
| ஐ | சிலை (ல் + ஐ) | வ் | தெவ் (பகை) |
| ஒ | நொ (துன்பம்) (ந் + ஒ) | ழ் | தமிழ் |
| ஓ | போ (ப் + ஓ) | ள் | வாள் |
| ஔ | கௌ (தீங்கு) (க் + ஔ) | | |

**குற்றியலுகரம்**

| எழுத்துகள் | கு | சு | டு | து | பு | று |
|---|---|---|---|---|---|---|
| வகைகள் | வன் தொடர் | மென் தொடர் | இடை தொடர் | ஆய்தத் தொடர் | உயிர்த் தொடர் | நெடில் தொடர் |
| எடுத்துக்காட்டு | பாக்கு | பஞ்சு | நாய்டு | அஃது | சாயுபு | வேறு |

## நெடுவினா

**1) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.**

**நான் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும், எழுத்து மொழியையும் உணரும் தன்மை**

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| கற்றதன் நோக்கம் | என்னுரை | பேச்சுமொழி | பேச்சுமொழியின் சிறப்புகள் |
| எழுத்துமொழி | நேரடிமொழி | முடிவுரை | நூற்பயன் |

**கற்றதன் நோக்கம்**

★ "பேச்சுமொழிக்கும் கவிதைமொழிக்கும் உள்ள தனித் தன்மைகளைப் பல்வேறு படைப்பாளர்களின் கருதுகளின் வழியே புரிந்து மொழி ஆளவதற்கே!"

**என்னுரை:-**

**மொழியின் தன்மை**

★ முதலில் நாம் மொழியற்ற நிலையில்தான் பிறக்கின்றோம்.

★ மொழி என்ற ஒன்று தெரிந்தவுடந்தான் நாம் உலகத்தைத் தெளிவாகக் கவனிக்கத் தொடங்குகின்றோம்.

★ மொழி என்பது **ஒலிவடிவம், வரிவடிவம்** என்னும் **இருவடிவம்** பெற்றது.

★ **ஒலிவடிவம் என்பது பேச்சு மொழி. வரிவடிவம் என்பது எழுத்து மொழி** ஆகும். அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com





**பேச்சு மொழி**

**உலகில் தோன்றிய முதல் வடிவம் பேச்சுமொழி வடிவம்தான்**

★ முதலில் மனிதன் தன் உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் பேச்சுமொழியின் மூலம்தான் வெளிப்படுத்தினான்.

➔ **பேச்சுமொழி எழுத்து மொழியைவிட எளிமையானது.**

★ பேச்சுமொழி எழுத்துமொழியைவிட உணர்ச்சிக்கு மிக அருகில் உள்ளது.

➔ **பேச்சுமொழி அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டது.**

★ பேசும் போது ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், போன்றவை தெளிவாக நம் கருத்தை வெளிப்படுத்துகின்றன.

★ பேசும்போது சொன்ன கருத்தையே திரும்ப திரும்பச் சொல்லுவதாலும், இடையில் ஒரு சிறு மவுனம் செய்வதாலும், நம் கருத்தைத் தெளிவாக விளக்க இயலும்.

★ பேசும்போது கைகால் அசைவுகள் ஏற்படுகின்றன.

★ முகத்தின் தசைநார்களில் சுருக்கங்கள் ஏற்பட்டு அபிநயங்கள் வெளிப்படுகின்றன.

★ இச்செயல்பாடே மொழிவெளிப்பாட்டின் பகுதியாக இருக்கின்றது.

★ பேச்சுமொழி மண்ணுக்கேற்ற நிறத்தில் மாறிவிடும் தண்ணீர் போன்ற எளிய திரவநிலையை உடையது.

★ உண்மையில் சொல்லப்போனால் பேச்சு என்பது மொழியில் நீந்துவது போன்றதாகும்.

★ அதனால்தான் பேச்சுமொழியில் நம் உடலின் செயல்பாடுகள் நம்மை மொழி என்னும் நீரில் முன்னோக்கிச் செல்ல செய்கின்றது.

**பேச்சுமொழியின் சிறப்புகள்**

➔ பேச்சு தன்னைத் தானே திறந்து கொள்கிற ஒரு செயல்பாடு.

★ எனவேதான் கவிஞர்கள் சிலர் தங்கள் கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர்.

★ அந்தக் கவிதைமொழிதான் நேரடிமொழி என்று அழைக்கப்படுகிறது.

➔ பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை.

★ அது பிறமொழி பேசுகின்ற உணர்வையும் ஏற்படுத்துவதில்லை.

➔ பேச்சுமொழி வேற்றுமொழி ஆவதில்லை.

★ பேச்சுமொழியில் ஒரு கவிதை எழுதும்போது அஃது உடம்பின் இயற்கையான மேல்தோல் போல் இருக்கின்றது.

★ ஆனால், எழுத்துமொழியில் கவிதையின் உணர்வைச் செயற்கையாக நாம் அணிந்து கொள்ளும் உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றன.

**எழுத்து மொழி**

**எழுத்துமொழி வாளினும் வலிமையுடையது**

★ எழுத்துமொழியில் பேச்சைக் கேட்க எதிராளி ஒருவனும் இல்லை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ எழுத்துமொழியில் எழுத்தாளனுடைய கை மட்டும்தான் பணி செய்கிறது.

★ பேச்சுமொழி திரவ நிலையெனில் எழுத்துமொழி பதிவு செய்யப்பட்டால் அது உறைந்து போன பனிக்கட்டி போன்று திட நிலையடைந்து மாறாமல் நின்றுவிடுகிறது.

★ பேச்சுமொழியை மாற்றலாம். ஆனால், எழுத்துமொழியை மாற்ற இயலாது.

★ எனவேதான் இந்தத் திட நிலையை அடைந்த எழுத்துமொழி நம்மை விட்டு பிரிந்து சென்றுவிட்ட பொருள் போன்ற ஓர் உணர்வை நமக்குத் தருகின்றது.

**நேரடிமொழி**

★ **எழுத்துமொழி** உண்மையில் **இரண்டுவகை உடையது.**

★ **ஒன்று தனக்குத் தானே பேசுவதுபோன்ற பேச்சுமொழி.**

★ **மற்றொன்று** எதிரில் இருப்பவரிடம் அல்லது **'வாசகனிடம் பேசுவது போல அமைக்கின்ற பேச்சுமொழி'.**

★ இதற்கு **'நேரடிமொழி'** என்ற பெயரும் உண்டு.

**முடிவுரை**

★ முதலில் மனிதன் தன் உணர்வுகளை பேச்சுவடிவில்தான் வெளியிட்டான் பின்புதான் எழுதி வெளிட்டான்.

★ அன்று முதல் இன்றுவரை எளிய வடிவம் பேச்சுவடிவம்தான்.

★ அத்தகைய வடிவங்களைப் பற்றி என் கருத்தை இக்கட்டுரையில் நான் வெளியிட்டுள்ளேன்.

**நூற்பயன் -** பேச்சுமொழி எழுத்துமொழியினைவிட வலிமையானது என்பதை உணர்ந்தேன்.

**2) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க?**

**நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக நான் அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைத்தல்**

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| கற்றதன் நோக்கம் | முன்னுரை | பாயிரம் விளக்கம் | பாயிரத்தின் வகைகள் |
| பொதுப்பாயிரத்தின்மூலம் அறியும் செய்திகள் | | சிறப்புப்பாயிரத்தின்மூலம் அறியும் செய்திகள் | |
| முடிவுரை | நூற்பயன் | | |

**கற்றதன் நோக்கம்**

★ நூலில் பாயிரம் இடம்பெறுவதற்கான இன்றியமையாமையை அறிவதற்காகவே

**முன்னுரை:**

★ **பவணந்தி முனிவரால் தமிழில் நமக்குக் கிடைத்த சிறந்த இலக்கண நூல் நன்னூல் ஆகும்.**

★ இக்காலத்தில் **நாம் பயன்படுத்தும் இலக்கண நூல் நன்னூல்** ஆகும்.

★ நன்னூலின் இலக்கணக் கருத்துகளை இக்கட்டுரையில் காண்போம்.

**நன்னூல் பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகள்**

**பாயிரம் விளக்கம்**

★ பாயிரம் என்பது ஒரு **நூலுக்கு (புத்தகத்திற்கு) முகம்** போன்றது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ பாயிரத்திற்கு **முகவுரை, பதிகம் போன்ற வேறு ஏழு பெயர்கள்** உண்டு

★ ஆயிரம் சிறப்பு அந்த புத்தகத்திற்கு இருந்தாலும் பாயிரம் இல்லை என்றால் பயனில்லை.

**சிறப்புச் செய்தி**

நன்னூல்

**"ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்**
**பாயிரம் இல்லது பனுவல் அன்றே."** - பவணந்தி முனிவர்

**பாயிரத்தின் வகைகள்:**

★ பாயிரம் இரண்டு வகைப்படும் 1) **பொதுப்பாயிரம்** (2) **சிறப்புப்பாயிரம்**

**பொதுப்பாயிரம்மூலம் அறியும் செய்திகள்**

**1. நூலின் இயல்பு** **2. ஆசிரியர் இயல்பு** **3. கற்பிக்கும் முறை**
**4. மாணவர் இயல்பு** **5. கற்கும் முறை**

**விளக்கம்**

**நூலின் இயல்பு**

★ ஒரு நூலானது **இவ்வகையான கருத்துகளைச் சிறப்பாகச் சொல்கிறது** என்பது நூலின் இயல்பாகும்

**ஆசிரியர் இயல்பு**

★ நூல் **ஆசிரியரின் கல்வித் தகுதிகள், சிறப்புகள்** போன்றவற்றைக் கூறுவது ஆசிரியரின் இயல்பாகும்.

**கற்பிக்கும் முறை**

★ நூலைக் கற்பிக்கும் **ஆசிரியருக்கு உள்ள கல்வி அறிவும்** இதுபோன்ற பல நூல்களைப் படித்த அனுபவ அறிவும் வேண்டும் என்பது கற்பிக்கும் முறையாகும்.

**மாணவர் இயல்பு**

★ நூலைக் கற்கவிருக்கும் **மாணவரின் தகுதியைப் பற்றி கூறுவது** மாணவர் இயல்பாகும்.

**கற்கும் முறை**

★ இந்த நூலை இவ்வகையில் கற்றால் சிறப்படையலாம் என்பது போன்ற **நுணுக்க முறைகளைத் தெளிவாகக் கூறுவது** கற்கும் முறையாகும்.

**சிறப்புச் செய்தி**

நன்னூல் நூற்பா

**"நூலே நுவல்வோன் நுவலும் திறனே**
**கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்**
**எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம்"** - பவணந்தி முனிவர்

**சிறப்புப்பாயிரத்தின்மூலம் அறியும் செய்திகள்**

➔ சிறப்புப்பாயிரத்தில் ஒரு நூலின் **பதினோர்(11) இயல்புகள்** கூறப்படும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- நூல் ஆசிரியர் = **புத்தகத்தை எழுதியவரின் சிறப்பு**களைக் கூறுகிறது.
- நூல் பின்பற்றியவழி = **முதல் நூல், வழிநூல், சார்புநூல்** ஆகியவன.
- நூல் வழங்கும் நிலப்பரப்பு = **கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு** ஆகிய எல்லைகள் காட்டுகிறது.
- நூலின் பெயர் = ஒரு புத்தகம் தெரிவிக்கும் கருத்தை மையமாகக் கொண்டது.
- யாப்பு = பா வகையைக் காட்டுகிறது (வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா)
- கருத்து = புத்தகத்தின் மையக் கருத்து. ✶ கேட்போர் = புத்தக வெளியீடு.
- கொள்வோர் = கற்கத் தகுந்த மாணவர்கள்.
- காலம் = புத்தகம் எழுதப்பட்ட ஆண்டு. ✶ களன் = புத்தகம் எழுதிய இடம்.
- காரணம் = புத்தகம் எழுதப்படுவதற்கான காரணம்.

நன்னூல் நூற்பா

**"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை**
**நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே**
**கேட்போர் பயனோடு ஆயஎண் பொருளும்**
**வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே"** - பவணந்தி முனிவர்

**முடிவுரை**

★ மாடங்களுக்கு ஓவியம் அழகு, பெரு நகரங்களுக்கு கோபுரம் அழகு, பெண்களுக்கு அணிகலன் அழகு இவைபோல நூலுக்குப் பாயிரம் அழகு என்பதைக் கொண்டேன்

**நூற்பயன்**

★ பாயிரத்தின் சிறப்பையும் இன்றியமையாமையையும் உணர்ந்தேன். நான் எழுதும் நூலில் பாயிரத்தைச் சிறப்பாக இடம்பெறச் செய்வேன்.

**3) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?**

தமிழர் வாழ்வோடும், புலம்பெயர் நிகழ்வுகளோடும், அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு இணைக்கப்பட்டுள்ளமை

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| முன்னுரை | கற்றதன் நோக்கம் | தமிழர் வாழ்வு - அன்று | புலம்பெயர்வு |
| நற்றிணைப் பாடல் | தமிழர் வாழ்வு - இன்று | நாடோடித் தமிழர்கள் | கனடா வாழ்க்கை |
| வன்னி வீதி | ஆறுமணிக்குருவி | முடிவுரை | நூற்பயன் |

**முன்னுரை:-**

- உலகிலேயே பண்பாட்டில் சிறந்தவர்கள் தமிழர்கள்
- பாட்டும் தொகையும் படைத்தவர்கள்.
- தனக்கென வாழாமல் பிறருக்காக வாழும் அன்புள்ளம் கொண்டு வாழ்ந்தவர்கள்.
- நாடு, நிலம், சாதி, மதம் எனப் பிரிந்ததால் தமிழர்கள் இன்று தங்கள் சொந்த மண்ணிலே ஏதிலிகளாக(அகதிகளாக) ஆக்கப்பட்டனர்.
- இன்று தமிழர்கள் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்து அடையும் துன்ப நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது இக்கட்டுரை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**கற்றதன் நோக்கம்**

➔ புலம்பெயர் வாழ்க்கைச் சூழல்களால் தமிழ்மொழியும் தமிழரும் உலகெங்கும் பரவியுள்ளதை தெரிந்து கொள்ளவே!

**தமிழர் வாழ்வு - அன்று**

★ தமிழர்கள் பழங்காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை என நிலத்தை வகைப்படுத்தி வாழ்ந்தவர்கள்.

★ **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** (எல்லா நாடும் நம் நாடே எல்லா நாட்டு மக்களும் என் உறவினரே) என்று வாழ்ந்தவர்கள்.

★ வந்தாரை வாழ வைக்கும் பண்புடன் வாழ்ந்தவர்கள்.

**புலம் பெயர்வு**

➔ புலம் பெயர்வது ஒன்றும் தமிழருக்குப் புதிதன்று. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தமிழர்கள் புலம் பெயர்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.

➔ தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் புலம்பெயர்வு பற்றிய செய்திகள் உள்ளன.

➔ பிரிவுகள் பல உண்டு - <u>தூதின் பிரிவு</u> <u>துணைவயிற்பிரிவு</u> - <u>பொருள்வயின் பிரிவு</u>

<u>நற்றிணை 153 ஆவது பாடல்</u>

**"வெஞ்சின வேந்தன் பகை அலைக்கலங்கி**
**வாழ்வோர் போகிய பேரூர்ப்பாழ்"** - <u>தனிமகனார் பாடல்.</u>

★ சினம் கொண்ட மன்னனின் கொடுமை தாங்க இயலாமல் தாய்மண்ணை விட்டு ஓடியவர்களின் கதையை விளக்குகிறது.

★ பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் அரசனின் சினத்திற்கு பயந்து வெளியேறியவர்கள் போலத்தான் இன்றும் புகலிடம் தேடி தமிழர்கள் மற்ற நாடுகளுக்குச் செல்கின்றனர்

**தமிழர் வாழ்வு - இன்று**

**<u>இலங்கைப் புலம்பெயர் நிகழ்வுகள்</u>**

**இலங்கைத் தமிழர்களின் சிறப்பு அவர்களுக்கு ஏற்பட்ட கொடுமையும்**

➔ இலங்கையில் ஒரு காலத்தில் பேரும் புகழோடும், சீரும் சிறப்புடன் செல்வாக்கு பெற்று வாழ்ந்தவர்கள் நம் தமிழர்கள்.

➔ ஈழத்தமிழர் என்னும் சொல்லால் அழைத்தாலும் அவர்கள் நம் உடன்பிறப்புகள் ஆவார்கள்.

➔ ஈழத்தமிழர்களின் வீரமும் விவேகமும் வளர்ச்சியும் பிறருக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியதன் விளைவாக இலங்கையில் கலவரம் வெடித்தது.

**போர் நடந்தது**

➔ எது நடக்கக் கூடாது என்று அவர்கள் எண்ணினார்களோ அது நடந்துவிட்டது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ஈழத்தமிழர்கள் தங்கள் தாய்மண்ணிலே ஏதிலிகளாக (அகதிகளாக) ஆக்கப்பட்டனர்.
- அடுத்தவேளை உணவுக்காக முகாம்களில் தட்டை ஏந்திக் காத்துக்கிடந்தார்கள்.
- நாடோடிகளானார்கள் தமிழர்கள்
- எந்த நாட்டில் தங்கள் உயிருக்குப் பாதுகாப்பு கிடைக்கிறதோ அந்த நாடுகளை நோக்கி ஓடினார்கள்.

**வெளி நாடுகளில் தமிழருக்கு நடந்த கொடுமை.**

- அப்படித் தப்பிப் பிழைக்க ஓடியபோது **பாங்காக்கில் சிறையில் அடைக்கப்பட்டார்கள்** பலர்.
- ★ **இரஷ்யாவின் பனிப் புதைவில் சிக்கிச் செத்தவர்கள் பலர்**.
- ★ **சிங்கப்பூரில் பிரம்படிப் பட்டவர்கள் பலர்.**

**கனடாவில் தமிழர்களின் நிலை**

- எட்டுக்கோடிக்கும் மேற்பட்ட தமிழர்கள் இன்று நியூசிலாந்துமுதல் அலாஸ்காவரை மறையாத சூரியன் போல் வாழ்கிறார்கள்.
- உலகின் இரண்டாவது பெரிய நாடான கனடாவில் மூன்று இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள்.
- கனடாவில் தமிழர்களின் அகதி கோரிக்கை வெற்றி பெறவில்லை.
- நிரந்தரவேலை இல்லை. அடுத்த வேளைக்கு உணவில்லை.
- ஆனால், தமிழர்கள் எழுத்துப்பணியை விடாமல் இதழ்கள் நடத்துகின்றனர்.

**வன்னி வீதி - தமிழருக்குப் பெருமை**

- ★ கனடாவில் உள்ள ஒரு சாலைக்கு **வன்னி வீதி** என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- ★ இது என்றென்றும் **தமிழரின் பெருமையைச் சுட்டும்.**

**ஆறுமணிக்குருவியும் ஆறாம்திணையும் (பனியும் பனிசார்ந்த நிலம்)**

- ★ இலங்கையில் உள்ள **ஆறுமணிக்குருவிக்கு எல்லையே கிடையாது**. இமயம் சென்றாலும் இலங்கை திரும்பிவிடும். அதுபோல ஈழத்தமிழர்களுக்கும் எல்லையில்லை.
- ★ தமிழர் வாழ்ந்த ஐவகை (மலை. காடு,வயல்,கடல்,சுரம்) நிலங்களில் **பனியும் பனி சார்ந்த நிலமும் இல்லை.**
- ★ ஆனால் இன்று பனியும் பனி சார்ந்த நிலத்தில் தமிழர்கள் வாழ்கிறார்கள்.
- ★ ஆம்! **பனியும் பனிசார்ந்த நிலமும் தமிழர்களின் ஆறாம் திணை ஆயிற்று**.

**முடிவுரை**

- பெரும் சிறப்புடன் வாழ்ந்த கயவாகு மன்னனின் பூமியில் பிறந்த நம் தமிழர்கள் இன்று தாய்நாட்டை இழந்து, தாயையும் உடன்பிறப்புகளையும் இழந்து வாழ்வது தமிழருக்கு நடந்த அவலம் என்பதை இங்கு நான் பதிவு செய்கின்றேன்.

**நூற்பயன்**

- நம் உறவுகளின் அவல நிலையை உணர்ந்து மனம் வெதும்பினேன்.

## இயல் 2

## இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

## மாமழை போற்றுதும்

### இலக்கணத் தேர்ச்சி கொள்

**1) குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**குற்றியலுகரப் புணர்ச்சி - விளக்கம்:-**

- ➔ குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்
- ➔ நிலைமொழியின் ஈற்றில் உள்ள குற்றியலுகர எழுத்துகள், வருமொழி முதலில் உள்ள சொற்களோடு புணரும்போது ஏற்படும் புணர்ச்சியே குற்றியலுகரப் புணர்ச்சி ஆகும்.
- ➔ (எ.கா.) மாசற்றார் = மாசு + அற்றார்
- ➔ விதி 1 - 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' மாசு(ச் + உ) + அற்றார்
- ➔ விதி 2 - 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' மாச் + உற்றார் = மாசற்றார்

**2) கருவிழி, பாசிலை, சிறியன், பெருங்கல் ஆகிய சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

**கருவிழி = கருமை + விழி**

- ➔ விதி 1 - 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி 'மை' கெட்டது. கரு + விழி = கருவிழி

**பாசிலை = பசுமை + இலை**

- ➔ விதி 1 - 'ஈறுபோதல்' ('மை' கெட்டது) பசு + இலை
- ➔ விதி 2 - 'ஆதிநீடல்' ('ப' 'பா' என்றானது) பாசு + இலை
- ➔ விதி 3 - 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' ('உ' கெட்டது) பாச் + இலை
- ➔ விதி 4 - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' பாசிலை

**சிறியன் = சிறுமை + அன்**

- ➔ விதி 1 - 'ஈறுபோதல்' ('மை' கெட்டது) சிறு + அன்
- ➔ விதி 2 - 'இடை உகரம் இ ஆதல்' (ற் + இ = றி) சிறி + அன்
- ➔ விதி 3 - 'இஈஐ வழி யவ்வும்' ('ய்' வந்தது) சிறி + ய் + அன்
- ➔ விதி 4 - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' சிறியன்

**பெருங்கல் = பெருமை + கல்**

- ➔ விதி 1 - 'ஈறுபோதல்' ('மை' கெட்டது) பெரு + கல்
- ➔ விதி 2 - 'இனமிகல்' ('ங்' தோன்றியது) பெருங்கல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) புணர்ச்சிவிதி தந்து விளக்குக - புலனறிவு, வில்லொடிந்தது, வழியில்லை, திரைப்படம், ஞாயிற்றுச்செலவு**

**புலனறிவு** = **புலன்** + **அறிவு**

➔ விதி - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' புலனறிவு

**வில்லொடிந்தது** = **வில்** + **ஒடிந்தது**

➔ விதி 1 - 'தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' வில் + ல் + ஒடிந்தது

➔ விதி 2 - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' வில்லொடிந்தது

**வழியில்லை** = **வழி** + **இல்லை**

➔ விதி 1 - 'இஈஐ வழி யவ்வும்' ('ய்' தோன்றியது) வழி + ய் + இல்லை

➔ விதி 2 - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' வழியில்லை

**திரைப்படம்** = **திரை** + **படம்**

➔ 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' ('ப்' தோன்றியது) திரைப்படம்

**ஞாயிற்றுச்செலவு** = **ஞாயிறு** + **செலவு**

➔ 'நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் டறஒற்று இரட்டும்' ('ற்' இரட்டித்தது)

➔ ஞாயி + ற் + று + செலவு = ஞாயிற்றுச்செலவு (வன்தொடர்க் குற்றியலுகரத்தில் ஒற்று மிகுந்து வந்தது)

**4) விதி வேறுபாடறிந்து விளக்குக.**

**தன்னொற்றிரட்டல் - தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.**

| தன்னொற்றிரட்டல் | தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் |
|---|---|
| பண்புப் பெயர்ப் புணர்ச்சியில் வரும். | தனிக்குறில்முன் ஒற்றுப் புணர்ச்சியில் இடம்பெறும். |
| நிலைமொழியின் ஈற்றில் உள்ள முற்றியலுகரம் குற்றியலுகரமாக மாறும். | நிலைமொழியின் ஈற்றில் உள்ள ஒற்றெழுத்து இரட்டிக்கும். |
| கெடுதல் புணர்ச்சியில் புணரும் | தோன்றல் புணர்ச்சியில் புணரும் |
| (எ.கா.) வெறு + இலை<br>வெ + ற் + ற் + உ = வெற்று<br>வெற்று + இலை = வெற்றிலை | கல் + அதர்<br>கல் + ல் + அதர் = கல்லதர் |

**இனமிகல் - வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்**

| இனமிகல் | வன்மைக்கு இனமாத் திரிபவும் |
|---|---|
| பண்புப் பெயர்ப் புணர்ச்சியில் மட்டுமே இடம்பெறும். | மகர ஈற்றுப் புணர்ச்சியில் வரும். |
| தோன்றல் புணர்ச்சியில் புணரும். | திரிதல் புணர்ச்சியில் புணரும். |
| (எ.கா.) கருங்குயில்<br>கருமை + குயில் ('மை' கெட்டது)<br>கரு + ங் + குயில் = கருங்குயில் | (எ.கா.) மரம் + கொத்தி<br>மர(ங்) + கொத்தி ('ம்' 'ங்' ஆக திரிந்தது) மரங்கொத்தி |

**5) பொருத்துக.**

அ) அடி அகரம் ஐ ஆதல் - செங்கதிர்

ஆ) முன் நின்ற மெய் திரிதல் - பெருங்கொடை

இ) ஆதிநீடல் - பைங்கூழ்

ஈ) இனமிகல் - காரிருள்

**<u>விடை</u>**

அ) அடி அகரம் ஐ ஆதல் - **பைங்கூழ்**

ஆ) முன் நின்ற மெய் திரிதல் - **செங்கதிர் பெருங்கொடை**

இ) ஆதிநீடல் - **காரிருள்**

ஈ) இனமிகல் - **பெருங்கொடை**

**6) கூற்றுகளைப் படித்துக் கீழ்க்காண்பனவற்றுள் சரியானதைத் தேர்க.**

அ) நிலைமொழியில் குற்றியலுகரமாகவும் வருமொழியின் முதல் உயிரெழுத்தாகவும் அமையும்போது 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதியைப் பெறும்.

ஆ) நிலைமொழியின் ஈற்றில் இ,ஈ,ஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.

இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் 'ஈறுபோதல்' என்னும் விதியே முதன்மையானதாக விளங்கும்.

ஈ) தன்னொற்றிரட்டல் என்னும் விதி பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும்.

i) அ, ஆ, இ சரி, ஈ தவறு ii) அ, இ, ஈ சரி ஆ தவறு

விடை - ii) **அ, இ, ஈ சரி ஆ தவறு**



**இந்தப் புத்தகத்தின் அனைத்துப் பக்கங்களையும் ஒலி(ஆடியோ) வடிவில் கேட்கலாம்**

VIP TV
TET TNPSC NEET

scan QR Code ➔

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

**1) பொருத்தமான இலக்கிய வடிவம் எது?**

அ) ஏதிலிக் குருவிகள் = மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு = சிறுகதை

இ) யானை டாக்டர் = குறும் புதினம் ஈ) ஐங்குறுநூறு = புதுக்கவிதை

**விடை: (இ) யானை டாக்டர் = குறும் புதினம்**

**2) மண்ணுக்கு வளம் சேர்ப்பன -**

அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

**விடை: (ஈ) இவை மூன்றும்**

**3) "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்**

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

**விடை: (ஆ) மழை பெய்யவில்லை**

**4) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை**

அ) மதிப்புக்கூட்டுப்பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்

1) அ மட்டும் சரி 2) ஆ மட்டும் சரி 3) இரண்டும் சரி 4) அ தவறு, ஆ சரி

**விடை: (1) அ மட்டும் சரி**

**5) பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.

ஈ) யானைகளால் வெகுதொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறிய முடியும்.

**விடை: (ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.**

### குறுவினா

**1) தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.**

**தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு:-**

★ தமிழ்நாட்டின் மாநில மரம் '**பனைமரம்**' ஆகும்.

**பனைமரத்தின் பயன்கள்**

★ பனைமரம் சிறந்த '**காற்று தடுப்பான்**' ஆகும்.

★ பூமியின் ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமிக்கும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ பனைமரத்தால் **நிலத்தடி நீர்மட்டம்** குறையாது.

★ பனைமரம் வளர **அதிக அளவு தண்ணீர்** தேவையில்லை.

**பனைமரத்திலிருந்து கிடைப்பவை:-**

★ **நுங்கு, பதநீர்** = நேரடி உணவுப்பொருட்கள்

★ **கருப்பட்டி, பனங்கற்கண்டு** = மதிப்புக் கூட்டுப் பொருள்கள்

**2) "ஏதிலியாய் குருவிகள் எங்கோ போயின"- தொடரின் பொருள் யாது?**

**ஏதிலியாய் குருவிகள் எங்கோ போயின - இத் தொடரின் பொருள்**

**அனாதையாக குருவிகள் எங்கோ சென்றுவிட்டன.**

**குருவிகள் செல்லக் காரணம்**

★ **மரங்கள் வெட்டப்பட்டன** ➔ **வான்மழை வரவில்லை**

★ **மண் மறுகியது** (மாறிவிட்டது).

★ குருவிகளின் வாழ்வாதாரம் பாதிப்புக்கு உள்ளானதால் ஏதிலியாய் எங்கோ போயின.

**3) வளரும் காவில் முகில்தொகை ஏறும்- பொன்
மாடம் எங்கும் அகில்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?**

★ **"வளரும் சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும்"** என்பதே அடிக்கோடிட்ட தொடர் குறிக்கும் பொருளாகும்.

★ இடம் = **தென்கரை நாடு**

**கூடுதல் தகவல்**

★ கா = **சோலை** = முகில்தொகை = **மேகக்கூட்டம்** = நாறும் = **தங்கும்**

**4) அலர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

| பகுதி | சந்தி | விகாரம் | இடை நிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|
| **அலர்** | **த்** | **ந் த் ( ந் ) ஆனது சந்தி விகாரம்** | **த் இறந்த கால இடை நிலை** | **-** | **உ வினையெச்ச விகுதி** |

**5) ய்,வ்,ஞ்,ட்,ற்,ந் - மெய்களுக்கான வேற்றுநிலை, உடனிலை மெய்ம்மயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

| **வேற்றுநிலை (பக்கத்தில் வேறு எழுத்து வரும்)** | **உடனிலை (பக்கத்தில் அதே எழுத்து வரும்)** |
|---|---|
| **ய்** - தூய்மை | **ய்**- அய்யா |
| **வ்** - தெவ்யாது | **வ்** - அவ்வை |
| **ஞ்** - இஞ்சி | **ஞ்** - மஞ்ஞை |
| **ட்** - காட்சி | **ட்** - பட்டம் |
| **ற்** - முயற்சி | **ற்** - காற்று |
| **ந்** - தந்தை | **ந்** - எந்நாள் |

**6) காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?**

**இறகு - பறவையின் வாழ்க்கை**

★ காற்றின் தீராத பக்கங்களில் சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று

★ **ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் சென்றது**.

## சிறுவினா

**1) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.**

**என்கருத்து**

**வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமே.**

**பூச்சிக்கொல்லியின் தீமைகள்**

★ மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் போன்ற உயிர் இனங்களுக்குப் பல வகை நோய்கள் ஏற்படுகின்றன.

★ **நம் முன்னோர்கள் வேதிப்பொருள் கலந்த எந்தப் பூச்சிக் கொல்லியையும் பயன்படுத்தவில்லை.**

★ நம் முன்னோர் பயன்படுத்தியது இயற்கைப் பூச்சிக்கொல்லி மருந்து.

**தேவையான பொருள்கள்**

★ **வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை** போன்றவை.

**செய்முறை:-**

★ இவற்றை ஒன்றாகச் சேர்த்து, நன்றாக இடித்து வைக்க வேண்டும்.

★ கோமியத்தில் ஊற வைக்க வேண்டும். பின்பு, பயிர்களில் தெளிக்க வேண்டும்.

**இதன் பயன்**

★ **பூச்சிகள் படிப்படியாகக் குறைந்து காணாமல் போய்விடும்.**

★ **நுண்ணுயிர்ப் பெருக்கம் ஏற்பட்டு மண்வளம் அதிகமாகும்.**

**2) காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?**

★ காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு

'**தூக்கணாங்குருவியின் கூடு**' ஆகும்.

**சிறப்பு**

➔ ஆற்றங்கரையோரமெல்லாம் வரிசை வீடுகள். ➔ புல்லைக்கொண்டுகட்டிய வீடு.

➔ சிறந்த திட்டமிடல்.

➔ தேர்ந்த கட்டடக் கலை வல்லுநராலும் கூட கட்டமுடியாத மெல்லிய வீடு.

➔ பெருங்காற்றில் அசைந்தாலும் நிலையாக நிற்கும் கூடுகள்.

➔ இவை தூக்கணாங்குருவியின் மிகச் சிறந்த தொழில்நுட்பம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3) "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

"சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருதல்

| | | |
|---|---|---|
| இடம் | - | **திருமலை முருகன் பள்ளு** |
| ஆசிரியர் | - | **பெரியவன் கவிராயர்** |
| பாடுபொருள் | - | **வடகரை நாட்டின் இயற்கை வளம்** |

**பாடல் வரியின் பொருள் :**

★ தாமரைக் குளத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.

**விளக்கம் :**

➔ வடகரை நாட்டுக் குளத்தில் தாமரை மலர்கள் பூத்திருக்கும்.

➔ மலரில் வண்டுகள் மொய்க்கும்.

➔ வண்டுகள் '**இந்தளம்**' என்னும் இசையைப் பாடும்.

➔ **மீன்கள்** குளத்தில் **துள்ளி விளையாடும்.**

➔ மீனைப் பிடித்து உண்பதற்காக **உள்ளான் பறவைகள்** வரும்.

➔ வண்டுகளின் இந்தள இசையில் உள்ளான் பறவைகள் மயங்கிவிடும்.

➔ இதனால் தாமரைக் குளத்தில் மீன்கள் பயமின்றித் துள்ளிப் பாய்ந்து விளையாடுகின்றன என்பதே இதன் பொருளாகும்.

**4) ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.**

**ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துதல்.**

➔ ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை - **முல்லைத் திணை**

➔ ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் - **முதல்பொருள் - 2 - (1. நிலம் 2. பொழுது)**

➔ ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் **கருப்பொருள்** - **14**

**முதல் பொருள்**

நிலம்
**காடும் காடு சார்ந்த இடம்**

பொழுது

1. **பெரும்பொழுது (கார்காலம்)**
2. **சிறுபொழுது (மாலை)**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| கருப்பொருள் | |
|---|---|
| தெய்வம் | **மாயோன் (திருமால்)** |
| மக்கள் | **ஆயர், ஆய்ச்சியர்** |
| புள் (பறவை) | **காட்டுக்கோழி** |
| விலங்கு | **மான், முயல்** |
| ஊர் | **பாடி** |
| நீர் | **காட்டாறு** |
| மரம் | **கொன்றை** |
| பூ | **முல்லைப்பூ** |
| உணவு | **வரகு சாமை** |
| பறை | **ஏறுகோட்பறை** |
| யாழ் | **முல்லையாழ்** |
| பண் | **முல்லைப்பண் (சாதாரிப்பண்)** |
| தொழில் | **கேழ்வரகு விதைத்தல், களை எடுத்தல்** |

**5) தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.**

**தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கு**

- ★ இனவெழுத்துகள் என்பது **நட்பெழுத்துகள்** எனப்படும்.
- ★ ஒரே ஓசையுடன் வரும் இனவெழுத்துகள் இரண்டு வகைப்படும்.
- ★ (1)உயிர் இனவெழுத்துகள் (2) மெய் இனவெழுத்துகள்

**உயிர் இனவெழுத்துகள்**

- ★ உயிர் இனவெழுத்துகள் 7 வகைப்படும்.

| எழுத்து | இனவெழுத்து | எடுத்துக்காட்டுச் சொற்கள் |
|---|---|---|
| ஆ | அ | ஆஅதும் |
| ஈ | இ | செலீஇ |
| ஊ | உ | கெடுப்பதூஉம் |
| ஏ | எ | வரவேஎ |
| ஓ | ஒ | ஓஒதல் |
| ஐ | இ | நசைஇ |
| ஔ | உ | ஔஉவியம் |

**மெய் இனவெழுத்துகள்**

- ★ மெய் இனவெழுத்துகள் **6 வகைப்படும்.**
- ★ மெய்யெழுத்துகள் **வல்லினம், மெல்லினம், இடையினம்** என மூவகைப்படும்.
- ★ சொற்களின் இடையில் மெல்லின எழுத்துகளுக்குப் பின் வல்லின மெய்கள் வரும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| வல்லின எழுத்துகள் | மெல்லினம் எழுத்துகள் (இனவெழுத்துகள்) | எடுத்துக்காட்டுச் சொற்கள் |
|---|---|---|
| க் | ங் | த ங் க ம் |
| ச் | ஞ் | ப ஞ் ச ம் |
| ட் | ண் | ச ண் டை |
| த் | ந் | த ந் த ம் |
| ப் | ம் | க ம் ப ர் |
| ற் | ன் | ந ன் றி |

**நூற்பயன்**

**<u>உயிர் இனவெழுத்துகளின் பயன்கள்</u>**

★ **அளபெடைகளையும் இன்னோசைகளையும்** அறியலாம்.

★ **மாத்திரைகளின் அளவை** அறியலாம்.

**<u>மெய் இனவெழுத்துகளின் பயன்கள்</u>**

★ **<u>தமிழ் மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பயன்படும்.</u>**

★ **<u>ணகர, நகர, னகர</u>** வேறுபாட்டினை அறிந்து கொள்ள பயன்படும்.

★ எங்கெங்கு இவ்வெழுத்துக்களைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை அறியலாம்.

**நெடுவினா**

**1) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.**

இடம் = **வேளாண் பல்கலைக்கழகம், கோவை**

தலைப்பு = **<u>"சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே"</u>**

பெயர் = **நற்கலை**

**<u>குறிப்புச் சட்டகம்</u>**

| | |
|---|---|
| **பேசுவதன் நோக்கம்** | **என்னுரை** |
| **செயற்கை மருந்துகளின் (வேதிப்பொருட்கள்) கொடுமை** | **நூற்பயன்** |

**பேசுவதன் நோக்கம்**

➔ இயற்கை வேளாண்மையின் இன்றியமையாமையை உணர்ந்து என் சமூகப் பங்களிப்பை வழங்கவே!

**என்னுரை**

➔ ஆழ்ந்த அறிவுடைய அவையோரே! பரந்த பண்புடைய பாட்டாளிகளே!
விரிந்த மனம் படைத்த விவசாயிகளே!

➔ உங்களை வணங்கி எம்முரையைத் தொடங்குகின்றேன்.

➔ என் பாட்டன் பூட்டன் அப்பன் சித்தப்பன் எல்லோரும் இயற்கை விவசாயிகளே!



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- இயற்கையோடு இயைந்து வாழ்ந்து மண்ணையும் உயிராக மதித்தவர்கள்.
- தாவரங்களைத் தங்கள் 'வரங்கள்' என்றார்கள்.
- பயிர்த்தொழில் உயிர்த்தொழில் என்று கருதி, உழவு நம்முயிர் என்றார்கள்.
- ஒரு பயிர் நடுவது நாலு உயிர் வளர்ப்பதற்குச் சமம் என்றார்கள்.
- வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை போன்றவற்றை விவசாயத்தில் மருந்தாகப் பயன்படுத்தினர்.
- பூச்சிகள் படிப்படியாகக் குறைந்து காணாமல் போகச் செய்தனர்.
- நுண்ணுயிர்ப் பெருக்கம் ஏற்பட்டு மண்வளம் மாறாமல் காத்தனர்.
- மாட்டுச்சாணம், கோமியம், வைக்கோல், காய்ந்த இலைச்சருகு, சாம்பல் ஆகியன தொழுஉரமாக்கி உழுதொழில் செய்தனர்.
- அன்று உணவே மருந்தாகி இருந்தது.

**செயற்கை மருந்துகளின் (வேதிப்பொருட்கள்) கொடுமை**

- **பசுமைப் புரட்சி** என்று நாம் பறைசாற்றினாலும்
- வேதிப்பொருட்கள் வேளாண்மையைச் சீரழித்துவிட்டது மண் மறுகியது.
- பூச்சிக்கொல்லிகள் மனித உயிர்க்கொல்லிகளாயின.
- **எண்ணிலடங்கா நோய்கள்** ஏதேதோ உருவாயின.
- பயிர்த்தொழில் கொலைத்தொழிலானது.
- மனித நோய்களுக்கு மருந்துகள் வரும்முன் மானுடம் அழிந்துவருகின்றது.
- இன்று மருந்தே உணவாகி இருக்கின்றது
- **"பழமை பழமை என்று பாவனை பேசலன்றி பழமை இருந்த நிலை கிளியே பாமரர் ஏதறிவார்"** என்னும் பாரதியாரின் கூற்றுக்கிணங்குவோம்.

**இயற்கை போற்றுவோம் ! இன்னுயிர் காப்போம்!**

★ வாழ்க இவ்வையகம்! வாழ்க இயற்கை விவசாயம்!
வாழ்க இனிய தமிழ்மக்கள்! நன்றி!

**நூற்பயன் -** இயற்கை வேளாண்மையின் சிறப்பை அறிந்தேன்.

**2) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.**

திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரித்தல்

**குறிப்புச் சட்டகம்**

| | | |
|---|---|---|
| கற்றதன் நோக்கம் | முன்னுரை | வடகரை நாடு தென்கரை நாடு இயற்கை வளம் |
| முடிவுரை | நூற்பயன் | முன்னுரை |

**முன்னுரை:-**

★ **"நெல்லுவகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது"** என்பது பழமொழி.

★ பள்ளு இலக்கியங்களில் ஒன்று **திருமலை முருகன் பள்ளு**.

★ உழவன் உழத்தி நிகழ்ச்சிகளை எளிய நடையில் நாடகம் போல் அமைத்துக் காட்டுகின்றது திருமலை முருகன் பள்ளு.

★ நாடகத்தின் ஒரு பகுதியை இக் கட்டுரையில் காண்போம்.

**இடம்பெறுவோர்: முத்த பள்ளி - இளைய பள்ளி**

| வடகரை நாடு | தென்கரை நாடு |
|---|---|
| வடகரை நாட்டில் மலரில் **வண்டுகள் மொய்க்கும்.** | தென்கரை நாட்டில் **மேகங்கள் சோலையில் தங்கும்.** |
| வண்டுகள் **'இந்தளம்'** என்னும் இசையைப் பாடும் | மேகக்கூட்டங்களின் **மணம் எங்கும் வீசும்.** |
| வண்டுகளின் இசையைக் கேட்டு **உள்ளான் பறவைகள்** மயங்கிவிடும். | **மயில்களும்** மேகங்களும் மாளிகையைச் **சூழ்ந்திருக்கும்** |
| தாமரைக்குளத்தில் இருக்கும் **மீன்கள் அதைக் கண்டு துள்ளி விளையாடும்.** | செங்கோல் **மன்னர் நீதி தவறாமல் ஆட்சி செய்வார்** |
| முத்துகளை ஈன்ற வெண்சங்குகள் பரவி இருக்கும். | குளங்களின் அலைகளால் **முத்துகள் சிதறி வெடிக்கும்.** |
| மின்னல் போன்ற பெண்கள் **'பெய்'** என்றால் மழை பெய்யும். | பெண்கள் தங்க மேடைகளில் நாடகம் நடித்து மகிழ்வார்கள். |
| முனிவர்கள் கூறும் **வார்த்தைகள் உண்மையாக நடக்கும்.** | அழகான கொன்றை **மலர்களை வண்டுகள் மொய்க்கும்.** |
| புலவர்கள் **'திருமலைச் சேவகனுக்குப் பாமாலை சூட்டுவார்கள்'** | தென்னாடுடைய சிவபெருமான் **கொன்றைப்பூ மாலையைச் சூடியிருப்பான்.** |
| **'திருமலைச் சேவகன்'** என்னும் பெயர் கொண்டு இறைவன் கோயில் கொண்டிருப்பான் | **'திருக்குற்றாலநாதன்'** என்னும் பெயர் கொண்டு இறைவன் கோயில் கொண்டிருப்பான். |

**முடிவுரை:-**

★ திருமலை முருகன் பள்ளு மூலம் தமிழ்நாட்டின் இயற்கை வளத்தை தெரிந்து கொண்டேன்.

**நூற்பயன்:-** பண்டைய தமிழ்நாட்டு இயற்கை வளம் அறிந்தேன்.

**3) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.**

யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நான் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுகின்றேன்.

**குறிப்புச் சட்டகம்**

| | | |
|---|---|---|
| எழுதுவதன் நோக்கம் | முன்னுரை | மனிதனின் கீழ்மைகள் |
| செய்ய வேண்டிய நன்மைகள் | முடிவுரை | நூற்பயன் |

**எழுதுவதன் நோக்கம்**

★ காட்டு விலங்குகளின் மேன்மை அறிந்து, கீழ்மை அகற்றி, உயிரினங்களைப் போற்றவே!

# தோஸ்த் தமிழ் உரை + 1

**முன்னுரை**

★ **"காட்டுக்கு அழகு யானை நல்ல கவிதைக்கு அழகு மோனை"** என்று எங்கள் தமிழாசிரியர் கூறுவார்.

★ யானைகள் இயற்கையின் வரங்கள். இறைவனின் வடிவங்கள்.

★ **யானை டாக்டர்** என்னும் கதையின் ஆசிரியர் **திரு. ஜெயமோகன் ஐயா** ஆவார்.

★ அவர்வழி என்னுரையைத் தொடங்குகின்றேன்.

**மனிதனின் கீழ்மைகள்**

➔ விலங்குகள் தங்கள் உணவுத் தேவைக்காக மட்டுமே காட்டை விட்டு வெளியே வரும்.

➔ மனிதன் நாட்டை விட்டு, காட்டுக்குள் வீட்டைக் கட்டினான்.

➔ விலங்குகளை வேட்டையாடினான்.

★ **'காடுகளைக் காப்பேன்!'** எனக் கூறி விலங்குகளை அழித்தான்.

★ **'மனிதனின் கீழ்மைகள்'** நாள்தோறும் வளர்கின்றன.

➔ அதன் சாட்சியாக யானைகளின் மரணங்கள் நிகழ்கின்றன.

➔ சுற்றுப்பயணம் என்ற பெயரில் காட்டுக்குள் வசதியானவர்களும் படித்தவர்களும் வருகின்றனர்.

➔ அவர்கள் குடித்துவிட்டு வெறியுடன் காட்டுமரங்களின்மீது **மதுக்குப்பிகளை எறிகின்றனர்.**

➔ அவை உயிரினங்களுக்கு மிகவும் ஆபத்தானவை.

★ காட்டு உயிரினங்களின் வாழ்விடங்களுக்கு **போதைப் பொருட்களை எடுத்துச் செல்வது முதல் குற்றம்.**

➔ போதைப் பொருட்கள்மூலம் அவற்றுக்கு ஊறுவிளைவிப்பது மன்னிக்க முடியாத குற்றம்.

➔ மதுக்குப்பிகள், மற்ற உயிரினங்களைவிட யானைகளுக்கு மிகவும் ஆபத்தானவை.

➔ குரங்குகளுக்கு தரும் பழங்களிலே மிளகாய்ப்பொடியை நிரப்பிக் கொடுக்கிறான்.

➔ குரங்குகளைக் கோல்கொண்டு மிரட்டுகிறான், மான்களைநோக்கி கற்களை வீசுகிறான்.

➔ யானை குறுக்கே வந்தால் வாகனத்தின் ஒலிப்பானை உரக்க அடித்து, அச்சுறுத்துகின்றான்.

➔ ஆபத்தான விலங்குகளின் அருகில் சென்று தொட்டுபார்க்கின்றான்.

**செய்ய வேண்டிய நன்மைகள்**

➔ மனிதன் விலங்குகளுக்குத் துன்பம் செய்ய அனுமதிக்க மாட்டேன்.

➔ இவை போன்ற தீமைகளை ஒரு நாளும் விலங்குகளுக்குச் செய்ய மாட்டேன்.

➔ காட்டில் வனத்துறையின் முன்னனுமதி பெற்றுச் செல்வேன்.

➔ யானைகளுக்குப் பிடிக்காத வெண்ணிற ஆடைகளைக் காட்டில் அணிய மாட்டேன்.

➔ யானைகள் நமது பண்பாட்டு அடையாளம் என்பதை உணர்த்துவேன்.

**முடிவுரை**

★ **'காட்டின் மூலவர்'** என்றழைக்கப்படுவது **'யானை'**.

★ **'யானைகள் புத்துணர்வு முகாமுக்குச் சென்று உதவிடுவேன்'**

**நூற்பயன் - "**உயிரினங்களைப் போற்றும் பண்புகளை உணர்ந்தேன்**".**



எங்கே விழுந்தோம்னு பார்க்குறதை விட எங்கே வழுக்கினோம்னு பார்த்தா நல்லது

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் 3
# பண்பாடு
# பீடு பெற நில்



## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1) பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?**

**பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை**

★ பகுதி ➔ விகுதி ➔ இடைநிலை ➔ சந்தி ➔ சாரியை ➔ விகாரம்

**2) காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**இடைநிலை விளக்கம்**

★ பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது இடைநிலை ஆகும்.

★ வினைச்சொல்லின் காலத்தைத் தெளிவாகக் காட்டுவது இடைநிலையாகும்.

| இடை நிலைகள் | காலங்கள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| த், ட், ற், இன் | இறந்தகால இடைநிலைகள் | கொடுத்தான் கொடு + த் + த் + ஆன் |
| கிறு, கின்று, ஆநின்று | நிகழ்கால இடைநிலைகள் | பார்கின்றான் பார் + கின்று + ஆன் |
| ப், வ் | எதிர்கால இடைநிலைகள் | படிப்பான் படி + ப் + ப் + ஆன் |

**3) பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்.**

**சந்தி- விளக்கம்**

★ சந்தி என்பதற்கு தமிழில் **புணர்ச்சி** என்று பெயர்.

★ பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் பகுபத உறுப்பு சந்தி ஆகும்.

★ பெரும்பாலும் **க் ச் த் ப்** ஆகியன சந்தியாக வரும்.

★ உடம்படுமெய்கள் **(ய், வ்)** சந்தியாக வருவதுண்டு

★ எடுத்துக்காட்டுச் சொல் = படித்தான் = படி + **த்** + த்+ ஆன்

**சாரியை - விளக்கம்**

★ இடை நிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் பகுபத உறுப்பு சாரியை ஆகும்.

★ (எ.கா.) பார்த்தனன் பார் + த் + த் + அன் + அன்

★ சந்தி வர வேண்டிய இடத்தில் உயிர்மெய் எழுத்து வந்தால் அதனைச் சாரியை என்று குறிப்பிடல் வேண்டும்.

★ (எ.கா.) தருகுவென் தா (தரு) + கு + வ் + என்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) விகுதிகள் எவற்றை உணர்த்தும்?**

**விகுதிகள் உணர்த்துவன**

★ வினைமுற்று ➔ எச்சங்கள் ➔ தொழிற்பெயர்

★ வினையால் அணையும் பெயர்கள் ➔ வியங்கோள் போன்றவற்றையும்

★ இவற்றுள் **திணை, பால், எண், இடம், பெயர்** போன்றவற்றையும் வெளிப்படுத்தும் உறுப்பு விகுதி எனப்படும்.

★ எ.கா = கொடுத்தான் = கொடு + த் + த் + ஆன்
(உயர்திணை + ஆண்பால் + ஒருமை + படர்க்கை வினைமுற்று)

**5) உறுப்பிலணக்கம் தருக.**

| சொற்கள் | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| அமைந்து | **அமை** | **த்** | **ந் த்** , ந் ஆனது சந்தி விகாரம் | **த்** இறந்தகால இடைநிலை | - | **உ** வினையெச்ச விகுதி |
| பார்த்தான் | **பார்** | **த்** | - | **த்** இறந்தகால இடைநிலை | - | **ஆன்** ஆண்பால் வினைமுற்று விகுதி. |
| தோன்றி | **தோன்று** | - | - | - | - | **இ** வினையெச்ச விகுதி |
| வருகிறார் | **வா** | **வரு** | **வா** 'வ' எனக் குறுகியது பகுதி விகாரம் | **கிறு** நிகழ்கால இடைநிலை | - | **ஆர்** பலர்பால் வினைமுற்று விகுதி |
| செய்க | **செய்** | - | - | - | - | **க** வியங்கோள் வினைமுற்று விகுதி |
| நடந்தனன் | **நட** | **த்** | **த் ந்** ஆனது சந்தி விகாரம் | **த்** இறந்தகால இடைநிலை | **அன்** | **அன்** ஆண்பால் வினைமுற்று விகுதி |
| கொடுத்த | **கொடு** | **த்** | - | **த்** இறந்தகால இடைநிலை | - | **அ** பெயரெச்ச விகுதி |

**6) பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க**

அன் = வந்தனன் = வா (வ) + த்(ந்) + த் + அன் + அன்.

இன் = முறிந்தது = முறி + த்(ந்) + த் + அ + து

கு = காண்குவன் = காண் + கு + வ் + அன்

அன் = சென்றன = செல்(ன்) + ற் + அன் + அ

**விடை** : இன் = முறிந்தது

7) **பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**

| பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|
| பேசு | இன் | ஆன் |
| எழுது | கிறு | |
| வணங்கு | வ் | |
| | ஆ | |

பேசு + இன் + ஆன் = பேசினான்
பேசு + கிறு + ஆன் = பேசுகிறான்
பேசு + வ் + ஆன் = பேசுவான்
பேசு + ஆன் = பேசான்

எழுது + இன் + ஆன் = எழுதினான்
எழுது + கிறு + ஆன் = எழுதுகிறான்
எழுது + வ் + ஆன் = எழுதுவான்
எழுது + (ஆ) ஆன் = எழுதான்

வணங்கு + இன் + ஆன் = வணங்கினான்
வணங்கு + கிறு + ஆன் = வணங்குகிறான்
வணங்கு + வ் + ஆன் = வணங்குவான்
வணங்கு + (ஆ) ஆன் = வணங்கான்

8) **வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்குக.**

| வேர்ச்சொல் | எதிர்மறை இடைநிலை | விகுதி |
|---|---|---|
| பார் | ஆ | ஆன் |
| காண் | அல் | அள் |
| உரை | இல் | அர் |

பார் + ஆ + ஆன் = பாரான்
காண் + அல் + அள் = காணலள்
உரை + இல் + அர் = உரையிலர்

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

1) **கூற்று - "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்**
**விளக்கம் - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.**

அ) கூற்று சரி, விளக்கம் தவறு
ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி
ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

**விடை : (ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?**

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

**விடை : (ஆ) அண்ணாமலையார்**

**3) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

**1) வெள்ளிவீதியார் - அ) புறநானூறு 2) அண்ணாமலையார் - ஆ) சி.சு.செல்லப்பா**

**3) வாடிவாசல் - இ) குறுந்தொகை 4) இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து**

1) அ ஆ இ ஈ 2) ஆ ஈ அ இ 3) இ ஈ ஆ அ 4) இ ஈ அ ஆ

**விடை : (3) இ ஈ ஆ அ**

**4) 'இனிதென' - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.**

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்

**விடை : (அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

**5) பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் யாவை?**

அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்

ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, சந்தி, விகாரம்

ஈ) பகுதி, விகுதி

**விடை : (ஈ) பகுதி, விகுதி**

## குறுவினா

**1) 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?**

★ "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எடுத்தாளப்பட்டுள்ள விதம்

| திராவிட மொழிகள் | கோட்டை என்னும் சொல் |
|---|---|
| தமிழ் | கோட்டை, கோடு |
| மலையாளம் | கோட்ட, கொடு |
| கன்னடம் | கோட்டே, கோண்டே |
| தெலுங்கு | கோட்ட |
| துளு | கோட்டே |
| தோடா | க்வர்ட் |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) காவடிச்சிந்து என்பது யாது?**

**காவடிச்சிந்து என்பது**

★ முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் காவடியில் கொண்டு செல்லும் அடியவர் பலர்.

★ அடியவர்கள் தங்களின் தோளில் சுமக்கும் காவடியின் சுமை நீங்க ஆடல்பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.

★ அடியவரின் வழிநடைப் பாடலாகக் "**காவடிச்சிந்து**" என்ற பாட்டு வடிவம் தோன்றியது.

★ அதுவே இன்றளவும் **காவடிச்சிந்து** எனப்படுகின்றது.

**சிறப்புச் செய்தி**

★ தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள **இசைமரபே** காவடிச்சிந்து எனலாம்.

**3) குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?**

**குறுந்தொகை குறித்து நான் அறியும் செய்திகள்**

★ குறுந்தொகை சங்க இலக்கிய நூலாகும். → **எட்டுத்தொகை** நூல்களுள் ஒன்று

★ குறுந்தொகையின் திணை = **அகத்திணை**

★ மொத்தம் **401 பாடல்களை** உடையது.

★ **நல்ல** என்னும் அடைமொழி கொண்டது.

★ உரையாசிரியர்கள் அதிகமாக மேற்கோள் காட்டிய நூல் குறுந்தொகையாகும்.

★ இந்நூலே **முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூல்** எனக் கருதப்படுகிறது.

★ இந்நூலைத் **தொகுத்தவர் பூரிக்கோ** ஆவார்.

★ இந்நூலுக்குக் **கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்** ஆவர்.

**4) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?**

**தமிழர்களின் புகழ் பெறும் பாங்கு**

★ புகழ் வரும் என்றால் **தம் உயிரையும் கொடுப்பார்கள்.**

**தமிழர்கள் பழி ஒழிக்கும் பாங்கு**

★ பழி வரும் என்றால் **உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.**

**சிறப்புச்செய்தி**

புறநானூறு

**"புகழ் எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர்"** - **கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தோஸ்த் தமிழ் உரை + 1

**சிறுவினா**

1) **'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

**மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ள விதம் :**

★ மலை, **மனித சமூகத்தின் ஆதி நிலமாகும்.**

★ அகத்திணை இலக்கியங்கள் **நிலத்தை 5 வகையாகப் பிரித்தன.**

★ மலையும் மலை சார்ந்த பகுதியைக் **குறிஞ்சி** என்பர்.

★ குறிஞ்சிநிலப் பாடல்கள் மலைவாழ் தமிழர்தம் சீரிய வாழ்வைப் பேசின.

★ **திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள்ஆவர்.**

★ **திராவிடர்களை மலைநில மனிதர்கள்** என்று அழைக்கிறார் **கமில் சுவலபில்.**

★ **"சேயோன் மேய மைவரை உலகம்"** என்று உரைக்கிறது தொல்காப்பியம். (முருகன்(சேயோன்) வாழிடம் மலை)

★ **"விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ"** என்கிறது திருமுருகாற்றுப்படை.

★ கடையெழு வள்ளல்கள் ஏழுபேர் மலைத் தலைவர்களாகவே இருந்தனர்.

★ பாண்டிய மன்னன் ஒருவன் **'மலயத்துவஜ'** என்று அழைக்கப்பட்டான்.

★ தமிழ்நாட்டில் 'மலை' என்ற சொல்

★ **17** இடப்பெயர்களில் **முன்னொட்டாகவும்**(Prefix)

★ **84** இடப்பெயர்களில் **பின்னொட்டாகவும்** (Suffix) இடம் பெறுகின்றது.

2) **தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச் சிந்து என்பதை விளக்குக.**

**தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து ஆகும் :**

★ காவடி தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று.

★ உலகெங்கும் தமிழர்கள் வாழ்கின்றார்கள்.

★ **தமிழ்க்கடவுள் முருகன்** ஆவார்.

★ முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் காவடியில் கொண்டு செல்லும் அடியவர் பலர்.

★ அடியவர்கள் தங்களின் தோளில் சுமக்கும் காவடியின் சுமை நீங்க ஆடல்பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.

★ அந்த அடியவரின் வழிநடைப் பாடலாகக் **'காவடிச்சிந்து'** என்ற பாட்டு வடிவம் தோன்றியது.

★ அதுவே இன்றளவும் **காவடிச்சிந்து** எனப்படுகின்றது.

**சிறப்புச் செய்தி**

★ காவடிச்சிந்து தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள **இசைமரபே** காவடிச்சிந்து எனலாம்.

★ இன்றும் இலங்கை, **சிங்கப்பூர், மலேசியா** போன்ற நாடுகளில் காவடி எடுக்கும் விழா சிறப்பாக நடைபெறுகின்றது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) பகுபத உறுப்பிலக்கணம் கூறுக.**

| சொற்கள் | பகுதி | சந்தி | விகாரம் | இடை நிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| வருகின்றாள் | வா | - | வரு வா, வரு என மாறியது பகுதி விகாரம் | கின்று நிகழ்கால இடை நிலை | - | ஆள் பெண்பால் வினைமுற்று விகுதி |
| வாழ்வான் | வாழ் | - | - | வ் எதிர்கால இடை நிலை | - | ஆன் ஆண்பால் வினைமுற்று விகுதி |
| காண்பிப்பார் | காண்பி | ப் | - | ப் எதிர்கால இடை நிலை | - | ஆர் பலர்பால் வினைமுற்று விகுதி |
| பிரிந்த | பிரி | த் | ந் த் (ந்) ஆனது சந்தி | த் இறந்த கால இடை நிலை | - | அ பெயரெச்ச விகுதி |

**4) சங்க காலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக?**

| சங்ககாலம் | இக் காலம் |
|---|---|
| அக் காலத்தில் தூய அன்பொழுக்கம் கொண்டவர்களாகத் தலைவனும் தலைவியும் இருந்தனர். | இக் காலத்திலும் தூய அன்பிற்குத் தலைவன் தலைவியிடத்தே குறைவில்லை. |
| அக்காலத்தே தலைவிக்காகத் தலைவன் பொருள் ஈட்டச் செல்வான் | இக் காலத்திலும் தலைவிக்காக முறையான கல்வி, தொழில் எனத் தேடி தலைவன் செல்கின்றான். |
| தலைவிக்காகத் தலைவன் தான் ஈட்டிய பொருளையெல்லாம். பரிசுப்பொருள்களாகக் கொடுத்து மணம் முடிப்பான். | இக் காலத்தில் தலைவியை மணம் முடிக்க தலைவியின் வீட்டிலிருந்து மணக்கொடை(வரதட்சனை) பெறும் வழக்கம் உள்ளது. |
| பொன் கொடுத்து பெண் பெறும் இந்நிகழ்ச்சி தலைவனின் ஆண்மையை உணர்த்துகின்றது. | மணக்கொடை பிடுங்கும் இந்நிகழ்வு தலைவனும் பெற்றோரும் செய்யும் அவலத்தை உணர்த்துகின்றது. |
| அக் காலத்தில் இல்லறச் சிக்கல் உண்டு. திருமண முறிவு (DIVORCE)இல்லை. | இக்காலத்தில் இல்லறச் சிக்கலும் உண்டு. மணக்கொடையால் திருமண முறிவுகள் அதிகம். |

**5) புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.**

| புறநானூற்றுப் பாடல் வரிகள் - இணையான திருக்குறட்பாக்கள் |
|---|
| புறநானூற்றுப் பாடலின் ஆசிரியர் - கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி<br><br>திருக்குறளின் ஆசிரியர் - தெய்வப்புலவர். திருவள்ளுவர் |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| புறநானூற்றுப் பாடல் - **"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்; அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத் தமியர் உண்டலும் இலரே"** விருந்து<br><br>புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும்<br>வேண்டற் பாற் றன்று (அதிகாரம்: விருந்தோம்பல் - குறள் 82) | |
| புறநானூற்றுப் பாடல் - **"புகழ் எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்"**<br>வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய<br>வாழ்வாரே வாழா தவர் (அதிகாரம்: இல்லறவியல் - குறள் 240) | |
| புறநானூற்றுப் பாடல் - **"பிறர் அஞ்சுவது அஞ்சி"**<br>அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது<br>அஞ்சல் அறிவார் தொழில். (அதிகாரம்: அறிவுடைமை - குறள் 428) | |
| புறநானூற்றுப் பாடல் - **"தமக்கென முயலா நோந்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"**<br>தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு<br>வேளாண்மை செய்தற் பொருட்டு (அதிகாரம்:ஒப்புரவறிதல் - குறள் 212 ) | |

## நெடுவினா

**1) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன -கூற்றினை மெய்ப்பிக்க.**

<u>இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - இதனை மெய்ப்பித்தல்</u>

**<u>குறிப்புச்சட்டகம்</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| **முன்னுரை** | **கற்றதன் நோக்கம்** | **அடிப்படைப் பதிவு** | **இலக்கியப் பதிவு** | |
| **வாழ்விடப் பதிவு** | **சொல்பதிவு** | **இடப்பெயர்ப்பதிவு** | **முடிவுரை** | **நூற்பயன்** |

**முன்னுரை :**

★ **மலை மனித சமூகத்தின் ஆதி நிலமாகும்.**

★ மலையும் மலை சார்ந்த பகுதியைக் **<u>குறிஞ்சி</u>** என்று தமிழ் அகத்திணையியல் குறிக்கும்.

★ தமிழர்தம் சீரிய வாழ்வினைப் பற்றி சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.

**கற்றதன் நோக்கம்.**

★ தமிழரின் வாழ்விடத்தின் உயர்களமான மலையையும் = மலைசார்ந்த மக்களின் பண்பாட்டுக் கூறுகளை தமதாக்கிக் கொண்டு வாழ்வதற்கே!

**அடிப்படைப் பதிவு**

★ மலைப்பெயர்கள் குறித்த ஆய்வை OROLOGY என்று கூறுவர்.

★ தமிழர் வாழ்வில் மலைகள் பெரும் சிறப்பு குறிப்பிடத்தக்கது.

★ திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள்.

★ திராவிடர்களை மலைநில மனிதர்கள் என்று அழைக்கிறார் ஆய்வாளர் கமில் சுவலபில்.

**இலக்கியப் பதிவு**

- **"சேயோன் மேய மைவரை உலகம்"** என்று உரைக்கிறது தொல்காப்பியம். **முருகன்** (சேயோன்) வாழிடம் மலை.
- **"விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ"** என்கிறது திருமுருகாற்றுப்படை.
- கடையெழு வள்ளல்கள் ஏழுபேர் மலைத் தலைவர்களாகவே இருந்தனர்.
- பாண்டிய மன்னன் ஒருவன் **'மலயத்துவஜ'** என்று அழைக்கப்பட்டான்.

**வாழ்விடப் பதிவு**

- தோடர் இனத்தவர் நீலகிரியில் வாழ்பவர்கள் ஆவர்.
- தோடர்கள், பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள்.
- கொட்டில்களைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்கள் அமைத்திருக்கின்றனர்.
- தோடர்களின் வீடுகளில் திண்டுகள் (மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.
- **'மலை'** என்பது **"உயரமானது"** என்றும் பொருள்படும்.
- **'குன்று'** என்பது உயரம் **"குறைவானது"** என்றும் பொருள்படும்.

**சொல்பதிவு**

- கோட்டை = கோடு
- **'கோட்டை'** என்ற சொல்லுக்குக் காவல் மிகுந்த காப்பரண் எனப் பொருளாகும்.
- காப்பரண் என்பது மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது.
- திராவிடப் பழங்குடி மொழிகளிலும் கோட்டை என்ற சொல்லாக்கத்தின் வேர்களை இனங்காண முடிகிறது.
- **'கோட்டை'** என்று முடியும் இடப்பெயர்கள் தமிழ்நாட்டில்தான் **248 இடங்களில் உள்ளன.**
- **'கோடு'** என்ற தமிழ்ச்சொல்லுக்கு **மலையுச்சி, சிகரம், மலை** என்ற பொருளோடு வல்லரண், கோட்டை என்ற பொருளும் உண்டு.
- மலையரண், காட்டரண் போன்ற இயற்கை அரண்கள், மதில் சுவர்களால் அமைந்த செயற்கையான கோட்டைகளை விடவும் தொன்மையானவை.

**இடப்பெயர்ப் பதிவு**

- **கொற்கை, வஞ்சி, தொண்டி (K.V.T)** வளாகம்
- கொற்கை, வஞ்சி, தொண்டி என்னும் ஊர்ப்பெயர்கள் பழந்தமிழர்களின் அரசியல் பொருளியல் மற்றும் பண்பாட்டு உருவாக்கத்தின் விளைவாக உருவானவை.
- சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்கு கொற்கை, வஞ்சி, தொண்டி ஆகிய பெயர்கள் ஆணிவேர் அடையாளங்கள்.
- இவ்வூர்கள் கடந்த கால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்கள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**முடிவுரை :**

★ வரலாறும் வாழ்விடமும் மொழியியலும் இலக்கியமும் தமிழர்களுடன் இயற்கையாக இயைந்திருந்தது.

★ அதைப் போலவே இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்து இருந்தன என்பதை இக்கட்டுரை தெளிவுப்படுத்துகின்றது.

**நூற்பயன்**

★ தமிழர்களும் இடப்பெயர்களும் இயற்கையோடு பின்னிப்பிணைந்தவை என்பதைத் தெளிந்தேன்.

**2) நடைப்பயணிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது -இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.**

நடைப்பயணிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது -இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்தல்

**குறிப்புச்சட்டகம்**

| | | |
|---|---|---|
| முன்னுரை | கற்றதன் நோக்கம் தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து | |
| மதுரகவி அண்ணாமலையார் | கழுகுமலைக் கோயில் சிறப்புகள் | |
| முடிவுரை | நூற்பயன் | |

**முன்னுரை**

★ **'காவடி'** தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று.

★ உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் **தமிழ்க்கடவுள் முருகன்** ஆவார்.

★ தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது.

★ அக் காவடி தோன்றிய வரலாறு அதன் சிறப்புகளை இக் கட்டுரையில் காண்போம்.

**கற்றதன் நோக்கம்**

★ இறைப்பண்புகளோடு இணைந்த வாழ்க்கையே மனிதம் என்பதை உணர்ந்து பின்பற்றுதல்

**தமிழ் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து :**

★ தமிழ்க்கடவுள் முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் காவடியில் கொண்டு செல்லும் அடியவர் பலர்.

★ அடியவர்கள் தங்களின் தோளில் சுமக்கும் காவடியின் சுமை நீங்க ஆடல்பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.

★ அந்த அடியவரின் வழிநடைப் பாடலாகக் 'காவடிச்சிந்து' என்று பாட்டு வடிவம் தோன்றியது. அதுவே இன்றளவும் **காவடிச்சிந்து** எனப்படுகின்றது.

**மதுரகவி அண்ணாமலையார்**

★ **சென்னிக்குளம் அண்ணாமலையார்** புலவர் பாடும் காவடிச்சிந்து.

★ தேன்கவிதைகளைத் தோள்களில் சூடியிருக்கின்றான் தீரன் முருகன்.

★ வலிமைமிகு வேலினைத் தன் கைகளில் தாங்கிக் கொண்டிருக்கும் வீரன் முருகன்.

★ கழுகுமலையில் வீற்றிருப்பவன் முருகன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## கழுகுமலை கோவில் சிறப்புகள்

**கோபுரச் சிறப்பு**

★ தங்க நிறத்திலான கவசமானது தேவர்களுடைய வர்ணத்தினை விடவும் உயர்ந்துள்ளது.

★ கவசத்தின் ஒளியானது பார்ப்பவர்களின் கண்களைக் கூசச் செய்யும்.

★ கவச ஒளி உலகமே மாசுபடியாமல் பரவியபடி வலம் வருகின்றது.

**இசையும் நடனமும்**

★ கோயிலில் மெல்லிடைப் பெண்கள் தங்களுடைய சிலம்புகள் ஒலித்திடும்படியாக நடனமாடுவார்கள்.

★ மத்தளம் இசைக்கப்படும். இதை இடி என அஞ்சி பாம்புகள் ஒடுங்கும்.

**கொடிக்கம்பமும் மதிற்சுவரும்**

★ கோயில் கொடிக்கம்பமானது விண்ணைத் தாண்டி நிற்கின்றது.

★ மதிற்சுவரும் வானுலகினையே தொட்டு அதனையும் தாண்டிவிடக்கூடிய அளவில் உயர்ந்து அமைந்திருந்தது.

★ குளிர்ந்த மழைமேகங்கள் அந்த மதிலின் மீது தங்கிச் செல்லும்.

★ அவ்வாறு தங்கி எழுந்து செல்லுகின்றபோது அவை உரசுகின்ற காரணத்தினால் மின்னலையும் இடியினையும் உண்டாக்கிச் செல்லும்.

**அருணகிரிநாதரும் அடியார்களும்**

★ அருணகிரிநாதரைப் போலவே அவருடைய திருப்புகழ் பாடல்களை அடியவர்கள் பாடுவர்.

★ அந்தப் பாடல் ஒலி வானுலக தேவர்களின் காதுகளை அடைக்கும்.

★ முருகனை நினைப்பதே தமக்கு இன்பம் என்று நினைத்து அடியவர்கள் காவடியைச் சுமந்து கொண்டு கோயிலில் நுழைவர்.

**முடிவுரை**

★ காவடிச்சிந்து தமிழ்நாட்டில் பண்டைக்காலம்முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச்சிந்து எனலாம்.

★ இன்றும் **இலங்கை, சிங்கப்பூர், மலேசியா** போன்ற நாடுகளில் காவடி எடுக்கும் விழா சிறப்பாக நடைபெறுகின்றது.

★ எனவே **காவடிச்சிந்து தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம்** என்றே சொல்லலாம்.

**நூற்பயன்**

★ தமிழர்களின் இறைத்தேடலின் வெளிப்பாடாக அமைந்த காவடி தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் என்பதை உணர்ந்தேன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.**

**வாடிவாசல் கதை வாயிலாக நான் உணர்ந்த கருத்துகள்**

**என்னுரை**

★ ஒத்தைக்கு ஒத்தையாக கோதாவில் இறங்கும் **காளைக்கும் மனிதனுக்கும் இடையே நடக்கும் போட்டி ஜல்லிக்கட்டு.**

★ போட்டிக்கு முடிவு காணும் **இடம் வாடி வாசல்.**

★ வாடிவாசலில் 'மனித ரத்தம் சிந்தலாம்'. ஆனால், "**காளை உடலில் ஒருதுளி ரத்தம்கூட சிந்தக் கூடாது.**"

★ எதன் கை ஓங்குகிறதோ அதுதான் தூக்கும்(ஜெயிக்கும்).

★ மனிதனுக்கு இது விளையாட்டு. மிருகத்துக்கு விளையாட்டன்று.

★ இக்கருத்தை உணர்த்தும் கதைதான் வாடிவாசல்.

**கற்றதன் நோக்கம்**

★ தமிழர் வீரத்தின் வெளிப்பாடான சல்லிக்கட்டு நிகழ்வு தமிழ்ப்பண்பாட்டு நிகழ்வு-களைக் கடைபிடிப்பதற்காகவே!

**வாடிவாசல்**

★ வாடிவாசலின் மூலம் நாம், நம் தமிழ்ப்பண்பாட்டின் சிறப்புகளுள் ஒன்றான **ஜல்லிக்கட்டினைப்** பற்றி அறிந்து கொள்கிறோம்.

★ ஜல்லிக்கட்டு மாடுகள் அடைக்கப்பட்டுள்ள இடம் தொழுவம்.

★ பாய்ச்சலுக்கு வரும் மாடுகள் நிறுத்தி வைக்கப்பட்ட இடம் வாடிவாசல்.

★ மோத வருகின்ற மாடுகளுக்கு வாயில் திறக்கும் இடம் **வாசல்.**

★ வாசலில் எந்த மாடு வருகிறது என்பதை முழக்கிச் சொல்வார்கள்.

**ஜல்லிக்கட்டு வீரனும் துள்ளிவரும் மாடும்**

★ மாடுபிடி வீரர்கள் மாடு நழுவாமல் இருக்க இருகைகளையும் தரையில் தோய்த்து கரகரப்பாக்கிக் கொள்வார்கள்.

★ எந்த மாட்டின் மீது எப்படி விழ வேண்டும் என்று அறிந்து கொண்டவனே வெற்றி பெறுவான்.

★ ஜல்லிக்கட்டு வீரர்கள் மாடு அடக்கும் கலையை நன்கு அறிந்தவர்கள்.

★ மாட்டை அடக்கப் பாய்பவன், தன் உடலை அதன் உடலோடு ஒட்டிக்கொண்டு வலக்கொம்பைப் பிடிக்க வேண்டும்.

★ வலக்கொம்பை பிடிக்கும் போது மாடு நான்கு கால்களையும் உயரே தூக்கித் தவ்வும்.

★ மாடு தவ்வும்போது பிடியை விட்டுவிடக் கூடாது.

★ காளை மூன்று முறை இது போல தவ்வும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**வெற்றிப்பரிசு**

★ மூன்றாவது முறையை மீறித் தவ்வுவது கிடையாது.

★ மாட்டை அடக்கிய பின் கொம்புக்குக் கொம்பு மாறிச் சுற்றிக் கட்டப்பட்ட மாட்டின் கழுத்துக்கு கீழிருக்கும் உருமாப்பட்டை.

★ உருமாப்பட்டைக்கு அடியில் கைகொடுத்து **ஓர் இழு இழுக்க வேண்டும்**.

★ அங்கு இருக்கும் மெடல், அலங்காரச் சிறு நகைகளுடன் சேர்ந்து இருக்கும் பட்டுத்துணி கைக்கு வரும்.

★ அதுவே **வென்றவனுக்குக் கிடைக்கும் வெற்றிப் பரிசு**.

**முடிவுரை**

★ வீரத்திற்கு, விலங்கு என்றும் மனிதன் என்றும் வேறுபாடு கிடையாது.

★ அனைவர்க்கும் பொதுவானதே வீரம்.

★ இக் கருத்தை வாடிவாசல் கதை உணர்த்துகின்றது.

**நூற்பயன்**

★ தமிழர்களின் மறத்தின் வெளிப்பாட்டிலும் அறமே ஓங்கியுள்ளது என்பதை வாடிவாசல் கதைவழி அறிந்தேன்.

## திருக்குறள்

### கற்பவை கற்றபின்

**1) படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க**



அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்

ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்

இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

**விடை:** இ) **நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது**

2) துன்பப்படுபவர் ...............

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

**விடை : (ஈ) நாவைக் காக்காதவர்**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்**

**தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்**

**துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட்டாரல்லால்**

**எஞ்சினார் இவ்வுலகத் தில்**

அ) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்

பொன்றாது நிற்பதொன்று இல்

ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்

பெருமை உடைத்துஇவ் வுலகு

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல

இல்லாகித் தோன்றாக் கெடும்

**விடை :** இ) **அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்**

**4) கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்திய திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

"பூக்களுக்கும் முட்களுக்கும் இடையில்
புழங்குகிறது யோசனை
பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்
நசுங்குகிறது அறம்
இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்
போராட்டத்தில் வெடிக்கின்றன
வெளியில் குண்டுகளும்
வீட்டில் சண்டைகளும்
ஆசை அறுத்தல் எளிதல்ல
முயன்று பார்க்கலாம் வா"

அ) அருவினை யென்ப உளவோ கருவியான்

காலம் அறிந்து செயின்

ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்

சால மிகுத்துப் பெயின்

இ) இன்பம் இடையறாது ஈண்டு அவாவென்னும்

துன்பத்துள் துன்பம் கெடின்

**விடை :** இ) **இன்பம் இடையறாது ஈண்டு அவாவென்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்**

**5) 'ஒப்புரவு' என்பதன் பொருள்**

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

**விடை :** இ) **ஊருக்கு உதவுவது**

**6) பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **அ) வாழ்பவன்** | - | **காத்திருப்பவன்** |
| **ஆ) வாழாதவன்** | - | **மருந்தாகும் மரமானவன்** |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இ) தோன்றுபவன் - ஒத்ததறிபவன்

ஈ) வெல்ல நினைப்பவன் - புகழ்தரும் பண்புடையவன்

உ) பெரும்பண்புடையவன் - இசையொழித்தவன் வீழ்பவன்

**விடை :**

அ) வாழ்பவன் - **ஒத்ததறிபவன்**

ஆ) வாழாதவன் - **இசையொழித்தவன்**

இ) தோன்றுபவன் - **புகழ் தரும் பண்புடையவன்**

ஈ) வெல்ல நினைப்பவன் - **காத்திருப்பவன்**

உ) பெரும்பண்புடையவன் - **மருந்தாகும் மரமானவன்**

**7) இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) **சுடச்** சுடரும் - **வினையெச்சத் தொடர்**

ஆ) **சுடச்சுடரும்** பொன் - **பெயரெச்சத் தொடர்**

இ) **சுடச்சுட** - **அடுக்குத்தொடர்**

**8) விரைந்து கெடுபவன் யார்?**

அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன்வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன்வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

இ) பிறருடன் ஒத்துப் போனவன், தன்வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன்வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

விடை : ஈ) **பிறருடன் ஒத்துப் போகாதவன், தன்வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்**

**9) வேளாண்மை செய்தற் பொருட்டு - பொருள் கூறுக.**

★ தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே ஆகும். அதாவது விடாமுயற்சி செய்து ஈட்டிய பொருள் எல்லாம் தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

**10) பற்று நீங்கியவனுக்கு உண்டாவது - பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது.**

அ) பற்றுகள் பெருகும் = பொருள்களின் இன்பம் பெருகும்

ஆ) பற்றுகள் அகலும் = பொருள்களின் துன்பம் அகலும்

இ) பொருள்களின் துன்பம் அகலும் = பற்றுகள் அகலும்

ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் = பற்றுகள் பெருகும்

விடை : ஆ) **பற்றுகள் அகலும் = பொருள்களின் துன்பம் அகலும்**

**11) அருவினை - புணர்ச்சி விதி கூறுக?**

★ **அருமை** + **வினை**

★ **விதி - 'ஈறுபோதல்'** 'மை' விகுதி கெட்டது. **அருவினை**

குறுவினா

**1) தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவர் கூறுவது ஏன்?**

**தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவர் கூறுவதன் காரணம்**

★ தீயினால் சுடுவது புண். நாவினால் சுடுவதும் புண்.

★ **தீப்புண் உடலின் உள்ளே ஆறிவிடும்.**

★ **நாவினால் உண்டான புண் மனதின் உள்ளே ஆறாமல் வடுவாக இருக்கும்.**

★ இதையே வள்ளுவர் ஆறும் தீப்புண்ணை புண் என்றும்.

★ ஆறாத வார்த்தைப் புண்ணை வடு என்றும் கூறுகின்றார்.

**சிறப்புச் செய்தி**

திருக்குறட்பா

**"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு"** - தெய்வப்புலவர் திருவள்ளுவர்

**2) மருந்தாகித் தப்பா மரத்தாற்றல் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின் - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

| உவமை | உவமேயம் |
|---|---|
| மருந்துமரம் | **நல்ல மனம் படைத்தவர்**(பெருந்தகை) |
| மருந்து | **செல்வம்** (பணம்) |
| உடல் நோய் நீக்கும் மருந்து | மன நோய் நீக்கும் செல்வம். |

**உவமையைப் பொருளோடு பொருத்துதல்**

★ மருந்து மரம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தந்து நோயை நீக்கும்.

★ அதைப் போல அருள் மனம் (நல்ல மனம்) கொண்டவர்களிடம் உள்ள எல்லா செல்வமும் பிறர்க்கு மன நோய் நீக்கப் பயன்படும்.

**3) எதற்கு முன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது?**

**நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுவது**

★ நாக்கு அடைத்து விக்குள் வந்து உயிர் போகும்முன்.

★ நல்ல செயல்கள் நாம் விரைந்து செய்ய வேண்டும்.

**சிறப்புச் செய்தி**

திருக்குறட்பா

**"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**

**மேற்சென்று செய்யப் படும்"** - தெய்வப்புலவர் திருவள்ளுவர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com





**4) சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?**

**சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள்(வலிமை)**

- ➔ செயலின் ஆற்றல்.
- ✶ செயல் செய்பவரின் ஆற்றல்.
- ➔ பகைவனின் ஆற்றல்.
- ✶ துணைக்கு வருபவரின் ஆற்றல்.

**சிறப்புச் செய்தி**

திருக்குறட்பா

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்** - தெய்வப்புலவர் திருவள்ளுவர்

**5) மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?**

**பொருள்:-**

**மருந்து** = பெருந்தகையாளரின் செல்வம்.(பணம்)

**மருந்துமரம்** = பெருந்தகையாளன் (நல்ல மனம் படைத்தவர்)

**சிறுவினா**

**1) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**அணிப்பாடல்**

**தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு**

**பயின்று வந்துள்ள அணி**

- ★ வேற்றுமையணி

**அணி விளக்கம் :**

- ★ முதலில் பாடலில் உள்ள இரு பொருள்களுக்கும் பொது ஒப்புமையைக் கூறுதல்
- ★ பின்னர், ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டது எனக் கூறுதல் வேற்றுமையணி ஆகும்.

**சிறப்புச் செய்தி :**

தண்டியலங்காரம்

**"கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்**
**வேற்றுமை படவரின் வேற்றுமை அதுவே"** - தண்டி

**அணிப்பொருத்தம்**

- ★ முதலில், தீயினால் சுடுதலும் நாவினால் சுடுதலும் ஒன்றே என ஒப்புமை தோன்றக் கூறப்பட்டன.
- ★ நெருப்பால் சுட்ட புண் மனத்தின் உள்ளே ஆறிவிடும். ஆனால், நாவினால் சுட்டபுண் மனத்தின் உள்ளே வடு போல் ஆறாது, என வேறுபடுத்திக் கூறப்பட்டமையால் இது வேற்றுமையணி ஆகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.**

**புகழுக்குரிய பண்புகளாக நான் கருதுவன:-**

★ புகழுக்குரிய பண்புகளாக நான் கருதுவன **நேர்மை, உண்மை, நல்ல எண்ணங்கள், நற்செயல்கள்** போன்றவை ஆகும்.

**புகழின் பெருமை - பொதுமறைவழி:-**

★ சில மனிதர்களை இறந்தபின்பும் நினைவுப்படுத்துகின்றோம்.

★ அதற்கு காரணம் அவருடைய புகழ் மட்டுமே ஆகும்.

★ எனவே தான் வள்ளுவர், உயர்ந்த புகழைப் போல உலகில் நிலைத்து நிற்பது வேறு எதுவும் இல்லை என்கிறார்.

**கூடுதல் தகவல்**

**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன்று இல்** - திருவள்ளுவர்

**புகழோடு தோன்ற வேண்டும்**

★ ஒரு துறையில் தோன்றினால் புகழுடன் தோன்ற வேண்டும்.

★ இல்லை எனில் தோன்றாமல் இருப்பதே நல்லது ஆகும்.

**கூடுதல் தகவல்**

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்றி** - திருவள்ளுவர்

★ புகழில்லாமல் வாழ்பவர் பிறரால் அறியபடமாட்டார்.

★ எனவே, அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தாலும் வாழாதவரே ஆவார்.

**கூடுதல் தகவல்**

**வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர்** - திருவள்ளுவர்

**3) நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**

**மேற்சென்று செய்யப் படும் - இக்குறட்பாவை அலகிட்டு வாய்ப்பாடு கூறுக.**

| சீர்கள் | அசைகள் | வாய்பாடுகள் |
|---|---|---|
| நாச் / செற் / று | நேர் + நேர் + நேர் | தேமாங்காய் |
| விக் / குள் / மேல் | நேர் + நேர் + நேர் | தேமாங்காய் |
| வா / ரா / முன் | நேர் + நேர் + நேர் | தேமாங்காய் |
| நல் / வினை | நேர் + நிரை | கூவிளம் |
| மேற் / சென் / று | நேர் + நேர் + நேர் | தேமாங்காய் |
| செய் / யப் | நேர் + நேர் | தேமா |
| படும் | நிரை | மலர் |

★ இக்குறட்பா **'மலர்'** என்னும் வாய்பாட்டைக் கொண்டு முடிந்துள்ளது.

**4) சொற்பொருள் பின்வரு நிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**

**அணி விளக்கம் :**

★ ஒரு செய்யுளில் **வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, தந்த பொருளையே மீண்டும் தருவது** சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

**சான்றுப் பாடல் :**

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்** - திருவள்ளுவர்

**சான்று விளக்கம் :**

★ **செயலின் வலிமையும், தன் வலிமையும், பகைவனின் வலிமையும், துணையாளர் வலிமையும்** சீர் தூக்கிச் செயல்படுக.

**பொருத்தம் :**

★ இக்குறட்பாவில் **வலி** என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து **வலிமை** (அ) **ஆற்றல்** என்ற ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

**5) விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.**

**விரும்பியதை அடைவது எப்படி - குறள்வழி விளக்கம்:-**

★ விரும்பியதை அடைய விரும்புபவர் அதற்குரிய காலம் அறிந்து செயல்பட வேண்டும்.

**கூடுதல் தகவல்**

**அருவினை என்ப உளவோ கருவியான்**
**காலம் அறிந்து செயின். - திருவள்ளுவர்**

★ உரிய கருவிகளுடன் ஏற்ற காலம் அறிந்து செயல்பட்டால் அரிய செயல்களையும் எளிதில் செய்யலாம்.

**கூடுதல் தகவல்**

**ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின் - திருவள்ளுவர்**

★ உரிய காலத்தில் பொருத்தமான இடத்தில் ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.

**கூடுதல் தகவல்**

**காலம் கருதி இருப்பர் கலங்காது**
**ஞாலம் கருது பவர்** **- திருவள்ளுவர்**

★ கிடைப்பதற்கு அரிய காலம் வாய்த்தால், அப்போதே அரிய செயல்களைச் செய்துவிட வேண்டும்.

**கூடுதல் தகவல்**

**எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற்கு அரிய செயல் - திருவள்ளுவர்**



பாரதி அரையல்

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

**1) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம்வழி நிறுவுக.**

கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம்வழி நிறுவுதல்

**குறிப்புச் சட்டகம்**

| | | |
|---|---|---|
| முன்னுரை | கற்றதன் நோக்கம் | பொருளீட்டுவதன் பயன் |
| உலகத்தோடு இணைந்து உதவுதல் | மருந்து மரமாக இரு | முடிவுரை நூற்பயன் |

**முன்னுரை:-**

★ மனிதர்களுக்கு உள்ள சிறந்த பண்புகளில் ஒன்று **ஒப்புரவு.**

★ உதவி என்பது ஏதேனும் ஒரு பயனை எதிர்ப்பார்த்து செய்வது.

★ **ஒப்புரவு என்பது எந்த வகையான எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் செய்வது.**

★ கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளைப் பற்றி காண்போம்.

**கற்றதன் நோக்கம்**

★ வள்ளுவன்வழி ஒப்புரவு ஒழுகி கொடையில் சிறந்து விளங்குவதற்கே!

**பொருளீட்டுவதன் பயன்:-**

★ ஒருவன் கடின முயற்சி செய்து பொருள் ஈட்ட வேண்டும்.

★ அவ்வாறு ஈட்டிய பொருளைத் தகுதியானவருக்கு வழங்க வேண்டும்.

**தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தல் பொருட்டு.** - திருவள்ளுவர்

**உலகத்தோடு இணைந்து வாழ்:-**

**ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்.** - திருவள்ளுவர்

★ உயர்ந்தவரின் உலக நடைமுறையோடு இணைந்து உதவி வாழ்தல் வேண்டும்.

★ அவ்வாறு வாழ்பவரே உயிர் வாழ்பவர் ஆவார்.

★ மற்றவர் இறந்தவராகவே கருதப்படுவார்கள்.

**மருந்து மரம்:-**

★ மருந்துமரம் தன் உறுப்புகள்மூலம் அனைவருக்கும் பயன்தரும்.

★ அதுபோல, பெருந்தன்மை கொண்டவனிடம் உள்ள செல்வம் அனைவருக்கும் பயன்படும்

**மருந்தாகித் தப்ப மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்.** - திருவள்ளுவர்

**முடிவுரை:-**

★ மேகம் எந்தவிதமான எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் மழையாக வந்து அனைத்து உயிர்களுக்கும் உதவுகிறது.

★ அதுபோல நாமும் அனைவருக்கும் நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்

**நூற்பயன்:-** **குறள்வழி நடந்தும் கொடையில் சிறந்தும் வாழ்வேன்.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.**

அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை முப்பால் வழி விளக்குதல்

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| முன்னுரை | கற்றதன் நோக்கம் | மலையினும் பெரிது | நாவைக் காக்க |
| புண்ணும் வடுவும் | முடிவுரை | நூற்பயன் | நன்றி |

**முன்னுரை:-**

★ ஒவ்வொரு மனிதருக்கும் கட்டாயம் இருக்க வேண்டிய குணம் அடக்கம் ஆகும்.

★ அடக்கம் என்பது ஐம்பொறிகளாகிய **மெய், வாய், கண், மூக்கு, செவி** ஆகியவற்றை அடக்கி வைப்பது ஆகும்.

★ அவ்வாறு அடக்கமுடன் வாழ்வதே ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் என்பதை முப்பால்வழி அறிவோம்.

**மலையினும் பெரிது:-**

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது. - திருவள்ளுவர்**

★ ஒருவன் நேர்வழி மாறாது அடக்கமாக இருக்க வேண்டும்.

★ அவ்வாறு இருந்தால், அவனுடைய உயர்வு மலையின் உயர்வைக் காட்டிலும் பெரியது ஆகும்.

**நாவைக் காக்க:-**

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு - திருவள்ளுவர்**

★ ஒருவன் எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும்.

★ நாவைக் காக்கத் தவறினால், சொல்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

**புண்ணும் வடுவும்:-**

**தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு - திருவள்ளுவர்**

★ தீயினால் ஏற்பட்ட புண் உடலில் ஆறாமல் இருந்தாலும் மனதில் ஆறிவிடும்.

★ ஆனால், நாவினால் ஏற்பட்ட புண் மனதில் ஆறாமல் வடுவாக மாறிவிடும்.

**முடிவுரை:-**

★ ஒருவர் வாழ்வில் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய குணம் அடக்கம். நாமும் வள்ளுவர்வழியைப் பின்பற்றி அடக்கமுடன் வாழ்வோம்.

**வாழ்க வையகம் வாழ்க வள்ளுவம்**





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் நான்கு
# கல்வி
# கேடில் விழுச்செல்வம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1) உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?**

**உவமை தோன்ற அடிப்படையானவை:-**

★ தொல்காப்பியர் உவமை நான்கின் அடிப்படையில் தோன்றும் என்கிறார். அவை:

★ வினை (தொழில்) = **புலி போலப் பாய்ந்தான்.**

★ பயன் = **மழை போலக் கொடுக்கும் கை.**

★ வடிவம் (மெய்) = **துடி போலும் இடை**

★ உரு (நிறம்) = **தளிர் போலும் மேனி**

**2) உவமைத்தொடர்களால் அழைக்கப்பெறும் சங்கப்புலவர்கள் பெயர்களைத் தொகுத்து அவற்றில் உள்ள உவமையைக் கண்டறிக.**

**உவமைத் தொடர்களால் அழைக்கப்பெறும் சங்கப்புலவர்கள்:-**

★ செம்புலப்பெயல்நீரார் ➔ தேய்புரிபழங்கயிற்றினார்

★ அணிலாடு முன்றிலார் ➔ காக்கைப்பாடினியார் ➔ குப்பைக்கோழியார்

**3) ஒட்டுப் போடாத**

**ஆகாயம் போல - இந்த**

**உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில் பயின்றுவருவது**

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

**விடை = அ) உவமை**

**4) கீழ்க்காணபனவற்றுள் 'இறைச்சி' பற்றிய கூற்றைத் தேர்க.**

அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்.

ஆ) ஒப்பிட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்.

இ) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.

ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.

**விடை = ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**5) உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் உள்ள வேறுபாட்டினைச் சான்றுகளுடன் ஆய்க.**

| உள்ளுறை | இறைச்சி |
|---|---|
| கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவது. | குறிப்பால் பொருள் உணர்த்துவது. |
| அகமாந்தரின் மன உணர்வுகளைக் உவமைப்படுத்துவது | உரிப்பொருளோடு நேரடியாகத் தொடர்பில்லாமல் இருப்பது |
| கவிதைப் பொருளோடு சேர்ந்து அமைவது | கவிதைப் பொருளின் புறத்தே (வெளியே) அமைவது |



## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

**1) ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ----- என்பதாகும்.**

அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

**விடை = அ) நூல்**

**2) சரியான விடையைத் தேர்க.**

**அ) கல்வி அழகே அழகு - 1) தொல்காப்பியம் சிறப்புப் பாயிர உரைப்பாடல்**

**ஆ) இளமையில் கல் - 2) திருமந்திரம்**

**இ) துணையாய் வருவது தூயநற்கல்வி - 3) ஆத்திசூடி**

**ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் - 4) திருக்குறள்**

**- 5) நாலடியார்**

i) அ - 2, ஆ - 3, இ - 4, ஈ - 1 ii) அ - 3, ஆ - 4, இ - 1, ஈ - 2

iii) அ - 5, ஆ - 3, இ - 2, ஈ - 1 iv) அ - 4, ஆ - 1, இ - 2, ஈ - 5

**விடை - iii) அ - 5, ஆ - 3, இ - 2, ஈ - 1**

**3) 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்**

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

**விடை = அ) நற்றிணை**

**4) தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை**

அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

**விடை = இ) 27**

**5) நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?**

அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) மெய்

**விடை = அ) வினை**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தோஸ்த் தமிழ் உரை + 1

குறுவினா

**1) சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?**

**சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலை:-**

★ "சங்ககாலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது.

★ **தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால், தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும், கல்விமொழியாகவும், சமயம், வணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கியது"** என்று இராசமாணிக்கனார் கூறுகின்றார்.

**2) உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.**

**உ.வே.சா பயின்ற கல்விமுறை:-**

★ உ.வே.சா, புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்விமுறையில் பயின்றார்.

★ உ.வே.சாவின் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்.

★ மீனாட்சி சுந்தரனார் திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப்புலவராக இருந்தார்.

**3) "இங்கே, ஐம்பதாண்டு வேம்பு**
**கோடையில் கொட்டும் பூக்களை**
**எண்ணச் சொல்கிறார்கள்" - எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?**

**எண்ணச் சொல்பவரும் எண்ணுபவர்களும்:-**

★ இயற்கையோடு இணைந்து கற்பிக்கும் **ஆசிரியர்கள்** எண்ணச் சொல்கிறார்கள்.

★ பிள்ளைக்கூடம் என்னும் இயற்கைப் பள்ளியில் படிக்கும் **மாணவர்கள்** எண்ணுகிறார்கள்.

**4) கொழுஞ்சோறு - புணர்ச்சி விதி கூறுக.**

★ கொழுஞ்சோறு = **கொழுமை** + **சோறு**

**பண்புப்பெயர்ப் புணர்ச்சி**

★ விதி 1 = **ஈறுபோதல்** = கொழு + சோறு

★ விதி 2 = **இனமிகல்** = கொழுஞ்சோறு

**5) உவமை, உருவகம் - வேறுபடுத்துக.**

| உவமை | உருவகம் |
|---|---|
| ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது | உவமை வேறு, உவமேயம் இரண்டும் ஒன்றே எனத் தோன்றுமாறு கூறுவது |
| உவமை முன்னும் உவமேயம் பின்னும் அமையும். | உவமேயம் முன்னும் உவமை பின்னும் அமையும். |
| எ.கா. **மலர்முகம்** | எ.கா. **முகமலர்** |


வாழ்க்கை என்பது சந்திரன் மாதிரி சில சமயம் இருட்டு சில சமயம் முழு நிலவு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

**1) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.**

**தொல்காப்பியத்தில் கல்வி:-**

★ தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை 'ஓதற்பிரிவு' எனக் குறிப்பிடுகிறது.

★ கல்வியால் ஒருவனுக்கு பெருமிதம் தோன்றும் என்கிறார் தொல்காப்பியர்.

**ஆசிரியர் மாணவர் இலக்கணம்:-**

★ தொல்காப்பியமும் நன்னூலும் ஆசிரியர் - மாணவர்க்கான இலக்கணத்தைக் கூறுகின்றன.

**புறநானூற்றில் கல்வி:-**

★ பொருள் கொடுத்தும்

★ தொண்டு செய்தும்

★ ஆசிரியரிடம் மாணவர்கள் கல்வி கற்ற செய்தியைப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

**சிறப்புச் செய்தி:-**

புறநானூறு

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்,**

**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே** - புறநானூறு

**பிற நூல்களில் கல்வி:-**

★ "துணையாய் வருவது தூயநற் கல்வி" என்று **திருமந்திரமும்**,

★ "கல்வி அழகே அழகு" என்று **நாலடியாரும்,**

★ "இளமையில் கல்" என்று **ஆத்திசூடியும்** கூறியுள்ளன.

**2) சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.**

**சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைதல்.**

**சமணப் பள்ளிகள்:-**

★ **கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம்** ஆகியவைச் சமண சமயத்தின் அறங்கள் ஆகும்.

★ சமண துறவிகள் மலைக்குகைகளில் தங்கியிருந்தனர்.

★ தங்கியிருந்த இடங்களிலேயே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்குப் போதித்தனர்.

★ சமண துறவிகளின் படுக்கைகளின்மீது மாணவர்கள் அமர்ந்து கற்றனர்.

★ **'பள்ளி'** என்ற சொல்லுக்கு **'படுக்கை'** என்று பொருள்.

★ எனவே, கல்விக்கூடம் **'பள்ளிக்கூடம்'** என அழைக்கப்பட்டது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பெண் கல்வி:-**

★ வந்தவாசிக்கு அருகிலுள்ள ஊர் **வேடல்**.

★ வேடல் என்னும் ஊரில் சமணப் பள்ளி ஒன்று இருந்தது.

★ சமண பெண் ஆசிரியர் ஒருவர் **500 மாணவர்களுக்குக் கல்வி** கற்பித்துள்ளார்.

★ **பட்டினிக்குரத்தி** என்பவர் சமணப் பெண் ஆசிரியர்.

★ பட்டினிக்குரத்தி விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளி ஒன்றை நிறுவியுள்ளார்.

★ பெண்கள் மட்டும் பயின்ற பள்ளிகள் "**பெண் பள்ளிகள்**' ஆகும்.

**3) ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி**

**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** - நற்றிணை

**ஆசிரியர்** - போதனார்

**பொருள்:-**

★ தலைவி, விளையாட்டுப் பருவம் மாறாதவள்.

★ தலைவி, இல்லறம் நடத்தும் அறிவையும் ஒழுக்கத்தையும் எங்கிருந்து பெற்றாளோ?

**விளக்கம்:-**

★ தலைவி, செல்வம் மிகுந்த குடும்பத்தில் பிறந்தவள்.

★ விளையாட்டுப் பிள்ளையாக வளர்ந்தவள்.

★ அவள் தான் விரும்பியவனை மணந்துக் கொள்கிறாள்.

★ தன் கணவன் வீட்டில் வறுமையில் வாடி வருகிறாள்.

★ செவிலித்தாய் அவளைக் காணச் செல்கின்றாள்.

★ தலைவியின் வீட்டின் நிலையையும்,

★ அவள் இல்லறம் நடத்தும் சிறப்பையும் கண்டு மகிழ்கின்றாள், செவிலித்தாய்.

★ "நம் வீட்டில் விளையாட்டுப் பிள்ளையாக இருந்தவள். சிறந்த இல்லறம் நடத்தும் அறிவையும் ஒழுக்கத்தையும் எங்கிருந்து கற்றாளோ?" என்று செவிலித்தாய் நற்றாயிடம் வினவுகிறாள்.

★ திணை = **பாலை**

★ துறை = **மகள் நிலை உரைத்தல்**





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) "சின்னதொரு துண்டைத்**
**திரும்பத் திரும்பக் கட்டி**
**அழகு பார்க்கிறாள் செல்ல மகள்**
**முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொள்கிறாள்**
**ஒரு குட்டி நாற்காலியே வீடாகிவிடுகிறது**
**துண்டைக் கட்டிக்கொண்டு தாயாகவும்**
**மாறிக்கொள்ள முடிகிறது அவளால்.**
**துண்டு ஒன்றுதான்**
**அதுவே அவளது மகிழ்ச்சியும்**
**என் துக்கமும்"**

**இப்புதுக்கவிதையில் வெளிப்படும் கருத்தை ஆராய்ந்து எழுதுக.**

**புதுக்கவிதையில் வெளிப்படும் கருத்து:-**

➔ தந்தையின் செல்லமகள் ஒரு துண்டைக் கட்டிக் கொள்கிறாள்.
➔ இளம் பெண்ணாகவும் தாயாகவும் மாறுகிறாள்.
➔ சிறு நாற்காலி அவளுடைய வீடாகிறது.
➔ தனக்கென ஒரு தனி உலகத்தைப் படைத்து மகிழ்வுடன் வாழ்ந்து வருகிறாள்.
➔ அவளைப் பெற்றவருக்கோ மிகவும் கவலையாக உள்ளது.
➔ அவளை நன்கு படிக்க வைக்க வேண்டும்.
➔ நல்லதொரு வாழ்க்கை துணையை ஏற்படுத்தி தர வேண்டும்.
➔ மேலும் பல எண்ணங்கள் தோன்றுகிறது.
➔ இவற்றை எல்லாம் நிறைவேற்றி வைப்பதற்குப் பொருளாதாரம் வேண்டும்.
➔ ஆனால், அவள் தந்தையிடம் போதுமான பொருளாதாரம் இல்லை.
➔ எனவே, அவர் மிகவும் வருந்துகிறார்.

**5) உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

**உள்ளுறை உவமை:-**

★ அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவது உள்ளுறை உவமை ஆகும்.

**"ஈயல் புற்றத்து ஈர்ம்புறத்து இறுத்த**
**குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை**
**தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்**
**பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்"**

★ தலைவி தோழிக்குக் கூறுவதுபோல், மறைத்திருக்கும் தலைவனுக்குக் கூறுகிறாள்.
★ பசியுடன் இருக்கும் கரடி ஈசல் புற்றில் கைவிட்டுப் பார்க்கிறது.
★ புற்றின் உள்ளே இருக்கும் பாம்பின் மீது கரடியின் நகம் படுகிறது.

- ★ பாம்பு வலியால் துடிக்கிறது.
- ★ தலைவன் தலைவியைக் காண்பதற்கு இரவில் வருகிறான்.
- ★ தலைவனின் இச்செயல், தலைவிக்குத் துன்பம் அளிக்கிறது என்பது உள்ளுறை உவமை ஆகும்.
- ★ இப்பாடலில், கரடியின் செயல் தலைவனின் செயலோடும்,
- ★ பாம்பின் செயல் தலைவியின் செயலோடும் ஒப்பிடப்பட்டுள்ளன.

**இறைச்சி:-**

- ★ இறைச்சி, உரிப்பொருளோடு நேரடியாகத் தொடர்பில்லாதது.
- ★ குறிப்பால் பொருள் உணர்த்துவது.

**"நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர்**
**பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**
**மென்சினை யாஅம் பொளிக்கும்**
**அன்பின தோழிஅவர் சென்ற ஆறே".**

- ★ தலைவன் விரைவில் வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள் (ஆறுதல் கூறுகிறாள்).
- ★ தலைவன் பொருளீட்டுவதற்காக காட்டுவழியாக செல்லுகிறான்.
- ★ காட்டில் யானைதன் பெண்யானையின் பசியைப் போக்குவதற்காக மரத்தின் பட்டையை உரித்து அதற்கு அளிக்கும் என்பது இப்பாடலின் பொருள் ஆகும்.
- ★ இதில், தலைவன் இந்த அன்புக் காட்சியைக் கண்டு, உடனே திரும்பி வருவான் என்னும் குறிப்புப் பொருள் அமைந்துள்ளது.
- ★ இதுவே இறைச்சி ஆகும்.

**நெடுவினா**

**1) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.**

**<u>குறிப்புச் சட்டகம்</u>**

| | | | |
|---|---|---|---|
| நோக்கம் | முன்னுரை | பௌத்தக் கல்வி | சமணப் பள்ளிகள் |
| பெண் கல்வி | மரபுவழிக் கல்விமுறைகள் | முடிவுரை | நூற்பயன் |

**நோக்கம்**

- ★ <u>பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரித்தல்.</u>

**முன்னுரை:-**

- ★ சமூக மாற்றத்திற்கான அடிப்படைத் தேவை கல்வி.
- ★ தமிழகக் கல்வி முறையில் காலந்தோறும் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.
- ★ கல்வியில் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பௌத்தக் கல்வி:-**

★ காஞ்சிபுரத்தில் பௌத்தப் பல்கலைக்கழகம் ஒன்று இருந்தது.

★ சீனப் பயணி **யுவான் சுவாங்** பௌத்தப் பல்கலைக்கழகத்தில் சிறப்புரை ஆற்றினார்.

★ இச்செய்தி பௌத்தம் கல்விக்கு ஆற்றிய பணியைக் குறிப்பிடுகிறது.

**சமணப் பள்ளிகள்:-**

★ **கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம்** ஆகியவை சமண சமயத்தின் அறங்கள்.

★ சமண துறவிகள் மலைக்குகைகளில் தங்கியிருந்தனர்.

★ அவ்விடங்களிலேயே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்குப் போதித்தனர்.

★ சமண துறவிகளின் படுக்கைகளின்மீது மாணவர்கள் அமர்ந்து கல்வி கற்றனர்.

★ 'பள்ளி' என்ற சொல்லுக்கு 'படுக்கை' என்று பொருள்.

★ எனவே, கல்விக்கூடம், 'பள்ளிக்கூடம்' என அழைக்கப்பட்டது.

**பெண் கல்வி:-**

★ **வந்தவாசிக்கு** அருகிலுள்ள ஊர் வேடல்.

★ **வேடல்** என்னும் ஊரில் சமணப் பள்ளி ஒன்று இருந்தது.

★ **சமண பெண் ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார்.**

★ பட்டினிக்குரத்தி என்பவர் சமணப் பெண் ஆசிரியர்.

★ பட்டினிக்குரத்தி விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளி ஒன்றை நிறுவினார்.

★ பெண்கள் மட்டும் பயின்ற பள்ளிகள் **'பெண் பள்ளிகள்'** எனப்பட்டன.

**மரபுவழிக் கல்வி முறைகள்:-**

★ குருகுலக் கல்விமுறை ➔ திண்ணைப் பள்ளிக் கல்விமுறை

★ உயர்நிலைக் கல்விமுறை

**குருகுலக் கல்விமுறை:-**

★ மாணவர்கள் ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கல்வி கற்றனர்.

➔ **செய்து கற்றல்,** ★ **வாழ்ந்து கற்றல்,**

★ எளிமையாக வாழ்தல் என்ற முறையில் கல்வி கற்றனர்.

★ வாழ்வியலைக் கட்டமைப்பதில் உறுதியாக விளங்கியது.

**திண்ணைப் பள்ளிக் கல்வி முறை:-**

★ 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் திண்ணைப் பள்ளிகள் இருந்தன.

★ கிராமங்கள் தோறும் திண்ணைப் பள்ளிகள் இருந்தன.

★ திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் '**கணக்காயர்கள்**' என்று அழைக்கப்பட்டனர்.

★ பாடத்திட்டம், பயிற்றுவிக்கும் முறை போன்றவை ஆசிரியரின் விருப்பப்படி அமைந்திருந்தன.

**சிறப்புச் செய்தி:-**

★ "திண்ணைப் பள்ளியின் கல்வித்தரம் பல ஐரோப்பிய நாடுகளின் கல்வித்தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாக இருந்தது" - தாமஸ் மன்றோ

**உயர்நிலைக் கல்வி முறை:-**

★ தனிநிலையில் புலவர்களிடம் கல்விக் கற்றனர்.

★ இக்கல்விமுறை உயர்நிலைக் கல்விமுறை ஆகும்.

★ மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப்புலவராக விளங்கியவர்.

★ அவரிடம், உ.வே. சாமிநாதர் இம்முறையிலேயே கல்வி பயின்றார்.

**முடிவுரை:-**

★ தமிழகத்தின் கல்வி அமைப்புமுறை இன்று அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

**நூற்பயன்:-**

★ தமிழகத்தில் நிலவிய பல்வேறு வகையான கல்விமுறைகளைப் பற்றி அறிந்துகொண்டேன்.

**2) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?**

**குறிப்புச் சட்டகம்**

| நோக்கம் | முன்னுரை | விளையாட்டுப் பிள்ளை |
|---|---|---|
| தலைவியின் வறுமை நிலை | முடிவுரை | நூற்பயன் |

**நோக்கம்**

★ பழந்தமிழகத்தில் வாழ்ந்த பெண்கள் வறுமையிலும் செம்மையாக வாழும் முறையை இயல்பாகவே பெற்றிருந்தனர் என்பதை அறிந்து கொள்ளுதல்.

**முன்னுரை:-**

★ நற்றிணையில் தமிழகப் பெண்களின் இல்லறச் சிறப்பினை உணர்த்தும் பாடல் அமைந்துள்ளது.

★ தலைவி சிறப்புற இல்லறம் நடத்துகிறாள்.

★ தலைவி இல்லறம் நடத்தும் சிறப்பைச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுகிறாள்.

★ செவிலித்தாய் வியந்து கூறுவனவற்றைக் காண்போம்.

**விளையாட்டுப் பிள்ளை:-**

★ செவிலித்தாய் பொற்கலத்தில் தேன் கலந்த பால் உணவை ஏந்தி உள்ளாள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ செவிலித்தாய் தலைவியை உண்ணும்படி கூறுகின்றாள்.

★ அவள் உண்பதற்கு மறுத்தால் அடிப்பதற்காக,

★ இன்னொரு கையில் பூச்சுற்றிய மென்மையான சிறுகோலை வைத்திருப்பர்.

★ அவளோ, உண்ண மறுத்து, பொற்சிலம்பு ஒலிக்க அங்குமிங்கும் ஓடுவாள்.

★ செவிலித்தாய் அவளைப் பின்தொடர முடியாமல் நடை தளர்ந்து நிற்பாள்.

**தலைவியின் வறுமை நிலை:-**

★ தலைவி செல்வ வளமிக்க வீட்டில் பிறந்தவள்.

★ விளையாட்டுப் பெண்ணாக வளர்ந்தவள்.

★ தலைவி தான் விரும்பியவனை மணந்து கொள்கிறாள்.

★ தன் கணவன் வீட்டில் வறுமையில் வாடுகிறாள்.

★ தன் தந்தையின் வீட்டில் உள்ள வளமான உணவினைப் பற்றி நினைக்கவில்லை.

★ ஓடுகின்ற நீரிலே கிடக்கும் நுண்மணலில் இடைவெளி இருக்கும்.

★ அதுபோல ஒரு பொழுது இடைவெளி விட்டு ஒரு பொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள்.

★ **"பிள்ளைத்தன்மை மாறாத அவள், வறுமையான சூழலிலும் எப்படி செழுமையுடன் வாழ்வது என்ற கல்வியை எங்கு கற்றுக் கொண்டாளோ?"** என்று செவிலித்தாய் வியப்படைகின்றாள்.

**முடிவுரை:-**

★ செவிலித்தாய், தலைவியின் செயலைக் கண்டு பெருமையும்,

★ அவள் எவ்வாறு இப்படிச் செயல்படுகிறாள் என்பதை எண்ணி வியப்பும் அடைகிறாள்.

**நூற்பயன்:-**

★ பழந்தமிழகத்தில் வாழ்ந்த பெண்கள் வறுமையிலும் செம்மையாக வாழும் முறையை இயல்பாகவே பெற்றிருந்தனர் என்பதை அறிந்து கொண்டேன்.

**3) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?**

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| நோக்கம் | என்னுரை | பத்திரிக்கைப்பணி | பணியாற்றிய இதழ்கள் |
| படைப்புகளை வெளியிட்ட இதழ்கள் | புனைபெயரில் இதழ்கள் | கருத்துப் படங்கள் | |
| குறள் வெண்பா தமிழில் தலைப்பு | சிவப்புத்தாளில் இந்தியா | முடிவுரை | நூற்பயன் |

**நோக்கம்**

★ பன்முகத்தன்மை கொண்ட பாரதியாரின் இதழாளர் முகம் குறித்து நான் அறிந்தனவற்றைக் கூறுதல்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**என்னுரை:-**

★ **கவிஞர், பேச்சாளர், கதை ஆசிரியர், மொழி பெயர்ப்பாளர், அரசியல் அறிஞர், ஆன்மீகவாதி** என பன்முகத் தன்மை கொண்டவர், **பாரதியார்.**

★ பாரதியார் ஒரு சிறந்த இதழாளராகவும் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

★ பாரதியாரின் இதழாளர் முகம் குறித்து நான் அறிந்தனவற்றைக் கூறுகின்றேன்.

**பத்திரிக்கைப்பணி:-**

★ பாரதியார் **மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில்** தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

★ பின்பு, **சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராகப்** பொறுப்பேற்றார்.

★ இதழியல் துறைக்குப் பாரதி வந்தது சாதாரண நிகழ்வாக இருந்தது.

★ ஆனால், இதழியல் துறையில் அசாதாரணமானவற்றை நிகழ்த்திக் காட்டினார்.

**பணியாற்றிய இதழ்கள்:-**

★ பாரதியார், **சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி, விஜயா, சூர்யோதயம், கர்மயோகி** ஆகிய இதழ்களில் ஆசிரியராகவும் துணையாசிரியராகவும் பணியாற்றினார்.

**படைப்புகளை வெளியிட்ட இதழ்கள்:-**

★ சர்வஜன மித்திரன், ஞானபாநு, காமன் வில், கலைமகள், தேசபக்தன், கதாரத்னாகரம் போன்ற இதழ்களில் பாரதி தம் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

**புனைபெயரில் இதழ்கள்:-**

★ பாரதியார் இதழ்கள்மூலம் விடுதலை உணர்வை மக்களிடம் கொண்டுச் சென்றார்.

★ அதற்கு ஆங்கிலேயர்கள் பல்வேறு வகையில் தடைகளை ஏற்படுத்தினர்.

★ பாரதியார், தம் கருத்துகள் மக்களைச் சென்றடைந்தால் போதும் என்று எண்ணினார்.

★ எனவே, பல புனைபெயர்களில் இதழ்களை வெளியிட்டார்.

★ **இளசை சுப்ரமணியன், சாவித்திரி, சி.சு. பாரதி, வேதாந்தி, நித்திய தீரர், உத்தமத் தேசாபிமானி, ஷெல்லிதாசன், காளிதாசன், சக்திதாசன், ரிஷிகுமாரன், காசி, சரஸ்வதி, பிஞ்சுக்காளிதாசன், செல்லம்மா, கிருஷ்ணன்** எனப் பல புனைபெயர்களில் எழுதினார்.

**கருத்துப் படங்கள்:-**

★ தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாகக் கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர், பாரதியார்.

★ ‘சித்திராவளி’ என்ற பெயரில் கருத்துப்படங்களை மட்டுமே கொண்ட இதழ் ஒன்றை நடத்த விரும்பினார். ஆனால், அதைச் செயல்படுத்த இயலவில்லை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**குறள் வெண்பா:-**

★ பாரதியார், பெண் விடுதலைக்காகப் பாடுபட்டவர்.

★ எனவே, 'சக்ரவர்த்தினி' இதழில் பெண்களுக்காக ஒரு குறள் வெண்பா எழுதியுள்ளார்.

**சிறப்புச் செய்தி:-**

சக்ரவர்த்தினி - குறள் வெண்பா

**"பெண்மை அறிவுயரப் பீடோங்கும் பெண்மைதான்**

**ஒண்மை யுறஓங்கும் உலகு". -** பாரதியார்

**தமிழில் தலைப்பு:-**

★ பாரதியார், தமிழ் இதழ்களில் தமிழில் தலைப்பிடும் வழக்கத்தைக் கொண்டு வந்தவர்.

★ பாரதியார், தலைப்பிடுவதை **'மகுடமிடல்'** என்று கூறினார்.

**சிவப்புத்தாளில் இந்தியா:-**

★ பாரதி **'இந்தியா'** நாளிதழை சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்டார்.

★ சிவப்பு வண்ணம் புரட்சியையும் விடுதலையையும் குறிப்பது.

★ பாரதியார், இந்தியாவை அடிமைத்தளையில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற எண்ணினார்.

★ எனவே, இந்தியா இதழை சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்டார்.

**முடிவுரை:-**

★ இதழியலின் முன்னோடி வரையறையை வகுத்துக் காட்டியவர், பாரதியார்.

★ இதழியல் துறையில் விடுதலைப் போராட்டத்தை இணைத்துக் காட்டியவர், பாரதியார்.

★ பாரதியின் இதழ்கள் தொகுக்கப்பட்டு நூலாக்கம் பெற்றுள்ளன.

**நூற்பயன்:-**

★ பன்முகத் தன்மை கொண்ட பாரதியின் இதழியில் பணியைப் பற்றி நான் அறிந்து கொண்டேன்.



**இந்தப் புத்தகத்தின் வகுப்புகளை வீடியோவாகப் பார்க்கலாம்.**

**Scan QR Code ➔**

# இயல் 5
## நாகரிகம், தொழில், வணிகம்
## நாளெல்லாம் வினைசெய்

### இலக்கணத் தேர்ச்சி கொள்

**1) ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**ஆசிரியப்பாவின் வகைகள்:-**

★ ஆசிரியப்பா **நான்கு** வகைப்படும்.

★ நேரிசை ஆசிரியப்பா இணைக்குறள் ஆசிரியப்பா

★ நிலைமண்டில ஆசிரியப்பா அடிமறிமண்டில ஆசிரியப்பா

**2) ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?**

**ஆசிரியப்பாவிற்குரிய சீர்கள்:-**

★ ஆசிரியப்பாவில் பெரும்பாலும் ஈரசைச்சீர்கள் வரும்.

★ ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் '**இயற்சீர்**' ஆகும்.

★ இயற்சீர், '**ஆசிரிய உரிச்சீர்**' என்றும் அழைக்கப்படுகின்றது.

★ **தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்** ஆகிய நான்கும் இயற்சீர்கள் ஆகும்.

**ஆசிரியப்பாவிற்குரிய தளைகள்:-**

★ ஆசிரியப்பாவில் ஆசிரியத்தளை மிகுந்தும், பிற தளை கலந்தும் வரும்.

★ நேரொன்றாசிரியத்தளை → நிரையொன்றாசிரியத்தளை

**3) அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களின் வகைகளையும் அவை இயற்றுவதற்கான விதிகளையும் கூறுக.**

**ஆசிரிய விருத்தங்களின் வகைகள்:-**

★ சீர் அமைப்பை வைத்து அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் பல்வேறு வகையாக எழுதப்படுகின்றன.

**அவை:**

★ ஓரடியுள் அரை அடிக்கு ஒரு விளச்சீரும் இருமாச்சீரும் வரும்.

★ ஓரடியுள் அரை அடிக்கு இரு மாச்சீரும் ஒரு காய்ச்சீரும் வரும்.

★ ஓரடியுள் நான்கு காய்ச்சீரும் இரு மாச்சீரும் வரும்.

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் இயற்றுவதற்கான விதி:-**

★ கழிநெடிலடிகள் (ஆறு சீர்கள்) நான்கு கொண்டதாக அமைய வேண்டும்.

★ நான்கு அடிகளும் அளவு ஒத்து வரவேண்டும்.

★ முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை அமைய வேண்டும்.

★ முதற்சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமைய வேண்டும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4) பொருத்துக.

அ) நேரிசை ஆசிரியப்பா - முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்

ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா - அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாதுவரும்

இ) நிலைமண்டில ஆசிரியப்பா - இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்

ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா - எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்

விடை :

அ) நேரிசை ஆசிரியப்பா - **இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்**

ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா - **முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்**

இ) நிலைமண்டில ஆசிரியப்பா - **எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்**

ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா - **அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாதுவரும்**

5) பின்வரும் அறுசீர் விருத்தப் பாடல்களில் உள்ள விடுபட்ட சீர்களை ஏற்ற வகையில் அமைத்துப் பயிற்சி பெறுக.

பயிற்சி - 1

ஒரே அடியில் 6 சீர்; 1, 4 சீர்களில் மோனை வரவேண்டும். 1,2,4,5 ஆகியன தேமா அல்லது புளிமாவாக வரவேண்டும். 3, 6 சீர்கள் ஏதேனும் ஒரு காய்ச்சீராக வரவேண்டும். வேறு தளைகள் பார்க்க தேவையில்லை. இவ்வகையில் பின்வரும் பயிற்சியை அமைக்க.

மாச்சீர் + மாச்சீர் + காய்ச்சீர் = **வாய்ப்பாடு**

மண்ணுக் கழகு **மரமாகும்**
மரத்திற் கழகு **கிளையாகும்**
கண்ணுக் கழகு **மையாகும்**
கவிதைக் கழகு **பொய்யாகும்**
விண்ணுக் கழகு **நிலவாகும்**
வீதிக் கழகு **விளக்காகும்**
எண்ணுக் கழகு **கணக்காகும்**
எழுத்துக் கழகு **கவியாகும்**

பயிற்சி - 2

மண்ணுக்கு அழகு என்னும் இரு சீர்களின் பின் ஆகும் தெளிவுடைமை தெளிவாகும் கிழியாமை பயன்படுதல் நற்கருத்து எனப் பல வகைகளில் சீர்களை அமைத்துக்கொள்ளலாம்.

"நாட்டுக் கழகு வளமாகும்
நாவிற் கழகு அடக்கமாகும்
வீட்டுக் கழகு வாசலாகும்
விண்ணுக் கழகு நிலவாகும்
காட்டுக் கழகு மரமாகும்
கவிதைக் கழகு பொய்யாகும்
ஏட்டுக் கழகு பாட்டாகும்
எழுத்திற் கழகு தெளிவாகும்"



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பயிற்சி - 3

**ஒவ்வோரடியும், முதலிரு சீர்கள் ஈரசையாகவும் இறுதிச்சீர் நேரீற்று மூவசைச் சீராகவும் அமைத்துப் பழகுக.**

**காற்றைத் தந்த வான்வாழ்க**

**கடவுள் தந்த தாய்வாழ்க**

**தமிழ் தந்த சொல்வாழ்க**

**நீரைத் தந்த விண்வாழ்க**

**உணவைத் தந்த மண்வாழ்க**

**உயிரைத் தந்த தாய்வாழ்க**

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

**1) பொருந்தாததைத் தேர்க**

**அ) ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.**

**ஆ) ஒவ்வொருநாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்.**

**இ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.**

**ஈ) ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத் திங்கள் தேவைப்பட்டன.**

1) அ, ஆ 2) ஆ, இ 3) அ, இ 4) ஆ, ஈ

**விடை : 4) ஆ, ஈ**

**2) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது?**

அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாசி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

**விடை : ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை**

3) **'உறுபகை', 'இடன'' ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு**

அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

**விடை : அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) சரியானதைத் தேர்ந்தெடுக்க**

**அ) வரை - மலை** **ஆ) வதுவை - திருமணம்**

**இ) வாரணம் - யானை** **ஈ) புடவி - கடல்**

1) அ, ஆ, இ - சரி, ஈ - தவறு 2) ஆ, இ, ஈ சரி, அ - தவறு

3) அ, இ, ஈ சரி, ஆ - தவறு 4) அ, ஆ, ஈ - சரி, இ - தவறு

**விடை : 1) அ, ஆ, இ - சரி, ஈ - தவறு**

**5) நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது**

அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

**விடை : ஈ) மா முன் நேர்**

**குறுவினா**

**1) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.**

**மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம்:-**

★ மாடங்கள் மேருமலையினைப் போன்று உயர்ந்திருந்தன.
★ மாளிகைகள் இடைவெளியின்றி நெருக்கமாக இருந்தன.
★ இதன்மூலம் மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்று உறுதியாகின்றது.

**2) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**

**ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு:-**

★ ஒருமுறை லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன.
★ இதுபற்றி ஆனந்தரங்கர், "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும்,
★ மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும்,
★ நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும்,
★ தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்,
★ அதைக் காகிதத்தில் எழுத முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

**3) நெருங்கின - நெருங்கு + (இ) ன் + அ**

**இரங்கி -** இரங்கு + இ

| சொல் | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| நெருங்கின | நெருங்கு | - | - | (இ) ன் இறந்தகால இடைநிலை | - | அ பெயரெச்ச விகுதி |
| இரங்கி | இரங்கு | - | - | - | - | இ பெயரெச்ச விகுதி |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்**

**தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர் - இப்பாடலடிகளில் ஒளிரக் காய்ந்தது எது? பழுத்தது எது?**

**ஒளிரக் காய்ந்தது:-**

★ வலிமை → வெற்றி → ஊக்கம்

**பழுத்தது:-**

★ செல்வம்

**5) ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

**ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள்:-**

★ ஈரசைச் சீர்கள் பொதுவாக 'இயற்சீர்' என்ற பெயரில் வழங்கப்படுகின்றன.

★ நேரசைச் சீர்கள் **'மாச்சீர்' (தேமா, புளிமா)** என்றும்,

★ நிரையசைச் சீர்கள் **'விளச்சீர்' (கூவிளம், கருவிளம்)** என்றும் வழங்கப்படுகின்றன.

**சிறுவினா**

**1) கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது - யாது?**

**கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது:-**

★ மதீனா நகரம் பொருள் வளத்தைக் கொண்டது.

★ அங்கு எந்தப் பொருளும் இல்லை என்று சொல்வதற்கு இல்லை.

★ கேட்போர்க்கு வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் வாழ்ந்தனர்.

★ இவையே கலைஞர்களும் மறையவர்களும் எண்ணியது.

**சிறப்புச்செய்தி:-**

சீறாப்புராணம்

**"கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணிய(து)**

**இலையெனா(து) அரும்பொருள் யாவும் எய்தலால்"** - உமறுப்புலவர்

**2) மறுவிலாத அரசென இருந்த மாநகர் - உவமையைப் பொருளுடன் விளக்குக.**

**மறுவிலாத அரசென இருந்த மாநகர்:-**

**உவமை:** செங்கோல் ஆட்சி நடத்தி புகழ்பெற்ற அரசு

**உவமேயம்:** மதீனா நகரம்

**உவமஉருபு:** என

**விளக்கம்:-** செங்கோல் ஆட்சி நடத்தி, பெரும்புகழ்பெற்ற அரசைப் போல மதீனா நகரம் பொலிவுடன் இருந்தது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.**

**ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் விளக்கம்:-**

★ ஆனந்தரங்கர் தன் நாட்குறிப்பில், 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தின் நிலையைக் காட்டுகிறார்.

★ 25 ஆண்டுகால தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துகின்றார்.

★ பல்வேறு அரசியல் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்.

★ ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, **ஆம்பூர் போர்** பற்றிய செய்திகள், **தஞ்சைக் கோட்டை முற்றுகை** போன்ற பல வரலாற்றுச் செய்திகளைப் பதிவுச் செய்துள்ளார்.

★ இவ்வாறு, ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியராக விளங்குகிறார்.

**4) மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?**

**தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள்:-**

★ தோழி மேகத்திடம் கூறுவதைப் போன்று, தலைவியைக் காண வர வேண்டிய இடத்தைத் தலைவனுக்குக் கூறுகிறாள்.

★ தலைவி தினைப்புனம் காத்துக் கொண்டிருக்கிறாள்.

★ அவ்விடத்தில் "**நீ மழை பொழிவாயா?**" என்று தோழி மேகத்திடம் வினவுகிறாள்.

★ தலைவி தினைப்புனம் காவலில் இருக்கிறாள்.

★ தலைவன் அவ்விடத்திற்கு வரவேண்டும் என்பது இறைச்சிப் பொருளாகும்.

**5) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.**

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்:-**

★ **அகவலோசை** கொண்டது.

★ **எல்லா அடிகளும் நான்கு சீர்**களைப் (அளவடி) பெற்றுவரும்.

★ **இயற்சீர்** மிகுந்தும், **பிறசீர் கலந்தும்** வரும்.

★ **ஆசிரியத்தளை** மிகுந்தும், **பிற தளை** கலந்தும் வரும். ➔ வஞ்சி உரிச்சீர் வராது.

★ மூன்றடி முதல் பல அடிகள் வரை பெற்றுவரும்.

## நெடுவினா

**1) தாம் வாழ்ந்த காலக்கட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.**

**குறிப்புச் சட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| நோக்கம் | முன்னுரை | பணி | நாட்குறிப்பு | நாட்குறிப்பில் அரசியல் செய்திகள் |
| நாட்குறிப்பில் சமுதாயச் செய்திகள் | | முடிவுரை | நூற்பயன் | |

# தோஸ்த் தமிழ் உரை + 1

**நோக்கம்**

- தாம் வாழ்ந்த காலக்கட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுதல்.

**முன்னுரை:-**

- '**இந்தியாவின் பெப்பிசு**' என்று அழைக்கப்படுபவர் ஆனந்தரங்கர்.
- தன் காலத்தில் நடைபெற்ற சமூக, அரசியல் நிகழ்வுகளைத் தன் நாட்குறிப்பில் பதிவு செய்தவர்.
- ஆனந்தரங்கரின் நாட்குறிப்புகள் 25 ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றைப் பதிவு செய்கின்றன.

**பணி:-**

- பரங்கிப் பேட்டை நெசவுச்சாலையின் தலைவர்.
- சாயம் துவைக்கும் கிடங்கின் தலைவர்.
- பிரெஞ்சு ஆளுநர் துய்ப்ளே காலத்தில் **தலைமை மொழிப்பெயர்ப்பாளராக** (துவிபாஷி) பணியாற்றியவர்.

**நாட்குறிப்பு:-**

- ஆனந்தரங்கர், தம் நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வையும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.
- ஆனந்தரங்கரின் நாட்குறிப்புகள் 12 தொகுதிகளாகத் தமிழில் வெளிவந்துள்ளன.

**நாட்குறிப்பில் அரசியல் செய்திகள்:-**

- தென்னிந்தியாவின் அரசியல் நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- பிரெஞ்சு ஆளுநர் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்றது.
- மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டது.
- **ஆம்பூர் போர்**, **தஞ்சைக் கோட்டை முற்றுகை** போன்ற பல்வேறு அரசியல் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**நாட்குறிப்பில் சமுதாயச் செய்திகள்:-**

- 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தின் நிலையைக் காட்டுகின்றது.
- **பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள்** போன்ற பல்வேறு கூறுகளைப் பதிவு செய்துள்ளன.
- **நீதி வழங்குதல், தண்டனை அளித்தல்** போன்ற செய்திகளையும் பதிவு செய்துள்ளது.
- ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித்துள்ளது.

**முடிவுரை:-**

- ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு, 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தையும் தென்னிந்தியாவின் வரலாற்றையும் படம் பிடித்துக் காட்டுகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ ஆனந்தரங்கர் ஒரு சிறந்த வரலாற்று ஆசிரியராக இருந்து இந்த நாட்குறிப்பை எழுதியுள்ளார்.

**நூற்பயன்:-**

★ நாட்குறிப்பின் பயன்களையும் நாட்குறிப்பு இலக்கியத்தில் ஆனந்தரங்கரின் பங்கையும் பற்றி அறிந்துகொண்டேன்.

**2) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

| | | | | |
|---|---|---|---|---|
| நோக்கம் | மாளிகை நகரம் | கொடை நகரம் | பொன்னகரம் | மனைநகரம் |
| மாநகரம் | ஒண்ணகரம் | செம்மை நகரம் | நூற்பயன் | |

**மதீனா நகரம்**

**மாளிகை நகரம்:-**

★ மதீனா நகரின் மேன்மாடங்கள் மேருமலையினைப் போன்று உயர்ந்திருந்தன.

★ அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொலி போன்று இருந்தது.

★ வீதிகள் பிரபஞ்சத்தைப் போன்று பரந்திருந்தன.

★ மதீனா நகரில் இடைவெளியின்றி மாளிகைகள் நெருங்கியிருந்தன.

**கொடை நகரம்:-**

★ மதீனா நகரம் பொருள் வளத்தைக் கொண்டது.

★ அங்கு எந்தப் பொருளும் இல்லை என்று சொல்வதற்கு இல்லை.

★ கேட்போர்க்கு வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் வாழ்ந்தனர்.

**பொன்னகரம்:-**

★ மதீனா நகரத்தில் தோரணங்களும் கொடிகளும் நெருக்கி கட்டப்பட்டிருந்தன.

★ அந்நகரத்தில், மலைபோன்ற யானைகள் நிறைந்திருந்தன.

★ வழிகள் ஒழுங்குடன் காணப்பட்டன.

★ முழுமை பெற்ற பூமியைப்போல மதீனா நகரம் பொன்னகரமாக விளங்கியது.

**மனைநகரம்:-**

★ மதீனா நகரத்தில் வெண்சுண்ணச் சாந்துப் பூசப்பட்ட மாளிகைகள் ஒளிர்ந்தன.

★ வீதிகளில் புதிய பூக்கள் சிந்திக் கிடந்தன.

★ உறவினருக்கு இனிமையுடன் விருந்து கொடுத்து மகிழ்ந்தனர்.

★ மதீனா நகரம் திருமண வீட்டைப்போன்று பொலிவுடன் விளங்கியது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**மாநகரம்:-**

★ **பகை, வறுமை, நோய்** போன்றவை மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டன.

★ மதீனா நகரம், செங்கோல் ஆட்சி நடத்திப் புகழ்பெற்ற சிறந்த அரசைப்போலப் பொலிவுடன் இருந்தது.

**ஒண்ணகரம்:-**

★ மதீனா நகரில் வாழும் மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசினார்கள்.

★ மதீனா நகரம் பல் வேறு வகையான பொருள் வளத்தால் ஒளி பெற்றுத் திகழ்ந்தது.

**செம்மை நகரம்:-**

★ மதீனா நகரில் **தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம்** போன்றவை பூத்திருந்தன

★ **திண்ணிய வலிமை, வெற்றி, ஊக்கம்** போன்றவை காய்த்திருந்தன.

★ **'தீன்'** எனும் செல்வம் பழுத்திருந்தது.

★ செம்மை பொருந்திய நகரமாக மதீனா நகரம் விளங்கியது.

**நூற்பயன்:-**

★ மதீனா நகரத்தின் சிறப்புகளையும் வளத்தையும் பற்றி அறிந்துகொண்டேன்.

**3) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.**

**குறிப்புச் சட்டகம்**

| கற்றதன் நோக்கம் | முன்னுரை | மனித முகங்கள் | முடிவுரை | நூற்பயன் |
|---|---|---|---|---|

**கற்றதன் நோக்கம்**

★ "ஒவ்வொரு மனிதனுக்கும் பல முகங்கள் உண்டு" எனக் கேள்வியுற்றுள்ளேன் அதை எழுத்தாளர் 'பிரபஞ்சன்' வழியே அறிவதற்கே கற்றேன்.

**நூற்பயன்**

★ பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரித்தல்.

**முன்னுரை:-**

★ ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு வகையான தனித்தன்மைகளைப் பெற்றுள்ளனர்.

★ பிறருடன் பழகும்போது அவர்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்கின்றனர்.

★ நம் மனசாட்சி நம் உண்மையான தன்மையை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

★ மனிதனின் தனித்தன்மையை மனசாட்சி நினைவூட்டுவதாக அமைந்துள்ளது பிம்பம் சிறுகதை.

**மனித முகங்கள்:-**

★ கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது.

- ★ ஆசிரியர் யார் வந்திருப்பார்கள் என்பதை அறிந்து கொண்டு, கதவைத் திறக்கிறார்.
- ★ ஆசிரியரின் பிம்பம் உள்ளே வருகிறது.
- ★ பிம்பம் வீட்டின் ஒரு அறைக்குள் நுழைகிறது.
- ★ அறையில் இருந்து ஒரு சட்டையை எடுத்துவருகிறது.
- ★ அந்த சட்டை ஆசிரியரின் அப்பாவின் சட்டை.
- ★ அப்பாவின் சட்டையை வைத்திருப்பதற்கான காரணத்தை ஆசிரியர் கூறினார்.
- ★ மற்றொரு அறைக்குள் நுழைந்து, ஒரு கவுனை எடுத்து வருகிறது.
- ★ பிம்பம், ஆசிரியரிடம் கவுன் வைத்திருப்பதற்கான காரணத்தைக் கேட்கிறது.
- ★ ஆசிரியரின் அம்மாவிற்கு பெண் குழந்தை இல்லை.
- ★ எனவே, ஆசிரியருக்கு கவுன் போட்டு அழகு பார்த்தார்.
- ★ பிம்பம் மீண்டும் அறைக்குள் நுழைகிறது.
- ★ எதையோ வாரிக் கொண்டு வந்து ஆசிரியர் முன் போடுகிறது.
- ★ ஆசிரியரின் காலடியில் பலவிதமான முகங்கள் பல வர்ணங்களில், பல அளவுகளில் பல கோணங்களில் சிதறிக் கிடந்தன.
- ★ "**இதெல்லாம் என்ன?**" என்று பிம்பம் வினவியது.
- ★ "**இவை எல்லாம் என் முகங்கள்**" என்றார் ஆசிரியர்.
- ★ பல்வேறு விதமான முகங்களை, பல்வேறு சந்தர்பங்களில் அணிந்து கொள்வதற்காக வைத்திருந்தார்.
- ★ எந்த சூழலில் எந்த முகம் தேவைப்படுகிறதோ அந்த முகத்தை அணிந்து கொள்வார்.
- ★ தன் **மனைவி, சிநேகிதர், தெருவினர், ஊரார்** என அனைவரிடமும் பயன்படுத்துவதற்கென வெவ்வேறு முகங்களை வைத்திருந்தார்.
- ★ பிம்பம் ஆசிரியரைப் பார்த்து "**இப்போது நீ போட்டிருப்பது எந்த முகம்?**" என்று வினவியது. இதுவும் போலிதான் என்றார் ஆசிரியர்.
- ★ சிறிது நேரத்தில் பிம்பம் அங்கிருந்து புறப்பட்டது. ஆசிரியர் அதற்கு விடைகொடுத்தார்.
- ★ இறுதியாக பிம்பம் ஆசிரியரிடம், "**உன்னுடைய முகம்தான் எது?**" என்று வினவியது. அதற்கு ஆசிரியர், "எனக்கு முகமே கிடையாது." என்றார்.

**முடிவுரை:-**

- ★ மனிதர் ஒவ்வொருவரும் பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப தங்களின் குணங்களை மாற்றிக் கொண்டிருப்பதை இச்சிறுகதை விளக்குகின்றது.

**நூற்பயன்:-**

- ★ ஒவ்வொரு மனிதரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுகின்றனர் என்பதையும், மனிதனின் உண்மைநிலையை மனசாட்சி நினைவூட்டுகிறது என்பதையும் அறிந்துகொண்டேன்.

# திருக்குறள்

## கற்பவை கற்றபின்

**1) படத்துக்குப் பொருத்தமான திருக்குறளை கண்டுபிடிக்க.**



அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்

**விடை:** அ) **வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை**

**2) கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

கொடி தவித்ததைப் பாரி
அறிந்து கொண்டான்
மயில் தவித்ததைப் பேகன்
உணர்ந்து கொண்டான்
பிள்ளையின் பரிதவிப்பைத்
தாய் அறிவாள்
பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்
அப்படிப் படித்தவர்களைப்
பிடித்துக்கொள்.

அ) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

இ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து

**விடை:** ஆ) **குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்**

**3) மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து------------நினை.**

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

**விடை :** இ) **மறதியால் கெட்டவர்களை**

**4) பொருள் கூறுக**

அ) ஏமம் - **பாதுகாப்பு**

ஆ) மருந்துழைச் செல்வான் - **மருந்தாளுநர்**

**5) இலக்கணக் குறிப்பு தருக.**

அ) கெடுக - வியங்கோள் வினைமுற்று

ஆ) குறிப்புணர்வார் - வினையாலணையும் பெயர்





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## குறுவினா

**1) மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?**

**மருத்துவத்தின் பிரிவுகள்:-**

★ மருத்துவம் நான்கு பிரிவுகளை உடையது. அவை:-

★ நோயாளி ➔ மருத்துவர் ➔ மருந்து ➔ மருந்தாளுநர்

**2) படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?**

**படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை:-**

★ படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை நான்கு ஆகும். அவை:-

★ வீரம் ➔ மானம்

★ முன்னோர் வழியில் நடத்தல் ➔ நம்பிக்கைக்கு உரியவர் ஆதல்

**3) பகைவர் வலிமையற்று இருக்கும் போதே வென்றுவிட வேண்டும் என்னும் குறட்பாவைக் கூறுக.**

**பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிட வேண்டும்:-**

★ இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து

**4) எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?**

**மருந்து தேவையில்லை:-**

★ உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

## சிறுவினா

**1) உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.**
**உருவக அணி:-**

★ உவமையும் உவமேயமும் வெவ்வேறாக இல்லாமல், ஒன்றாக இருப்பது உருவக அணி ஆகும்.

★ (எ.கா.) **இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்**
**பார்தாக்கப் பக்கு விடும்**

★ இக்குறளில், பிறரை எதிர்பார்த்து இரந்து வாழும் வாழ்க்கை பாதுகாப்பற்ற படகு என்றும்,

★ பிறருக்குக் கொடுக்காமல் இருப்பது பாறை என்றும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

**2) இளைதாக முள்மரம் கொள்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து -**
இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

**குறட்பாவில் பயின்றுவரும் அணி:-**

★ இக்குறட்பாவில், பிறிதுமொழிதல் அணி பயின்று வந்துள்ளது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**அணி விளக்கம்:-**

★ புலவர் தான் கூறவரும் கருத்தை உவமையாகக் கூறி, அதன் பொருளைப் படிப்பவரே உணர்ந்துகொள்ளும்படி செய்வது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

**குறள் விளக்கம்:-**

★ முள்மரத்தைச் சிறியதாக இருக்கும்போதே களைத்துவிட வேண்டும்.

★ அது முதிர்ந்துவிட்டால் வெட்டுபவரின் கையையே வருத்தும்.

★ இதன்மூலம், பகைவர்கள் வலிமைக் குறைந்து இருக்கும்போதே அவர்களை வென்றுவிட வேண்டும்.

★ இல்லையெனில், அவர்களை வெல்வது கடினம் என்னும் உட்பொருள் பெறப்படுகிறது.

**3) மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?**

**மருந்து:-**

★ உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று தேவையில்லை.

**மருத்துவர்:-**

★ நோய், நோய் தோன்ற காரணம், அதை நீக்கும் வழி ஆகியவற்றை ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

★ நோயாளியின் வயது, நோயின் அளவு, மருத்துவத்தின் காலம் ஆகியவற்றை ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**மருத்துவம்:-**

★ மருத்துவம் நான்கு வகையில் அடங்கும். அவை:

★ நோயாளி ➔ மருத்துவர் ➔ மருந்து ➔ மருந்தாளுநர்.

**நெடுவினா**

**1) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.**

**<u>குறிப்புச் சட்டம்</u>**

| | | | |
|---|---|---|---|
| **நோக்கம்** | **முன்னுரை** | **அழியாத செல்வம்** | **கசடறக் கற்க** |
| **உயிரினும் மேலானது ஒழுக்கம்** | | **மெய்ப்பொருள் காண்பது அறிவு** | |
| **உள்ளம் உயரட்டும்** | **முடிவுரை** | **நூற்பயன்** | **வாழ்க வள்ளுவம்** |

**முன்னுரை:-**

★ உலகப் பொதுமறை என்றும், பொய்யாமொழி என்றும் போற்றப்படும் நூல் திருக்குறள்.

★ திருக்குறளில் கூறப்படாத அறக்கருத்துகளே இல்லை என்று கூறலாம்.

★ திருக்குறளில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துகளுள் வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக இருக்கும் குறட்பாக்கள் சிலவற்றைக் காண்போம்.

**அழியாத செல்வம்:-**

★ தங்கம், வெள்ளி, வைரம், பணம் போன்ற அனைத்துச் செல்வங்களும் அழிந்துவிடும்.

★ ஆனால் ஒரு செல்வம் மட்டும் அழியாது. அதுதான் கல்விச் செல்வம் என்கிறார் வள்ளுவர்.

**கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

★ கல்விச் செல்வம் மட்டுமே அழியாதச் செல்வம் ஆகும்.

★ மற்றைய செல்வங்கள் எல்லாம் அழிந்து போகும்.

**கசடறக் கற்க:-**

★ ஒரு மாணவன் எவ்வாறு கற்க வேண்டும் என்பதைப் பற்றி வள்ளுவர் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

**கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

★ மாணவன் நூல்களைக் கற்கும்போது, எந்தவித குற்றமும் இல்லாமல் தெளிவாக கற்க வேண்டும்.

★ அவ்வாறு, கற்பதோடு மட்டும் நிறுத்திவிடாமல், கற்றவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

**உயிரினும் மேலானது ஒழுக்கம்:-**

★ மனிதர்கள் தன் உயிரையே பெரிதெனப் போற்றுகின்றனர். ஆனால், வள்ளுவர் அதைக் காட்டிலும் மேலானதென்று ஒன்றைக் குறிப்பிடுகிறார்.

**ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

★ ஒவ்வொரு மனிதருக்கும் மேன்மையைத் தருவது ஒழுக்கமே ஆகும்.

★ எனவே, அந்த ஒழுக்கத்தை உயிரை விட மேலானதாக போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

**மெய்ப்பொருள் காண்பது அறிவு:-**

★ ஒவ்வொருவரும் அறிவுடன் விளங்க வேண்டும் என்று கருதுகின்றனர். ஆனால் உண்மையான அறிவு என்ன என்பதை அறிய இயலவில்லை.

★ வள்ளுவர் தன் குறளில் உண்மையான அறிவு என்றால் என்ன என்பதை விளக்குகின்றார்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

★ ஒரு செய்தியை யார் சொல்லக் கேட்டாலும் அதை அப்படியே நம்பக் கூடாது.

★ அவர் சொன்ன செய்தியில் உள்ள உண்மைப் பொருளை அறிந்துக் கொள்ள வேண்டும். அதுவே உண்மையான அறிவு ஆகும்.

**உள்ளம் உயரட்டும்:-**

★ சமுதாயத்தில் ஒருவன் உயர வேண்டுமானால், அவன் தன் உள்ளத்தில் உயர்வான எண்ணங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்து அனைய உயர்வு.**

★ நீரில் மலரும் மலரின் உயரும், நீர்மட்டத்தின் உயரத்திற்கு ஏற்ப அமையும்.

★ அது போல, மனிதனின் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள் உயர்வாக இருந்தால், அவன் வாழ்க்கையும் உயரும்.

**முடிவுரை:-**

★ வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக இருக்கும் திருக்குறளைக் கற்பவன் வாழ்வின் எல்லாச் சிறப்புகளையும் அடைவான்.

**நூற்பயன்:-**

சிறந்த வாழ்வியல் வழிகாட்டி நூலாகிய திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துகளைப் பற்றி அறிந்துகொண்டேன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல் 6
## கலை, அழகியல், புதுமைகள்
## பல்கலை நிறுவு

### இலக்கணத் தேர்ச்சி கொள்

**1) கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக.**

**கலைச்சொல்லாக்கம்:-**

- ★ பிறமொழிச் சொற்களுக்கு இணையான சொற்களைத் தாய்மொழியில் உருவாக்குவது கலைச்சொல்லாக்கம் எனப்படும்.
- ★ புதிய புதிய சொற்களை உருவாக்குதல் கலைச்சொல்லாக்கம்.
- ★ (எ.கா) களிம்பு - **OINTMENT;** திறன்பேசி - **SMARTPHONE;** சுற்றறிக்கை - **CIRCULAR**

**2) கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை?**

**கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள்:-**

- ★ புதிதாக உருவாக்கப்படும் கலைச்சொல் தமிழ்ச்சொல்லாக இருத்தல் வேண்டும்.
- ★ பொருள் பொருத்தமுடையதாக அமைதல் வேண்டும்.
- ★ சொற்கள் சிறியதாகவும் எளிமையாகவும் இருக்க வேண்டும்.
- ★ சொல்லோசை நயமாக இருத்தல் வேண்டும்.
- ★ தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

**3) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.**

| ஆங்கிலச் சொற்கள் | கலைச்சொற்கள் |
|---|---|
| Personality | ஆளுமை |
| Emotion | உணர்ச்சி |
| Plastic | நெகிழி |
| Escalator | மின் நகர்வுப் படிக்கட்டு |
| Apartment | அடுக்ககம் |
| Straw | உறிஞ்சு குழல் |
| Mass Drill | கூட்டுப் பயிற்சி |
| Horticulture | தோட்டக்கலை |
| Average | சராசரி |

**4) "SHIP" என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயரைக் கூறுக.**

**"SHIP" என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயர்:-**

★ கலம் ➔ நாவாய் ➔ வங்கம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**5) உலக அளவில் கணிதச் சூத்திரங்களையும், வேதியியல் குறியீடுகளையும் தமிழில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று வா.செ. குழந்தைசாமி கூறுகிறார்?**

**கணிதச் சூத்திரங்களையும் வேதியியல் குறியீடுகளையும் பயன்படுத்தும் முறை:-**

★ கணிதச் சூத்திரங்களையும் வேதியியல் குறியீடுகளையும் தமிழில் பயன்படுத்தும்போது, உலக அளவில் எவ்வாறு பயன்படுத்துகிறார்களோ அவ்வாறே பயன்படுத்த வேண்டும்.

★ Σ r2 ➔ H2O> Ca

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

**1) கூற்று1: தஞ்சைப் பெரிய கோவிலில் உள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார்**

**கூற்று 2: அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை**

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு　　ஆ) கூற்று இரண்டும் தவறு

இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி　　ஈ) கூற்று இரண்டும் சரி

**விடை : ஈ) கூற்று இரண்டும் சரி**

**2) 'மூ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது.**

அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி　　ஆ) கவிதைநூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா　　ஈ) கட்டுரை நூல், குற்றாலக் குறவஞ்சி

**விடை : அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி**

**3) கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.**

**அ) விரியன் - 1) தண்டை　　ஆ) திருகுமுருகு - 2) காலாழி**

**இ) நாங்கூழ்ப்புழு - 3) சிலம்பு　　ஈ) குண்டலப்பூச்சி - 4) பாடகம்**

அ) 3 4 2 1　　ஆ) 3 1 4 2　　இ) 4 3 2 1　　ஈ) 4 1 3 2

**விடை : ஆ) 3 1 4 2**

**4) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று**

அ) சாழல்　　ஆ) சிற்றில்　　இ) சிறுதேர்　　ஈ) சிறுபறை

**விடை : அ) சாழல்**

**5) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன் ஒற்று, உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்**

அ) மூதூர்　　ஆ) வெற்றிடம்　　இ) நல்லாடை　　ஈ) பைந்தளிர்

**விடை : இ) நல்லாடை**

### குறுவினா

**1) இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?**

**இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள்:-**

★ நாகரம் ➔ வேசரம் ➔ திராவிடம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?**

**பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நான் அறிவது:-**

★ **ஒலோகமாதேவீச்சுரம்** கோவில் கல்வெட்டில் '**எருதந் குஞ்சர மல்லி**' என்ற பெண் அதிகாரியின் பெயர் இடம் பெற்றுள்ளது.

★ இதன்மூலம், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாகப் பணியாற்றியதை அறிய முடிகிறது.

★ இன்றைய நாட்களில் பெண்கள், அரசுப்பணிகளில் சமஉரிமை கேட்டுப் போராடுகின்றனர்.

★ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரசு அதிகாரியாக ஒரு பெண் இருந்தது பெருமைக்குரியது.

**4) அயர்ந்து, எழுந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

1. **அயர்ந்து** = அயர் + த் (ந்) + த் + உ    2. **எழுந்த** = எழு + (ந்) + த் + அ

| சொல் | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| அயர்ந்து | **அயர்** | த் | 'த்' 'ந்' ஆனது சந்தி விகாரம் | த் இறந்தகால இடைநிலை | | உ வினையெச்ச விகுதி |
| எழுந்த | **எழு** | த் | 'த்' 'ந்' ஆனது சந்தி விகாரம் | த் இறந்தகால இடைநிலை | | அ வினையெச்ச விகுதி |

**5) தொடர் அமைத்து எழுதுக.**

**அன்றொருநாள், நிழலிலிருந்து**

**அன்றொருநாள்** - அன்றொருநாள் நான் படித்துக் கொண்டிருந்தபோது, திடீரென மின்இணைப்பு துண்டானது.

**நிழலிலிருந்து** - நான் விளையாடியதை என் தாத்தா மரத்தின் நிழலிலிருந்து வேடிக்கைப் பார்த்தார்.

**சிறுவினா**

**1) ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?**

**ஃபிரெஸ்கோ ஓவியங்கள்:-**

★ ஃபிரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்கு 'புதுமை' என்று பொருள்.

★ ஃபிரெஸ்கோ என்பது சுண்ணாம்பு காரைப்பூச்சின்மீது வரையப்படுவது.

★ ஃபிரெஸ்கோ பழமையான ஓவியக் கலைநுட்பம் ஆகும்.

★ தஞ்சை பெரிய கோவில் கருவறை சுவர்களில் ஃபிரெஸ்கோ ஓவியங்கள் காணப்படுகின்றன.

★ ஃபிரெஸ்கோ ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் காணப்படுகின்றன.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கற்றளிக் கோயில்கள்:-**

- ★ கருங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படுவதற்கு கற்றளி என்று பெயர்.
- ★ கற்றளி வடிவத்தை ஏழாம் நூற்றாண்டில், இரண்டாம் நரசிம்மவர்மன் உருவாக்கினான்.
- ★ மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனமலைக் கோவில் போன்றவை கற்றளிக் கோவில்கள்.
- ★ **தஞ்சைப் பெரிய கோவிலே மிகப்பெரிய கற்றளிக் கோவில்.**

**2) கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

| கலைச்சொல்லாக்கம் | அகராதி |
|---|---|
| பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்கு இணையான தாய்மொழிச் சொல்லை உருவாக்குவது கலைச்சொல்லாக்கம் ஆகும். | பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவது அகராதி ஆகும். |
| (எ.கா.) CLINIC - **மருத்துவமனை**<br>CONSUMER - **நுகர்வோர்** | (எ.கா.) **உழுவை - புலி, கடல்மீன், தும்பிலி, பெருமை** |

**3) சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?**

**சிங்கி பெற்ற பரிசுப் பொருட்கள்:-**

- ★ சேலத்து நாட்டார் வழங்கிய **சிலம்பு.**
- ★ கலிங்க நாட்டார் வழங்கிய **தண்டை.**
- ★ பாண்டியர் மகள் வழங்கிய **பாடகம்** (**கொலுசு**).
- ★ குற்றாலநாதர் சந்நிதியில் உள்ள பெண்கள் வழங்கிய **மணிக்கெச்சம்.**
- ★ கண்டிய நாட்டில் பெற்ற காலாழி (**கால் மோதிரம், மெட்டி**), பீலி (**மெட்டி**).

**4) உணவும் உறக்கமும் அணில் கனவாம். உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.**

**என் கனவு - என் சொற்களில்:-**

- ★ இயற்கை உணவை உண்பேன்.
- ★ இன்சொல் பேசி அனைவரிடமும் பழகுவேன்.
- ★ பதினோராம் வகுப்பில் பள்ளியில் முதல் மாணவன் ஆவேன்.
- ★ மருத்துவம் பயின்று மானுடம் காப்பேன்.
- ★ நாளும் நாளும் புதிய விடியல் என்று நம்பி நல்லுறக்கம் கொள்வேன்.
- ★ பெற்றோரைப் பேணுவேன்
- ★ உப்பிட்டவரை உள்ளளவும் போற்றுவேன்.
- ★ பெற்ற தாய்தந்தைக்கும் பிறந்த பொன் நாட்டுக்கும் பெருமை சேர்ப்பேன்.

**5) தமிழக பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?**

**திருச்சாழல்:-**

- ★ சாழல் என்பது பெண்கள் விளையாடும் விளையாட்டு ஆகும்.
- ★ சாழல் பாடிக்கொண்டே விளையாடும் விளையாட்டு.



நம்மை அறிவோம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ ஒரு பெண் வினா எழுப்புவாள்.

★ மற்றொரு பெண் அவ்வினாவிற்கு விடை அளிப்பாள்.

★ சிவபெருமானைப் பற்றி பெண்கள் வினா எழுப்பி, விடை அளிப்பதாக பாடிய பாடல் **திருச்சாழல்** ஆகும்.

★ திருச்சாழலில் சிவபெருமானின் **பெருமை, சிறப்பு, திருவிளையாடல்** போன்ற மேன்மையான கருத்துகள் இடம் பெற்றுள்ளன.

**நெடுவினா**

**1) "கல்லும் கதை சொல்லும்" என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.**

**குறிப்புச் சட்டம்**

| | | | |
|---|---|---|---|
| **நோக்கம்** | **முன்னுரை** | **கோவிலின் தோற்றம்** | **கற்றளிக் கோவில்** |
| **கேரளாந்தகன் கோபுரம்** | **கோவிலின் அமைப்பு** | **பெரிய கோவில்** | **சிகரம்** |
| **கல் சொல்லும் கதை** | **முடிவுரை** | **நூற்பயன்** | **நன்றி** |

**நோக்கம்**

★ **'கல்லும் கதை சொல்லும்'** என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுதல்.

**முன்னுரை:-**

★ கண்களுக்கும் மனத்திற்கும் இன்பம் அளிப்பது கலை.

★ தஞ்சைப் பெரிய கோவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கோவில்.

★ தஞ்சைப் பெரிய கோவிலின் கட்டக்கலை இன்றும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

★ கம்பீரமாகக் காட்சியளிக்கும் பெரிய கோவிலின் ஒவ்வொரு கல்லும் கதைச் சொல்லும் விதமாகத் தோன்றுகின்றன.

**கோவிலின் தோற்றம்:-**

★ 1886ஆம் ஆண்டு ஜெர்மனி அறிஞர் கோவிலிலிருந்த கல்வெட்டுகளைப் படியெடுத்தார்.

★ ஜெர்மனி அறிஞர் கோவிலின் தோற்றம் பற்றிய செய்தியை வெளியிட்டார்.

★ கல்வெட்டுச் சான்றுகளின்படி, தஞ்சை பெரிய கோவில் முதலாம் இராசராசனால் கட்டப்பட்டது.

★ பெரிய கோவில் 1003ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி, 1010ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது.

**கற்றளிக் கோவில்:-**

★ கருங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டும் கோவில்கள் கற்றளிக் கோவில்கள் ஆகும்.

★ கற்றளிக் கோவில்களிலேயே மிகப்பெரிய கோவில் தஞ்சைப் பெரிய கோவில் ஆகும்.

★ பெரிய கோவில், இராசராசனால் '**தட்சிண மேரு**' என்று அழைக்கப்பட்டக் கோவில்.

**கேரளாந்தகன் கோபுரம்:-**

★ பெரிய கோவிலில் உள்ள உயரமான கோபுரம் '**கேரளாந்தகன் கோபுரம்**' ஆகும்.

★ இராசராசன் சேரநாட்டை வெற்றிகொண்டான்.

★ இராசராசனின் வெற்றியைப் போற்றும் வகையில் 'கேரளாந்தகன் கோபுரம்' எனப் பெயரிடப்பட்டது.

**கோவிலின் அமைப்பு:-**

★ தஞ்சை பெரிய கோவிலின் கருவறை விமானம் 13 தளங்களை உடையது.

★ கருவறை விமானத்தின் உயரம் 216 அடி ஆகும்.

★ தஞ்சை பெரிய கோவில், எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைபாணியில் உருவான கோவில் ஆகும்.

**பெரிய கோவில்:-**

★ தஞ்சை பெரிய கோவில் வெறும் வழிபாட்டுத் தலம் மட்டுமன்று.

★ **இசை, நடனம், நாடகம்** போன்ற கலைகள் வளர்க்கப்பட்டன.

★ பஞ்ச காலங்களில் மக்களுக்கு உதவுவதற்கான தானியக் கிடங்குகள் இருந்தன.

★ கருவூலம், மருத்துவமனை, படைவீரர்கள் தங்கும் இடம் என்று பலவகையில் கோவில் பயன்பட்டது.

**சிகரம்:-**

★ கோவில் விமான **சிகரத்திலுள்ள பிரமந்திரக் கல் ஒற்றைக்கல்** அன்று.

★ எண்பட்டை அமைப்பில் ஆரஞ்சுப்பழச்சுளை போன்று எட்டுக் கற்கள் நெருக்கமாக வைத்து ஒட்டப்பட்டன.

**கல் சொல்லும் கதை:-**

★ கோவில் கட்டுவதற்குப் பங்களித்தவர்களைப் பற்றி கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ கோவிலைக் கட்டிய தச்சர்களின் பெயர்களும் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது.

★ கோவிலை எடுப்பித்தவனின் பெயர் மட்டுமே குறிப்பிட்டு வந்த நிலையில், கோவிலைக் கட்டிய தச்சர்களின் பெயரும் குறிப்பிடப்பட்டிருப்பது பெருமைக்குரியது.

**முடிவுரை:-**

★ கற்களே கிடைக்காத காவிரிச் சமவெளிப் பகுதியில் மிகப்பெரிய கற்றளிக் கோவிலைக் கட்டிய தமிழர்களின் பெருமை உலகமே போற்றும் வண்ணம் இன்றளவும் காட்சியளிக்கின்றது.

**நூற்பயன்:-**

★ தஞ்சைப் பெரிய கோவிலின் கட்டடக் கலைநுட்பத்தைப் பற்றி அறிந்துகொண்டேன்.

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**6) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| நோக்கம் | முன்னுரை | இசைத்தமிழில் இளையராஜா | பயணங்களின் வழித்துணை |
| இசைத் தொகுப்புகள் | இசைநுணுக்கம் | ஆஸ்கர் தமிழர் | முதல் வெற்றி |
| இசையால் இணைந்தவர் | முடிவுரை | நூற்பயன் | |

**நோக்கம்**

★ நான் வாழும் காலத்தில் வாழும் இசை ஆளுமைகளின் திறமைகளை உணர்ந்து முன்னோடியாகக் கொள்ளவே கற்றேன்.

**முன்னுரை:-**

★ கலைகளின் உச்சமாக விளங்கக் கூடியது இசைக்கலை.

★ இசையைச் சீராட்டி, மெருகூட்டி உலகுக்குத் தந்து மகிழ்ந்தவர் இருவர்.

★ ஒருவர் **சிம்பொனித் தமிழர் இளையராஜா,**

★ மற்றொருவர் ஆஸ்கர் தமிழர் **ஏ.ஆர். இரஹ்மான்** ஆவர்.

**இசைத்தமிழில் இளையராஜா:-**

★ 1970ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்கள் பிறமொழிப் பாடல்களையே கேட்டுக்கொண்டிருந்தனர்.

★ அந்நிலையை மாற்றி, தமிழ்ப்பாடல்களின் மீது ஈடுபாடு ஏற்பட செய்தவர்.

★ புது வேகம்கொண்ட சமூக மாற்றங்களின் குறியீடாக இவரது இசை திகழ்ந்தது.

★ திரைப்பாடல்களைச் செவியுணர் கனிகளாகவும் பண்பாட்டு வெளிப்பாடாகவும் மாற்றியவர்.

**பயணங்களின் வழித்துணை:-**

★ இளையராஜாவின் இசை ஐவகை நிலப்பரப்புகளையும் காட்சிப்படுத்தும் மெட்டுகளைக் கொண்டது.

★ இன்றளவும் நெடுந்தொலைவுப் பயணங்களின் வழித்துணையாக அவரது இசை இருக்கின்றது.

**இசைத் தொகுப்புகள்:-**

★ இந்திய இசைமேதைகள் அனைவராலும் மதிக்கப்படுபவர் இளையராஜா.

★ அவரின் '**எப்படிப் பெயரிடுவேன்?**', '**காற்றைத் தவிர ஏதுமில்லை**' ஆகிய இசைத் தொகுப்புகள் இசை உலகின் புதிய முயற்சி ஆகும்.

★ **மகிழ்ச்சி**, **ஏக்கம்**, **நம்பிக்கை**, **உற்சாகம்**, **வலி** போன்ற மனித உணர்வுகளை '**இந்தியா 24 மணிநேரம்**' என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.

★ திருவாசகப் பாடல்களுக்கு '**ஆரட்டோரியோ**' என்னும் இசை வடிவில் இசையமைத்துள்ளார்.

★ '**இராஜாவின் ரமணமாலை**', '**இளையராஜாவின் கீதாஞ்சலி**' ஆகிய இசைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

**இசைநுணுக்கம்:-**

★ இளையராஜா, தமிழகத்தின் நாட்டுப்புற இசை வடிவத்தைத் திரையிசையில் தவழவிட்டவர்.

★ நாட்டுப்புற இசையின் செவ்வியல் தன்மைகளோடு மேற்கத்திய இசையைக் கலந்து உலவவிட்டார்.

★ மனத்தின் இசையைக் குறியீடுகளாகக் காகிதத்தில் எழுதிவிடுவார்.

★ திரைப்படப் பின்னணி இசைக்கோவையை உணர்வின் மொழியாக மாற்றித் தந்தவர்.

★ சிம்பொனி என்னும் இசைப் பணியை எழுதக் குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும். ஆனால் வெறும் பதின்மூன்று நாள்களில் இச்சாதனையை நிகழ்த்தியவர்.

**ஆஸ்கர் தமிழர்:-**

★ ஏ.ஆர். இரஹ்மான், 2009ஆம் ஆண்டு சிறந்த திரைப்படப் பின்னணி இசைக்கான ஆஸ்கர் விருதையும் சிறந்த திரையிசைப் பாடலுக்கான ஆஸ்கர் விருதையும் பெற்றவர்.

★ இவருடைய தந்தை ஆர்.கே. சேகர் மலையாளத் திரைப்பட உலகின் புகழுடன் விளங்கிய இசைக்கலைஞர்.

★ இளம் வயதிலேயே இவர் தன்னை தன் தந்தையின் இசைப்பயணத்தில் இணைத்துக்கொண்டார்.

**முதல் வெற்றி:-**

★ ஏ.ஆர். இரஹ்மான், 1992ஆம் ஆண்டு **'ரோஜா'** என்னும் திரைப்படத்திற்கு இசையமைத்தார்.

★ இவரின் இசை, தமிழ்த் திரைப்பட இசை உலகில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.

★ தம் முதல் படத்திற்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர்.

**இசையால் இணைத்தவர்:-**

★ தம் இசையால் இளைஞர் உலகின் இசை ஆளுமையாக வளர்ந்தவர்.

★ அவர் வெளிப்படுத்திய மெல்லிசை, கேட்டவர் நெஞ்சங்களில் சிம்மாசனமிட்டு அமர்ந்தது.

★ தம் இசைக் கட்டத்துக்குள் நின்று இளைஞர்களை ஆடவும் பாடவும் வைத்தவர்.

★ உலகத் தமிழர்களுடன் வலம் வந்த இசைத்தோழமையாக விளங்கியவர்.

★ தம் இசையால், உலகம் எங்கும் பரவிய தமிழ் இளைஞர்களை இணைத்தவர்.

★ உலகின் பல நாடுகளைச் சேர்ந்த இசை, பண்பாட்டுக் குறியீடுகளைத் தம் இசையில் தவழவிட்டவர்.

★ **'கோல்டன் குளோப்'** விருது பெற்ற முதல் இந்தியராக விளங்குகின்றார்.

**முடிவுரை:-**

★ காலந்தோறும் தமிழுக்கு பலரும் பல்வேறு வகையில் தொண்டாற்றி வருகின்றனர்.

★ அவ்வகையில் சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இருபதாம் நூற்றாண்டில் இசைத்தமிழுக்குத் தொண்டாற்றி அழியாப் புகழ் பெற்றுள்ளனர்.

**நூற்பயன்:-**

★ இசைத்தமிழுக்குத் தொண்டாற்றிய இருவரைப் பற்றி அறிந்துகொண்டேன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் 7

## நாடு, சமூகம், அரசு, நிர்வாகம்

## வையத் தலைமை கொள்

### இலக்கணத் தேர்ச்சி கொள்

**பயிற்சி 1**

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆக்கப் பெயர்களை எடுத்தெழுதுக:**

எங்கள் பள்ளியில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவிற்குக் காவல்துறை ஆணையாளர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர், "மாணவர்களாகிய நீங்கள் படிப்பகங்களைப் பயன்படுத்தி விண்ணியல், மண்ணியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கவேண்டும். நல்ல நண்பர்களைக் கூட்டாளி ஆக்கிக்கொண்டு உதவியாள் இல்லாமலே ஒரு நிறுவனத்தின் மேலாளராகவோ முதலாளியாகவோ ஆகலாம்" என்று கூறி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

**ஆக்கப் பெயர்கள்:-**

- ★ ஆணையாளர் ➔ அழைப்பாளர் ➔ மாணவர்
- ★ படிப்பகம் ➔ விண்ணியல் ➔ மண்ணியல்
- ★ நண்பர் ➔ கூட்டாளி ➔ உதவியாள்
- ★ மேலாளர் ➔ முதலாளி

**பயிற்சி 2**

**அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக:**

- ★ வேவு பார்த்திடுவான் ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி)
- ★ அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் (அகம்)
- ★ வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்)
- ★ வேடம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன்? (தாரி)
- ★ அளந்து அளந்து கொட்டிடுவான்; அகம் மகிழத் தந்திடுவான் (ஆள்)

**விடை:**

- ★ உளவாளி ➔ நூலகம் ➔ வருமானம்/வெகுமானம்
- ★ பட்டதாரி ➔ கொடையாள்





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நம்மை அளப்போம்

பலவுள் தெரிக

**1) 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?**

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

**விடை - இ) மக்கள் வெள்ளம்**

**2) கூற்று: எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து புறம் சார்ந்த நூல்.**

**காரணம்: சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.**

அ) கூற்று சரி; காரணம் தவறு ஆ) இரண்டும் சரி

இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு; காரணம் சரி

**விடை - ஆ) இரண்டும் சரி**

**3) அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் - யார் யாரிடம் கூறியது?**

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

**விடை - இ) அமைச்சர் மன்னரிடம்**

**4) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்**

அ) அடையாற்றுப் பாலத்தில் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்

இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

**விடை - ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்**

**5) ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.**

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

**விடை - ஈ) ஆசிரியர்**

குறுவினா

**1) 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.**

**நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்:-**

★ வாண வேடிக்கைக்காரன் பட்டாசு நாழிக்குள் சிறிது அளவே மருந்தைத் திணிப்பான்.

★ அதுபோல, ஜீவா மேடையில் பேசுவதற்கு இரண்டு விசயங்களை மட்டுமே எடுத்துக் கொள்வார்.

★ நாழிக்குள் சிறிதளவு வைக்கப்பட்ட மருந்து பல வண்ணங்களில் வெடிக்கும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ அதுபோல, ஜீவா எடுத்துக் கொண்ட விசயம் கேட்பவற்கு எளிதில் புரியும்படியும் இன்பம் தோன்றும்படியும் அமைந்திருக்கும்.

★ நாழிக்குள் திணிக்கும் மருந்து என்னும் உவமையுடன் ஜீவாவின் பேச்சுடன் பொருந்தியுள்ளது.

**2) உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?**

**உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தவை:-**

➔ அழகான ஒரு பெருநகரம் ✶ அழகிய சிற்றூர் ✶ வரப்புகளை உடைய வயல்

➔ ஆற்று நீரைச் சேமிக்கும் வாய்க்கால் ✶நெல் மணிகள்

**3) அலைகடல், புதுக்கியவர் - இலக்கணக் குறிப்பு தருக.**

✶ அலைகடல் = **வினைத்தொகை** ✶ புதுக்கியவர் = **வினையாலணையும் பெயர்**

**4) செந்துறைப் பாடாண் பாட்டு - துறை விளக்கம் எழுதுக.**

**செந்துறைப் பாடாண் பாட்டு:-**

★ "உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுவது செந்துறைப் பாடாண்பாட்டு ஆகும்."

★ எ.கா - **'பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி'** என்னும் பாடல் குமட்டூர் கண்ணனார் **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை** வாழ்த்திப் பாடியது

**சிறுவினா**

**1) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?**

**ஜீவாவின் பேச்சுநடை:-**

★ பேச்சுக்கலை ஜீவானந்தம் பெற்ற வரம்.

★ ஜீவாவின் பேச்சு புதுமையாகவும் எளிமையாகவும் இருக்கும்.

★ பேச்சுக்கலைக்குரிய விதிகளைத் தன் காலில் போட்டு மிதித்தவர்.

★ அவருடைய பேச்சுப்பாணி இரவலாகப் பெற்றதோ, கற்றுக்கொண்டதோ அல்ல.

★ நம் நாட்டு மக்களைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டு அதற்கு ஏற்ப அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி ஆகும்.

**2) உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள்விளக்கம் தருக.**

**இடம்:-** பாவேந்தர் பாரதிதாசனார் இயற்றிய 'புரட்சிக்கவி'

**பொருள்:-**

★ நம் தாய்மொழியாம் தமிழ்மொழிக்குப் பழி வந்தால், அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. குற்றமில்லாத நம் தமிழ்மொழியை உயிரென்று நினைத்துப் போற்ற வேண்டும்.

**விளக்கம்:-**

★ மன்னனின் மகள் அமுதவல்லிக்குக் கவிதை சொல்லிக் கொடுக்க வந்த உதாரன், அவள் மீது காதல் கொள்கிறான்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ★ இதை அறிந்த மன்னன் இருவருக்கும் மரணதண்டனை விதிக்கிறான்.
- ★ கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட உதாரன் மக்கள் முன்பு வீர உரையாற்றினான்.
- ★ அப்போது, தான் இறப்பதற்கு தமிழ்மொழி காரணமாயிற்று என்று யாரும் கருதிவிடக் கூடாது என்பதற்காக பொதுமக்களிடம், தாய்மொழிக்குப் பழி வந்தால் சகிக்கக் கூடாது.
- ★ குற்றம் இல்லாத உயர்தமிழை உயிரென்று போற்ற வேண்டும் என்று கூறினான்.

**3) பெருங்காடு, உழுதுழுது - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**

**பெருங்காடு** = பெருமை + காடு

**விதி** 1 - ஈறுபோதல் — **பெரு + காடு**

**விதி** 2 - இனமிகல் — பெரு + **<u>ங்</u>** + காடு = **பெருங்காடு**

**உழுதுழுது** = உழுது + உழுது

**விதி 1 - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்** — **உழுத் + உழுது**

**விதி 2 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** — **உழுதுழுது**

**4) சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.**

**சேரநாடு செல்வ வளம் மிக்கது:-**

- ★ சேரநாடு பல வளங்களை உடையது.
- ★ அங்கு தொடர்ச்சியாக விழாக்கள் கொண்டாடப்படுகிறது.
- ★ குடிமக்கள் பசி, பிணி என்பதே அறியாமல் வாழ்ந்து வந்தனர்.
- ★ இமயவரம்பன் அனைத்தும் உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்பு உடையவன்.
- ★ சேரநாடு செல்வவளம் மிக்கது.
- ★ அவன் நாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை.
- ★ புது வருவாய்ப் பெருக்கமும் இன்பமும் உடைய நாடு.
- ★ இதனால், சேரநாடு செல்வ வளம் மிக்க நாடு என்னும் கூற்று உறுதியாகிறது.

**5) ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன - ஏன்?**

**ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன-காரணம்**

- ★ பெயர்ச்சொற்களை <u>ஆக்கப் பயன்படும் விகுதிகள் ஆக்கப்பெயர் விகுதிகள்</u> எனப்படும்.
- ★ தமிழில், ஆக்கப் பெயர்களில் விகுதிகள் <u>தனிச்சிறப்பு உடையவை.</u>
- ★ தமிழ்ச்சொற்களோடு இவ்வகை விகுதிகள் சேரும்போது, <u>புதுச்சொற்கள்</u> உருவாகின்றன.
- ★ இதனால், <u>தமிழின் சொற்களஞ்சியம் விரிவடைகிறது.</u>
- ★ தமிழ்மொழியில் ஆக்கப்பெயர்கள் பேச்சுவழக்கில் மிகுதியாக உள்ளன.
- ★ எனவே, தமிழ்மொழியில் ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன.

## நெடுவினா

**1) சுந்தர ராமசாமியின் காற்றில் கலந்த பேரோசை என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.**

**குறிப்புச் சட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| நோக்கம் | முன்னுரை | மேடையில் வாழ்ந்த மனிதர் | நெஞ்சோடு வளர்ந்த கனவு | கொள்கையும் நம்பிக்கையும் |
| பேச்சு நடை | இரண்டு கைப்பிடி விசயம் | ஈடுசெய்ய யாருமில்லை | முடிவுரை | நூற்பயன் |

**நோக்கம்**

★ "மேடைப்பேச்சின் நாயகன் ஜீவா அவர்களின் ஆளுமைத் திறனை அறிவதற்கே கற்றேன்"

**முன்னுரை:-**

★ ஜீவா என்று அழைக்கப்படும் ப. ஜீவானந்தம் **காந்தியவாதி**, **சுயமரியாதை இயக்கப் போராளி**, **பொதுவுடைமை இயக்கத் தலைவர்** எனப் பன்முகத் தன்மைக் கொண்டவர்.

★ சிறந்த தமிழ்ப் பற்றாளர், எளிமையின் அடையாளம், சிறந்த மேடைப் பேச்சாளர் என பன்முக ஆற்றல் கொண்டவர்.

★ சுந்தர ராமசாமி **"காற்றில் கலந்த பேரோசை"** என்னும் தலைப்பில் ஜீவாவின் வாழ்க்கையைப் பொருத்தி அமைத்துள்ளார்.

**மேடையில் வாழ்ந்த மனிதர்:-**

★ ஜீவா, தன் வாழ்நாளின் இறுதி வரையில் மேடையிலேயே கர்ஜித்துக் கொண்டிருந்தவர்.

★ எனவே தான், **"மூச்சு நின்றுவிட்டது"** என்று ஜீவாவின் இறப்பைக் கூறிய போது "பேச்சு நின்றபோதா?" என்று அனைவரும் வினவினர்.

★ மேடையில் வாழ்ந்த மனிதர் மேடையிலேயே தானே இறந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்கள் அவ்வாறு வினவினர்.

★ ஜீவாவின் மரணம், முத்திரை கொண்ட மரணமாக இருந்தது.

**நெஞ்சோடு வளர்ந்த கனவு:-**

★ ஜீவா தமக்கென ஒரு தத்துவத்தைப் படைத்துக் கொள்ளவில்லை.

★ அவர் தான் நம்பிய தத்துவத்தை தமது அரிய திறமையால், கலை நோக்கால், கற்பனையால் உயிர்பெறச் செய்தவர்.

★ மனித வெள்ளத்தை அவர்களில் ஒருவனாய் நின்று தலைமை தாங்க வேண்டும்.

★ அவர்களைச் சிறந்த ஓர் எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கனவு கண்டவர்.

**கொள்கையும் நம்பிக்கையும்:-**

★ மனிதச் சிந்தனையில் தோன்றிய ஒரு சிறந்த தத்துவத்தை, மக்களிடையே பரப்ப வேண்டும்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ அந்த தத்துவத்தை நோக்கி மக்களை அழைத்துச் செல்ல வேண்டும்.

★ இந்த அடிப்படை எண்ணத்திலிருந்துதான் ஜீவாவின் கொள்கையும் நம்பிக்கையும் தோன்றியது.

**பேச்சு நடை:-**

★ பேச்சுக்கலை ஜீவானந்தம் பெற்ற **வரம்.**

★ ஜீவாவின் பேச்சு வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.

★ பேச்சுக்கலைக்குரிய விதிகளைத் தன் காலில் போட்டு மிதித்தவர்.

★ அவருடைய பேச்சுப்பாணி இரவலாகப் பெற்றதோ, கற்றுக்கொண்டதோ அல்ல.

★ நம் நாட்டு மக்களைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டு அதற்கு ஏற்ப அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி ஆகும்.

**இரண்டு கைப்பிடி விசயம்:-**

★ ஜீவானந்தம் மேடையில் பேசும் போது, **வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் இரண்டு கைப்பிடி விசயம் மட்டும் எடுத்துக்கொள்வார்.**

★ மேடைமீது ஏறி பேச்சு என்னும் நெருப்பு வைத்ததும் அதிலிருந்து கருத்து வர்ணஜாலங்கள் தோன்றும்.

★ பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும் குடை குடையாய் இறங்கி வரும் மாலைமாலையாய் இறங்கி வரும்.

**ஈடுசெய்ய யாருமில்லை:-**

★ ஜீவாவிற்கு நன்கு தெரிந்த ஒரு விஷயத்தைப் பற்றி ஒரு சாதாரண மனிதர் அவரிடம் பேசினாலும் காது கொடுத்து கேட்பார்.

★ தனக்குத் தெரியாத விஷயங்கள் பிறருக்குத் தெரிந்திருக்கும் என்று நம்பியவர்.

★ பேச்சுக்கலை ஜீவாவின் காலடியில் விழுந்து கிடந்தது.

★ ஜீவாவின் மரணத்திற்குப் பிறகு, மேடையில் ஒரு நாற்காலி காலியாகிவிட்டது. அதை ஈடுசெய்ய யாருமில்லை.

**முடிவுரை:-**

★ ஜீவா, '**என் வாழ்வு என் கையில்**' என்று நம்பியவர்.

★ தன் வாழ்வில் தோன்றிய பல இடர்களையும் கடந்து வந்தவர்.

★ ஜீவா என்னும் சமூக சிந்தனையாளரின் பேச்சு "**காற்றில் கலந்த பேரோசை**"யாக கலந்து விட்டது.

**நூற்பயன்:-** ஜீவா என்னும் சமூக சிந்தனையாளரைப் பற்றி அறிந்துகொண்டேன்.

**2) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.**

**குறிப்புச் சட்டம்**

| | | |
|---|---|---|
| **நோக்கம்** | **முன்னுரை** | **கொலைக்களத்தில் வீரஉரை** |
| **உழைப்பாளர்களே உயர்ந்தவர்கள்** | **தேசம் தனிமனிதனுக்கு அல்ல** | **உயர்தமிழைப் போற்றுமின்** |
| **குடியாட்சி உரிமை** | **முடிவுரை** | **நூற்பயன்** |

**நோக்கம்**

★ கவிதையில் புரட்சிக்கருத்துகள் எழுச்சியுடன் வெளிப்படும் தன்மையைப் பாரதிதாசன்வழி அறிவதற்காகவே கற்றேன்

**முன்னுரை:-**

★ பாரதிதாசனார், தம் பாடல்களால் மக்களின் மனத்தில் புரட்சிக் கருத்துகளை விதைத்தவர்.

★ வடமொழியில் எழுதப்பட்ட **"பில்கணீயம்"** என்னும் காவியத்தைத் தழுவி தமிழில் அவர் எழுதிய காவியம் 'புரட்சிக்கவி' ஆகும்.

★ இக்காவியத்தில் வரும் உதாரன் என்னும் கதாபாத்திரன் வாயிலாக தன்னுடைய புரட்சிக் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

**கொலைக்களத்தில் வீரஉரை:-**

★ மன்னனால் மரண தண்டனை விதிக்கப்பட்ட, உதாரனும் அமுதவல்லியும் கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

★ அவர்களைக் காண நாட்டு மக்கள் அனைவரும் திரண்டு நின்றனர்.

★ உதாரன், அவர்கள் முன் நின்று, வீரஉரை ஆற்றத் தொடங்கினான்.

**உழைப்பாளர்களே உயர்ந்தவர்கள்:-**

★ ஆற்றுநீரைத் தடுத்து நீர் தேக்கங்களைக் கட்டியது.

★ வாய்க்கால்கள் வெட்டி நீர்ப்பாசனத்திற்கு வழி செய்தது.

★ கரடுமுரடான பாதைகளைச் சீரமைத்தது

★ தரிசு நிலத்தை உழவு நிலமாக மாற்றியது

★ கல்லையும் மலையையும் பிளந்து, கனிமங்களை வெட்டி எடுத்தது

★ ஆழ்கடலில் மூழ்கி, மூச்சை அடைக்கி முத்தெடுத்தது என்று என்று அனைத்தையும் உருவாக்கியது உழைப்பாளிகளே!

**தேசம் தனிமனிதனுக்கு அல்ல:-**

★ ஒரு நாட்டின் மன்னனாக விளங்குபவன் தன் சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டும்.

★ ஆனால், தன் சொந்த வெறுப்பின் காரணமாக உதாரனைக் கொல்ல முடிவெடுத்தான், மன்னன்.

★ இவ்வாறு, ஒரு தனிமனிதனின் தேவைக்காக ஒரு தேசம் இருக்குமானால், அந்த தேசம் அழிவதே சிறந்தது.

**உயர்தமிழைப் போற்றுமின்:-**

★ தன் மரணத்திற்கு தமிழ்மொழிதான் காரணம் என்று மக்கள் கூறுவதைக் கேட்டு, உதாரன் வருத்தமடைகிறான்.

★ தமிழ்மொழிக்கு தன்னால் இழுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்று கருதினான்.

★ எனவே, சிறந்த மொழியாகிய தமிழ்மொழியை உயிர் போல போற்றுங்கள் என்று கூறினான்.

**குடியாட்சி உரிமை:-**

★ மன்னனுக்குப் பிறகு ஆட்சிக்கு வரவிருந்த அமுதவல்லி தன் ஆட்சிக்காலத்தில், மக்களுக்கு ஆளும் உரிமையை அளிக்க எண்ணினாள்.

★ ஆனால், இப்பொழுது அவளையும் கொல்வதற்கு மன்னன் ஆணையிட்டிருக்கிறான்.

★ நாட்டின் மக்களே ஆளும் உரிமை பெற்றுத் திகழ வேண்டும்.

★ 'விண்வீழ் கொள்ளிகள் வீழ்வதைப் போல' கொடிய ஆட்சியும் வீழ வேண்டும் என்று முழங்கினான்.

**முடிவுரை:-**

★ உழைப்பாளர்களின் உயர்வு,

★ தேசம் தனிமனிதனின் தேவைக்கு அல்ல,

★ மக்களாட்சி தத்துவம்,

★ மொழிப்பற்று போன்ற புரட்சிகரமான கருத்துகளைத் தம் பாடலின் மூலம் வெளிப்படுத்திய பாரதிதாசனார் 'புரட்சிக்கவி'யாக திகழ்கின்றார்.

**நூற்பயன்:-** பாரதிதாசனார் ஒரு புரட்சிக்கவி என்பதை உதாரன் பாத்திரத்தின் மூலம் அறிந்துகொண்டேன்.

**3) சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.**

**குறிப்புச் சட்டம்**

| | | |
|---|---|---|
| **நோக்கம்** | **முன்னுரை** | **முன்னேற்றத்திற்கு அடித்தளம் வீடு** |
| **பொதுவெளியாக விளங்குவது நாடு** | **வீடு ஒரு கருவூலம்** | |
| **பெண் அடிமைத்தனம் போக்கியது நாடு** | **முடிவுரை** | **நூற்பயன்** |

**நோக்கம்**

★ பட்டிமன்றத்தின் வாயிலாக சிந்தனைக் கருத்துகளை அறிந்து அதன்வழி நடக்கவே கற்றேன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**முன்னுரை:-**

★ தமிழர் சிந்தனைக்கான வெளிப்பாட்டு வடிவங்களில் சிறப்பானதொரு வடிவம் பட்டிமன்றம்.

★ முரண்பாடான பல கருத்துகளை விளக்கவும் நிலைநாட்டவும் பட்டிமன்றம் உதவுகிறது.

★ 'இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது வீடா? நாடா?' என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தின் தொகுப்பைக் காண்போம்.

**முன்னேற்றத்திற்கு அடித்தளம் வீடு:-**

★ இளைஞர்களின் முன்னேற்றப் பாதையில் முதல் படிக்கல்லாகவும், அடித்தளமாகவும் இருப்பது வீடு.

★ அன்பையும் அறிவையும் உணரத் தொடங்கும் உரைக்கல்லாக விளங்குவது வீடு.

★ அன்புக் காட்டி பிள்ளையை வளர்த்து, வாழ்வின் ஒவ்வொரு நிலையையும் உணர வைப்பவர் தாய்.

★ கற்றலை முதன்முதலில் தொடங்கி வைப்பவர் தந்தை.

★ அடித்தளமாகிய வீட்டுச்சூழலின்மீதுதான் இளைஞர்களின் வெற்றி கட்டி எழுப்பப்படுகிறது.

**பொதுவெளியாக விளங்குவது நாடு:-**

★ வீடு என்பது ஒரு சிறிய கூடு. குடும்பத்திற்குள் இருந்த குதூகலமான உரையாடல் தற்போது தொலைந்து போய்விட்டது.

★ வீடு என்னும் சிறிய வட்டத்தைத் தாண்டி நாட்டை நாடிய பின்தான் நல்வாழ்வு துளிர்க்கத் தொடங்குகிறது.

★ பாரதி வீதிக்கு வந்து, உலகத்தைப் படிக்கத் தொடங்கியதும், அவருக்குப் புதிய திசைகளை அறிமுகப்படுத்தியது.

★ வீடு என்பது உறவுகளுக்குள்ளேயே நம்மைச் சுற்றவைக்கிறது.

★ நாட்டின் கல்விச்சாலை உலகத்தைத் திறந்து காட்டுகிறது.

★ புதிய நண்பர்களையும் உறவினர்களையும் அடையாளம் காட்டுகிறது.

★ நாடுதான் அனைவரையும் இணைக்கின்ற பொதுவெளியாக விளங்குவது.

**வீடு ஒரு கருவூலம்:-**

★ வீடு என்பது சிறு கூடு அன்று.

★ அது நமது பண்பாட்டையும் மரபையும் காத்து நிற்கும் கருவூலம் ஆகும்.

★ அனைத்து தேடல்களும் வீட்டிலிருந்தே தொடங்குகிறது.

★ அன்பின் தலைவாசலாக வீடுதான் விளங்குகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com





★ பெற்றோர் பாடிய தாலாட்டு, பாட்டி சொன்ன கதைகள், தோளில் சுமந்த உடன் பிறந்தவர்கள் என்று வீட்டிலிருந்துதான் அன்பு, பாசம், பற்று என்று அனைத்தும் பிறக்கிறது.

★ வீடுகள் இளைஞர்களின் முன்னேற்றத்திற்குக் கலங்கரை விளக்கமாக வழிகாட்டுகின்றன.

**பெண் அடிமைத்தனம் போக்கியது நாடு:-**

★ வீடுகள், பெண்களுக்கு தங்கக் கம்பியால் செய்யப்பட்ட கூண்டுகள்.

★ **'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு'** என்றும், 'பெண்புத்தி பின்புத்தி' என்றும் சொல்லி பெண்களை முடிக்கியது வீடுதான்.

★ ஆனால், பள்ளிக்கூடத்திற்கு வந்த பிறகுதான் இந்த நிலை மாறியது.

★ இன்றைய காலக்கட்டத்தில் இளம் பெண்கள் கம்பீரமாக நடைபோடுவதற்குக் காரணம் நாடுதான்.

★ பெண்கள் தங்களுடைய உரிமைகளை உணர தொடங்கியதற்குக் காரணம் நாடு.

★ பெண்ணின் அடிமைத்தனத்தைப் போக்கியது நாடுதான்.

★ நாடுதான் நம்பிக்கையோடு இளைஞர்களை வழிநடத்துகிறது.

★ நாடுதான் எதிர்காலத்தை வளமாக்கத் துணைபுரிகிறது.

**முடிவுரை:-**

★ வீடு பாச உணர்ச்சியை வளர்த்தெடுக்கிறது. ஆனால் பகுத்தறிவைத் தருவது நாடு.

★ வீட்டைத் தாண்டி நாட்டுக்குள் வந்தால்தான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மேன்மையான பார்வையைப் பெறுகின்றோம்.

★ வீடு என்பது நாட்டின் ஓர் அலகு மட்டுமே.

★ நம் அனைத்து அறிவுத் தேவைகளையும் தருவது நாடே ஆகும்.

★ நாடு தேடுதல்களுக்கான வாசல்களைத் திறந்து வைத்திருக்கிறது.

★ ஆண் பெண் சமத்துவச் சிந்தனை, பேதங்களைக் கடந்த தோழமை, கல்வி சார்ந்த உயர்ந்த கருத்துகள் ஆகிய எல்லாவற்றையும் தருவது நாடு.

★ எனவே, இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது நாடே என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

**நூற்பயன்:-**

★ பட்டிமன்றத்தின் மூலம் மாணவர்களின் விவாத திறனை அறிந்துகொண்டேன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல் 8
## மனிதம், ஆளுமை
## யாரையும் மதித்து வாழ்

**1) திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக?**

**திருத்தக் குறியீடுகளின் வகைகள்:-**

★ பிழைத் திருத்தக் குறியீடுகள் ஐந்து வகைப்படும். அவை:-

★ பொதுவானவை (General)

★ நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவை (Punctuations)

★ இடைவெளி தரவேண்டியவை (Spacing)

★ இணைக்க வேண்டியவை (Alignment)

★ எழுத்து வடிவம் (Type/Font)

**2) ஏற்ற இடங்களில் அச்சுத் திருத்தக்குறியீடுகளைப் பயன்படுத்தும் முறையைக் கீழ்க்காணும் பத்தியின் மூலம் அறிக.**


அறிஞர் வாழ்வில் நகைச்சுவை

கவிஞர் கண்ணதாசன் கல்லூரி ஒன்றில் கவியரங்கத்தில் கலந்துகொண்டு கவிதை யை வாசிக்க ஆரம்பித்தார். அரங்கத்தில் உற்சாக ஆரவாரம் எழுந்தது அவர் கவிதை வாசிக்கும்போது ஒவ்வொரு வரிக்கும் பலத்த கைதட்டல் எழுந்தது. வாசித்து முடித்தது கரவொலி

அடங்க வெகு நேரம் பிடித்தது கைதட்டல்கள் முடிந்ததும். கண்ணதாசன் சொன்னார் "இன்று நான் வாசித்த கவிதை நான் எழுதியது அல்ல. உங்கள் கல்லூரி மாணவர் ஒருவர் நேற்று ஒரு கவிதைய எழுத்துக்கொண்டு வந்து என்னிடம் காண்பித்தார் அது மிக நன்றாக இருந்தது. எனவே நான் எழுதிஎன கவிதையை அவரை வாசிக்கச்சொ சொல்லிவிட்டு அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தேன். என்கவிதையை அவர் வாசிக்கும்போது எந்தவித ஆரவாரமும் இல்லை. அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தபோது பலத்த வரவேற்பு. ஆக. சொல்பவன் யார் என்பதைத்தான் உலகம் பார்க்கிறதே ஒழிய சொல்லும் பொருளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்பதுதான் உண்மை என்று புரிகிறது".



இந்தப் புத்தகத்தின்மூலம் ஆன்லைனில் ஒரு மதிப்பெண் தேர்வுகளை எழுதலாம்!

EXAM PORT
FREE ONLINE MOCK TEST
scan QR Code ➔




சாதாரண மனிதன் விழித்திருக்கும் போதும் தூங்குகிறான்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

**1) பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே.**

அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி

இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி

**விடை - அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு**

**2) கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு**

அ) பெயர்மரபு ஆ) வினைமரபு இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்

**விடை - இ) ஒலிமரபு**

**3) யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி?**

அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

**விடை - இ) நடராசன்**

**4) தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்**

அ) இரகசியவழி ஆ) மனோன்மணீயம்

இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

**விடை - ஆ) மனோன்மணீயம்**

**5) சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.**

அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.

ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.

ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.

**விடை - ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.**

### குறுவினா

**1) ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?**

**ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள:-**

- ★ இவ்வடிகள் **நாங்கூழ்ப் புழுவை(மண்புழுவை)** குறிக்கிறது.
- ★ மண்புழு நிலத்தை மேலும் கீழுமாக நன்கு உழுது மண்ணின் தன்மையை உயர்த்தி உழவருக்கு உதவுகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ அது செய்யும் உதவியினை எண்ணிப் பார்க்காமல் மனிதர்களும் பிற உயிரினங்களும் அதற்குப் பல இடையூறுகளை ஏற்படுத்துகின்றன.

★ ஆனாலும் அவற்றை எல்லாம் மண்புழு பொறுத்துக் கொள்வதால், அதைப் பார்த்து "ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள?" என்று நடராசன் வினவுகின்றான்.

**2) நாட்டுப்புறத்திலும்பட்டணத்திலும்சிறந்துவிளங்குவதாகத்தாகூர்எவற்றைக்கூறுகிறார்?**

**நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவது:-**

★ நாட்டுப்புறங்களில் **மாபெரும் இயற்கை** சிறந்து விளங்குகிறது.

★ பட்டணத்தில் **மனித சமுதாயம்தான்** தலைதூக்கி நிற்கின்றது.

**3) "நீளும் கைகளில் தோழமை தொடரும்**

**நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" - தொடை நயங்களை எடுத்தெழுதுக.**

**தொடை நயங்கள்:-**

★ இவ்வடிகளில், **மோனை, எதுகை, இயைபு, முரண்** ஆகிய தொடைகள் இடம்பெற்றுள்ளன.

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது **மோனைத் தொடையாகும்.**

★ எ. கா - நீளும் - நீளாத; கைகளில் - கைகளில்;

★ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) **ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.**

★ எ. கா கைகளில் - கைகளில்; தொடரும் - படரும்;

★ செய்யுளில் ஒரு சொல்லையும் அதற்கு முரணான (எதிரான) சொல்லையும் அமைத்துப் பாடுவது முரண் தொடை ஆகும்.

★ எ. கா **நீளும் - நீளாத**

**4) கற்றேன் என்பாய் கற்றாயா? என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?**

**கற்றேன் என்பாய் கற்றாயா?:-**

★ மனிதனுக்கு வாழ்வில் **புத்தகக் கல்வியோடு, அனுபவக் கல்வியும்** அவசியம் ஆகும்.

★ ஆனால், சிலர் வெறும் புத்தகங்களை மட்டுமே படித்துவிட்டு அனைத்தையும் கற்றுக் கொண்டதாக எண்ணிக் கொள்கின்றனர்.

★ எனவே, அவர்களிடம் '**கற்றேன் என்பாய் கற்றாயா**? ' என்று வினவுகிறார், அப்துல்ரகுமான்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**5) பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார் - நிறுத்தக்குறியிடுக.**

★ '**பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்**' என்றும் '**கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி**' என்றும் அழைக்கப்பட்ட **தாகூர் தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள்** எழுதத் தொடங்கினார்.

## சிறுவினா

**1) இன்குலாப், உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய் எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.**

**உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்:-**

★ மனிதர்களைப் பொறுத்த வரையில் உலகம் என்பது ஒரு பெரிய கடல் ஆகும்.

★ உலகில் பல கோடி உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன.

★ புல், பூண்டு, செடி, கொடி, மரம் என்று தொடங்கி, பூச்சிகள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் என்று பல வகைப்பட்ட உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன.

★ இவை அனைத்தும் சேர்ந்ததுதான் முழு உலகம் ஆகும்.

★ எனவே, இந்த உலகம் என்னும் பெருங்கடலில் தான் ஒரு துளியாய் இருப்பதாக இன்குலாப் கூறுகின்றார்.

**2) அப்துல்ரகுமானின்கவிதையிலிருந்துவினா-விடைவடிவத்திற்குஏற்றஅடிகளைத்தருக.**

**வினா - விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகள்:-**

★ கற்றேன் என்பாய் கற்றாயா? வெறும் காகிதம் தின்பது கல்வியில்லை

★ பெற்றேன் என்பாய் எதைப்பெற்றாய்? வெறும் பிள்ளைகளைப் பெறுவது பெறுவதல்ல.

**3) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?**

**வாய்க்காலின் சிறப்புகள்:-**

★ உயிர்கள் அனைத்திற்கும் உணவளிக்கின்ற வயல்களுக்குப் பயன்தருவது வாய்க்கால் ஆகும்.

★ சிறிய வாய்க்கால் மேற்கொள்ளும் பணிகள் மிகவும் வியப்பிற்குரியது.

★ இது கடலினை மலையாகவும், மலையினை அலைகடலாகவும் மாற்றியமைக்கின்றது.

★ பருக்கைக்கற்களைநெறுநெறுஎன்றுஓசைஉண்டாகுமாறுதேய்த்துப்பொடியாக்குகிறது.

★ தன் வலிமைக்கு உட்பட்ட கல், மண், புல், புழு ஆகியவற்றைத் தன்னுள் இழுத்துக் கொள்கிறது.

★ தனக்குள் இழுத்துக் கொண்டவற்றை, கடலின் பெரும் பள்ளங்களில் நிரப்பி அவற்றை மலைகளாக மாற்றுகின்றது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) தாமஸிகம் என்றால் என்ன?**

**தாமஸிகம்:-**

★ காலத்துக்கு ஏற்றபடி சீக்கிரமே வாடிவிடும் மலர்களுடன் மக்களுக்குத் தொடர்பு உண்டு.

★ அம்மலர்களைப் பராமரிக்கும் பொறுப்பு தோட்டக்காரனுடையது.

★ மலர்ச்செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை.

★ இதுதான் '**தாமஸிகம்**' அல்லது 'மெடீரியலிஸம்' எனப்படும்.

**5) இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்துவரிகளில் எழுதுக.**

(நகரத்தில் படிக்கும் இனியன் தன் சொந்த ஊருக்குச் செல்கிறான். அங்கு.....)

**இனியன்**: ஐயோ! இது என்ன கொடுமை? நம் ஊரின் நீர்நிலைகள் எல்லாம் வறண்டு போய்விட்டனவே. இயற்கைக்குக் கருணையே கிடையாதா?

**இயற்கை**: நீ ஏன் என்னைப் பழிக்கின்றாய்?

**இனியன்**: ஆமாம். உன்னால்தான் நீர்நிலைகள் வறண்டு, விவசாயம் இல்லாமல், ஊரே பாழாய் போனது.

**இயற்கை**: நீர்நிலைகளில் எல்லாம் கழிவுகளைக் கொட்டியும், வீடுகளைக் கட்டிம் வறண்டு போகச் செய்தது நானா? மனிதனா?

**இனியன்**: மனிதன்தான்.

**இயற்கை**: அதிக விளைச்சல் கிடைக்கும் என்று எண்ணி மண்ணிற்குக் கேடு விளைவிக்கும் செயற்கை உரங்களைக் கொட்டியது நானா? மனிதனா?

**இனியன்**: மனிதன்தான்.

**இயற்கை**: இவ்வாறு செய்யும் தவறுகளை எல்லாம் நீங்கள் செய்துவிட்டு, இப்பொழுது என்னைக் குறைகூறுவது சரியாகுமா?

**இனியன்**: இல்லை. சரி ஆகாது. இந்த நிலைக்கு முழுகாரணமும் மனிதர்கள்தான்.

**இயற்கை**: ஆமாம். மனிதர்கள் செய்த தவறினால்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

**இனியன்**: இந்த நிலையிலிருந்து மீளுவதற்கு வழியே இல்லையா?

**இயற்கை**: ஏன் இல்லை. நிச்சயம் வழி உண்டு.

**இனியன்**: என்ன வழி அது?

**இயற்கை**: நீர்நிலைகளைப் பாதுகாக்க தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். விவசாயத்தில் செயற்கை உரங்களையும் பூச்சிக் கொல்லிகளையும் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

(**இனியன் இது குறித்து அனைவரிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது என முடிவெடுத்தான்**.)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

**1) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.**

**குறிப்புச் சட்டம்**

| | | | |
|---|---|---|---|
| நோக்கம் | முன்னுரை | இலக்கு வேண்டும் | புற்களின் சேவை |
| புற்கள் சொல்லித் தரும் பாடம் | வாய்க்காலின் சிறப்புகள் | வாய்க்கால் சொல்லித் தரும் பாடம் | |
| பலன்எதிர்பாராமல்உழைத்திடு | முடிவுரை | நூற்பயன் | |

**நோக்கம்**

★ இலக்கியம்வழி இயற்கை மனிதனுக்கு உதவுவதையும் உணர்த்துவதையும் அறிந்து மதிப்பளிக்கவே கற்றேன்.

**முன்னுரை:-**

★ சுந்தர முனிவரின் அறையிலிருந்து ஆசிரமம்வரை சுரங்கப் பாதை அமைக்கும் பணியில் நடராசன் ஈடுபட்டிருந்தான்.

★ இன்னும் சிறுபகுதி வேலை மட்டுமே செய்ய வேண்டிய நிலையில், காலையில் ஊரின் புறமாக நடராசன் தனித்திருந்தான்.

★ அப்போது தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தான்.

**இலக்கு வேண்டும்:-**

★ எந்த தொழில் செய்பவருக்கும் வாழ்க்கையில் ஓர் இலக்கு வேண்டும்.

★ இலக்கானது உயிர்களுக்கு ஒரு தூண்டுகோல் போல அமையும்.

★ உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் ஏதேனும் ஓர் இலக்குடனே பயணிக்கின்றன.

**புற்களின் சேவை:-**

★ புற்கள், தன் மீது தேன் துளிகளைத் தாங்கிக் கொள்ளும் பொறுமையைப் பெற்றுள்ளன.

★ தேனீக்களை அழைத்து, அவற்றைத் தேன் அருந்தச் செய்து தன் அன்பைக் காட்டுகின்றன.

★ தம்மிடமுள்ள மகரந்தப் பொடியைப் பரவச் செய்து காய், கனிகள் உண்டாக்கும் அறிவைப் பெற்றுள்ளது.

**புற்கள் சொல்லித் தரும் பாடம்:-**

★ புற்களின் அன்பையும் பொறுமையையும் அறிவினையும் பார்க்கும்போது, எதையும் சிறுமையாக எண்ணக் கூடாது என்னும் கருத்து தோன்றுகிறது.

★ இயற்கையின் அழகையும் அன்பையும் பார்த்துப் பார்த்து மகிழ வேண்டும்.

★ அன்பினால் அனைத்து உயிரையும் தம் உயிராய்க் கருதி வாழ்தல் வேண்டும்.

**வாய்க்காலின் சிறப்புகள்:-**

★ உயிர்கள் அனைத்திற்கும் உணவளிக்கின்ற வயல்களுக்குப் பயன்தருவது வாய்க்கால் ஆகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ சிறிய வாய்க்கால் மேற்கொள்ளும் பணிகள் மிகவும் வியப்பிற்குரியது.

★ இது கடலினை மலையாகவும், மலையினை அலைகடலாகவும் மாற்றியமைக்கின்றது.

★ பருக்கைக் கற்களை நெறுநெறு என்று ஓசை உண்டாகுமாறு தேய்த்துப் பொடியாக்குகிறது.

★ தன் வலிமைக்கு உட்பட்ட **கல்**, **மண்**, **புல்**, **புழு** ஆகியவற்றைத் தன்னுள் இழுத்துக் கொள்கிறது.

★ தனக்குள் இழுத்துக் கொண்டவற்றை, கடலின் பெரும் பள்ளங்களில் நிரப்பி அவற்றை மலைகளாக மாற்றுகின்றது.

**வாய்க்கால் சொல்லித் தரும் பாடம்:-**

★ வாய்க்கால் நீர் இரவு பகல் என்று பாராமல், ஓய்வின்றி தொடர்ந்து ஓடிக் கொண்டே இருக்கிறது.

★ வாய்க்காலைப் போன்று தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கும் நிலையில் மனிதர் யாரும் இல்லை.

★ வாய்க்காலைப் போன்ற தொடர் உழைப்பும் ஊக்கமும் அன்பும் மக்களிடம் இருந்தால் அனைத்து நலன்களையும் அடையலாம்.

**பலன் எதிர்பாராமல் உழைத்திடு:-**

★ உயிர்கள் அனைத்திற்கும் உணவு வழங்கும் உழவர்களின் உற்ற நண்பனாக விளங்குவது மண்புழு.

★ எத்தன்மை கொண்ட மண்ணாக இருந்தாலும், அதை உழவுக்கு ஏற்ற மண்ணாக மாற்றுவது மண்புழு ஆகும்.

★ உழவர்களுக்கு இவ்வாறு உதவி செய்து, புகழ்ச்சியை விரும்பாமல் மண்ணிற்குள் சென்று தன் உடலை மறைத்துக் கொள்கிறது.

★ அதற்கு எறும்புகளும் பூச்சிகளும் பல துன்பங்களைக் கொடுத்தாலும் அவற்றை எல்லாம் தாங்கிக் கொள்ளும் உயர்ந்த பண்பைக் கொண்டுள்ளது.

**முடிவுரை:-**

★ புற்களிடமிருந்து, எதையும் சிறுமையாக எண்ணக் கூடாது என்ற கருத்தையும்

★ வாய்க்காலிடமிருந்து, தொடர்ந்த உழைப்பும் ஊக்கமும் அன்பும் இருந்தால் வாழ்வில் வெற்றி அடையலாம் என்ற கருத்தையும்,

★ மண்புழுக்களிடமிருந்து, தன்னலம் கருதாது பிறருக்காக உழைக்க வேண்டும் என்ற கருத்தையும் அறிந்து கொண்டேன்.

**நூற்பயன்:-**

★ நடராசன் புல், வாய்க்கால், மண்புழு ஆகியவற்றிடம் பேசியவற்றில் இருந்து வாழ்விற்குத் தேவையான பல கருத்துகளை அறிந்து கொண்டேன்.

**2) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.**

**குறிப்புச் சட்டம்**

| | | | |
|---|---|---|---|
| நோக்கம் | முன்னுரை | இயற்கையுடன் இணைந்து வாழ்க | |
| அலட்சிய மனப்பான்மை | முடிவுரை | நன்றி நவிலல் | |

**நோக்கம்**

★ கடிதம், எண்ணங்களை வலுவாக வெளிப்படுத்தும் ஓர் ஊடம் என்பதைக் கடிதம் மூலம் கற்கவே

**முன்னுரை:-**

★ தாகூர் எழுதிய கடிதங்கள் பல்வேறு கருத்துகளைக் கொண்டு விளங்குகின்றன.

★ அவற்றில் சில கருத்துகளைப் பற்றிக் காண்போம்.

**இயற்கையுடன் இணைந்து வாழ்க:-**

★ பட்டணங்களில் மனித சமுதாயம் முதன்மையான இடம் பெற்று விளங்குகிறது.

★ நாட்டுப்புறங்களில் எல்லாவற்றிலும் இயற்கையே சிறந்து விளங்குகிறது.

★ ஐரோப்பாவிலும் விலங்குகளைச் சாதாரணமான உயிர்கள் என்று எண்ணி விடுகின்றனர்.

★ நமது சாத்திரங்கள் எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுவதைப் பற்றிக் கூறுகின்றன.

★ நாட்டுப்புறங்களில் இயற்கையோடு ஒன்றி பழகும்போது உள்ளத்தில் பாரத நாட்டின் இயல்பு தலைதூக்கும்.

**அலட்சிய மனப்பான்மை:-**

★ மரத்தில் பூக்கும் பூக்களுக்கு பெயரிட்டு, மனிதன்தன் உள்ளத்தினுள் இடம் அளிக்கின்றான்.

★ நமது நாட்டில் பல மலர்கள் உள்ளன. ஆனால், மனிதன் அனைத்தையும் மனத்தினுள் ஏற்றுக்கொள்வதில்லை.

★ இதற்கு காரணம் மனிதரிடம் காணப்படும் அலட்சிய மனப்பான்மையே ஆகும்.

★ நமது இலக்கியங்களில் பல மலர்களின் பெயர்கள் உள்ளன. அவற்றைப் படிக்கும் நாம் அவற்றின் நிறம், மணம், வடிவம் போன்றவற்றை எண்ணிப் பார்ப்பதில்லை.

★ பறவைகளிடம் கூட நாம் இவ்வாறான அலட்சிய மனப்பான்மையையே கொண்டுள்ளோம்.

**முடிவுரை:-**

★ இயற்கையிடம் நாம் கொண்டிருக்கும் இத்தகைய அலட்சிய மனப்பான்மைதான் நம்முடைய தோல்விகளுக்கெல்லாம் மூல காரணம் ஆகும்.

★ இந்நிலை மாறினால்தான் நாம் வாழ்வில் வெற்றி பெற முடியும்.

**நூற்பயன்:-**

★ தாகூரின் சிதறிய கடிதங்கள் உணர்த்திய கருத்துகளை அறிந்து கொண்டேன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.**

**குறிப்புச் சட்டம்**

| | | | |
|---|---|---|---|
| நோக்கம் | முன்னுரை | பிறப்பும் இளமையும் | நாட்டிய குரு |
| பெண்மையும் பரதமும் | நாட்டியம் மூலம் தமிழ் கற்பித்தல் | ஆர்வமும் விருப்பமும் | |
| நெகிழ வைத்த தருணம் | | முடிவுரை | நூற்பயன் |

**முன்னுரை:-**

★ நர்த்தகி நடராஜ், மதுரையில் பிறந்து தம் நாட்டியத் திறமையால் உலகம் முழுவதும் எண்ணற்ற ரசிகர்களைப் பெற்றவர்.

★ அவர் தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சி கொண்டு நாட்டியக்கலையில் தமக்கெனத் தனியிடம் பெற்றவர்.

★ அவருடன் மேற்கொண்ட நேர்காணலின் தொகுப்பைச் சுருக்கமாகக் காண்போம்.

**பிறப்பும் இளமையும்:-**

★ நர்த்தகி நடராஜ் மதுரை மாவட்டத்திலுள்ள அனுப்பானடியில் பிறந்தவர்.

★ அவரின் தோழியின் பெயர் சக்தி.

★ சிறுவயதிலிருந்து இருவரும் இணைந்தே நாட்டியம் பயின்று வந்தனர்.

**நாட்டிய குரு:-**

★ நர்த்தகி நடராஜ், தஞ்சை கிட்டப்பாவிடம் நாட்டியம் பயில விரும்பினார்.

★ முதலில் மறுத்த கிட்டப்பா பின்னர் அவருக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்தார்.

★ கிட்டப்பா அவரை தம் மகளாகவே ஏற்று, தம் வீட்டிலேயே தங்க வைத்து பரதம் கற்றுக் கொடுத்தார்.

**பெண்மையும் பரதமும்:-**

★ பெண்மையும் பரதமும் ஒன்றோடு ஒன்று கலந்தது.

★ பெண்மையை வெளிப்படுத்தும் ஊடகமாகப் பரதம் திகழ்கிறது.

★ பரதத்தில் ஊறித் திளைக்கும்போது பெண்மை புதிதாகப் பிறக்கிறது.

**நாட்டியம் மூலம் தமிழ் கற்பித்தல்:-**

★ நர்த்தகி நடராஜ் ஒருமுறை ஜப்பானில் நாட்டிய நிகழ்ச்சி நடத்தினார்.

★ அங்கு உள்ள எவருக்கும் தமிழ்மொழியோ, தமிழ் இலக்கியங்களோ தெரியாது.

★ ஆனால், நடராஜ் தன் நாட்டியம் மூலமாக தேவாரம், திருவாசகப் பாடல்களுக்கு அபிநயம் பிடித்து ஆடியபோது அங்கிருந்தவர்கள் அனைவரும் கண் கலங்கினர்.

★ தம் நடனக் கலைமூலமாக தமிழின் பெருமையை நிலைநாட்டினார்.

**ஆர்வமும் விருப்பமும்:-**

★ **'நர்த்தகி நடராஜ்'** வழக்கறிஞர் ஆவதையே விரும்பினார்.

★ இன்று பல்வேறு தமிழ் இலக்கிய மேடைகளில் பேசுகின்றார்.

★ தமிழ் இலக்கியத்தில் சங்கப் பாடல்கள், திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ் மற்றும் தேவாரத்தைத் தன்னுடைய நடனம்மூலம் பரப்பி வருகின்றார்.

**நெகிழ வைத்த தருணம்:-**

★ நடராஜ் '**வெள்ளியம்பலம் அறக்கட்டளை நடனக் கலைக்கூடம்**' நடத்தி வருகின்றார்.

★ இதன்மூலம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் நடனம் பயின்று வருகின்றனர்.

★ நடராஜ், தம் தாயால் சிறுவயதில் புறக்கணிக்கப்பட்டவர்.

★ தம்மிடம் நாட்டியம் பயிலும் மாணவர்களால் '**அம்மா**' என்று அழைக்கப்படும்போது அவருக்குள் தாய்மை உணர்வு பெருக்கெடுப்பதாக உணர்கிறார்.

**முடிவுரை:-**

★ **பெற்றோரால் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் தன்னுடைய விடாமுயற்சியால் உயர்ந்தவர், நடராஜ்.**

**நூற்பயன்:-**

★ சிறந்த நாட்டியக் கலைஞராக விளங்கும் நர்த்தகி நடராஜின் வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொண்டேன்.

**தோஸ்த் உரை வழங்கும் சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்களைப் படித்து சதம் அடிப்போம் !!!**



# சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

## உரைநடை உலகம்

### பேச்சுமொழியும் கவிதைமொழியும்

குறுவினா

**1) பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**

**பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது - காரணம்**

★ எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.

★ எழுதும்போது கை மட்டும்தான் வேலை செய்கிறது.

★ ஆனால், பேசும்போது மார்பு, தொண்டை, தலை போன்ற உறுப்புகள் செயல்படுகின்றன.

★ அகத்திலிருக்கும் உணர்ச்சிகளை முகத்திலிருக்கும் வாய் அதிக சக்தி கொண்டு வெளிப்படுத்துகிறது.

★ கவிஞனுடைய கவிதை மொழி இலக்கியத்தைக் கைவிட்டு பேச்சுமொழிக்கு வரும்போது அதிக சக்தி பெறுகிறது.

★ அதனால்தான் பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

**2) பேச்சுமொழியைப் பயன்படுத்தும்போது உடலில் ஏற்படும் செயல்பாடுகளை விளக்குக.**

**பேச்சுமொழியைப் பயன்படுத்தும்போது உடலில் ஏற்படும் செயல்பாடுகள்.**

★ உடம்பின் ஒருபகுதியாக இருக்கின்ற தொண்டையிலிருந்து சொற்கள் உருவாகின்றன.

★ தொண்டை சரியான ஏற்றம் இறக்கம் உச்சரிப்பு வேகம் நிதானம் திருப்பித் திருப்பிச் சொல்லுதல் போன்றவறைத் தொடர்ந்து செய்கிறது.

★ நாக்கு, பற்கள், அண்ணம், உதடுகள் போன்ற உறுப்புகள் செயல்படுகின்றன.

★ கைகால் அசைவுகள் ஏற்படுகின்றன.

★ முகத்தில் தசை நார்களின் சுருக்கங்களில் அபிநயங்கள் ஏற்படுகின்றன.

**3) மொழியைப் பற்றி எர்னஸ்ட் காசிரர் கருத்து யாது?**

**மொழியைப் பற்றிய எர்னஸ் காசிரர் கருத்து**

★ "மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன" - **எர்ன்ஸ் காசிரர்**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) வாளினும் வலிமையானது எது ? ஏன்?**

★ வாளினும் வலிமையானது மொழி.

★ பேச்சுமொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கும் போது நமக்கு ஒரு தனி அதிகாரம் பிறந்து விடுகிறது.

★ எழுத்துமொழிவழியாக ஒன்றைப் பதிவு செய்யப்படும்போது அது உலகையே தட்டி எழுப்புகிறது.

★ எனவே, வாளினும் வலிமையானது மொழியாகும்.

**5) கவிஞர்களின் எழுத்து வகைகளை விளக்குக.**

★ கவிஞர்களின் எழுத்துமொழி இரண்டு வகைப்படும்

★ ஒன்று தனக்குத்தானே பேசிக்கொள்வது போன்ற எழுத்துமொழி.

★ மற்றொன்று, தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவதுபோல அமைக்கின்றனர்.

★ இதையே அவர்கள் நேரடி மொழி என்றும் கூறுகின்றனர்.

**6) நேரடிமொழி என்றால் என்ன? விளக்குக.**

★ கவிஞர்கள் தங்கள் கவிதைகளை தாங்களே பேசிக்கொள்வதுபோல் அமைக்காமல் எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசும் பேச்சுமொழி போல அமைக்கின்றனர்.

★ இதையே அவர்கள் 'நேரடிமொழி' என்றும் கூறுகின்றனர்.

**7) நேரடி மொழியின் சிறப்புகளை விளக்குக.**

★ கவிஞர்கள் தங்கள் கவிதையில் வாசகனுடன் பேசும் பேச்சுமொழி நேரடிமொழி ஆகும்.

★ நேரடி மொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை.

★ அது ஒருபோதும் வேற்றுமொழி ஆவதில்லை.

★ அது எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக்கொண்டும் இருக்கிறது.

★ இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தைச் சார்ந்தவரா? அல்லது இறந்த காலத்தவரா? என்பதை நிர்ணயிக்கிறது.

**8) பேச்சுமொழியை கவிதை வடிவில் பயன்படுத்துவர்கள் எத்தனை வகைப்படுவர் ? அவர்கள் யார்?**

★ பேச்சுமொழியைக் கவிதை வடிவில் பயன்படுத்துவோர் மூன்று வகையினர்.

★ முதல்வகையைச் சார்ந்தவர் - வால்ட் விட்மன்.

★ இரண்டாம் வகையைச் சார்ந்தவர் - மல்லார்மே.

★ மூன்றாம் வகையைச் சார்ந்தவர் - பாப்லோ நெருடா.

**9) பாப்லோ நெருடா சிறு குறிப்பு வரைக.**

★ பெயர் - பாப்லோ நெருடா ➔ நாடு - சிலி நாடு (அமெரிக்கா)

★ மொழி - இலத்தின் ➔ சிறப்பு - 1971 இல் நோபல் பரிசு பெற்றவர்

**10) வால்ட் விட்மன் என்பவர் யார்? இந்திரன் கவிதை இலக்கியத்தில் அவரை எவ்வாறு வகைப்படுத்துகிறார்?**

★ வால்ட் விட்மன் என்பவர் ஓர் அமெரிக்க கவிஞர்.

★ இதழாளர் ➔ கட்டுரையாளர்

★ புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.

★ 'புல்லின் இதழ்கள்' என்னும் இவருடைய நூல் உலகப்புகழ் கொண்டது.

**11) கவிதை என்பது ஒரு 'படைப்புச் செயல்பாடு' என்பதை இந்திரன் வழி விளக்குக. (அல்லது) கவிதை என்பது யாது ? இந்திரன் வழி விளக்குக.**

**கவிதை குறித்து இந்திரனின் கருத்தை விளக்குதல்.**

★ கவிதை என்பது யாது? - இந்தக் கேள்விக்குத் தற்சமயம் எனக்குக் கிடைக்கும் விடை

★ "கவிதை என்பது ஒரு பொருளன்று: அது மொழிக்குள் உலகையும் உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்துவிடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு" ஆகும்

**12) பேச்சுமொழியில் சொற்களைப் பயன்படுத்தி பொருள் வேறுபாடுகளை எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்று இந்திரன் கூறுகிறார்?**

**பேச்சு மொழியில் சொற்களைப் பயன்படுத்தி பொருள் வேறுபாடுகளை ஏற்படுத்த இயலும் இந்திரன் கூற்று.**

★ ஏற்ற இறக்கம் ➔ உச்சரிப்பு ➔ வேகம்

★ நிதானம் ➔ திருப்பித் திருப்பிச் சொல்வது

★ இடையில் கொடுக்கும் ஒரு சிறு மௌனம்

★ ஆகியவற்றைப் பயன்படுத்தி பொருள் வேறுபாடுகளை ஏற்படுத்த முடியும் என்று இந்திரன் கூறுகிறார்.

**13) பேச்சுமொழி வெளிப்பாட்டின் பகுதிகளாக உள்ளவை எவை என இந்திரன் கூறுகிறார்?**

**பேச்சுமொழி வெளிப்பாட்டின் பகுதிகளாக உள்ளவை என இந்திரன் கூறுவன**

★ கை கால் அசைவு ➔ முகத்தின் தசைநார் அபிநயங்கள்

**14) கவிஞனின் கடமையாக இந்திரன் கூறுவது யாது?**

**கவிஞனின் கடமையாக இந்திரன் கூறுவது**

★ "கவிஞர்கள் எத்தகைய மொழியைப் பயன்படுத்துகிறார்களோ அதன் குணாம்சங்களையும் பேச்சுவழக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்"

**15) இந்திரன் நடத்திய இதழ்கள் யாவை?**

**இந்திரன் நடத்திய இதழ்கள்**

★ வெளிச்சம் ➔ நுண்கலை

**16) குறியீட்டுக் கவிதை என்பது யாது?**

★ "குறியீட்டுக் கவிதை என்பது பொருளை பதிவு செய்வதன்று.

★ நினைவுகூரத்தக்க தருணங்களை அதாவது நிகழ்ச்சிகளைப் பதிவு செய்வதாகும்"

**17) புதுக்கவிதை விளக்கம் தருக.**

**புதுக்கவிதை விளக்கம்**

★ மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட கவிதை வடிவமே புதுக்கவிதை என்பார்.

★ படிப்பவரின் ஆழ் மனதில் ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது

★ படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது புதுக்கவிதை.

**18) நேரடி மொழி எனப்படும் பேச்சுமொழி பற்றி மலையாளக் கவிஞர் ஆற்றூர் ரவிவர்மா கூறுவது யாது?**

★ நேரடிமொழி எனப்படும் பேச்சு மொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை.

★ நேரடிமொழி வேற்றுமொழி ஆவதில்லை.

★ நேரடிமொழி எப்பொழுதும் உயிர்ப்புடனும் இருக்கிறது.

★ நேரடிமொழி மாறிக்கொண்டும் இருக்கும்.

★ நேரடி மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா? அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது.

★ என்று நேரடிமொழி குறித்து விளக்குகிறார் மலையாளக் கவிஞர் ஆற்றூர் ரவிவர்மா

**சிறுவினா**

**1) இந்திரன் சிறு குறிப்பு வரைக.**

★ பெயர் - இந்திரன் ➔ இயற்பெயர் - இராசேந்திரன்

★ பணிகள் - கலைவிமர்சனம், கவிதை, மொழிப்பெயர்ப்பு, ஓவியம்

★ சிறப்புக்கூறு - சிறந்த ஓவியர்

★ கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை திறக்கும் போது 133 அதிகாரங்களுக்கு 133 நவீன ஓவியர்களின் படைப்பைத் திரட்டி கண்காட்சி அமைத்தவர்.

★ விருது - 2011 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

★ விருது பெற்றுத்தந்த நூல் - பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம். (மொழிப்பெயர்ப்பு நூல்)

**இணையதளச் செய்திகள்**

**எழுதிய பிற நூல்கள் -**

★ **கவிதைத்தொகுப்பு** - அந்நியன், திருவடி மலர்கள், முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள்

★ **கட்டுரை நூல்கள்** - தமிழ் அழகியல், நவீன ஓவியம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ **மொழிப்பெயர்ப்பு** - அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம், காற்றுக்கு திசை இல்லை, பசித்த தலை முறை

★ **நடத்திய இதழ்கள்** - நுண்கலை, வெளிச்சம்

★ **நடத்திய கருத்தரங்கு** - வேரும் விழுதும்

**2) பேச்சுமொழி - எழுத்துமொழி வேறுபடுத்துக.**

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| பேச்சுமொழியில் உடம்பின் ஒருபகுதியாக இருக்கின்ற தொண்டையிலிருந்து சொற்கள் வருகின்றன | எழுத்துமொழியில் உள்ளத்திலிருந்து சொற்கள் கை வழியே வருகின்றன. |
| பேச்சுமொழியைக் கேட்பவர் பலர் உண்டு. | பேச்சைக் கேட்க எதிராளி ஒருவன் கிடையாது. |
| பேச்சுமொழியில் முகத்திலிருக்கும் வாய், ஏற்றம் இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், மவுனம் போன்றவற்றைச் செய்கிறது. | எழுத்துமொழியில் எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது. |
| அதனால் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் உள்ளது. | எழுத்துமொழி உணர்ச்சியை அதிக அளவு வெளிப்படுத்துவதில்லை. |
| திரவ நிலையில் மாறும் தன்மை கொண்டது. | பனிக்கட்டி போல் திட நிலையில் உறைகிறது. |

**3) நேரடி மொழி எனப்படும் பேச்சுமொழி பற்றி மலையாளக் கவிஞர் ஆற்றூர் ரவிவர்மா கூறுவது யாது?**

★ நேரடிமொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை.

★ நேரடிமொழி வேற்றுமொழி ஆவதில்லை.

★ நேரடிமொழி எப்பொழுதும் உயிர்ப்புடனும் இருக்கிறது.

★ நேரடிமொழி மாறிக்கொண்டும் இருக்கும்.

★ நேரடி மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா? அல்லது இறந்தகாலத்தவரா? என்பதை நிர்ணயிக்கிறது.

★ என்று நேரடிமொழி குறித்து விளக்குகிறார் மலையாளக் கவி. ஆற்றூர் ரவிவர்மா.

**4) கவிதையைப் பற்றி கா. சிவத்தம்பியின் கருத்து யாது?**

**கவிதைப் பற்றி கா. சிவத்தம்பி கூறியுள்ள கருத்துகள்**

★ தமிழின் கவிதையியல் நூலில் ➔ கவித்துவ உணர்வுச் செவ்வியல்

★ "ஒவ்வொரு முடிவிலும் தோன்றும் கவித்துவ வெளிப்பாடுகளை ஒன்றாக வைத்து நோக்கும் பொழுது கவிதைகள் கேட்பவரால் அல்லது வாசகர்களால் உள்வாங்கப்பட்டு ரசிக்க பெறும் முறையில் காலத்துக்கு காலம் அழுத்த வேறுபாடுகள் ஏற்படுவது வழக்கம்."

★ கவிதை என்பது யாது? ➔ அது எவற்றைப் பற்றிப் பேசுதல் வேண்டும்?

★ எப்பொழுது எந்த நிலையில் ஒரு கவிதை ஆக்கம் கவர்ச்சிகரமான கவிதையாக அமையும்? என்பன பற்றி அவற்றின் ஆக்கத்தில் ஈடுபடுபவர் உடைய கருத்து நிலைப்பாடுகள் கவிதை.

★ கவிதை எனச் சொல்லப்படுவதற்கான எடுத்துக்கூறல் முறைமைகள் ஆகியன யாவும் ஒருங்கு சேர்கின்றபோதுதான் மேலே கூறிய கவித்துவ உணர்வு செவ்வியலிலே மாற்றம் தெரியவரும்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

1) 'என்னை விளக்கிய மொழி' என்று இந்திரன் கூறுவதற்கான காரணங்கள் யாவை?

**'என்னை விளக்கிய மொழி' என்று இந்திரன் கூறுவதற்கான காரணங்கள்**

**என்னை விளக்கிய மொழி**

★ எனக்கு மொழி என்பது அறிமுகம் ஆவதற்கு முன்னால் பொருள்களும் விலங்குகளும் பறவைகளும் வானும் நிலவும் சூரியனும் மரங்களும் செடிகளும் இருந்திருக்கவே இல்லை.

★ மொழி எனது உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டி எழுப்பியது.

★ இதன் பிறகுதான் நான் என்ற ஒன்று பிறந்தது.

★ எனது உலகம் என்பது மொழியினால் கட்டமைக்கப்பட்ட பிறகு அந்த உலகத்தில் இருந்து தனித்து பிரித்து நிற்கின்ற நான் உதயமானது

★ நான் மொழியின் பொருளை அறிந்து கொள்ள தொடங்கியது,

★ எந்த ஆண்டு? எந்த நாளில்? எத்தனை மணிக்கு? இவை அனைத்திற்கும் என்னிடம் பதில் இல்லை.

★ நான் உணர்ச்சியினால் நிரம்பி இருக்கிறது அந்த வேகத்தை பதிவு செய்வதற்கு சொற்கள் உதவும் என்று எப்பொழுது தொடங்கப்பட்டது.

★ மொழி என்ற ஒன்று என்னுள் தோன்றிய உடன் தான் உலகம் எனது கவனம் கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது

★ உலகத்தை இழை இழையாக பிடித்த விதவிதமான தூரங்களில் கொடுத்தது மொழி.

★ மொழியின் மூலமாக எனக்குள் உலகத்தின் பல கதவுகள் திறந்தன.

★ மொழியின் சாவி போட்டு திறக்கும் போதெல்லாம் இதுவரையிலும் பெயர் சூட்ட பலவற்றை நான் என் கண்களால் கண்டுபிடிக்க தொடங்கினேன்.

★ அவற்றிற்கு நானே எனக்குப் பிடித்தமான பெயர்களைச் சூட்ட தொடங்கினேன்.

★ இவர்களுக்குக் கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகிய வண்ணங்களைப் பூசும் சக்தியை மொழி எனக்கு கொடுத்து,

★ அவற்றை விதவிதமான அடுக்குகளில் ஒருமையாகவும், அவற்றின் முக்கியத்துவத்தை ஏற்பாடுகளை மொழி எனக்கு வழங்கியது.

2) பேச்சுமொழி வாளினும் வலிமையானது விளக்குக. (அல்லது) வாளினும் வலிமையானது எது? ஏன்? இந்திரன் வழி விளக்குக.

★ வாளினும் வலிமையானது பேச்சுமொழி ஆகும்.

**வாளினும் வலிமையானது பேச்சுமொழி காரணம்.**

★ மொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன், அந்தப் பொருளின்மீது எனக்கு ஒரு அதிகாரம் வந்துவிடுவதைப் உணர்கிறேன்.

★ நான் குழந்தையாக இருந்த பொழுது அம்மா அம்மா என்று அழைப்பேன் வேலையில் மூழ்கி அம்மா என்னை கவனிக்காமல் இருப்பாள்.

சூழ்நிலை வினாக்கள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ திடீரென்று அவருடைய பெயரை சொல்லி அழைத்தவுடன் அவள் திடுக்கிட்டு திரும்பி என்னிடம் ஓடி வந்திருக்கிறாள்.

★ அப்பொழுதுதான் என்னுடைய மொழி பெயர்களிட்டு அழைத்தவுடன் அவற்றின் மீது எனக்கு ஓர்அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததே உணர்ந்தேன்.

★ உடம்பின் ஒரு பகுதியாக இருக்கின்ற தொண்டையிலிருந்து சொற்கள் வருகின்றன.

★ ஏற்றம் இறக்கம், உச்சரிப்பு, வேகம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல்,

★ இடையில் கொடுக்கும் மவுனம்,

★ ஆகியவற்றுக்கு ஏற்றவாறு அச் சொற்களைப் பயன்படுத்தி பொருள் வேறுபாடுகளை என்னால் ஏற்படுத்த முடியும் என்று உணர்கிறேன்.

★ கைகால் அசைவுகள். ➔ முகத்தின் தசைகளை சுருக்கங்களில் அபிநயங்கள்.

★ உடலின் செயல்பாடுகள் என்னுடைய மொழி வழிபாட்டின் பகுதியாக இருக்கிறது.

★ ஒரு திரவ நிலையில் நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி எழுத்து மொழியாகப் பதிவு செய்தபோது உறைந்துபோன பனிக்கட்டி நிலையை அடைந்துவிடுகிறது.

★ இந்த நிலையை அடைந்த மொழி அச்சிடப்பட்ட ஒரு கவிதையாக மறுக்கப்பட்டது என்னில் இருந்து பிரிந்து போய்விட்ட ஒரு பொருளாக மாறிவிடுகிறது.

**3) நேரடிமொழி என்பது எது? ஏன் அது நேரடி மொழி எனப்படுகிறது?**

**நேரடிமொழி - விளக்கம்**

★ நேரடி மொழி என்பது கவிஞர்கள் கவிதையில் எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவதுபோல எழுதுகின்றனர் இதுவே நேரடிமொழி எனப்படும்.

★ எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழியும் உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.

★ எனவேதான் இலக்கிய வழக்கை விட்டு பேச்சு மொழிக்கு திரும்பி உடனே கவிஞனுடைய கவிதையின் மொழி அதிக வெளிப்பாட்டு சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

★ எழுத்துமொழி அப்படிப்பட்டது அன்று.

★ எழுதுவதை மட்டும் தான் மனிதனின் கைது செய்கிறது.

★ பேச்சும் மொழியில் முகத்தில் இருக்கும் வாய், உடலில் இருக்கும் கையைக்காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டை தெரிவிப்பதாக அமைந்துள்ளது.

★ அதனால்தான் பேச்சுமொழி எழுத்துமொழி காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாடு சக்தி மிக்கதாக உள்ளது.

★ எழுத்து மொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது.

★ எழுத்து என்பது ஒருவகையில் பார்த்தால் தனக்கு தானே பேசிக் கொள்கிற பேச்சு.

★ ஆனால், பேச்சு என்பது தன்னைத் தானே திறந்து கொள்கிற ஒரு செயல்பாடு.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ உண்மையில் சொல்லப்போனால் பேச்சு என்பது மொழியில் நீந்துவது.

★ பேச்சுமொழியின் போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் தம்மை மொழி என்னும் நீரில் முன்னோக்கி நகர செய்கின்றன.

★ இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரில் இருக்கும் வாசகனுடன் பேசுவதுபோல் அமைகின்றனர்.

★ இதையே அவர்கள் நேரடிமொழி என கருதுகின்றனர்.

**நேரடிமொழியின் சிறப்பு குறித்து கவிஞர் ஆற்றூர் ரவிவர்மாவின் கருத்து.**

★ நேரடிமொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒரு பொழுதும் படுவதில்லை.

★ நேரடிமொழி வேற்றுமொழி ஆவதில்லை.

★ நேரடிமொழி எப்போதும் உயிர்ப்புடன் இருக்கிறது.

★ நேரடிமொழி மாறிக்கொண்டிருக்கிறது.

★ நேரடிமொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா?அல்லது இறந்த காலத்தவரா? என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் மலையாளக் கவிஞர் ஆற்றூர் ரவிவர்மா.

**நேரடிமொழியின் சிறப்பு குறித்து இந்திரன் கூறுவது.**

★ பேச்சுமொழியில் ஒரு கவிதை எழுதும்போது அது இயற்கையான உடம்பின் மேல்தோல் போல் இயங்குகிறது.

★ ஆனால் எழுத்து முறையில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடி விடுகின்றன.

★ நேரடிமொழிக் கவிதையின் வருங்காலப் போக்கு.

★ கவிதை மரபானது தனது செய்யுள் சந்தத்திலிருந்து விடுதலை அடைந்துவிட்டது.

★ கவிதை தனக்கென தனித்துவமான மொழி நடையில் இருந்தும் விடுதலை அடையவேண்டும்

**4) வால்ட் விட்மன் குறித்து ஆசிரியர் இந்திரன் கூறும் கருத்துகள் யாவை?**

★ பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர் உண்டு.

★ முதல் வகையைச் சார்ந்தவர் வால்ட் விட்மன்

★ இவருடைய கவிதைகளில் எந்த ஒரு சொல்லும் மற்றொரு சொல்லைவிட முக்கியமாக விடுவதில்லை.

★ எழுத்துக்கள் எப்படி சொற்களில் கரைந்து போகின்றன அது போன்ற சொற்கள் கவிதைகளில் கரைந்து போவதில்லை.

★ இவர் கவிதையில் சொற்கள் தங்களுக்கு தாங்களே பேசிக் கொள்வதில்லை.

★ இவருடைய கவிதைகளில் சுற்றப்பட்ட கம்பிச்சுருள் போன்று அல்லாமல் பேச்சுமொழிக்கு உரிய தளர்வோடு கட்டப்பட்டவை.

★ நடனமாடி கொண்டிருப்பவன் அவ்வப்போது நடப்பதற்குத் தாவி விடுவது போல வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு நழுவி விடும் இவர் கவிதை.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**எடுத்துக்காட்டு கவிதை**

★ கனவொன்று நான் கண்டேன்,

உலகமே திரண்டு வந்து தாக்கினாலும் ஒருசேரத் தாக்கினாலும், தோற்காத பெருநகரம் ஒன்று கண்டேன்,

நண்பர்கள் நகரம் என்றுஒரு புதுநகரம்,

வந்தது என் கனவில்,

அன்பைவிடப் பெரிதென்ற ஒன்றும் அந்நகரில் இல்லை,

அன்பின் வழித்தடத்தில் மற்றெல்லாம்

சென்றன அதன் பின்னே

எந்நேரமும், மாந்தர் செய்வது எதுவென்றாலும்,

அன்பேதான் தெரிந்தது அங்கே அவற்றில்

எல்லாம்,

மக்கள் தோற்றத்திலும் அன்பே,

அன்பேதான் அவர் மொழியும்.

**5) பாப்லோ நெருடா கவிதை குறித்து இந்திரன் வழி ஆய்க**

★ பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர் உண்டு.

★ மூன்றாம் வகையைச் சார்ந்தவர் இலத்தீன் அமெரிக்காவின் சிறந்த கவிஞர் பாப்லோ நெருடா.

★ பாப்லோ நெருடா ஸ்பானிஷ் மொழி கவிஞர்.

**பாப்லோ நெருடா கவிதையில் பேச்சுமொழி வடிவம்**

★ ஒரு கவிதை, ஒரு பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும் அ∴து அந்தப் பொருளைப் பற்றியதன்று.

★ அது வாழ்க்கையின் வடிவமற்றத் தன்மையைப் பற்றிப் பேசுகிறது.

★ ஒரு வடிவம் கொள்ளுதல் என்பதை நோக்கி வாழ்க்கை தொடர்ந்து முயல்கிற போதும் அது இந்த முயற்சியில் ஒருபோதும் வெற்றி கொள்வது இல்லை.

★ இது போன்ற கவிதை எவ்வித முன் கூட்டிய திட்டமோ, ஒழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுற்றுவதைப் போலக் காட்டி உடனே எதையும் சுற்றாமல் முடிந்துபோகிறது.

★ அறியப்பட்டிராததை நோக்கி நகர்கிற அதே நேரத்தில் நெருடாவின் கவிதை விழுந்ததாகவும் மையத்தை நோக்கி நகர்வதாகவும் இருக்கிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**எடுத்துக்காட்டுக் கவிதை**

★ எத்தனை பெயர்கள்!
திங்கட் கிழமைகள்
செவ்வாய் கிழமைகளுடனும்
ஆண்டு முழுவதுடன் வாரமும் சிக்கிக்
கொண்டுள்ளன.
களைத்துப் போன உன் கத்தரிக்கோலால்
காலத்தை வெட்ட முடியாது
பகலின் பெயர்கள் அனைத்தையும்
இரவின் நீர் அழைக்கிறது.
இரவில் நான் உறங்குகையில்
என்னை என்னவென்று அழைக்கின்றனர்
அல்லது என்னவென்று அழைப்பதில்லை?
தூங்கும்பொழுது நான் நானாக இல்லையெனில்
விழித்து எழுந்த பின் நான் யார்?

## இயற்கை வேளாண்மை



**குறுவினா**

**1) வள்ளுவரும் பாரதியாரும் உழவுத்தொழிலை எவ்வாறு போற்றுகின்றனர்?**

**வள்ளுவரும் பாரதியாரும் உழவுத்தொழிலை போற்றும் வரிகள்.**

★ வள்ளுவர் - 'உழவு உலகிற்கு அச்சாணி'

★ பாரதியார் - 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' எனவும் போற்றுகின்றனர்.

**2) பனைமரத்திலிருந்து கிடைக்கும் நேரடி பொருள்கள் யாவை?**

**பனைமரத்திலிருந்து கிடைக்கும் நேரடி பொருள்கள்**

★ நுங்கு ➔ பதநீர்

**3) மதிப்புக்கூட்டுப் பொருள் என்றால் என்ன ? ஏன் அவ்வாறு அது அழைக்கப்படுகிறது?**

**மதிப்புக்கூட்டுப் பொருள் என ஒரு பொருள் அழைக்கப்படக் காரணம்.**

★ ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக்கூட்டுப்பொருள் என்று அழைப்பர்.

★ மதிப்புக்கூட்டுப் பொருளினால் அதிக வருவாய் கிட்டும்.

★ (எ.கா) - பனைமரத்தின் பதநீரிலிருந்து கிடைக்கும் மதிப்புக்கூட்டுப் பொருள்கள்

★ பனங்கற்கண்டு ➔ கருப்பட்டி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) மசானபு:புகோகா - குறிப்பு வரைக.**

**மசானபு:புகோகா - குறிப்பு**

★ மசானபு:புகோகா. அவர் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்.

★ ஐந்து விவசாய மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர் மசானபு:புகோகா

★ 1978 ஆம் ஆண்டு 'ஒற்றை வைக்கோல் புரட்சி' என்னும் நூலை எழுதியவர்.

**5) மசானபு:புகோகா கூறும் ஐந்து விவசாய மந்திரங்கள் எவை?**

**மசானபு:புகோகா கூறும் ஐந்து விவசாய மந்திரங்கள்**

★ உழப்படாத நிலம். ➔ இரசாயன உரம் இல்லாத உற்பத்தி.

★ பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப்பாதுகாப்பு.

★ தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி.

★ ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல்

**6) "விவசாயத்தின் வசந்த காலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்" இக்கூற்றை மசானபு:புகோகா வழி நின்று விளக்கம் தருக.**

★ இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய்.

★ நிலம் மென்மையானது. எளிதில் சிதைந்துவிடக் கூடியது.

★ நிலத்தை நன்முறையில் பராமரித்தல் வேண்டும்.

★ நிலம் பதிலுக்கு நம் தேவைகளை எல்லாக் காலத்திலும் நிறைவு செய்யும்.

★ எனவே "விவசாயத்தின் வசந்த காலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்" என்கிறார் மசானபு:புகோகா.

**7) வைக்கோலின் மகத்துவம் பற்றி விளக்கம் தருக?**

**வைக்கோலின் மகத்துவம்**

★ நிலத்திலிருந்தே கிடைக்கும் சிறந்த உரம் வைக்கோல் ஆகும்.

★ வைக்கோல் மென்மையானது. இலேசானது.

★ நிலத்தில் வைக்கோலைப் பரப்பினால் உரச்செடிகளும் நன்கு வளரும்.

★ மீண்டும் நிலத்திற்கே உரமாகக் கொடுப்பதால் மண்வளம் பெருகும்.

★ நெற்பயிரும், மழைக்காலப் பயிரும் நன்கு வளரும்.

★ தொழு உரம் தயாரிக்கவும் பயன்படும்.

**8) நெல்லுக்கு ஊடுபயிராக இருப்பது எது ?அதன் பயன் யாது?**

★ நெல்லுக்கு ஊடுபயிராக இருப்பது உளுந்து.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**உளுந்தின் பயன்**

- ★ அறுவடை செய்த உளுந்தின் வேர்முடிச்சுகளில் நைட்ரஜன் அதிக அளவில் இருக்கும்.
- ★ நைட்ரஜன் நிலத்தின் வளத்தைப் பெருக்கும்.
- ★ விளைச்சலை அதிகரிக்கச் செய்யும்.
- ★ எனவே நெல்லுக்கு ஊடுபயிராக உளுந்து போடுகிறார்கள்.

**9) பூச்சிக்கொல்லியால் ஏன் நோய் ஏற்படுகின்றது?**

**பூச்சிக்கொல்லியால் நோய் ஏற்படும் தன்மை - விளக்கம்.**

- ★ பூச்சிக்கொல்லி பயிரில் இருக்கின்ற பூச்சிகளைக் கொல்வது மட்டுமின்றி விளைகின்ற பயிருக்குள்ளும் ஊடுருவுகிறது.
- ★ பயிருக்குள் உள்ள அரிசியை உணவாக்கி உண்ணும் மக்களுக்கும் நோய் ஏற்படுகிறது.

**10) நெற்பயிரும் மாரிக்காலப் பயிரும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கும் செயல்களை எழுதுக.**

**பயிர்கள் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கும் செயல்கள்**

- ★ நிலத்தில் வைக்கோலைப் பரப்புதல்.
- ★ உரச்செடிகளை வளர்த்தல்.
- ★ நிலத்தில் இருந்து கிடைக்கும் குப்பை கூளம், செடி, செத்தைகளை நிலத்திற்கே கொடுத்தல்

**11) பூச்சிக்கொல்லி பயன்படுத்துவதால் ஏற்படும் நோய்கள் எவை?**

- ★ பூச்சிக்கொல்லி பயன்படுத்துவதால் ஏற்படும் நோய்கள்
- ★ புற்றுநோய் ➔ வயிற்றுப்புண் ➔ மலட்டுத்தன்மை

**12) இயற்கை வேளாண்மை என்றால் என்ன?**

**இயற்கை வேளாண்மை**

- ★ விதை விதைப்பதில் இருந்து விளைச்சல் முடிகின்ற வரையும் வேதிக்கலப்பை பயன்படுத்தாத வேளாண்மையே இயற்கை வேளாண்மை எனப்படும்.

**13) வேதிக்கலப்பு இல்லாத பூச்சிக்கொல்லியை எவ்வாறு தயார் செய்வாய்?**

**வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி தயாரிக்கும் முறை**

- ★ நம் முன்னோர் பயன்படுத்திய இயற்கைப் பூச்சிக்கொல்லி மருந்து.

**தேவையான பொருள்கள்**

- ★ வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை போன்றவை.





www.Padasalai.Net

**செய்முறை:-**

★ இவற்றை ஒன்றாகச் சேர்த்து, நன்றாக இடித்துக் வைக்க வேண்டும்.

★ கோமியத்தில் ஊற வைக்க வேண்டும். பின்பு, பயிர்களில் தெளிக்க வேண்டும்.

**14) வேதிக்கலப்பு இல்லாத பூச்சிக்கொல்லி பயன்கள் யாவை?**

**வேதிக்கலப்பு இல்லாத பூச்சிக்கொல்லி பயன்கள்**

★ பூச்சிகள் படிப்படியாகக் குறைந்து காணாமல் போய்விடும்.

★ நுண்ணுயிர்ப் பெருக்கம் ஏற்படும். ➔ மண்வளம் அதிகமாகும்.

★ நிலத்தில் இருக்கின்ற உழவனின் நண்பன் மண்புழு அழிவதும் தடுக்கப்படுகிறது.

**15) நிலத்தை எவ்வாறு உழ வேண்டும்?**

**நிலத்தை உழும் முறை**

★ வைக்கோலை மடக்கி உழ வேண்டும்.

★ பருவம் வந்தவுடன் நீரைத் தேக்கி உழுதல் வேண்டும்.

★ உழும்போது தொழு உரம் இட வேண்டும்.

**16) நன்செய் நிலத்திற்குத் தொழு உரம் தயாரிக்கத் தேவையானவை எவை?**

**நன்செய் நிலத்திற்குத் தொழு உரம் தயாரிக்கத் தேவையானவை**

★ மாட்டுச்சாணம் ➔ கோமியம் ➔ வைக்கோல்

**17) புன்செய் நிலத்திற்கு தொழு உரம் தயாரிக்க தேவையானவை யாவை?**

**புன்செய் நிலத்திற்கு தொழு உரம் தயாரிக்க தேவையானவை**

★ காய்ந்த இலைச் சருகுகள் ➔ சாணத்தை எரிப்பதால் கிடைக்கும் சாம்பல்

**18) சுற்றுச்சூழலைக் காக்கும் வழி யாது?**

**சுற்றுச்சூழலைக் காக்கும் வழி**

★ இயற்கை உரம் ➔ வேதிக்கலப்பு இல்லாத இயற்கை பூச்சிக்கொல்லி

★ விவசாயத்தில் இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழலைக் காக்க முடியும்.

**சிறுவினா**

**1) பனைமரத்தின் சிறப்புகளை விளக்குக.**

**பனைமரத்தின் சிறப்புகள்:-**

★ பனைமரம், தமிழ்நாட்டின் மாநில மரம் ஆகும்.

★ பனைமரம் நன்கு வளர்ந்து பயன் தருவதற்கு சுமார் பத்து ஆண்டுகள் ஆகும்.

★ பனைமரம் ஏழைகளின் கற்பக விருட்சம் என்று அழைக்கப்படுகிறது.



www.Padasalai.Net

★ சிறந்த காற்றுத் தடுப்பான்.

★ ஆழத்தில் நீரைச் சேமித்து வைக்கும் தன்மை கொண்டது.

★ நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் பாதுகாக்கக் கூடியது.

**பனைமரத்திலிருந்து கிடைக்கும் பொருள்கள்:-**

★ நுங்கு, பதநீர் - நேரடிப் பொருட்கள்

★ கருப்பட்டி, பனங்கற்கண்டு - மதிப்புக்கூட்டுப் பொருள்கள்

**2) தொழு உரம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?**

**தொழு உரம்**

★ இயற்கை முறையில் பொருள்களை கலந்து நிலத்திற்கு உரம் சேர்ப்பது தொழு உரம் என்று பெயர்.

★ தொழு உரம் இரண்டு வகைப்படும்

★ நன்செய் தொழு உரம் ➔ புன்செய் தொழு உரம்

**நன்செய் தொழு உரம்**

(ஆறு, ஏரி, கிணறு போன்றவற்றிலிருந்து நீர் பயன்படுத்திக்கொள்ளும் நிலம்)

★ மாட்டுச்சாணம் ➔ கோமியம்

★ வைக்கோலை ஆகியவற்றை மட்கச்செய்து உருவாக்கும் உரம் நன்செய் தொழு உரம் ஆகும்

**புன்செய் தொழு உரம்**

(மழையை மட்டுமே நம்பி இருக்கும் - வானம் பார்த்த பூமி புன்செய் நிலமாகும்)

★ இலைச்சருகுகள் ➔ சாணத்தை எரிப்பதனால் கிடைக்கும் சாம்பல்

★ ஆகியவற்றைக் கலந்து உருவாக்கும் உரம் ➔ புன்செய் தொழுஉரம் என்று பெயர்.

**3) பூச்சிக்கொல்லிகளால் ஏற்படும் தீமைகளையும் அதற்கான மாற்று ஏற்பாடுகளையும் விவரிக்க.**

**பூச்சிக்கொல்லிகளால் ஏற்படும் தீமைகள்:-**

★ பயிரில்உள்ளபூச்சிகளைக்கொல்வதற்காகபூச்சிக்கொல்லிகள்பயன்படுத்தப்படுகின்றன.

★ ஆனால், அவை பயிருக்குள்ளும் ஊடுருவுகின்றன.

★ பூச்சிக்கொல்லி ஊடுருவிய பயிரை உண்ணும் மக்களுக்குப் புதிய புதிய நோய்கள் தோன்றுகின்றன.

★ மக்கள் புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத் தன்மை போன்றவற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

**மாற்று ஏற்பாடு:-**

★ நம் முன்னோர்கள் வேதியியல் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தவில்லை.

★ அவ்வாறு பயன்படுத்தாமலே அதிகப்படியான விளைச்சலைப் பெற்றனர்.

★ வேதிப்பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தாமல் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தலாம்.

**இயற்கை பூச்சிக்கொல்லி செய்முறை:-**

★ வேப்பங்கொட்டை ➔ நொச்சி இலை ➔ புங்கன் ➔ பிரண்டை

★ கற்றாழை இவை அனைத்தையும் நன்கு இடிக்க வேண்டும்.

★ அதைக் கோமியத்தில் ஊற வைத்து தெளிக்க வேண்டும்.

**பயன்கள்:-**

★ பூச்சிகள் வருவது படிப்படியாகக் குறையும்.

★ மண்புழு போன்ற சிறிய உயிரினங்கள் பாதுகாக்கப்படும்.

★ மண் தன்னுடைய வளத்தை நிலைநிறுத்திக் கொள்ளும்.

**நெடுவினா**

**1) செயற்கை உரங்களின் தீமைகளையும் இயற்கை உரங்களின் தேவைகளையும் விளக்கி ஒரு கட்டுரை வரைக.**

**குறிப்புச் சட்டம்**

| | | |
|---|---|---|
| முன்னுரை | செயற்கை உரங்களின் தீமைகள் | இயற்கை உரங்கள் |
| வைக்கோல் உரம் | நன்செய் தொழுஉரம் | புன்செய் தொழுஉரம் |
| இயற்கை பூச்சிக்கொல்லி | இயற்கை உரத்தின் நன்மைகள் | முடிவுரை |

**முன்னுரை:-**

★ செயற்கை உரங்கள் மண்ணுக்கும் மண்ணில் உள்ள உயிர்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியவை.

★ அவற்றால் ஏற்படும் தீமைகளையும் அதற்கான மாற்று தீர்வுகளையும் இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**செயற்கை உரங்களின் தீமைகள்:-**

★ செயற்கை உரம், பூச்சிக்கொல்லி ஆகியவற்றால் மண் நஞ்சாகிவிட்டது.

★ பயிரில் உள்ள பூச்சிகளைக் கொல்வதற்காக பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்படுகின்றன.

★ ஆனால், அவை பயிருக்குள்ளும் ஊடுருவுகின்றன.

★ பூச்சிக்கொல்லி ஊடுருவிய பயிரை உண்ணும் மக்களுக்குப் புதிய புதிய நோய்கள் தோன்றுகின்றன.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ மக்கள்புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத்தன்மை போன்றவற்றால்பாதிக்கப்படுகின்றனர்.

**இயற்கை உரங்கள்:-**

★ வைக்கோல் உரம் ➔ இயற்கை உரங்கள் ➔ தொழு உரம்

★ இயற்கை பூச்சிக்கொல்லி ஆகியவை மண்ணிற்குப் பாதிப்பை ஏற்படுத்தாத இயற்கை உரங்கள் ஆகும்.

**வைக்கோல் உரம்:-**

★ அறுவடை முடிந்ததும் வைக்கோலைச் சமமாகப் பரப்ப வேண்டும்.

★ அதை மடியச் செய்து, நிலத்தில் நீரைத் தேக்கி உழ வேண்டும்.

**இயற்கை உரங்கள்:-**

★ நிலத்தில் வைக்கோலைப் பரப்புவது. ➔ உரச்செடிகளை வளர்ப்பது.

★ குப்பை கூளம், செடி செத்தைகளை நிலத்திற்கே கொடுப்பது

★ மேற்குறிப்பிட்ட செயல்கள் பயிர் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கின்றன.

**நன்செய் தொழுஉரம்:-**

★ மாட்டுச் சாணம், ➔ கோமியம் ஆகியவற்றைக் கலந்து,

★ வைக்கோலை மட்கச் செய்து உருவாக்குவது தொழுஉரம் ஆகும்.

★ இது நன்செய் நிலங்களுக்குப் பயன்படும் தொழுஉரங்கள் ஆகும்.

**புன்செய் தொழுஉரம்:-**

★ காய்ந்த இலைச் சருகு, ➔ சாணத்தை எரித்த சாம்பல்

★ இவை புன்செய் நிலங்களுக்குப் பயன்படும் தொழுஉரங்கள் ஆகும்.

**இயற்கை பூச்சிக்கொல்லி:-**

★ வேப்பங்கொட்டை ➔ நொச்சி இலை ➔ புங்கன் ➔ பிரண்டை

★ கற்றாழை இவை அனைத்தையும் நன்கு இடிக்க வேண்டும்.

★ அதைக் கோமியத்தில் ஊற வைத்து தெளிக்க வேண்டும்.

**இயற்கை உரத்தின் நன்மைகள்:-**

★ பூச்சிகள் வருவது படிப்படியாகக் குறையும்.

★ மண்புழு போன்ற சிறிய உயிரினங்கள் பாதுகாக்கப்படும்.

★ மண் தன்னுடைய வளத்தை நிலைநிறுத்திக் கொள்ளும்.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**முடிவுரை:-**

★ நம் முன்னோர்கள் வேதியியல் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தாமலே அதிகப்படியான விளைச்சலைப் பெற்றனர்.

★ அவ்வாறே நாமும் வேதிப்பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தாமல் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி அதிகப்படியான விளைச்சலைப் பெறுவோம்.

## மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு

### குறுவினா

**1) 'மலைநில மனிதர்கள்' எனக் குறிப்பிடப்படுபவர்கள் யார்? அவர்களை அவ்வாறு குறிப்பிட்டவர் யார்? (அ) திராவிடர்களை கமில சுவலபில் எவ்வாறு அழைக்கின்றார்?**

**மலைநில மனிதர்கள்**

★ மலைநில மனிதர்கள் திராவிடர்கள்.

**அழைத்தவர்**

★ திராவிடர்களை மலைநில மனிதர்கள் என்று குறிப்பிட்டவர் - கமில் சுவலபில்

**2) தமிழருக்கும்மலைக்கும்தொடர்பிருந்ததற்கானஇலக்கியப்பதிவுகள்இரண்டினைஎழுதுக.**

**தமிழருக்கும் மலைக்கும் தொடர்பிருந்ததற்கான இலக்கியப் பதிவுகள்.**

★ "சேயோன் மேய மைவரை உலகம்" (முருகன் (சேயோன்) வாழும் மலை)
- தொல்காப்பியம்

★ "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" (விண்ணைத்தொடும் மலைக் கிழவன் (முருகன்)
- திருமுருகாற்றுப்படை

**3) 'வரை' என்னும் சொல் தமிழ்மொழியில் எப்பொருள்களில் எடுத்தாளப்பட்டுள்ளது?**

**'வரை' என்னும் சொல் தமிழ்மொழியில் வழங்கப்பட்டமை**

★ கோடு ➔ மலை ➔ சிகரம் ➔ விளிம்பு ➔ கரை ➔ எல்லை ➔ நுனி

**4) திராவிடப் பழங்குடியினர் எதிலிருந்து நீரெடுத்துப் பழகினர்?**

**திராவிடப் பழங்குடிகளின் பழக்கம்.**

★ திராவிடப் பழங்குடிகள் ஓடும் நீரைப் பயன்படுத்துபவர்கள்

★ நீர்நிலைகள் ➔ ஓடைகள் ➔ சிற்றாறுகள்

**5) திராவிடப் பழங்குடிகளின் உயரமான இடங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன? அவற்றின் பயன் யாது?**

**திராவிடப் பழங்குடிகளின் உயரமான இடங்கள்**

★ திண்டுகள் (பெரிய திண்ணைகள்)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பயன்பாடு**

★ தோடர்கள் வீடுகள் கட்டும் போது திண்டுகளுக்கு முக்கியம் கொடுத்து உயர்த்திக் கட்டினார்கள்.

★ எருமைக் கொட்டில்களைப்(தொழுவம்) புனித இடமாகக் கருதினார்கள்.

★ கொட்டில்களைச் (தொழுவம்) சுற்றி மிக உயர்ந்த மதில் சுவரை எழுப்பினார்கள்.

**6) 'கோடு' என்னும் சொல்லுக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை ?**

**'கோடு' என்னும் சொல்லுக்கு வழங்கும் வேறுபெயர்கள்**

★ மலையுச்சி ➔ சிகரம் ➔ மலை ➔ வல்லரண் ➔ கோட்டை

**7) பழந்தமிழ்ச் சமூகத்தின் ஆணிவேர் அடையாளங்கள் என ஆர். பாலகிருஷ்ணன் எவற்றைக் கூறுகின்றார்?**

**KVT COMPLEX**

★ பழந்தமிழ்ச் சமூகத்தின் ஆணிவேர் அடையாளம் 'KVTCOMPLEX' என்றழைக்கப்படும்

★ கொற்கை ➔ வஞ்சி ➔ தொண்டி ஆகிய துறைமுகப்பெயர்களே ஆகும்

**8) திராவிட மலையிடப்பெயர்களோடு தொடர்புடைய வடமேற்கு நாடுகள் யாவை?**

**திராவிட மலையிடப்பெயர்களோடு தொடர்புடைய வடமேற்கு நாடுகள்**

★ பாகிஸ்தான் ➔ ஆ.்.ப்கானிஸ்தான்

**9) ஆர். பாலகிருஷ்ணனின் (இ.ஆ.ப) அவர்களின் சிறப்பு யாது?**

**ஆர். பாலகிருஷ்ணன் - இந்திய ஆட்சிப் பணி (IAS) அவர்களின் சிறப்பு**

★ 28 ஆண்டுகள் இந்திய ஆட்சிப் பணி செய்து வருகின்றார்.

★ கொற்கை வஞ்சி தொண்டி வளாகத்தை ஆய்வுலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தவர்.

★ ஒடிசா மாநிலத்தின் கூடுதல் தலைமைச் செயலர்.

★ தினமணி நாளிதழின் துணையாசிரியராக இருந்தார்.

★ கணையாழி இலக்கிய இதழின் ஆலோசகர்.

**10) ஆர். பாலகிருஷ்ணன் (இ.ஆ.ப) படைத்த நூல்கள் யாவை ?**

**ஆர். பாலகிருஷ்ணன் படைத்த நூல்கள்:-**

★ அன்புள்ள அம்மா ➔ சிறகுக்குள் வானம்

★ சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்



www.Padasalai.Net

சிறுவினா

**1) 'மலை' என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்ட இனக்குழுப்பெயர்களைப் பட்டியலிடுக.**

**'மலை' என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்ட இனக்குழுப்பெயர்களின் பட்டியல்:-**

| இனக்குழுப்பெயர் | மாநிலம் |
|---|---|
| மால் பஹாடியா | ஜார்கண்ட் |
| மல அரயன் | கேரளம் |
| மல குறவன் | கேரளம் (நெடுமாங்காடு) |
| மல மூத்தன் | கேரளம் (எர்நாட்) |
| மல பணிக்கர் | வட கேரளம் |
| மலயன் | கேரளம் (பாலக்காடு) |
| மலவேடா | கேரளம் (இடுக்கி) |
| மலேரு | கர்நாடகம் (தட்சிண கன்னடா) |
| கோட்டா | தமிழ்நாடு (நீலகிரி) |
| கொண்டா தோரா | ஆந்திரப்பிரதேசம் |
| கோண்டு,கொய்ட்டெர் | ஒடிசா |

**2) திராவிடப் பழங்குடியினரின் வாழ்வியலில் உயரமான இடங்கள் பெற்றிருந்த சிறப்பிடத்தை நும் பாடப்பகுதிக் கொண்டு விளக்குக.**

**திராவிடப் பழங்குடியினரின் வாழ்வியலில் உயரமான இடங்கள் பெற்றிருந்த சிறப்பிடத்தை பாடப்பகுதிக் கொண்டு விளக்குதல்:-**

★ பழங்குடியினர் ஓடும் நீரையே குடிநீராகப் பயன்படுத்தினர்.

★ தங்கள் குடியிருப்பைக் காட்டிலும் உயரத்திலிருந்த சிற்றாறுகள், ஓடைகள் ஆகியவற்றைக் குடிநீருக்குப் பயன்படுத்தினர்.

★ தோடர் இனத்தவர் பால்எருமைக் கொட்டில்களைப் புனிதமாகக் கருதுவார்கள்.

★ தோடர்களின் வீடுகளில் திண்டுகள் (மேடைகள்) முக்கிய இடம் பெற்றிருந்தன.

★ குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் சொல் 'மெட்டு'.

★ மெட்டு என்னும் சொல் உயரமான, மேடான அமைப்பைக் குறிக்கும்.

★ ஆந்திராவிலும் ஒடிசாவிலும் உள்ள திராவிடப் பழங்குடியினர் 'ஜதாப்பு' எனப்படுவர்.

★ ஜதாப்புகளின் குடியிருப்புகள் பெரும்பாலும் உயரமான இடத்திலேயே அமைந்துள்ளது.

★ பழங்குடித் தலைவரின் வீடு, மற்ற வீடுகளைவிட உயரமான இடத்தில் அமைந்திருந்தது.

★ இவ்வாறு, திராவிடப் பழங்குடியினரின் வாழ்விட வடிவமைப்பிலும் வாழ்வியலிலும் உயரமான இடங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தன.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3) KVT COMPLEX என்றால் என்ன ? அதன் சிறப்பு யாது?**

**KVT COMPLEX - விளக்கம்**

★ K - கொற்கை ➔ V - வஞ்சி ➔ T - தொண்டி

★ கொற்கை வஞ்சி தொண்டி வளாகமே சுருக்கமாக KVT COMPLEX என்றழைக்கப்படுகின்றது.

**சிறப்பு**

★ தமிழர்களின் அரசியல், பொருளியல், பண்பாட்டு உருவாக்கத்தின் மூலம் உருவானவை.

★ பழந்தமிழ்ச் சமுகத்தின் ஆணிவேர் அடையாளங்கள் ஆகும்.

★ முப்பெயர்களில் ஒன்றுகூட வடமொழி இலக்கியங்களில் பதிவு செய்யப்படவில்லை

**4) ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. - சிறுகுறிப்பு வரைக.**

★ பெயர் - ஆர். பாலகிருஷ்ணன்

★ படிப்பு - இந்திய ஆட்சிப் பணி (IAS)

★ பணி - கூடுதல் தலைமைச் செயலர் (ஒடிசா மாநிலம்)

★ பணியாற்றிய நாளிதழ் - தினமணி

★ நூல்கள் - அன்புள்ள அம்மா, சிறகுக்குள் வானம்

★ சிறப்புகள் - இடப்பெயராய்வு மேற்கொண்டவர்.

★ 'கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை' ஆய்வுலகிற்குக் கொண்டுவந்தவர்.

★ இந்திய ஆட்சிப் பணித் தேர்வை முழுவதும் தமிழில் எழுதி தேர்ச்சிப் பெற்றவர்.

## தமிழகக் கல்வி வரலாறு

**குறுவினா**

**1) கல்வி என்ற சொல் எப்பொருளின் அடிப்படையில் தோன்றியது?**

**கல்வி என்ற சொல் தோன்ற அடிப்படை:-**

★ 'கல்லுதல்' (தோண்டுதல்) என்ற பொருளின் அடிப்படையில் 'கல்வி' என்ற சொல் தோன்றியது.

★ கற்பவர் மனத்தில் ஆழப் புதைந்துள்ள திறன்களைத் தோண்டுவது கல்வி ஆகும்.

**2) ஓதற்பிரிவு என்றால் என்ன?**

**ஓதற்பிரிவு:-**

★ கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்லும் பிரிவு 'ஓதற்பிரிவு' ஆகும்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) ஆசிரியர், மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ள நூல்கள் யாவை?**

**ஆசிரியர், மாணவர் இலக்கணம் வகுத்துள்ள நூல்கள்:-**

★ தொல்காப்பியம் ➔ நன்னூல்

**4) கல்வி கற்கும் முறையைப் பற்றி புறநானூற்று பாடல் அடிகள் உணர்த்துவதைக் கூறுக.**

**கல்வி கற்கும் முறை பற்றி புறநானூறு:-**

★ பொருள் கொடுத்தும்,

★ தொண்டு செய்தும் ஆசிரியரிடம் மாணவர்கள் கல்வி கற்க வேண்டும்.

**5) சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் கற்பித்தல் பணியைத் தமிழகத்தில் செய்த அமைப்புகள் யாவை?**

**கற்பித்தல் பணியைச் செய்த அமைப்புகள்:-**

★ மன்றம் ➔ சான்றோர் அவை ➔ அறங்கூர் அவையம்

★ சமணப்பள்ளி ➔ பௌத்தப்பள்ளி

**6) கற்பிக்கும் ஆசிரியர்கள் எத்தனை பிரிவுகளாக இருந்தனர்?**

**கற்பிக்கும் ஆசிரியர்கள்:-**

★ கற்பிக்கும் ஆசிரியர்கள் மூவகைப் பிரிவினராக இருந்தனர். அவர்கள்:

★ கணக்காயர் ➔ ஆசிரியர் ➔ குரவர்

**7) கணக்காயர் என்பவர் யார்?**

**கணக்காயர்:-**

★ எழுத்து ➔ இலக்கியம் ➔ உரிச்சொல்

★ கணக்கு ஆகியவற்றைக் கற்றுக் கொடுப்பவர் கணக்காயர் ஆவார்.

**8) ஆசிரியர் என்று அழைக்கப்பட்டவர் யார்?**

**ஆசிரியர்:-**

★ மூவகை இலக்கணம்

★ பேரிலங்கியம் ஆகியவற்றைக் கற்றுக் கொடுப்பவர் ஆசிரியர் என்று அழைக்கப்பட்டார்.

**9) குரவர் என்போர் யார்?**

**குரவர்:-**

★ சமய நூல் ➔ தத்துவ நூல் ஆகியவற்றைக் கற்பிப்பவர் குரவர் ஆவார்.

**10) கற்றலுக்கு உதவும் ஏட்டுக் கற்றைகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?**

**கற்றலுக்கு உதவும் ஏட்டுக் கற்றைகள்:-**

★ ஏடு ➔ சுவடி ➔ பொத்தகம் ➔ பனுவல் ➔ நூல்





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**11) சமண சமயத்தின் தலையாய அறங்கள் யாவை?**

**சமண சமயத்தின் தலையாய அறங்கள்:-**

★ சமண சமயத்தின் தலையாய அறங்கள் நான்கு ஆகும். அவை:

★ கல்வி ➔ மருந்து ➔ உணவு ➔ அடைக்கலம்

**12) பள்ளி என்ற சொல்லின் பொருள் யாது?**

**பள்ளி என்ற சொல்லின் பொருள்:-**

★ 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள்.

★ படுக்கைகளின் மீது மாணவர்கள் அமர்ந்து கல்வி கற்றனர்.

★ எனவே, கல்விக்கூடம் 'பள்ளிக்கூடம்' என்று அழைக்கப்பட்டது.

**13) சமணப் பள்ளி மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு எடுத்த படுக்கைகள் பற்றி கூறும் கல்வெட்டுகள் யாவை?**

**படுக்கைகள் பற்றி கூறும் கல்வெட்டுகள்:-**

★ திருச்சி மலைக்கோட்டை கல்வெட்டுகள் ➔ கழுகுமலையில் உள்ள கல்வெட்டுகள்

**14) சமணப் பெண் ஆசிரியர்கள் பற்றி நீவிர் அறிந்தவற்றைக் கூறுக.**

**சமணப் பெண் ஆசிரியர்கள்:-**

★ வந்தவாசி அருகிலுள்ள வேடல் என்னும் ஊரில் சமணப் பெண் ஆசிரியர் ஒருவர் இருந்தார்.

★ அவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார்.

★ பட்டினக்குரத்தி என்பவர் சமணப் பெண் ஆசிரியர்.

★ பட்டினக்குரத்தி விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளி ஒன்றை நிறுவினார்.

**15) பட்டிமண்டபம் - குறிப்பு வரைக.**

**பட்டிமண்டபம்:-**

★ சமயத் துறையிலிருந்து தோன்றிய கலைவடிவம் பட்டிமண்டபம்.

★ முற்காலத்தில், பட்டிமண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடம் ஆகும்.

**16) சீனப்பயணி யுவான் சுவாங் தமிழகத்தில் உள்ள எந்த இடத்தில் சிறப்புரை ஆற்றினார்?**

**சீனப்பயணி யுவான் சுவாங் சிறப்புரை ஆற்றிய இடம்:-**

★ சீனப்பயணி யுவான் சுவாங் காஞ்சிபுரத்திலுள்ள பௌத்தப் பல்கலைக்கழகத்தில் சிறப்புரை ஆற்றினார்.

**17) மெட்ராஸ் சிஸ்டம் என்றால் என்ன?**

**மெட்ராஸ் சிஸ்டம்:-**

★ தமிழகத் திண்ணைப் பள்ளிமுறையில், ஸ்காட்லாந்தில் ஒரு பள்ளி நிறுவப்பட்டது.

★ அங்கு கற்றுக் கொடுக்கப்பட்ட கல்விமுறை 'மெட்ராஸ் சிஸ்டம்' என்று அழைக்கப்பட்டது.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**18) தமிழகத்தில் இருந்த மரபுவழி கல்விமுறைகள் யாவை?**

**மரபுவழி கல்விமுறை:-**

★ குருகுலக் கல்விமுறை ➔ திண்ணைப்பள்ளிக் கல்விமுறை

★ உயர்நிலைக் கல்விமுறை

**19) ஆங்கிலேயர்களால் நாட்டுக் கல்விமுறை என்று அழைக்கப்பட்ட கல்விமுறைகள் யாவை?**

**நாட்டுக் கல்விமுறை:-**

★ திண்ணைப் பள்ளிகள் ➔ பாட சாலைகள் ➔ மக்தாபுகள் ➔ மதரஸாக்கள்

**20) குருகுலக் கல்வி முறை பற்றி எழுதுக.**

**குருகுலக் கல்வி முறை:-**

★ மாணவர்கள் ஆசிரியர்களுக்குத் தேவையான பணிகளைச் செய்து கல்வி கற்றனர்.

★ இத்தகைய கல்விமுறை குருகுலக் கல்வி முறை ஆகும்.

★ செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்ற அடிப்படையில் இக்கல்வி முறை அமைந்திருந்தது.

★ இம்முறை வாழ்வியலைக் கட்டமைப்பதில் உறுதியானதாக விளங்கியது.

**21) கீழைத்தேயவாதிகள் என்று அழைக்கப்பட்டவர்கள் யார்?**

**கீழைத்தேயவாதிகள்:-**

★ ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் தாய்நாட்டு இலக்கியங்களையும் கீழைத்தேசத்துக் கலைகளையும் பயிற்றுவிக்க வேண்டும் என்னும் கொள்கை கொண்டவர்கள் 'கீழைத்தேயவாதிகள்' என்று அழைக்கப்பட்டனர்.

**22) மேற்கத்தியவாதிகள் என்று அழைக்கப்பட்டவர்கள் யார்?**

**மேற்கத்தியவாதிகள்:-**

★ மேற்கத்தியப் பாணிக் கல்விமுறையான ஆங்கிலவழிக் கல்விமுறை மூலமாகவே இந்தியர்களை முன்னேற்ற முடியும் என்று வாதிட்டவர்கள் 'மேற்கத்தியவாதிகள்' என்று அழைக்கப்பட்டனர்.

**23) ஆசிரியரைப் பற்றி 'ஹென்றி ஆடம்ஸ்' கூறியது யாது?**

**ஆசிரியரைப் பற்றி ஹென்றி ஆடம்ஸ்:-**

★ ஆசிரியரால் சர்வ வல்லமையிலும் பாதிப்பினை ஏற்படுத்த இயலும்.

★ அவர்களால் ஏற்படப்போகும் நல்ல விளைவுகளை அவர்களாலேயே மதிப்பிட இயலாது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

**1) திண்ணைப் பள்ளிக் கல்விமுறை பற்றி விளக்குக.**

**திண்ணைப் பள்ளிக் கல்விமுறை:-**

★ 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கிராமங்கள்தோறும் திண்ணைப் பள்ளிகள் இருந்தன.

★ அவை 'தெற்றிப் பள்ளிகள்' என்றும் அழைக்கப்பட்டன.

★ திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் 'கணக்காயர்கள்' என்று அழைக்கப்பட்டனர்.

★ இப்பள்ளிகள் ஒரேமாதிரியான வரன்முறையுடன் செயல்படவில்லை.

★ இப்பள்ளிகளில் பாடத்திட்டம், பள்ளி நேரம், பயிற்றுவிக்கும் முறை போன்றவை ஆசிரியரின் விருப்பப்படி அமைந்திருந்தன.

★ பொதுமக்களுடைய கல்வித் தேவையை இப்பள்ளிகள் ஓரளவேனும் பூர்த்தி செய்தன.

★ சென்னை மாகாணத்தில் 12, 498 திண்ணைப் பள்ளிகள் இயங்கி வந்தன.

சிறுதல் வினாக்கள்

**சிறப்புச் செய்தி:-**

★ "திண்ணைப் பள்ளிகளின் கல்வித்தரம் பல ஐரோப்பிய நாடுகளின் கல்வித்தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவே காணப்பட்டது" என்று தாமஸ் மன்றோ ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2) தமிழகத்தில் விடுதலைக்கு முந்தைய கல்வி வளர்ச்சியைப் பட்டியலிடுக.**

| ஆண்டு | நிகழ்வு |
|---|---|
| 1826 | சென்னை ஆளுநர் சர். தாமஸ் மன்றோ ஆணைக்கிணங்கப் பொதுக்கல்வி வாரியம் தொடங்கப்பட்டது. |
| 1835 | சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. இது இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் மருத்துவக் கல்லூரிகளுள் ஒன்று. |
| 1854 | பொதுக்கல்வித் துறை நிறுவப்பட்டு முதல் பொதுக்கல்வி இயக்குநர் (DPI) நியமிக்கப்பட்டார். |
| 1857 | சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. |
| 1859 | 1794இல் தொடங்கப்பட்ட ஸ்கூல் ஆ.்.ப் சர்வே என்ற நிறுவனம், கிண்டி பொறியியல் கல்லூரியாக வளர்ச்சி அடைந்தது. |
| 1910 | தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் தொடங்கப்பட்டது. |
| 1911 | பள்ளியிறுதி வகுப்பு-மாநில அளவிலான பொதுத்தேர்வில் நடைமுறைக்கு வந்தது. |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) சங்கக் காலத்தில் நிலவிய கல்விமுறைக் குறித்து எழுதுக.**

**சங்கக் காலத்தில் நிலவிய கல்விமுறை:-**

★ சங்கக் காலத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக விளங்கியது.

★ மா. இராசமாணிக்கனாரின் கருத்து சங்கக் காலத்தில் நிலவிய கல்விமுறையின் சிறப்பைக் கூறுகிறது.

★ பலர் கூடி விவாதிக்கும் இடம் சங்கம் ஆகும்.

★ மன்றம், சான்றோர் அவை, அறங்கூர் அவையம் போன்றவை கல்விப் பணியைச் செய்தன.

★ மன்னராட்சிக் காலத்தில் போர்ப்பயிற்சி முக்கியமான கல்வியாக விளங்கியது.

**4) கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டனர்? விளக்குக.**

**கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் வகைகள்:-**

★ கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மூன்று பிரிவினராக இருந்தனர்.

★ அவர்கள் கணக்காயர், ஆசிரியர், குரவர் ஆகியோர் ஆவர்.

**கணக்காயர்:-**

★ எழுத்து, இலக்கியம், உரிச்சொல், கணக்கு ஆகியவற்றைக் கற்பிப்பவர் கணக்காயர் ஆவார்.

**ஆசிரியர்:-**

★ மூன்று வகையான இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றைக் கற்பிப்பவர் ஆசிரியர் ஆவார்.

**குரவர்:-**

★ சமய நூலும் தத்துவ நூலும் கற்பிப்பவர் குரவர் ஆவார்.

**5) பள்ளி, மன்றம், சான்றோர் அவை ஆகிய மூன்றனுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?**

**பள்ளி, மன்றம், சான்றோர் அவை - மூன்றனுக்கும் இடையே உள்ள வேறுபாடு**

**பள்ளி:-**

★ கலை, கல்வி ஆகியவைக் கற்பிக்கும் இடம் பள்ளி ஆகும்.

**மன்றம்:-**

★ கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடம் மன்றம் ஆகும்.

**சான்றோர் அவை:-**

★ செயல்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் இடம் சான்றோர் அவை ஆகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

**1) தமிழகத்தில் ஐரோப்பியர்களின் கல்விப்பணி குறித்து விவரிக்க.**

**தமிழகத்தில் ஐரோப்பியர்களின் கல்விப்பணி**

**குறிப்புச் சட்டம்**

| | | |
|---|---|---|
| முன்னுரை | அச்சு இயந்திரப் பயன்பாடு | |
| கல்விப்பணியில் டச்சுக்காரர்கள் | கீழைத்தேயவாதிகள் | மேற்கத்தியவாதிகள் |
| மெக்காலே கல்விக்குழு | இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம் | |
| ஹண்டர் கல்விக்குழு | நூற்பயன் | |

**முன்னுரை:-**

★ தமிழகத்தில் ஐரோப்பியர்கள் தொடர்வண்டி, பேருந்து, அஞ்சல் போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்தினர்.

★ அதுபோல, கல்வியிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர்.

★ தமிழகத்தில் ஐரோப்பியர்கள் ஆற்றிய கல்விப்பணி குறித்துக் காண்போம்.

**அச்சு இயந்திரப் பயன்பாடு:-**

★ 1453ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஜான் கூட்டன்பர்க் அச்சு இயந்திரத்தை வடிவமைத்தார்.

★ தரங்கம்பாடியில் முதன்முதலில் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது.

★ அச்சு இயந்திரம் வழியாக பல புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டன.

★ இந்தியாவில் முதன்முதலில் அச்சிடப்பட்ட மொழி தமிழ்மொழியே ஆகும்.

★ அச்சு இயந்திரம் கல்வி பெருகக் காரணமாயிற்று.

**கல்விப்பணியில் டச்சுக்காரர்கள்:-**

★ 1706ஆம் ஆண்டு முதல் டச்சுக்காரர்களின் சமயப் பரப்புச் சங்கம் கல்விப் பணியில் ஈடுபட்டது.

★ டச்சுக்காரர்கள் அறப்பள்ளிகளையும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் அமைத்தனர்.

★ லண்டன் பாராளுமன்றம், இந்தியர்களின் கல்விக்காக ஆண்டுக்கு 1 லட்சம் ரூபாய் ஒதுக்கியது.

**கீழைத்தேயவாதிகள்:-**

★ சிலர், இந்தியாவில் தாய்நாட்டு இலக்கியங்களையும் கீழைத்தேசத்துக் கலைகளையும் பயிற்றுவிக்க வேண்டும் என்றர்.

★ அவர்கள் கீழைத்தேயவாதிகள் எனப்பட்டனர்.

**மேற்கத்தியவாதிகள்:-**

★ ஆங்கிலவழிக் கல்விமுறை மூலமாகவே இந்தியர்களை முன்னேற்ற முடியும் என்றனர், சிலர்.

★ அவர்கள் மேற்கத்தியவாதிகள் எனப்பட்டனர்.

**மெக்காலே கல்விக்குழு:-**

★ கீழைத்தேயவாதிகள், மேற்கத்தியவாதிகள் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின.

★ இக்கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்காக, 1835ஆம் ஆண்டு மெக்காலே கல்விக்குழு உருவாக்கப்பட்டது.



சுருதல் வினாக்கள்
www.Padasalai.Net

**இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்:-**

★ 1854ஆம் ஆண்டு சார்லஸ் வுட் கல்விக்குழு அமைக்கப்பட்டது.

★ இக்குழு தற்காலக் கல்வி, தேர்வு முறைகளை உருவாக்கியது.

★ சார்லஸ் வுட் குழுவின் அறிக்கை 'இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்' என்று போற்றப்படுகிறது.

**ஹண்டர் கல்விக்குழு:-**

★ 1882ஆம் ஆண்டு ஹண்டர் கல்விக்குழு அமைக்கப்பட்டது.

★ ஹண்டர் குழு சீருடை, தாய்மொழிவழிக் கல்வி போன்றவற்றைக் கட்டாயமாக்கியது.

★ புதிய பள்ளிகளைத் தொடங்கி நடத்தும் பொறுப்பைத் தனியாருக்கு வழங்கப் பரிந்துரை செய்தது.

**முடிவுரை:-**

★ ஐரோப்பியர்கள் ஆற்றிய கல்விப்பணி தமிழகக் கல்வி வரலாற்றில் நீங்காத இடம் பெற்றிருக்கும்.

**நூற்பயன்:-**

★ தமிழகத்தில் ஐரோப்பியர்கள் ஆற்றிய கல்விப்பணி குறித்து அறிந்துகொண்டேன்.

**2) விடுதலைக்குப் பிந்தைய இந்தியாவில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சிக் குறித்து விளக்குக.**

**விடுதலைக்குப் பிந்தைய கல்வி வளர்ச்சி**

**குறிப்புச் சட்டம்**

| | | |
|---|---|---|
| முன்னுரை | அனைவருக்கும் கல்வித் திட்டம் | கல்விக்குழுக்கள் |
| தமிழகத்தின் கல்வி வளர்ச்சி | முடிவுரை | நூற்பயன் |

**முன்னுரை:-**

★ ஒரு நாடு வளர்ச்சி அடைந்த நாடாகக் கருதப்படுவதற்கு அந்நாட்டின் கல்வி வளர்ச்சியும் முக்கியமாகத் திகழ்கிறது.

★ இந்தியாவில் விடுதலைக்குப் பிறகு கல்வியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

★ இந்தியாவில், விடுதலைக்குப் பிந்தைய கல்வி வளர்ச்சிக் குறித்து காண்போம்.

**அனைவருக்கும் கல்வித் திட்டம்:-**

★ ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் கற்றவர்களின் எண்ணிக்கை 15 விழுக்காடாக இருந்தது.

★ அரசு, நாடு விடுதலை அடைந்த பிறகு இந்நிலையை மாற்ற எண்ணியது.

★ எனவே, 14 வயதிற்கு உட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கச் சட்டம் இயற்றப்பட்டது.

★ இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டது.

★ இதனால், நாடு முழுவதும் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

★ தமிழகத்தில் கல்விநிலை சீராக வளரத் தொடங்கியது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கல்விக்குழுக்கள்:-**

★ அரசு மாறிவரும் காலத்திற்கு ஏற்ப கல்வியில் மாற்றமும் ஏற்றமும் கொண்டு வருகிறது.

★ அரசு கல்விமுறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக கல்விக்குழுக்களை அமைக்கின்றது.

★ கல்விக்குழுக்கள் நாட்டின் கல்வி வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றன.

★ கல்விக்குழுக்கள் கல்வியின் ஏற்றமிகு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றன.

**தமிழகத்தில் கல்வி வளர்ச்சி:-**

★ தமிழக அரசு கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

★ தமிழக கல்விமுறையில் மாற்றமும் ஏற்றமும் ஏற்பட்டு வருகிறது.

★ இந்தியாவிலேயே கல்வியில் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

**முடிவுரை:-**

★ கல்விமுறை காலத்திற்கு ஏற்ப பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டு வருகிறது.

★ இன்று தொழில்நுட்பத்தின் உதவியுடன் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

**நூற்பயன்:-**

★ இந்தியாவில் விடுதலைக்குப் பின்னர் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியைப் பற்றி அறிந்து கொண்டேன்.



## ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

### குறுவினா

**1) நாட்குறிப்பு என்றால் என்ன?**

**நாட்குறிப்பு:-**

★ நாட்குறிப்பு என்பது தனிமனிதர் ஒருவரின் அன்றாட நிகழ்வுகளைப் பதிவு செய்யும் ஏடாகும்.

★ இது ஆங்கிலத்தில் 'டைரி' என்று அழைக்கப்படும்.

**2) டைரி என்ற சொல் குறித்து விளக்குக.**

**டைரி:-**

★ தனிமனிதரின் அன்றாட நிகழ்வுகளைப் பதிவு செய்யும் ஏடு ஆங்கிலத்தில் 'டைரி' எனப்படும்.

★ இச்சொல் 'டைரியம்' என்ற இலத்தீன் சொல்லை மூலமாகக் கொண்டது.

★ 'டைஸ்' என்ற சொல்லில் இருந்து உருவானது.

**3) நாட்குறிப்புகளின் முன்னோடியாகத் திகழ்வது எது?**

**நாட்குறிப்புகளின் முன்னோடி:-**

★ நாட்குறிப்புகளின் முன்னோடியாகத் திகழ்வது **EPHEMERIDES**.

★ இது ஒரு கிரேக்கக் குறிப்பேடு ஆகும்.

★ இச்சொல்லின் பொருள் 'ஒரு நாளுக்கான முடிவு' என்பதாகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) முகலாய மன்னர்களின் காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது குறித்து கூறுக.**

**முகலாய மன்னர்களின் காலத்தில் நாட்குறிப்பு:-**

★ முகலாய மன்னர்களில் பாபர் காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

★ ஔரங்கசீப் காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது.

**5) ஆனந்தரங்கரின் பணிகள் குறித்து எழுதுக.**

**ஆனந்தரங்கரின் பணிகள்:-**

★ ஆனந்தரங்கர் பிரெஞ்சுக் கிழக்கிந்திய உரைபெயர்ப்பாளராக விளங்கியவர்.

★ துய்ப்ளே என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழிபெயர்ப்பாளகராவும் பணியாற்றினார்.

**6) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பின் சிறப்பினைக் கூறுக.**

**நாட்குறிப்பின் சிறப்பு:-**

★ ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 25 ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துகின்றன.

★ பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்றுக் கருவூலமாகவும் ஆவணமாகவும் இலக்கியமாகவும் திகழ்கின்றன.

**7) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவை யாவை?**

**ஆனந்தரங்கரின் நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவை:-**

★ ஆண்டு ➔ திங்கள் ➔ நாள் ➔ கிழமை

★ நிகழ்வு நடந்த நேரம் ➔ நிகழ்விடம் ➔ நிகழ்வு

**8) ஆனந்தரங்கரின்நாட்குறிப்புஎந்தப்பகுதிகளின்அரசியல்செய்திகளைப்பதிவுசெய்துள்ளன?**

**நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள பகுதிகள்:-**

★ புதுவை ➔ தமிழகம் ➔ தென்னிந்தியா

**9) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் அரசியல் செய்திகள் சிலவற்றைக் கூறுக.**

**நாட்குறிப்பு வெளிப்படுத்தும் அரசியல் செய்திகள்:-**

★ ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு

★ ஆம்பூர் போர் பற்றிய செய்திகள் ➔ தஞ்சைக் கோட்டை முற்றுகை

★ இராபர்ட் கிளைவின் படையெடுப்பு

**10) 'உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்? ஏன்?**

**உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை:-**

★ உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு.

★ இவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**11) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள் யாவை?**

**நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள்:-**

★ ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூக நிகழ்வுகளைத் தெளிவாகக் காட்டுகிறது.

★ பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள் போன்ற பல்வேறு கூறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**12) பிரெஞ்சு அரசு காலத்தில் விதிக்கப்பட்ட தண்டனைகள் குறித்து எழுதுக.**

**பிரெஞ்சு அரசு காலத்தில் விதிக்கப்பட்ட தண்டனைகள்:-**

★ மரணதண்டனை ➔ காதறுத்தல் ➔ சாட்டையடி ➔ கிடங்கில் போடுதல்

**13) ஆனந்தரங்கர் குறித்து வ.வே.சு. கூறியது யாது?**

**ஆனந்தரங்கர் குறித்து வ.வே.சு. கூறியது:-**

★ அந்தக் காலத்தில் நடந்த செய்திகளை எல்லாம் முக்கியமானது,

★ முக்கியமில்லாதது என்று கூடக் கவனிக்காமல்,

★ ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல்

★ நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார், ஆனந்தரங்கர்.

**14) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகச் செய்திகள் பற்றி கூறுக.**

**நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகச் செய்திகள்:-**

★ ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித்துள்ளது.

★ கணக்கு, வரவு செலவுப் பட்டியல் என பல்வேறு செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ இதன்மூலம், ஆனந்தரங்கரும் பிறரும் வணிகத்திற்கு முதன்மை அளித்துள்ளதை உணரமுடிகிறது.

**15) ஆனந்தரங்கர் குறிப்பிடும் பல்வேறுவிதமான வராகன்களைக் கூறுக.**

**பல்வேறுவிதமான வராகன்கள்:-**

★ புதுச்சேரிப் பிறை வராகன் ➔ சென்னைப் பட்டணத்து நட்சத்திர வராகன்

★ வட்ட வராகன் ➔ பரங்கிப் பேட்டை வராகன் ➔ ஆரணி வராகன்

**16) ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்பு குறிப்பிடும் செய்தி யாது?**

**ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்பு குறிப்பிடும் செய்தி:-**

★ ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகை. ➔ புதுச்சேரியின் வீழ்ச்சி.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**17) ஆனந்தரங்கரின் மீது சுமத்தப்பட்ட பழி என்ன?**

**ஆனந்தரங்கரின் மீது சுமத்தப்பட்ட பழி:-**

★ ஆனந்தரங்கர் புதுச்சேரியின் இராணுவ அரசியல் செய்திகளை முகலாயருக்கும் ஆங்கிலேயருக்கும் கூறுவதாக புதுச்சேரியின் ஆளுநர் லெறி பழி சுமத்தினார்.

**18) ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் சிலவற்றைக் கூறுக.**

**ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள்:-**

★ ஆனந்தரங்கன் கோவை - தியாகராய தேசிகர்

★ ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் - புலவரேறு அரிமதி தென்னகன்

★ வானம் வசப்படும் - பிரபஞ்சன்

**சிறுவினா**

**1) ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கத்தில் இருந்த நாணயங்கள் யாவை?**

**ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கத்தில் இருந்த நாணயங்கள்:-**

| | |
|---|---|
| ★ 480 காசு | ஒரு ரூபாய் |
| ★ 60 காசு | 1 பணம் |
| ★ 8 பணம் | 1 ரூபாய் |
| ★ 24 பணம் | 1 வராகன் |
| ★ 1 பொன் | 1/2 வராகன் |
| ★ 1 வராகன் | 3 அல்லது 3.2 ரூபாய் |
| ★ 1 மோகரி | 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம் |
| ★ 1 சக்கரம் | ½ வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம் |

**2) பெருங்காற்றுபுதுச்சேரியைச்சூறையாடியதைஆனந்தரங்கர்எவ்வாறுகுறிப்பிட்டுள்ளார்?**

**புதுச்சேரியைச் சூறையாடிய பெருங்காற்று:-**

★ ஒருமுறை பெருங்காற்று புதுச்சேரியைச் சூறையாடியதை ஆனந்தரங்கர் மனம் நொந்து எழுதியுள்ளார்.

★ "அஸ்தமித்த உடனே துவங்கிப் பெருங்காற்று அடித்தது.

★ ஊரிலே உண்டான மரங்களெல்லாம் படுகாடாய் விழுந்து போனதும்,

★ வீடுகள் வெள்ளத்தில் முழுகிப்போய்,

★ அந்த வெள்ளத்திலே வீடுகளை அடித்துக்கொண்டு போனதும்,

★ மாடுகள், கன்றுகள், மனுஷர் செத்ததும் தெருவுக்குத்தெரு பிணநாற்றமாய் இருந்தது"



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

1) **ஆனந்தரங்கரும் பிறரும் வணிகத்திற்கு முதன்மை அளித்துள்ளதை விரிவாக எழுதுக.**

**குறிப்புச் சட்டம்**

| | | | |
|---|---|---|---|
| முன்னுரை | பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம் | கப்பல்கள் வருகை | |
| பிற வணிகச் செய்திகள் | பல்வேறு வகையான வராகன்கள் | முடிவுரை | நூற்பயன் |

**முன்னுரை:-**

★ ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித்துள்ளது.

★ கணக்கு வரவு செலவுப் பட்டியல் என வணிகம் பற்றிய விரிவான செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

**பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம்:-**

★ பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம் வணிகர் பலரைப் பங்குதாரராகக் கொண்ட கூட்டு நிறுவனம் ஆகும்.

★ தமது மூலதனத்திற்கு ஏற்ப எத்தனை கப்பல்களைக் கீழை நாடுகளுக்கு அனுப்புவது என்று திட்டமிடப்பட்டிருந்தது.

**கப்பல்கள் வருகை:-**

★ ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு ஆறு திங்கள் தேவைப்பட்டன.

★ கப்பல்கள் வந்தவுடன் பீரங்கி முழங்குதல் வழக்கத்தில் இருந்துள்ளது.

★ ஒவ்வோர் ஆண்டும் துணிகளுக்காக வர்த்தகரிடமும் தரகரிடமும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

★ சிலர் கழகத்தின் வர்த்தகர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர்.

**பிற வணிகச் செய்திகள்:-**

★ புதுச்சேரியில் நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பிரெஞ்சு வணிகக் கழகம் பெற்றது.

★ எட்டு மாற்றுக் குறைவான வராக நாணயங்களை வைத்திருப்பது குற்றமாகும்.

**பல்வேறு வகையான வராகன்கள்:-**

★ ஆனந்தரங்கர் பல்வேறு விதமான வராகன்களைக் குறிப்பிட்டுள்ளார்.

★ புதுச்சேரிப் பிறை வராகன், சென்னைப் பட்டணத்து நட்சத்திர வராகன், வட்ட வராகன், பரங்கிப் பேட்டை வராகன், ஆரணி வராகன்

**முடிவுரை:-**

★ இது போன்ற பல்வேறு வணிகச் செய்திகள் ஆனந்தரங்கரின் நாட்குறிப்பில் இடம்பெற்றுள்ளது.



கூடுதல் வினாக்கள்

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ இதன்மூலம், ஆனந்தரங்கரும் பிறரும் வணிகத்திற்கு முதன்மை அளித்துள்ளதை உணரமுடிகிறது.

**நூற்பயன்:-**

★ ஆனந்தரங்கரும்பிறரும்வணிகத்திற்கு முதன்மை அளித்துள்ளத்தை அறிந்துகொண்டேன்.

**2) புதுச்சேரியில் பிரெஞ்சு அரசின் வீழ்ச்சியைப் பற்றிய செய்திகளை விவரிக்க.**

**முன்னுரை:-**

★ ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகள் ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகையையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் விவரிக்கின்றன.

★ அந்நிகழ்வுகளைப் பற்றி விரிவாகக் காண்போம்.

**ஆங்கிலேயக் கப்பலின் வருகை:-**

★ 1760ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் புதுச்சேரியைத் தாக்க ஆங்கிலேயக் கப்பல் வந்து கொண்டிருந்தது.

★ செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று ஆங்கிலத் தளபதி புதுச்சேரியை நெருங்கிவிட்டதாகவும் நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

★ ஆங்கிலேயப் படைகள் சாரம்வரை அடைந்துவிட்டதைப் பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர்.

**ஆங்கிலேயர் புதுச்சேரியைக் கைப்பற்றுதல்:-**

★ குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது.

★ தேவனாம்பட்டணத்தில் பல துருப்புகளை (படைப்பிரிவுகள்) ஆங்கிலேயக் கப்பல்கள் இறங்கின.

★ புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர்.

**முடிவுரை:-**

★ புதுச்சேரியின் முற்றுகை பற்றிய முடிவினைக் கூறும் முன்னே ஆனந்தரங்கர் மறைந்துவிட்டதால், முற்றுகையின் முடிவினை அறிய முடியவில்லை.

**நூற்பயன்:-**

★ பிரெஞ்சு அரசின் கட்டுப்பாட்டில் இருந்த புதுச்சேரியை ஆங்கிலேயர் கைப்பற்றிய நிகழ்வுகளை அறிந்துகொண்டேன்.

## காலத்தை வென்ற கலை

**குறுவினா**

**1) கேரளாந்தகன் வாயில் கோபுரம் - பெயர்க்காரணம் தருக.**

**கேரளாந்தகன் வாயில் கோபுரம்:-**

★ பெரியகோவில் கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் கோபுரம் ஆகும்.

★ சேரநாட்டை இராசராசன் வெற்றிகொண்டான்.

★ அதனைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்கு 'கேரளாந்தகன் வாயில் கோபுரம்' என்று பெயர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) தஞ்சை பெரிய கோவிலில் எத்தனை கோபுரங்கள் உள்ளன? அவை யாவை?**

**தஞ்சை பெரிய கோவிலில் உள்ள கோபுரங்கள்:-**

★ தஞ்சை பெரிய கோவிலில் இரண்டு கோபுரங்கள் உள்ளன. அவை:

★ கேரளாந்தகன் திருவாயில் கோபுரம் ➔ இராசராசன் திருவாயில் கோபுரம்

**3) கற்றளிக் கோவில் என்றால் என்ன?**

**கற்றளிக் கோவில்:-**

★ கருங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கோவில் கற்றளிக் கோவில் ஆகும்.

★ இம்முறையை ஏழாம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மன் உருவாக்கினான்.

**4) கற்றளி கோவில்கள் சிலவற்றைக் கூறுக.**

**கற்றளிக் கோவில்கள்:-**

★ மகாபலிபுரம் கடற்கரைக் கோவில் ➔ காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில்

★ பனைமலைக் கோவில்

**5) தஞ்சை பெரிய கோவிலின் விமான அமைப்பினைக் கூறுக.**

**தஞ்சை பெரிய கோவிலின் விமான அமைப்பு:-**

★ தஞ்சை பெரிய கோவிலின் விமானம் 216 அடி உயரமுடையது.

★ கருவறை விமானம் 13 தளங்களை உடையது.

★ 'தட்சிணமேரு' என்று இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்டது.

**6) பழங்காலத்தில் கோவில்கள் எப்படிக் கட்டப்பட்டன?**

**பழங்காலத்தில் கோவில் கட்டப்பட்ட முறை:-**

★ பழங்காலத்தில் மண்ணால் கோவில் கட்டி, மேலே மரத்தால் சட்டகமிட்டார்கள்.

★ பின்னர், செங்கற்களை அடுக்கிக் கோவில் கட்டினார்கள்.

★ இவ்வகையில் சோழன் செங்கணான் எழுபத்தெட்டுக் கோவில்களைக் கட்டி உள்ளான்.

**7) 'விசித்திர சித்தன்' என்று அழைக்கப்பட்டவர் யார்? அவர் செய்த செயல் யாது?**

**விசித்திர சித்தன்:-**

★ 'விசித்திர சித்தன்' என்று அழைக்கப்பட்டவர் முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் ஆவார்.

★ இவர் கோவில் கட்டுவதற்கு செங்கல், சுண்ணம், மரம், உலோகம் போன்றவைப் பயன்படுத்தவில்லை.

★ பாறைகளைக் குடைந்து, குடைவரைக் கோவில்களை அமைத்தார்.

சிறுவினாக்கள்

**8) இந்தியக் கட்டடக்கலையின் வகைகள் யாவை? அவற்றில், தஞ்சை பெரிய கோவில் எவ்வகை கலைப்பாணியில் கட்டப்பட்டது?**

**இந்தியக் கட்டடக்கலையின் வகைகள்:-**

★ நாகரம் ➔ வேசரம் ➔ திராவிடம்

★ தஞ்சை பெரிய கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணி ஆகும்.

**9) தஞ்சை பெரிய கோவிலை இராசராசன் கட்டியதற்கான சான்று யாது?**

**தஞ்சை பெரிய கோவிலை இராசராசன் கட்டியதற்கான சான்று:-**

★ ஜெர்மனி அறிஞர் ஷுல்ஸ் தஞ்சை பெரிய கோவிலிலுள்ள கல்வெட்டுகளைப் படி எடுத்தார்.

★ அதன்மூலம், இக்கோவிலைக் கட்டியவன் இராசராச சோழன்தான் என்பதை உறுதி செய்தார்.

**10) தஞ்சை பெரிய கோவிலில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் யாவை?**

**தஞ்சை பெரிய கோவிலில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள்:-**

★ தட்சிணாமூர்த்தி ஓவியம் ➔ சுந்தரர் வரலாறு

★ திரிபுராந்தகர் ஓவியம்

**11) கோவில்களில் எவ்வாறான இழிவான செயல்களில் ஈடுபடுகிறார்கள்?**

**கோவில்களில் மேற்கொள்ளும் இழிவான செயல்கள்:-**

★ கோவில்களுக்குச் செல்பவர்கள் அதன் தொன்மையை உணரவில்லை.

★ சிலைகளைச் சேதப்படுத்துதல் ★ சுவர்களில் கிறுக்குதல்

★ குப்பை போடுதல் போன்ற இழிவான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

**12) பிரமந்திரக் கல் பற்றி நீவிர் அறிந்தவற்றைக் கூறுக.**

**பிரமந்திரக் கல்:-**

★ கருவறை விமானத்தின் சிகரத்தில் உள்ள பிரமந்திரக் கல் ஒற்றைக் கல் அன்று.

★ எண்பட்டை அமைப்பில் ஆரஞ்சுப்பழச்சுளை போன்று எட்டுக் கற்கள் நெருக்கமாக வைத்து ஒட்டப்பட்டவை.

**13) தஞ்சை பெரிய கோவிலில் உள்ள பெரிய நந்தி பற்றி கூறுக.**

**பெரிய நந்தி:-**

★ தஞ்சை பெரிய கோவிலில் உள்ள பெரிய நந்தியும் மண்டபமும் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது.

★ சோழர் காலத்து நந்தி தற்போது தென்புறத் திருச்சுற்றில் உள்ளது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**14) ஒலோகமாதேவீச்சுரம் கோவில் பற்றி நீவிர் அறிந்தவற்றைக் கூறுக.**

**ஒலோகமாதேவீச்சுரம் கோவில்:-**

★ இராசராசனின் பட்டத்தரசி ஒலோகமாதேவி.

★ ஒலோகமாதேவி திருவையாற்றில் ஒரு கோவிலைக் கட்டினார்.

★ அக்கோவில் ஒலோகமாதேவீச்சுரம் என்று அழைக்கப்படுகிறது.

★ அக்கோவில் கல்வெட்டில் பெண் அதிகாரிகள் பணியாற்றிய செய்தி உள்ளது.

**15) இராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் பணியில் இருந்ததற்கான சான்றுகள் யாவை?**

**பெண் அதிகாரிகள் பணியில் இருந்ததற்கான சான்றுகள்:-**

★ இராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் அரசுப்பணிகளில் இருந்துள்ளனர்.

★ ஒலோகமாதேவீச்சுரம் என்ற கோவிலில் உள்ள கல்வெட்டில் 'எருதந் குஞ்சர மல்லி' என்ற பெண் அதிகாரியைப் பற்றிய குறிப்பு உள்ளது.

★ அதே கோவிலில் முதலாம் இராசாதிராசன் காலத்தில் ஒரு பெண் அதிகாரி இருந்துள்ளார். அவர் பெயர் அமிர்தவல்லி.

**16) தஞ்சை பெரிய கோவிலைக் கட்டிய தச்சர்களின் பெயர்களைக் கூறுக.**

**தஞ்சை பெரிய கோவிலைக் கட்டிய தச்சர்கள்:-**

★ வீரசோழன் குஞ்சரமல்லன் இராசராசப் பெருந்தச்சன்

★ மதுராந்தகனான நித்தவினோதப் பெருந்தச்சன்

★ இலத்திசடையனான கண்டராதித்தப் பெருந்தச்சன்



**சிறுவினா**

**1) தஞ்சை கோவில் 'பெரிய கோவில்' என்று அழைக்கப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.**

**பெரிய கோவில்:-**

★ நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே மிகவும் பெரிய கோவில் தஞ்சை கோவில் ஆகும்.

★ இராசராச சோழனால் ஆறு ஆண்டுகளில் இக்கோவில் கட்டி முடிக்கப்பட்டது.

★ தஞ்சை பெரிய கோவிலின் விமானம் 216 அடி உயரமுடையது.

★ கருவறை விமானம் 13 தளங்களை உடையது.

★ இராசராசனால் 'தட்சிணமேரு' என்று பெருமையுடன் அழைக்கப்பட்டது.

★ எனவே, தஞ்சை கோவில் பெரிய கோவில் என்று அழைக்கப்படுகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) காலந்தோறும் கோவில் கட்டும் முறை மாறி வந்ததைப் பற்றி கூறுக.**

**காலந்தோறும் கோவில் கட்டும் முறை:-**

★ பழங்காலத்தில் கோவில்கள் மண்ணால் கட்டப்பட்டு, மேலே மரத்தால் சட்டகமிடப்பட்டன.

★ தில்லைக் கோவில், குற்றாலநாதர் கோவில் போன்ற கோவில்களில் செப்பு, பொன் தகடுகளால் கூரை வேய்ந்தார்கள்.

★ பின்னர், செங்கற்களை அடுக்கி கோவில்களைக் கட்டினார்கள்.

★ இம்முறையில் சோழன் செங்கணான் எழுபத்தெட்டுக் கோவில்களைக் கட்டினான்.

★ முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் செங்கல், சுண்ணம், மரம் போன்றவை இல்லாமல் குடைவரைக் கோவில்களை அமைத்தான்.

★ பிற்காலத்தில், கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி கோவில்கள் அமைக்கும் முறை தோன்றியது.

★ இது கற்றளிக் கோவில்கள் என்று அழைக்கப்பட்டது.

**3) கோவில்கள் பெரிதாகக் கட்டப்பட்டதற்கான காரணத்தை விளக்குக?**

**கோவில்கள் பெரிதாகக் கட்டப்பட்டதற்கான காரணம்:-**

★ கோவில் வெறும் வழிபடும் தலமாக மட்டுமன்று.

★ கோவில்களில் இசை, நடனம், நாடகம் போன்ற அருங்கலைகள் வளர்க்கப்பட்டன.

★ மக்கள் ஒன்றுகூடும் இடமாக இருந்தது.

★ மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகளைக் கல்வெட்டுகளில் பொறித்து வைத்தனர்.

★ பஞ்ச காலத்தில் மக்களுக்கு உதவுவதற்கு தானியக் கிடங்குகளும் கோவிலுக்குள் அமைக்கப்பட்டன.

★ கருவூலம், மருத்துவமனை, போர்க்காலங்களில் படைவீரர்கள் தங்கும் இடம் என பல்வேறு வகையில் கோவில்கள் பயன்படுத்தப்பட்டன.

★ எனவே, கோவில்கள் பெரிதாகக் கட்டப்பட்டன.

**4) தஞ்சை பெரிய கோவிலில் உள்ள ஓவியங்கள் எவ்வகையைச் சார்ந்தவை? அவற்றைக் கண்டறிந்தவர் யார்? என்பதைப் பற்றி விரிவாக எழுதுக.**

**தஞ்சை பெரிய கோவில் ஓவியங்கள்:-**

★ தஞ்சை பெரிய கோவில் ஓவியங்கள் ஃப்ரெஸ்கோ வகை ஓவியங்கள்.

★ ஃப்ரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்கு 'புதுமை' என்று பொருள்.

★ சுண்ணாம்புக் காரைப்பூச்சு மீது வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் ஆகும்.

★ 1930ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர் எஸ்.கே. கோவிந்தசாமி.

★ இவர்தான் தஞ்சைப் பெரிய கோவில் கருவறையின் இரு தளங்களில் உள்ள சுற்றுக்கூடங்களில் உள்ள சுவர்களில் ஓவியங்கள் இருப்பதைக் கண்டறிந்தார்.

★ அதில், தட்சிணாமூர்த்தி, சுந்தரர் வரலாறு, திரிபுராந்தகர் போன்ற ஓவியங்கள் காணப்பட்டன.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**5) தஞ்சை கோவிலை எடுப்பித்தவர்கள் பற்றிய கல்வெட்டு செய்திகள் வழி நீவிர் அறிந்து கொள்ளும் செய்தியை விவரிக்க.**

**கோவிலை எடுப்பித்தவர்கள் பற்றிய கல்வெட்டு செய்தி வழி நாம் அறிவது:-**

- ★ இராசராசன் கோவில் கட்டுவதற்கு தான் மட்டுமே பங்களிக்காமல் மற்றவர்களின் உதவியையும் பெற்றிருக்கிறான்.
- ★ கோவில் கட்டுவதற்கு உதவியவர்களின் பெயர்களைக் கல்வெட்டுகளில் ஆவணப்படுத்தியுள்ளான்.
- ★ இராசராசன் தனக்கு அடுத்தபடியான இடத்தைத் தம் தமக்கை குந்தவை தேவிக்கு (அக்கன்) கொடுத்துள்ளான்.
- ★ இராசராசனின் மனைவி மற்றும் பிறர் கொடுத்த கொடையையும் உலகம் அறியும்படி செய்துள்ளான்.

## காற்றில் கலந்த பேரோசை

**குறுவினா**

**1) ஜீவாவின் பன்முக ஆற்றலைப் பற்றி எழுதுக.**

**ஜீவாவின் பன்முக ஆற்றல்:-**

- ★ காந்தியவாதி ➔ சுயமரியாதை இயக்கப் போராளி
- ★ பொதுவுடைமை இயக்கத் தலைவர் ➔ தமிழ்ப் பற்றாளர்
- ★ மேடைப் பேச்சாளர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர்.

**2) ஜீவா சமூக நலனுக்காகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட முதல் நிகழ்வு எது?**

**சமூக நலனுக்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட முதல் நிகழ்வு:-**

- ★ ஒருமுறை திருவாங்கூரில் வெள்ளம் ஏற்பட்டது.
- ★ வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக, பள்ளி மாணவர்கள் நிதி திரட்டினார்கள்.
- ★ அதில், ஒரு குழுவின் தலைவராக ஜீவானந்தம் இருந்தார்.
- ★ இதுவே, ஜீவா தம்மை சமூக நலனுக்காக ஈடுபடுத்திக் கொண்ட முதல் நிகழ்வாகும்.

**3) ஜீவாவின் இறப்பைப் பற்றிக் கூறிய சுந்தர ராமசாமியிடம், அவர் நண்பர்கள் வினவியது யாது?**

**ஜீவாவின் இறப்பைப் பற்றி மக்கள் வினவியது:-**

- ★ சுந்தர ராமசாமி தன் நண்பர்களிடம் ஜீவா இறந்த செய்தியை "மூச்சு நின்றுவிட்டது" என்று கூறினார்.
- ★ அதைக் கேட்ட அவர் நண்பர்கள், "பேச்சு நின்றபோதா?" என்று வினவினர்.
- ★ ஜீவா தன் வாழ்வின் பெரும்பாலான நாட்களை மேடைப் பேச்சில் கழித்ததாலயே அவர்கள் இவ்வாறு கேட்டனர்.

**4) ஜீவாவின் நெஞ்சோடு வளர்ந்த கனவைப் பற்றிக் கூறுக.**

**நெஞ்சோடு வளர்ந்த கனவு:-**

- ★ மனித வெள்ளத்தை அவர்களில் ஒருவனாய் நின்று தலைமை தாங்க வேண்டும்.
- ★ அவர்களைச் சிறந்த ஓர் எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கனவு கண்டவர்.

கருத்தில் வினாக்கள்

**5) ஜீவாவின் கொள்கையும் நம்பிக்கையும் எதிலிருந்து தோன்றியது?**

**கொள்கையும் நம்பிக்கையும்:-**

★ மனிதச் சிந்தனையில் தோன்றிய ஒரு சிறந்த தத்துவத்தை, மக்களிடையே பரப்ப வேண்டும்.

★ அந்த தத்துவத்தை நோக்கி மக்களை அழைத்துச் செல்ல வேண்டும்.

★ இந்த அடிப்படை எண்ணத்திலிருந்துதான் ஜீவாவின் கொள்கையும் நம்பிக்கையும் தோன்றியது.

**6) ஜீவாவின் பசுமையான எண்ணங்கள் யாவை?**

**ஜீவாவின் பசுமையான எண்ணங்கள்:-**

★ "நான் ஒரு பள்ளி மாணவன், படித்துக்கொண்டிருக்கிறேன். படித்துக் கொண்ட இருப்பேன்" என்ற எண்ணம் ஜீவாவின் மனத்தில் பசுமையாக இருந்தது.

**7) சுந்தர ராமசாமியின் நூல்கள் யாவை?**

**சுந்தர ராமசாமியின் நூல்கள்:-**

★ ரத்னாபாயின் ஆங்கிலம் ➔ காகங்கள் ➔ ஒரு புளியமரத்தின் கதை

★ ஜே.ஜே. சில குறிப்புகள் ➔ குழந்தைகள் பெண்கள் ஆண்கள்

**சிறுவினா**

**1) ஜீவாவின் நெஞ்சோடு வளர்ந்த கனவைப் பற்றி விளக்குக.**

**நெஞ்சோடு வளர்ந்த கனவு:-**

★ ஜீவா தமக்கென ஒரு தத்துவத்தைப் படைத்துக்கொண்டவர் அல்லர்.

★ தான்நம்பிய தத்துவத்தைத் தம்திறமையால் உயிர்பெறச்செய்து, மனிதன்முன் படைத்தவர்.

★ மின்சக்திக்கு ஒளியுருவம் கொடுத்தவர்.

★ மனித வெள்ளத்தை அவர்களில் ஒருவனாய் முன்னின்று தலைமை தாங்க வேண்டும்.

★ அவர்களை சிறந்த ஓர் எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் ஜீவாவின் நெஞ்சோடு வளர்ந்தது.

**2) சுந்தர ராமசாமி - குறிப்பு வரைக.**

**சுந்தர ராமசாமி - குறிப்பு:-**

★ ஊர்: நாகர்கோவில் ➔ பணி: நவீனத் தமிழ் எழுத்தாளர்

★ புனைபெயர்: பசுவய்யா

★ படைப்புகள்: கதைகள், புதினங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள்

★ இயற்றிய கதைகள்: ரத்னாபாயின் ஆங்கிலம், காகம்.

★ புதினங்கள்: ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள்
குழந்தைகள் பெண்கள் ஆண்கள்

★ மொழிபெயர்ப்புகள்: செம்மீன், தோட்டியின் மகன் ஆகிய புதினங்கள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## தாகூரின் கடிதங்கள்

### குறுவினா

**1) தாகூருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்கள் யாவை?**

**தாகூருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்கள்:-**

★ பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்

★ கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி

**2) தாகூர் நோபல் பரிசு பெற்ற நூல் எது?**

**தாகூர் நோபல் பரிசு பெற்ற நூல்:-**

★ தாகூர், 1913ஆம் ஆண்டு கீதாஞ்சலி என்ற கவிதை நூலின் ஆங்கில மொழிபெயர்ப்புக்காக இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றார்.

**3) தாகூர் ஆங்கில அரசு தனக்கு வழங்கிய 'சர்' பட்டத்தைத் துறந்ததற்கான காரணத்தைக் குறிப்பிடுக.**

**'சர்' பட்டத்தைத் துறந்ததற்கான காரணம்:-**

★ 1919ஆம் ஆண்டு நடந்த ஜாலியன்வாலாபாக் படுகொலையால் மனம் வருந்தினார், தாகூர்.

★ எனவே, ஆங்கிலேய அரசைக் கண்டித்து, தனக்கு வழங்கப்பட்ட 'சர்' பட்டத்தைத் துறந்தார்.

**4) தாகூர் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவியதன் நோக்கத்தைக் கூறுக.**

**விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவியதன் நோக்கம்:-**

★ குழந்தைகள் இயற்கையின் மடியில் எளிமையாக வளர்க்கப்பட வேண்டும்.

★ தங்கள் வேலையைத் தாங்களே கவனித்துக் கொண்டு, மற்றவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும்.

★ இத்தகைய எண்ணம் கொண்டு 1921ல் விஸ்வபாரதி பல்கலைக் கழகத்தைத் தாகூர் நிறுவினார்.

**5) தாகூர் அறிந்திருந்த மொழிகள் யாவை?**

**தாகூர் அறிந்திருந்த மொழிகள்:-**

★ தமிழ் ★ சமஸ்கிருதம் ★ தெலுங்கு

★ வங்கம் ★ பாலி ★ ஆங்கிலம்

**6) தாகூரின் மனத்தில் எப்போது பாரத நாட்டின் இயல்பு தலைதூக்குவதாகக் கூறுகின்றார்?**

**பாரத நாட்டின் இயல்பு தலைதூக்குகிறது:-**

★ நாட்டுப்புறங்களில் இயற்கையோடு இணைந்து பழகும்போது தன் உள்ளத்தினுள் பாரத நாட்டின் இயல்பு தலைதூக்குவதாக தாகூர் கூறுகின்றார்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**7) பாரத நாட்டின் இயல்பு என்று தாகூர் எதனைக் குறிப்பிடுகிறார்?**

**பாரத நாட்டின் இயல்பு:-**

★ அனைத்து உயிர்களிடத்தும் கருணை காட்டுவது.

★ இயற்கையோடு இணைந்து பழகுதல்.

**8) தாகூரின் கடிதத்தில் இடம்பெற்றுள்ள ஆறுகளின் பெயர்களைக் கூறுக.**

**ஆறுகளின் பெயர்கள்:-**

| தமிழ்ப்பெயர் | வடமொழிப்பெயர் |
|---|---|
| புறாக்கண்ணி | கபோதாரி |
| மயில்விழியாள் | மயூராரி |
| விருப்புடையவள் | இச்சாமதி |

**9) நம் தோல்விக்கான மூல காரணம் எது என்று தாகூர் கூறுகின்றார்?**

**தோல்விக்கான மூல காரணம்:-**

★ இயற்கையிடம் நமக்குள்ள அலட்சிய மனப்பான்மையே நம் தோல்விக்கான மூலகாரணம் என்கிறார் தாகூர்.

**10) நமது தேசப்பற்றைப் பற்றி தாகூர் கூறுவது யாது?**

**தேசப்பற்றைப் பற்றி தாகூர் கூறுவது:-**

★ நமது தேசப்பற்று தேசத்து மக்களிடம் கொண்டுள்ள பற்றுதலின் காரணமாக உருவானதல்ல.

★ நாம் படித்த சரித்திரப் புத்தக மூட்டையால் உருவானது என்கிறார் தாகூர்.

**சிறுவினா**

**1) தாகூரின் ஆளுமையின் பேருருவை அறிய உதவுபவை யாவை?**

**தாகூரின் ஆளுமையின் பேருருவை அறிய உதவுபவை:-**

★ இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசைப்பாடல்கள்

★ ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகள்

★ இருபது பெரு நாடகங்கள்

★ குறு நாடகங்கள்

★ எட்டு நாவல்கள்

★ எட்டுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புகள்

★ ஓவியப் படைப்புகள்

★ பயணக் கட்டுரைகள்

★ ஆங்கில மொழிபெயர்ப்புகள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# கவிதைப் பேழை

## யுகத்தின் பாடல்

### குறுவினா

**1) சு. வில்வரத்தினம் வாழ்க்கைக் குறிப்பு வரைக.**

★ பெயர் - சு. வில்வரத்தினம்

★ ஊர் - யாழ்ப்பாணம் (புங்குடு தீவு)

**எழுதி வெளிவந்த கவிதைகளின் தொகுப்புக்கள்:**

★ அகங்களும் முகங்களும் ➔ காற்றுவழிக் கிராமம் ➔ காலத்துயர்

★ நெற்றிமண் ➔ உயிர்த்தெழும் காலத்துக்காக

**2) சு. வில்வரத்தினம் தன் யுகப்பாடலை எவ்வாறு எழுத வேண்டும் என்று விரும்புகிறார்?**

★ அலைகடல், நெருப்பாறு, மலை உச்சியைக் கடந்து செல்லும் பாடல்

★ முச்சங்கம் அழிந்த பின்பும் அழியாத தமிழுக்குக் காலத்தால் அழியாத பாடல்

★ தொல்கனிமங்களின் உரமெல்லாம் சேர்ந்த பாடல்

★ மண்ணில் தீட்டி எழுதிய என் விரலை தீயில் நனைத்து எல்லா திசைகளிலும் தமிழின் புகழ் விளங்கும்படியான பாடல்.

★ அதுவே என்னிலிருந்து எழும் ஒரு யுகப்பாடல் என்று கவிஞர் கூறுகிறார்.

**3) நிறைமணி தந்தவள் யார் ? ஏன்?**

★ நிறைமணி தந்தவள் தமிழ்த்தாய். தமிழைப் பழங்காலம் தொட்டே வணங்கி, ஆழமாக அறிந்து, நற்கருத்துகளை விதைத்து, வியர்வை சிந்த நூல்களைப் படைத்தவர்களுக்குப் புகழ் என்னும் நிறைமணி தந்தவள் தமிழ்த்தாய் ஆவாள்.

**4) புதுக்கவிதை விளக்கம் தருக.**

**புதுக்கவிதை - விளக்கம்**

★ புதுவகையில் எழுதிய கவிதை புதுக்கவிதை.

★ சொல்லையும் வரிகளையும் யாப்பு கட்டுப்படுத்தாது.

★ மனதில் தோன்றியதை மழலை போல் சொல்லலாம்.

**கூடுதல் தகவல்**

★ "சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது

சொற்புதிது சோதிமிக்க

நவகவிதை" - பாரதியார்





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தோஸ்த் தமிழ் உரை + 1

## நன்னூல்

### குறுவினா

**1) பாயிரத்திற்கு உரிய வேறு பெயர்கள் யாவை?**

**பாயிரத்திற்கு உரிய வேறு பெயர்கள்:-**

★ பாயிரம் ஏழு பெயர்களில் வழங்கப்படுகிறது. அவை:

★ முகவுரை ➔ பதிகம் ➔ அணிந்துரை ➔ புனைந்துரை

★ நூன்முகம் ➔ புறவுரை ➔ தந்துரை

**2) பாயிரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**பாயிரத்தின் வகைகள்:-**

★ பாயிரம் இரண்டு வகைப்படும். அவை:

★ பொதுப்பாயிரம் ➔ சிறப்புப்பாயிரம்

**3) பொதுப்பாயிரம் என்றால் என்ன? (அல்லது) பொதுப்பாயிரத்தில் இடம்பெறுபவை யாவை?**

**பொதுப்பாயிரம் விளக்கம் (அ) பொதுப்பாயிரத்தில் இடம்பெறுபவை:-**

★ நூலின் இயல்பு ➔ ஆசிரியர் இயல்பு ➔ கற்பிக்கும் முறை

★ மாணவர் இயல்பு ➔ கற்கும் முறை

**4) பாயிரம் இன்றியமையாதது என்னும் கருத்தை நன்னூல் வழி நிறுவுக.**

**பாயிரம் இன்றியமையாதது என்னும் கருத்தை நன்னூல் வழி நிறுவுதல்:-**

★ ஒரு நூல் ஆயிரம் முகங்களைக் கொண்டதைப் போல பல்வேறு துறைச் செய்திகளை எடுத்துக் கூறினாலும்,

★ அந்நூலுக்குப் பாயிரம் இல்லை என்றால் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.

**5) நன்னூலை இயற்றியவர் யார்? அவரின் சிற்பம் எங்கு உள்ளது?**

**நன்னூலை இயற்றியவர்:-**

★ நன்னூலை இயற்றியவர் பவணந்தி முனிவர்.

★ சீயகங்கன் என்னும் சிற்றரசன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நன்னூல் இயற்றப்பட்டது.

★ ஈரோடு மாவட்டம், மேட்டுப்புதூரில் பவணந்தி முனிவரின் உருவச் சிற்பம் உள்ளது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

**1) பாயிரத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை? அவற்றிற்கான காரணத்தை விளக்குக.**

**பாயிரத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள்:-**

★ பாயிரத்திற்கு 7 பெயர்கள் உள்ளன. அவை:

★ முகவுரை ➔ பதிகம் ➔ அணிந்துரை ➔ புனைந்துரை

★ நூன்முகம் ➔ புறவுரை ➔ தந்துரை

**முகவுரை:-** நூலுக்கு முன் சொல்லப்படுவது முகவுரை ஆகும்.

**பதிகம்:-** பலவகைப் பொருள்களையும் தொகுத்துச் சொல்லுவது பதிகம் ஆகும்.

**அணிந்துரை:-** நூலின் சிறப்பை அணி செய்து சொல்லுவது அணிந்துரை ஆகும்.

**புனைந்துரை:-** நூலின் பெருமையை விளக்கி (புனைந்து) சொல்லுவது புனைந்துரை ஆகும்.

**நூன்முகம்:-** நூலுக்கு முகம்போல முற்பட்டிருப்பது நூன்முகம் ஆகும்.

**புறவுரை:-** நூலில் சொல்லப்படாத பொருளை நூலின் புறத்தில் (வெளியில்) சொல்லுவது புறவுரை ஆகும்.

**தந்துரை:-** நூலில் சொல்லப்படாத கருத்துகளைக் கூறுவது தந்துரை ஆகும்.

**2) சிறப்புப் பாயிரத்தின் இலக்கணத்தைக் கூறுக. (அல்லது) சிறப்புப் பாயிரத்தில் இடம்பெறுவனவற்றைக் கூறுக.**

**சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் (அ) சிறப்புப் பாயிரத்தில் இடம்பெறுபவை:-**

★ நூலை இயற்றிய ஆசிரியரின் பெயர்

★ எந்த நூலைப் பின்பற்றி இயற்றப்பட்டது ➔ நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு

★ நூலின் பெயர் ➔ நூலைக் கேட்போர்

★ நூல் தொகை, வகை, விரி என எவ்வகையில் இயற்றப்பட்டுள்ளது.

★ நூலில் கூறப்பட்டுள்ள கருத்துகள் ➔ நூலைக் கற்பதனால் ஏற்படும் பயன்

**சிறப்புச் செய்தி:-**

**நன்னூல்**

**"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை**

**நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே**

**கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்**

**வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே."**

கூடுதல் வினாக்கள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இவையும் உள:-**

★ நூல் இயற்றப்பட்ட காலம் ➔ நூல் அரங்கேற்றப்பட்ட இடம்

★ நூல் இயற்றப்பட்டதற்கான காரணம் ஆகியவை சிறப்புப் பாயிரத்தில் இடம்பெறும்.

**சிறப்புச் செய்தி:-**

**நன்னூல்**

**"காலம் களனே காரணம் என்றுஇம்**

**மூவகை ஏற்றி மொழிநரும் உளரே."**

**3) பாயிரத்தின் சிறப்பை நன்னூல் வழி விளக்குக.**

**பாயிரத்தின் சிறப்பை நன்னூல் வழி விளக்குதல்:-**

★ மாடத்திற்கு அழகு சேர்ப்பது ஓவியங்கள்.

★ நகரங்களுக்கு அழகு சேர்ப்பது கோபுரங்கள்.

★ அழகிய தோள்களை உடைய மகளிருக்கு அழகு சேர்ப்பது அணிகலன்கள்.

★ அதுபோல, நூல்களுக்கு அழகு சேர்ப்பது பாயிரம் ஆகும்.

**சிறப்புச் செய்தி:-**

**நன்னூல்**

**"மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்**

**ஆடமைத்தோள் நல்லார்க்கு அணியும்போல் - நாடிமுன்**

**ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்**

**பெய்துரையா வைத்தார் பெரிது."**

## ஏதிலிக்குருவிகள்

**குறுவினா**

**1) அழகிய பெரியவனின் (அரவிந்தன்) படைப்புகள் யாவை?**

**அழகிய பெரியவனின் (அரவிந்தன்) படைப்புகள்**

★ சிறுகதை ★ குறடு ★ நெரிக்கட்டு

★ கவிதை ★ உனக்கும் எனக்குமான சொல் ★ அரூப நெஞ்சு

★ கட்டுரை ★ மீள்கோணம் ★ பெருகும் வேட்கை





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



சிறுவினா

**1) அழகிய பெரியவன் பற்றிய குறிப்பு வரைக**

**அழகிய பெரியவன்- வாழ்க்கைக் குறிப்பு**

★ பெயர் - அழகிய பெரியவன்.

★ இயற்பெயர் - அரவிந்தன்.

★ ஊர் - பேரணாம்பட்டு (வேலூர் மாவட்டம்)

★ பணி - அரசுப்பள்ளி ஆசிரியர்.

★ பெற்ற விருது - தமிழக அரசின் விருது.

★ விருது பெற்றுத் தந்த நூல் - தகப்பன்கொடி (புதினம்)

★ விருது பெற்ற ஆண்டு - 2003ஆம் ஆண்டு.

★ படைப்புத்தளம் - நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை.

★ சிறுகதைத் தொகுப்பு ★ குறடு ★ நெரிக்கட்டு

★ கவிதைத் தொகுப்பு - ★ உனக்கும் எனக்குமான சொல் ★ அரூப நஞ்சு

★ கட்டுரைத் தொகுப்பு - ★ மீள்கோணம் ★ பெருகும் வேட்கை

## காவியம்

குறுவினா

**1) பிரமிள் கவிதையின் பொருள் யாது?**

**பிரமிள் கவிதையின் பொருள்**

★ பறவைகளின் இறகுகளின் தொகுதியைச் சிறகு என்பர்.

★ சிறகிலிருந்து ஓர் இறகு பிரிகின்றது.

★ வானத்திற்கும் பூமிக்கும் இடையில் அது பறக்கின்றது.

★ அது காற்றின் தழுவலால் அழகாக அசைந்து அசைந்து பறக்கிறது.

★ அப்போது அந்த இறகு பூமியின் மேல் வீழாமல் பறவையின் வாழ்க்கையை எழுதுவது போல் உள்ளது.

**2) காவியம் கவிதையின் உட்பொருள் யாது?**

**காவியம் கவிதையின் உட்பொருள்**

★ வாழ்வு என்பது காவியம் எழுதுவதற்கான பாடுபொருள்.

★ இடையறாத இருப்பில்தான் வாழ்வு நிரந்தரமாகின்றது.

★ சான்று - இறகின் அசைவு பறவையின் வாழ்க்கைப் பதிவு.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

**1) பிரமிள் - வாழ்க்கைக் குறிப்பு வரைக.**

★ பெயர் - பிரமிள்.
★ இயற்பெயர் - சிவராமலிங்கம்.
★ புனைப் பெயர்கள் - தருமு சிவராம், அரூப் சிவராம்.
★ படைப்புத் தளங்கள் - புதுக்கவிதை, விமர்சனம், சிறுகதை, நாடகம், மொழியாக்கம்
★ கவிதைத் தொகுப்பு - பிரமிள் கவிதை
★ சிறுகதைத் தொகுப்பு - லங்காபுரி ராஜா
★ நாடகம் - நக்ஷத்திரவாசி
★ கட்டுரை - வெயிலும் நிழலும்

**2) பிரமிள் கவிதையை எழுதி விளக்குக.**

**கவிதைத் தலைப்பு - காவியம்**

**பிரமிள் கவிதை**

**"சிறகிலிருந்துபிரிந்த**
**இறகு ஒன்று**
**காற்றின் தீராத பக்கங்களில்**
**ஒரு பறவையின் வாழ்வை**
**எழுதிச் செல்கிறது."** **- பிரமிள்**

**கவிதையின் பொருள்**

★ பறவைகளின் இறகுகளின் தொகுதியைச் சிறகு என்பர்.
★ சிறகிலிருந்து ஓர் இறகு பிரிகின்றது.
★ வானத்திற்கும் பூமிக்கும் இடையில் அது பறக்கின்றது.
★ அது காற்றின் தழுவலால் அழகாக அசைந்து அசைந்து பறக்கிறது.
★ அப்போது அந்த இறகு பூமியின் மேல் வீழாமல் பறவையின் வாழ்க்கையை எழுதுவது போல் உள்ளது.

**காவியம் கவிதையின் உட்பொருள்**

★ வாழ்வு என்பது காவியம் எழுதுவதற்கான பாடுபொருள்.
★ இடையறாத இருப்பில்தான் வாழ்வு நிரந்தரமாகின்றது.
★ சான்று - இறகின் அசைவு பறவையின் வாழ்க்கைப் பதிவு.

## திருமலை முருகன் பள்ளு

குறுவினா

**1) திருமலை முருகன் பள்ளுவின் வேறு பெயர்கள் யாவை?**

**திருமலை முருகன் பள்ளுவின் வேறு பெயர்கள்**

★ பள்ளிசை ★ திருமலை அதிபர் பள்ளு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2) **திருமலை முருகன் பள்ளுவில் பயின்று வந்துள்ள பா வகைகள் யாவை?**

**திருமலை முருகன் பள்ளுவில் பயின்று வந்துள்ள பா வகைகள் மூன்று**

★ கலித்துறை ➔ கலிப்பா ➔ சிந்து

3) **திருமலை முருகன் பள்ளுவில் இயற்கை வளங்கள் பாடப்பட்டுள்ள இடங்கள் யாவை?**

**திருமலை முருகன் பள்ளுவில் இயற்கை வளங்கள் பாடப்பட்டுள்ள இடங்கள்**

★ வடகரை நாடு (திருமலை) ➔ தென்கரை நாடு (குற்றாலம்)

4) **பள்ளுச் சிற்றிலக்கியத்தின் நோக்கம் (உட்கோள்) யாது?**

**பள்ளுச் சிற்றிலக்கியத்தின் நோக்கம்**

★ உழவர், உழத்தியரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை எளிய நடையில் கூறுவது.

★ இலக்கிய நயம்பட சிறப்பாக வெளிப்படுத்துவது.

**சிறுவினா**

1) **திருமலை முருகன் பள்ளு கூறும் மாடுகளின் வகைகள் யாவை?**

**திருமலை முருகன் பள்ளு கூறும் மாடுகளின் வகைகள்**

➔ காரி ➔ தொந்திக்காளை ➔ மால்காளை ➔ மறை காளை

➔ மயிலைக்காளை ➔ மேழைக்காளை ➔ செம்மறையான் ➔ கருமறையான்

2) **திருமுருகன் பள்ளு கூறும் உழவுக்கருவிகள் யாவை?**

**திருமுருகன் பள்ளு கூறும் உழவுக்கருவிகள்**

★ கலப்பை ➔ நுகம் ➔ பூட்டு ➔ கயிறு ➔ வள்ளைக்கை

★ உழக்கோல் ➔ கொழுகயமரம் ➔ மண்வெட்டி ➔ வடம்

3) **கண்காணி, கண்காணம் - பொருள் தருக**

**கண்காணி, கண்காணம் - பொருள் விளக்கம்.**

**கண்காணி:**

★ பேச்சுவழக்கில் கங்காணி என்று பயன்படுத்தப்படுகிறது.

★ கண்காணி என்பது நெல் ஒப்படியை மேற்பார்வை செய்பவரைக் குறிக்கும்.

**கண்காணம்:**

★ கண்காணம் என்பது பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல்.

★ கண்காணம், கங்காணம் என்று வழங்கப்படுகிறது.

★ இதன் பொருள் நாள்தோறும் வயலில் நெல் அறுவடை செய்து களத்தில் ஒப்படி செய்யப்படும் நெல் அளவு என்பதாகும்.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) திருமலை முருகன் பள்ளு கூறும் நெல் வகைகள் யாவை?**

**திருமலை முருகன் பள்ளு கூறும் நெல் வகைகளாவன:**

★ பைங்குழலாள், சிறைமீட்டான், சீதா போகம், கருங்சூரை, ரங்கஞ்சம்பர், பூம்பாளை, மணல்வாரி, குற்றாலன், அதிக்கிராதி, பாற்கடுக்கன், அரிக்ராவி, கற்பூரப்பாளை, முத்துவெள்ளை, காடை கழுத்தன், புழுகு சம்பர், மிளகு சம்பர், சொரி குரம்பை, பனை முகத்தான், புத்தன்வாரி.

**5) திருமலை முருகன் பள்ளு குறிப்பு வரைக**

**திருமலை முருகன் பள்ளு குறிப்பு வரைதல்**

★ ஆசிரியர் - பெரியவன் கவிராயர் ஆவார்.

★ பெரியவன் கவிராயர் காலம் - 18ஆம் நூற்றாண்டு.

★ பண்புளிப்பட்டணம் அமைந்த மாவட்டம் - திருநெல்வேலி மாவட்டம்

★ பண்புளிப்பட்டணத்தின் இன்றைய பெயர்கள் - பண்பை, பண்பொழில்

★ பண்பொழிலில் உள்ள சிறுகுன்றின் பெயர் - திருமலை.

★ திருமலையில் உள்ள கடவுள் - முருகன்.

★ திருமலை முருகன் பள்ளு பாட்டுடைத் தலைவன் - முருகன்

★ பாடலின் பாவகைகள் - கலித்துறை, கலிப்பர், சிந்து ஆகியன.

★ திருமலை முருகன் பள்ளு வேறு பெயர்கள் - பள்ளிசை திருமலை அதிபர் பள்ளு

## ஐங்குறுநூறு

**குறுவினா**

**1) ஐங்குறுநூறு கூறும் முல்லை நிலத்தில் பூத்துள்ள மழைக்கால மலர்கள் யாவை?**

**ஐங்குறுநூறு கூறும் முல்லை நிலத்தில் பூத்துள்ள மழைக்கால மலர்கள்**

★ காயா ➔ கொன்றை ➔ நெய்தல் ➔ முல்லை ➔ தளவம் ➔ பிடவம்

**சிறுவினா**

**1) ஐங்குறுநூறு - குறிப்பு வரைக**

**ஐங்குறுநூறு - குறிப்பு வரைதல்**

★ ஐங்குறுநூறு - ஐந்து + குறுமை + நூறு

★ நூல் அடி வரையறை - 3 அடி சிற்றெல்லை 6 அடி பேரெல்லை

★ கடவுள் வாழ்த்து பாடியவர் - பெருந்தேவனார் (பாரதம் என்னும் நூல் பாடியவர்)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ பா வகை - ஆசிரியப்பா (அகவல்பா)

★ பாடல்கள் - ஐந்நூறு

★ பாடல் அமைப்பு - ஒவ்வொரு திணைக்கும் 100 பாடல்

★ தொகுத்தவர் - புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்.

★ தொகுப்பித்தவர் - யானைகட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை

**2) ஐங்குறுநூற்றின் ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள் யார் யார்?**

**ஐங்குறுநூற்றின் ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள்**

| திணை | ஆசிரியர் | நினைவுக்குறிப்பு (MEMORY TECHNIC) தேர்வில் பயன்படுத்த வேண்டாம். |
|---|---|---|
| குறிஞ்சி (மலை) | கபிலர் | குறிஞ்சிமலையில் கபிலர் சிலை உள்ளது |
| முல்லை (காடு) | பேயனார் | காட்டில் பேய் உள்ளது. |
| மருதம் (வயல்) | ஓரம்போகியார் | வயலில் ஓரம்போ! |
| நெய்தல் (முந்நீர்+கடல்) | அம்மூவனார் | ஆற்றுநீர் + ஊற்றுநீர் + மழைநீர் = முந்நீர் இம்மூன்றை எழுதியவர் அம்மூவனார் |
| பாலை (பாலைவனம்) | ஓதல் ஆந்தை யார் | பாலைவனத்தில் ஆந்தை சுற்றியது. |

**3) பருவங் குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு( மழைக்காலம்) முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்ததாவது யாது?**

**பருவங் குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு( மழைக்காலம்) முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்ததாவது**

**தலைவனின் சொல்லும் செயலும்**

★ பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்றான் தலைவன்.

★ அவன் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற காலம் கார்காலம்.

★ கார்காலத்திற்கு முன்பே வீட்டிற்குத் திரும்புகிறான்.

★ தலைவியிடம் தான் வந்துவிட்டதை உணர்த்த நினைக்கிறான்.

**தலைவியைப் போற்றல்**

★ பெரிய அழகிய கண்களையுடையவளே !

★ அழகிய மாலை நேரம் வந்துவிட்டது.

★ முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன.

★ அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து நீ ஆட வேண்டும்.

★ ஆகவே, விரைந்து வா' என்று தலைவியை அழைக்கிறான்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

**1) பருவங் (கார்காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது - துறை விளக்கம் தருக.**

**துறை விளக்கம்**

★ பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்ற தலைவன், தான் வருவதாகக் கூறிச் சென்ற கார்காலம்(மழைக்காலம்) முடியும் முன்பே வந்துவிட்டதைத் தலைவிக்கு உணர்த்த நினைத்து தலைவியிடம் உரைத்தது'

**சான்று பாடல்:**

**ஐங்குறுநூற்று**

**"காயா கொன்றை நெய்தல் முல்லை**
**போதவிழ் தளவோடு பிடவலர்ந்து கவினிப்**
**பூவணி கொண்டன்றால் புறவே**
**பேரமர்க் கண்ணி ஆடுகளம் விரைந்தே" - பேயனார்**

**சான்று விளக்கம்:**

★ பெரிய அழகிய கண்களையுடையவளே !

★ அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய பூக்கள் கொட்டிக் கிடக்கின்றன.

★ பூக்களின் அழகைக் கண்டு மகிழ்ந்து ஆட, விரைந்து வா! எனத் தலைவன் தலைவியை அழைத்தான்.

★ இவ்வாறு தலைவன் மழைக்காலம் முடியும் முன்பே வந்துவிட்டதை உணர்த்துகின்றான்.

**துறைப்பொருத்தம்**

★ தலைவன் மழைக்கால மலர்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட விரைந்து வா என்று தலைவியை அழைத்துத் தான் கார்காலம் முடியும் முன்பே வந்ததை உணர்த்துவது இத்துறைக்குப் பொருந்தி வருகிறது

## காவடிச்சிந்து

குறுவினா

**1) காவடிச் சிந்தின் தந்தை யார் ? அவர் அவ்வாறு அழைக்கப்படுவதற்கான காரணத்தைக் கூறு ?**

★ காவடிச் சிந்தின் தந்தை - அண்ணாமலையார் ஆவார்.

**காரணம்**

★ தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால் அண்ணாமலையார் காவடிச்சிந்தின் தந்தை என அழைக்கப்பட்டார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) அண்ணாமலையாரின் சிறப்புகள் யாவை ?**

**அண்ணாமலையாரின் சிறப்புகள்**

★ காவடிச் சிந்துக்குத் தந்தை எனப் போற்றப்பட்டார்.

★ ஊற்றுமலை இருதயாலய மருதப்பத் தேவரின் அரசவைப்புலவர்.

★ அரசவைப்புலவராக அவர் பதவி பெற்றபோது அவருடைய வயது 18 ஆகும்.

**3) அண்ணாமலையார் படைத்த பனுவல்கள் யாவை ?**

**அண்ணாமலையார் படைத்த பனுவல்கள் ( நூல்கள்)**

★ காவடிச்சிந்து ➔ வீரைத் தலபுராணம்

★ வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம் ➔ சங்கரன் கோவில் திரிபந்தாதி

★ கருவை மும்மணிக்கோவை ➔ கோமதி அந்தாதி

**4) முருகன் கோவில் எவ்வாறு திகழ்வதாக அண்ணாமலையார் கூறுகின்றார்?**

★ கோவில் கோபுரத்தின் தங்கக் கலசம் தேவலோகத்தைவிட உயர்ந்து ஒளிவீசுகின்றது.

★ அவ் வொளி உலகில் உள்ள எல்லோரின் கண்களையும் கூசச் செய்கின்றது.

★ கடல் மீன் மகர உருவம் எடுத்ததைப் போல கோபுரக் கொடிகள் இருக்கின்றன.

## குறுந்தொகை

**குறுவினா**

**1) குறுந்தொகை எவ்வகை இலக்கியம்? ஏன்?**

**குறுந்தொகை**

★ குறுந்தொகை அகத்திணை இலக்கியம்

★ அன்பும் அறனும் விளையும் திருமண வாழ்வில் இரு மனங்களும் இணையும் செய்தியே முழுவதும் இடம்பெறும் ஆகையால் இ∴து அகத்திணை இலக்கியமாகும்.

**2) குறுந்தொகைப்பாடலின் ஆசிரியர் யார்? சங்க இலக்கியத்தில் அவரின் பங்களிப்பு யாது?**

★ குறுந்தொகைப் பாடலின் ஆசிரியர் - வெள்ளிவீதியார்.

★ சங்கக் காலப் பெண்பால் புலவர்

★ சங்க இலக்கியத்தில் அவர் 13 பாடல்களைப் பாடியுள்ளார்.

**3) குறுந்தொகைத்தலைவன் பரிசுப்பொருட்களை யார் மூலம் அனுப்பி வைத்தான்?**

**குறுந்தொகைத்தலைவன் பரிசுப்பொருட்களை அனுப்பிய முறை.**

★ தலைப்பாகை அணிந்து கையில் தண்டுடன் இருக்கும் முதியவர்கள் பரிசினைக் கொண்டு சென்றனர்.

★ பெண் வீட்டார் போதும் போதும் என்னும் அளவிற்கு பரிசுப்பொருட்களை அவைக்கு அனுப்பினான் தலைவன்.

**4) நன்று நன்று எனக் கூறி மகிழ்ச்சி அடைந்தவர்கள் யார் ? ஏன் அவ்வாறு கூறினார்கள்?**

★ நன்று நன்று எனக் கூறி மகிழ்ச்சி அடைந்தவர்கள் பெண் வீட்டார் (தலைவியின் உற்றார் உறவினர்கள்)

**காரணம்**

★ பெண் வீட்டார் போதும்! போதும்!' என்னும் அளவிற்குத் தலைவன் அவர்களுக்குப் பரிசுப் பொருட்களை அவையில் அனைவர்முன் அளித்ததால் அவர்கள் நன்று நன்று எனக் கூறி மகிழ்ச்சி அடைந்தார்கள்.

**5) குறுந்தொகை இலக்கியத்தில் அவையில் இருந்த ஊர்ப்பெரியவர்களைப் பற்றித் தோழி தலைவியிடம் வினவியது யாது?**

**தோழி தலைவியிடம் வினவிய வினா**

★ முற்காலத்தில், நம்முடைய ஊரில் பரிசுத்தொகைப் போதவில்லை எனப் பிரித்து விடப்பட்ட தலைவனும் தலைவியும் பின்பு அதிகப் பரிசுத்தொகை கிடைத்தவுடன் அவர்களைச் சேர்த்து வைப்போர் இருந்தார்களோ? என்னவோ?

## புறநானூறு

**குறுவினா**

**1) தமிழர்களின் அடிப்படைப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் இரண்டினைப் புறநானூற்றின் வழியாகக் கூறுக.**

**தமிழர்களின் அடிப்படைப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள்**

★ தமக்காக உழைக்காமல் பிறருக்காக பெரும் முயற்சியுடன் உழைப்பார்கள்.

★ அமிழ்தமே தங்களுக்குக் கிடைத்தாலும் தனித்து உண்ண மாட்டார்கள்.

**2) இவ்வுலகம் இன்றும் இயங்குவதற்குக் காரணமாக பரிதி இளம்பெருவழுதி கூறும் காரணங்கள் நான்கினைப் பட்டியலிடுக.**

**இவ்வுலகம் இன்றும் இயங்குவதற்குக் காரணம் - பரிதியார் பட்டியல்**

★ யாரையும் வெறுக்காத மக்கள். ➔ சோம்பலின்றி உழைக்கும் மக்கள்

★ அஞ்ச வேண்டிய பழிபாவங்களுக்கு அஞ்சும் மக்கள்

★ புகழுக்கு உயிரையும் கொடுப்பர்; பழிக்கு உலகம் கிடைத்தாலும் ஏற்காத மக்கள்.

## பிள்ளைக்கூடம்

**குறுவினா**

**1) இரா. மீனாட்சியின் படைப்புகள் யாவை?**

**இரா. மீனாட்சியின் படைப்புகள்:-**

★ நெருஞ்சி ➔ சுடுபூக்கள் ➔ தீபாவளிப்பகல் ➔ மறு பயணம்

★ வாசனைப்புல் ➔ உதயநகரிலிருந்து ➔ கொடி விளக்கு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) கவிஞர் இரா. மீனாட்சி விரும்புவது யாது?**

**கவிஞர் இரா. மீனாட்சி விரும்புவது**

★ தாய்மொழியில் கல்வி கற்க வேண்டும்.

★ உலக மக்கள் அனைவரையும் தன் உறவாக எண்ணி வாழ வேண்டும்.

★ இவ்வாறு, கவிஞர் இரா. மீனாட்சி விரும்புகிறார்.

**3) பிள்ளைக்கூடத்தில் காலையிலும் மாலையிலும் செய்ய வேண்டியவை யாவை?**

**பிள்ளைக்கூடத்தில் காலையிலும் மாலையிலும் செய்ய வேண்டியவை**

★ காலையில் மயிலுடன் நடக்க வேண்டும்.

★ மாலையில் மரங்களின் முதுகினை வருடிவிட வேண்டும்.

**4) பிள்ளைக்கூடத்தில் எதன் வேகத்தை அளவிடச் சொல்கிறார்கள்?**

**பிள்ளைக்கூடத்தில் அளவிடச் சொல்வது**

★ வெட்டவெளியில் ஒரு தட்டில் சர்க்கரைப்பண்டத்தை வைக்கிறார்கள்.

★ அப்பண்டத்தை உண்பதற்காக எறும்புகள் வருகின்றன.

★ அந்த எறும்புகளின் வேகத்தை அளவிடச் சொல்கிறார்கள்.

**5) பிள்ளைக்கூடத்தில் யாருடன் சேர்ந்து இசைக்கவும், ஆடிடவும், பேசிடவும் வேண்டும் என்று கவிஞர் இரா. மீனாட்சி கூறுகின்றார்?**

**இசைத்திட வேண்டும்**

★ மாமரத்தில் அமர்ந்திருக்கும் குயிலுடன் இணைந்து இசைத்திட வேண்டும்.

**ஆட வேண்டும்**

★ வண்ணத்துப்பூச்சியுடன் பறந்து ஆடித்திரிய வேண்டும்.

**பேச வேண்டும்**

★ சின்ன சின்ன செடிகளுடன் உற்சாகமாய்ப் பேச வேண்டும்.

## நெடுவினா

**1) பிள்ளைக்கூடம் என்னும் இயற்கைப் பள்ளிக்கூடத்தில் செய்ய வேண்டிய செயல்களாக கவிஞர் இரா. மீனாட்சி கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.**

**முன்னுரை**

★ பிள்ளைகள் கல்விக் கற்கும் இடம் இயற்கையான சூழலில் இருக்க வேண்டும்.

★ அவர்களின் இளமையின் சிறகை முறிக்காதவையாக இருக்க வேண்டும்.

★ இக்கருத்தை இரா. மீனாட்சி தன் பிள்ளைக்கூடம் கவிதையில் வெளிப்படுத்துகிறார்.



www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**எண்ண வேண்டும்**

★ பிள்ளைக்கூடத்தில் ஐம்பதாண்டு பழமையான வேப்பமரம் உள்ளது.

★ அம்மரம் கோடையில் உதிர்க்கும் பூக்களை எண்ண வேண்டும்.

**குறிக்க வேண்டும்**

★ ஓணான் ஒரு கருங்கல் தூணில் அமர்ந்து தியானம் செய்கிறது.

★ ஓணான் தியானம் செய்யும் நேரத்தைக் குறித்து வைக்க வேண்டும்.

**அளக்க வேண்டும்**

★ வெட்டவெளியில் ஒரு தட்டில் சர்க்கரைப்பண்டம் உள்ளது.

★ அதை உண்பதற்காக எறும்புகள் வருகின்றன.

★ அந்த எறும்புகள் வரும் வேகத்தை அளக்க வேண்டும்.

**ஓவியம் தீட்ட வேண்டும்**

★ மழை பெய்தால், வட்ட வடிவத்தில் உள்ள மேடையில் நீர்த்துளிகள் வீழ்ந்து வழிகின்றன.

★ வீழ்கின்ற நீர்த்துளிகளை ஓவியமாய்த் தீட்ட வேண்டும்.

★ செம்மண்ணைத் தாளாகக் கொண்டு, வண்ணக்குச்சிகளால் ஓவியம் தீட்ட வேண்டும்.

**காலை செயல்பாடுகள்**

★ மயிலுடன் நடக்க வேண்டும். ➔ குயிலுடன் இசைக்க வேண்டும்.

★ வண்ணத்துப்பூச்சியுடன் ஆடித்திரிய வேண்டும்.

**மாலை செயல்பாடுகள்**

★ மரங்களின் முதுகினைச் செல்லமாக வருடிவிட வேண்டும்.

★ குறுஞ்செடிகளுடன் பேச வேண்டும்.

**கவிஞரின் விருப்பம்**

★ தாய்மொழியில் கல்வி கற்க வேண்டும்.

★ உலக மக்கள் அனைவரையும் தன் உறவாக எண்ணி வாழ வேண்டும்.

**முடிவுரை**

★ இயற்கையுடன் இணைந்த சூழலில் பிள்ளைகள் கற்கும் கல்வி எத்தகைய இன்பம் வாய்ந்தது என்பதைக் கவிஞர் இரா. மீனாட்சி தன் கவிதையில் தெளிவாகக் கூறியுள்ளார்.

**நூற்பயன்**

★ பிள்ளைக்கூடம் என்னும் இயற்கைப் பள்ளிக்கூடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அறிந்துகொண்டேன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# நற்றிணை

## குறுவினா

**1) மகள் நிலை உரைத்தல் என்ற துறையை விளக்குக.**

**மகள் நிலை உரைத்தல்:-**

★ தம் மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் கூறுவது மகள் நிலை உரைத்தல் ஆகும்.

**2) நும் பாடப்பகுதியில் உள்ள நற்றிணைப் பாடலின் உவமையைக் கூறி விளக்குக.**

**நற்றிணைப் பாடலின் உவமை:-**

★ "ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையளே."

★ ஓடுகின்ற நீரில் உள்ள நுண்மணலில் இடைவெளிகள் காணப்படும்

★ அதுபோல, தலைவி ஒரு பொழுது இடைவெளி விட்டு ஒரு பொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள்.



## சிறுவினா

**1) நற்றிணை - நூற்குறிப்பு வரைக.**

**நற்றிணை:-**

★ நூற்பெயர் - நற்றிணை ➔ பாடல்களின் எண்ணிக்கை - 400

★ அடி வரையறை - 9 - 12 ➔ தொகுத்தவர் - பன்னாடு தந்த மாறன் வழுதி

★ கடவுள் வாழ்த்து பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்

**சிறப்பு:-**

★ நற்றிணை, எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் பாடப்படும் நூல் ஆகும்.

★ நல்ல என்ற சிறப்பு அடைமொழியைப் பெற்ற சிறப்பினை உடையது.

**2) தலைவியின் விளையாட்டுத் தன்மையாக நற்றிணைக் கூறுவது யாது?**

**தலைவியின் விளையாட்டுத் தன்மை:-**

★ பொற்கலத்தில் தேன் கலந்த பால் உணவை ஏந்தியபடி செவிலியர்கள் தலைவியை உண்ணுமாறு கூறுவர்.

★ அவள் உண்பதற்கு மறுத்தால் அடிப்பதற்காக, பூச்சுற்றிய மென்மையான சிறுகோலை வைத்திருப்பர்.

★ வீட்டின் முற்றத்திலுள்ள பந்தலின் கீழ் ஓடும் அவளை உண்ணும்படி கூறி செல்லமாக அக்கோலால் அடிப்பர்.

★ ஆனால் அவளோ, உண்ண மறுத்து, முத்துப்பரல்கள் பெய்த பொற்சிலம்பு ஒலிக்க அங்குமிங்கும் ஓடுவாள்.

★ செவிலியர் அவளைப் பின்தொடர முடியாமல் நடை தளர்ந்து நிற்பர்.

**3) தலைவியைக் கண்டு செவிலி வியந்த நிகழ்வை நற்றிணை வழி நின்று விளக்குக.**

**தலைவியைக் கண்டு செவிலி வியந்த நிகழ்வு:-**

★ தலைவி, செல்வ வளமிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள்.

★ ஆனால், இன்று தான் மணந்து கொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்று வாழ்ந்தாள்.

★ எனினும், தன் தந்தையின் வீட்டில் உள்ள வளமான வாழ்வினைப் பற்றி அவள் எண்ணியதில்லை.

★ ஓடுகின்ற நீரில் உள்ள நுண்மணலில் இடைவெளி இருக்கும்.

★ அதுபோல ஒரு பொழுது இடைவெளி விட்டு ஒரு பொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள், தலைவி.

★ பிள்ளைத்தன்மை மாறாத அவள், வறுமையான சூழலிலும் எப்படி செழுமையுடன் வாழ்வது என்ற கல்வியை எங்கு கற்றுக் கொண்டாளோ? என்று செவிலித்தாய் வியப்படைகின்றாள்.

## தொல்காப்பியம் - சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல்

**குறுவினா**

**1) தொல்காப்பியத்தில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?**

**தொல்காப்பியத்திலுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை:-**

★ தொல்காப்பியத்தில் மூன்று அதிகாரங்கள் உள்ளன. அவை:

★ எழுத்ததிகாரம் ➔ சொல்லதிகாரம் ➔ பொருளதிகாரம்

**2) தொல்காப்பியத்தின் பழமையான உரையாசிரியர்கள் பெயரைக் குறிப்பிடுக.**

**தொல்காப்பியத்தின் பழமையான உரையாசிரியர்கள்:-**

★ இளம்பூரணர் ➔ நச்சினார்க்கினியர் ➔ கல்லாடனார்

★ சேனாவரையர் ➔ தெய்வச்சிலையார் ➔ பேராசிரியர்

**3) வழக்கு எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**வழக்கு:-**

★ வழக்கு இரண்டு வகைப்படும். அவை:

★ உலக வழக்கு ➔ நூல் வழக்கு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

**1) சிறப்புடைய மாணவர்களின் இயல்புகளாக நும் பாடப்பகுதியில் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொகுத்தெழுதுக.**

**சிறப்புடைய மாணவர்களின் இயல்புகள்:-**

★ சிறப்புடைய மாணவர் உலக வழக்கு, நூல் வழக்கு இலக்கணங்களை ஆசிரியர்களிடம் குற்றமின்றி அறிவர்.

★ பாடங்களைப் போற்றிக் கற்பர்.

★ ஆசிரியர்களிடம் கற்ற பாடங்களை மீண்டும் நினைத்துப் பயிற்சி பெறுவர்.

★ ஆசிரியரை அணுகிப் பாடக்கருத்துகளைக் கேட்டுத் தெளிவு அடைவர்.

★ ஆசிரியர்களைப் போன்று உயர்சிந்தனை உடையவர்களுடன் கலந்துரையாடிப் பயிற்சி பெறுவர்.

★ தங்களது ஐயங்களை ஆசிரியர்களிடம் வினவித் தெளிவுறுவர்.

★ அவ்வாறு தெளிவுற்ற கருத்துகளைப் பிறர்க்கு உணர்த்தித் தெளிவடையச் செய்வர்.

**2) மாணவர்கள் அறியாமையிலிருந்து விலகிச் சிறந்து விளங்கும் வழியாக தொல்காப்பியர் கூறுவது யாது?**

**மாணவர்கள் அறியாமையிலிருந்து விலகிச் சிறந்து விளங்கும் வழி:-**

★ ஆசிரியர் கூறும் கருத்துகளை இருமுறை கேட்கும் மாணவர்கள் நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன் பெறுவர்.

★ மூன்றுமுறை கேட்போர் பாடக்கருத்துகளைப் பிறர்க்கு எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவர்.

★ இத்தன்மையில் பாடம் கேட்கும் மாணவர்கள் அறியாமை விலகிச் சிறந்து விளங்குவர்.

## சீறாப்புராணம்

குறுவினா

**1) சீறாப்புராணம் பெயர்க்காரணம் கூறுக.**

**சீறாப்புராணம்:-**

★ சீறா' என்பது 'சீறத்' என்னும் அரபுச் சொல்லின் திரிபு ஆகும்.

★ சீறத்' என்பதற்கு 'வாழ்க்கை' என்று பொருள்.

★ புராணம்' என்பதற்கு 'வரலாறு' என்று பொருள்.

★ நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் நூல் சீறாப்புராணம் ஆகும்.

**2) சீறாப்புராணத்தில் எத்தனை காண்டங்கள் உள்ளன?**

**சீறாப்புராணத்தில் உள்ள காண்டங்கள்:-**

★ சீறாப்புராணம் மூன்று காண்டங்களையும் 92 படலங்களையும் உடையது.

★ விலாதத்துக் காண்டம் ➔ நுபுவ்வத்துக்காண்டம் ➔ ஹிஜிறத்துக்காண்டம்

**3) சின்னச்சீறா - குறிப்பு வரைக.**

**சின்னச்சீறா:-**

★ சீறாப்புராணத்தைப் பாடி முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்தினார்.

★ எனவே, பனு அகமது மரைக்காயர் அதைப் பாடி முடித்தார்.

★ இவர் பாடிய பகுதி சின்னச்சீறா என்று அழைக்கப்படுகிறது.

**4) உமறுப்புலவர் குறித்தெழுதுக.**

**உமறுப்புலவர்:-**

★ பெயர் - உமறுப்புலவர்

★ பணி - எட்டயபுரத்தின் அரசவைப் புலவர்

★ ஆசிரியர் - கடிகை முத்துப் புலவர்

★ இயற்றிய நூல்கள் - நபிகள் நாயகம் முதுமொழிமாலை

★ ஆதரித்த வள்ளல்கள் - சீதக்காதி, அப்துல்காசிம் மரைக்காயர்

**5) ஹிஜிறத்துக் காண்டம் - குறிப்பு வரைக.**

**ஹிஜிறத்துக் காண்டம்:-**

★ ஹிஜிறத்' என்ற அரபுச் சொல்லுக்கு 'இடம் பெயர்தல்' என்று பொருள்.

★ நபிகள் நாயகம் மக்காவைவிட்டு மதீனா நகரத்திற்குச் சென்றதைக் கூறும் பகுதி ஹிஜிறத்துக் காண்டம்' ஆகும்.

**6) சீறாப்புராணம் இயற்றுவதற்கு உதவிய வள்ளல்கள் யாவர்?**

**சீறாப்புராணம் இயற்றுவதற்கு உதவிய வள்ளல்கள்:-**

★ வள்ளல் சீதக்காதி ➔ அப்துல் காசிம் மரைக்காயர்

**7) மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டவை எவை?**

**மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டவை:-**

★ பகை ➔ வறுமை ➔ நோய்

**8) மதீனா நகரத்தில் பூத்திருந்தவை எவை?**

**மதீனா நகரத்தில் பூத்திருந்தவை:-**

★ தானம் ➔ ஒழுக்கம் ➔ தவம் ➔ ஈகை ➔ மானம்

**சிறுவினா**

**1) சீறாப்புராணம் - நூல் குறிப்பு வரைக.**

**சீறாப்புராணம் நூல் குறிப்பு:-**

★ இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் முதன்மையானதாக விளங்குவது சீறாப்புராணம்.

★ சீறா' என்பது 'சீறத்' என்னும் அரபுச் சொல்லின் திரிபு ஆகும். இதற்கு வாழ்க்கை' என்று பொருள்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



★ புராணம்' என்பதற்கு 'வரலாறு' என்று பொருள்.

★ நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் நூல் சீறாப்புராணம் ஆகும்.

★ இந்நூலை இயற்றியவர் உமறுப்புலவர்.

★ சீறாப்புராண விலாத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜிறத்துக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும் 92 படலங்களையும் 5027 பாடல்களையும் கொண்டது.

★ இந்நூலைப் பாடி முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்தினார்.

★ எனவே, பனு அகமது மரைக்காயர் என்பவர் அதைப் பாடி முடித்தார்.

★ இவர் பாடிய பகுதி சின்னச்சீறா என்று அழைக்கப்படுகிறது.

**2) வதுவையின் மனையென இருந்த மாநகர் - விளக்குக.**

**வதுவையின் மனையென இருந்த மாநகர்:-**

★ மதீனா நகரத்தில் வெண்சுண்ணச் சாந்தினைக் கொண்ட மாளிகைகள் ஒளிர்ந்தன.

★ வீதிகளில் புதிய பூக்கள் சிந்திக் கிடந்தன.

★ உறவினர்களுக்குக் கொடுக்கும் விருந்தானது இனிமையுடன் இருந்தது.

★ இதனால், மதீனா நகரம் திருமண வீட்டைப் போன்று பொலிவுடன் காட்சியளித்தது.

**3) மதீனா நகரில் பூத்திருந்தவை, காய்த்திருந்தவை, பழுத்திருந்தவை யாவை?**

**மதீனா நகரில் பூத்திருந்தவை:-**

★ தானம் ➔ ஒழுக்கம் ➔ தவம் ➔ ஈகை ➔ மானம்

**மதீனா நகரில் காய்த்திருந்தவை:-**

★ திண்ணிய வலிமை ➔ வெற்றி ➔ குறைவற்ற ஊக்கம்

**மதீனா நகரில் பழுத்திருந்தவை:-**

★ தீன் எனும் செல்வம்

## அகநானூறு

**குறுவினா**

**1) அகநானூறு எத்தனைப் பிரிவுகளைக் கொண்டது? அவை யாவை?**

**அகநானூற்றின் பிரிவுகள்:-**

★ களிற்றியானை நிரை ➔ மணிமிடைப் பவளம் ➔ நித்திலக்கோவை

**2) நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள அகநானூற்றுப் பாடலின் ஆசிரியர், திணை, துறை ஆகியவற்றைக் குறிப்பிடுக.**

**ஆசிரியர், திணை, துறை:-**

★ ஆசிரியர் - வீரை வெளியன் தித்தனார் ➔ திணை - குறிஞ்சி

★ துறை - இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) "குறமகள் காக்கும் ஏனல் புறமும் தருதியோ? வாழிய மழையே" - இவ்வடிகளில் அமைந்துள்ள இறைச்சிப் பொருள் யாது?**

**இறைச்சிப் பொருள்:-**

★ தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் வரலாம் என்பது இவ்வடிகளில் உள்ள இறைச்சிப் பொருள் ஆகும்.

**4) ஐந்திணைக்குரிய பெரும்பொழுதுகள் யாவை?**

**ஐந்திணைக்குரிய பெரும்பொழுதுகள்:-**

★ குறிஞ்சி - கூதிர், முன்பனி ➔ முல்லை - கார்

★ மருதம் - கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்

★ நெய்தல் - கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்

★ பாலை - இளவேனில், முதுவேனில்

**5) ஐந்திணைக்குரிய சிறுபொழுதுகளைக் கூறுக?**

**ஐந்திணைக்குரிய சிறுபொழுதுகள்:-**

★ குறிஞ்சி - யாமம் ➔ முல்லை - மாலை ➔ மருதம் - காலை

★ நெய்தல் - எற்பாடு ➔ பாலை - நண்பகல்

**6) ஐந்திணைக்குரிய உரிப்பொருள்கள் யாவை?**

**ஐந்திணைக்குரிய உரிப்பொருள்கள்:-**

★ குறிஞ்சி - புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

★ முல்லை - இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

★ மருதம் - ஊடலும் ஊடல் நிமித்தமும்

★ நெய்தல் - இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

★ பாலை - பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

**7) குறமகள் எவ்வாறு தினைப்புனம் காத்தாள்?**

**குறமகள் தினைப்புனம் காத்தல்:-**

★ தழலை, தட்டை ஆகிய கருவிகளில் ஒலியெழுப்பிப் பறவைகளை ஓட்டிக் கொண்டு,

★ தோழியர் கூட்டத்தோடு மெல்ல மெல்ல நடந்து குறமகள் தினைப்புனம் காப்பாள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**சிறுவினா**

**1) அகநானூற்றில் பாடல் அமைப்பு முறைப் பற்றி எழுதுக.**

**அகநானூற்றில் பாடல் அமைப்பு முறை:-**

★ அகநானூற்றில் தொகுப்பு முறையில் ஓர் ஒழுங்கு உண்டு.

| திணை | பாடல் வரிசை | எண்ணிக்கை |
|---|---|---|
| பாலை | 1,3,5,7 ..... | 200 |
| குறிஞ்சி | 2,8,12,18 .... | 80 |
| முல்லை | 4,14,24,34 ...... | 40 |
| மருதம் | 6,16,26,36 ...... | 40 |
| நெய்தல் | 10,20,30,40 ..... | 40 |

**2) குறிஞ்சித் திணைக்குரிய முதற்பொருள் மற்றும் கருப்பொருள்களைக் குறிப்பிடுக.**

**முதற்பொருள்:-**

★ நிலமும் பொழுதும் முதற்பொருள் ஆகும்.

★ குறிஞ்சித் திணைக்குரிய நிலம் - மலையும் மலைசார்ந்த நிலமும்

★ பெரும்பொழுது - கூதிர், முன்பனி

**கருப்பொருள்:-**

★ தெய்வம் - சேயோன் ➔ மக்கள் - குறவர், குறத்தியர்

★ விலங்கு - சிங்கம், புலி, கரடி, யானை ➔ புள் (பறவை) - கிளி, மயில்

★ ஊர் - சிறுகுடி ➔ நீர் - அருவி நீர்

★ பூ - குறிஞ்சிப்பூ, வேங்கைப்பூ ➔ மரம் - சந்தனம், தேக்கு

★ உணவு - மலைநெல், மூங்கில் அரிசி ➔ பறை - தொண்டகப் பறை

★ யாழ் - குறிஞ்சி யாழ் ➔ பண் - குறிஞ்சிப் பண்

★ தொழில் - மலை நெல் விதைத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல்

**நெடுவினா**

**1) தோழி தலைவனுக்குக் குறியிடத்தைக் கூறும் நயத்தை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.**

**தோழி தலைவனுக்குக் குறியிடம் கூறல்:-**

★ தோழி மேகத்திடம் கூறுவதைப் போல தலைவனுக்குக் குறியிடத்தைக் கூறுகின்றாள்.

**மேகத்தின் தன்மை:-**

★ மேகக் கூட்டங்கள் பெருங்கடலில் நீரை முகந்துகொண்டு செல்லுகின்றன.

★ வானம் இருளும்படி உலாவுகின்றன. ★ போர் முரசம்போல முழங்குகின்றன.

★ போர்வீரன் சுழற்றும் வாள்போல மின்னுகின்றன.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**மேகத்திடம் வினவுதல்:-**

★ முழக்கமும் மின்னலுமாக நாள்தோறும் வெற்று ஆரவாரம் செய்கிறாயா அல்லது மழை பொழிவாயா? என்று தோழி மேகத்திடம் வினவுகிறாள்.

**தினைப்புனம் காக்கும் தலைவி:-**

★ வேங்கை மலரை அணிந்து கொண்டிருக்கும் தோழியர் சூழ தலைவி தினைப்புனம் காத்துக்கொண்டிருப்பாள்.

★ தழலை, தட்டை ஆகியவற்றால் ஒலி எழுப்பிப் பறவைகளை ஓட்டிக்கொண்டிருப்பாள்.

★ அவள் அசோக இலைகளால் ஆடை அணிந்திருப்பாள்.

★ குறமகள் அப்படித் தினைப்புனம் காக்கும் பகுதியிலும் நீ மழை பொழிவாயா? என்கிறாள் தோழி

**இறைச்சிப் பொருள்:-**

★ தலைவி தினைப்புனம் காத்துக்கொண்டிருக்கிறாள், அவளைக் காண விரும்பும் தலைவன் அங்கு சென்றால் காணலாம் என்பது இப்பாடலில் உள்ள இறைச்சிப் பொருள் ஆகும்.

**நூற்பயன்:-**

★ உள்ளுறைப் பொருள் அமைந்த சங்க இலக்கியப் பாடலைப் படிக்கும் முறையை அறிந்துகொண்டேன்.

## ஆத்மாநாம் கவிதைகள்

**குறுவினா**

**1) அணில் காணும் கனவாக ஆத்மாநாம் குறிப்பிடுவது யாது?**

**அணில் காணும் கனவாக ஆத்மாநாம் குறிப்பிடுவது:-**

★ உணவு ★ உறக்கம்

**2) அணில் இரவு எங்கே உறங்குகிறது என்று ஆத்மாநாம் கூறுகிறார்?**

**அணில் இரவில் உறங்குமிடம்:-**

★ மரக்கிளைப் படுகை ★ ஆற்றுமணல் சரிவு

★ சதுர வட்டக் கோண மயக்கச் சந்து பொந்து

**3) ஆத்மாநாம் இயங்கிய தளங்கள் யாவை?**

**ஆத்மாநாம் இயங்கிய தளங்கள்:-**

★ கவிதை ★ கட்டுரை ★ மொழிபெயர்ப்பு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## குற்றாலக் குறவஞ்சி

### குறுவினா

**1) குறவஞ்சி - குறிப்பு வரைக.**

**குறவஞ்சி:-**

★ குறவஞ்சி என்பது நாடக இலக்கிய வடிவமாகும்.

★ இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று.

★ இயல், இசை, நாடகம் என முத்தமிழ்க் காவியமாகத் திகழக் கூடியது.

**2) குற்றாலக் குறவஞ்சி எந்த ஊரின் சிறப்பைப் புகழ்ந்து பாடுகிறது?**

**குற்றாலக் குறவஞ்சி புகழும் ஊர்:-**

★ குற்றாலக் குறவஞ்சி, குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து பாடுகிறது.

★ இந்த ஊர் தமிழ்நாட்டின் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கிறது.

**3) திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய நூல்கள் யாவை?**

**திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய நூல்கள்:-**

★ குற்றால குறவஞ்சி ➔ குற்றால தலபுராணம் ➔ குற்றால மாலை

★ குற்றால சிலேடை ➔ குற்றாலநாதர் பிள்ளைத்தமிழ் ➔ யமக அந்தாதி

**4) சிங்கிக்கு பரிசு அளித்த நாடுகள் யாவை?**

**சிங்கிக்கு பரிசு அளித்த நாடுகள்:-**

★ சேல நாடு ➔ கலிங்க நாடு ➔ பாண்டிய நாடு ➔ கண்டிய நாடு

### சிறுவினா

**1) குறவஞ்சி இலக்கியம் குறித்து எழுதுக.**

**குறவஞ்சி:-**

★ குறவஞ்சி என்பது ஒரு வகை நாடக இலக்கிய வடிவம் ஆகும்.

★ இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று.

★ பாட்டுடைத் தலைவன் உலா வரக்கண்ட தலைவி, அவன் மீது காதல் கொள்கிறாள்.

★ தன் காதலை நினைத்து உணவு, உறக்கம் இன்றி தவிக்கிறாள்.

★ அச்சமயம், குறவர் குலத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி தலைவிக்குக் குறி கூறிப் பரிசில் பெறும் செய்தியைக் கூறுவது குறவஞ்சி இலக்கியம் ஆகும்.

★ இது குறத்திப்பாட்டு என்றும் வழங்கப்படுகின்றது.

**2) திரிகூட ராசப்பக் கவிராயர் - குறிப்பு வரைக.**

**திரிகூட ராசப்பக் கவிராயர்:-**

- ★ திரிகூட ராசப்பக் கவிராயர் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்தவர்.
- ★ சைவசமயக் கல்வியிலும் இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சி பெற்றவர்.
- ★ 'திருக்குற்றாலநாதர் கோவில் வித்துவான்' என்று சிறப்புப் பட்டம் பெற்றவர்.
- ★ குற்றாலக் குறவஞ்சி நூல், இவரின் 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுகிறது.
- ★ குற்றால தலபுராணம், குற்றால மாலை, குற்றால சிலேடை, குற்றாலநாதர் பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

**நெடுவினா**

**சிங்கன் - சிங்கி உரையாடலை விளக்குக.**

**சிங்கன்:** இத்தனை நாளாக என்னிடம் சொல்லாமல் எங்கே போனாய் சிங்கி?

**சிங்கி:** கொத்தாக மலர் சூடும் பெண்களுக்கு குறிசொல்லப் போனேன் சிங்கா!

**சிங்கன்:** உன்னைப் பார்க்கும்போது எனக்கு வியப்பாக இருக்கிறது. ஆனால், அதைச் சொல்ல பயமாக இருக்கிறது, சிங்கி.

**சிங்கி:** நீ யாருக்கும் பயப்பட வேண்டாம் சிங்கா! நீ எண்ணியதை அஞ்சாமல் சொல்.

**சிங்கன்:** உன் காலுக்கு மேலே பெரிய விரியன் பாம்பு கடித்துக் கிடக்கிறதே சிங்கி.

**சிங்கி:** அது சேல நாட்டில் நான் குறி சொன்னதற்குப் பரிசாக அளித்த சிலம்படா சிங்கா!

**சிங்கன்:** சேல நாட்டில் அளித்த சிலம்புக்கு மேலே ஏதோ திருகலும் முறுகலுமாக உள்ளதே அது என்ன சிங்கி?

**சிங்கி:** கலிங்க நாட்டில் நான் குறி சொன்னதற்குப் பரிசாக கொடுத்த தண்டையடா சிங்கா!

**சிங்கன்:** நீளமாகவும் குறுகலாகவும் மண்புழுப் போல நெளிந்து உள்ளதே அது என்ன சிங்கி?

**சிங்கி:** பாண்டிய மகளுக்கு நான் சொன்ன குறிக்கு அவள் மகிழ்ந்து அணிவித்த பாடகம்டா சிங்கா!

**சிங்கன்:** ஏன் சிங்கி உன் காலில் இறந்துபோன தவளையைக் கட்டியிருக்கிறாய்?

**சிங்கி:** குற்றாலநாதர் திருக்கோவிலில் நடனம் ஆடும் பெண்கள் எனக்குக் கொடுத்த அணிமணிக் கெச்சமடா சிங்கா!

**சிங்கன்:** உன் கால் சுண்டு விரலில் குண்டலப் பூச்சி சுருண்டு கிடப்பது ஏனடி சிங்கி?

**சிங்கி:** கண்டிய தேசத்தில் முன்னர் நான் சொன்ன குறிக்குப் பெற்ற கால் மோதிரமும் பீலியுடமா சிங்கா!



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## திருச்சாழல்

### குறுவினா

**1) சாழல் என்றால் என்ன?**

**சாழல்:-**

★ சாழல் என்பது பெண்கள் விளையாடும் ஒரு வகையான விளையாட்டு ஆகும்.

★ ஒரு பெண் வினா எழுப்ப, மற்றொரு பெண் அவ்வினாவிற்கு விடை அளிப்பதாகப் பாடுவது சாழல் ஆகும்.

**2) திருச்சாழல் - குறிப்பு வரைக.**

**திருச்சாழல்:-**

★ மொழி விளையாட்டின் மூலம் இறைவனின் பெருமை பேசும் செய்யுள் வகை திருச்சாழல் ஆகும்.

★ ஒரு பெண் இறைவனைப் பழிப்பது போலவும் இன்னொருத்தி இறைவனின் செயலை நியாயப்படுத்துவது போலவும் பாடப்படும்.

★ திருச்சாழலைப் பாடியவர் மாணிக்கவாசகர் ஆவார்.

**3) மாணிக்கவாசகர் - குறிப்பு வரைக.**

**மாணிக்கவாசகர்:-**

★ சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவர். ➔ ஊர் - திருவாதவூர்

★ பணி - அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமை அமைச்சர்

★ இயற்றிய நூல்கள் - திருவாசகம், திருக்கோவையார்

**4) தாயுமிலி தந்தையிலி யாருக்கு?**

**தாயுமிலி தந்தையிலி:-**

★ சுடுகாட்டைக் கோவிலாகவும் புலித்தோலை ஆடையாகவும் கொண்டவர் சிவபெருமான்.

★ அவருக்கு தாயும் இல்லை தந்தையும் இல்லை.

★ ஆனால் அவர் சினந்தால் உலகம் அனைத்தும் கற்பொடியாகிவிடும்.

**5) சிவபெருமான் பாற்கடல் நஞ்சை உண்டது ஏன் என்று திருச்சாழல் கூறுகிறது?**

**சிவபெருமான் பாற்கடல் நஞ்சை உண்டதற்கான காரணம்:-**

★ பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய நஞ்சை சிவபெருமான் உண்டார்.

★ இல்லையெனில், தேவர்கள் அனைவரும் அழிந்திருப்பார்கள் என்று திருச்சாழல் கூறுகிறது.

**6) தேவர்களுக்கும் மேன்மையான பொருள் எது என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்?**

**தேவர்களுக்கும் மேன்மையான பொருள்:-**

★ தன்னை வணங்குபவர்களை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்பவர் சிவபெருமான்.

★ அவரின் திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையான பொருள் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்.

**சிறுவினா**

**1) திருவாசகம் நூல் - குறிப்பு வரைக.**

**திருவாசகம்:-**

★ இயற்றியவர்: மாணிக்கவாசகர் ➔ பாடப்பட்டவர்: சிவபெருமான்

★ தொகுப்பு: சைவ திருமுறைகளில், எட்டாம் திருமுறை

★ பாடல்கள்: 658 ➔ பதிகங்கள்: 51

**சிறப்பு:**

★ 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'

★ ஜி.யு.போப் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**2) சிவபெருமானின் தன்மைகளை திருச்சாழல் வழி விளக்குக.**

**தாய் தந்தை இல்லாதவன்:-**

★ சிவபெருமானுக்கு கோவில் சுடுகாடு, ஆடை புலித்தோல் ஆகும்.

★ அவனுக்கு தாயும் இல்லை, தந்தையும் இல்லை.

★ ஆனால், அவன் சினந்தால் உலகம் அனைத்தும் கற்பொடியாகிவிடும்.

**நஞ்சை உண்டவன்:-**

★ சிவபெருமான், பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய நஞ்சை உண்டவன்.

★ அவன் உண்டிருக்கவிட்டால், தேவர்கள் அனைவரும் அன்றே அழிந்திருப்பார்கள்.

**மேன்மையான பொருள்:-**

★ சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவன்.

★ அவன் தன்னை வணங்குபவர்களை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்பவன்.

★ சிவபெருமானின் திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையான பொருளாகும்.

## புரட்சிக்கவி

**குறுவினா**

**1) மக்களாட்சிக்கு முன்புவரை அரசனிடம் குவிந்து இருந்தவை யாவை?**

**அரசனிடம் குவிந்து இருந்தவை:-**

★ சட்டம் ➔ நிருவாகம் ➔ நீதி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகள் யாவை?**

**மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகள்:-**

★ சுதந்திரம் ➔ சமத்துவம் ➔ சகோதரத்துவம்

**3) உதாரன், அமுதவல்லியைப் பற்றி மன்னன் கூறியது யாது?**

**உதாரன், அமுதவல்லி பற்றி மன்னன் கூறியது:-**

★ உதாரன் பார்வையற்றவன் என்று அமுதவல்லியிடமும்,

★ அமுதவல்லி தொழுநோயாளி என்று உதாரனனிடமும் மன்னன் கூறினான்.

**4) எந்தத் தேசம் அழிதல் நல்லது என்று பாரதிதாசனார் கூறுகின்றார்?**

**தேசம் அழிதல் நல்லது:-**

★ ஒரு தனி மனிதனின் தேவைக்காக ஒரு தேசம் இருக்கும் என்றால், அந்த தேசம் அழிவதே நல்லது.

**5) அமுதவல்லி தான் அரசுரிமையைப் பெற்ற பிறகு செய்ய நினைத்தது யாது?**

**அமுதவல்லி அரசுரிமை பெற்ற பிறகு செய்ய நினைத்தது:-**

★ அமுதவல்லி தான் அரசுரிமை பெற்ற பிறகு குடிமக்களுக்கு ஆளும் உரிமையைப் பொதுவாக்க நினைத்தாள்.

**6) விண்வீழ் கொள்ளி போல் வீழ்க என்று உதாரன் எதைக் கூறுகிறான்?**

**விண்வீழ் கொள்ளி போல் வீழ்க:-**

★ கொடிய முறையில் ஆட்சி செய்யும் மன்னனின் ஆட்சி, விண்வீழ் கொள்ளி வீழ்வதைப் போல் வீழ்க என்று உதாரன் கூறினான்.

**7) பாரதிதாசனார் புரட்சிக்கவிஞர் என்று அழைக்கப்படுவது ஏன்?**

**புரட்சிக்கவிஞர்:-**

★ பாரதிதாசனார், தம் பாடலில் மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் போன்றவற்றை உரக்க வெளிப்படுத்தினார்.

★ எனவே, அவர் 'புரட்சிக் கவிஞர்' என்று அழைக்கப்பட்டார்.

**8) பாரதிதாசனாரின் படைப்புகள் சிலவற்றைக் கூறுக.**

**பாரதிதாசனாரின் படைப்புகள்:-**

★ குடும்ப விளக்கு ➔ பாண்டியன் பரிசு ➔ இருண்ட வீடு

★ சேர தாண்டவம் ➔ பிசிராந்தையார் ➔ அழகின் சிரிப்பு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**9) புரட்சிக்கவி காவியம் குறித்து எழுதுக.**

**புரட்சிக்கவி:-**

★ வடமொழியில் எழுதப்பட்ட காவியம் 'பில்கணீயம்' ஆகும்.

★ இக்காவியத்தைத் தழுவி தமிழில் பாரதிதாசனாரால் 1937ஆம் ஆண்டு எழுதப்பட்ட காவியம் புரட்சிக்கவி ஆகும்.

**சிறுவினா**

**1) அமுதவல்லி அமைச்சரிடம் உரைத்தவை யாவை?**

**அமுதவல்லி அமைச்சரிடம் உரைத்தவை:-**

★ அமுதவல்லி தன் காதலன் கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதைக் கண்டாள்.

★ உடனே அமைச்சரிடம் சென்று, என் காதலன் இறந்த பிறகு நான் மட்டும் வாழ்வேன் என்று நினைத்தீர்களோ?

★ வாழ்ந்தால் இருவரும் வாழ்வோம். இல்லை எனில், இருவரும் சாவோம்.

★ உயிர் எனக்கு வெல்லமல்ல என்று கூறினாள்.

**2) உழைப்பாளர்களின் படைப்புகளால் உருவானது என்று உதாரன் எவற்றைக் கூறுகின்றான்?**

**உழைப்பாளர்களின் படைப்புகள்:-**

★ ஆற்றுநீரைத் தடுத்து குளம், குட்டை, ஏரிகள் உருவாக்கியது.

★ நீர் கொண்டு செல்லும் வாய்க்கால்கள் அமைத்தது.

★ தரிசு நிலத்தைத் திருத்தி, விளைச்சல் நிலமாக்கியது.

★ அழகிய பெரிய நகரங்களை உருவாக்கியது. ➔ சிற்றூர்களை அமைத்தது.

★ கல்லையும் மலையையும் பிளந்து உலோகங்கள் வெட்டி எடுத்தது.

★ வெட்டி எடுத்த உலோகங்களால் பயனுள்ள கருவிகள் செய்தது.

★ மூச்சடக்கி, கடலுக்குள் மூழ்கி முத்தெடுத்தது.

**3) உதாரனின் வீரவுரைக்குப் பின்னர் நிகழ்ந்தவற்றை விளக்குக.**

**உதாரனின் வீரவுரைக்குப் பின்னர் நிகழ்ந்தவை:-**

★ உதாரன் வீரவுரை நிகழ்த்திய பின்னர் மக்கள் வெகுண்டு எழுந்தனர்.

★ கைகளில், கொலை வாளை எடுத்தனர்.

★ உதாரனும் அமுதவல்லியும் இணைந்தனர்.

★ புவியாட்சியை மன்னனிடம் இருந்து பறிப்பதற்குத் தூது அனுப்பினர்.

★ மன்னன் தன் செல்வங்களை எல்லாம் மக்களுக்கே உரியது என்று சட்டம் இயற்றுகின்றான்.

★ முடியாட்சி முறை ஒழிந்தது. ➔ மக்களாட்சி முறை மலர்ந்தது.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

**புரட்சிக்கவி கதையைச் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| முன்னுரை | அரசனின் விருப்பம் | அரசனின் தயக்கமும் உத்தியும் | காதல் கொள்ளுதல் |
| அரசனின் முடிவு | கொலைக்களத்தில் நிகழ்ந்தது | முடிவுரை | நூற்பயன் |

**முன்னுரை:-**

★ மக்களாட்சிக்கு முன்புவரை சட்டம், நிருவாகம், நீதி ஆகியவை அரசனிடம் குவிந்து இருந்தன.

★ இந்நிலை மக்கள் புரட்சியால் மாற்றப்பட்டு மக்களாட்சிமுறை மலர்ந்துள்ளது.

★ அவ்வாறான ஒரு புரட்சியை விளக்கும் காவியமே 'புரட்சிக்கவி' ஆகும்.

**அரசனின் விருப்பம்:-**

★ அரசன் ஒருவன் தன் மகள் அமுதவல்லிக்குக் கவிதை எழுதும் கலையைக் கற்றுத் தர விரும்பினான்.

★ அதற்காக அமைச்சரிடம் ஆலோசனை கேட்டான்.

★ அமைச்சர், அழகும் அறிவும் இளமையும் வாய்ந்த உதாரன் என்ற இளைஞனின் பெயரை முன்மொழிந்தான்.

**அரசனின் தயக்கமும் உத்தியும்:-**

★ அரசன், தன் மகள் எளிய கவிஞனிடம் காதல் கொண்டுவிடுவாளோ என்று தயங்கினான்.

★ அதற்கு அமைச்சர் ஒரு யோசனை கூறினான்.

★ அதன்படி உதாரன் பார்வையற்றவன் என்று அமுதவல்லியிடம் கூறினான்.

★ அதுபோல, அமுதவல்லி தொழுநோயாளி என்று உதாரனனிடம் கூறினான்.

★ இருவருக்கும் இடையில் திரையிடப்பட்டிருந்தது.

**காதல் கொள்ளுதல்:-**

★ ஒருநாள் இரவில், உதாரன் நிலவினைக் கண்டு கவிதை ஒன்றைப் பாடிக் கொண்டிருந்தான்.

★ பார்வை தெரியாதவன் எவ்வாறு நிலவின் அழகைக் கண்டு கவிதைப் பாடுகிறான் என்று அமுதவல்லிக்கு ஐயம் தோன்றியது.

★ தன் ஐயத்தைப் போக்கிக் கொள்ள திரையை விலக்கினாள்.

★ உதாரனைக் கண்டு அவனை விரும்பத் தொடங்கினாள்.

★ இருவருக்கும் இடையில் காதல் மலர்ந்தது.

**அரசனின் முடிவு:-**

★ இருவரின் விருப்பமும் அரசனுக்குத் தெரியவந்தது.

★ உடனே அரசன் உதாரனைக் குற்றவாளியாக்கி மரண தண்டனை விதித்தான்.

★ ஆனால், அமுதவல்லி அதை எதிர்த்தாள்.

★ எனவே, அரசன் இருவருக்கும் மரண தண்டனை விதித்தான்.

**கொலைக்களத்தில் நிகழ்ந்தது:-**

★ உதாரனும் அமுதவல்லியும் மரண தண்டனை விதிக்க கொலைக்களத்திற்குக் கொண்டுவரப்பட்டனர்.

★ மரண தண்டனை விதிக்கும் முன்னர், உதாரன் மக்கள் முன் வீர உரையாற்றினான்.

★ அதைக் கேட்ட மக்களின் மனங்களில் விடுதலை உணர்வு தோன்றியது.

★ மக்கள் அரசனுக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டனர்.

**முடிவுரை:-**

★ மக்களின் புரட்சியால், மன்னராட்சி முடிவுற்று மக்களாட்சி மலர்ந்தது.

**நூற்பயன்:-**

★ பாரதிதாசனாரின் 'புரட்சிக்கவி' காவியத்தின் கருத்துகளை அறிந்துகொண்டேன்.

## பதிற்றுப்பத்து

**குறுவினா**

**1) சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் எதைக் குறிப்பிடுகிறார்?**

**சிறந்த நாட்டின் இயல்புகள்:-**

★ உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராத இயல்பது நாடு என்கிறார் வள்ளுவர்.

★ பசியும் நோயும் பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு என்று அறிவுறுத்துகிறார்.

**2) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் பெற்றோர் யாவர்?**

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் பெற்றோர்:-**

★ தந்தை: உதியன் சேரலாதன் ➔ தாய்: வேண்மாள்

**3) நிரைய வெள்ளம் என்று தலைப்பு இட்டதற்கான காரணம் என்ன?**

**நிரைய வெள்ளம்:-**

★ சேரலாதனின் படைவீரர்கள் பகைவர்முன் நிரையபாலரைப் (நரகத்து வீரர்கள்) போன்று பெருவெள்ளமாக நின்றனர்.

★ எனவே, இப்பாடல் பகுதிக்கு 'நிரைய வெள்ளம்' என்று தலைப்பு இடப்பட்டுள்ளது.



அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பதிற்றுப்பத்து பாடலின் திணை, துறை, வண்ணம், தூக்கு ஆகியவற்றைக் கூறுக.**

★ **திணை:** பாடாண்திணை ➔ துறை: செந்துறைப் பாடாண்பாட்டு

★ **வண்ணம்:** ஒழுகு வண்ணம் ➔ தூக்கு: செந்தூக்கு

**5) பாடாண்திணை - குறிப்பு வரைக.**

**பாடாண்திணை:-**

★ ஒரு மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் போன்றவற்றைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணை ஆகும்.

★ ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

**6) ஒழுகு வண்ணம் என்றால் என்ன?**

**ஒழுகு வண்ணம்:-**

★ ஒழுகு வண்ணம் என்பது ஒழுகிய ஓசையால் செல்வது ஆகும்.

**7) செந்தூக்கு பற்றிக் கூறுக.**

**செந்தூக்கு:-**

★ தூக்கு என்பது செய்யுள் அடிகளை வரையறை செய்வதாகும்.

★ செந்தூக்கு என்பது வஞ்சிப்பாவின் இறுதியடி போன்றோ, ஆசிரியப்பாவின் இறுதியடி போன்றோ அமைவது ஆகும்.

**8) குமட்டூர்க் கண்ணனார் பெற்ற பரிசுகள் யாவை?**

**குமட்டூர்க் கண்ணனார் பெற்ற பரிசுகள்:-**

★ உம்பற்காட்டில் 500 ஊர்கள் ➔ தென்னாட்டு வருவாயுள் பாதி

**சிறுவினா**

**1) பதிற்றுப்பத்து - குறிப்பு வரைக.**

**பதிற்றுப்பத்து:-**

★ **நூல்** பெயர்: பதிற்றுப்பத்து ➔ தொகுப்பு: எட்டுத்தொகை நூல்கள்

★ **திணை:** பாடாண் திணை

**சிறப்பு:**

★ ஒவ்வொரு பாடலின் பின்னும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

★ சேர மன்னர்கள் பத்து பேரின் வாழ்க்கையைக் கூறும் நூல்.



www.Padasalai.Net

## ஒவ்வொரு புல்லையும்

### குறுவினா

**1) இன்குலாப் இயங்கிய தளங்கள் யாவை?**

**இன்குலாப் இயங்கிய தளங்கள்:-**

★ கவிதை ➔ சிறுகதை ➔ கட்டுரை ➔ நாடகம் ➔ மொழிபெயர்ப்பு

**2) பாரதியாரின் கருத்தை இன்குலாப் ஏற்றுக் கொண்ட விதத்தைப் பற்றிக் கூறுக.**

**பாரதியாரும் இன்குலாப்பும்:-**

★ மகாகவி பாரதியார், "காக்கை குருவி எங்கள் ஜாதி" என்றார்.

★ மகாகவி கருத்தின் நீட்சியாக, "கூவும் குயிலும் கரையும் காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும்" என்றார், இன்குலாப்.

### சிறுவினா

**1) பறவைகளோடு எல்லை கடப்பேன் - இவ்வடிகளில் இன்குலாப் கூறும் கருத்து யாது?**

**பறவைகளோடு எல்லை கடப்பேன்:-**

★ மனிதர்கள் தன் ஊர், மாவட்டம், நாடு என்று எல்லைகளை வகுத்துக் கொண்டு வாழ்கின்றனர்.

★ ஆனால் பறவைகள் அவ்வாறு எல்லைகளை வகுத்துக் கொண்டு வாழ்வதில்லை.

★ 'யாதும் ஊரே' என்னும் உயரிய எண்ணத்தோடு ஊர், நாடு என்று எல்லைகளைக் கடந்து உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் பயணிக்கின்றன.

★ அதுபோல, தானும் பறவைகளோடு இணைந்து எல்லைகளைக் கடந்து பயணிக்க வேண்டும் என்கிறார், இன்குலாப்.

**2) சமத்துவத்தைப் புனல் என்று இன்குலாப் குறிப்பிடுவது ஏன்? விளக்குக.**

**சமத்துவப்புனல்:-**

★ புனல் கரை புரண்டு ஓடும்போது வழியில் உள்ள அனைத்துப் பொருட்களையும் இழுத்துச் செல்லும்.

★ இழுத்துச் செல்லும் பொருட்கள் நல்லவையா? கெட்டவையா? என்று எதுவும் பார்ப்பது இல்லை.

★ அதுபோல மனிதர்களிடையே சமத்துவம் தோன்றும்போது, மனிதர்களிடையே உள்ள சாதி, மதம், மொழி, இனம் போன்ற அனைத்து விதமான பேதங்களும் நீங்கிவிடும்.

★ அனைவரும் சகோதரத்துவத்துடன் ஒற்றுமையாக வாழத் தொடங்குவர்.

★ எனவே, சமத்துவத்தைப் புனல் என்று இன்குலாப் குறிப்பிடுகிறார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## தொலைந்து போனவர்கள்



### குறுவினா

**1) அப்துல் ரகுமானின் நூல்கள் சிலவற்றைக் கூறுக.**

**அப்துல் ரகுமானின் நூல்கள்:-**

★ பால்வீதி ★ நேயர்விருப்பம் ★ பித்தன் ★ ஆலாபனை

**2) அப்துல் ரகுமான் பெற்ற விருதுகளைப் பட்டியலிடுக.**

**அப்துல் ரகுமான் பெற்ற விருதுகள்:-**

★ பாரதிதாசன் விருது ★ தமிழன்னை விருது

★ 'ஆலாபனை' கவிதைத் தொகுப்பிற்கு 'சாகித்திய அகாதெமி விருது'

### சிறுவினா

**1) அப்துல் ரகுமான் - குறிப்பு வரைக.**

**அப்துல் ரகுமான் குறிப்பு:-**

★ **பெயர்:** அப்துல் ரகுமான்

★ **படைப்புகள்:** புதுக்கவிதை, வசனகவிதை, மரபுக்கவிதை

★ **பணி:** தமிழ்ப் பேராசிரியர், வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரி

★ **நூல்கள்:** பால்வீதி, நேயர்விருப்பம், பித்தன், ஆலாபனை

★ **விருதுகள்:** பாரதிதாசன் விருது, தமிழன்னை விருது

**சிறப்புகள்:**

★ ஆலாபனை என்னும் கவிதைத் தொகுப்பிற்கு 'சாகித்திய அகாதெமி விருது' பெற்றவர்.

★ வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவர்.

**2) மௌலானா ரூமி குறித்து நீவிர் அறிந்து கொண்டவற்றைக் கூறுக.**

**மௌலானா ரூமி:-**

★ மௌலானா ரூமி 1207ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் பிறந்தவர்.

★ இவர் ஒரு புகழ்பெற்ற பாரசீகக் கவிஞர் ஆவார்.

★ ஆன்ம ஞானியாக மாறி இஸ்லாத்தின் சூ.ஃபி பிரிவைத் தழுவினார்.

★ 'மஸ்னவி' என்னும் புகழ்பெற்ற ஞான காவியத்தைப் படைத்தவர்.

**3) மௌலானா ரூமி, புல்லாங்குழலைக் குறியீடாகக் கொண்டு படைத்த கவிதையை, அப்துல் ரகுமான் வழி நின்று விளக்குக.**

**மௌலானா ரூமியின் புல்லாங்குழல் கவிதை:-**

★ மௌலானா ரூமி புல்லாங்குழலை ஆன்மாவாகக் குறியீடு செய்து கவிதை படைத்துள்ளார்.

★ அதை அப்துல் ரகுமான், "தீய குணங்கள் என்ற கறைகள் படியாத தூய உலகம் அது.

★ அப்போது ஆன்மா இறைத்தரிசனம் என்ற பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



★ இத்தகைய நிலையிலிருந்த ஆன்மாவைப் போர், பெறாமை, பூசல், அகந்தை, சினம் நிறைந்த உலகுக்கு அனுப்பினால் அது அழாமல் என்ன செய்யும்?" என்று விளக்கம் அளித்துள்ளார்.

## மனோன்மணீயம்

**குறுவினா**

**1) சென்னைப் பல்கலைக் கழகம் சுந்தரனாருக்கு வழங்கிய பட்டம் யாது?**

**சென்னைப் பல்கலைக் கழகம் சுந்தரனாருக்கு வழங்கிய பட்டம்:-**

★ சென்னைப் பல்கலைக் கழகம் சுந்தரனாருக்கு 'ராவ்பகதூர்' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

**2) உயிர்க்குத் தூண்டுகோலாக மனோன்மணீயம் கூறுவது யாது?**

**உயிர்க்குத் தூண்டுகோலாக மனோன்மணீயம் கூறுவது:-**

★ எந்த முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கும் இயக்குவதற்கு ஒரு குறிக்கோள் வேண்டும்.

★ அக்குறிக்கோள் உயிர்க்குத் தூண்டுகோலாக அமையும் என்று மனோன்மணீயம் கூறுகிறது.

**3) புற்களைப் பார்க்கும்போது தோன்றும் கருத்து யாது?**

**புற்களைப் பார்க்கும்போது தோன்றும் கருத்து:-**

★ புற்களைப் பார்க்கும்போது, எதையும் சிறுமையாக எண்ணக் கூடாது என்னும் கருத்து தோன்றுகிறது.

**4) வாய்க்கால் கற்றுக் கொடுக்கும் பாடமாக மனோன்மணீயம் கூறுவது யாது?**

**வாய்க்கால் கற்றுக் கொடுக்கும் பாடம்:-**

★ கடின உழைப்பு ★ ஊக்கம்

★ அன்பு இருந்தால் வாழ்வில் வெற்றி அடையலாம் என்னும் பாடத்தை வாய்க்கால் கற்றுக் கொடுப்பதாக மனோன்மணீயம் கூறுகிறது.

**5) மண்புழுவிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டியதாக மனோன்மணீயம் கூறுவது யாது?**

**மண்புழுவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது:-**

★ மண்புழுக்களிடமிருந்து, தன்னலம் கருதாது பிறருக்காக உழைக்க வேண்டும் என்ற கருத்தை மனிதர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று மனோன்மணீயம் கூறுகிறது.

**6) தமிழ் நாடக இலக்கண நூல்கள் சிலவற்றைக் கூறுக.**

**தமிழ் நாடக இலக்கண நூல்கள்:-**

★ அகத்தியம் ★ குணநூல் ★ கூத்தநூல் ★ சந்தம்

★ சயந்தம் ★ செயன்முறை ★ செயிற்றியம் ★ முறுவல்

★ மதிவாணனார் நாடக இலக்கண நூல் ★ நாடகவியல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

**1) மனோன்மணீயம் - நூற்குறிப்பு வரைக.**

**மனோன்மணீயம் - நூற்குறிப்பு:-**

★ மனோன்மணீயம் தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் ஆகும்.

★ லிட்டன் பிரபு 1866ஆம் ஆண்டு எழுதிய 'இரகசிய வழி' என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டது ஆகும்.

★ 1881ஆம் ஆண்டு பேராசிரியர் சுந்தரனார் இந்நூலைத் தமிழில் எழுதியுள்ளார்.

★ இ∴து ஆசிரியப்பாவால் எழுதப்பட்ட நூல் ஆகும்.

★ இந்நூல் ஐந்து அங்கங்களையும் இருபது களங்களையும் கொண்டது.

★ நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம் பெற்றுள்ளது.

★ மனோன்மணீயத்தில் 'சிவகாமியின் சரிதம்' என்ற கிளைக்கதை இடம்பெற்றுள்ளது.

**2) பேராசிரியர் சுந்தரனார் - ஆசிரியர் குறிப்பு வரைக.**

**பேராசிரியர் சுந்தரனார் - ஆசிரியர் குறிப்பு:-**

★ **பெயர்:** சுந்தரனார் ★ **பிறந்த ஊர்:** திருவிதாங்கூரில் உள்ள ஆலப்புழை

★ **பிறந்த ஆண்டு:** 1855 ★ **பணி:** தத்துவப் பேராசிரியர்

★ **பெற்ற பட்டம்:** ராவ்பகதூர்

★ **சிறப்பு:** இவர் பெயரால் திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் உள்ளது.

**3) ஒன்றையும் சிறுமையாச் சிந்தனை செயாது - இவ்வடிகளை விளக்குக.**

**ஒன்றையும் சிறுமையாச் சிந்தனை செய்யாது:-**

★ புற்கள், தன் மீது தேன் துளிகளைத் தாங்கிக் கொள்ளும் பொறுமையைப் பெற்றுள்ளன.

★ தேனீக்களை அழைத்து, அவற்றைத் தேன் அருந்தச் செய்து தன் அன்பைக் காட்டுகின்றன.

★ தம்மிடமுள்ள மகரந்தப் பொடியைப் பரவச் செய்து காய், கனிகள் உண்டாக்கும் அறிவைப் பெற்றுள்ளது.

★ புற்களின் அன்பையும் பொறுமையையும் அறிவினையும் பார்க்கும்போது, எதையும் சிறுமையாக எண்ணக் கூடாது என்னும் கருத்து தோன்றுகிறது.

★ இயற்கையின் அழகையும் அன்பையும் பார்த்துப் பார்த்து மகிழ வேண்டும்.

★ அன்பினால் அனைத்து உயிரையும் தம் உயிராய்க் கருதி வாழ்தல் வேண்டும்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) மண்புழுவிடம் உள்ள உயர்ந்த பண்பாக மனோன்மணீயம் கூறுவது யாது?**

**மண்புழுவிடம் உள்ள உயர்ந்த பண்பு:-**

★ உயிர்கள் அனைத்திற்கும் உணவு வழங்கும் உழவர்களின் உற்ற நண்பனாக விளங்குவது மண்புழு.

★ எத்தன்மை கொண்ட மண்ணாக இருந்தாலும், அதை உழவுக்கு ஏற்ற மண்ணாக மாற்றுவது மண்புழு ஆகும்.

★ உழவர்களுக்கு இவ்வாறு உதவி செய்து, புகழ்ச்சியை விரும்பாமல் மண்ணிற்குள் சென்று தன் உடலை மறைத்துக் கொள்கிறது.

★ அதற்கு எறும்புகளும் பூச்சிகளும் பல துன்பங்களைக் கொடுத்தாலும் அவற்றை எல்லாம் தாங்கிக் கொள்ளும் உயர்ந்த பண்பைக் கொண்டுள்ளது.

★ மண்புழுக்களிடமிருந்து, தன்னலம் கருதாது பிறருக்காக உழைக்க வேண்டும் என்ற உயர்ந்த பண்பை மனிதர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

## இப்படிப் படித்தால், வெற்றி பெறுவது எளிது

➔ ஆர்வம் இருந்தால் எந்த ஒரு செயலும் வெற்றி பெறுவது எளிது.

➔ படிப்பதை வெறும் கடமையாக நினைக்காமல், ஆர்வத்துடன் கற்க முயற்சி செய்யுங்கள்.

➔ படிக்கும் இடத்தை விட, படிக்கும் போது உங்கள் மனம் தெளிவாக குழப்பமின்றி இருப்பதே முக்கியம்.

➔ படிக்கும் போது முக்கிய குறிப்புகளைத் தனியாக ஒரு டைரியில் பாடத் தலைப்பு வாரியாக குறித்துக் கொள்ளுங்கள்.

➔ படித்தவற்றை அடிக்கடி மனத்திரையில் ஓடவிட்டு பயிற்சி செய்வது ஞாபகத்திறனை அதிகப்படுத்தும் வழிகளில் முக்கியமானது.

➔ வகுப்பில் நடத்தும் பாடங்களை அன்றே படிப்பது நன்று.

➔ பலமுறை படிப்பதைக் காட்டிலும் ஒருமுறை எழுதிப் பார்ப்பது சாலச் சிறந்தது.

➔ பள்ளி பாடங்களைப் புரிந்து படித்தால், கல்லூரிக் கல்வி கரும்பாய் இனிக்கும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# விரிவானம்

## நெடுவினா

### யானை டாக்டர்

**யானை டாக்டர் யார் ? ஏன் அவர் அவ்வாறு அழைக்கப்படுகிறார்?**

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| முதன்மையானவர் | டாக்டர் கே யின் கையேடு | முதுமலைப் பயணம் | யானைகளின் எச்சரிக்கை |
| டாக்டர் கேயும் மருத்துவமும் | முடிவுரை | நூற்பயன் | |

**முதன்மையானவர்**

★ யானை டாக்டர் கே. ஆவார்

★ டாக்டர் 'கே' என்றழைக்கப்படும் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி வனத்துறையின் மிருக டாக்டர்.

★ மெல்ல மெல்ல யானைகளுக்குரிய சிறப்பு மருத்துவரானார்.

★ உலகத்தின் பல நாடுகளிலுள்ள யானைகளுக்கும் அவர்தான் மருத்துவ ஆலோசகர்.

★ வனப்பேணுநர் விருதான வேணுமேனன் ஏலீஸ் விருது பெற்றவர்.

★ யானைகளுக்காகத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்தவர்.

★ கோயில் யானைகளுக்கு வனப் புத்துணர்ச்சித் திட்டத்தை செயல்படுத்தியவர்.

★ விலங்குகளின் நோய் தீர்ப்பதில் இந்திய அளவிலும் உலக முதன்மையானவர் ஆனார்

**டாக்டர் கே யின் கையேடு**

★ டாக்டர் கே. யானைகளின் உடல்நிலையைப் பேணுவதற்காக உருவாக்கிய விதிமுறைகள் தான் இந்திய வனவியல் துறையின் கையேடாக உள்ளது.

★ கையேட்டுக் குறிப்புகளின் இன்னொரு வடிவமே காசிரங்கா காண்டாமிருகங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

**முதுமலைப் பயணம்**

★ முதுமலையில் ஒரு யானைக்குக் கால் வீங்கி அது காட்டில் அலைவதாகத் தகவல் வந்தது.

★ டாக்டர் கே. வன அதிகாரிகளுடனும் குறும்பர்களுடனும் முதுமலைக்குப் பயணமானார்.

★ யானைகள் கூட்டமாக நின்றன. டாக்டர் கே. தன் கருவியில் மயக்க மருந்தை ஏற்றினார்.

**யானைகளின் எச்சரிக்கை**

★ டாக்டர் யானைகளை நெருங்கியபோது யானைகள் பிளிறின.

★ காதுகளை வேகமாக அசைத்தன. தலையைக் குலுக்கின.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ யானை தலையைக் குலுக்கியும், மத்தகத்தைத் தாழ்த்தியும் தாக்குவேன் என்று எச்சரிக்கை விடுத்தது.

**டாக்டர் கே மருத்துவமும்**

★ கால் வீங்கிய யானையை டாக்டர் சுட்டதும் யானை மயங்கி விழுந்தது.

★ யானையின் காலில் பாதிக் கண்ணாடி குப்பி ஒன்று முழுமையாக ஏறியிருந்தது.

★ அதைச் சுற்றிச் சீழ் கட்டியிருந்தது.

★ சீழ்ப்பட்ட சதையை டாக்டர் வெட்டி உள்ளிருந்த கண்ணாடிக் குப்பியை எடுத்தார்.

★ பஞ்சை மருந்தில் நனைத்துத் துணியால் கட்டினார்.

★ காலில் அடிப்பட்ட சின்ன யானை ஒன்று, ஒன்றரை ஆண்டு கழித்து ஓர் இரவில் 300 கிலோ மீட்டர் கடந்து இவரைக் காண டாப் ஸிலிபுக்கு வந்தது.

★ இரவில் அந்த யானைக்குட்டியைக் காண்பதற்கு மற்ற யானைகளும் அந்த இடத்திற்கு வந்தன.

**முடிவுரை**

★ டாக்டர் கே. நன்றி கூறவே யானைகளின் தேவ தந்துபிகள் முழங்க வான் முரசுகள் முழங்கின.

**நூற்பயன்**

★ எல்லா உயிரும் தம்முயிர் போல் காத்தல்.

## இசைத்தமிழர் இருவர்

**1) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் பெற்ற விருதுகளைப் பட்டியலிடுக.**

**சிம்பொனித் தமிழர் (இளையராஜா) பெற்ற விருதுகள்**

| | |
|---|---|
| இந்திய அரசு | பத்ம விபூஷண் விருது |
| இந்திய அரசு | சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது |
| இந்திய அரசு | சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருது |
| தமிழ்நாடு அரசு | கலைமாமணி விருது |
| மத்தியப்பிரதேசம் | லதா மங்கேஷ்கர் விருது |
| கேரளா | நிஷாகந்தி சங்கீத விருது |

**ஆஸ்கர் தமிழர் (ஏ.ஆர். இரகுமான்) பெற்ற விருதுகள்**

| | |
|---|---|
| இந்திய அரசு | பத்ம பூஷண் விருது |
| தமிழ்நாடு | கலைமாமணி விருது |
| கேரளம் | தங்கப் பதக்கம் |
| உத்திரப்பிரதேசம் | ஆவாத் சம்மான் விருது |
| மத்தியப்பிரதேசம் | லதா மங்கேஷ்கர் விருது |
| மொரீஷியஸ் | தேசிய இசை விருது |
| மலேசியா | தேசிய இசை விருது |
| ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகம் | சர்வதேச இசை விருது |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) இளையராஜாவின் இசை நுணுக்கத்தையும் ஏ.ஆர். இரகுமான் தாளம் உருவாக்கும் முறையையும் விளக்கி கட்டுரை வரைக.**

**குறிப்புச் சட்டகம்**

| | |
|---|---|
| முன்னுரை | இளையராஜாவின் இசை நுணுக்கம் |
| ஏ.ஆர். இரகுமான் தாளம் உருவாக்கும் முறை | முடிவுரை |

**முன்னுரை**

★ இசைத் துறையில் மிகச் சிறந்த ஆளுமைகளாகத் திகழ்ந்தவர்கள், இளையராஜாவும் ஏ.ஆர். இரகுமானும் ஆவர்.

★ இளையராஜாவின் இசை நுணுக்கத்தையும் ஏ.ஆர். இரகுமான் தாளம் உருவாக்கும் முறை குறித்தும் இக்கட்டுரையில் காண்போம்.

**இளையராஜாவின் இசை நுணுக்கம்**

★ நாட்டுப்புற இசை வடிவத்தைத் திரை இசைக்குக் கொண்டு வந்தவர் இளையராஜா.

★ இளையராஜா மேற்கத்திய இசையை முறைப்படி பயின்றவர்.

★ நாட்டுப்புற இசையை மேற்கத்திய இசையோடு கலந்து உலவவிட்டவர்.

★ இளையராஜா மனத்தின் இசையைக் குறியீடுகளாகக் காகிதத்தில் எழுதுவார்.

★ மேற்கத்திய இசையுடன் கர்நாடக, இந்துஸ்தானி இராகங்களையும் திரையிசையில் பயன்படுத்தினார்.

**ஏ.ஆர். இரகுமான் தாளம் உருவாக்கும் முறை**

★ இரகுமானிடம் அனைவரும் இரசித்துக் கேட்பது தாளம் உருவாக்கும் முறை ஆகும்.

★ ஒரு பாடலுக்குத் தாளத்தைத்தான் முதலில் உருவாக்குவார்.

★ தாளக்கட்டை உருவாக்கி அதனுள் அமிழ்ந்திருக்கும் மெட்டை வெளிக்கொணர்வார்.

★ ஒரு சிறந்த மெட்டைப் போல பாடலின் இடையில் வரும் இசையும் மக்களை ஈர்க்கும்படி செய்பவர்.

★ மெட்டுக்கு இணையான இசைக்கோவையை உயர்நிலைக்குக் கொண்டு சென்றவர்.

**முடிவுரை**

★ சிம்பொனித் தமிழரின் இசை நுணுக்கத்தையும் ஆஸ்கர் தமிழர் தாளம் உருவாக்கும் முறை பற்றியும் அறிந்துக் கொண்டேன்.

கூடுதல் வினாக்கள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# செவ்வி

**நர்த்தகி நடராஜ் நிகழ்த்திய நடன நிகழ்ச்சிகளில் ஏதேனும் இரண்டனை விவரிக்க.**

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| முன்னுரை | அமெரிக்க நிகழ்வு | ஜப்பான் நிகழ்வு | முடிவுரை |

**முன்னுரை**

★ தன் நாட்டிய திறமையின்மூலம் உலகம் முழுவதும் பலரால் அறியப்பட்டவர், நர்த்தகி நடராஜ்.

★ நர்த்தகி நடராஜ் நிகழ்த்திய நடன நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்க இரண்டு நிகழ்வினைக் காண்போம்.

**அமெரிக்க நிகழ்வு:-**

★ நர்த்தகி நடராஜ் ஒருமுறை அமெரிக்காவில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்கச் சென்றார்.

★ அவரைக் கண்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், இரண்டு வாரங்கள் நடைபெற இருந்த நிகழ்ச்சி ஒரே நாள் நிகழ்ச்சியாக மாற்றினர்.

★ இதனால் மனக்கலக்கத்துடனே அவர் ஆடச் சென்றார்.

★ அவர் ஆடியதைக் கண்ட அனைவரும் மெய்மறந்துப் போயினர்.

★ ஒரு நாளோடு முடிவதாக இருந்த நிகழ்ச்சி இரண்டு மாதங்களாக நீட்டிக்கப்பட்டது.

**ஜப்பான் நிகழ்வு:-**

★ ஒருமுறை நடராஜ் ஜப்பானில் நடைபெற்ற நடன நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

★ அந்நிகழ்ச்சியில் அவர், திருவாசகம், தேவாரப் பண்ணிசைப் பாடல்களுக்கு நடனம் ஆடினார்.

★ அங்கிருந்தவர்கள் அனைவரும் ஜப்பானியர்கள். அவர்கள் யாருக்கும் தமிழ் மொழியோ, தேவார திருவாசகப் பாடல்களோ தெரியாது.

★ ஆனால், அவரின் நடனத்தைக் கண்ட அனைவரின் கண்களும் கலங்கின.

★ நடனம் முடிந்ததும் எழுந்த கரவொலி நடராஜை மெய்சிலிர்க்க செய்தது.

★ இதன்மூலம், கலைகளுக்கு மொழி என்பது அவசியம் இல்லை என்பது உறுதியாகிறது.

**முடிவுரை**

★ திறமையிருந்தால் நம்மை அனைவரும் மதிப்பார்கள் என்றும், கலைக்கு மொழிகள் தேவையில்லை என்றும் அறிந்துக்கொண்டேன்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இனிக்கும் இலக்கணம்

## மொழி முதல், இறுதி எழுத்துகள்

**1) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை ? அவை யாவை?**

★ மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் 22

★ உயிர் - 12 (அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ)

★ மெய் - 10 (க்,ங்,ச்,ஞ்,த்,ந்,ப்,ம்,ய்,வ்)

**2) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை அவை யாவை?**

★ மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் 24

★ உயிர் - 12 (அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ)

★ மெய் - 11 (ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள்)

★ குற்றியலுகரம் - 1

**3) புணர்ச்சி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.**

★ புணர்ச்சி என்ற சொல்லுக்கு இணைதல் - சேர்தல்- ஒட்டுதல் என்ற பல பெயர்கள் உண்டு

★ இலக்கணத்தில் புண்ர்ச்சி என்ற சொல்லுக்கு இரண்டு சொற்கள் (நிலைமொழியும் வருமொழியும்) இணைவது என்று பொருள்

★ எடுத்துக்காட்டு தமிழ் + அரசி = தமிழரசி

**4) நிலைமொழி வருமொழி எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

★ தமிழ் + அரசி = தமிழரசி. இச்சொல்லில்

★ 'தமிழ்' எனபது முதலில் நிற்பதால் நிலைமொழி

★ 'அரசி' என்பது வந்து சேர்வதால் வரும்மொழி.

★ நிலைமொழியும் வரும்மொழியும் சேர்வது புணர்ச்சி எனப்படும்

**5) உயிரீறு, மெய்யீறு என்றால் என்ன?**

**உயிரீறு (உயிர் + ஈறு + உயிரீறு உயிர் எழுத்து கடைசியாக வருதல்)**

★ மணிமாலை = மணி + மாலை

★ இச்சொல்லில் நிலைமொழியின் (முதல் சொல்) இறுதி எழுத்து உயிர் மெய் எழுத்தாக இருந்தாலும்

★ இந்த எழுத்தை இரண்டாகப் பிரிக்கும்போது (ண்+இ) இறுதியில் நிற்பது உயிர் எழுத்து 'இ' ஆகையால் இதை உயிர் ஈறு என அழைப்படும்.

**மெய்யீறு (மெய் + ஈறு(கடைசி) மெய் எழுத்து கடைசியாக வருவது)**

★ பொன்வண்டு = பொன்+வண்டு

★ இச்சொல்லில் நிலைமொழியின்(முதல் சொல்) இறுதி எழுத்து (ன்) மெய்எழுத்து வந்துள்ளதால் இதை மெய் ஈறு எனவும் அழைக்கப்படும்.

கூடுதல் வினாக்கள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**6) உயிர்முதல் மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

**எடுத்துக்காட்டு - 1**

★ வாழையிலை = வாழை + இலை

★ வரும்மொழியின் முதல் எழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது உயிர் முதல் எனப்படும்.

★ இங்கு 'இ' என்பது வரும்மொழி முதல் எழுத்து உயிரெழுத்தாக வந்துள்ளதால் இது உயிர்முதல் என்று அழைக்கப்படும்

**எடுத்துக்காடு - 2**

★ தமிழ்நிலம் = தமிழ் + நிலம். இச்சொல்லில் நி என்பது ந்+இ எனப் பிரியும். எனவே மெய் எழுத்து முதலில் வந்துள்ளது.

★ வரும்மொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அது மெய் முதல் எனப்படும்.

★ இங்கு 'ந்' என்பது வரும்மொழி முதலெழுத்து மெய் எழுத்தாக வந்துள்ளதால் இது மெய்முதல் என்று அழைக்கப்படும்.

**7) எழுத்துகளின் அடிப்படையில் புணர்ச்சியை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை? (அல்லது) நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணர்வது எத்தனை வகைப்படும்? விளக்குக.**

★ சொல் புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தாகவும் வரும்மொழி முதலெழுத்தாகவும் எழுத்துகள் சந்திக்கும் முறை நான்கு வகைப்படும்.

★ எழுத்துகளின் அடிப்படையில் புணர்ச்சியை நான்கு வகையாகப் பிரிக்கலாம் அவையாவன.

★ உயிர் + உயிர் = மலை + அருவி

★ உயிர்முன் மெய் - தமிழ் + அன்னை = தமிழன்னை

★ மெய்முன் உயிர் - தென்னை + மரம் = தென்னை மரம்

★ மெய்முன் மெய் - தேன் + மொழி = தேன்மொழி

**8) சொற்களின் அடிப்படையில் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

★ பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் மட்டுமே சொல் புணர்ச்சியில் வருகின்றன

★ இடைச்சொல்லும் உரிச்சொல்லும் வருவதில்லை.

## புணர்ச்சி விதிகள்

**1) புணர்ச்சி விதி என்றால் என்ன?**

**புணர்ச்சி விதி:-**

★ நிலைமொழியின் இறுதி எழுத்தும், வருமொழியின் முதலும் இணைவது புணர்ச்சி ஆகும்.

★ சொல் புணர்ச்சியின்போது ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது புணர்ச்சி விதி ஆகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) புணர்ச்சி விதியின் பயன்கள் யாவை?**

**புணர்ச்சி விதியின் பயன்கள்:-**

★ மொழியைப் பிழையின்றி கையாளுதல்

★ பாடலடிகளைப் பொருள் உணர்வுக்கேற்ப பிரித்தறிதல்

★ மொழி ஆளுமையைப் புரிந்துகொள்ளுதல்

**3) உடம்படுமெய் என்றால் என்ன?**

**உடம்படுமெய் புணர்ச்சி:-**

★ நிலைமொழியின் இறுதி எழுத்தும், வரும்மொழியின் முதல் எழுத்தும் உயிரெழுத்துகளாய் இருந்தால், உச்சரிப்பின்போது ஒலி உடன்பாடு இல்லாமல் இடைவெளி ஏற்படும்.

★ உடன்படாத இரு சொற்களையும் இணைக்க வரும் மெய், உடம்படுமெய் எனப்படும்.

**4) உடம்படுமெய்ப் புணர்ச்சிக்கு ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டு தருக.**

**உடம்படுமெய்ப் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு:-**

**காட்சியழகு = காட்சி + அழகு**

★ விதி 1 - 'இஈஐ வழி யவ்வும்' காட்சி + ய் + அழகு

★ விதி 2 - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' காட்சியழகு

**மாவிலை = மா + இலை**

★ விதி 1 - 'உயிர்வழி வவ்வும்' மா + வ் + இலை

★ விதி 2 - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' மாவிலை

**5) முற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**முற்றியலுகரப் புணர்ச்சி:-**

★ முற்றியலுகரத்தின் இறுதியில் உள்ள உகரம் கெட்டு புணர்வது முற்றியலுகரப் புணர்ச்சி ஆகும்.

★ (எ.கா.) வரவறிந்தான் = வரவு + அறிந்தான்

★ விதி 1 - 'முற்றும் அற்று ஒரோவழி' ('உ' கெட்டது) வரவ் + அறிந்தான்

★ விதி 2 - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' வரவறிந்தான்

**6) பூப்பெயர்ப் புணர்ச்சியை விளக்கி எழுதுக.**

**பூப்பெயர்ப் புணர்ச்சி:-**

★ பூ என்னும் சொல் வரும்மொழியுடன் புணரும்போது, வல்லினமெய்யோ அதன் இனமெய்யோ தோன்றி புணரும்.

★ (எ.கா.) பூ + சோலை

★ 'பூப்பெயர் முன் இனமென்மையுந் தோன்றும்' பூ + ஞ் + சோலை = பூஞ்சோலை





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**7) மெய்ம்மயக்கம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?**

**மெய்ம்மயக்கம்**

★ சொற்களின் இடையில் மெய்யெழுத்துகள் அடுத்தடுத்து வருவது குறித்துக் கூறுவது மெய்ம்மயக்கம் எனப்படும்.

**8) மெய்ம்மயக்கம் எத்தனை வகைப்படும் அவை யாவை?**

**மெய்ம்மயக்கத்தின் வகைகள்**

★ மெய்ம்மயக்கம் இரண்டு வகைப்படும். அவை:

★ உடனிலை மெய்ம்மயக்கம் ➔ வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

**9) உடனிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.**

**உடனிலை மெய்ம்மயக்கம் - விளக்கம்**

★ ஒரு சொல்லின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

★ க், ச், த், ப். ஆகிய மெய்கள் தம் எழுத்துடன் மட்டுமே சேர்ந்து வரும்.

★ எடுத்துக்காட்டுகள் அக்கா (க் - க் + ஆ) அச்சம் (ச் - ச் + அ)

★ அத்தனை (த் - த் + அ) அப்பம் (ப் - ப் + அ)

**10) வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.**

**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்- விளக்கம்**

★ ஒரு சொல்லின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துக்கள் தொடர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

★ ர், ழ் பிற மெய்களுடன் மட்டுமே சேர்ந்து வந்து வேற்று நிலை மெய்ம்மயக்கமாக மட்டுமே வரும் வரும்.

★ எடுத்துக்காட்டுகள் 1. தேர்தல் 2. வாழ்க

**11) ஈரொற்று மெய்ம்மயக்கம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.**

**ஈரொற்று மெய்ம்மயக்கம்**

★ ஒரு தனிச்சொல்லிலோ கூட்டுச் சொல்லிலோ சொற்களின் இடையில் ய், ர், ழ் ஆகியன மூன்று மெய்களாக மயங்கி வரும்

★ இதற்கு ஈரொற்று மெய்ம்மயக்கம் எனப்படும்.

★ எடுத்துக்காட்டுகள் 1. ய் - காய்ச்சல் ( கா ய் ச் ச் + அ ல்)

★ 2. ர் - உயர்ச்சி (உ ய ர் ச் ச் + இ) 3. ழ் - வீழ்ச்சி (வீ ழ் ச் ச் + இ)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**12) இனவெழுத்து (நட்பெழுத்து) என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.**

**இனவெழுத்து**

★ சொற்களின் இடையில் வல்லின மெய்களுக்கு முன் தன் இனமான மெல்லின எழுத்து மட்டுமே வருவதற்கு இனவெழுத்துகள் (அ) நட்பெழுத்துகள் என்று பெயர்.

★ எடுத்துக்காட்டுகள்

★ 1. ங் - க் (தங்கம்) 2 ஞ் - ச் (மஞ்சள்) 3.ண் - ட் (பண்டம்)

★ 4. ந் - த் (சந்தம்) 5. ம் - ப் (கம்பம்) 6. ன் - ற் (தென்றல்)

**சிறுவினா**

**1) பண்புப் பெயர்ப் புணர்ச்சியில் இடம்பெறும் விதிகளைப் பட்டியலிடுக.**

**பண்புப் பெயர்ப் புணர்ச்சியில் இடம்பெறும் விதிகள்:-**

★ ஈறுபோதல் → இடைஉகரம் இ ஆதல் → ஆதி நீடல்

★ அடிஅகரம் ஐ ஆதல் → தன்னொற்று இரட்டல் → முன்நின்ற மெய்திரிதல்

★ இனம் மிகல் →இனையவும்

**2) பைந்தளிர் - இச்சொல்லுக்குப் புணர்ச்சி விதி தருக.**

**பைந்தளிர் = பசுமை + தளிர்**

★ விதி 1 - 'ஈறுபோதல்' ('மை' கெட்டது) பசு + தளிர்

★ விதி 2 - 'அடி அகரம் ஐ ஆதல்' ('அ' 'ஐ'ஆகத் திரிந்தது) பைசு + தளிர்

★ விதி 3 - 'இனையவும்' ('சு' கெட்டது) பை + தளிர்

★ விதி 4 - 'இனமிகல்' ('ந்' தோன்றியது) பை + ந் + தளிர் = பைந்தளிர்

## பகுபத உறுப்புகள்

**1) பெயர், வினை, இடை, உரிச் சொற்களுள் பகுபத, பகாபத சொற்கள் யாவை?**

**பகுபதச் சொற்கள்:-**

★ பெயர்ச்சொல் → வினைச்சொல் ஆகியவைப் பகுபதச் சொற்கள்

**பகாபதச் சொற்கள்:-**

★ இடைச்சொல் → உரிச்சொல் ஆகியவைப் பகாபதச் சொற்கள்

**2) பகுதி என்றால் என்ன?**

**பகுதி:-**

★ ஒரு சொல்லின் அடிச்சொல்லே பகுதி ஆகும்.

★ இது முதலினை என்றும் அழைக்கப்படும். → ஏவல் சொல்லாக அமையும்.

★ (எ.கா.) பாடு, ஆடு, ஓடு, செய், நட, படி





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) விகுதி என்றால் என்ன?**

**விகுதி:-**

★ பகுபதச் சொல்லின் இறுதியில் வரும் சொல் விகுதி ஆகும்.

★ திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

★ இலக்கணப் பொருண்மைகளை உணர்த்தவும் விகுதி பயன்படுகிறது.

**4) ஆன், ஆள், து, அ ஆகிய விகுதிகளின் திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் கூறுக.**

| விகுதி | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| ஆன் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை |
| ஆள் | உயர்திணை | பெண்பால் | ஒருமை | படர்க்கை |
| து | அஃறிணை | ஒன்றன்பால் | ஒருமை | படர்க்கை |
| அ | அஃறிணை | பலவின்பால் | பன்மை | படர்க்கை |

**5) விகாரம் என்றால் என்ன?**

**விகாரம்:-**

★ பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவை புணரும்போது ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.

★ ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாக திரிதல் ➔ கெடுதல்

★ நெடில் குறிலாக மாறுதல் போன்றவை விகாரம் ஆகும்.

★ (எ.கா.) நின்றான் = நில் (ன்) + ற் + ஆன். 'ல்' 'ன்' ஆனது பகுதி விகாரம் ஆகும்.

## படைப்பாக்க உத்திகள்

**1) உவமை என்றால் என்ன?**

**உவமை:-**

★ ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை ஆகும்.

**2) உவமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**உவமையின் வகைகள்:-**

★ உவமை நான்கு வகையில் தோன்றும். அவை:-

★ வினை ➔ பயன் ➔ வடிவம் ➔ நிறம்

**3) உவமையின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**உவமையின் வகைகள்:-**

★ வினை உவமை - புலி போலப் பாய்ந்தான்

★ பயன் உவமை - மழை போலக் கொடுக்கும் கை

★ வடிவ உவமை - துடி போலும் இடை

★ நிற உவமை - தளிர் போலும் மேனி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4) உவமையின் சிறப்பினைக் கூறுக.**

**உவமையின் சிறப்பு:-**

★ ஒரு பொருளை விளக்கவும் தெளிவுபடுத்தவும் அழகுபடுத்தவும் உவமையே எளியது ஆகும்.

★ சங்கப்பாடல்களில் பெரும்பாலும் உவமை அணியே இடம்பெற்றுள்ளது.

**5) உருவகம் என்றால் என்ன?**

**உருவகம்:-**

★ உவமையையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபடுத்தாமல் இரண்டும் ஒன்றே எனக்கூறுவது 'உருவகம்' ஆகும்.

**6) உருவகத்தின் சிறப்பினைக் கூறுக.**

**உருவகத்தின் சிறப்பு:-**

★ உருவகம் ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறப்பாக அமைவது ஆகும்.

★ ஆற்றலும் அழகும் இனிமையும் நிறைந்து காணப்படும்.

**7) பாஞ்சாலி சபதத்தில் அர்ச்சுனன் மேகங்களுக்குக் கூறுகின்ற உவமைகளைக் கூறுக.**

**மேகங்களுக்குக் கூறும் உவமைகள்:-**

★ தீயின் குழம்புகள் ➔ செழும்பொன் காய்ச்சிவிட்ட ஓடைகள்

★ தங்கத்தீவுகள் ➔ நீலப்பொய்கைகள் ➔ தங்கத்தோணிகள்

★ கருஞ்சிகரங்கள் ➔ தங்கத் திமிங்கலங்கள்

**8) உருவகத்தின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் கூறுக.**

**உருவகத்தின் வகைகள்:-**

★ வினை உருவகம் - எண்ணவலை பின்னும் மூளைச் சிலந்தி

★ பயன் உருவகம் - ஆவேசப் புயல்களாலும் அசைக்க முடியாத ஆகாசப் பூ

★ வடிவ உருவகம் - நீலவயலின் நட்சத்திர மணிகள்

★ நிற உருவகம் - மலைக்கிழவியின் நரைத்த கூந்தல்

**9) உள்ளுறை உவமம் என்றால் என்ன?**

**உள்ளுறை உவமம்:-**

★ அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவது உள்ளுறை உவமம் எனப்படும்.

**10) இறைச்சி என்றால் என்ன?**

**இறைச்சி:-**

★ உரிப்பொருளோடு நேரடியாகத் தொடர்பில்லாமல், குறிப்பால் பொருள் உணர்த்துவது இறைச்சி ஆகும்.

## பா இயற்றப் பழகலாம்

**1) செய்யுளைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?**

**செய்யுள் - வேறு பெயர்கள்:-**

★ பா ➔ செய்யுள் ➔ தூக்கு ➔ கவி ➔ கவிதை ➔ பாட்டு

**2) நான்கு வகை பாக்களையும் அவற்றின் ஓசைகளையும் கூறுக.**

**பாக்களும் ஓசைகளும்:-**

★ வெண்பா - செப்பலோசை ➔ ஆசிரியப்பா - அகவலோசை

★ கலிப்பா - துள்ளலோசை ➔ வஞ்சிப்பா - தூங்கலோசை

**3) அடிகளையும் அவற்றிற்கான சீர்களையும் கூறுக.**

**அடிகளும் சீர்களும்:-**

★ குறளடி - இரண்டு சீர்கள் ➔ சிந்தடி - மூன்று சீர்கள்

★ அளவடி - நான்கு சீர்கள் ➔ நெடிலடி - ஐந்து சீர்கள்

★ கழிநெடிலடி - ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட சீர்கள்

**4) ஆசிரியப்பா - குறிப்பு வரைக.**

**ஆசிரியப்பா:-**

★ ஆசிரியப்பா பா இயற்றுவதற்குரிய எளிய வடிவம் ஆகும்.

★ ஆசிரியப்பா அகவல் ஓசை பெற்று வரும்.

★ எனவே, இது அகவற்பா என்றும் அழைக்கப்படுகிறது.

★ பெரும்பாலும் இரண்டு அசைகளால் அமையும்.

**5) நேரசைகள் அமையும் முறையைக் கூறுக.**

**நேரசைகள்:-**

★ குறில் தனித்து வருதல் - க ➔ குறில் ஒற்றுடன் வருதல் - கண்

★ நெடில் தனித்து வருதல் - பா ➔ நெடில் ஒற்றுடன் வருதல் - பார்

**6) நிரையசைகள் அமையும் முறையைக் கூறுக.**

**நிரையசைகள்:-**

★ இருகுறில் இணைந்து வருதல் - அக

★ இருகுறில் இணைந்து ஒற்றுடன் வருதல் - அகம்

★ குறில்நெடில் இணைந்து வருதல் - கலா

★ குறில்நெடில் இணைந்து ஒற்றுடன் வருதல் - கலாம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**7) நேரிசை ஆசிரியப்பா - குறிப்பு வரைக.**

**நேரிசை ஆசிரியப்பா:-**

★ இறுதி அடிக்கு முந்தைய அடி மூன்று சீர்களைப் பெற்று வருவது நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

**8) இணைக்குறள் ஆசிரியப்பா - குறிப்பு வரைக.**

**இணைக்குறள் ஆசிரியப்பா:-**

★ முதலடியும் இறுதியடியும் நான்கு சீர்களைப் பெற்று,

★ இடையடிகள் இணை இணையாய் இருசீர்களாகவும் மூன்று சீர்களாகவும் வருவது இணைக்குறள் ஆசிரியப்பா ஆகும்.

**9) நிலைமண்டில ஆசிரியப்பா - குறிப்பு வரைக.**

**நிலைமண்டில ஆசிரியப்பா:-**

★ எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்று வருவது நிலைமண்டில ஆசிரியப்பா ஆகும்.

★ இது, 'ஏ' என்ற எழுத்தாலும் 'என்' என்ற அசைச் சொல்லாலும் முடியும்.

**10) அடிமறிமண்டில ஆசிரியப்பா - குறிப்பு வரைக.**

**அடிமறிமண்டில ஆசிரியப்பா:-**

★ பாடலில் உள்ள அடிகளை மாற்றி மாற்றி அமைத்தாலும் ஓசையும் பொருளும் மாறாது அமைவது அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆகும்.

**11) ஆசிரியப்பாவின் இனங்கள் யாவை?**

**ஆசிரியப்பாவின் இனங்கள்:-**

★ ஆசிரியத்தாழிசை ➔ ஆசிரியத்துறை ➔ ஆசிரியவிருத்தம்

## கலைச்சொல்லாக்கம்

**1) அகராதி, கலைச்சொல் - வேறுபடுத்துக.**

| அகராதி | கலைச்சொல் |
|---|---|
| பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவது | பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் உள்ள சொற்களை அடையாளம் காட்டுவது ஆகும். |
| (எ.கா.) ஞாயிறு - சூரியன், வாரத்தின் முதல் நாள் | (எ.கா.) cell phone - கைப்பேசி |

## ஆக்கப்பெயர்கள்

**1) ஆக்கப்பெயர்கள் என்றால் என்ன?**

**ஆக்கப்பெயர்கள்:-**

★ பெயர் அல்லது வினைச்சொற்களுடன் விகுதிகளைச் சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச்சொற்கள் ஆக்கப் பெயர்கள் எனப்படும்.

**2) ஆக்கப்பெயர் விகுதிகள் என்றால் என்ன? சில ஆக்கப்பெயர் விகுதிகளை எழுதுக.**

**ஆக்கப்பெயர் விகுதிகள்:-**

★ பெயர்ச்சொற்களை ஆக்கப் பயன்படும் விகுதிகள் ஆக்கப்பெயர் விகுதிகள் எனப்படும்.

★ காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர், மானம் போன்றவை ஆக்கப் பெயர் விகுதிகள் ஆகும்.

**3) ஆக்கப் பெயர்களின் பயன்கள் யாவை?**

**ஆக்கப் பெயர்களின் பயன்கள்:-**

★ தமிழ்ச்சொற்களோடு ஆக்கப்பெயர் விகுதிகள் சேரும்போது எண்ணற்ற புதுச்சொற்கள் உருவாகின்றன.

★ இதனால், தமிழின் சொற்களஞ்சியம் விரிவடைகின்றது.

**4) காரன் விகுதி சேர்க்கப்பட்ட ஆக்கப்பெயர்கள் சிலவற்றைக் கூறுக.**

**காரன் விகுதி சேர்க்கப்பட்ட ஆக்கப்பெயர்கள்:-**

★ வண்டி+காரன் = வண்டிக்காரன் சினிமா+காரன் = சினிமாக்காரன்

★ மாட்டு+காரன் = மாட்டுக்காரன் வீட்டு+காரன் = வீட்டுக்காரன்

★ ஆட்டோ+காரன் = ஆட்டோக்காரன்

**5) ஆக்கப்பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**ஆக்கப்பெயர்ச்சொற்களின் வகைகள்:-**

★ ஆக்கப்பெயர்ச்சொற்கள் ஈற்றில் நிற்கும் விகுதிகளைக் கொண்டு மூன்று வகைப்படும். அவை:-

★ பெயருடன் சேரும் விகுதிகள்

★ வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்

★ பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**6) காரன், காரர், காரி ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகள் எந்த பொருளில் பயன்படுத்தப்படும்?**

**காரன், காரர், காரி ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகளின் பயன்பாடு:-**

★ காரன், காரர், காரி ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகள் உடைமை, உரிமை, உறவு, தொழில் ஆகிய நான்கு பொருள்களில் பயன்படுத்தப்படும்.

★ (எ.கா.) வீடு+காரன் = வீட்டுக்காரன் - உடைமை

★ தமிழ்நாடு+காரி = தமிழ்நாட்டுக்காரி - உரிமை

★ உறவு+காரர் = உறவுக்காரர் - உறவு

★ தோட்டம்+காரர் = தோட்டக்காரர் - தொழில்

**7) வினையுடனும் எச்சத்துடனும் சேரும் ஆக்கப்பெயர் விகுதிகள் யாவை?**

**வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்:-**

★ வினையுடனும் எச்சத்துடனும் 'மானம்' என்னும் ஆக்கப்பெயர் விகுதி சேரும்.

★ (எ.கா.) அடை+மானம் = அடைமானம் கட்டு+மானம் = கட்டுமானம்

★ தேய்+மானம் = தேய்மானம்

**8) பெயருடனும் வினையுடனும் சேரும் ஆக்கப்பெயர் விகுதிகள் யாவை?**

**பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்:-**

★ பெயருடனும் வினையுடனும் 'அகம்' என்னும் ஆக்கப்பெயர் விகுதி சேரும்.

★ (எ.கா.) அச்சு+அகம் = அச்சகம் ➔ அலுவல்+அகம் = அலுவலகம்

## மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்

**குறுவினா**

**1) நூல்கள், இதழ்களில் தோன்றும் பிழைகள் யாவை?**

**நூல்கள், இதழ்களில் தோன்றும் பிழைகள்:-**

★ எழுத்துப் பிழைகள் ➔ தொடர்ப் பிழைகள்

★ மயங்கொலிப் பிழைகள் ➔ ஒருமை பன்மை பிழைகள்

**2) திருத்தக் குறியீடுகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**திருத்தக் குறியீடுகளின் வகைகள்:-**

★ திருத்தக் குறியீடுகள் ஐந்து வகைப்படும். அவை: ★ பொதுவானவை

★ நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவை ★ இடைவெளி தரவேண்டியவை

★ இணைக்க வேண்டியவை ★ எழுத்து வடிவம்

சுருதல் வினாக்கள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**சிறுவினா**

**அச்சுப்படி திருத்துபவரின் பணிகளை விவரிக்க.**

**அச்சுப்படி திருத்துபவரின் பணிகள்:-**

★ மூலப்படியில் உள்ளபடியே செய்திகள் அச்சாகி உள்ளனவா என்று ஒவ்வொரு வரியையும் கவனமாகப் படிக்க வேண்டும்.

★ செய்தியின் உள்ளடக்கம், புள்ளிவிவரங்கள், எண்கள், அட்டவணைகள் போன்றவை சரியாக உள்ளனவா என்பதை மூலப்படியோடு ஒப்பிட்டுக் கவனித்தல் வேண்டும்.

★ ஏனெனில், புள்ளி விவரங்கள் மாறினால் செய்தியின் பொருளில் முரண்பாடு ஏற்படும்.

★ அச்சுப்படி திருத்துவோர் செய்தியின் உருவையோ உள்ளடக்கத்தையோ மாற்றுதல் கூடாது.

★ பிழை ஏற்பட்ட சொல்லின்மீது எழுதக் கூடாது.

★ ஒரு வரியின் இடப்பக்க பாதியில் பிழை இருந்தால், இடப்பக்க ஓரத்திலும், வலப்பக்க பாதியில் பிழை இருந்தால், வலப்பக்க ஓரத்திலும் திருத்தம் தருதல் வேண்டும்.

★ பிழைகளை கோடு இழுத்துக் காட்டும்போது, மேலும் கீழும் உள்ள வரிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

★ ஒரு வரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிழைகள் இருந்தால் பிழைகளைக் குறிக்கும் கோடுகளைத் தெளிவாகக் காட்டல் வேண்டும்.

★ ஒரு சொல்லில் பல பிழைகள் இருந்தால் அச்சொல்லை முழுவதுமாக நீக்கிவிட்டுச் சரியான சொல்லைத் தெளிவாகப் பக்க ஓரத்தில் தருதல் வேண்டும்.

★ எண்களின் இடையில் பிழை இருந்தால் அந்தத் தொகையை முழுவதுமாக எழுதிக்காட்ட வேண்டும்.

★ அச்சுப்படியில் இருக்கும் வண்ணத்திற்கு மாறான வண்ணத்தைப் பயன்படுத்த வேண்டும். இது பிழைகளைத் தெளிவாகக் கண்டறிய உதவும்.

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# திருக்குறள்

## குறுவினா

**1) மலையினும் பெரியது எது?**

**மலையினும் பெரியது:-**

★ தன் நிலையில் இருந்து மாறாமல், அடக்கத்தோடு வாழ்பவன் உயர்ந்தவன்.

★ அவனின் உயர்வு மலையைக் காட்டிலும் உயர்ந்ததாகும்.

**2) வள்ளுவர் நாவைக் காக்க வேண்டும் என்று ஏன் கூறுகிறார்?**

**நாவைக் காக்க வேண்டும்:-**

★ ஒருவர் எதைக் பாதுகாக்காமல் விட்டாலும், தன் நாவைக் காக்க வேண்டும்.

★ இல்லையெனில், சொல்குற்றத்தில் சிக்க துன்பப்படுவர்.

**3) பொருளீட்டுவதற்கான காரணமாக வள்ளுவர் கூறுவது யாது?**

**பொருளீட்டுவதற்கான காரணம்:-**

★ ஒருவன் விடாமுயற்சி செய்து பொருள் ஈட்ட வேண்டும்.

★ அவ்வாறு பொருள் ஈட்டுவது தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

**4) உயிர் வாழ்பவன் யார்? இறந்தவன் யார்?**

**உயிர் வாழ்பவன்:-**

★ உலக நடைமுறைகளோடு ஒத்துப் போகிறவனே உயிர் வாழ்பவன் ஆவான்.

**இறந்தவன்:-**

★ உலக நடைமுறைகளோடு ஒத்துப் போகாதவன் இறந்தவனாகவே கருதப்படுவான்.

**5) நிலைத்து நிற்பது எது என்று வள்ளுவர் கூறுகின்றார்?**

**நிலைத்து நிற்பது:-**

★ இணையற்ற உயர்ந்த புகழே உலகில் நிலைத்து நிற்கும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

**6) தவம் இருப்பவர்க்கு எப்பொழுது ஞானம் வளரும்?**

**ஞானம் வளரும்:-**

★ பொன்னானது நெருப்பில் இட்டுச் சுடச்சுட ஒளிவிடும்.

★ அதுபோல, தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

**7) இன்பத்தைப் பெறுவதற்கான வழியாக வள்ளுவர் கூறுவது யாது?**

**இன்பத்தைப் பெறுவதற்கான வழி:-**

★ பேராசை ஒரு பெருந்துன்பம்

★ அத்துன்பம் தொலைந்துபோனால் இன்பத்தை இடைவிடாமல் பெறலாம்.

கூடுதல் வினாக்கள்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8) விரைவாகக் கெடுபவன் யார்?**

**விரைவாகக் கெடுபவன்:-**

★ மற்றவருடன் ஒத்துப் போகாதவன் ➔ தன் வலிமை அறியாதவன்

★ தன்னைப் பெரிதாக நினைப்பவன்

**9) உலகத்தையே பெற கருதினாலும் கிடைத்துவிடும் எப்பொழுது?**

**உலகத்தையே பெற கருதினாலும் கிடைத்துவிடும்:-**

★ உரிய காலத்தில் ➔ பொருத்தமான இடத்தில்

★ ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெற கருதினாலும் கிடைத்துவிடும்.

**10) திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

**திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள்:-**

★ உலகப் பொதுமறை ➔ பொய்யமொழி ➔ வாயுறை வாழ்த்து

★ முப்பால் ➔ உத்தரவேதம் ➔ தெய்வநூல்

**11) மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும் - எப்பொழுது?**

**மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்:-**

★ தங்களின் மகிழ்ச்சியில் கடமையை மறக்கும்போது மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

**12) எண்ணியதை அடைதல் எளிது எவ்வாறு?**

**எண்ணியதை அடைதல் எளிது:-**

★ எப்போதும் எண்ணியதையே எண்ணிக்கொண்டிருந்தால், எண்ணியதை அடைவது எளிது.

**13) யாரைத் துணையாக்கிக் கொள்ள வேண்டும்?**

**துணையாக்கிக் கொள்ள வேண்டியவர்:-**

★ முகக்குறிப்பில் அகக்குறிப்பை அறிபவரைத் துணையாக்கிக் கொள்ள வேண்டும்.

**14) யாரின் பகையைப் பெறக்கூடாது?**

**பகையைப் பெறக்கூடாது:-**

★ வில் வீரரின் பகையைப் பெற்றாலும்,

★ சொல்வன்மை உடைய அறிஞரின் பகையைப் பெறக்கூடாது.

**15) யார் அலைந்து கெடட்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?**

**அலைந்து கெடட்டும்:-**

★ பிறரிடம் கையேந்தி உயிர்வாழும் நிலையை உருவாக்கியவன் அலைந்து கெடட்டும் என்கிறார் வள்ளுவர்.



**சோர்வு, வறுமை, தீயசெயல் மூன்றிலிருந்தும் நம்மைக் காப்பது உழைப்பு.**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com





## சிறுவினா

**1) உவமை அணியினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**அணி விளக்கம்:-**

★ உவமை, உவமேயம் இரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

**குறள்:-**

**மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்.**

**குறள் விளக்கம்:-**

★ மருத்துவக்குணம் உள்ள மரமானது தன் உறுப்புகள் அனைத்தையும் பிறருக்கு மருந்தாகத் தந்து உதவும்.

★ அதுபோல, பெருந்தன்மை உடையவரிடம் உள்ள செல்வம் அனைவருக்கும் பயன்படும்.

**பொருத்தம்:-**

★ உவமை - மருத்துவக்குணம் உள்ள மரம்

★ உவமேயம் - பெருந்தன்மை உடையவரின் செல்வம்

★ உவம உருபு - அற்றால்

**2) நிலையாமை குறித்து வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.**

**நிலையாமை:-**

★ நாக்கு அடைத்து, விக்கல் வந்து, உயிர்க்கு இறுதி வரும்முன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும்.

**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்.**

★ இந்த உலகம், நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் நிலையாமைப் பெருமை உடையது.

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு.**

★ ஒரு பொழுதுகூட வாழ்வின் நிலையாத் தன்மையைச் சிந்திக்காதவர்கள் எண்ணும் எண்ணங்கள் கோடியைக் காட்டிலும் மிகுதியானது.

**ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல.**

**3) இன்பத்தை அடைவதற்கான வழிகளை வள்ளுவர் வழி நின்று விளக்குக.**

**இன்பத்தை அடைவதற்கான வழி:-**

★ பேராசை என்னும் பெருந்துன்பம் தொலைந்துபோனால் இன்பத்தை இடைவிடாமல் பெறலாம்.

**இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ ஒருபோதும் நிறைவுசெய்ய முடியாத ஆசையை விட்டொழித்தால், நிலையான இன்பம் இயல்பாக வரும்.

**ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்.**

**4) பொச்சாவாமை குறித்து வள்ளுவர் கூறுவது யாது?**

**பொச்சாவாமை:-**

★ மகிழ்ச்சியில் கடமையை மறக்கும்போது மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.**

★ எப்போதும் எண்ணியதையே எண்ணிக்கொண்டிருந்தால், எண்ணியதை அடைதல் எளிதானது ஆகும்.

**உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்.**

**5) குறிப்பறிதல் பற்றி வள்ளுவரின் கருத்தைக் கூறுக.**

**குறிப்பறிதல்:-**

★ முகக்குறிப்பில் அகக்குறிப்பை அறிபவரை எந்த பொறுப்பைக் கொடுத்தாவது துணையாக்கிக் கொள்ள வேண்டும்.

**குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்.**

★ கண்ணின் குறிப்புகளை உணர்பவரைப் பெற்றால் பகையையும் நட்பையும் அவரது கண்களே அறிவித்துவிடும் என்கிறார் வள்ளுவர்.

**பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்**
**வகைமை உணர்வார்ப் பெறின்.**

**6) பகைத்திறம் தெளிதல் குறித்து வள்ளுவர் கூறும் செய்தி யாது?**

**பகைத்திறம் தெளிதல்:-**

★ ஒருவன் விளையாட்டுக்குக் கூட பகை என்னும் பண்பற்ற ஒன்றை விரும்பக் கூடாது.

**பகைஎன்னும் பண்பில் அதனை ஒருவன்**
**நகையேயும் வேண்டற்பாற்று அன்று.**

★ வில் வீரரின் பகையைப் பெற்றாலும், சொல்வன்மை உடைய அறிஞரின் பகையை பெறக்கூடாது.

**வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்லேர் உழவர் பகை.**

★ சிறியதாக இருக்கையிலேயே முள்மரத்தைக் களைந்து விட வேண்டும். அது முதிர்ந்துவிட்டால், வெட்டுபவரின் கையையே வருத்தும்.

★ அதுபோல, பகையும் சிறிய அளவில் இருக்கும்போதே வெட்டி விட வேண்டும்.

**இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து.**

**7) மருத்துவர் எவ்வாறு செயல்பட வேண்டும்?**

**மருத்துவர் செயல்படும் முறை:-**

★ நோய், அதன் காரணம், அதை நீக்கும் வழி ஆகியவற்றை ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

★ நோயாளின் வயது, நோயின் அளவு, மருத்துவத்தின் காலம் ஆகியவற்றையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

**உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்.**

**8) இரவச்சம் பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?**

**இரவச்சம்:-**

★ பிறரிடம் கையேந்தி உயிர்வாழும் நிலையை உருவாக்கியவன் அலைந்து கெடட்டும்.

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்.**

★ பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.

**உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்.**

**9) சொற்பொருள் பின்வரும் நிலையணியை நும் பாடப்பகுதியில் உள்ள திருக்குறளைக் கொண்டு விளக்குக.**

**அணி விளக்கம்:-**

★ செய்யுளில் முன்னர் வந்த ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து அதே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

**குறள்:-**

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

**குறள் விளக்கம்:-**

★ நோய், அதன் காரணம், அதை நீக்கும் வழி ஆகியவற்றை ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**பொருத்தம்:-**

★ இக்குறளில் 'நோய்' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.



www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## விரிவானம் - நாடக வடிவம்

### பிம்பம்

**காட்சி:** *1* **இடம்:** ஆசிரியர் வீடு **நேரம்:** இரவு

**கதை மாந்தர்கள்:** **ஆசிரியர்**, **ஆசிரியரின் பிம்பம்**

(கதவைத் தட்டும் சத்தம் கேட்டு ஆசிரியர் வெளியே சென்று கதவைத் திறக்கிறார். பிம்பம் உள்ளே வந்தது)

**ஆசிரியர்:** உட்கார்

**பிம்பம்:** இல்லை வேண்டாம்!

(பிம்பம் வீட்டைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அங்கிருந்த ஓர் அறையின் அருகில் செல்கிறது)

**பிம்பம்:** நான் இதன் உள்ளே நுழைகிறேன்.

(ஆசிரியர் பதில் அளிப்பதற்குள் அது உள்ளே நுழைந்தது. உள்ளே இருந்து எதையோ கொண்டுவந்து வெளியில் போட்டது)

**பிம்பம்:** இது என்ன?

**ஆசிரியர்:** இது என் அப்பாவின் சட்டை.

**பிம்பம்:** இதை இன்னமும் எதற்கு வைத்திருக்கிறாய்?

**ஆசிரியர்:** உபயோகப்படுத்தத்தான்.

**பிம்பம்:** இதை இன்னுமா உபயோகப்படுத்துகிறாய்?

**ஆசிரியர்:** ஆம்! பல சமயங்களில், சந்தர்ப்பங்களில்!.

**பிம்பம்:** உன்னிடம் உன் சட்டை இருக்குமே?

**ஆசிரியர்:** இருக்கும் அதோடு இதையும் உபயோகித்துக் கொள்கிறேன்.

**பிம்பம்:** என் அவ்வாறு செய்கிறாய்?

**ஆசிரியர்:** என் சட்டை என்னை முழுதும் போர்த்தாதபோது அப்பாவின் சட்டையை நான் அணிந்துகொள்வேன். இது சில சமயங்களில் என்னை இறுக்கிக்கொள்கிறது. உனக்குத் தெரியாதா?

**பிம்பம்:** சரி

(பிம்பம் சட்டையை அறைக்குள் போட்டுவிட்டு மற்றொரு அறைக்குள் சென்று சிலவற்றைக் கொண்டுவந்து வெளியே போட்டது.)

**பிம்பம்:** இது என்ன?

**ஆசிரியர்:** இது ஒரு கவுன்!

**பிம்பம்:** இந்தக் கவுன் உனக்கெதுக்கு?

**ஆசிரியர்:** சமயா சமயங்களில் போட்டுப் பார்த்துக் கொள்ளத்தான்.

**பிம்பம்:** இதைப் போட்டுக்கொண்டு எப்படி வெளியே வருகிறாய்? ஒரு ஆண் மகனாய் எப்படி வெளியே பிரவேசிக்கிறாய்.?



புத்தகங்களும், நண்பர்களும் அதிகமாகவும் நல்லதாகவும் இருக்க வேண்டும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**ஆசிரியர்:** இந்த கவுன் அம்மா எனக்காக வாங்கியது. என் அம்மாவுக்குப் பெண் குழந்தை இல்லாததால் எனக்குப் போட்டு திருப்தி கொண்டாள்.

**பிம்பம்:** இது உனக்கு கஷ்டமாக இல்லையா?

**ஆசிரியர்:** முதலில் இது கஷ்டமாகத்தான் இருந்தது. பின் இது சவுகரியமாய்ப் போச்சு. சில துஷ்ட மிருகங்கள் என்னைச் சீண்டும்போது நான் இதற்குள் ஒளிந்துகொள்வேன்.

**பிம்பம்:** ஆகவே, நீ தப்பித்தாய்!.

**ஆசிரியர்:** ஆம்! எல்லாமே எதனிடமிருந்தோ தப்புதல்தான்.

(மீண்டும் அறைக்குள் சென்ற பிம்பம் எதையோ வாரிக் கொண்டுவந்து போட்டது.)

**பிம்பம்:** இதெல்லாம் என்ன?

**ஆசிரியர்:** இவை என் முகங்கள்

**பிம்பம்:** இத்தனை முகங்கள் உனக்கெதுக்கு?

**ஆசிரியர்:** இவை என் முகங்கள். தேவைக்கேற்ப நான் அணிந்துகொள்பவை.

**பிம்பம்:** நீ என்னையும் உன்னையும் ஏமாற்றுகிறாய்!

**ஆசிரியர்:** ஆம்! என்னை நானும் உன்னை நீயும் ஏமாற்றிக் கொள்கிறோம்.

**பிம்பம்:** சூழ்நிலை தவறி, பாத்திரம் தவறி, முகத்தை மாட்டிக் கொள்ள மாட்டாயா?

**ஆசிரியர்:** மாறாது. மாட்டேன். என்முன் முகம் காட்டும் முகங்கள் என் கண்ணாடி.

**பிம்பம்:** அம்மாவிடம் கூடவா இவ்வாறு உள்ளாய்?

**ஆசிரியர்:** ஆம். அவளிடம் காட்டுவதற்காக ஒரு முகம் இருக்கிறது.

**பிம்பம்:** மனைவியிடம் கூடவா?

**ஆசிரியர்:** அவளிடம் காட்ட என்னிடம் பல முகங்கள் உள்ளன. உண்மையில் நான் அவள் முகத்தையோ அவள் என் முகத்தையோ இன்றுவரை பார்த்ததில்லை.

(ஆசிரியர் கீழே கிடக்கும் சில முகங்களைக் கையில் எடுக்கிறார்.)

**ஆசிரியர்:** இவை என் சிநேகிதர்களுக்காக.. இவை என் தெருவுக்காக.. ஊருக்காக..

**பிம்பம்:** நீ இப்போது போட்டிருப்பதுகூட!

**ஆசிரியர்:** பொய்தான். போலிதான்

(ஆசிரியர் தன் முகத்தைக் கழட்டிக் கீழே போடுகிறார். சில நேரங்களுக்குப் பின்)

**பிம்பம்:** போய் வருகிறேன்.

**ஆசிரியர்:** சரி!

**பிம்பம்:** கடைசியாக ஒன்று. உன்னுடைய முகம்தான் எது?

**ஆசிரியர்:** எனக்கு முகமே கிடையாது!

(ஆசிரியர் கதவைத் தாழிட்டுக் கொள்கிறார்.)

**———————காட்சி முடிந்தது———————**



www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## வாடிவாசல்

**காட்சி:** *1* **இடம்:** வாடிவாசல் **நேரம்:** காலை

**கதை மாந்தர்கள்:** ஒரு சிறுவன், வாடிவாசலில் இருந்தவர்களில் சிலர், மருதன், பிச்சி (கிழக்கத்தியான்), ஜமீன்தார், கிழவன்

(வீரர்கள் காளையை அடக்குவதைப் பார்ப்பதற்காக வாடிவாசலில் மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஆள் உயர வேலி அடைப்பின்மீது உட்கார்ந்திருந்த சிறுவன்)

**சிறுவன்:** வாடிபுரம் காளை! கருப்புப் பிசாசு!

(அனைவருக்கும் நடுக்கம் ஏற்படுகிறது. வாடிவாசல் அமர்க்களப்படுகிறது. வீரர்கள் காரிக்கொம்புக்கு எட்டாதபடி பாதுகாத்துக் கொள்ள தவிக்கின்றனர். காளை ஆடி அசைந்து வந்து நிற்கின்றது.)

**பிச்சி:** மருதா!

(பிச்சி ஒரு முழு மூச்சு இழுக்கிறான். கைகளைத் தரையில் தேய்க்கிறான்.)

**பொதுமக்கள்** 1: கிழக்கத்தியான் காரியைப் பிடிக்கப் போறான்!

**பொதுமக்கள்** 2: பய செத்தான்!

**பொதுமக்கள்** 3: செல்லாயி வாடியிலே அவனுக்கு முடிவு போட்டிருக்கு!

**பொதுமக்கள்** 1: குருத்துப் பையன், அநியாயமா!

**பொதுமக்கள்** 2: பட்டு உருமாவுக்கு ஆசைப்பட்டு உசிரை இந்தான்னு கொடுக்கிறானே பாவி!

**பொதுமக்கள்** 3: ரெண்டு பவுனுத் தங்கம் கண்ணுல உறுத்துமுல்லே!

(இவ்வாறு, ஆளுக்கொரு அபிப்பிராயம் கூறிக்கொண்டிருக்கின்றனர். மேடையில் அமர்ந்திருந்த ஜமீன்தார் பிச்சியைப் பார்க்கின்றார்.)

**பொதுமக்கள்** 1: பார்த்தியா, காளை வரவும் கிழக்கத்தியான் பம்மிட்டான்.

**பொதுமக்கள்** 2: அவ்வளவுதான் பய!

**பொதுமக்கள்** 3: சும்மா ஆர்ப்பாட்டக்காரனுங்க!

**ஜமீன்தார்:** உளறாமே பாத்துக்கிட்ருங்க. அவன் ஒரு பிறவி! எந்த மாட்டு மேலே எப்படி விழணும்னு அவனுக்குச் சுபாவத்திலேயே ஊறிக் கிடக்கும்!

(காரி வாடிவாசலில் வந்து நிற்கின்றது.)

**பொதுமக்கள்** 1: ராஜாளி மாதிரி வந்து நிக்குது பாரு!



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பொதுமக்கள்** *2: நின்னுகுத்திக் காளைன்னா இதுதான்!*

**பொதுமக்கள்** *3: இதையா கிழக்கத்தியான் பிடிக்கப் போறான்?*

*(காளை வெளியில் வருகிறது. பிச்சி காளையின் கொம்புக்கு நேராகவும் மருதன் அதன் வால் பக்கமாகவும் நிற்கின்றார்கள். பிச்சி சமிக்ஞை செய்ததும் மருதன் காளையின் வாலைப் பிடிக்கிறான். காளை அவனை முட்டத் திரும்புகிறது. பிச்சி அதன்மீது பாய்கிறான்.)*

**பொதுமக்கள்** *1: அட விராலு மாதிரித் துள்ளுதுடா!*

**பொதுமக்கள்** *2: குதிரை கணக்கா எறியப் பாக்குது!*

**பொதுமக்கள்** *3: செத்தாண்டா பய ஊட்டி திருகி விழுந்து!*

**பொதுமக்கள்** *1: தூக்கிப் போட்டுப் பட்டையுரிச்சிடப் போகுது!*

**மருதன்:** பிடியை உட்டிராதே, பிச்சி

*(காளை ஆள் உயரத்துக்கு எகிறி குதிக்கிறது. பிச்சி அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்கிறான்.)*

**மருதன்:** பிடியை விட்டிராதே விட்டிராதே!

**பொதுமக்கள்** *1: ஒரு தவ்வுக்கு நின்னுட்டாண்டா!*

**பொதுமக்கள்** *2: இரண்டாவது தவ்வுல உருட்டிரும்!*

**பொதுமக்கள்** *3: கிழக்கத்தியான் கை அந்தா சளைக்குதுடா!*

**பொதுமக்கள்** *1: ஓ! இரண்டு தவ்வுக்கு நின்னுட்டான்.*

**மருதன்:** *பிச்சி பிச்சி! விட்டுராதே, இந்த ஒரு தவ்வுதான்!*

**பொதுமக்கள்** *1: காளையும் சளைக்குதுடோய் மூன்றாவது தவ்வுல உரமில்லே!*

**பொதுமக்கள்:** வாடிபுரம் காளை வாயப் பிளந்துடுச்சுடா!

*(பிச்சி காளையின் கொம்பில் கட்டப்பட்டிருந்த பட்டு உருமாவையும் தங்க நகைகள் கோர்த்த சங்கிலியையும் பறிக்கின்றான். பொதுமக்கள் அனைவரும் ஆராவரம் செய்கின்றனர். கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு ஒரு கிழவன் வருகிறான்.)*

**கிழவன்:** *இந்தா மவனே! உசிலனூர் அம்பிலியின் பேரைக் காப்பித்திட்டேடா. நீ மனுசனுக்குப் பொறக்கல்லேடா, புலிக்குப் பொறந்த பய வேறெத்தைச் சொல்றது!*

(**பிச்சியின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்து கொண்டிருக்கிறது**.)

**———காட்சி முடிந்தது———**





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## யானை டாக்டர்

**காட்சி:** *1* **இடம்:** முதுமலை **நேரம்:** காலை

**கதை மாந்தர்கள்:** **ஜெயமோகன்** (கதையாசிரியர்), **டாக்டர் கே.,** **குறும்பர்கள் - சிலர்** **வனஅதிகாரிகள் - சிலர்**

(முதுமலையில் ஒரு யானைக்குக் கால் வீங்கி இருப்பதை அறிந்து, டாக்டர் கே. ஜெயமோகன், சில வன அதிகாரிகள் அதைக் காணச் செல்கிறார்கள். ஜீப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு, காட்டிற்குள் செல்கின்றனர். காட்டின் யானைகள் இருக்கும் இடத்தைக் கண்டதும் டாக்டர் தன் கருவிகளை எடுத்துக் கொள்கிறார்.)

**டாக்டர்:** நீங்கள் இங்கேயே இருங்கள். அத கொஞ்சம் சதுப்புப் பகுதிக்குக் கொண்டுவரனும். மத்த யானைகள் விவரம் புரியாம ரெஸிஸ்ட் பண்ணும்.

**ஜெயமோகன்:** இந்தக் காயத்துக்குக் காரணம் மனுசங்கதான்னு யானைகளுக்குத் தெரியுமா?

**டாக்டர்:** கண்டிப்பா! நல்லாத் தெரியும்.

(மனிதர்களின் தவறான செயல்களால் யானைகள் மிகவும் பாதிக்கப்படுவதை டாக்டர் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுகிறார்)

**டாக்டர்:** உயிர் போற வலி இருந்தாலும் யானை அலறாது, துடிக்காது. யானை சம்மதிச்சா அதுக்கு மயக்க மருந்து கொடுக்காமலே சிகிச்சை பண்ணலாம்.

(டாக்டர் யானையை நெருங்கியபோது மற்ற யானைகள் அவரைத் தாக்கத் தயாராக நிற்கின்றன. டாக்டர் அசையாமல் சில நிமிடங்கள் நிற்கின்றார். சில மணி நேரங்களில் யானைகள் விலகச் சென்றுவிடுகின்றன. டாக்டர் மற்றவர்களை சைகைக் காட்டி அழைக்கிறார். யானைக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.)

**டாக்டர்:** ஒரு வாரம்கூட ஆகலை, பொழைச்சுது.

(டாக்டர் மருந்து வைத்து துணியால் கட்டினார். அதன்மேல், சேற்றை அள்ளிப் பூசினார்.)

**ஜெயமோகன்:** துணிக்கட்டை அவுத்திராதுல்ல?

**டாக்டர்:** அதுக்குத் தெரியும். யானைக்கு வெள்ளை நிறம் பிடிக்காது. சேறு பூசலையன்னா காலை நோண்டிக்கிட்டே இருக்கும்.

**ஜெயமோகன்:** குணமாயிடுமா?

**டாக்டர்:** அனேகமா பதினஞ்சு நாள்ல பழையபடி ஆகிடும்.

(சிகிச்சை முடிந்ததும் ஜீப் டாப்ஸ்லிப்புக்குத் திரும்புகிறது.)

**டாக்டர்:** என்ன ஓர் அற்புதமான படைப்பு. என்னிக்காவது தமிழ்நாட்டிலே யானை இல்லாமப் போனா அப்புறம் நம்ம பண்பாட்டுக்கே என்ன அர்த்தம்?

**———————காட்சி - 1 முடிந்தது———————**

**காட்சி:** *2* **இடம்:** டாக்டர் கே.வின் வீடு **நேரம்:** மாலை

**கதை மாந்தர்கள்:** டாக்டர் கே., ஜெயமோகன்

(ஒரு நாள் ஜெயமோகன் டாக்டர் கே.வின் வீட்டிற்குச் செல்கிறார். டாக்டர் தான் எழுதிய ஆய்வேட்டைக் காட்டுகிறார்.)

**டாக்டர்:** படிச்சுப் பாரு.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(இருவரும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருக்கின்றனர். நேரம் இரவாகிவிடுகிறது.)

**டாக்டர்:** கெளம்பறியா? வேணுமனா இங்கேயே தங்கிக்கோ

(டாக்டர் ஜெயமோகனுக்கு யானைகளைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தார். சில நேரங்களில் ஜெயமோகன் தூங்கிவிட்டார். மீண்டும் விழித்தபோது டாக்டர் சட்டையைப் போட்டுக்கொண்டிருந்தார்.)

**டாக்டர்:** வெளியே ஏதோ சத்தம் கேக்குது! யானை வாசமும் அடிக்குது

**ஜெயமோகன்:** யானைக்கூட்டம் வந்திருக்குமோ?

**டாக்டர்:** வழக்கமா இந்தப் பக்கம் வராது. ஏதோ காரணம் இருக்கணும்.

(இருவரும் புறப்பட்டு வெளியே செல்கிறார்கள். டாக்டர் குட்டி யானைப் பார்த்துவிட்டார்.)

**டாக்டர்:** குட்டி! இரண்டு வயசுக்குள்ள இருக்கும். இந்த வயசிலே தனியா வராதே. வா, பாப்போம்.

(இருவரும் யானையின் அருகில் செல்கிறார்கள்.)

**டாக்டர்:** ஈஸி ஈஸி

**ஜெயமோகன்:** காயம் பட்டிருக்கு

**டாக்டர்:** நில்லு

(டாக்டர் யானையின் அருகில் சென்று அதன் காலில் கண்ணாடி குத்திருப்பதைக் கண்டார்.)

**டாக்டர்:** இவனைப் படுக்க வைக்கணும். இப்பச் சொல்லிப் புரிய வைக்க முடியாது. போய் என்னோட கிட்டை எடுத்துட்டு வா.

(ஜெயமோகன் அவரது மருந்துப் பெட்டியைக் கொண்டு வருகிறார். டாக்டர் யானையின் காலில் இருந்த கண்ணாடியை அகற்றிவிட்டு, அதற்குக் கட்டுப் போடுகிறார்.)

**டாக்டர்:** ஒரு மணி நேரத்தில எந்திரிச்சுடுவான்! காலையிலே முதுமலைக்குத் திரும்பிப் போயிடுவான்.

**ஜெயமோகன்:** முதுமலைக்கா?

**டாக்டர்:** ஆமா, அங்கே இருந்துதான் வந்திருக்கான். நீயும் இவனைப் பார்த்திருக்க. ஒண்ணரை வருசம் முன்னாடி நாம முதுமலையிலே ஒரு யானைக்கு இதே மாதிரி ஒரு கண்ணாடியை எடுத்தோமே அப்ப அங்க இருந்ததுல ஒரு குட்டி யானை இது.

**ஜெயமோகன்:** எப்படித் தெரியும்?

**டாக்டர்:** ஏன் அங்க பார்த்த ஒரு மனுசனை உன்னால திரும்பிப் பாத்தா சொல்லிட முடியாதா?

**ஜெயமோகன்:** அவ்வளவு தூரம் உங்களைத் தேடியா வந்திருக்கான்? ஆச்சரியம்!

**டாக்டர்:** பாவம், நல்ல வலியிருந்திருக்கு. யானை சிறு தகவலைக்கூட மறப்பதில்லை!

(இருவரும் வீட்டை அடைகின்றனர். சிறிது நேரத்தில் மீண்டும் ஒரு சத்தம் கேட்கிறது. அங்கே ஒரு பெரிய யானைக் கூட்டமே நிற்கின்றது. ஜெயமோகன் விளக்கை அடிக்கப் போகிறார்.)

**டாக்டர்:** வேண்டாம்! வந்து கூட்டிக்கொண்டு போயிடும் வா!

(சிறிது நேரத்தில் இருபதுக்கும் மேற்பட்ட யானைகள் இணைந்து பேரொலி எழுப்பி டாக்டருக்கு நன்றி தெரிவித்தன.)

**———————காட்சி - 2 முடிந்தது———————**

கூடுதல் வினாக்கள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# கவிதைப் பேழை

## நூற்பெயர் - ஆசிரியர் பெயர்

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| யுகத்தின் பாடல் | சு. வில்வரத்தினம் |
| நன்னூல் | பவணந்தி முனிவர் |
| ஏதிலிக்குருவிகள் | அழகிய பெரியவன் |
| காவியம் | பிரமிள் |
| திருமலை முருகன் பள்ளு | பெரியவன் கவிராயர் |
| ஐங்குறுநூறு | பேயனார் |
| காவடிச்சிந்து | சென்னிகுளம் அண்ணாமலையார் |
| குறுந்தொகை | வெள்ளிவீதியார் |
| புறநானூறு | கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி |
| திருக்குறள் | திருவள்ளுவர் |
| பிள்ளைக்கூடம் | இரா. மீனாட்சி |
| நற்றிணை | போதனார் |
| தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| சீறாப்புராணம் | உமறுப்புலவர் |
| அகநானூறு | வீரை வெளியன் தித்தனார் |
| ஆத்மாநாம் கவிதைகள் | ஆத்மாநாம் |
| குற்றாலக் குறவஞ்சி | திரிகூட ராசப்ப கவிராயர் |
| திருச்சாழல் | மாணிக்கவாசகர் |
| புரட்சிக்கவி | பாரதிதாசன் |
| பதிற்றுப்பத்து | குமட்டூர்க் கண்ணனார் |
| ஒவ்வொரு புல்லையும் | இன்குலாப் |
| தொலைந்து போனவர்கள் | அப்துல் ரகுமான் |
| மனோன்மணீயம் | சுந்தரனார் |

## ஆசிரியர் குறிப்பு

### சு. வில்வரத்தினம்

★ சு. வில்வரத்தினம் பிறந்த ஊர் **புங்குடுத் தீவு (யாழ்ப்பாணம்).**

★ கவிதை இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறன் கொண்டவர் **சு.வில்வரத்தினம்.**

### பவணந்தி முனிவர்

★ பவணந்தி முனிவரின் உருவச் சிற்பம் உள்ள ஊர் **மேட்டுப்புதூர்** (ஈரோடு).

★ பவணந்தி முனிவரை நன்னூல் இயற்றும்படி கேட்டுக்கொண்ட சிற்றரசர் **சீயகங்கன்.**



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அழகிய பெரியவன்

★ அழகிய பெரியவனின் இயற்பெயர் **அரவிந்தன்.**

★ அழகிய பெரியவன் பிறந்த ஊர் **பேரணாம்பட்டு** (வேலூர்).

★ அழகிய பெரியவன் ஆற்றிய பணி **அரசுப்பள்ளி ஆசிரியர்.**

★ தமிழக அரசின் விருது பெற்ற அழகிய பெரியவனின் புதினம் **தகப்பன் கொடி.**

★ அழகிய பெரியவன் தமிழக அரசின் விருது பெற்ற ஆண்டு **2003.**

★ அழகிய பெரியவனின் சிறுகதை தொகுப்புகள் **குறடு** **நெரிக்கட்டு**

★ அழகிய பெரியவனின் கவிதை தொகுப்புகள்

➔ **உனக்கும் எனக்குமான சொல்** ➔ **அருப நஞ்சு**

★ அழகிய பெரியவனின் கட்டுரை தொகுப்புகள் மீள்கோணம் பெருகும் வேட்கை

## பிரமிள்

★ பிரமிள் என்ற பெயரில் கவிதைகள் எழுதியவர் **சிவராமலிங்கம்.**

★ பிரமிள் பிறந்த ஊர் **இலங்கை.**

★ பிரமிளின் புனைபெயர்கள் **பானுசந்திரன்** **அரூப் சிவராம்** **தருமு சிவராம்**

★ பிரமிளின் கவிதைத் தொகுப்பு பிரமிள் கவிதைகள்.

★ பிரமிளின் சிறுகதைத் தொகுப்பு **லங்காபுரி ராஜா.**

★ பிரமிளின் கட்டுரைத் தொகுப்பு **வெயிலும் நிழலும்.**

★ பிரமிள் எழுதிய நாடகம் **நக்ஷத்திரவாசி.**

## பெரியவன் கவிராயர்

★ பெரியவன் கவிராயர் வாழ்ந்த காலம் **18ஆம் நூற்றாண்டு.**

★ பெரியவன் கவிராயர் பிறந்த ஊர் **பண்புளிப்பட்டணம்** (**திருநெல்வேலி**).

★ பண்புளிப்பட்டணத்தின் வேறுபெயர்கள் **பண்பை**, **பண்பொழில்.**

## பேயனார்

★ சங்க காலப் புலவர்களில் ஒருவர் **பேயனார்**.

★ ‘ஆடுகம் விரைந்தே’ என்னும் தலைப்பில் உள்ள ஐங்குறுநூற்றுப் பாடலைப் பாடியவர் **பேயனார்.**

★ பேயனார் இயற்றிய பாடல்களின் எண்ணிக்கை **105.**

## சென்னிகுளம் அண்ணாமலையார்

★ அண்ணாமலையார் பிறந்த ஊர் **சென்னிகுளம்.**

★ காவடிச் சிந்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் **அண்ணாமலையார்.**

★ காவடிச் சிந்துக்கு மெட்டுகள் அமைத்தவர் **அண்ணாமலையார்.**

★ இருதயாலய மருதப்பத் தேவரின் அரசவைப் புலவராக இருந்தவர் **அண்ணாமலையார்.**

ஒருவரிச் செய்திகள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

★ சென்னிகுளம் அண்ணாமலையார் இயற்றிய நூல்கள் **வீரைத் தலபுராணம்**

★ **வீரை நவநீத கிருக்ஷ்ணசாமி பதிகம்** ★ **சங்கரன் கோவில் திரிபந்தாதி**

★ **கருவை மும்மணிக்கோவை** ★ **கோமதி அந்தாதி**

## வெள்ளிவீதியார்

★ சங்க காலப் பெண்பாற் புலவர்களில் ஒருவர் **வெள்ளிவீதியார்.**

★ வெள்ளிவீதியார் இயற்றிய பாடல்களின் எண்ணிக்கை **13.**

## கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி

★ அரிய குணங்களைத் தம் இளம் வயதிலேயே பெற்றிருந்தவர் **இளம் பெருவழுதி**.

★ கடற்செலவில் (கடற்பயணம்) இறந்தவர் **கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி**.

## இரா. மீனாட்சி

★ இரா. மீனாட்சியின் ஊர் **ஆரோவில் (பாண்டிச்சேரி).**

★ இரா. மீனாட்சியின் கவிதை **தொகுப்புகள்** **நெருஞ்சி** ★ **சுடுபூக்கள்**

★ **தீபாவளிப் பகல்** ★ **மறு பயணம்** ★ **வாசனைப்புல்** ★ **உதயநகரிலிருந்து**

## உமறுப்புலவர்

★ எட்டயபுரத்தின் அரசவைப் புலவராக இருந்தவர் **உமறுப்புலவர்.**

★ கடிகை முத்துப் புலவரின் மாணவர் **உமறுப்புலவர்.**

★ உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல்கள் சீதக்காதி அப்துல் காசிம் மரைக்காயர்.

★ உமறுப்புலவரின் மற்றொரு நூல் முதுமொழி மாலை.

## ஆத்மாநாம்

★ ஆத்மாநாமின் இயற்பெயர் **மதுசூதனன்.**

★ 'ழ' என்னும் சிற்றிதழை நடத்தியவர் **ஆத்மாநாம்.**

★ தமிழ்கவிதை ஆளுமைகளில் குறிப்பிடத்தக்கவர் **ஆத்மாநாம்.**

★ ஆத்மாநாமின் கவிதைத் தொகுப்பு காகிதத்தில் **ஒரு கோடு.**

★ ஆத்மாநாம் இயங்கிய தளங்கள் **கவிதை** **கட்டுரை** **மொழிபெயர்ப்பு**

## திரிகூட ராசப்ப கவிராயர்

★ திரிகூட ராசப்ப கவிராயர் பிறந்த ஊர் **திருநெல்வேலி.**

★ திரிகூட ராசப்ப கவிராயர் பணியாற்றிய கோவில் **குற்றாலநாதர் கோவில்.**

★ சைவ சமயக் கல்வியிலும் இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சி பெற்றவர் **திரிகூட ராசப்ப கவிராயர்.**

★ 'திருக்குற்றாலநாதர் கோவில் வித்துவான்' என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர் **திரிகூட ராசப்ப கவிராயர்.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



★ திரிகூட ராசப்ப கவிராயர் இயற்றிய நூல்கள் **குற்றால தலபுராணம்** ★ **யமக அந்தாதி**
★ **குற்றால மாலை** ★ **குற்றால சிலேடை** ★ **குற்றாலநாதர் பிள்ளைத்தமிழ்**
★ திரிகூட ராசப்ப கவிராயரைக் குற்றால குறவஞ்சி பாடும்படி கேட்டவர் **முத்து விசயரங்க சொக்கலிங்கனார்.**

## மாணிக்கவாசகர்

★ அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர் **மாணிக்கவாசகர்.**
★ சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவர் **மாணிக்கவாசகர்.**

## பாரதிதாசன்

★ பாரதிதாசனின் இயற்பெயர் **கனக சுப்புரத்தினம்.**
★ புரட்சிக்கவி என்று அழைக்கப்பட்டவர் **பாரதிதாசன்.**
★ 'பாவேந்தர்' என்று அழைக்கப்படுபவர் **பாரதிதாசன்.**
★ பிரெஞ்சு மொழியில் இருந்த தொழிலாளர் சட்டத்தைத் தமிழில் தந்தவர் **பாரதிதாசன்.**
★ 'குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்தியவர் **பாரதிதாசன்.**
★ பாரதிதாசனின் நூல்கள் குடும்ப விளக்கு **பாண்டியன் பரிசு** ★ **இருண்ட வீடு**
★ **சேர தாண்டவம்** ★ **பிசிராந்தையார்** ★ **அழகின் சிரிப்பு**
★ பாரதிதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாடக நூல் பிசிராந்தையார்.
★ பாரதிதாசன் பெயரில் பல்கலைக் கழகம் உள்ள இடம் திருச்சி.

## குமட்டூர்க் கண்ணனார்

★ உம்பற்காட்டில் 500 ஊர்களையும் தென்னாட்டு வருவாயுள் பாதியையும் பரிசாகப் பெற்றவர் **குமட்டூர்க் கண்ணனார்.**

## இன்குலாப்

★ இன்குலாப்பின் இயற்பெயர் **சாகுல் அமீது.**
★ இன்குலாப்பின் கவிதைத் தொகுப்பு **ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்.**
★ இன்குலாப்பின் பிற படைப்புகள் **கவிதை** **கட்டுரை** **நாடகம்** **மொழிபெயர்ப்பு**
★ மரணத்துக்குப் பிறகு தன் உடலை அரசு மருத்துவக் கல்லூரிக்கு அளித்தவர் **இன்குலாப்.**

## அப்துல் ரகுமான்

★ அப்துல் ரகுமான் இயற்றிய கவிதை வடிவங்கள்
★ **புதுக்கவிதை** ★ **வசனகவிதை** ★ **மரபுக்கவிதை**
★ அப்துல் ரகுமான் ஆற்றிய பணி **தமிழ்ப் பேராசிரியர்.**
★ அப்துல் ரகுமான் பணியாற்றிய கல்லூரி **வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரி.**
★ வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவர் **அப்துல் ரகுமான்.**





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ அப்துல் ரகுமான் இயற்றிய நூல்கள்

★ **பால்வீதி** ★ **நேயர்விருப்பம்** ★ **பித்தன்** ★ **ஆலாபனை**

| விளக்கு | ஒளி, தெளிவாகக் கூறு |
| விலா | வயிற்றின் பக்கப் பகுதி |
| விளா | ஒரு வகை மரம் |
| விழா | திருவிழா |
| அலி | மூன்றாம் பாலினத்தவர் |
| அளி | கொடு |
| அழி | கெடு |
| ஒலி | ஓசை |
| ஒளி | வெளிச்சம் |
| ஒழி | அழி |
| வலி | வலித்தல் |
| வளி | காற்று |
| வழி | பாதை |
| புலி | ஒரு வகை விலங்கு |
| புளி | ஒரு வகை பழம் |
| காலை | காலைப்பொழுது |
| காளை | எருது |
| வலம் | வலப்பக்கம் |
| வளம் | செழிப்பு |
| வேலை | தொழில், கடல் |
| வேளை | நேரம் |
| வெல்லம் | இனிப்புப் பொருள் |
| வெள்ளம் | நீர்ப்பெருக்கு |
| கொல் | உயிரை எடு |
| கொள் | பெறுதல் |
| பல்லி | ஒரு வகை உயிரினம் |

| | |
|---|---|
| பள்ளி | கல்விக்கூடம் |
| ஆல் | ஒரு வகை மரம் |
| ஆள் | மனிதன் |
| ஆழ் | ஆழமான |
| கிலி | அச்சம் |
| கிளி | ஒரு வகை பறவை |
| கிழி | கிழித்தல் |
| விலை | பொருளின் மதிப்பு |
| விளை | உண்டாக்கு |
| விழை | விருப்பம் |
| வாலை | இளம்பெண் |
| வாளை | ஒரு வகை மீன் |
| வாழை | ஒரு வகை மரம் |
| கலை | வித்தை |
| களை | தேவையற்ற பயிர் |
| கழை | மூங்கில் |
| அலை | கடல் அலை |
| அளை | புற்று, தயிர் |
| அழை | கூப்பிடு |
| இலை | தாவரங்களின் ஓர் உறுப்பு |
| இளை | மெலிந்து போதல் |
| இழை | நூல் இழை |
| குலை | கொத்து |
| குழை | குழைதல் |
| மலை | பெருங்குன்று |
| மழை | மழை |
| சூலை | ஒரு வகை நோய் |
| சூளை | செங்கல் சூளை |
| வலை | மீன் பிடிக்கும் வலை |
| வளை | வளைவு |
| வழை | ஒரு வகை மரம் |
| தலை | உடலின் ஓர் உறுப்பு |
| தளை | கட்டுதல் |
| தழை | இலை, புல் போன்றவை |
| உலை | அடுப்பு உலை |
| உளை | பிடரி மயிர், சேறு |
| உழை | உழைத்தல், பாடுபடுதல் |

# தோஸ்த் தமிழ் உரை + 1

| | |
|---|---|
| தொலை | **அழித்துவிடு, தூரம்** |
| தொளை | **சந்து, ஓட்டை** |
| புல் | **ஒரு வகை தாவரம்** |
| புள் | **பறவை** |
| வால் | **விலங்குகளின் ஓர் உறுப்பு** |
| வாள் | **ஒரு வகை ஆயுதம்** |
| வாழ் | **வாழ்தல்** |

**ண, ந, ன வேறுபாடு**

| சொல் | பொருள் |
|---|---|
| கணம் | **நேரம்** |
| கனம் | **பளு** |
| ஆணி | **கூரிய இரும்புத்துண்டு** |
| ஆனி | **தமிழ் மாதங்களில் ஒன்று** |
| கணி | **கணக்கெடுத்தல்** |
| கனி | **பழம்** |
| தணி | **அடங்கு** |
| தனி | **தனித்திருத்தல்** |
| மணம் | **வாசனை** |
| மனம் | **உள்ளம்** |
| பாணம் | **அம்பு, ஒரு வகை பட்டாசு** |
| பானம் | **நீர் உணவு** |
| துணி | **ஆடை, துணிவு** |
| துனி | **துன்பம், கோபம், அச்சம்** |
| பணி | **வேலை** |
| பனி | **உறைபனி** |
| கணை | **அம்பு** |
| கனை | **கனைத்தல்** |
| திணை | **பகுதி, பிரிவு** |
| தினை | **ஒரு வகை தானியம்** |
| பணை | **மூங்கில், முரசு** |
| பனை | **ஒரு வகை மரம்** |
| மணை | **உட்காரும் பலகை** |
| மனை | **வீடு** |
| அண்ணம் | **மேல்வாய்** |
| அன்னம் | **ஒரு வகை பறவை, உணவு** |
| அரண் | **மதில், கோட்டை, பாதுகாப்பு** |
| அரன் | **சிவன்** |
| உண் | **சாப்பிடு** |
| உன் | **உன்னுடைய** |
| ஊண் | **உணவு** |
| ஊன் | **மாமிசம்** |
| எண் | **எண்ணிக்கை, நினை** |
| என் | **என்னுடைய** |
| எண்ண | **நினைக்க** |
| என்ன | **வினா சொல்** |
| காண் | **பார்** |
| கான் | **காடு** |
| தண் | **குளிர்ந்த** |
| தன் | **தன்னுடைய** |
| திண்மை | **வலிமை** |
| தின்மை | **தீமை** |
| நாண் | **கயிறு, வெட்கப்படு** |
| நான் | **தன்னைக் குறிக்கும் சொல்** |

**ர, ற வேறுபாடு**

| சொல் | பொருள் |
|---|---|
| அரம் | **இரும்புக் கருவி** |
| அறம் | **தருமம்** |
| இரத்தல் | **பிச்சையெடுத்தல்** |
| இறத்தல் | **மரணித்தல்** |
| அரன் | **சிவன்** |
| அறன் | **தருமம்** |
| அரி | **வெட்டு, திருமால்** |
| அறி | **தெரிந்து கொள்** |
| அரை | **பாதி, அரைத்தல்** |
| அறை | **வீட்டின் பகுதி, அடித்தல்** |
| இரை | **உணவு** |
| இறை | **கடவுள்** |
| உரை | **சொல்** |
| உறை | **மூடி** |
| கரி | **அடுப்புக் கரி, யானை** |
| கறி | **காய்கறி, இறைச்சி** |
| கருப்பு | **பஞ்சம்** |
| கறுப்பு | **கரிய நிறம்** |
| கோருதல் | **வேண்டுதல்** |
| கோறுதல் | **கொல்லுதல்** |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| கூரிய | **கூர்மையான** | மாரன் | **மன்மதன்** |
| கூறிய | **சொல்லிய** | மாறன் | **பாண்டியர் குலப்பெயர்** |
| கூரை | **மேற்பரப்பு** | ஏரி | **நீர்நிலை** |
| கூறை | **புதிய துணி** | ஏறி | **மேலே சென்று** |
| சீரடி | **சிறந்த அடி** | குரங்கு | **ஒரு வகை உயிரினம்** |
| சீறடி | **சிறிய அடி** | குறங்கு | **தொடை** |
| நிரை | **வரிசை** | திரம் | **உறுதி** |
| நிறை | **எடை, நிறுத்தல்** | திறம் | **வலிமை** |
| பரவை | **கடல்** | பரி | **குதிரை** |
| பறவை | **பறக்கும் உயிரினம்** | பறி | **பிடுங்கு** |
| பொரி | **நெற்பொரி** | அலரி | **ஒரு வகை பூ** |
| பொறி | **இயந்திரம்** | அலறி | **கதறி** |
| விரகு | **சூழ்ச்சி** | விரல் | **உடலின் ஓர் உறுப்பு** |
| விறகு | **அடுப்பெரிக்கும் கட்டை** | விறல் | வலிமை, வெற்றி |
| மாரி | **மழை** | துரவு | கிணறு |
| மாறி | **மாற்றம்** | துறவு | சந்நியாசம் |

## மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

### பாடநூலில் உள்ளவை

1) **உலை** - நீருலை; **உளை** - சேறு; **உழை** - பாடுபடு

★ முருகன் **உளையில்** கால் வைத்து கடுமையாக **உழைத்தான்.** அதனால் வீட்டில் **உலை** கொதித்தது.

2) **வலி** - நோய்; **வளி** - காற்று; **வழி** - பாதை

★ **வளிமண்டலத்தில் வழி**தெரியாமல் விமானத்தின்மீது மோதிய பறவை **வலியால்** துடித்தது.

3) **கலை** - சாத்திரம்; **களை** - முகவழகு; **கழை** - மூங்கில்

★ **கழைமேல்** நடக்கும் **கலையில்** சிறந்த, அந்தப் பெண்ணின் முகம் **களையாக** இருந்தது.

4) **கனை** - குரல் ஒலி, **கணை** - அம்பு

★ போர்க்களத்தில் **கணையால்** அடிப்பட்ட குதிரை **கனைத்தது.**

5) **குரை** - ஒலி, **குறை** - சிறிது, சுருங்குதல்

★ எங்கள் வீட்டிற்கருகில் இப்போதெல்லாம் நாய்கள் **குரைக்கும்** ஓசை **குறைந்துவிட்டது.**

6) **பொரி** - நெல் பொரி, **பொறி** - இயந்திரம்

★ கண்ணன் **பொரியைத்** தின்று கொண்டே **பொறியில்** இருந்த பழுதைச் சரி பார்த்தான்.

## சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1) **பலம்** - வலிமை; **பழம்** - கனி ➔ நல்ல **பழங்களை** உண்டால், உடல் **பலம்** பெறும்.

2) **விலக்கு** - நீக்கு; **விளக்கு** - ஒளி ➔ வீட்டில் ஏற்றிய **விளக்கு** இருளை **விலக்கியது.**

3) **திரம்** - உறுதி; **திறம்** - வலிமை ➔ யானை **திரமும் திறமும்** உள்ள விலங்கு.

4) **ஊண்** - உணவு; **ஊன்** - மாமிசம் ➔ ஆடு, கோழியின் **ஊன்** மனிதனுக்கு **ஊணாகிறது.**

5) **வளி** - காற்று; **வழி** - பாதை ➔ நான் சென்ற **வழியில் வளி** வேகமாக வீசியது.

6) **கரி** - யானை; **கறி** - இறைச்சி ➔ **கரி கறி** உண்ணாது.

7) **பரவை** - கடல்; **பறவை** - பறக்கும் உயிரினம் ➔ **பறவை பரவைமீது** பறந்து சென்றது.

8) **ஒலி** - ஓசை; **ஒளி** - வெளிச்சம்

★ வான வேடிக்கை வெடிக்கும்போது **ஒலியும் ஒளியும்** தோன்றும்.

9) **புலி** - ஒரு வகை விலங்கு; **புளி** - ஒரு வகை மரம்

★ ஊரின் எல்லையில் உள்ள **புளிய** மரத்தின் அடியில் ஒரு **புலி** இருந்தது.

10) **காலை** - ஒரு பொழுது; **காளை** - எருது

★ வேலன் **காலை** எழுந்ததும் **காளையைக்** குளிப்பாட்டினான்.

11) **பல்லி** - ஒரு வகை உயிரினம்; **பள்ளி** - கல்விக்கூடம்

★ **பள்ளி**க்கூடத்தின் சுவற்றில் ஒரு **பல்லி** இருந்தது.

12) **ஆல்** - ஆலமரம்; **ஆள்** - மனிதன்

★ ஓர் **ஆள்** நிழலில் நிற்பதற்காக **ஆலமரத்தின்** அருகில் வந்தான்.

13) **கிலி** - அச்சம்; **கிளி** - ஒரு வகை பறவை

★ காட்டில் உள்ள **கிளிக்கு** கழுகைப் பார்த்தால் **கிலி** ஏற்படும்.

14) **விலை** - பொருளின் மதிப்பு; **விளை** - உற்பத்தி; **விழை** - விருப்பம்

★ உழவர்களுக்கு **விழை** அதிகமாக இருந்ததால், வேளாண் பொருள்களின் **விளை** அதிகரித்து, **விலை** குறைந்தது.

15) **மலை** - பெருங்குன்று; **மழை** - மழை பெய்தல்

★ **மலைகள்** மேகங்களைத் தடுத்து **மழையைப்** பொழியச் செய்கிறது.

16) **சூலை** - ஒரு வகை நோய்; **சூளை** - செங்கல் சூளை

★ செங்கல் **சூளையில்** வேலை செய்யும் கந்தனுக்கு **சூலை** நோய் உள்ளது.

17) **வலை** - மீன் பிடிக்கும் வலை; **வளை** - வளையல்; **வழை** - ஒரு வகை மரம்

★ **வளை** அணிந்த பெண் **வழை** மரத்தின் அடியில் அமர்ந்து, **வலை** பின்னினாள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

18) **தலை** - உடலின் ஓர் உறுப்பு; **தளை** - கட்டுதல்; **தழை** - இலை தழை

★ சிறுவன் ஒருவன் **தழைகளைத்** தளைத்து **தலையில்** சூட்டிக் கொண்டான்.

19) **கணம்** - நேரம்; **கனம்** - பளு

★ **கனம்** மிகுதியான பொருள்களைக் கொண்டு செல்ல அதிக **கணம்** ஆகும்.

20) **ஆணி** - கூரிய இரும்புத் தண்டு; **ஆனி** - ஒரு தமிழ் மாதம்

★ **ஆனி** மாதம் புது வீட்டில் குடியேறுவதற்காக, சுவற்றில் **ஆணி** அடிக்கப்பட்டது.

21) **கணி** - கணக்கெடுத்தல்; **கனி** - பழம்

★ உழவர் தன் தோட்டத்தில் பறிக்கப்பட்ட **கனி**களைக் **கணி**த்தார்.

22) **தணி** - அடங்குதல்; **தனி** - தனித்திருத்தல்

★ சில நேரங்களில் **தனித்திருத்தலே** கோபத்தைத் **தணிக்கின்றது.**

23) **மணம்** - வாசனை; **மனம்** - உள்ளம்

★ மலர்களில் இருந்து வரும் மணம் மனத்தை நிம்மதியடையச் செய்கிறது.

24) **துணி** - துணிவு; **துனி** - துன்பம்

★ வாழ்வில் எத்தகைய **துனி** வந்தாலும், எதிர்க்கொள்ளும் **துணிவு** வேண்டும்.

25) **பணி** - வேலை; **பனி** - பனி பொழிவு

★ **பனி** அதிகமாக இருந்தால், மலைப்பகுதிகளில் **பணி** செய்வது கடினம்.

26) **பணை** - மூங்கில்; **பனை** - ஒரு வகை மரம்

★ **பணையும்** **பனையும்** உயரமாக வளரக் கூடிய தாவரங்கள் ஆகும்.

27) **மணை** - உட்காரும் பலகை; **மனை** - வீடு

★ அனைவரின் **மனைகளிலும்** உட்காருவதற்காக **மணை** இருக்கும்.

28) **அரண்** - பாதுகாப்பு; **அரன்** - சிவன்

★ **அரனை** வணங்கினால், **அரண்** கிடைக்கும் என்று கூறுவர்.

29) **உண்** - உண்ணுதல்; **உன்** - உன்னுடைய

★ தாய் தன் மகனிடம், '**உன்** விருப்பப்படி **உண்**' என்றார்.

30) **காண்** - பார்; **கான்** - காடு

★ ஆசிரியர் மாணவர்களிடம், 'மரங்கள் நிறைந்த **கானைக் காணுங்கள்**' என்றார்.

31) **தண்** - குளிர்ந்த; **தன்** - தன்னுடைய

★ மாறன் **தன்** வீட்டைத் **தண்** என்று வைத்துக்கொள்ள எண்ணினான்.

32) **திண்மை** - வலிமை; **தின்மை** - தீமை

★ மனத்தில் **திண்மை** இல்லாவிட்டால், **தின்மையைக்** கண்டு அச்சம் ஏற்படும்.

33) **நாணீ** - கயிறு; **நான்** - தன்னைக் குறித்தல்

★ **நான்** நேற்று **நாண்** வாங்க கடைக்குச் சென்றேன்.

34) **அரம்** - இரும்புக் கருவி; **அறம்** - தருமம்

★ மரத்தை அறுப்பது **அரம்** மரத்தை வளர்ப்பது **அறம்.**

35) **இரத்தல்** - பிச்சையெடுத்தல்; **இறத்தல்** - உயிரிழத்தல்

★ பிறரிடம் **இரந்து** வாழ்வதைக் காட்டிலும் **இறப்பதே** மேல்.

36) **இரை** - உணவு; **இறை** - கடவுள்

★ **இரைத்** தேடுவதோடு **இறையும்** தேடு என்பது ஆன்றோர் வாக்கு.

37) **கூரிய** - கூர்மையான; **கூறிய** - சொன்ன

★ கந்தன் **கூறிய** சொற்கள், முருகன் மனத்தில் **கூரிய** அம்பைப் போல் காயத்தை ஏற்படுத்தின.

38) **சீரடி** - சிறந்த அடி; **சீறடி** - சிறிய அடி

★ திருக்குறள் **சீரடிகளையும் சீறடிகளையும்** கொண்ட நூல்.

39) **மாரி** - மழை; **மாறி** - மாற்றம்

★ நாட்டில் **மாரி** பொழிந்ததால், வறுமை **மாறி** வளம் கொழிக்கிறது.

40) **ஏரி** - நீர்நிலை; **ஏறி** - மேலே சென்று

★ குரங்கு **ஏரிக்கரையில்** உள்ள மரத்தின்மீது **ஏறிச்** சென்றது.

41) **அலரி** - ஒரு வகைப் பூ; **அலறி** - கதறி

★ தோட்டத்தில் அலரி பறிக்கச் சென்ற வானதி பாம்பைக் கண்டு அலறிக் கொண்டு ஓடினாள்.

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# பொருள் பொருத்துக

## இயல் 1

| | |
|---|---|
| ➔ மாடம் - திருமலை | ★ மாடம் - **மாளிகை** |
| ➔ அமை - குற்றாலம் | ★ அமை - **மூங்கில்** |
| ➔ வட ஆரிநாடு - மாளிகை | ★ வட ஆரிநாடு - **திருமலை** |
| ➔ தென் ஆரிநாடு - மொய்க்கின்ற வண்டு | ★ தென் ஆரிநாடு - **குற்றாலம்** |
| ➔ ஆரளி - மூங்கில் | ★ ஆரளி - **மொய்க்கின்ற வண்டு** |

## இயல் 2

| | |
|---|---|
| ➔ இடங்கணி - சோலை | ★ இடங்கணி - **சங்கிலி** |
| ➔ சலச வாவி - மயில் | ★ சலச வாவி - **தாமரைத் தடாகம்** |
| ➔ தரளம் - சங்கிலி | ★ தரளம் - **முத்து** |
| ➔ கா - முத்து | ★ கா - **சோலை** |
| ➔ மஞ்ஞை - தாமரைத் தடாகம் | ★ மஞ்ஞை - **மயில்** |

## இயல் 3

| | |
|---|---|
| ➔ கொண்டல் - மலை | ★ கொண்டல் - **கார்கால மேகம்** |
| ➔ புயம் - அழகு | ★ புயம் - **தோள்** |
| ➔ வரை - கழுகுமலை | ★ வரை - **மலை** |
| ➔ வன்னம் - கார்கால மேகம் | ★ வன்னம் - **அழகு** |
| ➔ கழுகாசலம் - தோள் | ★ கழுகாசலம் - **கழுகுமலை** |

## இயல் 4

| | |
|---|---|
| ➔ விலாசம் - மதில் | ★ விலாசம் - **அழகு** |
| ➔ நூபுரம் - பாம்பு | ★ நூபுரம் - **சிலம்பு** |
| ➔ மாசுணம் - தேவர் | ★ மாசுணம் - **பாம்பு** |
| ➔ இஞ்சி - சிலம்பு | ★ இஞ்சி - **மதில்** |
| ➔ உம்பர் - மதில் | ★ உம்பர் - **தேவர்** |
| ➔ கறங்கும் - சோம்பல் | ★ கறங்கும் - **சுழலும்** |
| ➔ முனிதல் - சோர்வு | ★ முனிதல் - **வெறுத்தல்** |
| ➔ துஞ்சல் - பெருமை | ★ துஞ்சல் - **சோம்பல்** |
| ➔ அயர்வு - வெறுத்தல் | ★ அயர்வு - **சோர்வு** |
| ➔ மாட்சி - சுழலும் | ★ மாட்சி - **பெருமை** |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல் 5

- ➔ நோன்மை - கண
- ➔ பிரசம் - நீக்கும்
- ➔ கொழுநன் - பெருமிதம்
- ➔ மதுகை - வலிமை
- ➔ இகக்கும் - தேன்

- ★ நோன்மை - **வலிமை**
- ★ பிரசம் - **தேன்**
- ★ கொழுநன் - **கணவன்**
- ★ மதுகை - **பெருமிதம்**
- ★ இகக்கும் - **நீக்கும்**

## இயல் 6

- ➔ இழுக்கு - குற்
- ➔ வரை - மலை
- ➔ கம்பலை - பேரொலி
- ➔ புடவி - உலகம்
- ➔ வாரணம் - யானை

- ★ இழுக்கு - **குற்றம்**
- ★ வரை - **மலை**
- ★ கம்பலை - **பேரொலி**
- ★ புடவி - **உலகம்**
- ★ வாரணம் - **யானை**

## இயல் 7

- ➔ வதுவை - வானம்
- ➔ கோன் - சுற்றம்
- ➔ தெண்டிரை - திருமணம்
- ➔ விசும்பு - அரசன்
- ➔ ஆயம் - தெளிவான நீர் அலை

- ★ வதுவை - **திருமணம்**
- ★ கோன் - **அரசன்**
- ★ தெண்டிரை - **தெளிவான நீர் அலை**
- ★ விசும்பு - **வானம்**
- ★ ஆயம் - **சுற்றம்**

## இயல் 8

- ➔ மீட்சி - புதுவ
- ➔ பதி - பாதுகாப்பு
- ➔ நிரையம் - விடுதலை
- ➔ யாணர் - நாடு
- ➔ ஏமம் - நரகம்

- ★ மீட்சி - **விடுதலை**
- ★ பதி - **நாடு**
- ★ நிரையம் - **நரகம்**
- ★ யாணர் - **புதுவருவாய்**
- ★ ஏமம் - **பாதுகாப்பு**

- ➔ சாடு - உழைப்பு
- ➔ கடிநகர் - நுண்ணிய மணல்
- ➔ எழிலி - மேகம்
- ➔ பாடு - பாய்
- ➔ சீரியதூளி - காவல் மிகுந்த நகரம்

- ★ சாடு - **பாய்**
- ★ கடிநகர் - **காவல் மிகுந்த நகரம்**
- ★ எழிலி - **மேகம்**
- ★ பாடு - **உழைப்பு**
- ★ சீரியதூளி - **நுண்ணிய மணல்**

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## மரபுத் தொடருக்குப் பொருள் தேர்தல்

| மரபுத் தொடர் | பொருள் |
|---|---|
| அதோ கதி | **கீழ்நிலை அடைதல்** |
| அவலை நினைத்து உரலை இடித்தல் | **ஒன்றை நினைத்து மற்றொன்றைச் செய்தல்** |
| ஆகாயத் தாமரை | **இல்லாத ஒன்றைக் கூறுதல்** |
| ஆயிரங்காலத்துப் பயிர் | **நீண்டகாலத்திற்கு உரியது** |
| இந்திர சாலம் | **மாயச் செயல்** |
| இமாலயத் தவறு | **மிகப்பெரிய தவறு** |
| இமாலய வெற்றி | **மிகப்பெரிய வெற்றி** |
| உலை வைத்தல் | **கேடு செய்தல்** |
| உலக்கைக் கொழுந்து | **எதற்கும் ஒத்துப் போகாத தன்மை** |
| ஊமை கண்ட கனவு | **வெளியில் கூற முடியாதது** |
| ஏட்டுச் சுரைக்காய் | **நடைமுறைக்கு ஒவ்வாதது** |
| ஓலை வந்து விட்டது | **கட்டளை வந்துவிட்டது** |
| சீட்டு கிழிந்தது | **வேலை போய் விட்டது** |
| கயிறு திரித்தல் | **பொய் கூறுதல்** |
| கங்கு கரை இல்லை | **அளவில்லை** |
| கோட்டை விட்டான் | **ஏமாந்தான்** |
| குட்டிச் சுவர் | **பயனற்றிருத்தல்** |
| குரங்குப் பிடி | **விடாப்பிடி** |
| கோயில் பெருச்சாளி | **பொதுச் சொத்தை அபகரிப்பவன்** |
| சிதம்பர ரகசியம் | **யாருக்கும் தெரியாதது** |
| தாளம் போடுதல் | **எது சொன்னாலும் சரி என்று கூறுதல்** |
| நீர்மேல் எழுத்து | **அழியக் கூடியது** |
| பழம் பெருச்சாளி | **பழமையில் ஊறியவர்** |
| பித்தலாட்டம் | **ஏமாற்றுதல்** |
| புத்தகப்புழு | **அனுபவ அறிவு இல்லாமை** |
| மலையேறி விட்டது | **இல்லாமல் போய் விட்டது** |
| முதலைக் கண்ணீர் | **போலி அழுகை** |
| வாய்ச்சொல் வீரன் | **வெற்று பேச்சு பேசுபவன்** |
| விழலுக்கு இறைத்த நீர் | **வீண் செயல்** |
| விசுவாமித்திரப் படைப்பு | **புதிய படைப்பு** |

## மரபுத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக

**எதிர்நீச்சல்**

★ வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் வந்தாலும் அவற்றைக் கடந்து எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறவேண்டும்.

**சொந்தக்காலில் நிற்றல்**

★ முருகன் அடுத்தவர்களை எதிர்பார்க்காமல், உழைத்து தன் சொந்தக்காலில் நின்றான்.

**தாளம் போடுதல்**

★ வேலன் எது கூறினாலும், கந்தன் அதற்குத் தாளம் போட்டு கொண்டே இருந்தான்.

**மதில்மேல்பூனை**

★ மாறன் மேற்படிப்பிற்கு எந்தக் கல்லூரியில் சேருவது என்று தெரியாமல் மதில்மேல் பூனையாக இருந்தான்.

**நிறைகுடம்**

★ வளவன் கல்வியில் நிறைகுடமாக விளங்கியதால், அனைவரும் அவனைப் போற்றினர்.

**கைதூக்கிவிடுதல்**

★ முத்து ஆதரவற்ற மக்களைக் கைதூக்கிவிட்டான்.

**கண்ணாயிருத்தல்**

★ இனியன் எப்பொழுதும் பணத்திலேயே கண்ணாயிருந்தான்.

**அவசரக்குடுக்கை**

★ சேரன் நிதானத்துடன் செயல்படாமல், அவசரக்குடுக்கையாக இருந்தான்.

**முதலைக்கண்ணீர்**

★ மாணிக்கம் தான் செய்த தவறுக்குத் திருந்தியவன்போல நடித்து முதலைக்கண்ணீர் வடித்தான்.

**கானல்நீர்**

★ மகிழ்ச்சியான வாழ்வு ஏழைகளுக்கு கானல்நீராகவே உள்ளது.

## சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

**அதோ கதி (கீழ்நிலை அடைதல்)**

★ சொல்புத்தியும் இல்லாமல் சுயபுத்தியும் இல்லாமல் யாரையும் மதிக்காமலும் வாழ்ந்த வேலவன் அதோ கதி அடைந்தான்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**அவலை நினைத்து உரலை இடித்தல் (ஒன்றை நினைத்து மற்றொன்றைச் செய்தல்/ எண்ணமும் செயலும் ஒன்றிவாராமை)**

★ வெளியூருக்குச் சென்று ஒரு மாதமாகியும் வாரமல் இருந்த கணவனை நினைத்து வருந்தி, பாலில் மிளகாய்த் தூளை அள்ளிக் கொட்டினாள் செல்வி.

**ஆகாயத் தாமரை (இல்லாத ஒன்று)**

★ நான் நிலவுக்குக் சென்று வந்தேன், நட்சத்திரத்தைப் பறித்து வீட்டில் வைத்திருக்கின்றேன் என்றெல்லமாம் ஆகாயத்தாமரை உள்ளதைப் போல் கூறுவான் என் நண்பன் குமணன்.

**ஆயிரங்காலத்துப் பயிர் (நீண்ட காலத்திற்குரியது)**

★ நல்லவர்களின் நட்பு ஆயிரங்காலத்துப் பயிர் போன்று நீண்ட காலம் தொடரும்.

★ திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிராகும்

**இந்திர சாலம் (மாயச் செயல்)**

★ இராமாயணத்தில் சீதையிடம் வந்த பொன்மான் இந்திர சாலம் செய்து ஏமாற்றியது.

**இமாலய வெற்றி (மிகப்பெரிய வெற்றி)**

★ இந்திய கிரிகெட் அணி 2019 ஆம் ஆண்டு இமாலய வெற்றி பெறும் என்று இந்தியர்கள் நம்பினார்கள்.

**இமாலயத் தவறு (மிகப்பெரிய தவறு)**

★ இந்தியாவிடமிருந்து பாகிஸ்தான் பங்களாதேஷ் போன்ற நாடுகளைப் பிரித்துக் கொடுத்தது இமாலயத் தவறு என்று இன்றைய இந்திய அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

**உலை வைத்தல் (கேடு செய்தல்)**

★ உயர்அதிகாரி தன் கட்டளைக்கு கீழ்ப்படியாத காரணத்தால், மாறனின் வேலைக்கு உலை வைத்தார்.

**உலக்கைக் கொழுந்து (எதற்கும் ஒத்துப் போகாத தன்மை)**

★ வகுப்பறையில் புதிதாக சேர்ந்த பிரபு எல்லோரிடமும் உலக்கைக் கொழுந்துபோல் நடந்து கொண்டான்.

**ஏட்டுச் சுரைக்காய் கூட்டுக்கு உதவாது. (நடைமுறைக்கு ஒவ்வாதது/பட்டறிவில்லாத படிப்பறிவு)**

★ கண்ணன் சமையல் புத்தகங்களைப் படித்து சமையல் செய்த போது ஏட்டுச்சுரைக்காய் கூட்டுக்கு உதவாது என்பதுபோல் காய்கறிகள் கரிந்துபோய் சமையல் பாழாய்ப் போனது.

**ஓலை வந்து விட்டது (கட்டளை வந்துவிட்டது)**

★ இராணுவத்திலிருந்து வீடு திரும்பிய அபிநந்தனுக்கு, "போர் மூள உள்ளதால் இந்திய எல்லைக்கு உடனடியாக வரவேண்டும்" என ஓலை வந்தது.

**சீட்டுக் கிழிந்தது (வேலை போய்விட்டது)**

★ வேலையில் கையூட்டு (இலஞ்சம்) வாங்கிய கந்தனின் சீட்டு கிழிந்தது.

**கயிறு திரித்தல் (பொய் கூறுதல்)**

★ சிலர் கயிறு திரித்து பிறரின் வீட்டில் சண்டை மூட்டுவதையே வேலையாகச் செய்கின்றனர்.

**கங்கு கரை இல்லை (அளவில்லை)**

★ உ.வே.சாமி நாதர் செய்த தமிழ்த்தொண்டிற்கு கங்கு கரையே இல்லை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கோட்டை விட்டான் (ஏமாந்தான்)**

★ கிரிக்கெட் விளையாட்டில் மூழ்கிக் கிடந்த மாறன் படிப்பில் கோட்டை விட்டான்.

**குட்டிச் சுவர் (பயனற்றிருத்தல்)**

★ பாடத்தைப் படிக்காத வளவன் குட்டிச்சுவராக கிடந்தான்.

**குரங்குப் பிடி (விடாப்பிடி)**

★ என் நண்பன் கோவர்த்தன் தான் கொண்ட எந்தக் கருத்திலும் குரங்குப் பிடியாக இருப்பான்.

**கோயில் பெருச்சாளி (பொதுச் சொத்தை அபகரிப்பவன்)**

★ அரசியல் பிரமுகர்கள் பலர் கோயில் பெருச்சாளிகளாகவே இருக்கின்றனர்.

**சிதம்பர ரகசியம் (யாருக்கும் தெரியாதது)**

★ பல ஆண்டுகள் திருமணமே வேண்டாம் என்று வெறுத்த என் அண்ணன் ஆரூரன் திடீரென திருமணத்திற்கு ஒப்புகை தெரிவித்தது எங்களுக்கெல்லாம் சிதம்பர ரகசியமாக இருந்தது.

**நீர்மேல் எழுத்து (அழியக் கூடியது)**

★ பத்திரம் எதுவும் எழுதாமல் என் தந்தையிடம் கடன் பெற்றிருந்த என் சிற்றப்பா எல்லாக் கடன்களையும் தருவதாகச் சொல்லி ஏமாற்றியது நீர்மேல் எழுத்தானது.

**பழம் பெருச்சாளி (பழமையில் ஊறியவர்)**

★ வீட்டில் எல்லோருக்கும் ஒரேசாதியில்தான் திருமணம் நடக்க வேண்டும் என்னும் பழம் பெருச்சாளியாகப் போராடினார் என் தாத்தா.

**பித்தலாட்டம் (ஏமாற்றுதல்)**

★ நல்லவர்போல் நடித்த நகைக்கடைக்காரர் கவுதம்சந்த் பித்தலாட்டம் செய்து எல்லா நகைகளையும் எடுத்துச் சென்றுவிட்டார்.

**புத்தகப்புழு (பட்டறிவு இல்லாத படிப்பறிவு)**

★ வாழ்க்கையின் பல்வேறு சிக்கலுக்குப் புத்தக வரிகளையே மேற்கோள் காட்டும் புத்தகப் புழுக்களாக வாழ்கின்றனர் பலர்.

**மலையேறி விட்டது (இல்லாமல் போய் விட்டது/காலாவதியாகிவிட்டது)**

★ பெண்கள் மறுமணம் செய்யக்கூடாது என்ற பண்டைய வழக்கம் மலையேறி விட்டது.

**முதலைக் கண்ணீர் (பொய் அழுகை)**

★ தேர்வில் பார்த்து எழுதிய மாணவன், ஆசிரியரிடம் பிடிபட்டதும் முதலைக் கண்ணீர் வடித்தான்.

**வாய்ச்சொல் வீரன் (வெற்று பேச்சு பேசுபவன்)**

★ நிலவன் மதிப்பெண்ணில் முதல் மாணவனாக வருவேன் என்று பல முறை கூறியும் ஒருதேர்விலும் வாராமல் வாய்ச்சொல் வீரனாகவே இருந்தான்.

**விசுவாமித்திரப் படைப்பு (புதிய படைப்பு)**

★ நடிகர்கள்சிலரின்திரைப்படங்கள்படத்திற்குப்படம்விசுவாமித்திரப்படைப்பாகவே இருக்கின்றது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# நிறுத்தக்குறியீடுகள்

**காற்புள்ளி(,):-**

➔ ஒவ்வொரு பொருளையும் பிரித்துக் காட்டுவதற்கு,

★ (எ.கா.) இயல், இசை, நாடகம் முத்தமிழ் ஆகும்.

➔ ஒரு எழுவாய் பல வினைமுற்றுகளைப் பெற்று வரும்போது,

★ (எ.கா.) காந்தியடிகள் இயற்கை எய்தியபோது, மக்கள் கதறினர், விம்மினர், அழுதனர்.

➔ இணை மொழிகள் அடுக்கி வரும்போது

★ (எ.கா.) செல்வர், வறியவர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று சான்றோர் வேறுபடுத்திப் பார்க்கமாட்டார்கள்.

➔ எச்சச் சொற்றொடரை அடுத்து,

★ (எ.கா.) நாம் விடா முயற்சியுடன் உழைத்தால், வாழ்வில் தோல்வி என்பது இல்லை.

➔ இணைப்புச் சொற்கள் வரும்போது,

★ (எ.கா.) திருக்குறள் நீதிகள் நிறைந்தது. ஆதலின், அனைவரும் விரும்பிக் கற்க வேண்டும்.

➔ மேற்கோள் குறி தொடங்குவதற்கு முன்னும், பின்னும்,

★ (எ.கா.) பேரறிஞர் அண்ணா, 'சிந்தி, சீர்தூக்கு, செயல்படு', என்று கூறினார்.

★ கடிதங்கள் எழுதும்போது, 'அன்புடையீர்', 'அன்புள்ள', 'நண்ப', 'ஐயா' போன்ற விளிகளுக்கு அடுத்து காற்புள்ளி இட வேண்டும்.

**அரைப்புள்ளி(;):-**

➔ தொடர் வாக்கியங்களில் அமையும்.

★ (எ.கா.) கல்வி கரையில, கற்பவர் நாள் சில; மெல்ல நினைக்கின் பிணி பல.

➔ ஓர் எழுவாயுடன் பல பயனிலைகள் வரும்போது,

★ (எ.கா.) திருவள்ளுவர், வாய்மையைக் கூறியவர்; கொல்லாமையை விரும்பியவர்; பிறர்க்கு இன்னா விரும்பாதவர்.

➔ எடுத்துக்காட்டு உவமைத் தொடர்களின் இடையில்,

➔ ஒரே தொடரில் இரு வேறுபட்ட கருத்துகள் வருமாயின் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துக் காட்ட இக்குறி இடவேண்டும்.

★ (எ.கா.) ஊசியைக் காந்தம் இழுக்கும்; உத்தமனை நட்பு இழுக்கும்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**முக்காற்புள்ளி(:):-**

➔ ஒருவரது கூற்றினை அறிமுகப்படுத்துவதற்கு,

★ (எ.கா.) திருவள்ளுவர் கூறிய நீதிகள் மூன்று. அவை: வாய்மை, தூய்மை, நேர்மை

➔ கட்டுரையின் இடையில் வரும் சிறு தலைப்புகளை அடுத்து,

★ (எ.கா.) முன்னுரை: உடல்: முடிவுரை:

➔ தொகுத்துக் கேட்கும் வினாவின் இறுதியில் முக்காற்புள்ளி இடவேண்டும்.

**முற்றுப்புள்ளி(.):-**

➔ வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

★ (எ.கா.) திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.

➔ தந்தை பெயர்க் குறுக்கம் (தலைப்பெழுத்து), (எ.கா.) மு. வரதராசனார்

➔ பட்டப் பெயர்க் குறுக்கம், (எ.கா.) ப. சிவனார், இ.ஆ.ப.

➔ சொற் குறுக்கம், (எ.கா.) கி.மு., கி.பி.

➔ முகவரியின் இறுதி, (எ.கா.) ப. கதிரவன், அண்ணா வீதி, தூத்துக்குடி.

**வினாக்குறி(?):-**

➔ வினா வாக்கியங்களின் இறுதியில் வினாக்குறி இடவேண்டும்.

★ (எ.கா.) உன் பெயர் என்ன?

**உணர்ச்சிக்குறி(!):-**

➔ உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியங்களின் இறுதியில் உணர்ச்சிக்குறி இடவேண்டும்.

➔ வியப்பு (எ.கா.) ஆ! எவ்வளவு அழகு! ➔ இரக்கம் (எ.கா.) அந்தோ! என்ன கொடுமை!

➔ மகிழ்ச்சி (எ.கா.) வருக! வருக! ➔ இழிவு (எ.கா.) சீ! சீ! இது ஒரு பிழைப்பா?

➔ ஒருவரை விழிக்கும் சொல்லை அடுத்து உணர்ச்சிக்குறி இடவேண்டும்.

★ (எ.கா.) செல்வா! இங்கு வா!

**இரட்டை மேற்கோள் குறி ("-----"):-**

➔ வாக்கியங்களில் மேற்கோள்கள் எடுத்தாளும்போது இரட்டை மேற்கோள் குறி இடவேண்டும்.

➔ ஆன்றோர் கருத்துகள் (எ.கா.) "ஓர் இனத்தின் சிறப்பு மொழி" என்று கூறினார் அறிஞர்.

➔ புலவர்களின் பொன்மொழிகள் (எ.கா.) "இளமையில் கல்" என்றார் ஔவையார்.

➔ நேர்க்கூற்றில் இரட்டை மேற்கோள் குறி இடவேண்டும்.

★ (எ.கா.) ஆசிரியர் மாணவரிடம், "உன் பெயர் என்ன?" என்று வினவினார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**ஒற்றை மேற்கோள் குறி(-----'):-**

➔ தன்மைச் சுட்டும் போது (எ.கா.) 'அ', 'இ', 'உ' ஆகியவை சுட்டெழுத்துகள்.

➔ சிறப்பு நிகழ்ச்சிகளைக் கூறும்போது (எ.கா.) 'கால்கோள்', 'நீர்ப்படை'

➔ நேர்கூற்றில் மேற்கோள் கூறும்போது

★ (எ.கா.) "மாணவர்கள் 'ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்' என்ற ஔவையாரின் கூற்றைப் பின்பற்ற வேண்டும்" என்றார் ஆசிரியர்.

**அடைப்புக்குறி ( ):-**

➔ அருஞ்சொல்லை விளக்கும்போது (எ.கா.) தமிழுக்கு அமுதென்று (இனிமை) பெயர்.

➔ சிறு பிரிவுகளை எண்ணும்போது

★ (எ.கா.) திருக்குறளில் உள்ள அதிகாரம் மூன்று (அறம், பொருள், இன்பம்).

## உரிய நிறுத்தற்குறியிட்டு எழுதுக

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

➔ சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்

★ சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.

➔ மனித இனத்தின் அடையாளம் மொழி

★ மனித இனத்தின் அடையாளம் மொழி.

➔ புதுக்கவிதை படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் தன்மை கொண்டது

★ புதுக்கவிதை படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் தன்மை கொண்டது.

➔ பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் உள்ளது

★ பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் உள்ளது.

➔ திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் பொய்யாமொழி வாயுறை வாழ்த்து உத்தரவேதம்

★ திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, உத்தரவேதம்.

➔ நன்னூல் எழுத்ததிகாரத்தில் எழுத்தியல் பதவியல் உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுப் புணரியல் உருபு புணரியல் என ஐந்து பகுதிகள் உள்ளன

★ நன்னூல் எழுத்ததிகாரத்தில் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என ஐந்து பகுதிகள் உள்ளன.

➔ ப ஜீவானந்தம் சிறந்த பேச்சாளர் சிந்தனையார் அரசியல்வாதி

★ ப. ஜீவானந்தம் சிறந்த பேச்சாளர்; சிந்தனையார்; அரசியல்வாதி.

➔ பாரதியார் ஒரு சிறந்த பேச்சாளர் பாடகர் கட்டுரையாளர் அரசியல் அறிஞர்

★ பாரதியார் ஒரு சிறந்த பேச்சாளர்; பாடகர்; கட்டுரையாளர்; அரசியல் அறிஞர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் மூன்று அவை அறம் பொருள் இன்பம்

★ திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் மூன்று. அவை: அறம், பொருள், இன்பம்.

➔ பழியில்லாமல் வாழ்பவரே வாழ்பவர் புகழில்லாமல் வாழ்பவர் வாழாதவர்

★ பழியில்லாமல் வாழ்பவரே வாழ்பவர்; புகழில்லாமல் வாழ்பவர் வாழாதவர்.

➔ தமிழில் சொல்லுக்கு முதலில் வரும் மெய்யெழுத்துகள் பத்து அவை க ங ச ஞ த ந ப ம ய வ

★ தமிழில் சொல்லுக்கு முதலில் வரும் மெய்யெழுத்துகள் பத்து. அவை: க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ.

➔ தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம் கூடில்லாத பறவை என்றார் இரசூல் கம்சதேவ்

★ "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்ளூ கூடில்லாத பறவை" என்றார் இரசூல் கம்சதேவ்.

➔ தாய்மொழியில் பயின்று யாதும் ஊரென உலகின் உறவாகவே விரும்புகிறேன் நான் என்றார் இரா மீனாட்சி

★ "தாய்மொழியில் பயின்று யாதும் ஊரென உலகின் உறவாகவே விரும்புகிறேன் நான்" என்றார் இரா. மீனாட்சி.

➔ நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம் என்றார் பாவேந்தர்

★ "நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம்" என்றார் பாவேந்தர்.

➔ நான் படித்துக்கொண்டிருக்கிறேன் என்றான் முருகன்

★ "நான் படித்துக்கொண்டிருக்கிறேன்" என்றான் முருகன்.

➔ சேயோன் மேய மைவரை உலகம் என்று உரைக்கிறது தொல்காப்பியம்

★ "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைக்கிறது தொல்காப்பியம்.

➔ குருவி கீஈஈஈய்க் கீஈஈஈஈய்க் என சத்தமிடும்

★ குருவி 'கீஈஈஈய்க்' 'கீஈஈஈஈய்க்' என சத்தமிடும்.

➔ ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு என்று அழைக்கப்படுகிறார்

★ ஆனந்தரங்கர் 'இந்தியாவின் பெப்பிசு' என்று அழைக்கப்படுகிறார்.

➔ திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது

★ திருக்குறள் 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்படுகிறது.

➔ மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை சிவகாமியின் சரிதம்

★ மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை 'சிவகாமியின் சரிதம்'.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ➔ சங்கரதாசு சுவாமிகள் தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் என்று போற்றப்படுகிறார்
- ★ சங்கரதாசு சுவாமிகள் 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று போற்றப்படுகிறார்.
- ➔ கம்பனும் மில்டனும் என்னும் நூல் சிறந்த ஒப்பீட்டு நூல் ஆகும்
- ★ 'கம்பனும் மில்டனும்' என்னும் நூல் சிறந்த ஒப்பீட்டு நூல் ஆகும்.
- ➔ பேரறிஞர் அண்ணா சந்திரதோயம் என்னும் நூலை எழுதினார்
- ★ பேரறிஞர் அண்ணா 'சந்திரதோயம்' என்னும் நூலை எழுதினார்.
- ➔ அப்துல்ரகுமானின் கவிதைத்தொகுப்பில் ஒன்று சுட்டுவிரல்
- ★ அப்துல்ரகுமானின் கவிதைத்தொகுப்பில் ஒன்று 'சுட்டுவிரல்'.
- ➔ கல்லுதல் என்ற பொருளின் அடிப்படையில் கல்வி என வழங்கப்படுகிறது
- ★ 'கல்லுதல்' என்ற பொருளின் அடிப்படையில் கல்வி என வழங்கப்படுகிறது.
- ➔ கல்வியின் பொருட்டு ஒருவனுக்குத் தோன்றுவது பெருமிதம்
- ★ கல்வியின் பொருட்டு ஒருவனுக்குத் தோன்றுவது 'பெருமிதம்'.
- ➔ பாவின் வகையைத் தன் பெயராகக் கொண்டு திரு என்னும் அடைமொழியுடன் திருக்குறள் வழங்கப்படுகிறது
- ★ பாவின் வகையைத் தன் பெயராகக் கொண்டு, 'திரு' என்னும் அடைமொழியுடன் திருக்குறள் வழங்கப்படுகிறது.
- ➔ சி வை தாமோதரன் தமிழ்ப் பதிப்புலகின் தந்தை என்று போற்றப்படுகிறார்
- ★ சி.வை.தாமோதரன் 'தமிழ்ப் பதிப்புலகின் தந்தை' என்று போற்றப்படுகிறார்.
- ➔ மலைப் இடப்பெயர்கள் ஓர் ஆய்வு என்னும் பாடத்தின் ஆசிரியர் ஆர் பாலகிருஷ்ணன் இஆப
- ★ 'மலைப் இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு' என்னும் பாடத்தின் ஆசிரியர் ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.
- ➔ திராவிடச் சொல்லான மலை என்பது சமஸ்கிருத மொழியில் மலய என்று வழங்கப்படுகிறது
- ★ திராவிடச் சொல்லான 'மலை' என்பது சமஸ்கிருத மொழியில் ஷமலய' என்று வழங்கப்படுகிறது.
- ➔ தமிழில் மலை என்பது உயரமானது என்றும் குன்று என்பது உயரம் குறைவானது என்றும் பொருள்படும்
- ★ தமிழில் 'மலை' என்பது 'உயரமானது' என்றும், 'குன்று' என்பது 'உயரம் குறைவானது' என்றும் பொருள்படும்.
- ➔ தாகூர் பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்டார்
- ★ தாகூர் 'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும் 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்டார்.
- ➔ தலைவர் மேடையில் பேசும்போது உலக மக்கள் அனைவரும்யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கருத்தை பின்பற்றி வாழ வேண்டும் என்றார்
- ★ தலைவர் மேடையில் பேசும்போது, "உலக மக்கள் அனைவரும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கருத்தை பின்பற்றி வாழ வேண்டும்" என்றார்.
- ➔ கயல் பேச்சுப்போட்டியில் பெண்மையைப் போற்றிய பாரதி பெண்மை வெல்க என்று கூத்திடுவோம் என்று கூறினார் என்றாள்
- ★ கயல் பேச்சுப்போட்டியில், "பெண்மையைப் போற்றிய பாரதி 'பெண்மை வெல்க என்று கூத்திடுவோம்' என்று கூறினார்" என்றாள்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ தந்தை தன் மகனிடம் வாழ்க்கையில் எப்போதும் அறம் செய்ய விரும்பு என்னும் ஔவையாரின் கருத்தைப் பின்பற்ற வேண்டும் என்று கூறினார்

★ தந்தை தன் மகனிடம், "வாழ்க்கையில் எப்போதும் ‘அறம் செய்ய விரும்பு’ என்னும் ஔவையாரின் கருத்தைப் பின்பற்ற வேண்டும்" என்று கூறினார்.

➔ கந்தன் முருகனிடம் நீ எங்கு செல்கிறாய் என்று வினவினான்

★ கந்தன் முருகனிடம், "நீ எங்கு செல்கிறாய்?" என்று வினவினான்.

➔ உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே புறம் 183, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற புறநானூற்று அடிகள் கல்விமுறையைப் பற்றி கூறுகின்றன

★ "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!" (புறம் 183, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்) என்ற புறநானூற்று அடிகள் கல்விமுறையைப் பற்றி கூறுகின்றன.

➔ தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டியவர் யார்

★ தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டியவர் யார்?

➔ யுகத்தின் பாடல் கவிதையின் ஆசிரியர் யார்

★ ‘யுகத்தின் பாடல்’ கவிதையின் ஆசிரியர் யார்?

➔ உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்

★ உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

➔ முருகா இங்கே வா

★ முருகா! இங்கே வா!

➔ என்னே தஞ்சைப் பெரிய கோவிலின் உயரம்

★ என்னே! தஞ்சைப் பெரிய கோவிலின் உயரம்!

➔ ஐயோ கிளி இறந்து விட்டாதே

★ ஐயோ! கிளி இறந்து விட்டாதே!

➔ என்னே தமிழின் பெருமை

★ என்னே! தமிழின் பெருமை!

➔ என்னே இமயமலையின் உயரம்

★ என்னே! இமயமலையின் உயரம்!

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

➔ வால்ட் விட்மன் அமெரிக்காவைச் சேர்ந்தவர் கவிஞர் இதழாளர் கட்டுரையாளர் புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் இவருடைய புல்லின் இதழ்கள் Leaves of grass என்ற நூல் உலகப்புகழ் பெற்றது

★ வால்ட் விட்மன் அமெரிக்காவைச் சேர்ந்தவர். கவிஞர்; இதழாளர்; கட்டுரையாளர்; புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர். இவருடைய 'புல்லின் இதழ்கள்' (Leaves of grass) என்ற நூல் உலகப்புகழ் பெற்றது.

➔ மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை அதனால்தான் உழவு உலகிற்கு அச்சாணி என்று வள்ளுவரும் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியாரும் போற்றுகின்றனர்

★ மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. அதனால்தான் 'உழவு உலகிற்கு அச்சாணி' என்று வள்ளுவரும் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாரதியாரும் போற்றுகின்றனர்.

➔ பெரிய அழகிய கண்களையுடையவளே மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட விரைந்து வா என்று தலைவன் தலைவியை அழைக்கின்றான்

★ 'பெரிய அழகிய கண்களையுடையவளே! மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' என்று தலைவன் தலைவியை அழைக்கின்றான்.

➔ பெரிய மரத்தடிக்குப் பக்கத்திலே நின்னுக்கிட்டிருக்கு கீழே விழுந்தா அடிபட்டிரும் அதக் கொஞ்சம் சதுப்புப் பகுதிக்குக் கொண்டு வரணும் மத்த யானைகள் விவரம் புரியாம ரெஸிஸ்ட் பண்ணும் என்றார் டாக்டர் கே

★ "பெரிய மரத்தடிக்குப் பக்கத்திலே நின்னுக்கிட்டிருக்கு. கீழே விழுந்தா அடிபட்டிரும். அதக் கொஞ்சம் சதுப்புப் பகுதிக்குக் கொண்டு வரணும். மத்த யானைகள் விவரம் புரியாம ரெஸிஸ்ட் பண்ணும்" என்றார் டாக்டர் கே.

➔ துணிக்கட்டை அவுத்திராதுல்ல என்றேன் அதுக்குத் தெரியும் யானைக்குப் பொதுவா வெள்ளை நிறம் பிடிக்காது சேறு பூசலையன்னா நிம்மதியில்லாம காலை நோண்டிக்கிட்டே இருக்கும் என்றார்

★ "துணிக்கட்டை அவுத்திராதுல்ல?" என்றேன். "அதுக்குத் தெரியும்". "யானைக்குப் பொதுவா வெள்ளை நிறம் பிடிக்காது. சேறு பூசலையன்னா நிம்மதியில்லாம காலை நோண்டிக்கிட்டே இருக்கும்" என்றார்.

➔ திராவிடச் சொல்லான மலை என்பது சமஸ்கிருத மொழியில் மலய என்று வழங்கப்படுகிறது. பாண்டிய மன்னன் ஒருவன் மலயத்துவஜ என்று அழைக்கப்பட்டான் என்பதும் மலய என்ற சொல்லின் திராவிடத் தொடர்புக்கு அரண் சேர்க்கிறது

★ திராவிடச் சொல்லான 'மலை' என்பது சமஸ்கிருத மொழியில் 'மலய' என்று வழங்கப்படுகிறது. பாண்டிய மன்னன் ஒருவன் 'மலயத்துவஜ' என்று அழைக்கப்பட்டான் என்பதும் 'மலய' என்ற சொல்லின் திராவிடத் தொடர்புக்கு அரண் சேர்க்கிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ அமிழ்தம் கிடைத்தாலும் அஃது உயிர்க்காப்பது என்பதற்காகத் தனித்து உண்ண மாட்டார்கள் யாரையும் வெறுக்க மாட்டார்கள் சோம்பலின்றிச் செயல்படுவார்கள் பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள் புகழ்வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள் உலகம் முழுவதும் கிடைப்பதாயிருந்தாலும் பழிவரும் செயல்களைச் செய்யார்

★ அமிழ்தம் கிடைத்தாலும் அஃது உயிர்க்காப்பது என்பதற்காகத் தனித்து உண்ண மாட்டார்கள்; யாரையும் வெறுக்க மாட்டார்கள்; சோம்பலின்றிச் செயல்படுவார்கள்; பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்; புகழ்வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள்; உலகம் முழுவதும் கிடைப்பதாயிருந்தாலும் பழிவரும் செயல்களைச் செய்யார்.

➔ அவன் ஒரு பிறவி எந்த மாட்டு மேலே எப்படி விழணும்னு அவனுக்குச் சுபாவத்திலேயே ஊறிக் கிடக்கும் என்றார் ஜமீன்தார்

★ "அவன் ஒரு பிறவி! எந்த மாட்டு மேலே எப்படி விழணும்னு அவனுக்குச் சுபாவத்திலேயே ஊறிக் கிடக்கும்!" என்றார் ஜமீன்தார்.

➔ சங்ககாலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக பயிற்று மொழியாக இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால் தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும் கல்விமொழியாகவும் சமயம் வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது என்பது மா இராசமாணிக்கனாரின் கருத்து

★ 'சங்ககாலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது; தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால், தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும் கல்விமொழியாகவும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது' என்பது மா. இராசமாணிக்கனாரின் கருத்து.

➔ ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின் என்கிறது மணிமேகலை

★ 'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்' என்கிறது மணிமேகலை.

➔ ஓர் ஓவியர் வரைந்துகாட்டலாம் ஒரு பாடகர் பாடிக் காட்டலாம் இங்கொரு கவிஞர் எழுதிக் காட்டுகிறார்

★ ஓர் ஓவியர் வரைந்துகாட்டலாம்; ஒரு பாடகர் பாடிக்காட்டலாம்; இங்கொரு கவிஞர் எழுதிக்காட்டுகிறார்.

➔ அமானுல்லாகானைப் பற்றி ஒரு வியாசம் எழுதி ஆபிசுக்கு எடுத்துக்கொண்டு போக வேண்டும் என்று இறுதியாகப் பாரதியார் கூறியுள்ளார்

★ "அமானுல்லாகானைப் பற்றி ஒரு வியாசம் எழுதி ஆபிசுக்கு எடுத்துக்கொண்டு போக வேண்டும்" என்று இறுதியாகப் பாரதியார் கூறியுள்ளார்.

➔ இசை கலைகளின் மகுடம் உணர்வுகளின் வினையூக்கி இசை குருதியைச் சூடேற்றும் உயிரை உருக்கும் ஆழ்கடல் அமைதியாய் மனத்தை உறங்க வைக்கும்

★ இசை! கலைகளின் மகுடம்! உணர்வுகளின் வினையூக்கி. இசை, குருதியைச் சூடேற்றும்; உயிரை உருக்கும்; ஆழ்கடல் அமைதியாய் மனத்தை உறங்க வைக்கும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ அஸ்தமித்த உடனே துவங்கிப் பெருங்காற்று அடித்தது ஊரிலே உண்டான மரங்களெல்லாம் படுகாடாய் வந்து போனதும் வீடுகள் வெள்ளத்தில் முழுகிப்போய் அந்த வெள்ளத்திலே வீடுகளை அடித்துக்கொண்டு போனதும் மாடுகள் கன்றுகள் மனுஷர் செத்ததும் தெருவுக்குத் தெரு பிணநாற்றமாய் இருந்தது என்று மனம் நொந்து எழுதியுள்ளார்

★ 'அஸ்தமித்த உடனே துவங்கிப் பெருங்காற்று அடித்தது. ஊரிலே உண்டான மரங்களெல்லாம் படுகாடாய் வந்து போனதும், வீடுகள் வெள்ளத்தில் முழுகிப்போய், அந்த வெள்ளத்திலே வீடுகளை அடித்துக்கொண்டு போனதும், மாடுகள், கன்றுகள், மனுஷர் செத்ததும் தெருவுக்குத் தெரு பிணநாற்றமாய் இருந்தது!' என்று மனம் நொந்து எழுதியுள்ளார்.

➔ கதவைத் திறந்து விடை கொடுத்தேன் வெளியே சென்றது சற்று நின்றது கடைசியாக ஒன்று உன்னுடைய முகம்தான் எது எனக்கு முகமே கிடையாது நான் சொல்லி கதவைத் தாழிட்டுக் கொண்டேன்

★ கதவைத் திறந்து விடை கொடுத்தேன். வெளியே சென்றது, சற்று நின்றது. "கடைசியாக ஒன்று. உன்னுடைய முகம்தான் எது?" "எனக்கு முகமே கிடையாது" நான் சொல்லி, கதவைத் தாழிட்டுக் கொண்டேன்.

➔ கோவிலை எடுப்பித்தவர்கள் பற்றிய கல்வெட்டில் நாம் கொடுத்தனவும் நம் அக்கன் கொடுத்தனவும் நம் பெண்டுகள் கொடுத்தனவும் கொடுப்பார் கொடுத்தனவும் இந்த கல்லிலே வெட்டி அருள்க என்று கோவில் கட்ட உதவியர்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்

★ கோவிலை எடுப்பித்தவர்கள் பற்றிய கல்வெட்டில், 'நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் இந்த கல்லிலே வெட்டி அருள்க!' என்று கோவில் கட்ட உதவியர்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

➔ இளையராஜா இசைக்கலைஞர் மட்டுமல்லர் சிறந்த ஒளிப்படக் கலைஞர் கவிஞர் பாடகர் பால்நிலாப் பாதை வெட்டவெளிதனில் கொட்டிக் கிடக்குது உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருக்கும் எழுத்தாளரும் ஆவார்

★ இளையராஜா இசைக்கலைஞர் மட்டுமல்லர்; சிறந்த ஒளிப்படக் கலைஞர்; கவிஞர்; பாடகர்; 'பால்நிலாப் பாதை', 'வெட்டவெளிதனில் கொட்டிக் கிடக்குது' உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருக்கும் எழுத்தாளரும் ஆவார்.

➔ மூச்சு நின்றுவிட்டது என்று நான் சொன்னபோது பேச்சு நின்றபோதா எனத் திருப்பக் கேட்கிறார்கள் எத்தனை அர்த்தபுஷ்டியான கேள்வி

★ "மூச்சு நின்றுவிட்டது" என்று நான் சொன்னபோது "பேச்சு நின்றபோதா?" எனத் திருப்பக் கேட்கிறார்கள். எத்தனை அர்த்தபுஷ்டியான கேள்வி!

➔ வள்ளுவர் உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு என்று குறிப்பிடுகிறார் பசியும் நோயும் பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு என்று அறிவுறுத்துகிறார்

★ வள்ளுவர், 'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு' என்று குறிப்பிடுகிறார். பசியும் நோயும் பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு என்று அறிவுறுத்துகிறார்.

www.Padasalai.Net





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# மரபுச்சொற்கள்

| பறவை | ஒலி மரபு |
|---|---|
| ஆந்தை | **அலறும்** |
| காக்கை | **கரையும்** |
| கிளி | **கொஞ்சும்** |
| குயில் | **கூவும்** |
| குருவி | **கீச்சிடும்** |
| கூகை | **குழறும்** |
| கோழி | **கொக்கரிக்கும்** |
| சேவல் | **கூவும்** |
| மயில் | **அகவும்** |
| வாத்து | **கத்தும்** |

| விலங்கு | ஒலி மரபு |
|---|---|
| ஆடு | **கத்தும்** |
| கழுதை | **கத்தும்** |
| குதிரை | **கனைக்கும்** |
| சிங்கம் | **முழங்கும் (கர்ஜிக்கும்)** |
| நரி | **ஊளையிடும்** |
| நாய் | **குரைக்கும்** |
| பசு | **கதறும்** |
| புலி | **உறுமும்** |
| மாடு | **எக்காளமிடும்** |
| **யானை** | பிளிறும் |

| பெயர் | இளமைப் பெயர் |
|---|---|
| மான், பசு, யானை | **கன்று** |
| அணில், கீரி, கிளி | **பிள்ளை** |
| குருவி, எலி, கோழி | **குஞ்சு** |
| ஆடு, நாய், பூனை, குதிரை, குரங்கு | **குட்டி** |
| சிங்கம் | **குருளை** |
| புலி | **பறழ்** |

| தாவரம் | இலையின் பெயர் |
|---|---|
| மா, வாழை, மூங்கில் | **இலை** |
| நெல், வெங்காயம் | **தாள்** |
| பனை | **ஓலை** |
| கேழ்வரகு, சோளம், கம்பு | **தட்டை** |
| தாழை | **மடல்** |
| வேம்பு | **தழை** |
| தென்னை | **கீற்று** |

| தாவரம் | அடிப்பகுதி பெயர் |
|---|---|
| நெல், கேழ்வரகு | **தாள்** |
| கீரை, வாழை | **தண்டு** |
| நெட்டி, மிளகாய்ச்செடி | **கோல்** |
| குத்துச்செடி, புதர் | **தூறு** |
| கம்பு, சோளம் | **தட்டு** |
| கரும்பு | **கழி** |
| மூங்கில் | **கழை** |
| புளி, வேம்பு | **அடி** |

| தாவத்தின் பெயர் | பிஞ்சு நிலை பெயர் | தாவரப்பயிர்கள் | இளம்பயிர் |
|---|---|---|---|
| பூவோடு கூடிய இளம்பிஞ்சு | **பூம்பிஞ்சு** | நெல் கத்தரி | **நாற்று** |
| இளம்காய் | **பிஞ்சு** | மா, புளி, வாழைக் குருத்து | **கன்று** |
| மாங்காய் | **வடு** | தென்னை | **பிள்ளை** |
| பலா | **மூசு** | விளா | **குட்டி** |
| எள் | **கவ்வை** | பனை | **மடலி/ வடலி** |
| தென்னை, பனை | **குரும்பை** | நெல் சோளம் | **பைங்கூழ்** |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| தேங்காய் | **இளநீர்** |
| பாக்கு | **நுழாய்** |
| நெல் | **கருக்கல்** |
| வாழை | **கச்சல்** |

| தாவரம் | கொழுந்தின் பெயர் |
|---|---|
| நெல், புல் | **துளிர்** |
| புளி, வேம்பு | **முறி** |
| சோளம், கரும்பு, தென்னை, பனை | **குருத்து** |

| சொல் | பூவின் நிலை |
|---|---|
| அரும்பு | **தோற்றநிலை** |
| போது | **விரியத் தொடங்கும் நிலை** |
| அலர் | **மலர்ந்த நிலை** |
| வீ | **கீழேவிழும் நிலை** |
| செம்மல் | **வாடிய நிலை** |

| சொல் | தோலின் நிலை |
|---|---|
| தொலி | **மிக மெல்லியது** |
| தோல் | **திண்மையானது** |
| தோடு | **வன்மையானது** |
| ஓடு | **மிக வன்மையானது** |
| குடுக்கை | **சுரையின் ஓடு** |
| மட்டை | **தேங்காய் நெற்றின் மேற்பகுதி** |
| உமி | **நெல்லின் மேற்பகுதி** |
| கொம்மை | **வரகின் மேற்பகுதி** |

| தாவரம் | குலை பெயர் |
|---|---|
| அவரை, துவரை | **கொத்து** |
| முந்திரி | **குலை** |
| வாழை | **தாறு** |
| வாழைத்தாறின் பகுதி | **சீப்பு** |
| கேழ்வரகு, கதிர் | **கதிர்** |
| நெல், தினை | **அலகு** |

| தாவரங்கள் | தொகுப்பு பெயர் |
|---|---|
| மா, பலா, தென்னை, சவுக்கு, கொய்யா | **தோப்பு** |
| கரும்பு, வாழை, வெற்றிலை, தேயிலை, பூ | **தோட்டம்** |
| சோளம், கம்பு | **கொல்லை** |
| பனை, ஈச்சம், வேலம் | **காடு** |
| பூ | **சோலை** |

**பொருள்களின் தொகுப்பு**

| பொருள் | தொகுப்பு பெயர் | பொருள் | தொகுப்பு பெயர் |
|---|---|---|---|
| ஆடு | **ஆட்டுமந்தை** | சாவி | **சாவிக்கொத்து** |
| பசு | **பசுநிரை** | பணம் | **பணக்கட்டு** |
| யானை | **யானைக்கூட்டம்** | விறகு | **விறகுக்கட்டு** |
| எறும்பு | **எறும்புச் சாரை** | திராட்சை | **திராட்சைக்குலை** |
| கல் | **கற்குவியல்** | வைக்கோல் | **வைக்கோற்போர்** |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| வினை மரபுகள் | | | |
|---|---|---|---|
| தீ **மூட்டு** | அம்பு **எய்** | வில்லை **வளை** | பழம் **தின்** |
| சோறு **உண்** | பால் **பருகு** | தயிர் **கடை** | ஏர் **உழு** |
| நீர் **குடி** | தேன் **நக்கு** | பழச்சாறு **அருந்து** | மாத்திரை **விழுங்கு** |
| களை **பறி** | செடி **நடு** | கல் **உடை** | கூரை **வேய்** |
| நார் **கிழி** | கதிர் **அறு** | நெல் **தூற்று** | சோறு **சமை** |
| விறகு **பிள** | பறை **கொட்டு** | விளக்கு **ஏற்று** | வீடு **கட்டு** |
| கோலம் **இடு** | மாவு **இடி** | சோறு **வடி** | பொருள் **ஈட்டு** |

## தொடரிலுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக

➔ கோழி தன் கன்றுக்கு உணவு ஊட்டியது.
★ கோழி தன் **குஞ்சுக்கு** உணவு ஊட்டியது.

➔ மாறன் நெல் அறுத்து, கதிர் தூற்றினான்.
★ மாறன் கதிர் **அறுத்து,** நெல் **தூற்றினான்.**

➔ எழினி சோறு கடைந்து, தயிர் சமைத்தாள்.
★ எழினி சோறு **சமைத்து,** தயிர் **கடைந்தாள்.**

➔ யாழினி மாவை வடித்தாள்.
★ யாழினி மாவை **இடித்தாள்**.

➔ மகிழன் பறை அடித்தான்.
★ மகிழன் பறை **கொட்டினான்**.

➔ யானை குஞ்சு உணவு தின்றது.
★ யானைக்**கன்று** உணவு **உண்டது.**

➔ தாழைக்கீரை நன்கு மணம் வீசும்.
★ தாழை**மடல்** நன்கு மணம் வீசும்.

➔ பனங்கொல்லையில் நரிகள் கத்தும்.
★ பனங்**காட்டில்** நரிகள் **ஊளையிடும்.**

➔ காட்டில் யானை மந்தை சுற்றித் திரிந்தது.
★ காட்டில் யானைக்**கூட்டம்** சுற்றித் திரிந்தது.

➔ நெல்காட்டில் வைக்கோற்குவியல் உள்ளது.
★ நெல்**வயலில்** வைக்கோற்**போர்** உள்ளது.

➔ மாலையில் நறுமுகை விளக்கு மூட்டினாள்.
★ மாலையில் நறுமுகை விளக்கு **ஏற்றினாள்.**

➔ சந்திரா அடுப்பை ஏற்றினாள்.
★ சந்திரா அடுப்பை **மூட்டினாள்**.

➔ பாரி அம்பு தொடுத்தான்.
★ பாரி அம்பு **எய்தினான்.**

➔ தென்னம் தட்டையில் கூரை பின்னப்படுகின்றது.
★ தென்னங்**கீற்றில்** கூரை **வேயப்படுகிறது**.

➔ குரங்கு தன் பிள்ளையுடன் மரத்திற்குமரம் குதித்தது.
★ குரங்கு தன் **குட்டியுடன்** மரத்திற்குமரம் **தாவியது.**

➔ சிங்கக் குட்டிகள் காட்டில் உலாவிக் கொண்டிருந்தன.
★ சிங்கக் **குருளைகள்** காட்டில் உலாவிக் கொண்டிருந்தன.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ வாழை தாளில் உணவு தின்பது தமிழரின் பண்பாடு.

★ வாழை **இலையில்** உணவு **உண்பது** தமிழரின் பண்பாடு.

➔ வெங்காய இலை உணவில் பயன்படுத்தப்படுகிறது.

★ வெங்காயத்**தாள்** உணவில் **பயன்படுத்தப்படுகிறது.**

➔ திருவிழாக் காலங்களில் மா ஓலை கட்டப்படுகிறது.

★ திருவிழாக் காலங்களில் மா **இலை** கட்டப்படுகிறது.

➔ வானதி பூப் பிடுங்க பூக்காட்டிற்குச் சென்றாள்.

★ வானதி பூப் **பறிக்க பூஞ்சோலைக்குச்** சென்றாள்.

➔ வேலன் தன் கடையின் சாவிக்குலையை எடுத்துச் சென்றான்.

★ வேலன் தன் கடையின் சாவிக்**கொத்தை** எடுத்துச் சென்றான்.

➔ வங்கியில் பணம் குலை குலையாக இருக்கும்.

★ வங்கியில் பணம் **கட்டுக் கட்டாக** இருக்கும்.

➔ செழியன் சோறு தின்று, பழம் பருகி, பால் உண்டு, உறங்கினான்.

★ செழியன் சோறு **உண்டு**, பழம் **தின்று**, பால் **பருகி**, உறங்கினான்.

➔ உழவர் ஏர் பறித்து, விதை நட்டு, செடி விதைத்து, களை உழுதார்.

★ உழவர் ஏர் **உழுது**, விதை **விதைத்து**, செடி **நட்டு**,களை **பறித்தார்.**

➔ இனியன் விறகை ஒடித்து, சுள்ளியைப் பிளந்து, அடுப்பை ஏற்றினான்.

★ இனியன் சுள்ளியை **ஒடித்து**, விறகைப் **பிளந்து**, அடுப்பை **மூட்டினான்**.

➔ காட்டில் சிங்கம் கனைப்பதைக் கேட்ட யானைகள் உறுமின; குதிரைகள் ஊளையிட்டன; நரிகள் பிளிறின.

★ காட்டில் சிங்கம் **முழங்குவதைக்** (கர்ஜிப்பதைக்) கேட்ட யானைகள் **பிளிறின.** குதிரைகள் **கனைத்தன.** நரிகள் **ஊளையிட்டன.**

➔ சோலையில் குயில்கள் கொஞ்சுகின்றன; மயில்கள் கத்துகின்றன; குருவிகள் அகவுகின்றன; கிளிகள் குழறுகின்றன; சேவல்கள் கொக்கரிக்கின்றன; கோழிகள் கூவுகின்றன.

★ சோலையில் குயில்கள் **கூவின,** மயில்கள் **அகவுகின்றன**; குருவிகள் **கீச்சிடுகின்றன,** கிளிகள் **கொஞ்சுகின்றன.** சேவல்கள் **கூவுகின்றன.** கோழிகள் **கொக்கரிக்கின்றன**.

➔ வேலன் தன் ஊரிலுள்ள தென்னங்கொல்லை, வாழைத் தோப்பு, சோளக்காட்டைச் சுற்றிப் பார்த்தான்.

★ வேலன் தன் ஊரிலுள்ள தென்னந்**தோப்பு,** வாழைத் **தோட்டம்**, சோளக்**கொல்லையைச்** சுற்றிப் பார்த்தான்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

## வல்லினம் மிகும் இடங்கள்

➔ **இரண்டாம் வேற்றுமை உருபினை** (ஐ) அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அவனை + கண்டேன் = அவனைக் கண்டேன்.

➔ **நான்காம் வேற்றுமை உருபினை** (கு) அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அவனுக்கு + கொடுத்தேன் = அவனுக்குக் கொடுத்தேன்.

➔ **அ, இ** ஈற்று வினையெச்சத்தை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) போக + சொன்னான் = போகச் சொன்னான்.

ஆடி + களித்தான் = ஆடிக் களித்தான்.

➔ **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தை** அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) ஓடா + குதிரை = ஓடாக் குதிரை

➔ **அ, இ, எ** ஆகிய எழுத்துகளை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அ + கடிதம் = அக்கடிதம் இ + பறவை = இப்பறவை

➔ **அந்த, இந்த, எந்த** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அந்த + பையன் = அந்தப் பையன் இந்த + குழந்தை = இந்தக் குழந்தை

➔ **அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, யாண்டு** ஆகிய இடப் பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அங்கு + கண்டேன் = அங்குக் கண்டேன்.

யாண்டு + சென்றது = யாண்டுச் சென்றது?

➔ **அப்படி, இப்படி, எப்படி** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அப்படி + சொன்னான் = அப்படிச் சொன்னான்

எப்படி + கூறினான் = எப்படிக் கூறினான்

➔ **மற்ற, மற்று, மற்றை** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) மற்ற + பையன்கள் = மற்றப் பையன்கள்

➔ **முன்னர், பின்னர்** ஆகிய இடைச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) முன்னர் + கூறினான் = முன்னர்க் கூறினான்

➔ **நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரச்** சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) நாடு + பற்று = நாட்டுப் பற்று ஆறு + பாலம் = ஆற்றுப் பாலம்

➔ **வன்றொடர்க் குற்றியலுகரத்தை** அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) கருத்து + குவியல் = கருத்துக் குவியல்

பாக்கு + தின்றான் = பாக்குத் தின்றான்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ **<u>மென்றொடர்க் குற்றியலுகரத்தை</u>** அடுத்து பெயர்ச்சொல் வந்தால் வல்லினம் மிகும்.

(எ.கா.) கன்று + குட்டி = கன்று**<u>க்</u>**குட்டி

➔ **<u>ஓரெழுத்து ஒருமொழியை</u>** அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) பூ + பறித்தான் = பூ**<u>ப்</u>**பறித்தான் கை + தட்டினான் = கை**<u>த்</u>**தட்டினான்

➔ **<u>ய், ர், ழ்</u>** ஆகிய மெய்யெழுத்தை அடுத்து பெயர்ச்சொல் வந்தால், வல்லினம் மிகும்.

(எ.கா.) வாய் + சொல் = வாய்**<u>ச்</u>**சொல் மலர் + பந்தல் = மலர்**<u>ப்</u>**பந்தல்

தமிழ் + தென்றல் = தமிழ்**<u>த்</u>**தென்றல்

➔ **<u>எட்டு</u>, <u>பத்து</u>** ஆகிய எண்ணுப் பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) எட்டு + தொகை = எட்டு**<u>த்</u>**தொகை பத்து + பாட்டு = பத்து**<u>ப்</u>**பாட்டு

➔ **<u>இருபெயரொட்டுப் பண்புத்தொகையை</u>** அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) முல்லை + பூ = முல்லை**<u>ப்</u>**பூ சித்திரை + திங்கள் = சித்திரை**<u>த்</u>**திங்கள்

## வல்லினம் மிகா இடங்கள்

➔ <u>எழுவாய்த் தொடரை</u> அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) தாய் + சொன்னாள் = தாய்சொன்னாள்

➔ <u>விளிப்பெயரை</u> அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) செல்வா + கூறு = **<u>செல்வா கூறு!</u>**

➔ <u>பெயரெச்சத்தை</u> அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) சென்ற + பையன் = **<u>சென்ற பையன்</u>**

➔ <u>உகர ஈற்று வினையெச்சத்தை</u> அடுத்து வல்லினம் மிகாது

(எ.கா.) செய்து + பார்த்தான் = **<u>செய்து பார்த்தான்</u>**

➔ <u>எட்டு, பத்து</u> ஆகிய எண்ணுப்பெயர்களைத் தவிர்த்து பிற எண்ணுப் பெயர்களில் வல்லினம் மிகாது.

(எ.கா.) ஐந்து + தலை = **<u>ஐந்துதலை</u>**

➔ <u>மென்றொடர்க் குற்றியலுகத்தை</u> அடுத்து வினைமுற்று வந்தால் வல்லினம் மிகாது.

(எ.கா.) கரும்பு + தின்றான் = **<u>கரும்பு தின்றான்</u>**

➔ <u>வினைத்தொகையை</u> அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) ஊறு + காய் = **<u>ஊறுகாய்</u>**

➔ <u>சுட்டுப்பெயரை</u> அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) அது + சென்றது = **<u>அது சென்றது</u>**

➔ <u>அவை, இவை, எவை, அத்தனை, இத்தனை, எத்தனை</u> ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) அவை + குரங்குகள் = **<u>அவை குரங்குகள்</u>**

➔ 'படி' என்னும் இடைச்சொல் சேர்ந்த வினைச்சொல்லை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) வரும்படி + கூறினான் = **வரும்படி கூறினான்**

➔ உயர்திணைப் பெயர்ச் சொல்லின் ஈற்றில் 'ர்' வந்தால் வல்லினம் மிகாது.

(எ.கா.) மாணவர் + கற்றனர் = **மாணவர் கற்றனர்**

➔ இரட்டைக் கிளவியை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) சல சல = **சல சல**

➔ அடுக்குத் தொடரை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) பாம்பு + பாம்பு = **பாம்பு பாம்பு**

## வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

### பாடநூலில் உள்ளவை

➔ குமரனை பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

★ குமரனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை_தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

➔ அனைத்துத்துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.

★ அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே_பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும்.

➔ கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

★ கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை_தீமைகளைப் புரிந்து பேசுவர்.

➔ தமிழர், ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து, கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

★ தமிழர், ஆற்றுத் தண்ணீரைத் தேக்கிச் சேமித்து, கால்வாய் வெட்டி,_பாசனம் செய்தனர்.

➔ சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

★ சான்றோர் மிகுந்த_பொறுப்புடன் சிறப்பான சேவை_புரிந்து கொள்கையை நிலைநாட்டச் செய்தனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

➔ புதுக்கவிதைப் படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மைக் கொண்டது. எளியவர்களும் தம் உணர்ச்சிகளை கவிதை வாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பை தந்ததுப் புதுக்கவிதை எனலாம்.

★ புது**க்**கவிதை படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முக**த்**தன்மை_ கொண்டது. எளியவர்களும் தம் உணர்ச்சிகளை**க்** கவிதை வாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பை**த்** தந்தது_புதுக்கவிதை எனலாம்.

➔ எழுத்துமொழியை காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எனவேதான் இலக்கிய வழக்கை கைவிட்டு பேச்சுமொழிக்கு திரும்பியவுடனேக் கவிஞனுடையக் கவிதையின் மொழி அதிக வெளிப்பாட்டு சக்திக் கொண்டதாக மாறிவிடுகிறது.

★ எழுத்துமொழியை**க்** காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எனவேதான் இலக்கிய வழக்கை**க்** கைவிட்டு**ப்** பேச்சுமொழிக்கு**த்** திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி அதிக வெளிப்பாட்டு**ச்** சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

➔ மின்சார ரயிலின் நெருக்கத்தில் படியில் தொங்கிக்கொண்டுப் போகிறபோது வெளியில் பரந்துக் கிடக்கும் தனிமையை சாட்சியாக வைத்துத் தங்களுக்கு தாங்களே உதடு பிரித்து பேசிக்கொள்ளும் வகை.

★ மின்சார ரயிலின் நெருக்கத்தில் படியில் தொங்கி**க்**கொண்டு போகிறபோது வெளியில் பரந்து கிடக்கும் தனிமையை**ச்** சாட்சியாக வைத்துத் தங்களுக்கு**த்** தாங்களே உதடு பிரித்து பேசிக்கொள்ளும் வகை.

➔ ஆயிரம் முகத்தை பெற்றதுப் போன்றுப் பல்வேறுத் துறைச் செய்திகளை விரிவாக கூறினாலும் பாயிரம் இல்லையேல் அதுச் சிறந்த நூலாக மதிக்கப்படாது.

★ ஆயிரம் முகத்தை**ப்** பெற்றது_போன்று பல்வேறு துறை**ச்** செய்திகளை விரிவாக**க்** கூறினாலும் பாயிரம் இல்லையேல் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.

➔ பனைமரம் சிறந்தக் காற்று தடுப்பான். ஆழத்தில் நீர்மட்டம் குறையாத நீரை சேமிச்சு வைக்கிறத் தன்மையுடையது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையாது.

★ பனைமரம் சிறந்த காற்று**த்** தடுப்பான். ஆழத்தில் நீர்மட்டம் குறையாத நீரை**ச்** சேமிச்சு வைக்கிற_தன்மையுடையது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையாது.

➔ மீனை பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வண்டின் இசைகேட்டு வாய்க்காலின் மதகுகளிடையேக் கட்டப்பட்டச் சங்கிலியில் வாலை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும்.

★ மீனை**ப்** பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வண்டின் இசைகேட்டு வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் வாலை ஆட்டி**க்** கொண்டு அமர்ந்திருக்கும்.

➔ தாமரை தடாகத்தில் மீன்கள் துள்ளி பாய்ந்து விளையாடும். முத்துகளை ஈன்ற வெண்மையானச் சங்குகள் பரவிக் காணப்படும்.

★ தாமரை**த்** தடாகத்தில் மீன்கள் துள்ளி**ப்** பாய்ந்து விளையாடும். முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவி**க்** காணப்படும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தோஸ்த் தமிழ் உரை + 1

➔ தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்தச் சோலையில் மேக கூட்டங்கள் தங்கிச் செல்லும். இந்நாட்டில் உள்ளப் பொன்னாலான மாடமாளிகையில் அகில்புகையின் நறுமணம் பரவிக்கொண்டே இருக்கும்.

★ தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேக**க்** கூட்டங்கள் தங்கி**ச்** செல்லும். இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகையில் அகில்புகையின் நறுமணம் பரவி**க்**கொண்டே இருக்கும்.

➔ தலைவன், தான் வருவதாக சொல்லிவிட்டுச் சென்றக் காலத்திற்கு முன்னரே வீட்டிற்கு திரும்புகிறான்.

★ தலைவன், தான் வருவதாக**ச்** சொல்லிவிட்டு**ச்** சென்ற காலத்திற்கு முன்னரே வீட்டிற்கு**த்** திரும்புகிறான்.

➔ அது தலையை குலுக்கி எச்சரிக்கை விடுப்பதுபோலப் பிளிறிகொண்டு இன்னும் இரண்டடி முன்னால் வந்தது. யானை தலையை குலுக்கினால் அது எச்சரிக்கிறது என்றுதான் அர்த்தம்.

★ அது தலையை**க்** குலுக்கி எச்சரிக்கை விடுப்பதுபோல**ப்** பிளிறிக்கொண்டு இன்னும் இரண்டடி முன்னால் வந்தது. யானை தலையை**க்** குலுக்கினால் அது எச்சரிக்கிறது என்றுதான் அர்த்தம்.

➔ தமிழ் அகத்திணையியல் மலையும் மலைச் சார்ந்தப் பகுதியையும் குறிஞ்சி என்றுக் குறிக்கும். குறிஞ்சி நிலம் சார்ந்தச் சங்கப் பாடல்கள் மலையோடு இயைந்தத் தமிழர்தம் சீரிய வாழ்வினை பேசின.

★ தமிழ் அகத்திணையியல் மலையும் மலை சார்ந்த பகுதியையும் குறிஞ்சி என்று குறிக்கும். குறிஞ்சி நிலம் சார்ந்த சங்க**ப்** பாடல்கள் மலையோடு இயைந்த தமிழர்தம் சீரிய வாழ்வினை**ப்** பேசின.

➔ முருக பெருமானின் வழிபாட்டிற்காக பால் முதலான வழிபாட்டுப் பொருட்களை கொண்டுச் செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கி செல்வர். அவர்களில் வழிநடைப்பாடல் வகையிலிருந்து காவடி சிந்து எனும் பாவடிவம் தோன்றியது.

★ முருக**ப்** பெருமானின் வழிபாட்டிற்காக**ப்** பால் முதலான வழிபாட்டு**ப்** பொருட்களை**க்** கொண்டு செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கி**ச்** செல்வர். அவர்களில் வழிநடை**ப்**பாடல் வகையிலிருந்து காவடி**ச்** சிந்து எனும் பாவடிவம் தோன்றியது.

➔ சுவடிகளில் எழுதி பயன்படுத்தப்பட்டு அழிந்துபோகும் நிலையில் இருந்தப் புறநானூற்றின் பலச் சுவடிகளை ஒப்பிட்டு ஆய்ந்துப் பயன்பெறும் வகையில், உ.வே.சா. அச்சில் பதிப்பித்து வெளியிட்டார்.

★ சுவடிகளில் எழுதி**ப்** பயன்படுத்த**ப்**பட்டு அழிந்துபோகும் நிலையில் இருந்த புறநானூற்றின் பல சுவடிகளை ஒப்பிட்டு ஆய்ந்து பயன்பெறும் வகையில், உ.வே.சா. அச்சில் பதிப்பித்து வெளியிட்டார்.

➔ காரிக்கொம்புக்கு எட்டாதபடி எப்படியெல்லாம் பாதுகாத்துக் கொள்வதென்றுத் தவித்து அவனவன் அங்கும் இங்கும் ஓடி பதுங்க பார்த்தான்.

★ காரி**க்**கொம்புக்கு எட்டாதபடி எப்படியெல்லாம் பாதுகாத்து**க்** கொள்வதென்று தவித்து அவனவன் அங்கும் இங்கும் ஓடி**ப்** பதுங்க**ப்** பார்த்தான்.

➔ சமணத்தை சேர்ந்த திகம்பர துறவிகள் மலைக்குகைகளில் தங்கினர். அவர்கள் தங்களின் தங்குமிடங்களிலேயேக் கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்கு கற்பித்தனர்.

★ சமணத்தை**ச்** சேர்ந்த திகம்பர**த்** துறவிகள் மலைக்குகைகளில் தங்கினர். அவர்கள் தங்களின் தங்குமிடங்களிலேயே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்கு**க்** கற்பித்தனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

➔ இளமையின் சிறகை முறிக்காத இனியச் சூழலில், பிள்ளைகளுக்குப் பிடித்தப் பள்ளிக்கூடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றொருக் கனவு அனைவருக்கும் இருக்கும்.

★ இளமையின் சிறகை முறிக்காத இனிய சூழலில், பிள்ளைகளுக்கு**ப்** பிடித்த பள்ளிக்கூடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றொரு கனவு அனைவருக்கும் இருக்கும்.

➔ நாட்டின் எதிர்காலமாய் விளங்கும் மாண்புப் பொருந்திய மாணவர் எவ்வாறுக் கற்க வேண்டும் என்பதை இதன் சிறப்பு பாயிர உரைவிளக்கப் பாடல் விளக்குகிறது.

★ நாட்டின் எதிர்காலமாய் விளங்கும் மாண்பு பொருந்திய மாணவர் எவ்வாறு கற்க வேண்டும் என்பதை இதன் சிறப்பு**ப்** பாயிர உரைவிளக்கப் பாடல் விளக்குகிறது.

➔ பாரதி யானை மிதித்து சாகவில்லை, வறுமை மிதித்து செத்தார் என எங்கேயோக் கவித்துவமாக படித்த நினைவு.

★ பாரதி யானை மிதித்து**ச்** சாகவில்லை, வறுமை மிதித்துச் செத்தார் என எங்கேயோ கவித்துவமாக**ப்** படித்த நினைவு.

➔ ஆனந்தரங்கர் நாட்குறிப்பு அக்காலக் கட்டங்களில் புதுவையிலும், தமிழகத்திலும், தென்னிந்தியாவிலும் நிகழ்ந்தப் பல்வேறு அரசியல் நிகழ்வுகளைப் பதிவுச் செய்துள்ளது.

★ ஆனந்தரங்கர் நாட்குறிப்பு அக்கால கட்டங்களில் புதுவையிலும், தமிழகத்திலும், தென்னிந்தியாவிலும் நிகழ்ந்த பல்வேறு அரசியல் நிகழ்வுகளை**ப்** பதிவு செய்துள்ளது.

➔ ஆங்கிலேய படைகள் சாரம் வரை வந்துவிட்டதை பொதுமக்கள் வேடிக்கைப் பார்த்தனர். குண்டுச் சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது.

★ ஆங்கிலேய**ப்** படைகள் சாரம் வரை வந்துவிட்டதை**ப்** பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர். குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது.

➔ பழைமையான மதீனா நகரம், கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்றப் பொருள் வளத்தைக் கொண்டது. அங்கு எந்தப் பொருளும் இல்லையென்றுச் சொல்வதற்கு இல்லை.

★ பழைமையான மதீனா நகரம், கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தை**க்** கொண்டது. அங்கு எந்த**ப்** பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை.

➔ தலைவித் தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் வரலாம் என்பதுக் குறிப்பு. இது இறைச்சி பொருள்.

★ தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்கு தலைவன் வரலாம் என்பது குறிப்பு. இது இறைச்சி**ப்** பொருள்.

➔ வந்தது வீட்டை சுற்றி நோட்டம் விட்டது. இடதுகை தாழ்வார சுவரும் நேர் சுவரும் சந்திக்கும் இடத்தில் அதன் பார்வை வந்து நிலைகுத்தியதை நானும் உணர்ந்து அந்த இடத்தைப் பார்த்தேன்.

★ வந்தது வீட்டை**ச்** சுற்றி நோட்டம் விட்டது. இடதுகைத் தாழ்வார**ச்** சுவரும் நேர்ச் சுவரும் சந்திக்கும் இடத்தில் அதன் பார்வை வந்து நிலைகுத்தியதை நானும் உணர்ந்து அந்த இடத்தை**ப்** பார்த்தேன்.

சீரூடைந்தபொது



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி கட்டுவதுபோல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர். அந்த வகையில் முழுமையாக கற்களை கொண்டே கட்டப்பட்ட மிகப் பெரிய கோவில் இதுதான்.

★ செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதுபோல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர். அந்த வகையில் முழுமையாகக் கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப் பெரிய கோவில் இதுதான்.

➔ ரோஜா என்னும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளராக தமது திரையிசைப் பயணத்தை தொடங்கினார். இவரின் இசைத், தமிழ்த்திரைப்பட இசையுலகில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.

★ ரோஜா என்னும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளராகத் தமது திரையிசைப் பயணத்தைத் தொடங்கினார். இவரின் இசை, தமிழ்த்திரைப்பட இசையுலகில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.

➔ ஒருப் பாடலுக்கான மெட்டை உருவாக்கும்முன் அதற்கானத் தாளத்தைத்தான் முதலில் உருவாக்குவார். பாடலுக்கானச் சூழலை மனத்தில் உள்வாங்கிக்கொண்டு, அதற்கேற்றத் தாளக்கட்டை உருவாக்கி அதனுள் அமிழ்ந்திருக்கும் பாடலுக்கான மெட்டை வெளிக்கொணர்வார்.

★ ஒரு பாடலுக்கான மெட்டை உருவாக்கும்முன் அதற்கான தாளத்தைத்தான் முதலில் உருவாக்குவார். பாடலுக்கான சூழலை மனத்தில் உள்வாங்கிக்கொண்டு, அதற்கேற்ற தாளக்கட்டை உருவாக்கி அதனுள் அமிழ்ந்திருக்கும் பாடலுக்கான மெட்டை வெளிக்கொணர்வார்.

➔ ஒரு மொழித் தன் வேர்ச்சொற்களை கொண்டுப் புதியப் புதியக் கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு உருவாக்கி கொள்ளும்போது மொழி தன்னைப் புதுப்பித்துக்கொண்டுப் புதியச் செழிப்பினைப் பெற்று மேலும் வளர்ச்சிப் பெறும்.

★ ஒரு மொழி தன் வேர்ச்சொற்களைக் கொண்டு புதிய புதிய கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு உருவாக்கிக் கொள்ளும்போது மொழி தன்னைப் புதுப்பித்துக்கொண்டு புதிய செழிப்பினைப் பெற்று மேலும் வளர்ச்சி பெறும்.

➔ விசயத்தை வண்டி வண்டியாக குவித்து சின்ன மூளைகளைக் குழப்பி வாதனைக்கு உள்ளாக்குவது பலப் பிரசங்கிகளுக்குப் பொழுதுபோக்கு.

★ விசயத்தை வண்டி வண்டியாகக் குவித்துச் சின்ன மூளைகளைக் குழப்பி வாதனைக்கு உள்ளாக்குவது பல பிரசங்கிகளுக்குப் பொழுதுபோக்கு.

➔ ஓர் இரவுப்பொழுதில் அழகிய நிலவினை கண்டு உதாரன் தன்னை மறந்துக் கவிதை ஒன்றை பாடுகிறான். பார்வையற்ற ஒருவன் நிலவின் அழகைக் கண்டு எவ்வாறுக் கவிபாட முடியும் என்று ஐயம் கொண்ட அமுதவல்லித் திரையினை விலக்கினாள்.

★ ஓர் இரவுப்பொழுதில் அழகிய நிலவினைக் கண்டு உதாரன் தன்னை மறந்து கவிதை ஒன்றைப் பாடுகிறான். பார்வையற்ற ஒருவன் நிலவின் அழகைக் கண்டு எவ்வாறு கவிபாட முடியும் என்று ஐயம் கொண்ட அமுதவல்லி திரையினை விலக்கினாள்.

➔ இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வடக்கே இமயமலைவரைப் படையெடுத்துச் சென்று, வெற்றிப் பெற்று, இமயத்தில் வில்லினை பொறித்தவன். தமிழின் சிறப்பை உலகறிய செய்தவன்.

★ இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வடக்கே இமயமலைவரை படையெடுத்துச் சென்று, வெற்றி பெற்று, இமயத்தில் வில்லினைப் பொறித்தவன். தமிழின் சிறப்பை உலகறியச் செய்தவன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→ ஆண் பெண் சமத்துவ சிந்தனை, பேதங்களை கடந்தத் தோழமை, கல்விச் சார்ந்த உயர்ந்தக் கருத்துகள் ஆகிய எல்லாவற்றையும் வழங்கி முழுமையான முன்னேற்றத்திற்குப் பெரிதும் வழிகாட்டுவது நாடே!

★ ஆண் பெண் சமத்துவ**ச்** சிந்தனை, பேதங்களை**க்** கடந்த தோழமை, கல்வி சார்ந்த உயர்ந்த கருத்துகள் ஆகிய எல்லாவற்றையும வழங்கி முழுமையான முன்னேற்றத்திற்கு**ப்** பெரிதும் வழிகாட்டுவது நாடே!

→ உலகிலுள்ள அனைத்து பொருள்களும் பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டுகின்றன. முன்னோர்கள் சிலப் பொருள்களுக்கு காரணம் கருதியும் சிலப் பொருள்களுக்குக் காரணமின்றியும் பெயர் வைத்தனர்.

★ உலகிலுள்ள அனைத்து**ப்** பொருள்களும் பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டுகின்றன. முன்னோர்கள் சில பொருள்களுக்கு**க்** காரணம் கருதியும் சில பொருள்களுக்கு**க்** காரணமின்றியும் பெயர் வைத்தனர்.

→ நாகரிக வழக்கத்தில் காலத்துக்கேற்றபடிச் சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு. தோட்டக்காரனுடையக் கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும். மலர் செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை.

★ நாகரிக வழக்கத்தில் காலத்து**க்**கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு. தோட்ட**க்**காரனுடைய கைகளில் அவற்றை**ப்** பராமரிக்கும் பொறுப்பு இருக்கும். மலர்**ச்** செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை.

→ மனோன்மணீயம் தமிழன்னைப் பெற்ற நல் அணிகலனாகும். நாடகத்துறைக்குத் தமிழில் நூல்கள் இல்லையே என்றக் குறையினைத் தீர்க்க வந்த நூல் மனோன்மணீயம் ஆகும்.

★ மனோன்மணீயம் தமிழன்னை பெற்ற நல் அணிகலனாகும். நாடகத்துறைக்கு**த்** தமிழில் நூல்கள் இல்லையே என்ற குறையினை**த்** தீர்க்க வந்த நூல் மனோன்மணீயம் ஆகும்.

→ என்னுடையக் குழந்தை பருவத்திலேயே எனக்குள் மறைந்திருந்த பெண்மையை கண்டு கொண்டேன். எந்த மனத்தடையுமின்றி என்னை உணர்த்துவதற்கு நடனம் உதவிச் செய்தது.

★ என்னுடைய குழந்தை**ப்** பருவத்திலேயே எனக்குள் மறைந்திருந்த பெண்மையை**க்** கண்டு கொண்டேன். எந்த மன**த்**தடையுமின்றி என்னை உணர்த்துவதற்கு நடனம் உதவி செய்தது.

சொற்பயிற்சி

## தொடரிலுள்ள பிழையை நீக்கி எழுதுக

| பிழையான தொடர் | பிழை நீக்கிய தொடர் |
|---|---|
| → இன்று, வண்டிகள் ஓடாது. | ★ **இன்று, வண்டிகள் ஓடா.** |
| → அவை இங்கே உளது. | ★ **அவை இங்கே உள.** |
| → அது பறவைகள் அல்ல. | ★ **அவை பறவைகள் அல்ல.** |
| → அது எல்லாம் | ★ **அவை எல்லாம்** |
| → மக்கள் கிடையாது | ★ **மக்கள் இல்லை** |
| → வருவதும் போவதும் கிடையாது | ★ **வருவதும் போவதும் கிடையா** |
| → ஒன்றோ அல்லது இரண்டோ தருக | ★ **ஒன்றோ இரண்டோ தருக** |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



➔ சென்னை என்ற நகரம் ★ **சென்னை என்னும் நகரம்**

➔ எனது மகள் ★ **என் மகள்**

➔ ஏற்கத்தக்கது அன்று ★ **ஏற்கத்தக்கது அல்ல**

➔ அவளது தந்தை ★ **அவள் தந்தை**

➔ இடதுபக்கம் இருப்பது கண்ணகி சிலை. ★ **இடப்பக்கம்இருப்பதுகண்ணகிசிலை.**

➔ நான் மற்றும் அவன் சென்றோம். ★ **நானும் அவனும் சென்றோம்.**

➔ பத்து பழங்களில் ஒரு பழமே நல்லன. ★ **பத்து பழங்களில் ஒரு பழமே நல்லது.**

➔ இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே. ★ **இங்குள்ளவை எல்லாம் நல்ல பழமே.**

➔ விழாவில் பல அறிஞர்கள் பேசினர். ★ **விழாவில் அறிஞர்கள் பலர் பேசினர்.**

➔ ஒவ்வொரு சிற்றூர்களிலும் ஊராட்சி உள்ளது.

★ **ஒவ்வொரு சிற்றூரிலும் ஊராட்சி உள்ளது.**

➔ சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அன்று.

★ **சென்னைக்கு அருகில் இருப்பது கன்னியாகுமரி அன்று.**

➔ கண்ணன் முருகன் மற்றும் வேலன் வந்தனர்.

★ **கண்ணனும் முருகனும் வேலனும் வந்தனர்.**

➔ நல்லவைகளும் கெட்டவைகளும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.

★ **நல்லவையும் கெட்டவையும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.**

➔ கந்தன் அரசினர் பள்ளியில் படிக்கின்றான்.

★ **கந்தன் அரசுப் பள்ளியில் படிக்கின்றான்.**

➔ சேரன், சோழன், பாண்டியன் முதலிய தமிழ் மன்னர்கள் தமிழகத்தை ஆண்டனர்.

★ **சேரன், சோழன், பாண்டியன் ஆகிய தமிழ் மன்னர்கள் தமிழகத்தை ஆண்டனர்.**

➔ கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலியவை பாரதியார் இயற்றிய நூல்கள் ஆகும்.

★ **கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்றவை பாரதியார் இயற்றிய நூல்கள் ஆகும்.**

➔ அவர்தான் கூறினார் இவர்தான் கூறினார் என்று பாராது எவர்தான் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க.

★ **அவர் கூறினார், இவர் கூறினார் என்று பாராது எவர் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க.**

➔ மாணவர்கள் கல்வியறிவு ஒழுக்கத்திற் சிறந்து விளங்க வேண்டும்.

★ **மாணவர்கள் கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும்.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## விடைக்கேற்ற வினா அமைக்க

➔ மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர்.

★ **புதுக்கவிதை என்றால் என்ன?**

➔ ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவது மொழி. அது, நம் இருப்பிடத்தின் அடையாளம்.

★ **ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவது எது? அது எதன் அடையாளமாக இருக்கின்றது?**

➔ கைகால் அசைவுகள், முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள் மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன.

★ **மொழி வெளிப்பாட்டின் பகுதிகள் யாவை?**

➔ பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர். முதல் வகையினர், வால்ட் விட்மனைப் போன்றவர்கள். இரண்டாம் வகையினர், கவிஞர் மல்லார்மே போன்றவர்கள். மூன்றாம் வகையினர், பாப்லோ நெரூடா போன்றவர்கள்.

★ **பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்கள் எத்தனை வகையினர்? அவர்கள் யாவர்?**

➔ நூலைப் புரிந்துகொள்ளவும் அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது. தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இத்தகைய அமைப்பினைக் காணலாம்.

★ **பாயிரத்தின் பயன் யாது?**

➔ நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை என்னும் ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம் ஆகும்.

★ **பொதுப்பாயிரத்தில் கூறப்படும் கருத்துகள் யாவை?**

➔ தங்களுடைய தாய்நாட்டிலிருந்து வெளியேறியவர்களும் வெளியேற்றப்பட்டவர்களும் எதிர்கொள்ளும் அவலங்களை ஆறாம்திணை ஆறாத வடுவாகப் பதிவு செய்கிறது.

★ **ஆறாம் திணை பதிவு செய்வது யாது?**

➔ பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன் மூலம் அதிக வருவாய் கிடைக்கும். இவ்வாறு ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக்கூட்டுப் பொருள் என அழைக்கின்றனர்.

★ **மதிப்புக்கூட்டுப் பொருள் என்றால் என்ன?**

➔ தொழுஉரம் என்பது மாட்டுச் சாணம், கோமியம் ஆகியவற்றைக் கலந்து வைக்கோலை மட்கச் செய்து உருவாக்குவது ஆகும்.

★ **தொழுஉரம் என்றால் என்ன?**





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ உழவர், உழத்தியரது வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்பட வெளிப்படுத்துவதே பள்ளுச் சிற்றிலக்கியத்தின் குறிக்கோளாகும்.

★ **பள்ளுச் சிற்றிலக்கியத்தின் குறிக்கோள் யாது?**

➔ பள்ளு 96 வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது உழத்திப்பாட்டு எனவும் அழைக்கப்படும்.

★ **உழத்திப்பாட்டு என அழைக்கப்படுவது எது?**

➔ இல்லறத்தில் அன்பும் அறனும் சிறக்க வேண்டித் தலைவன் பொன்னும் பொருளும் ஈட்ட வெளியூர் செல்வது பற்றிப் பல சங்கப் பாடல்கள் பேசுகின்றன.

★ **இல்லறம் சிறக்கத் தலைவன் செய்வது யாது?**

➔ யானைகளில் மூன்று சிற்றினங்கள் இன்று உலகில் எஞ்சியுள்ளன. அவை ஆப்பிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆப்பிரிக்கக் காட்டு யானைகள், ஆசிய யானைகள் ஆகியனவாகும்.

★ **யானைகளில் எஞ்சியுள்ள சிற்றினங்களின் வகைகள் எத்தனை? அவை யாவை?**

➔ பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர்.

★ **கடையெழு வள்ளல்கள் எத்தனைப் பேர்?**

➔ தமிழ் மொழியில் 'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது.

★ **'வரை' என்ற சொல்லின் பொருள்கள் யாவை?**

➔ காவடி, தமிழ்ப் பண்பாட்டுக்கூறுகளுள் ஒன்று. உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது.

★ **தமிழ்ப் பண்பாட்டுக்கூறுகளுள் ஒன்றாக விளங்குவது எது?**

➔ மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.

★ **பொருண்மொழிக்காஞ்சி - துறை விளக்கம் தருக.**

➔ அளவில் சிறுகதையைவிட நீளமாகவும் புதினத்தைவிடச் சிறியதாகவும் இருக்கும் கதை குறும்புதினம். இதனைக் குறுநாவல் என்றும் சொல்வர்.

➔ **குறும்புதினம் என்றால் என்ன? அதற்கு வழங்கும் வேறுபெயர் யாது?**

➔ கல்வியின் நோக்கம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதாகும். பன்னெடுங்காலமாக முன்னோர்களால் வளப்படுத்தப்பட்ட அறிவாற்றலையும் அனுபவத்தையும் ஒவ்வொரு தனிமனிதனும் பெறுமாறு செய்வதாகும்.

★ **கல்வியின் நோக்கம் யாது?**

➔ வளமையும் வறுமையும் வாழ்க்கையென்னும் நாணயத்தின் இருபக்கங்களாகும். வறுமையில் செம்மையாய் வாழ அறிவுறுத்துவது கல்வி.

★ **நாணயத்தின் இருபக்கங்கள் யாவை? செம்மையாய் வாழ அறிவுறுத்துவது எது?**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ பெண் விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி பெண்களுக்காகத் தமது 'சக்ரவர்த்தினி' இதழில் குறள் வெண்பா எழுதியுள்ளார்.

★ **பாரதியார் பெண்களுக்காக குறள் வெண்பா எழுதிய இதழ் எது?**

➔ உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பொப்பிசு ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளை நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார்.

★ **உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?**

➔ புதுச்சேரியின் ஆளுநராக லெறி இருந்த காலத்தில், புதுச்சேரியின் இராணுவ அரசியல் செய்திகளை முகலாயருக்கும், ஆங்கிலேயருக்கும் கூறுவதாக ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது.

★ **ஆனந்தரங்கர் மீது சுமத்தப்பட்ட பழி என்ன?**

➔ பகையும் வறுமையும் நோயும் தீண்டாப் பொருள்வளம் நிறைந்த மதீனா நகரில் தானத்திலும் தவத்திலும் சிறந்து விளங்கிய மக்கள் தீன் நெறியை வளர்த்த பாங்கினைச் செலவியற் காண்டம் காட்சிப்படுத்துகிறது.

★ **செலவியற் காண்டம் காட்சிப்படுத்துவது யாது?**

➔ அன்பை மறைக்கவும் வேண்டும்; பயன்பாடு கருதி வெளிப்படுத்தவும் வேண்டும். தலைவியைத் தலைவன் சந்திக்க வேண்டிய குறியிடத்தைப் பற்றிய குறிப்பைப் பொதிந்து வெளியிடுவது தோழியின் பொறுப்பு.

★ **தோழியின் பொறுப்பு என்ன?**

➔ ஒவ்வொருவரிடமும் தனித்தன்மைகள், விருப்பங்கள் உள்ளன. ஆயினும், பிறரோடு உறவு கொள்கையில் அவர்களுக்கேற்றவாறு நம்மை மாற்றிக் கொள்கிறோம். ஆனால் நம் மனசாட்சி நம்முடைய இயல்பை நினைவூட்டிக்கொண்டே இருக்கும்.

★ **நம்முடைய இயல்பை நினைவூட்டிக்கொண்டே இருப்பது எது?**

➔ மனிதனின் படைப்புத் திறனால் உருவானது கலை ஆகும். அது நம் மனத்தில் அழகுணர்வை ஏற்படுத்தி மகிழ்வையும் தருகிறது. நுண்கலை, பயன்கலை, பருண்மைக்கலை, கவின்கலை, நிகழ்த்துகலை எனக் கலைகள் பலவகைப்படும்.

★ **கலைகளின் வகைகள் சிலவற்றைக் கூறுக.**

➔ ஆத்மாநாம், கவிதை பாடுதலைச் சமூக அக்கறையாக மாற்றிக்கொண்டவர். இக்கவிதையில் அணிலையும் புளியமரத்தையும் காட்சிப்படுத்தி நம்முடன் உரையாடுகிறார்.

★ **அணிலையும் புளியமரத்தையும் காட்சிப்படுத்தி நம்முடன் உரையாடுபவர் யார்?**

➔ குறவஞ்சி என்பது ஒரு வகை நாடக இலக்கிய வடிவமாகும். இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. இது குறத்திப்பாட்டு என்றும் வழங்கப்படுகின்றது.

★ **குறவஞ்சி இலக்கியம் குறிப்பு வரைக.**

➔ மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடலான 'நம்ரதா கே சாகர்' என்னும் பாடலுக்கு இசையமைத்து, இந்துஸ்தானி இசைப் பாடகர் அஜொய் சக்கரபர்த்தியைப் பாடவைத்து இசைக்கோவையை வெளியிட்டிருக்கிறார்.

★ **மகாத்மா காந்தி எழுதிய பாடல் எது?**

பொதுத்தமிழ்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ கலைச்சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும்.

★ **கலைச்சொல்லாக்கம் என்றால் என்ன?**

➔ மனித வெள்ளத்தை அவர்களில் ஒருவனாய் முன்னின்று தலைமை தாங்கி இட்டுச் சென்று, அதிஉன்னதமான ஓர் எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற கனவு ஜீவாவின் சிறுவயதிலிருந்தே வளர்ந்து வந்துள்ளது.

★ **ஜீவாவின் கனவை விளக்குக.**

➔ மக்களாட்சிக்கு முன்புவரை சட்டம், நிருவாகம், நீதி ஆகியவை அரசனிடமே குவிந்து இருந்தன. இந்நிலை சிறிது சிறிதாக மக்கள் புரட்சியால் மாற்றப்பட்டுத் தற்பொழுது மக்களாட்சிமுறை பல்வேறு நாடுகளில் மலர்ந்துள்ளது.

★ **மக்களாட்சிமுறை மாறுவதற்கான காரணம் என்ன?**

➔ செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும்.

★ **செந்துறைப் பாடாண் பாட்டு என்றால் என்ன?**

➔ தமிழர் சிந்தனைக்கான வெளிப்பாட்டு வடிவங்களில் சிறப்பானதொரு வடிவம் பட்டிமன்றமாகும். முரண்பாடான பல கருத்துகளை விளக்கவும் நிலைநாட்டவும் பட்டிமன்றம் உதவுகிறது.

★ **பட்டிமன்றத்தின் பயன் யாது?**

➔ மரத்தால் செய்யப்பட்டுப் பின்புறம் சாய்ந்துகொள்ளவும் கைகளை வைத்துக்கொள்ள வசதியாகவும் நான்கு கால்களைக் கொண்ட இருக்கைக்கு நாற்காலி எனக் காரணம் கருதிப் பெயர் வைத்தனர்.

★ **நாற்காலி - பெயர்க்காரணம் கூறுக.**

➔ செய்தியை உரியவருக்குத் தெரிவிப்பதற்காக எழுதி அனுப்பப்படுவது கடிதமாகும். அதுவே, உரிய வடிவுடன் பொருட்செறிவாலும் கற்பனை நயத்தாலும் மொழிவளத்தாலும் கடித இலக்கியமாக உருப்பெறுகின்றது.

★ **கடிதம் இலக்கியமாக எவ்வாறு உருப்பெறுகின்றது?**

➔ இன்குலாப் தம் எழுத்துகள் எளிய மக்களுக்கானவை என்னும் உறுதியுடன் எண்ணம், சொல், செயல் என்ற மூவகையிலும் நின்று வாழ்ந்தவர்.

★ **தம் எழுத்துகள் எளிய மக்களுக்கானவை என்னும் உறுதியுடன் இருந்தவர் யார்?**

➔ சிலப்பதிகாரத்தில் 11 வகையான ஆடற்கலைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதிலும் ‘வேளிர் ஆடல்’ முக்கியமானது.

★ **சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆடற்கலைகளின் வகைகள் எத்தனை?**





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## தொகைச்சொல்லை விரித்தெழுதுக

| தொகைச்சொல் | விரிச்சொற்கள் |
|---|---|
| இருவினை | நல்வினை, தீவினை |
| இருதிணை | உயர்திணை, அஃறிணை |
| இரட்டைக் காப்பியம் | சிலப்பதிகாரம், மணிமேகலை |
| முக்கனி | மா, பலா, வாழை |
| முத்தமிழ் | இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் |
| முப்பால் | அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் |
| முக்காலம் | இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் |
| முந்நீர் | ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் |
| முக்கொடி | வில் கொடி, புலி கொடி, மீன் கொடி |
| மூவேந்தர் | சேரர், சோழர், பாண்டியர் |
| மூவினம் | வல்லினம், மெல்லினம், இடையினம் |
| மூவிடம் | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| நாற்றிசை | கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு |
| நாற்படை | தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை |
| நானிலம் | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| நால்வகை பா | வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா |
| ஐந்திணை | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| ஐம்பூதம் | நீர், நிலம், நெருப்பு, காற்று, வானம் |
| ஐம்பொன் | பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் |
| ஐம்புலன் | மெய், வாய், மூக்கு, செவி, கண் |
| ஐந்திலக்கணம் | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி |
| ஐம்பெருங்காப்பியங்கள் | சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி |
| அறுசுவை | இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு |
| ஏழு வள்ளல்கள் | பாரி, ஓரி, காரி, நள்ளி, ஆய், அதியன், பேகன் |
| எட்டுத்திக்கு | கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு |
| எட்டுத்தொகை | நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு |
| எண்வகை மெய்ப்பாடு | நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை |
| நவரத்தினம் | முத்து, மரகதம், மாணிக்கம், பவளம், வைரம், வைடூரியம், புட்பராகம், நீலம், கோமேதகம் |
| பத்துப்பாட்டு | திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்பாட்டு |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக

➔ அடமானம் வச்ச வூட்ட மீட்க போறான்.

★ **அடைமானம் வைத்த வீட்டை மீட்க போகின்றான்.**

➔ அத்தினி பேனா வைச்சியிருக்கல, ஒரு பேனா குடு.

★ **அத்தனை பேனா வைத்துள்ளாயே, ஒரு பேனா கொடு.**

➔ இத்தினி நாளா எனக்கு இரும்பலா இருந்து.

★ **இத்தனை நாட்களாக எனக்கு இருமலாக இருந்தது.**

➔ இப்ப என்னத்துக்கு நீ சத்தமா பேசுற?

★ **இப்பொழுது எதற்கு நீ சத்தமாக பேசுகிறாய்?**

➔ ஒணவுல கட்டாயம் கருவேப்பில சேக்கனும்.

★ **உணவில் கட்டாயம் கருவேப்பிலை சேர்க்க வேண்டும்.**

➔ ஒத வாங்குனவனுக்கு ஒத்தடம் குடு.

★ **உதை வாங்கியவனுக்கு ஒற்றடம் கொடு.**

➔ ஒழவு நிலத்துல நஞ்சை, புஞ்சைனு ரெண்டு வகை இருக்கு.

★ **உழவு நிலத்தில் நன்செய், புன்செய் என்று இரண்டு வகை உள்ளது.**

➔ என்னிக்கோ போற உசுர ஏன் இம்புட்டு கஷ்டப்பட்டு புடிச்சி வைச்சிருக்க?

★ **என்றைக்கோ போக போகின்ற உயிரை ஏன் இத்தனை கடினப்பட்டு பிடித்து வைத்துள்ளாய்?**

➔ ஒருத்தன் ஒண்டியாப் போனா ஓர்வோலமா?

★ **ஒருவன் ஒன்றியாக சென்றால் ஊர்வலமா?**

➔ கந்தன் நொங்கு தின்னான்.

★ **கந்தன் நுங்கு தின்றான்.**

➔ கவுறு அறுக்க கத்திரிக்கோல் கொண்டா.

★ **கயிறு அறுப்பதற்கு கத்தரிக்கோல் கொண்டுவா.**

➔ காய்கறி வெட்ட அருவாமனை கொண்டா.

★ **காய்கறி வெட்ட அரிவாள்மனை கொண்டுவா.**

➔ சக்கரை நோயாளி பாவக்காய் சாப்புட்டான்.

★ **சர்க்கரை நோயாளி பாகற்காய் சாப்பிட்டான்.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ சாப்புட்றதுல பாதி சோறு உமிநீர்லதான் செறிக்கு.

★ **சாப்பிடுவதில் பாதி சோறு உமிழ்நீரில்தான் செறிக்கும்.**

➔ சாயங்காலம் அஞ்சு மணி ஆச்சு.

★ **சாயும் காலம் ஐந்து மணி ஆயிற்று.**

➔ தண்ணிய அடுப்புல வச்சி சூடு பண்ணா, சுடுதண்ணியாகும்.

★ **தண்ணீரை அடுப்பில் வைத்து வெப்பப்படுத்தினால், வெந்நீராகும்.**

➔ நேத்து அடமழை பெஞ்சிச்சு.

★ **நேற்று அடைமழை பெய்தது.**

➔ ஸ்கூலுக்கு இடதுபக்கம் போவணும்.

★ **பள்ளிக்கு இடப்பக்கம் போக வேண்டும்.**

➔ புதுசா கட்டின கட்டிடம் எம்புட்டு பெருசா இருக்கு.

★ **புதிதாக கட்டப்பட்ட கட்டடம் எவ்வளவு பெரிதாக உள்ளது.**

➔ பேனாக்கு சிகப்பு மை ஊத்தினான்.

★ **பேனாவிற்கு சிவப்பு மை ஊற்றினான்.**

➔ மாடியில வத்தல் காயுது.

★ **மாடியில் வற்றல் காய்கின்றது.**

➔ முருகன் கஷ்டப்பட்டு மெதிவண்டிய மெரிச்சான்.

★ **முருகன் கடினப்பட்டு மிதிவண்டியை மிதித்தான்.**

➔ வூட்டுல இருக்குற ஒட்ரைய அடிச்சி, வூட்ட சுத்தமா வச்சிக்கனும்.

★ **வீட்டில் இருக்கிற ஒட்டடையை அடித்து, வீட்டைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்.**

➔ வௌக்கு ஏத்த எண்ணை வாங்கிட்டு வா.

★ **விளக்கு ஏற்ற எண்ணெய் வாங்கிக்கொண்டு வா.**

மொழிப்பாடம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக

**அடியற்ற மரம் போல (நிலை தடுமாறி)**

➔ தன் தந்தை இறந்த செய்தியைக் கேட்ட முருகன் அடியற்ற மரம் போல விழுந்தான்.

**அத்தி பூத்தாற் போல (அதிசயமான நிகழ்வு)**

➔ நான் உதவி கேட்டதும், இராமன் அத்தி பூத்தாற் போல எனக்கு உதவினான்.

**அனலிற்பட்ட மெழுகு போல (துன்பப்படுதல்)**

➔ மக்கள்படும் துன்பங்களைக் கேட்ட தலைவர் அனலிற்பட்ட மெழுகு போல மனம் உருகினார்.

**அன்றலர்ந்த மலர் போல (புத்துணர்ச்சியுடன் இருத்தல்)**

➔ தேன்மொழி எப்பொழுதும் அன்றலர்ந்த மலர் போல இன்முகத்துடன் விளங்கினாள்.

**ஆலை வாய்ப்பட்ட கரும்பு போல (துன்பப்படுதல்)**

➔ தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்கள் ஆலை வாய்ப்பட்ட கரும்பு போல துன்புறுத்தப்படுகிறார்கள்.

**இடியோசை கேட்ட நாகம் போல (நடுங்கிப் போதல்)**

➔ திருடன், காவலர்கள் வரும் ஓசையைக் கேட்டு இடியோசை கேட்ட நாகம் போல நடுங்கினான்.

**இருதலைக் கொள்ளி எறும்புப் போல (அறத்துன்பம் / தர்ம சங்கடம் )**

➔ என் நண்பன் செய்த தவறுக்காக நான் அவனுடைய பெற்றோரிடம் பொய் சொல்லவும் முடியாமல், மெய் சொல்லவும் முடியாமல், இருதலைக் கொள்ளி எறும்புப் போல தவித்தேன்.

**இளவு காத்த கிளிபோல (ஏமாந்து போதல்)**

➔ தேர்வு நேரத்தில் நண்பனைப் பார்த்து எழுதலாம் என்று எண்ணியிருந்த வேலன், தேர்வாளர் வேலனை தனி அறைக்கு மாற்றியதால் இளவு காத்த கிளிபோல ஏமாந்து போனான்.

**உயிரும் உடலும் போல (ஒற்றுமையுடன் இருத்தல்)**

➔ நானும் என் நண்பன் கதிரவனும் உயிரும் உடலும் போல இணைந்தே இருக்கின்றோம்.

**உள்ளங்கை நெல்லிக்கனி போல (வெளிப்படை)**

➔ ஆசிரியர் கற்பித்த இலக்கணம் உள்ளங்கை நெல்லிக்கனி போல எளிதில் விளங்கியது.

**ஊமை கண்ட கனவு போல (வெளியில் சொல்ல முடியாமை)**

➔ தன் மகன் செய்த தவறை அறிந்த தாய், தன் கணவரிடம் சொல்ல முடியாமல், ஊமை கண்ட கனவு போல தவித்தாள்.

**எலியும் பூனையும் போல (சண்டையிட்டுக் கொண்டிருத்தல்)**

➔ செழியனும் மாறனும் எப்பொழுதும் எலியும் பூனையும் போல சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**எள்ளினுள் எண்ணெய் போல (உள்ளுக்கு ஒளிந்திருத்தல்)**

➔ எள்ளினுள் எண்ணெய் இருப்பது போல, படிப்பறிவு இல்லாத மகிழனுக்குள் பல திறமைகள் இருந்தன.

**கண்ணை இமை காப்பது போல (பாதுகாத்தல்)**

➔ கண்ணை இமை காப்பது போல தாய் தன் பிள்ளைகளைக் காக்கின்றாள்.

**கிணறு வெட்டப் பூதம் வந்தது போல (எதிர்பாராத அதிர்ச்சி)ஒன்றை நினைத்துச் செய்ய வேறொன்றாக முடிவது)**

➔ கீழேக் கிடந்த தங்கச் சங்கிலியைக் ஒப்படைக்கச் சென்ற கந்தனை, திருடன் எனக் காவலர்கள் குற்றம் சாட்டியது கந்தனுக்கு கிணறு வெட்டப் பூதம் வந்தது போல ஆயிற்று.

**கீரியும் பாம்பும் போல (பகைமை)**

➔ கனிமொழியும் தேன்மொழியும் கீரியும் பாம்பும் போல எப்பொழுதும் எதிரிகளாகவே இருந்தனர்.

**குடத்திலிட்ட விளக்கு போல (பிறர் அறியாமல் இருத்தல்)**

➔ ஏழைக் குடும்பத்தில் பிறந்ததால், கந்தனுக்குப் பல திறமைகள் இருந்தும் குடத்திலிட்ட விளக்கு போல அவன் ஒளி குன்றிப் போனான்.

**கும்பிட போன தெய்வம் குறுக்கில் வந்தது போல (எண்ணியது நிறைவேறுதல்)**

➔ புத்தகம் தொலைந்த நேரத்தில், அவன் நண்பன் வேலன் வீட்டிற்கே வந்து புத்தகம் கொடுத்து உதவியது கண்ணனுக்கு கும்பிட போன தெய்வம் குறுக்கில் வந்தது போல இருந்தது.

**குரங்கு கையில் அகப்பட்ட பூ மாலை போல (துன்பப்படுதல்)**

➔ தன் தாயை இழந்த பெண் குழந்தை மாற்றாந்தாயிடம் அகப்பட்டு, குரங்கு கையில் அகப்பட்ட பூ மாலை போல துன்புற்றாள்.

**குன்றின்மேலிட்ட விளக்கு போல (புகழுடன் விளங்குதல்)**

➔ வள்ளுவன் புகழ் குன்றின்மேலிட்ட விளக்கு போல ஒளிவீசியது.

**சிலைமேல் எழுத்துப் போல (ஆழமாகப் பதிதல்)**

➔ நாம் இளமையில் கற்கும் கல்வி சிலைமேல் எழுத்துப் போல அழியாமல் நிலைத்து நிற்கும்.

**சேற்றில் முளைத்த செந்தாமரை போல**

➔ ஏழை வீட்டில் பிறந்த கந்தன் சேற்றில் முளைத்த செந்தாமரை போல தன் சுய முயற்சியால் விளையாட்டுத் துறையில் முதலிடம் பிடித்தான்.

**தவளை தன் வாயால் கெடுவதைப் போல (தன்னைத் தானே கெடுத்துக் கொள்ளுதல்)**

➔ தவளை தன் வாயால் கெடுவது போல, வில்லாளன் தன் தவறை மறைக்க மாற்றி மாற்றி பேசி காவலரிடம் மாட்டிக்கொண்டான்.

**நகமும் சதையும் போல (ஒற்றுமையாக இருத்தல்)**

➔ பாரதிதாசன், பாரதியார் மேல்கொண்ட நட்பு நகமும் சதையும் போல பிரிக்க முடியாமல் இருந்தது.

**நீர் மேல் எழுத்துப் போல (நிலைக்காமல் போதல்)**

➔ முன்முடிவுகளுடன் வாழும் சிலருக்குக் கூறும் அறிவுரைகள் நீர் மேல் எழுத்துப் போல அவர் மனதில் நிலைக்காமல் போகும்.

மொழிப்பயிற்சி

**நெருப்பில் இட்ட புழு போல (துடி துடித்தல்)**

➔ எப்பொழுதும் உண்மையையே பேசும் பகலவன் தன் நண்பனைக் காப்பதற்காக பொய் கூறி நெருப்பில் இட்ட புழு போல துடித்தான்.

**பகலவனைக் கண்ட பனி போல (எளிதில் நீங்குதல்)**

➔ வாழ்வில் எத்தனை துன்பங்கள் வந்தாலும் சோர்வடையதா மனமிருந்தால், துன்பங்கள் யாவும் பகலவனைக் கண்ட பனி போல விலகும்.

**பசுத்தோல் போர்த்திய புலி போல (நல்லவன் வடிவிலுள்ள கெட்டவன்)**

➔ அரசியல்வாதிகள் சிலர் பசுத்தோல் போர்த்திய புலி போல இருந்து மக்களை ஏமாற்றுகிறார்கள்.

**பசுமரத்தாணிப் போல (ஆழமாகப் பதிதல்)**

➔ சிறுவயதில் கற்கும் நல்ல பழக்கங்கள் பசுமரத்தாணிப் போல மனத்தில் நன்கு பதியும்.

**பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல (செயல் எளிமையாக முடிதல்)**

➔ பல் மருத்துவத் துறையாவது கிடைக்குமா? என ஏங்கிய கலையரசிக்கு பழம் நழுவி பாலில் விழுந்தது போல பொதுமருத்துவத் துறையில் இடம் கிடைத்து மகிழ்ந்தாள்.

**மடை திறந்த வெள்ளம் போல (தொடர்ச்சி)**

➔ ஜீவா மேடையில் மடை திறந்த வெள்ளம் போல பேசினார்.

**மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல (பாதியில் நீங்குதல்)**

➔ மகிழுந்து ஓட்டத் தெரியாத என் நண்பன் கதிரவனை நம்பி பயணித்ததால், மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல் பாதியில் நின்றுவிட்டது.

**மழைக் காணாத பயிர் போல (வாடியிருத்தல்)**

➔ சிலம்பு விற்கச் சென்ற கோவலன் வாரததை நினைத்து கண்ணகி மழைக்காணாப் பயிர் போல வாடினாள்.

**முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல (மூடி மறைத்தல்)**

➔ கட்சித் தலைவர்கள் பலர் நாட்டிற்கு நன்மை செய்யவே நான் பிறந்தேன் என முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கின்றனர்.

**வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல (மெல்ல மெல்ல முடித்தல்)**

➔ தமிழாசிரியர் திருமலை வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல நகைச்சுவையுடன் இலக்கணத்தைக் கற்றுத்தந்தார்.

**விழலுக்கு இறைத்த நீர் போல (வீணாகுதல்)**

➔ வேலனுக்கு கூறிய அறிவுரைகள் விழலுக்கு இறைத்த நீர் போல வீணானது.

**வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தாற் போல (செயல் முடிவடையும் நேரத்தில் வீண் போதல்)**

➔ உலகக்கோப்பைக் கிரிகெட் இறுதிப்போட்டியில் கைக்கு வந்த பந்தை பிடிக்கத் தவறியதால் நியுஸிலாந்து அணி வெற்றி வாய்ப்பை இழந்தது .



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல (துன்பத்தை அதிகப்படுத்துதல்)**

➔ தேர்வில் தோல்வியுற்று கவலையிலிருந்த சுடரொளியை அவள் தோழி தேன்மொழி தன் உயர்மதிப்பெண்களைக் காட்டியதால் சுடரொளிக்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல் இருந்தது.

**வேலியே பயிரை மேய்வதைப் போல (பாதுகாப்புத் தர வேண்டியவரே தவறு செய்வது)**

➔ காவலர்களே திருடுவது, வேலியே பயிரை மேய்வதைப் போல உள்ளது.

## இருபொருள் தருக

| சொல் | பொருள் |
|---|---|
| **அசைதல்** | ஆடல், தங்கல் |
| **அணங்கு** | தெய்வம், கொலை |
| **அண்ணல்** | பெருமை, தலைவன் |
| **அணி** | அழகு, அணிதல் |
| **அம்பரம்** | கூரை, கடல் |
| **அயில்** | வேல், கூர்மை |
| **அரி** | சிங்கம், கடல் |
| **அருணம்** | சிவப்பு, ஆடு |
| **அளி** | வண்டு, வழங்குதல் |
| **அன்னம்** | உணவு, பறவை |
| **ஆடு** | விலங்கு, நடனம் |
| **ஆரம்** | சந்தனம், மாலை |
| **ஆற்றல்** | வலிமை, செயல் |
| **ஆறு** | எண், நதி |
| **இசை** | பாட்டு, அனுமதி |
| **உழை** | பாடுபடு, மான் |
| **ஊக்கம்** | முயற்சி, வண்மை |
| **ஊறு** | இடையூறு, கொலை |
| **எகினம்** | கவரிமா, அன்னம் |
| **எட்டு** | எண், எட்டுதல் (அடைதல்) |
| **ஏடு** | செய்தித்தாள், பாலேடு |
| **ஏவல்** | வியங்கோள், ஆணை |

| சொல் | பொருள் |
|---|---|
| **கடி** | காப்பு, கூர்மை |
| **கடை** | கடை, இறுதி |
| **கதலி** | துணி, கொடி |
| **கயம்** | ஆழம், யானைக்கன்று |
| **கரைதல்** | கூவுதல், சொல்லுதல் |
| **காய்** | காய்தல், காய்கறி |
| **கேள்வி** | கல்வி, கேட்டல் |
| **திங்கள்** | நிலவு, மாதம் |
| **திரை** | திரைச்சீலை, அலை |
| **நாண்** | வெட்கப்படு, கயிறு |
| **படி** | படித்தல், படிக்கட்டு |
| **பார்** | உலகம், காண் |
| **பால்** | பசும் பால், இனம் |
| **பிடி** | பிடித்துக்கொள்ளுதல், பெண்யானை |
| **மதி** | அறிவு, நிலவு |
| **மறை** | மறைத்து வை, வேதம் |
| **மாலை** | பூமாலை, பொழுது |
| **முடி** | தலைமுடி, முடிவு |
| **மெய்** | உடல், மெய்யெழுத்து |
| **வலி** | வலி, வலிமை |
| **வாசம்** | மணம், இடம் |

## தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக

1) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.

- ★ **ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்**
- ★ **கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.**

2) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

- ★ **தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது**
- ★ **மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்**

3) பிறர் செய்யாவிட்டால் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை

- ★ **பிறர் செய்த உதவியை மறக்கக்கூடாது**
- ★ **நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது**

4) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?

- ★ **நேற்று வந்த பையன் யார் தெரியுமா?** ★**ஏன் பக்கத்தில் இருக்கவில்லை?**

5) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த நாடு வந்தனர்

- ★ **கோசல நாடு ஒரு சிறந்த நாடு** ★ **மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்**

## தொடர் மாற்றம்

1) மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். (கலவைத் தொடராக மாற்றுக)

- ★ **மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை என்பதால், மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்று, சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.**

2) தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.

(வினாத் தொடராக்குக)

- ★ **தஞ்சைக் கோவில் எவ்வகை கலைப்பணியில் கட்டப்பட்டது?**

3) என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை. (செய்தித் தொடராக்குக)

- ★ **மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை அழகானது.**

4) நான் வாரத்தின் இறுதி நாள்களில் நூலகத்திற்குச் செல்வேன்.

(பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக)

- ★ **நான் வாரத்தின் இறுதி நாள்களில் நூலகத்திற்குச் செல்லாமல் இருக்கமாட்டேன்.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பழமொழிகளை ஒழுங்குபடுத்துக

| ஒழுங்கற்ற தொடர்கள் | ஒழுங்கான தொடர்கள் |
| --- | --- |
| 1. கெடும் வாயால் தன் நுணலும் | ★ நுணலும் தன் வாயால் கெடும் |
| 2. புளிக்கும் பழகப் பாலும் பழகப் | ★ பழகப் பழகப் பாலும் புளிக்கும் |
| 3. போல உள்ளங்கை நெல்லிக்கனி | ★ உள்ளங்கை நெல்லிக்கனி போல |
| 4. மட்டு புத்தி ஆத்திரக்காரனுக்கு | ★ ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு |
| 5. அறியும் பாம்பின் கால் பாம்பு | ★ பாம்பின் கால் பாம்பு அறியும் |
| 6. பயம் இளங்கன்று அறியாது | ★ இளங்கன்று பயம் அறியாது |
| 7. ஐந்தில் வளையுமா? வளையாதது ஐம்பதில் | ★ ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? |
| 8. இழப்பான் அறிவை ஆத்திரக்காரன் | ★ ஆத்திரக்காரன் அறிவை இழப்பான் |
| 9. மேயலாமா? பயிரை வேலியே | ★ வேலியே பயிரை மேயலாமா? |
| 10. உதவும் சிறு துரும்பும் பல் குத்த | ★ சிறு துரும்பும் பல் குத்த உதவும் |
| 11. பாதி கடின முயற்சியே வெற்றி | ★ கடின முயற்சியே பாதி வெற்றி |
| 12. வினை அறுப்பான் விதைத்தவன் வினை | ★ வினை விதைத்தவன் வினை அறுப்பான் |
| 13. கரையில நாள் சில கற்பவர் கல்வி | ★ கல்வி கரையில, கற்பவர் நாள் சில |
| 14. ஆடாவிட்டாலும் தான் தன் சதை ஆடும் | ★ தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் |
| 15. கல்லும் கரைப்பார் கரைத்தால் கரையும் | ★ கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் |
| 16. எண்ணெய் நெருப்பில் எரிகிற ஊற்றாதே | ★ எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றாதே |
| 17. இருந்தால் ஏற்றம் இருக்கும் இறக்கமும் | ★ ஏற்றம் இருந்தால் இறக்கமும் இருக்கும் |
| 18. நீர் தளும்பாது நிறைகுடம் | ★ நிறைகுடம் நீர் தளும்பாது |
| 19. அமுதமும் அளவுக்கு நஞ்சு மிஞ்சினால் | ★ அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு |
| 20. முதற்படி தோல்வியே வெற்றிக்குப் | ★ தோல்வியே வெற்றிக்கு முதற்படி |
| 21. வாங்கு மரியாதை கொடுத்து மரியாதை | ★ மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு |
| 22. குறைவற்ற நோயற்ற செல்வம் வாழ்வே | ★ நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் |
| 23. பத்தும் பசி வந்தால் பறந்தோடும் | ★ பசி வந்தால் பத்தும் பறந்தோடும் |
| 24. புலி பாய்ந்தால் பார்த்தால் பசு | ★ பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி |
| 25. விடாதே ஆழம் காலை தெரியாமல் | ★ ஆழம் தெரியாமல் காலை விடாதே |





www.Padasalai.Net

## இலக்கிய நயம் பாராட்டுக

**இயல் 2**

**மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே ஒரு**
**வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே**

**வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே மீண்டும்**
**வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே**

**கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே பகல்**
**கூட்டினில் உறங்குவாயோ ? வெண்ணிலாவே**

**பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே நீயும்**
**பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே**

**கவிமணி**

**ஆசிரியர் குறிப்பு:-**

- ஆசிரியர் பெயர்: தேசிய விநாயகம்
- பெற்றோர்: சிவதாணு, ஆதிலட்சுமி அம்மாள்
- ஊர்: தேரூர், கன்னியாகுமரி
- சிறப்புப் பெயர்கள்: கவிமணி
- பணிகள்: ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், ஆராய்ச்சியாளர்
- நூல்கள்: ஆசிய ஜோதி, மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம்

**திரண்ட கருத்து:-**

★ **பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல**
**திரண்ட கருத்தால் கவி நிமிரும்**

- வானில் பல கோடி விண்மீன்களின் நடுவே நிலவாக இருக்கின்றாய்!
- பார்ப்பதற்கு கருப்புக்கடலில் வெள்ளியோடம்(வெள்ளைப்பரிசல்) போல் மிதக்கின்றாய்.
- வளர்ந்து அழகான காட்சியைத் தந்து பின்பு தேய்பிறையில் தேய்ந்து ஏன் வாடிப் போகின்றாய்?
- கூகை, ஆந்தையைப் போல நீயும் பகல்வேளையில் கூட்டில் மறைந்து தூங்குகின்றாயா?
- பூமியில் இறங்கி வந்தால் உன்னைப் பந்தாக எண்ணி அடிப்போம் எனப் பயந்து வானிலேயே இருக்கிறாயோ? என்று கவிஞர் கவிமணி நகைச்சுவையாகப் பாடுகின்றார்.

**மையக் கருத்து:-**

★ **பையபைய எழுத கவிதை வரும் - நல்ல**
**மையக்கருத்து கவியின் ஆழம் தரும்.**

- நிலவின் வடிவத்தையும் செயல்பாடுகளையும் நகைச்சுவையாக வெளிப்படுத்துகின்றார்.

**மோனைத் தொடை**

- அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத்தொடையாகும்.

★ **காட்டுக்கு அழகு யானை - நல்ல**
**கவிதைக்கு அழகு மோனை**

| சீர் மோனை | அடி மோனை |
|---|---|
| ➔ **வ**ளர்ந்து **வ**ளர்ந்து **வ**ரும் **வெ**ண்ணிலாவே | ➔ **வ**ளர்ந்து **வா**டி<br>➔ **கூ**கை **கூ**ட்டினில்<br>➔ **ப**ந்தடிப்போம் **பா**ரில் |

**எதுகைத் தொடை**

➔ அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத்தொடையாகும்

★ **யானையின் பலம் துதிக்கையிலே - நல்ல**
**கவிதையின் பலம் எதுகையிலே**

| சீர் எதுகை | அடி எதுகை |
|---|---|
| ➔ மீ**ன்**கள் - வெ**ண்**ணிலா<br>➔ வ**ள**ர்ந்து வ**ள**ர்ந்து ➔ வா**டி** வா**டி** | ➔ மீ**ன்**கள் ப**ந்**தடிப்போம்<br>(மெல்லினம் ஒன்றிய அடி எதுகை) |

**இயைபுத் தொடை**

➔ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைப்புத்தொடையாகும்

★ **காற்றசைவில் நடந்ததை வடிப்பதே கவிஞனின் இயல்புநடை - ஓரடியின்**
**ஈற்றசையில் முடிந்ததை முடிப்பதே கவிதையின் இயைபுத்தொடை**

➔ **வெண்ணிலவே வெண்ணிலவே வெண்ணிலவே வெண்ணிலவே**

**அணி நயம்**

★ **வியப்புற கவிதை தொடுப்பது தனிச்சிறப்பு - அதில்**
**நயமுற கவிஞன் வடிப்பது அணிச்சிறப்பு**

➔ அணிநயம் : ‘உவமையணி ’ பயின்று வந்துள்ளது.

➔ வெள்ளியோடம் ‘போல ’ 2. கூகை ஆந்தை ‘போல’

➔ ‘போல’ உவம உருபு வெளிப்படையாக அமைந்து வந்துள்ளதால் இது **‘உவமையணி’** ஆயிற்று.

**கற்பனை நயம்**

★ **தற்பரணர் கண்ணோட்டத்தால் தரணி வாழும் - சிறந்த**
**கற்பனையார் சொல்லோட்டத்தால் கவிதை வாழும்.**

➔ கருங்கடலில் உள்ள வெள்ளைப் பரிசல் என்கின்றார்.

➔ தேய்பிறையில் நிலவு தேய்வதைக் கவிஞர் வாடி போவதாக் கூறுகிறார்.

➔ பகலில் நிலவு கண்ணுக்குத் தெரியாமல் இருப்பதைக் கூட்டில் மறைந்து கொண்டதாகக் கூறுகின்றார்.

➔ பூமிக்கு வந்தால் சிறுவர் பந்தாக நினைத்து அடிப்பர் என நினைத்து அஞ்சுகிறது நிலா.

**சந்த நயம் :**

➔ இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

★ **யானைக்கு அழகு தந்தம் - நல்ல**
**கவிதைக்கு அழகு சந்தம்**

## இயல் 4

**பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்**
**மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்.**
**கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி**
**காட்சி கெடுத்திட லாமோ?**
**பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்**
**பேதமை யற்றிடும் காணீர்**

**பாரதியார்**

**ஆசிரியர் குறிப்பு:-**

- ➔ இயற்பெயர்: சுப்பிரமணியன்
- ➔ பெற்றோர்: சின்னசாமி, இலக்குமி அம்மாள்
- ➔ ஊர்: எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
- ➔ சிறப்புப் பெயர்கள்: பாரதி, பாட்டுக்கொரு புலவன், முண்டாசுக்கவி
- ➔ பணிகள்: கவிஞர், பேச்சாளர், கட்டுரையாளர், அரசியல் அறிஞர், இதழாளர்
- ➔ நூல்கள்: குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், கவிதைத் தொகுப்புகள்

**திரண்ட கருத்து:-**

★ **பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல**
**திரண்ட கருத்தால் கவி நிமிரும்**

- ➔ உலக உயிர்கள் அனைத்தையும் படைத்து, காத்து, அருளக் கூடியவன், இறைவன்.
- ➔ அவ்விறைவன், பெண்களுக்கு ஞானத்தை வைத்து படைத்தான்.
- ➔ ஆனால் உலகில் உள்ள சில மூடர்கள் நல்ல பெண்களின் அறிவைக் கெடுத்து வைத்துள்ளனர்.
- ➔ பெண்கள் அறிவைக் கெடுப்பது என்பது, இரண்டு கண்களில் ஒன்றைக் குத்தி காட்சியைக் கெடுப்பதைப் போன்றதாகும்.
- ➔ பெண்களின் அறிவை வளர்ப்பதனால், உலகிலுள்ள பேதமை நீங்கிவிடும்.

**மையக் கருத்து:-**

★ **பையபைய எழுத கவிதை வரும் - நல்ல**
**மையக்கருத்து கவியின் ஆழம் தரும்**

- ➔ பெண்களை உலக நிகழ்வுகளை அறியவிடாமல், மூடர்களாக வைத்திருக்கும் ஆண்களைக் கண்டிக்கும் வகையிலும்,
- ➔ பெண்கள் கல்வி கற்பதன் இன்றியமையாமையைக் கூறும் வகையிலும் இப்பாடல் அமைந்துள்ளது.

**மோனைத் தொடை:-**

- ➔ அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

★ **காட்டுக்கு அழகு யானை - நல்ல**
**கவிதைக்கு அழகு மோனை**

| சீர் மோனை | |
|---|---|
| ➔ பெண்ணுக்கு | பேணி |
| ➔ மண்ணுக்குள்ளே | மாதர் |
| ➔ கண்கள் | காட்சி |
| ➔ பெண்கள் | பேதமை |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**எதுகைத்தொடை:-**

➔ அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

★ **யானையின் பலம் துதிக்கையிலே - நல்ல**
**கவிதையின் பலம் எதுகையிலே**

| அடி எதுகை |
|---|
| ➔ பெண்ணுக்கு - மண்ணுக்குள்ளே |
| ➔ கண்கள் - பெண்கள் |

**சந்த நயம் :**

➔ இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

★ **யானைக்கு அழகு தந்தம் - நல்ல**
**கவிதைக்கு அழகு சந்தம்**

**இயல் 5**

**செந்நெலும் கரும்பும் விளைந்தனவே - நல்ல**
**தேன்பொழி மலர்களும் விரிந்தனவே**
**இன்னலும் பசியும் போயொழிக - தேசம்**
**எழிலுடன் கூடியே நலமுறுக**

**பிரிவுகள் பேசிய பூசலிட்ட - பழம்**
**பேதமை தனைத்தள்ளி அனைவருமே**
**ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் - நம்முள்**
**ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்**

**தமிழன் திருநாள் பொங்கலென்றால் - அதில்**
**தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?**
**புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே - யாரும்**
**புறம்பிலை என்றசொல் தமிழன்றோ?**

**யாதும் ஊரெனச் சாற்றியதும் - மக்கள்**
**யாவரும் கேளிர் என்றதுவும்**
**மேதினிக் குரைத்தவர்நம்முன்னோர் - இன்று**
**வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ?**

**பெ. தூரன்**

**ஆசிரியர் குறிப்பு:-**

➔ ஆசிரியர் பெயர் : பெ. தூரன்
➔ பெற்றோர் : பழனிவேலப்பன் - பாவாத்தாள்
➔ பணி : ஆசிரியர்
➔ விருது : பத்மபூஷன்
➔ நூல்கள் : பாரம்பரியம், பெற்றோர் கொடுத்த பெருங்கொடை, கருவில் வளரும் குழந்தை

www.Padasalai.Net



**திரண்ட கருத்து:-**

★ **பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல**
**திரண்ட கருத்தால் கவி நிமிரும்**

➔ செந்நெல்லும் கரும்புகளும் விளைந்துள்ளன.
➔ தேனைப் பொழியக் கூடிய மலர்கள் மலர்ந்துள்ளன.
➔ பசி என்னும் துன்பம் ஒழியட்டும். நாட்டில் நலம் பெருகட்டும்.

- மக்கள் தங்களுக்குள் வேற்றுமைகளைப் பேசிப்பேசி, சண்டையிட்ட நிலை மாறட்டும்.
- நம்மிடமுள்ள வேற்றுமைகளைத் தள்ளி வைத்துவிட்டு அனைவரும் ஒரு குடும்பத்தினாராய் வாழ்ந்திடுவோம்.
- நமக்குள் உள்ள வேற்றுமையை நீக்கி, ஒற்றுமையை ஓங்கிடச் செய்வோம்.
- தமிழர் திருநாளாம் பொங்கல் நாளில், பொங்கலோடு சேர்ந்து தமிழர்களின் பண்புகளும் பொங்குகின்றன.
- உலகமே ஒரு வீடு. அதில் வேற்றார் என்று யாரும் இல்லை என்று கூறிய சொல் தமிழ் சொல் அன்றோ?
- அனைத்து ஊரும் நம்முடைய ஊர், அனைவரும் நம்முடைய உறவினர் என்று உலகிற்குக் கூறியவர் நம் முன்னோர் அன்றோ?
- அவர்கள் வழியில் வந்த நாம் இன்று வேற்றுமை பேசுவது சரியாகுமா?

**மையக் கருத்து:-**

★ **பையபைய எழுத கவிதை வரும் - நல்ல**
**மையக்கருத்து கவியின் ஆழம் தரும்**

- பெ. தூரன் இப்பாடலில், உலக மக்கள் தங்களிடையே உள்ள வேற்றுமைகளை மறந்து, ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.

**மோனைத் தொடை:-**

- அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

★ **காட்டுக்கு அழகு யானை - நல்ல**
**கவிதைக்கு அழகு மோனை**

| சீர் மோனை | |
|---|---|
| ➔ **ஒ**ருதனிக் | **ஒ**ற்றுமை |
| ➔ **பொ**ங்கலென்றால் | **பொ**ங்குமன்றோ |
| ➔ **பு**வியெலாம் | **பு**றம்பிலை |
| ➔ **யா**தும் | **யா**வரும் |

**அணிநயம்:-**

★ **வியப்புற கவிதை தொடுப்பது தனிச்சிறப்பு - அதில்**
**நயமுற கவிஞன் வடிப்பது அணிச்சிறப்பு**

- கவிஞர், இப்பாடலில் 'புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே' என்ற அடிகளில், புவியை வீடாக உருவகப்படுத்தியுள்ளார்.
- எனவே, இப்பாடலில் **'உருவக அணி'** பயின்று வந்துள்ளது.

**சந்த நயம் :**

- இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

★ **யானைக்கு அழகு தந்தம் - நல்ல**
**கவிதைக்கு அழகு சந்தம்**

**இயல் 6**

**தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,**
**கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,**
**தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்**
**வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ.**

**கம்பர்**

**ஆசிரியர் குறிப்பு:-**

- ➔ பெயர் : கம்பர்
- ➔ ஊர் : திருவெழுந்தூர்
- ➔ ஆதரித்த வள்ளல் : திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல்
- ➔ பணி : குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவர்
- ➔ இயற்றிய நூல்கள் : கம்பராமாயணம், சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி
- ➔ காலம் : கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு

**திரண்ட கருத்து:-**

★ **பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல**
**திரண்ட கருத்தால் கவி நிமிரும்**

- ➔ நீண்ட கழுத்துகளை உடைய மயில்கள் தோகையை விரித்து ஆடுகின்றன.
- ➔ தாமரை மலர்கள் விளக்குகளை ஏந்தியுள்ளன.
- ➔ முரசை முழங்குவது போல மேகங்கள் முழங்கிக் கொண்டிருக்கின்றன.
- ➔ குவளை மலர்கள் கண்களை விழித்து பார்த்துக் கொண்டிருக்கின்றன.
- ➔ நீர் நிலைகள், தன் அலைகளை திரைச் சீலைகளாய் காட்டிக் கொண்டிருக்கின்றன.
- ➔ தேனைப் போன்ற இனிமையான மகர யாழில் இருந்து எழும் இசையைப் போன்று வண்டுகள் ரீங்காரமிடுகின்றன.
- ➔ இவற்றின் நடுவில் மருதம் என்னும் பெண் வீற்றிருக்கிறாள்.

**மையக்கருத்து:-**

★ **பையபைய எழுத கவிதை வரும் - நல்ல**
**மையக்கருத்து கவியின் ஆழம் தரும்**

- ➔ கம்பர் தன்னுடைய கற்பனைத் திறத்தால் ஐந்திணைகளின் ஒன்றாகிய மருத நிலத்தை ஒரு பெண்ணாக உருவகித்து, அங்கு நிலவும் சூழ்நிலைகளைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

**மோனைத் தொடை:-**

- ➔ அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

★ **காட்டுக்கு அழகு யானை - நல்ல**
**கவிதைக்கு அழகு மோனை**

| சீர்மோனை | அடிமோனை |
|---|---|
| ➔ **த**ண்டலை **தா**மரை<br>➔ **கொ**ண்டல்கள் **கு**வளைக்கண்<br>➔ **தெ**ண்திரை **தே**ம்பிழி<br>➔ **வ**ண்டுகள் **வீ**ற்றிருக்கும் | ➔ **வி**ளக்கம் - **வி**ழித்து |

**எதுகைத் தொடை:-**

- ➔ அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

★ **யானையின் பலம் துதிக்கையிலே - நல்ல**
**கவிதையின் பலம் எதுகையிலே**

| சீர் எதுகை |
|---|
| ➔ த**ண்**டலை கொ**ண்**டல்கள் தெ**ண்** திரை வ**ண்**டுகள் |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இயைபுத் தொடை:-**

- ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.
  - ★ **காற்றசைவில் நடந்ததை வடிப்பதே கவிஞனின் இயல்புநடை - ஓரடியின் ஈற்றசையில் முடிந்ததை முடிப்பதே கவிதையின் இயைபுத் தொடை**
- தாங்க நோக்க

**அணி நயம்:-**

★ **வியப்புற கவிதை தொடுப்பது தனிச்சிறப்பு - அதில்**
**நயமுற கவிஞன் வடிப்பது அணிச்சிறப்பு**

- இப்பாடலில், தாமரை மலர்கள் விளக்குகளாகவும்,
- மேகங்கள் முரசுகளாகவும்,
- குவளை மலர்கள் கண்களாகவும்,
- நீர் நிலைகள் திரைச் சீலைகளாகவும்,
- வண்டுகளின் ரீங்காரம் மகர யாழின் இசையாகவும்,
- மருத நிலம் பெண்ணாகவும் உருவகப் படுத்தப்பட்டுள்ளன.
- எனவே, இது **'உருவக அணி'** ஆயிற்று.

**சந்த நயம் :**

- இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

★ **யானைக்கு அழகு தந்தம் - நல்ல**
**கவிதைக்கு அழகு சந்தம்**

## இயல் 7

**சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்**
**சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?**
**பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்**
**பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?**
**இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்**
**எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்**
**நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின்ன றெதிர்த்திட**
**நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.**

**நாமக்கல் கவிஞர்**

**ஆசிரியர் குறிப்பு:-**

- பெயர் : இராமலிங்கனார்
- ஊர் : மோகனூர், நாமக்கல் மாவட்டம்
- பெற்றோர் : வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்
- பணி : தமிழக அரசின் அரசவைக் கவிஞர், சட்ட மேலவை உறுப்பினர்
- இயற்றிய நூல்கள்: அவனும் அவளும், மலைக்கள்ளன், சங்கொலி, என் கதை
- விருதுகள் : பத்மபூஷண் விருது
- சிறப்புப் பெயர் : காந்தியக் கவிஞர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**திரண்ட கருத்து:-**

★ **பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல**
**திரண்ட கருத்தால் கவி நிமிரும்**

➔ சுதந்திரம் தருகின்ற மகிழ்ச்சியைக் காட்டிலும் சுகம் தரும் உணர்ச்சி வேறு இல்லை.

➔ பதவிகள் தருகின்ற பெருமையும் பணம் தருகின்ற இன்பமும் சுதந்திரத்தை விடவும் கீழானது.

➔ பிறருக்கு உதவும் அறங்களும் புகழுடன் வாழ்தலும் சுதந்திரம் இருந்தால்தான் முடியும்.

➔ நாளும் அனுபவிக்கும் துன்பங்களையும் தொல்லைகளையும் எதிர்த்திட சுதந்திரம் வேண்டும்.

**மையக் கருத்து:-**

★ **பையபைய எழுத கவிதை வரும் - நல்ல**
**மையக்கருத்து கவியின் ஆழம் தரும்**

➔ நாமக்கல் கவிஞர் தம்முடைய பாடலில் சுதந்திரத்தின் இன்றியமையாமையைக் கூறுகின்றார்.

**மோனைத் தொடை:-**

➔ அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

★ **காட்டுக்கு அழகு யானை - நல்ல**
**கவிதைக்கு அழகு மோனை**

| சீர் மோனை |
|---|
| ➔ சுதந்திரம் சுகம் |
| ➔ பதம்தரும் பணம்தரும் |
| ➔ இதம்தரும் இசையுடன் |
| ➔ நிதம்தரும் நிச்சயம் |

**எதுகைத்தொடை:-**

➔ அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

★ **யானையின் பலம் துதிக்கையிலே - நல்ல**
**கவிதையின் பலம் எதுகையிலே**

| அடி எதுகை |
|---|
| ➔ சுதந்திரம் பதம்தரும் |
| ➔ இதம்தரும் நிதம்தரும் |

**இயைபுத் தொடை:-**

➔ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

★ **காற்றசைவில் நடந்ததை வடிப்பதே கவிஞனின் இயல்புநடை - ஓரடியின்**
**ஈற்றசையில் முடிந்ததை முடிப்பதே கவிதையின் இயைபுத் தொடை**

➔ காட்டிலும் - போகமும் - வாழ்தலும் - வேண்டும்

**அணி நயம்:-**

★ **வியப்புற கவிதை தொடுப்பது தனிச்சிறப்பு - அதில்**
**நயமுற கவிஞன் வடிப்பது அணிச்சிறப்பு**

➔ இப்பாடலில் கவிஞர் சுதந்திரத்தின் தேவைகளை இயல்பாகக் கூறியிருப்பதால், இது **'இயல்புநவிற்சியணி'** அமைந்த பாடலாகும்.

**சந்த நயம் :**

➔ இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

★ **யானைக்கு அழகு தந்தம் - நல்ல**
**கவிதைக்கு அழகு சந்தம்**





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல் 8

**சங்கத் தமிழ் அனைத்தும் தா**
**இரண்டாயிரமாண்டு நீளமுள்ள கவிதையை ஈன்ற**
**மூதாயியை தேடியலைந்த களைப்பில் பறவை**
**ஒருகாலத்தில் தன் தாகம் தணித்த**
**மண்பானையைத்தேடி அல்லலுற்றது.**
**பாடப்புத்தகத்தில் படம்பார்த்துச் சொன்ன**
**கதைக்குள்ளிருந்து நீரூற்று எதுவும் பீறிடவில்லை**
**ஐவகை நிலங்களையும் அலகில் கொத்தி**
**அடைகாக்க இன்னொரு இடமற்றுப் போக'**
**நீலவண்ண கடற்பரப்பில்**
**அந்தப் பறவை ஒரு முட்டை இட்டது.**
**அதன் குஞ்சு பொரிப்பில்**
**ஆயுதமும் புல்லாங்குழல் மறுகையுமாய்**
**அணங்கொருத்தி உதித்தெழுந்தாள்.**
**வயல்வெளியெங்கும் சலசலத்து திரிந்த**
**மருதயாழின் ஓசை வழிந்தோட**
**கால்கள் சுழன்றாடிய விறலி கூத்தின்முன்**
**பிரபஞ்சமே தன்னை புனைந்து கொண்டது.**

**பாணனின் கோப்பை**
**இப்போது காலியாயிருந்தது**
**தன் உடலிலிருந்து கிள்ளிப் பறித்தப் பூவை**
**குழந்தைக்கு தந்து வலியில் மூழ்கிய**
**பச்சைத்தாவரத்தின் கண்களில்**
**ஒருதுளி ரத்தம் தேங்கியிருந்தது.**
**-------------------------------------**
**சங்கக் கவிதையின் எழுத்தொன்றைத்திறந்து**
**காக்கைப்பாடினி வெளியேவந்தாள்.**
**ஆறாம்நிலத்தில் துளிர்த்த அறிவியல்தமிழ் நீயென**
**அருகே வந்தவள் முத்தம் தருகையில்**
**பறவைகள் தொலைந்துபோன பூமியில்**
**குளிரூட்டப்பட்ட அறைக்குள் உட்கார்ந்து**
**கணிப்பொறித்திரையில்**
**என் சின்னமகள்**
**ஒரு காக்கையை வரைந்து கொண்டிருந்தாள்**

**ஹெச்.ஜி.ரசூல்**

**மையக் கருத்து:-**

★ **பையபைய எழுத கவிதை வரும் - நல்ல**
**மையக்கருத்து கவியின் ஆழம் தரும்**

➔ ஹெச். ஜி. ரசூல் இப்பாடலில், தொழில்நுட்ப வளர்ச்சியால் நாம் இயற்கையிடமிருந்து எந்த அளவு விலகிச் சென்றுள்ளோம் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

**மோனைத் தொடை:-**

➔ அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

★ **காட்டுக்கு அழகு யானை - நல்ல**
**கவிதைக்கு அழகு மோனை**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| சீர் மோனை | அடி மோனை |
|---|---|
| ➔ **த**ன் **தா**கம் **த**ணித்த<br>➔ **பா**டப்புத்தகத்தில் **ப**டம்பார்த்துச்<br>➔ **இ**ன்னொரு **இ**டமற்றுப் | ➔ **அ**ந்தப் **அ**தன்<br>➔ **ஆ**றாம்நிலத்தில் **அ**ருகே |

**எதுகைத்தொடை:-**

➔ அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

★ **யானையின் பலம் துதிக்கையிலே - நல்ல**
**கவிதையின் பலம் எதுகையிலே**

| சீர் எதுகை |
|---|
| ➔ பாடப்புத்தகத்தில் படம்பார்த்துச் |

**அணி நயம்:-**

★ **வியப்புற கவிதை தொடுப்பது தனிச்சிறப்பு - அதில்**
**நயமுற கவிஞன் வடிப்பது அணிச்சிறப்பு**

➔ இப்பாடலில் கவிஞர் சங்ககால வாழ்க்கையின் இயல்புகளைக் கூறியுள்ளார்.

➔ எனவே, இது **'இயல்புநவிற்சியணி'** அமைந்த பாடலாகும்.

**சந்த நயம் :**

➔ இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

★ **யானைக்கு அழகு தந்தம் - நல்ல**
**கவிதைக்கு அழகு சந்தம்**

## சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

**பாரதியார் பாடல்கள்**

**ஆசிரியர் குறிப்பு:-**

➔ ஆசிரியர் பெயர்: பாரதியார்

➔ இயற்பெயர்: சுப்பிரமணியன்

➔ பெற்றோர்: சின்னசாமி, இலக்குமி அம்மாள்

➔ ஊர்: எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்

➔ சிறப்புப் பெயர்கள்: பாரதி, பாட்டுக்கொரு புலவன், முண்டாசுக்கவி

➔ பணிகள்: கவிஞர், பேச்சாளர், கட்டுரையாளர், அரசியல் அறிஞர், இதழாளர்

➔ நூல்கள்: குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், கவிதைத் தொகுப்புகள்

**பாடல் 1:-**

**செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்**
**தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே!**
**காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்**
**கண்டதோர் வையை பொருநைநதி - என**
**மேவிய ஆறுபல ஓடத் - திரு**
**மேனி செழித்த தமிழ்நாடு!**

**பாரதியார்**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**திரண்ட கருத்து:-**

- பாரதியார், தமிழ்நாட்டைச் செந்தமிழ் நாடு என்று கூறுகின்றார்.
- அவ்வாறு கூறும்போது, காதில் தேன் வந்து பாயுவதைப் போல உள்ளது.
- தமிழ்நாட்டை தம் தந்தையர் நாடு என்கிறார்.
- அவ்வாறு கூறும்போது, மூச்சில் ஒரு சக்தி பிறப்பதாக உணர்கிறார்.
- தமிழ்நாட்டில், காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, பொருநை ஆகிய ஆறுகள் பாய்கின்றன.
- எனவே, தமிழ்நாடு அனைத்து வகையிலும் செழித்து விளங்குகிறது.

**மையக் கருத்து:-**

- பாரதியார் இப்பாடலில், தமிழ்நாட்டின் சிறப்பைப் புகழ் பாடியுள்ளார்.

**மோனைத் தொடை:-**

- அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

| சீர் மோனை | |
|---|---|
| ➔ **கா**விரி **க**ண்டதோர் | ➔ **மே**விய **மே**னி |

**எதுகைத்தொடை:-**

- அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

| சீர் எதுகை | அடி எதுகை |
|---|---|
| இ**ன்**பத் தே**ன்**வந்து | செ**ந்**தமிழ் த**ந்**தையர் |

**அணி நயம்:-**

- இப்பாடலில், பூனை, நிறம், குட்டி ஆகிய சொற்கள் பலமுறை வந்து ஒரே பொருளைத் தருகின்றன.
- எனவே, இப்பாடலில் 'சொற்பொருள் பின்வரு நிலையணி' பயின்று வந்துள்ளது.

**சந்த நயம் :**

- இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

**பாடல் 2:-**

**நல்லதோர் வீணை செய்தே - அதை**
**நலங்கெடப் புழுதியி லெறிவ துண்டோ?**
**சொல்லடி சிவசக்தி - எனைச்**
**சுடர்மிகு மறிவுடன் படைத்துவிட்டாய்**
**வல்லமை தாராயோ - இந்த**
**மாநிலம் பயனுற வாழ்வதற்கே?**
**சொல்லடி சிவசக்தி - நிலச்**
**சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?**
**விசையுறு பந்தினைப்போல் - உள்ளம்**
**வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்,**
**நசையறு மனங்கேட்டேன், - நித்தம்**
**நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்,**
**தசையினைத் தீச்சுடினும் - சிவ**
**சக்தியை பாடுநல் லகங்கேட்டேன்,**
**அசைவறு மதிகேட்டேன் - இவை**
**அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?**

**பாரதியார்**





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**திரண்ட கருத்து:-**

- இசை இன்பம் தருகின்ற ஒரு நல்ல வீணையைச் செய்து, அதன் இன்பத்தை அனுபவிக்காமல் புழுதியில் (தூசியில்) எறிவது சரியா?
- உலக உயிர்கள் அனைத்திற்கும் தாயாக விளங்கக் கூடிய சிவசக்தியே! என்னை ஏன் மிகுதியான அறிவுடன் படைத்தாய்?
- உலக மக்களை மகிழ்வுடன் வாழ வைப்பதற்கான வல்லமையை எனக்குத் தந்தருள்வாயா?
- இல்லை, இந்தப் பூமிக்குச் சுமையாக வாழ்ந்திடச் செய்வாயா? சொல்லடி சிவசக்தி.
- விசையினால் சுழற்றியப் பந்து விரும்பியபடிச் செல்லுவதைப் போல, என் உள்ளம் விரும்பிய இடங்களுக்கு எல்லாம் செல்ல வேண்டும்.
- இதை அடைவதற்கு எனக்கு வலிமையான உடல் வேண்டும்.
- ஆசைகள் இல்லாத மனம் வேண்டும்.
- நாளும் புத்துணர்ச்சியுடன் விளங்கும் உயிர் வேண்டும்.
- என் உடல் நெருப்பில் எரிந்தாலும், உனை மறக்காமல் பாடுகின்ற உள்ளம் வேண்டும்.
- தெளிந்த அறிவு வேண்டும்.
- இவற்றை அருள்வதில் உனக்கு எதுவும் தடையும் உண்டோ?

**மையக் கருத்து:-**

- உலக மக்கள் அனைவரும் நலம்பெற்று வாழ்வதற்காக சிவசக்தியிடம் பாரதியார் வேண்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**மோனைத் தொடை:-**

- அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

| சீர் மோனை | | |
|---|---|---|
| → **ந**ல்லதோர் **ந**லங்கெடப் | → **சொ**ல்லடி **சு**டர்மிகு | → **சொ**ல்லடி **சு**மையென |
| → **வி**சையுறு **வே**ண்டிய | → **ந**சையறு **ந**வமெனச் | → **அ**சைவறு **அ**ருள்வதில் |

**எதுகைத்தொடை:-**

- அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

| அடி எதுகை |
|---|
| → ந**ல்**லதோர் சொ**ல்**லடி வ**ல்**லமை சொ**ல்**லடி |
| → வி**சை**யுறு ந**சை**யறு த**சை**யினைத் அ**சை**வறு |

**இயைபுத் தொடை:-**

- ஒவ்வோர் அடியின், ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.
- இப்பாடலில், **'கேட்டேன்'** என்னும் சொல் ஒவ்வோர் அடியின் ஈற்றிலும் அமைந்துள்ளது.
- எனவே, இது இயைபுத் தொடை ஆகும்.

**அணி நயம்:-**

- இப்பாடலில், 'சிவசக்தி', 'கேட்டேன்' ஆகிய சொற்கள் பலமுறை வந்து ஒரே பொருளைத் தருகின்றன.
- எனவே, இப்பாடலில் **'சொற்பொருள் பின்வரு நிலையணி'** பயின்று வந்துள்ளது.

**சந்த நயம் :**

- இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

தமிழ்ப் பாடு நூல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பாரதிதாசனார் பாடல்கள்

**ஆசிரியர் குறிப்பு:-**

- ➔ ஆசிரியர் பெயர்: பாரதிதாசன் ➔ இயற்பெயர்: கனக சுப்புரத்தினம்
- ➔ பெற்றோர்: கனகசபை, இலக்குமி அம்மாள் ➔ ஊர்: புதுச்சேரி
- ➔ சிறப்புப் பெயர்கள்: புரட்சிக்கவி
- ➔ நூல்கள்: சங்கொலி, அழகின் சிரிப்பு, தமிழச்சியின் கத்தி, தமிழியக்கம்
- ➔ விருது: 'பிசிராந்தையார்' நாடக நூலுக்கான சாகித்திய அகாதெமி விருது

**பாடல் 3:-**

**அறிஞர் தம்இதய ஓடை**
**ஆழநீர் தன்னை மொண்டு**
**செறிதரும் மக்கள் எண்ணம்**
**செழித்திட ஊற்றி ஊற்றிக்**
**குறுகிய செயல்கள் தீர்த்துக்**
**குவலயம் ஓங்கச் செய்வாய்!**
**நறுமண இதழ்ப் பெண்ணே உன்**
**நலம்காணார் ஞாலம் காணார்**

**பாரதிதாசனார்**

**திரண்ட கருத்து:-**

- ➔ கவிஞர் இப்பாடலில், இதழை ஒரு பெண்ணாக உருவகித்துப் பாடுகிறார்.
- ➔ அறிஞர்களின் இதயம் அகன்ற ஓடையைப் போன்றது.
- ➔ அந்த ஓடையில் இதழாகிய பெண் நீரை முகர்ந்து கொள்கிறாள்.
- ➔ நீரை மக்களிடம் ஊற்றி ஊற்றி அவர்களின் எண்ணங்களைச் செழித்திட செய்கிறாள்.
- ➔ அதனால் மக்களின் மனங்களில் உள்ள குறுகிய எண்ணங்கள் நீங்குகின்றது.
- ➔ உலகம் சிறப்புற்று விளங்குகிறது.
- ➔ இதழாகிய பெண்ணின் நலத்தைக் காணாதவர்கள் இந்த உலகத்தை அறியாதவர்கள் ஆவர்.

**மையக் கருத்து:-**

- ➔ பாரதிதாசனார் இப்பாடலில், இதழை ஒரு பெண்ணாக உருவகித்துப் புகழ்ந்துப் பாடுகிறார்.

**மோனைத் தொடை:-**

- ➔ அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

| சீர் மோனை |
|---|
| ➔ **த**ம்இதய **த**ன்னை ➔ **செ**றிதரும் **செ**ழித்திட ➔ **கு**றுகிய **கு**வலயம் ➔ **ந**றுமண **ந**லம்காணார் |

**எதுகைத்தொடை:-**

- ➔ அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

| சீர் எதுகை | அடி எதுகை |
|---|---|
| ➔ நலம்காணார் ஞாலம் | ➔ அ**றி**ஞர் செ**றி**தரும் ➔ கு**று**கிய ந**று**மணம் |

**அணி நயம்:-**

- ➔ இப்பாடலில், 'நறுமண இதழ்ப் பெண்ணே' என்று இதழைப் பெண்ணாக உருவகப்படுத்தியுள்ளார்.
- ➔ எனவே இது **உருவக அணி** ஆகும்.

**சந்த நயம் :**

- இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

**பாடல் 4:-**

**கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்**
**கழையிடை ஏறிய சாறும்**
**பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்**
**பாகிடை ஏறிய சுவையும்**
**நனிபசு பொழியும் பாலும் - தென்னை**
**நல்கிய குளிரிள நீரும்**
**இனியன என்பேன் எனினும் - தமிழை**
**என்னுயிர் என்பேன் கண்டீர்.**

**பாரதிதாசன்**

**திரண்ட கருத்து:-**

- பழத்தில் உள்ள சுளை,
- முற்றிய கரும்பில் உள்ள சாறு,
- மலரில் உள்ள தேன்,
- வெல்லப் பாகில் உள்ள சுவை
- பசுவின் பால்,
- தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் இளநீர்
- இவை அனைத்தையும் பாரதிதாசனார் இனிமையானவை என்கிறார்.
- இவற்றைக் காட்டிலும் உயர்வாக, தமிழைத் தன் உயிர் என்கிறார்.

**மையக் கருத்து:-**

- பாரதிதாசனார் இப்பாடலில், இனிமையான பொருட்கள் அனைத்தையும்விட, தமிழ் இனிமையானது என்னும் கருத்தை வெளிப்படுத்துகிறார்.

**மோனைத் தொடை:-**

- அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

| சீர் மோனை | |
|---|---|
| → **க**னியிடை **க**ழையிடை | → **ப**னிமலர் **பா**கிடை |
| → **ந**னிபசு **ந**ல்கிய | → **எ**ன்பேன் **எ**னினும் **எ**ன்னுயிர் |

**எதுகைத்தொடை:-**

- அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

| அடி எதுகை |
|---|
| → க**னி**யிடை ப**னி**மலர் ந**னி**பசு இ**னி**யன |

**அணி நயம்:-**

- இப்பாடலில், 'ஏறிய' என்னும் ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருள் தருகிறது.
- எனவே இது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.

**சந்த நயம் :**

- இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

தமிழ்நாடு ஓரிஜினல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பாடல் 5:-**

**மனிதரெல்லாம் அன்புநெறி காண்ப தற்கும்**
**மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து**
**தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்**
**சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்,**
**இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்**
**இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை**
**புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்**
**புத்தகசா லை வேண்டும் நாட்டில் யாண்டும்.**

**பாரதிதாசன்**

**திரண்ட கருத்து:-**

- ➔ மனிதர் எல்லாரும் அன்பு என்னும் நெறியைக் காண்பதற்கும்
- ➔ மனோபாவம் வானைப் போல் விரிவடைவதற்கும்
- ➔ தனிமனிதனை உயர்வாக எண்ணிக் கொண்டாடும் இருள் மறையவும்
- ➔ அனைத்து மக்களும் ஒன்று என்பதை உணர்வதற்கும்
- ➔ பெரும் அறிஞர்களுக்கு எழுந்த உயரிய எண்ணங்கள் எல்லாம் இருக்கக் கூடிய இடம் புத்தகச் சாலை.
- ➔ மக்கள் பழமை நீங்கி, புதிய வாழ்வை அடைந்திட வேண்டும்.
- ➔ அதற்கு நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் புத்தகச் சாலை வேண்டும்.

**மையக் கருத்து:-**

- ➔ பாரதிதாசனார் இப்பாடலில், புத்தகச் சாலையின் தேவையைப் பற்றிக் கூறுகின்றார்.

**மோனைத் தொடை:-**

- ➔ அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

| சீர் மோனை |
|---|
| மனிதரெல்லாம் மனோபாவம் தனிமனித தத்துவமாம் இனிதினிதாய் இலகுவது எழுந்த எண்ண புனிதமுற்று புத்தகசாலை |

**எதுகைத்தொடை:-**

- ➔ அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

| அடி எதுகை |
|---|
| மனிதரெலாம் தனிமனித இனிதினிதாய் புனிதமுற்று |

**அணி நயம்:-**

- ➔ இப்பாடலில், 'வானைப்போல் விரிவடைந்து' என்னும் வரிகளில் 'போல்' என்னும் உவம உருபு இடம்பெற்றுள்ளது.
- ➔ எனவே இது உவமையணி ஆகும்.

**சந்த நயம் :**

- ➔ இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## கவிமணி தேசிய விநாயகனார் பாடல்கள்

**ஆசிரியர் குறிப்பு:-**

- ➔ ஆசிரியர் பெயர்: கவிமணி தேசிய விநாயகம்
- ➔ பெற்றோர்: சிவதாணு, ஆதிலட்சுமி அம்மாள் ➔ ஊர்: தேரூர், கன்னியாகுமரி
- ➔ சிறப்புப் பெயர்கள்: கவிமணி
- ➔ பணிகள்: ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், ஆராய்ச்சியாளர்
- ➔ நூல்கள்: ஆசிய ஜோதி, மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம்

**பாடல் 6:-**

**படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க!**
**பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!**
**அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்**
**அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!**
**கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க!**
**கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க!**
**இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க!**
**இரவாமை அறம்என்னும் தமிழ்நாடு வாழ்க!**

**கவிமணி**

**திரண்ட கருத்து:-**

- ➔ பிறருக்கு உணவிடாமல், தான் மட்டும் உண்ணும் வழக்கம் இல்லாத தமிழ்நாடு வாழ்க.
- ➔ யாரையும் தன் பகைவராக நினைக்காத தமிழ்நாடு வாழ்க.
- ➔ எண்ணற்ற துன்பங்கள் வந்தபோதும், பிறரை வஞ்சிக்க நினைக்காத தமிழ்நாடு வாழ்க.
- ➔ உயிர்கொலைக் கூடாது என்னும் உயர்ந்த எண்ணம் கொண்ட தமிழ்நாடு வாழ்க.
- ➔ கொடை வள்ளல்கள் பலர் வாழ்கின்ற தமிழ்நாடு வாழ்க.
- ➔ அனைத்து வகையான செல்வங்களையும் உடைய தமிழ்நாடு வாழ்க.
- ➔ பிறரிடம் எந்த உதவியும் எதிர்பாராமல் நிற்பதே அறம் என்னும் கருத்துடைய தமிழ்நாடு வாழ்க என்கிறார் கவிமணி.

**மையக் கருத்து:-**

- ➔ தமிழ்நாட்டின் சிறப்புகளைக் கூறி, பல்லாண்டுகள் வாழும்படி வாழ்த்து கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**மோனைத் தொடை:-**

- ➔ அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

| சீர் மோனை | |
|---|---|
| ➔ **ப**டையாமல் **ப**கையாரும் | ➔ **அ**டையாத **அ**நியாயம் |
| ➔ **கொ**ல்லாமை **கொ**டைவள்ளல் | ➔ **இ**ல்லாமை **இ**ரவாமை **அ**றியாத **அ**றம் |

**எதுகைத்தொடை:-**

- ➔ அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

தமிழ்ப் பொருட்களஞ்சியம்



www.Padasalai.Net
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| சீர் எதுகை | அடி எதுகை |
|---|---|
| ➔ உண்ணாத எண்ணாத | ➔ படையாமல் அடையாத<br>➔ கொல்லாமை இல்லாமை |

**இயைபுத் தொடை:-**

➔ ஒவ்வோர் அடியின், ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

➔ இப்பாடலில், '**தமிழ்நாடு வாழ்க**' என்னும் சொல் ஒவ்வோர் அடியின் ஈற்றிலும் அமைந்துள்ளது.

➔ எனவே, இது இயைபுத் தொடை ஆகும்.

**சந்த நயம் :**

➔ இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

**பாடல் 7:-**

**பாலைவனம் சோலைவன மாக வேண்டும்**
**பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்.**
**சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்**
**சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்.**
**சீலைஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்**
**தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்.**
**வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்**
**வெற்றியின்மேல் வெற்றிஎமக் கெய்த வேண்டும்.**

**கவிமணி**

**திரண்ட கருத்து:-**

➔ பாலைவனங்கள் எல்லாம் சோலைவனங்களாக மாற வேண்டும்.

➔ சோலைவனத்தில் பசுங்கிளிகள் பாட வேண்டும்.

➔ தொழிற்சாலைகள் பெருக வேண்டும்.

➔ அறிஞர்கள் நிறைந்த அவைகளில் தமிழ் முழங்க வேண்டும்.

➔ மேலைநாட்டாரின் உடை முதலிய பழக்கவழக்கங்கள் நீங்க வேண்டும்.

➔ நம் நாட்டு பொருட்களை அனைவரும் பயன்படுத்த வேண்டும்.

➔ அனைவரின் உள்ளத்திலும் தேசபக்தி ஓங்க வேண்டும்.

➔ வேலையில்லை என்ற நிலை நீங்க வேண்டும்.

➔ வெற்றியின் மேல் வெற்றியாக மக்கள் பெற்றிட வேண்டும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தோஸ்த் தமிழ் உரை + 1

**மையக் கருத்து:-**

➔ கவிமணி இப்பாடலில், நாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்ற தன் விருப்பத்தைப் பாடியுள்ளார்.

**மோனைத் தொடை:-**

➔ அடிதோறுமோ சீர்தோறுமோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

| சீர் மோனை | |
|---|---|
| ➔ **பா**லைவனம் **பா**ட | ➔ **சா**லைகளிற் **ச**பைகளிலே **சீ**லைஉடை **செ**ழித்தோங்கி |
| ➔ **வே**லையில்லாத் **வெ**ற்றியின்மேல் | |

**எதுகைத்தொடை:-**

➔ அடிதோறுமோ சீர்தோறுமோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

| சீர் எதுகை | அடி எதுகை |
|---|---|
| ➔ பா**லை**வனம் சோ**லை**வன | ➔ பா**லை**வனம் சா**லை**களிற் சீ**லை**உடை வே**லை**யில்லாத் |

**இயைபுத் தொடை:-**

➔ ஒவ்வோர் அடியின், ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

➔ இப்பாடலில், '**வேண்டும்**' என்னும் சொல் ஒவ்வோர் அடியின் ஈற்றிலும் அமைந்துள்ளது.

➔ எனவே, இது இயைபுத் தொடை ஆகும்.

**சந்த நயம் :**

➔ இனிய சந்த நயத்துடன் பொருந்தி, வேறுபட்ட பல சீர்கள் அமைந்து இசையமைத்துப் பாடுவதற்கேற்ப இப்பாடல் திகழ்கின்றது.

## தமிழில் முதல் பெறுவோம்!

➔ தமிழ் பாடம் எழுதும் மாணவர்கள், அழகிய கையெழுத்துடன், அடித்தல், திருத்தம் இல்லாமல் எழுதினால் நல்ல மதிப்பெண் பெறலாம்.

➔ முதலில், பக்க தலைப்புகள் கொடுப்பதுடன் செய்யுள் வரிகளை அடிக்கோடிட்டு காண்பிக்க வேண்டும்.

➔ திருக்குறளுக்கு முக்கியத்துவம் தருவது அவசியம்.

➔ கற்றதன் நோக்கம், முன்னுரை, பொருளுரை, உட்தலைப்பு, முடிவுரை, நூற்பயன் என்ற முறையில் நெடுவினாக்கள் விடை இடம்பெற வேண்டும்.

➔ பகுபத உறுப்பிலக்கணம், இலக்கண குறிப்பு, புணர்ச்சி ஆகிய மூன்றையும் சரியாக எழுதினால் முழு மதிப்பெண் பெறலாம்.

➔ பத்திப் பத்தியாக எழுதாமல் தோஸ்த் உரையில் உள்ளதுபோல் கருத்துக்களாக பிரித்து எழுத வேண்டும்.

➔ முக்கிய சொற்களை அடிக்கோடிட்டு எழுதினால் முழுமதிப்பெண் வழங்க எளிதாக இருக்கும்.






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# அணி இலக்கணம்

## உவமை அணி

**அணி விளக்கம்:-**

- உவமை, உவமேயம் இரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

**சிறப்புச் செய்தி:-**

**தண்டியலங்காரம்**

**"பண்பும் , தொழிலும் , பயனும் என்று இவற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்து**
**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை"**

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

- பொன்னானது (தங்கமானது) நெருப்பில் சுடச்சுட மிகுதியாக ஒளிவிடும்.
- அதுபோல, தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

**பொருத்தம்:-**

- உவமை - நெருப்பில் சுடச்சுட ஒளிவிடும் பொன்.
- உவமேயம் - தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.
- உவம உருபு - போல
- இக்குறட்பாவில் உவமை, உவமேயம் இரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதால், இது உவமை அணி ஆகும்.

## உருவக அணி

**அணி விளக்கம்:-**

- உவமையும் உவமேயமும் வெவ்வேறாக இல்லாமல், ஒன்றாக இருப்பது உருவக அணி ஆகும்.

**சிறப்புச் செய்தி:-**

**தண்டியலங்காரம்**

**"உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து**
**ஒன்று என மாட்டின் அ∴து உருவகம் ஆகும்"**

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்**
**பார்தாக்கப் பக்கு விடும்**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

- பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்பது பாதுகாப்பற்ற படகு போன்றது.
- அது கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.

**பொருத்தம்:-**

- இக்குறளில், பிறரை எதிர்பார்த்து இரந்து வாழும் வாழ்க்கை பாதுகாப்பற்ற படகு என்றும்,
- பிறருக்குக் கொடுக்காமல் இருப்பது பாறை என்றும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

## சொல் பின்வரும் நிலையணி

**அணி விளக்கம்:-**

➔ செய்யுளில் முன்னர் வந்த ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருளைத் தருவது சொல் பின்வரும் நிலையணி ஆகும்.

**சிறப்புச் செய்தி:-**

**தண்டியலங்காரம்**

**"முன்வரும் சொல்லும் பொருளும் பலவயிற்**
**பின்வரு மென்னிற் பின்வரு நிலையே"**

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு.**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

➔ பற்றுகளை அகற்றுவதற்காக, பற்றில்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.

**பொருத்தம்:-**

➔ இக்குறட்பாவில் 'பற்று' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவதால், இது சொல் பின்வரு நிலையணி ஆகும்.

## சொற்பொருள் பின்வரும் நிலையணி

**அணி விளக்கம்:-**

➔ செய்யுளில் முன்னர் வந்த ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

**சிறப்புச் செய்தி:-**

**தண்டியலங்காரம்**

**"முன்வரும் சொல்லும் பொருளும் பலவயிற்**
**பின்வரு மென்னிற் பின்வரு நிலையே"**

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

➔ நோய், அதன் காரணம், அதை நீக்கும் வழி ஆகியவற்றை ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**பொருத்தம்:-**

➔ இக்குறளில் 'நோய்' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவதால் இது 'சொற்பொருள் பின்வரும் நிலையணி' ஆகும்.

## வேற்றுமை அணி

**அணி விளக்கம் :**

➔ பாடலில் உள்ள இரு பொருள்களுக்கும் பொது ஒப்புமையைக் கூறி,

➔ பின்னர், ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டது எனக் கூறுதல் வேற்றுமையணி ஆகும்.

**சிறப்புச் செய்தி :**

**தண்டியலங்காரம்**

**"கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்**
**வேற்றுமை படவரின் வேற்றுமை அதுவே"**

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு**

தமிழ் பொதுத்தேர்வு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

- ஒருவனைத் தீயினால் சுட்டால், அதனால் ஏற்படும் புண் உடலில் ஆறவில்லை என்றாலும், மனத்தில் ஆறிவிடும்.
- ஆனால், ஒருவனை நாவால் கடுஞ்சொற்களைப் பேசினால், அது அவன் உடலில் புண்ணை ஏற்படுத்தாவிட்டாலும், மனத்தில் அழியாத வடுவாகப் பதிந்துவிடும்.

**பொருத்தம்:-**

- முதலில், தீயினால் சுடுதலும் நாவினால் சுடுதலும் ஒன்றே என ஒப்புமை தோன்றக் கூறப்பட்டன.
- நெருப்பால் சுட்ட புண் மனத்தின் உள்ளே ஆறிவிடும். ஆனால், நாவினால் சுட்ட புண் மனத்தின் உள்ளே வடு போல் ஆறாது, என வேறுபடுத்திக் கூறப்பட்டமையால் இது வேற்றுமையணி ஆகும்.

## பிறிதுமொழிதல் அணி

**அணி விளக்கம்:-**

- புலவர் தான் கூறவரும் கருத்தை உவமையாகக் கூறி, அதன் பொருளைப் படிப்பவரே உணர்ந்துகொள்ளும்படி செய்வது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

**சிறப்புச் செய்தி:-**

**தண்டியலங்காரம்**

**"கருதிய பொருள்தொகுத்(து) அதுபுலப் படுத்தற்(கு)**
**ஒத்ததொன் றுரைப்பின்அ∴(து) ஒட்டென மொழிப"**

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து.**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

- முள்மரத்தைச் சிறியதாக இருக்கும்போதே களைத்துவிட வேண்டும்.
- அது முதிர்ந்துவிட்டால் வெட்டுபவரின் கையையே வருத்தும்.

**பொருத்தம்:-**

- இக்குறட்பாவில், பகைவர்கள் வலிமைக் குறைந்து இருக்கும்போதே அவர்களை வென்றுவிட வேண்டும்.
- இல்லையெனில், அவர்களை வெல்வது கடினம் என்னும் உட்பொருள் உள்ளது.

**சிறப்புக் குறிப்பு:-**

- பிறிதுமொழிதல் அணிக்கு ஒட்டணி, நுவலா நுவற்சி, சுருங்கச் சொல்லல், தொகை மொழி என பல பெயர்கள் உள்ளன.

# திணை மற்றும் துறை விளக்கம்

## குறிஞ்சித்திணை

**முதற்பொருள்:-**

- நிலம் - மலையும் மலை சார்ந்த இடமும்
- சிறுபொழுது - யாமம்
- பெரும்பொழுது - கூதிர், முன்பனி

**கருப்பொருள்:-**

- தெய்வம் - முருகன்
- மக்கள் - குறவன், குறத்தியர்
- பூ - குறிஞ்சிப்பூ
- பண் - குறிஞ்சிப்பண்
- தொழில் - தேன் எடுத்தல், தினைப்புனம் காத்தல்

**உரிப்பொருள்:-**

- ➔ புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**அகநானூறு**

**பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ**
**இருண்டுஉயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்,**
**.....................................................................**
**குறமகள் காக்கும் ஏனல்**
**புறமும் தருதியோ? வாழிய மழையே**

**வீரை வெளியன் தித்தன்**

**எடுத்துக்காட்டுப் பாடல் விளக்கம்:-**

- ➔ தோழி, 'தலைவி தினைப்புனம் காக்கும் இடத்தில் இருக்கிறாள், நீ அங்கு செல்வாயா?' என்று மேகத்திடம் வினவுகிறாள்.
- ➔ இதன்மூலம் தோழி, தலைவனுக்குத் தலைவி இருக்கும் இடத்தை மறைமுகமாகக் கூறுகிறாள்.

**பொருத்தம்:-**

- ➔ இப்பாடலில், குறிஞ்சித்திணைக்குரிய கருப்பொருள்களாகிய குறமகள், வேங்கைமலர், தினைப்புனம் காத்தல் போன்றவை இடம்பெற்றுள்ளன.
- ➔ எனவே, இப்பாடல் குறிஞ்சித்திணைப் பாடலாகும்.

## முல்லைத்திணை

**முதற்பொருள்:-**

- ➔ நிலம் - காடும் காடு சார்ந்த இடமும்
- ➔ சிறுபொழுது - மாலை
- ➔ பெரும்பொழுது - கார்காலம்

**கருப்பொருள்:-**

- ➔ தெய்வம் - திருமால்
- ➔ மக்கள் - ஆயர், ஆய்ச்சியர்
- ➔ பூ - முல்லைப்பூ
- ➔ பண் - முல்லைப்பண்
- ➔ யாழ் - முல்லை யாழ்

**உரிப்பொருள்:-**

- ➔ இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**ஐங்குறுநூறு**

**காயா கொன்றை நெய்தல் முல்லை**
**போதவிழ் தளவொடு பிடவலர்ந்து கவினிப்**
**பூவணி கொண்டன்றால் புறவே**
**பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே**

**பேயனார்**

**எடுத்துக்காட்டுப் பாடல் விளக்கம்:-**

- ➔ காயா, கொன்றை, நெய்தல், முல்லை, பிடவம் போன்ற மலர்கள் மலர்ந்துள்ளன.
- ➔ தலைவன், சோலையில் மகிழ்வுடன் பொழுதைப் போக்குவதற்காக தலைவியை அழைக்கின்றான்.

**பொருத்தம்:-**

- ➔ முல்லைத் திணைக்குரிய பொழுது - கார்காலம், மாலை
- ➔ முல்லைத் திணைக்குரிய மலர்கள் - முல்லை, காயா, கொன்றை போன்றவை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- இப்பாடலில், முல்லைத் திணைக்குரிய முதற்பொருளும், கருப்பொருளும் இடம்பெற்றுள்ளது.
- எனவே, இப்பாடல் முல்லைத் திணைக்குரிய பாடலாகும்.

## பாலைத்திணை

**முதற்பொருள்:-**

- நிலம் - மணலும் மணல் சார்ந்த இடமும்
- சிறுபொழுது - நண்பகல்
- பெரும்பொழுது - முதுவேனில், இளவேனில்

**கருப்பொருள்:-**

- தெய்வம் - கொற்றவை
- மக்கள் - எயினர், எயிற்றியர்
- பண் - பாலைப்பண்
- யாழ் - பாலையாழ்
- தொழில் - போர் செய்தல், சூறையாடுதல்

**உரிப்பொருள்:-**

- பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**நற்றிணை**

**பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்**
**விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்**
**...........................................................**
**பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே.**

**போதனார்**

**எடுத்துக்காட்டுப் பாடல் விளக்கம்:-**

- செவிலித்தாய், தம் வீட்டில் விளையாட்டுப் பெண்ணாக இருந்த தலைவியைக் காண செல்கிறாள்.
- அங்கு அவள் இல்லறம் நடத்தும் சிறப்பினைக் கண்டு வியப்படைகிறாள்.
- தலைவியின் இல்லறச் சிறப்பினை நற்றாயிடம் சென்று கூறுகிறாள்.

**பொருத்தம்:-**

- இப்பாடலில், பாலைத்திணைக்குரிய உரிப்பொருள்களாகிய பிரிதல் இடம்பெற்றுள்ளது.
- எனவே, இப்பாடல் பாலைத்திணைப் பாடலாகும்.

## பொதுவியல் திணை

**திணை விளக்கம்:-**

- வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும்,
- பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**புறநானூறு**

**உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்**
**....................................................**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.**

**கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**எடுத்துக்காட்டுப் பாடல் விளக்கம்:-**

- சான்றோர் தமக்காக மட்டும் உழைக்க மாட்டார்கள்,
- இந்திர உலகத்து அமிழ்தமே கிடைத்தாலும் தனியாக உண்ணமாட்டார்கள்,
- யாரையும் வெறுக்கமாட்டார்கள்,
- சோம்பல் இல்லாமல் இருப்பார்கள்,
- புகழுக்காக தம் உயிரையும் கொடுப்பார்,
- பழி என்றால் உலகமே கிடைத்தாலும் பெறமாட்டார்கள்.

**பொருத்தம்:-**

- இப்பாடலில், சான்றோரின் பொதுவான பண்புகள் கூறப்பட்டுள்ளது.
- எனவே, இப்பாடல் பொதுவியல் திணை பாடலாகும்.

## பாடாண் திணை

**திணை விளக்கம்:-**

- ஒரு மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றைப் புகழ்ந்து பாடுவது பாடாண்திணை ஆகும்.
- பாடப்படும் ஆண்மகனின் உயர்பண்புகளைக் கூறுவது இத்திணையின் நோக்கம் ஆகும்.

**சிறப்புச் செய்தி**

**புறப்பொருள் வெண்பாமாலை**

**ஒளியும், ஆற்றலும் , ஓம்பா ஈகையும்,**
**அளியும், என்று இவை ஆய்ந்து உரைத்தன்று.**

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**பதிற்றுப்பத்து**

**பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி**
**நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்**
**...........................**
**ஒடியா மைந்தநின் பண்புபல நயந்தே.**

**குமட்டூர்க் கண்ணனார்**

**எடுத்துக்காட்டுப் பாடல் விளக்கம்:-**

- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் சிறப்பான முறையில் ஆட்சி செய்தான்.
- மக்கள் பசி, பிணி இல்லாமல் இருந்தனர்.
- மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்தனர்.
- நெடுஞ்சேரலாதன் தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான்.

**பொருத்தம்:-**

- இப்பாடலில், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் சிறப்புகள் பாடப்பட்டுள்ளன.
- எனவே, இப்பாடல் பாடாண் திணை பாடலாகும்.

## பருவங்குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது

**துறை விளக்கம்:-**

- தலைவன் பொருள் ஈட்டுவதற்காக தலைவியைப் பிரிந்துச் செல்கிறான்.
- அவ்வாறுச் செல்லும் தலைவன் தான் திரும்பி வரும் காலத்தையும் குறிப்பிட்டுச் செல்கிறான்.
- தலைவன் தான் குறிப்பிட்டுச் சென்ற காலம் வரும்முன்பே திரும்பிவிடுகிறான்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**ஐங்குறுநூறு**

**காயா கொன்றை நெய்தல் முல்லை**
**போதவிழ் தளவொடு பிடவலர்ந்து கவினிப்**
**பூவணி கொண்டன்றால் புறவே**
**பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே**

**பேயனார்**

**எடுத்துக்காட்டுப் பாடல் விளக்கம்:-**

- ➔ காயா, கொன்றை, நெய்தல், முல்லை, பிடவம் போன்ற மலர்கள் மலர்ந்துள்ளன.
- ➔ தலைவன், சோலையில் மகிழ்வுடன் பொழுதைப் போக்குவதற்காக தலைவியை அழைக்கின்றான்.

**பொருத்தம்:-**

- ➔ காயா, கொன்றை, நெய்தல், முல்லை, பிடவம் போன்றவை கார்(மழை) காலத்தில் மலரும் மலர்கள்.
- ➔ அம்மலர்களைக் கூறுவதன்மூலம் தாம் கார் காலத்திற்கு முன்பே திரும்பி வந்ததைத் தலைவன் தலைவிக்கு உணர்த்துகிறான்.

**தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர்பால் மணம் பேசி வர விடுப்ப, தன் தமர் மறுப்பரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கி, "தலைவன் வரைவை நமர் ஏற்றுக்கொண்டனர் நீ கவலை ஒழிவாயாக" என்று தோழி கூறியது**

**துறை விளக்கம்:-**

- ➔ தலைவன், தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேசுவதற்காக சான்றோரை அனுப்புகின்றான்.
- ➔ தலைவி தன் பெற்றோர் மறுத்துவிடுவார்களோ? என்று எண்ணி அஞ்சுகிறாள்.
- ➔ அவளிடம் தோழி கூறுவது இத்துறை ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**குறுந்தொகை**

**அம்ம வாழி தோழி நம்மூர்ப்**
**பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ**
**..................................**
**இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

- ➔ தலைவன், தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச சான்றோர்களை அனுப்புகின்றான்.
- ➔ தலைவி, தம் பெற்றோர் மறுத்துவிடுவார்களோ? என்று எண்ணி அஞ்சுகிறாள்.
- ➔ அவளிடம், தோழி தலைவியின் பெற்றோர் ஏற்றுக்கொண்ட செய்தியைக் கூறுகிறாள்.

**பொருத்தம்:-**

- ➔ தோழி, தலைவியின் பெற்றோர் தலைவன் தந்த பரிசுப் பொருள்களை ஏற்றுக் கொண்டதைக் கூறுகின்றாள்.
- ➔ அவ்வாறு கூறுவதன்மூலம், பெற்றோர் தலைவனை ஏற்றுக் கொண்டனர் என்ற செய்தி தெரியவருகிறது.

## மகள் நிலை உரைத்தல்

**துறை விளக்கம்:-**

- ➔ தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் கூறுவது ஆகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**நற்றிணை**

**பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்**
**விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்**
**.............................................................**
**பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே.**

**போதனார்**

**எடுத்துக்காட்டுப் பாடல் விளக்கம்:-**

- ➔ செவிலித்தாய், தம் வீட்டில் விளையாட்டுப் பெண்ணாக இருந்த தலைவியைக் காண செல்கிறாள்.
- ➔ அங்கு அவள் இல்லறம் நடத்தும் சிறப்பினைக் கண்டு வியப்படைகிறாள்.
- ➔ தலைவியின் இல்லறச் சிறப்பினை நற்றாயிடம் சென்று கூறுகிறாள்.

**பொருத்தம்:-**

- ➔ இப்பாடலில், செவிலித்தாய் தம் மகள் இல்லறம் நடத்தும் சிறப்பினைக் கண்டுவந்து, நற்றாயிடம் கூறுகிறாள்.
- ➔ எனவே, இப்பாடல் மகள் நிலை உரைத்தல் துறை பாடலாகும்.

## இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது

**துறை விளக்கம்:-**

- ➔ தலைவியைக் காண்பதற்காக தலைவன் இரவுப் பொழுதில் வந்து நிற்கின்றான்.
- ➔ அவனுக்குத் தோழி மறைமுகமாகத் தலைவி இருக்கும் இடத்தைக் கூறுகிறாள்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**அகநானூறு**

**பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ**
**இருண்டுஉயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்,**
**.....................................................................**
**குறமகள் காக்கும் ஏனல்**
**புறமும் தருதியோ? வாழிய மழையே**

**வீரை வெளியன் தித்தன்**

**எடுத்துக்காட்டுப் பாடல் விளக்கம்:-**

- ➔ தோழி, 'தலைவி தினைப்புனம் காக்கும் இடத்தில் இருக்கிறாள், நீ அங்கு செல்வாயா?' என்று மேகத்திடம் வினவுகிறாள்.
- ➔ இதன்மூலம் தோழி, தலைவனுக்குத் தலைவி இருக்கும் இடத்தை மறைமுகமாகக் கூறுகிறாள்.

**பொருத்தம்:-**

- ➔ இப்பாடலில், தோழி தலைவனுக்குத் தலைவி இருக்கும் இடத்தைக் குறிப்பால் உணர்த்துகிறாள்.
- ➔ எனவே, இப்பாடல் இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது ஆகும்.

## பொருண்மொழிக் காஞ்சித் துறை

**துறை விளக்கம்:-**

- ➔ மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுவது பொருண்மொழிக் காஞ்சித் துறையாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**புறநானூறு**

**உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்**
**......................................**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.**

**கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

**எடுத்துக்காட்டுப் பாடல் விளக்கம்:-**

- ➔ சான்றோர் தமக்காக மட்டும் உழைக்க மாட்டார்கள்,
- ➔ இந்திர உலகத்து அமிழ்தமே கிடைத்தாலும் தனியாக உண்ணமாட்டார்கள்,
- ➔ யாரையும் வெறுக்கமாட்டார்கள், ➔ சோம்பல் இல்லாமல் இருப்பார்கள்,
- ➔ புகழுக்காக தம் உயிரையும் கொடுப்பார்,
- ➔ பழி என்றால் உலகமே கிடைத்தாலும் பெறமாட்டார்கள்.

**பொருத்தம்:-**

- ➔ இப்பாடலில், மக்களுக்கு நலம் செய்யும் நெறிகள் கூறப்பட்டுள்ளன.
- ➔ எனவே, இது பொருண்மொழிக்காஞ்சித் துறை பாடலாகும்.

## செந்துறைப் பாடாண்பாட்டு

**துறை விளக்கம்:-**

- ➔ உலகிலுள்ள இயற்கையோடு இணைந்து வாழக் கூடிய மக்களைப் பாடுவது செந்துறைப் பாடாண்பாட்டு ஆகும்.

**சிறப்புச் செய்தி:**

**தொல்காப்பியம்**

**செந்துறையாவது விகார வகையான்**
**அமரராக்கிச் செய்யும் அறுமுறை வாழ்த்தைப் போலாது**
**உலகினுள்ள இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுவது**

**புறத்திணை இயல் 27, நச்சினார்க்கினியர் உரை**

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

**பதிற்றுப்பத்து**

**பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி**
**நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்**
**..........................**
**ஒடியா மைந்தநின் பண்புபல நயந்தே.**

**குமட்டூர்க் கண்ணனார்**

**எடுத்துக்காட்டுப் பாடல் விளக்கம்:-**

- ➔ இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் சிறப்பான முறையில் ஆட்சி செய்தான்.
- ➔ மக்கள் பசி, பிணி இல்லாமல் இருந்தனர். ➔ மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்தனர்.
- ➔ தங்களுக்குத் தேவையான அனைத்து வகையான வசதிகளும் அந்நாட்டிலேயே கிடைத்தது.
- ➔ எனவே, மக்கள் வேறு எந்த இடத்திற்கும் இடம் பெயர்ந்துச் செல்லவில்லை.

**பொருத்தம்:-**

- ➔ இப்பாடலில், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் ஆட்சிக் காலத்தில் மக்கள் சிறந்த வாழ்க்கை வாழ்ந்தது குறிப்பிடப்பட்டுள்ளது.
- ➔ எனவே, இப்பாடல் செந்துறைப்பாடாண் பாட்டு துறை ஆகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பழமொழிக்கேற்ற வாழ்க்கை நிகழ்வு எழுதுதல்

**குறிப்புகள்**

★ பழமொழி விளக்கம் - கதை மாந்தர்கள் பெயர்கள் - நீ உணர்ந்த நீதி இவற்றைத் தெளிவாக உணர்த்த வேண்டும்.

★ முடிந்த வரை கதைகளை உங்களின் சொந்த நடையில் சுருக்கி எழுதவும்.

★ பத்துவரிகளுக்குள் அடக்கி எழுதப் பழகவும்.

★ மெல்லக் கற்கும் மாணவர்களுக்காகச் சிறப்பாகவும், தனித்தனித்தொடர்களாகவும் அளிக்கப்பட்டுள்ளன. பிரித்துப் படிக்க வேண்டுகின்றோம்.

### யானைக்கும் அடிசறுக்கும்

**பழமொழி விளக்கம்**

★ யானையின் கால்கள் பலமானவை, பெரியவை பூமியில் ஒவ்வொரு அடியையும் பார்த்துப் பார்த்து வைக்கும். ஆனாலும் சில நேரங்களில் யானையின்அடி சறுக்கும்.

★ அதுபோல ஒருவர் எந்தத் துறையில் சிறந்திருந்தாலும் அத்துறையில் அவரும் பிழை செய்ய வாய்ப்புண்டு.

### உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி

**பழமொழி விளக்கம்**

★ என்னதான் ஒருவர் அவரையே உயர்ந்தவராக நினைத்தாலும் உழைப்புக்கும் தகுதிக்கு ஏற்பதான் ஒருவரின் நடத்தையும் நன்மையும் விளையும்.

(இரண்டு பழமொழிகளுக்கும் பொதுவான கதை)

### என் வாழ்வில் நடந்த நிகழ்வு

**கதை மாந்தர்கள்**

★ நான் - (வளவன்)

★ திருக்குறள் தாத்தா - நண்பர்கள்

**நேரம் - மாலை 4.00 மணி**

**இடம்** - திருவண்ணாமலை

### திருக்குறள் தாத்தா

எங்கள் ஊரில் திருக்குறள் தாத்தா என்று ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் முறையாகப் பள்ளி படிப்பைப் படித்தவர் இல்லை. ஆனால், திருக்குறள்மீது ஓர் ஈடுபாடு. மாலை 4.00 மணி அளவில் எங்கள் பள்ளியின் வாசலில் நின்றுகொண்டு, என்னையும் என் மாணவ நண்பர்களை எல்லாம் அழைப்பார். யாரொருவர் ஒரு திருக்குறளைப் பிழையில்லாமல் சொல்கிறார் களோ? அவர்களுக்கு இரண்டு தேன்மிட்டாய்களைப் பரிசாகக் கொடுப்பார். திருக்குறளுக்குப் பொருள் சொன்னால் தேன்மிட்டாயை ஒன்று கூடுதலாகக் கொடுப்பார். ஆண்டு இறுதித்தே-தர்வு நெருங்கிக்கொண்டிருந்தது ஒருநாள் நானும் என் நண்பர்களும் இனிப்புப் பொட்டலத்தை வாங்கி, தாத்தாவுக்குப் பரிசாகக் கொடுக்க ஒரு திட்டம் போட்டோம்.. ஆனால், தாத்தா பரிசாகக் கொடுத்தால் ஏற்கமாட்டார். ஆகவே, அவருக்கும் திருக்குறள் போட்டி வைப்போம் வெற்றி பெற்றால் இதைக் கொடுப்போம் என்றான் என் நண்பன். அதை அனைவரும் ஏற்றோம்.

### தாத்தாவுக்குத் திருக்குறள் போட்டி

நாங்கள் கேட்ட எல்லாத் திருக்குறளையும் ஓரளவிற்குச் சரியாகச் சொன்ன தாத்தா 'யாகாவாராயினும் நாகாக்க' என்னும் குறட்பாவில் 'காவாக்கால்' என்னும் சொல்லை விட்டு விட்டு மற்ற சீர்களைச் சொன்னார், அதன் பொருளையும் தவறாகச் சொன்னார். நாங்கள் மீண்டும் மீண்டும் கேட்டோம் அப்போதும் அதையே தவறாகச் சொன்னார். பிறகு தாத்தாவிடம் தவறை எடுத்துச் சொன்னோம் தாத்தாவும் தன் தவறை உணர்ந்தார். பரிசை அன்புடன் ஏற்றார்.

தர்மபுரி மாவட்டம்

**நான் உணர்ந்த நீதி**

- ★ யானைக்கும் அடிசறுக்கும் என்பதுபோல சில நேரங்களில் துறைசார்ந்தவர்களும் தவறு செய்ய வாய்ப்புண்டு என்பதை உணர்ந்தேன்.
- ★ என்னதான் உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது என்பதுபோல் ஆசிரியர் அல்லாமல் கற்றால் கல்வி சிறக்காது என்றான் என் நண்பன்.

## தினைவிதைத்தவன்தினையறுப்பான்வினைவிதைத்தவன்வினையறுப்பான்

**பழமொழி விளக்கம்**

- ★ நன்மை செய்கின்றவனுக்கு நல்லவையே பரிசாக் கிடைக்கும்.
- ★ தீமை செய்கின்றவனுக்குத் தீமையே கிடைக்கும்.

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

**பழமொழி விளக்கம்**

- ★ ஒருவருக்கு ஒருகாலத்தில் நாம் செய்யும் நன்மையும் தீமையும் பிற்காலத்தில், அது நமக்குத் தாமாகவே வந்து சேரும்.

## அரசன் அன்றுகொல்வான் தெய்வம் நின்று கொல்லும்

**பழமொழி விளக்கம்**

- ★ குற்றம் நிருபிக்கப் பட்டால் அந்நாட்டின் அரசன் அன்றே கொல்வான். குற்றத்தை மறைக்க குற்றவாளி திட்டம் தீட்டித் தப்பித்தால் தெய்வன் சில நாள்களில் கொன்றுவிடும்.

## ஆபத்திற்குப் பாவமில்லை

**பழமொழி விளக்கம்**

- ★ ஒருவன் எவ்வளவு தீமை செய்திருந்தாலும் அவனுக்கென்று ஓர் ஆபத்து வந்து விட்டால் அவன்செய்த பாவங்களைப் பொறுத்து அவனுக்கு உதவி செய்யலாம். அதே நேரத்தில் ஆபத்துக் காலத்தில் நாம் செய்யும் எந்த உதவியும் பாவமில்லை.

## பொறுத்தார் பூமி ஆள்வார்

**பழமொழி விளக்கம்**

- ★ பொறுத்தவருக்கு என்றுமே வெற்றி கிடைக்கும் என்பதே இதன் பொருளாகும்.

## விட்டுக்கொடுப்பார்கெட்டுப்போவதில்லைகெட்டுப்போவார்விட்டுக்கொடுப்பதில்லை

**பழமொழி விளக்கம்**

- ★ நாம் பிறருக்கு எதையும் விட்டுக்கொடுப்போம் அதனால் நமக்கு நன்மையே விளையும் தீமை விளையாது.

(இந்தப் பழமொழிகள் அனைத்திற்கும் பொருத்தமான கதை இது)

## என் வாழ்வில் நடந்த கதை

**கதை மாந்தர்கள்** **நேரம் - மாலை .4.30**

- ★ நான் - நம்பி **இடம்** - பள்ளி வளாகம்
- ★ என் நண்பர்கள் - முல்லை வேந்தன்
- ★ குறும்புக்காரன் - அமுதன்

அன்று பள்ளி முடிந்து நானும் என் நண்பன் முல்லை வேந்தனும் மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தோம். எதிர்பாராத விதமாக ஒரு பெரிய கல் ஒன்று எங்கள் மிதிவண்டியைத் தாக்கியது. முன்சக்கரத்தின் கம்பிகள் நொறுங்கின. இருவரும் அதிர்ந்தோம். கல்வீசி அடித்தவனைக்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கண்டுவிட்டோம். அவன் வேறுயாருமில்லை எங்கள் வகுப்பில் ஒருவனான அமுதன். அவனிடம் கேட்டால் "நான் செய்யவில்லை" என்றுதான் சொல்வான். மீறியும் மீண்டும் மீண்டும் கேட்டால் மிரட்டுவான் அடியாட்களுடன் அடிக்க வருவான். நாங்கள் அதைப் பலமுறை கண்டது உண்டு. அதனால் இதையும் பொறுத்துக்கொண்டோம். மிதிவண்டி தள்ளிக்கொண்டு பழுது பார்க்கும் கடைக்குச் சென்று பழுதுக்கான பணம் எவ்வளவு என்று விசாரித்துக் கொண்டிருக்கையில் சாலையில் பெரும் சப்தம் ஒரு சைக்கிளிலும் ஈருளியும் மோதிக்கொண்டிருந்தன. சைக்கிள் சுக்கு நூறாகச் சிதறிக்கிடந்தது. சைக்கிளில் வந்தவனை மிதிவண்டியில் இருந்த தடிஆள்கள் தர்ம அடி அடித்துக் கொண்டிருந்தனர். யாரென்று சென்று பார்க்கையில் அவன் அமுதன் தான். இரத்தக் காயத்துடனும் அவர்கள் அடித்த மொத்த காயத்துடன் தெருவோரமாக அமர்த்தப்பட்டிருந்தான். ஆபத்திற்கு பாவமில்லை அவனை நாங்கள் மருத்துவமனைக்கு அழை த்துச் சென்று முதலுதவி செய்து காப்பாறினோம். இவற்றையெல்லாம் கேள்வியுற்ற எங்கள் தலைமையாசிரியர் என்னையும் என் நண்பன் முல்லைவேந்தனையும் பாராட்டிப் பொழிந்தார்.

**நீதி**

★ அமுதன் தீமை செய்தான் தீமையே விளைந்தது. நாங்கள் நன்மை செய்தோம் நன்மையே விளைந்தது.

## எறும்பு ஊரக் கல்லும் தேயும்

**பழமொழி விளக்கம்**

★ உழைக்க உழைக்க நாம் அடைய விரும்பியது கிடைக்கும். நாம் அடைய முடியாத உயரத்தை அடையலாம்.

## முயற்சி திருவினையாக்கும்

**பழமொழி விளக்கம்**

★ கடுமையான முயற்சி ஒருவனுக்கு அதிக அளவு செல்வத்தையும் புகழையும் தரும்

**கதை**

ஒரு மலை அடிவாரத்தின்கீழ் ஒரு விவசாயி பயிர்த்தொழில் செய்துவந்தான். பயிர்த்தொழிலில் பெரிய வருமானம் கிடைக்காமல் அவதிப் பட்ட அவன் ஒருநாள் திடீரென ஒரு முடிவு எடுத்தான் ஓர் ஆழ்துளை கிணறு ஒன்றை தோண்ட முயற்சி செய்தான் ஆட்களை வைத்து பணியைத் தொடங்கினான். ஊர்மக்கள் எல்லோரும் கிண்டல் செய்தார்கள் மலைக்கு கீழே மழைநீர் கிடைக்குமா? இவன் முட்டாள் என்றனர் சிலர்.அடிவாரத்திற்குக் கீழே ஆழ்துளை கிணறா? இவன் ஓர் அடிமுட்டாள் என்றனர் சிலர். 300 அடி போனபிறகும் முக்கால் குவளை நீர்கூட வரவில்லை ஊரே பார்த்துச் சிரித்தது. ஆனால் விவசாயி விடவில்லை, விடாமுயற்சி செய்தபோது 800 அடியில் தண்ணீர் அருவிபோல் கொட்டியது. ஊரே வியந்தது. அதிர்'டம் அதிர்'டம் என்று கூவியது பலர் பொறாமையில் பொசுங்கினர். நீர் அருவிபோல் கொட்டியபோது அனைவரும் இவரிடம் நீரைக் கடன்கேட்டு பயிர்த்தொழில் செய்தனர். விவசாயி மிகப்பெரிய செல்வந்தர் ஆனார். விடாமுயற்சி விஸ்வரூப வெற்றியைத் தந்தது.

## ஊழி பெயரினும் தாம் பெயரார்

**பழமொழி விளக்கம்**

★ விதியே மாற்ற முயற்சி செய்தாலும் தாம்கொண்ட கொள்கையில் பற்றுக்கொண்டு மாறாமல் இருப்பது

**கதைமாந்தர்கள்**

★ தேசத் தந்தை காந்தியடிகள்

★ காந்தியாரின் மனைவி - கஸ்தூரிபாய்

★ நான் - வளவன்

**இடம் - சென்னை நூலகம்**

**நேரம்** - மாலை





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## என் வாழ்க்கைக்குத் திருப்புமுனையாக நடந்த கதை

ஒருமுறை கன்னிமார நூலகத்தில் காந்தியடிகளாரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியைப் படித்துக் கொண்டிருந்தேன். அக்கதையில் கஸ்தூரிபாய் அம்மையார் உடல் நலம் குன்றிச் சாகும் நிலையிலிருந்த போது மருத்துவர்கள் காந்தியடிகளாரிடம் "மாட்டின் மாமிசச் சாறு" உடலில் செலுத்தினால் உயிர்பிழைக்க வாய்ப்புண்டு எனக் கேட்டு காந்தியடிகளிடம் கெஞ்சினார்கள். ஆனால், காந்தியடிகளோ அதை முற்றிலும் மறுத்துவிட்டார். எத்தகைய இன்னல்மிகுந்த காலத்திலும் தான்கொண்ட கொள்கையிலிருந்து காந்தியடிகள் மாறவேயில்லை. கஸ்தூரிபாய் அம்மையாரும் நாளைடைவில் இறந்துவிட்டார். உலகமே மாற்ற நினைத்தாலும் தான்மாறாமல் வாழ்ந்த காந்தியடிகளை அன்றுமுதல் நேசிக்கத் தொடங்கினேன். நானும் மாறினேன் மாமிச உணவையே உட்கொள்வதில்லை. வள்ளலாரின் நூல்களைப் படித்துப் படித்துப் பண்படுகின்றேன்.

## ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

**பழமொழி விளக்கம்**

★ சிறுவயதில் நமக்குள் வாரத நற்பழக்கம் வயதான பிறகா வரவாப் போகின்றது?"

## தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்

**பழமொழி விளக்கம்**

★ சிறிய வயதிலேயே நாம் ஏற்படுத்திக்கொள்ளும் நற்பழக்கங்களும் தீய பழக்கங்களும் வாழ்நாள்வரை நம்மை விட்டு நீங்கா.

## தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை

**பழமொழி விளக்கம்**

★ பெற்றோர்கள் எவ்வழியோ அவ்வழியே பிள்ளைகளும் நடப்பார்கள்

## என் வாழ்க்கை நிகழ்வு

**கதை மாந்தர்கள்**

★ நான் - வளவன்; என் நண்பன் - நம்பி; நம்பியின் அம்மா(அத்தை); நம்பியின் அப்பா (மாமா)

என் நண்பன் நம்பியும் நானும் ஆருயிர் நண்பர்கள்.சிறுவயதிலிருந்தே பள்ளிக்கு இணைபிரியாமல் செல்வோம். சில நாள்களுக்குப் பிறகு அவனது நடத்தையில் மாற்றம் ஏற்பட்டது. அவன் பள்ளிக்குச் சரியான நேரத்தில் கிளம்புவதே இல்லை. சரியாக வீட்டுப்பாடம் செய்யாமல் அசிரியரிடம் அவப்பெயரும் வாங்கினான். இதற்கெல்லாம் காரணம் அதிகாலையில் அவன் எழாமல் உறங்குவதுதான் என்பதை உணர்ந்தேன். ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் ஆசிரியர்கள் சொன்ன தகவல்களையும் வீட்டுப்பாடக் குறிப்புகளையும் நம்பி யிடம் கொடுக்க அவன் வீட்டுக்குச் சென்றேன். அவன் வீட்டின் உள்ளே தாழிட்டுக்கொண்டு அவர்கள் குடும்பமே உறங்கிக்கொண்டிருந்தது. நம்பின் அம்மாவை எழுப்பி 'வணக்கம் அத்தை என்றுகூறி நம்பியின் போக்கையும் பள்ளியில் அவனுக்கு நடக்கும் நிலையையும் எடுத்துக்கூறினேன்' ஏன் அவன் இப்போதெல்லாம் இப்படி நடந்து கொள்கின்றான் என்று வருத்தத்துடன் கேட்டேன். அவனுடைய செயல்களுக்கெல்லாம் நானும் உன் மாமாவும்தன் காரணம் என்று கூறினார் அத்தை. நான் இரவு 11.30 மணிவரை எல்லா நாடகத்தொடர்களையும் பார்ப்பேன் அதன்பிறகு அவனுடன் அவனுடைய அப்பா பொழுதுபோக்கு விளையாட்டுகள் (வீடியோ கேம்) விளையாடுவார். புதுப்புதுப் படங்களை இரவெல்லாம் தந்தையும் நம்பியும் பார்த்துவிட்டுதான் உறங்குவார்கள். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் தந்தையும் மகனும் கேட்பதே இல்லை. இப்படி படிப்புக்கு ஐந்தில் வளையவில்லையென்றால் ஐம்பதில் எங்கே வளையப்போகின்றது? என்று அழுதார். படிப்பின் அவசியத்தை அத்தை எனக்கு எடுத்துச் சொன்னார். நன்றி கூறி கிளம்பினேன். சில ஆண்டுகளில் நம்பி பள்ளியிலிருந்து வெளியேறினான்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஏறத்தாழ பத்து ஆண்டுகள் உருண்டோடின. ஒரு நாள், என் வண்டி எதிர்பாரத விதமாகப் பழுதடைய நான் பழுது நீக்கச் சென்ற போது அந்தக் கடையில் நம்பி அழுக்குத்துணியில் அமர்ந்திருந்தான். அதிகாலையில் வராமல் இருந்ததற்காக அவனைக் கடைமுதலாளி திட்டிக் கொண்டிருந்தார். நான் அதிர்ந்து போனேன்.அத்தை சொன்ன வார்த்தையை என் மனதில் ஏற்படு த்திய மாற்றம் இன்று நான் ஆசிரியர் கல்லூரியில் சேர இருக்கின்றேன். ஆனால் நம்பியோ?

**நீதி**

★ நண்பர்களே சிறுவயது முதற்கொண்டே நற்பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்!

★ நாளை பெற்றோராகும் நீங்கள் நல்ல பழக்கங்களை மட்டுமே உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுங்கள்!

## குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

**பழமொழி விளக்கம்**

★ பிறரிடம் நாம் குற்றத்தைப் பார்க்க நினைத்தால் அவர்கள் குற்றமேதான் கண்முன் நிற்கும். பிறகு அவர்கள் நம் சுற்றமாகவும் இருக்க மாட்டார்கள்.

## தனிமரம் தோப்பாகாது

**பழமொழி விளக்கம்**

★ தனித்து நின்று பல அரிய காரியங்களைச் சாதித்து விடலாம் என்று நினைத்து தோற்றுவிடுகின்றனர் பலர்.

★ இணைந்து செய்வோர் பெரும் வெற்றி பெருகின்றனர். பெரும்புயலில் தனித்து நிற்கின்ற மரம் வீழ்ந்துவிடும். தோப்புகள் வீழ்வதில்லை.

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**பழமொழி விளக்கம்**

★ ஒற்றுமையுடன் வாழ்ந்தால் சிறந்த வாழ்க்கையை வாழலாம்.

## ஒற்றுமையே உயர்வு

**பழமொழி விளக்கம்**

★ ஒற்றுமையுடன் வாழ்ந்தால் உயர்ந்த வாழ்க்கையை வாழலாம்.

## தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும்

**பழமொழி விளக்கம்**

★ உதடுகள் வேண்டாம் என்றாலும் உள்ளம் துடித்து உதவிகள் செய்யும்.

## மனம் இருந்தால் மார்க்கம் உண்டு

**பழமொழி விளக்கம்**

★ மனதில் நான்தான் பெரியவன் மற்றவர் தாழ்ந்தவர் என்று எண்ணாமல். மனம் நினைத்தால் எல்லா சிக்கலுக்கும் வழி(மார்க்கம்) உள்ளது.

## பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு

★ ஆயிரம் துன்பங்கள் பிள்ளைகள் தந்தாலும் பெற்றோர்கள் பிள்ளைகளை வஞ்சிக்க மாட்டார்கள்.

★ பெற்றோர்கள் மனம் பிள்ளைகள்மீது அன்பைப் பித்து(பைத்தியம்)போல் காட்டுவார்கள் பிள்ளைகளோ மனம் இளகாமல் கல் போல் இருப்பர் என்பதே இதன் பொருளாகும். (பழமொழிகள் ,4,5,6,7,8,9,10 ஆகியவற்றிற்கான பொதுக்கதையாக இது வழங்கப்படுகின்றது)

## என் வாழ்வில் நிகழ்ந்த கதை

**கதை மாந்தர்**

★ தந்தை - வளவன்; தாய் - சுடரொளி; மகன்கள் - கார்க்கண்ணன் - பொன்வண்ணன் - நீலவண்ணன் - செவ்வண்ணன்; நாட்டாமை - நலங்கிள்ளி; இவர்களுடன் நான்

**கதை**

★ 'நல்லான் பிள்ளை பெற்றாள்' என்னும் ஊர் திருவண்ணாமலையில் உள்ளது.
★ அவ்வூர் என் சொந்த ஊராகும்.
★ அவ்வூரில் அனைவரும் ஆசிரியர்களாகவே(வரம்பெற்று) பிறந்தவர்.
★ வீட்டிற்கு ஓர் ஆசிரியர் அவ்வூரில் இருப்பார்.
★ அவ்வூரில் மிகச்சிறந்த குடும்ப பெரியவர் வளவன் குடும்பம்.
★ மனைவி சுடரொளி அன்பின் பிறப்பிடமாக இருந்தவர்.
★ வளவனாருக்கு நான்கு பிள்ளைகள் (கார்க்கண்ணன் - பொன்வண்ணன் - நீலவண்ணன் - செவ்வண்ணன்)
★ நான்கு பிள்ளைகளையும் ஆசிரியர்களாக்கினார் பெரியவர் வளவன்.
★ நால்வரும் முதுகலை ஆசிரியர் போட்டித்தேர்வில் (TRB போட்டித்தேர்வு) எழுதி வெற்றி பெற்று அரசுப்பணி பெற்று வெவ்வேறு ஊர்களில் தங்களைத் தகவமைத்துக் கொண்டார்கள்.
★ நாளடைவில் பெற்றோருக்கும் வயதானது. அவர்கள் எவ்வளவோ மகன்களிடம் தங்களைப் பாதுகாக்கக் கெஞ்சினார்கள்.
★ பெற்றோர்களைப் பாதுகாக்க முன்வராத நால்வரும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர்.
★ இதைக்கண்ட பகைப்பங்காளிகள் பெரியவர் வளவனின் 30 குழி நிலத்தை அபகரிக்க நினைத்தனர்.
★ இதைக்கண்டு மனம் வெதும்பிய பெற்றொர். ஊர் நாட்டாமையிடம் முறையிட்டார்.
★ நாட்டாமை மகன்கள் நால்வரையும் அழைத்தார்.
★ மூங்கில் மரத்தில் ஒடித்த குச்சிகளை முறையே ஒவ்வோர் மகனிடமும் (ஆசிரியரிடமும்) தனித்தனியே கொடுத்து "உங்கள் வலிமையால் இதை ஒடித்து விடுங்கள்" என்றார்.
★ நால்வரும் எளிமையாக ஒடித்தனர்.
★ பின்பு நாட்டாமை, நான்கு மூங்கிலால் நன்றாக இணைத்துக் கட்டிய அமைப்பைக் கொடுத்து நால்வரையும் ஒடிக்கச் சொன்னார்.
★ மிகவலிமை காட்டியும் நால்வராலும் குச்சியின் அமைப்பை ஒடிக்கவும் உடைக்கவும் இயல இயலவில்லை.
★ நாட்டாமை பேசலானார் "பார்த்தீர்கள் ஆசிரியர்களே தனித்தனியாக இருந்தால் எதையும் ஒடித்து விடலாம். ஆனால் அதுவே கூட்டாக இருந்தால் ஒடிக்க இயலாது"
★ இந்தக் குச்சியைப்போலத்தான் நீங்களும் தனித்தனியாக இருக்கின்றீர்கள்.
★ உங்களைப் பகைப்பங்காளிகள் எளிதில் பிரித்து நிலத்தை அபகரித்து விடுவார்கள்.
★ அதுவே நீங்கள் ஓர் அமைப்பைப்போல் "ஒன்றுபட்டால் சிறந்த வாழ்க்கை உங்களுக்கு உண்டு. ஒற்றுமையே உயர்வு என்பதை மறந்துவிடாதீர்கள்.
★ தனிமரம் தோப்பாகாது தம்பிகளே! பகைப்புயல் வந்தால் வீழ்ந்துவிடும்.
★ 'தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும்' என்னும் பழமொழிக்கு ஏற்ப உங்கள் பெற்றோர் கடைசிகாலத்திலும் 'பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு' என்பது போல் அவர்களுடைய நிலம் உங்களுக்கே சேரவேண்டும் என்று நினைக்கின்றனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



★ இனியாவது ஒற்றுமையாக வாழுங்கள்" என்றார்.
★ ஆசிரியர்களும் இணைந்தனர். ஒற்றுமையே வலிமையானது.

**நீதி**

★ நான் நாட்டாமை நலங்கிள்ளியின் பெயரன்(பேரன்). இதை உடனிருந்து கண்டேன் அன்றுமுதல் பெற்றோரைப் பாதுகாக்க வேண்டும் என்று உறுதி பூண்டேன்.

## பதறிய காரியம் சிதறிப்போகும்

**பழமொழி விளக்கம்**

★ பொறுமையுடன் ஒரு செயலைச் செய்தால் அச்செயலை சரியாகச் செய்யலாம். பதற்றத்துடன் செய்தால் அச்செயல் சரிவராது.

## என் வாழ்க்கையில் நடந்த கதை

**கதை மாந்தர்**

★ தந்தை - குறள்விரும்பி; மகன் - குறும்பன்; இவர்களுடன் நான்

**கதை**

★ ஒரு முறை நல்லூரில் என் மாமா குறள்விரும்பியின் வீட்டிற்குச் சென்றிருந்தேன்.
★ அன்று மாமா வெளியூர் சென்றிருந்தார்.
★ நானும் என் மாமன் மகன் குறும்பனும் விளையாட்டுத்திடலுக்குச் சென்றோம்.
★ மாலை நேரம் வந்தது. நானும் குறும்பனும் விளையாடிவிட்டு வீடு திரும்பினோம்.
★ அப்போது மாமா குறள்விரும்பி வெளியூரிலிருந்து வீட்டிற்குள் நுழைந்தார்.
★ மாமா என்னிடம் நலம் விசாரித்தார். என் பெற்றோரின் நலமும் கேட்டார்.
★ பின்பு குறும்பனைப் பார்த்து "குறும்பா வெளியே என் 'துணிப்பை' உள்ளது அதை நீ போய் எடுத்துக்கொண்டு வா!"
★ என்று மாமா சொல்லி முடிப்பதற்குள் அவசரக்குடுக்கையாக குறும்பன் ஓடிவிட்டான்.
★ குறும்பன் பெயருக்கு ஏற்ப பெரிய குறும்பன்.
★ வெளியே இரண்டு பைகள் இருந்தன. பதற்றத்துடன் இரண்டு பையைத் தூக்கிக் கொண்டு வர முயற்சி செய்தான்.
★ ஒரு பையின் காது அறுந்து இருந்தது. பை கை நழுவி விழுந்தது.
★ பையிலிருந்த நாட்டுக் கோழி முட்டைகள் உடைந்து நொறுங்கின.
★ 'ஐயய்யோ' என்று அலறி மற்றொரு பையையும் விட்டுவிட்டான் அதிலிருந்த கோழி கொக்கரித்துக் கொண்டே ஓடியது.
★ கோழி போன இடம் தெரியவில்லை. ஒரு முட்டைகூட தேறவில்லை.
★ நாட்டுக்கோழிகளைத் தன் வீட்டில் வளர்க்க வேண்டும் என்று நினைத்தவர் மாமா.
★ கோழியை ஒரு பையிலும் அதன் முட்டைகளை ஒரு பையிலும் மாமா ஆசையாக வாங்கி வந்தார்.
★ என் மாமாவின் கனவு குறும்பனின் பதற்றத்தால் அன்றுடன் சிதறிப்போனது.

## நுணலும் தன் வாயால் கெடும்

**பழமொழி விளக்கம்**

★ ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும். தங்களைத் தாங்களே தத்தம் வாயால் கெடுத்துக்கொள்கின்றனர் சிலர். வாய்தான் நன்மைக்கும் தீமைக்கும் காரணம்.

சூர்யா பப்ளிகேஷன்ஸ்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ நுணல் - தவளை வாயை வைத்துக்கொண்டு சும்மா இராமல் வாயால் கத்தி கத்தி, பாம்பை அழைத்து அதற்கு இரையாகும்.

## வாய்மையே வெல்லும்

**பழமொழி விளக்கம்**

★ உண்மைதான் என்றும் வெற்றிபெறும். உண்மை வெற்றிபெற சில நாள்களாகும் ஆனால், நிச்சயம் ஒரு நாள் வென்றே தீரும்.

(இரண்டிற்கும் பொதுவான கதை)

**கதை மாந்தர்**

★ நண்பன் - அரவிந்தன்; தமிழ் ஆசிரியர் - வளவன்; வகுப்பாசிரியர் - பொன்னரசி; தலைமையாசிரியர் - கங்கா கௌரி; இவர்களுடன் நான்

### நான் 8 ஆம் வகுப்பு படித்த போது நடந்த கதை

★ என் நண்பன் அரவிந்தனை எனக்கு மிகவும் பிடிக்கும். அரவிந்தன் படிப்பில் சுட்டி.

★ எத்தகைய சிக்கலான கணக்கையும் துல்லியமாகக் கணக்கிடுவான்.

★ எத்தகைய ஐயத்தையும் எளிமையாகத் தீர்த்து வைப்பான்.

★ 'ஐயம் தீர்க்கும் அரவிந்தன்' என்றே பட்ட பெயர் அவனுக்கு உண்டு.

★ ஒரு நாள் அவன் பள்ளிக்கு வரவில்லை. வகுப்பாசிரியரும் "ஏன் அரவிந்தன் வரவில்லை" என எங்களிடம் கேட்க, காரணம் புரியாமல் விழித்தோம்.

★ பக்கத்துத் தெருவில்தான் நான் இருக்கின்றேன்.

★ என்னிடமும் சொல்லவில்லையே என வருந்தினேன்.

★ மறுநாள் பிறந்தது. வகுப்பறை மலர்ந்தது. வகுப்பாசிரியர் வந்தார்.

★ "ஏன் அரவிந்தா நேற்று வரவில்லை" எனக் கேட்க உடனே பதிலுடன் எழுந்தவன்.

★ "என்னுடைய தாத்தா மொட்டை மாடியில் வழுக்கி விழுந்து விட்டார்" என்றான்.

★ எல்லொரும் சிரித்துவிட்டார்கள். ஆசிரியர் புன்முறுவலை அடக்கிக் கொண்டார்.

★ அவனுடைய தொனியும் பதற்றமும் பொய் சொல்வதை விவரித்தது.

★ மறுபாடவேளை தமிழ் ஆசிரியர் வளவன் ஐயா வந்தார். அரவிந்தனை விசாரித்தார்

"ஐயம் தீர்க்கும் அரவிந்தா! நேற்று உன்
கையும் உண்டது பெருவிருந்தா?"

★ ஏன் வரவில்லை நேற்று என்பதை இக் கவிதை நடையில் கேட்டார்.

★ ஐயாவின் காதருகில் சென்று "இல்லை ஐயா! என் தாத்தா கழிவறையில் (பாத் ரூமில்) வழுக்கி விழுந்துவிட்டார்" என்றான்.

★ "ஐயோ பாவம்" என்றவர் தாத்தாவின் நலம் விசாரிக்க அரவிந்தன் அவர் இறந்துவிட்டார் என்றான். எல்லோரும் ஒரு நிமிடம் சோகத்தில் மூழ்கினோம்.

★ வளவன் ஐயா வகுப்பாசிரியரை அழைத்து அரவிந்தனுக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருந்தார்.

★ அப்போது வகுப்பாசிரியர் "என்னிடம் மொட்டை மாடி என்றான் உங்களிடம் பாத்ரூம் என்றானே" ஏன் என்று அரவிந்தனை விசாரித்தனர்.

★ அப்போது தலைமையாசிரியர் கங்கா கௌரியும் வந்துவிட்டார். நிகழ்ச்சியைக் கேட்டு அவர் விசாரித்தார். அரவிந்தா உன் தாத்தா விழுந்தது மொட்டை மாடியிலா? பாத் ரூமிலா? (கழிவறையிலா?) என்று கேட்க.

★ சற்று விழித்துவிட்டு "மொட்டைமாடியிலிருந்து வழுக்கி கீழே பாத்ரூமில் விழுந்து விட்டார்" என்றான் அரவிந்தன்.

★ வகுப்பறையே மீண்டும் குலுங்கியது. அவன் பொய்யும் குட்டி போட்டுக் கொண்டே போனது.

★ இது எப்போது நடந்தது? என்று வினவினார்.

★ போன வருடம் அதே(நேற்றைய) நாள் என்றான் அரவிந்தன். எல்லோரும் அலறினார்கள்.

★ பின் ஏன் நேற்றுவரவில்லை? என தலைமையாசிரியர் கேட்க,

★ "தாத்தா நேற்றைக்கு முன்நாள் கனவில் வந்து இன்று அதே இடத்தில் அதே நேரத்தில் அங்கு நான் இருப்பேன் வந்து பார்!" என்றார்.

★ அதனால்தான் நேற்று வரவில்லை என்றுகூற தலைமையாசிரியர் அதிர்ந்தார்.

★ அதே இடத்தில் நேற்று தாத்தாவைப் பார்த்தாயா ? என்று நகைச்சுவையுடன் கேட்க

★ அரவிந்தன் "எமலோகத்தில் நேற்று தேர்தல் நடந்ததாம் அவருக்கு விடுப்பு தரவில்லை என நேற்றைய இரவுக் கனவில் வந்து சொன்னார்" என்றவுடன் .

★ எமலோகத்தில் தாத்தா என்னவாக இருக்கின்றார்? எனக் கேட்டார் தலைமையாசிரியர்.

★ எமலோகத்தின் என் தாத்தா ஆசிரியராக இருக்கின்றார். என்றான் அரவிந்தன்.

★ பதற்றமான வாக்குச்சாவடி என்பதால் பாதுகாப்புக்குச் முன்னாளே சென்றுவிட்டார் என்றான் அரவிந்தன்.

★ தலைமையாசிரியருக்குத் தலை சுற்றியது. பொய் என்று உணர்ந்தது வகுப்பு.

★ உண்மையைப் பெற, பெற்றோரை அழைத்து அவனிடம் கடுமையாக விசாரித்தார்.

★ அரவிந்தன் 'திரைப்படத்திற்குச் சென்றான்' என்னும் மெய் அவன் வாயிலிருந்து வெளியே வந்தது.

★ தலைமையாசிரியர் உண்மையின் சிறப்பை எடுத்துக் கூறினார்.

★ அரவிந்தனும் உண்மையில் மனம் மாறினான்.

**நீதி**

★ அன்றுமுதல் ஐயம் தீர்க்கும் அரவிந்தன், ஆயிரம் பொய் அரவிந்தன் ஆனான். தவளை தன் வாயால் கெடும் என்பது போல் பொய்யால் அவனுக்கு இருந்த நற்பெயர் கெட்டது.

★ அவன் வாய் மெய்யே (வாய்மையே) இறுதியில் வென்றது.

## தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை

**பழமொழி விளக்கம்**

★ நம் பெற்றோர் நமக்கு என்ன சொல்லித்தருகின்றார்களோ? எத்தகைய மனப்பான்மையை வளர்க்க வித்திடுகிறார்களோ அதுவே நாம்.

## தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்

**பழமொழி விளக்கம்**

★ சிறுவயதில் நமக்குள் நாம் ஏற்படுத்திக் கொள்ளும் நற்பழக்கங்கள் இறுதிவரை வரும்.

## என் கதை

**கதை மாந்தர்கள்**

★ நான்; என் அம்மா; என் அப்பா; என் தங்கை

தமிழ்த்துறை பொறுப்பு

**கதை**

★ எங்கள் குடும்பத்திற்கு வாரந்தோறும் கோயிலுக்குச் செல்லும் பழக்கமும் பூங்காவிற்குச் செல்லும்பழக்கும்உறவினர் இல்லத்திற்குச் சென்று நலன் விசாரிக்கும்பழக்கமும் இருந்தன.

★ நாங்கள் சனிக்கிழமை தோறும் அதிகாலையிலேயே நல்லெண்ணெயைத் தேய்த்து (சனி நீராடி) குளித்து விட்டு கோயிலுக்குச் செல்வோம்.

(இவற்றில் ஏதேனும் இரண்டைத் தேர்ந்தெடுத்து எழுதுக!)

**கோயில்முன் கொடை**

★ என் தந்தையும் தாயும் கோயிலுக்குச் செல்லும் போது வாசலில் உள்ள கொடை விரும்பிகளைக் (பிச்சைக்காரர்கள்) கண்டவுடன் தன் சட்டைப் பையில் உள்ள பணத்தாளை எங்களிடம் கொடுத்து அவருக்கு மரியாதையுடன் கொடையளிக்கக் கற்றுத் தருவார்.

★ புன்னகையுடன் அதைச் செய்யக் கற்றுத்தருவார்கள்.

★ கொடைவிரும்பிகளின் வாழ்த்துகள் என்னை மெய்சிலிர்க்க வைக்கும்.

★ புன்னகையே சிறந்த சமூக சேவை என்பார் என் தந்தை.

**உணவுவிடுதிமுன் கொடை**

★ உணவு விடுதிக்குச் செல்லும்போது வாசலில் இருப்பவர்கள் பலர்.

★ உணவுக்காக அவர்கள் இரந்து காத்திருப்பர்.

★ என் தங்கை அவர்களைக் கண்டவுடன் என் தந்தையிடம் பணத்தாள்களைப் பெற்று அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அளிப்பாள்.

★ நானும் அளிப்பேன். அவர்களின் புன்னகை எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

★ தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பார்கள்.

**நீதி**

★ இன்றுவரை நானும் என் பெற்றோர்களிடம் கற்றுக்கொண்ட பழக்கத்தை மாற்றாமல் மாறாமல் செய்வேன் என்று நம்புகின்றேன்.

**பூங்காவின்முன் கொடை**

★ பூங்காவிற்குச் செல்லும்போது பெண்கள் பலர் கையில் குழந்தையுடன் நல்ல நல்ல நூல்களை விற்றுக்கொண்டிருப்பார்கள்.

★ அவர்களிடம் அன்பாகப் பேசி அவர்களின் குழந்தையின் பெயர், நலம் விசாரித்து அவர்களின் பிச்சை எடுக்காமல் உழைக்கும் தன்மான வாழ்வைப் போற்றி அவர்களிடம் உள்ள புத்தகங்களை வாங்கி எங்களுக்குத் தருவார் என் தாய்.

★ யாவரிடமும் நலம் கேட்டல் நனிசிறந்த பண்பு என்பார்.

★ நம் கருமமும் தருமமே நம்மைக் காக்கும் என்பார் என் தாய்.

**நீதி**

★ **தாயைப்போலபிள்ளைநூலைப்போலசேலை** என்பார்களே நானும் என் தாயைப் போல இன்றும் பூங்காவிற்குச் செல்லும்போது அந்த வகையான உதவிகளைச் செய்கின்றேன்.

நன்றி! வணக்கம்! வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# கவிதை எழுதுதல்

**கவிதை எழுதும் முறை:-**

- எழுத்து, சீர், தளை, தொடை என்று எந்தவித யாப்பு கட்டுப்பாடுகளும் இல்லாமல் எழுதப்படும் கவிதைகளே புதுக்கவிதைகள் ஆகும்.
- புதுக்கவிதைகள் இதைத்தான் எழுத வேண்டும். இப்படித்தான் எழுத வேண்டும் என்று எந்தவித வரையறையும் கிடையாது.
- தன் உள்ளத்தில் தோன்றும் கருத்துகளை அப்படியே பதிவு செய்துவிடலாம்.
- அதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் கிடையாது.
- மூன்று அல்லது நான்கு அடிகளில் எழுத வேண்டும்.
- இயற்கை, கல்வி, நட்பு, உறவு என்று அனைத்து தலைப்புகளிலும் புதுக்கவிதைகளை இயற்றலாம்.
- ஆழ்ந்த தமிழ் புலமை இருக்க வேண்டும் என்று கிடையாது.
- சமகால நிகழ்வுகளைக் கொண்டு, ஆழ்ந்த பொருள்தரும்படி கவிதை இயற்றப்பட வேண்டும்.
- கவிதையின் ஈற்றடியில் நாம் சொல்லவந்த கருத்தைப் படம்பிடித்துக் காட்டவேண்டும்.

## மாதிரி கவிதைகள்

ஓ! குயிலே
பாடுவதை ஏன் நிறுத்திவிட்டாய்
**மழலை பேசுகிறது**

அந்தரத்தில்
அஜந்தா குகை
**தூக்கணாங் குருவிக்கூடு**

இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
**புல்லாங்குழல்**

ஐந்தில் வளைப்பதற்கோ?
பிஞ்சு முதுகில்
**புத்தக மூட்டைகள்**

சாவே இல்லாத
சரித்திர வாத்தியார்
**புத்தகம்**

# ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்க

## இயல் 1

➔ **The Pen is mightier than the Sword.**

★ வாளின் முனையைவிட பேனாவின் முனை கூர்மையானது.

➔ **Winners don't do different things, they do things differently.**

★ வெற்றியாளர்கள் வேறுவகையில் சிந்திப்பதில்லை, வேறுபட்டு சிந்திக்கிறார்கள்.

➔ **A picture is worth a thousand words.**

★ ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்கு சமம்.

➔ **Work while you work and play while you play.**

★ விளையாடும்போது விளையாடு, வேலை செய்யும்போது வேலை செய்.

➔ **Knowledge rules the world.**

★ அறிவே உலகத்தை இயக்குகின்றது.

## இயல் 2

➔ **Just living is not enough. One must have sunshine, freedom and a little flower**
**- Hans Anderson**

★ பெயருக்கு வாழ்வது வாழ்க்கையல்ல. ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஒளிமயமானதாகவும், சுதந்திரமாகவும், மலர்களைப் போன்று மணமும் அழகும் உள்ளதாக அமைய வேண்டும்
- ஹேன்ஸ் ஆன்டர்சன்

➔ **In nature, light creates the colour. In the picture, colour creates the light**
**- Hans Hofmann**

★ இயற்கையில் ஒளி வண்ணங்களை உருவாக்குகிறது. ஓவியத்தில் வண்ணங்கள் ஒளியை உருவாக்குகிறது
- ஹான்ஸ் ஹா.ஃ.ப்மன்

➔ **Look deep into nature and then you will understand everything better - Albert Einstein**

★ இயற்கையை உற்றுப்பார். அனைத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்
- ஆல்பிரட் ஐன்ஸ்டீன்

➔ **Simplicity is nature's first step and the last of art - Philip James Bailey**

★ எளிமை என்பது இயற்கையின் முதல்படி, அதுவே கலையின் இறுதிப்படி ஆகும்
- பிலிப்ஸ் ஜேம்ஸ் பெய்லி

➔ **Roads were made for journeys not destinations - Confucius**

★ பாதைகள் என்பது பயணங்களுக்கானது. இலக்குகளுக்கானது அல்ல. - கன்பூசியஸ்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல் 3

➔ **Education is the most powerful weapon, which youcan use to change the world.**

★ கல்வி வலிமையான ஆயுதம். அதனைப் பயன்படுத்தி இவ்வுலகையே மாற்றலாம்.

➔ **Looking at beauty in the world is the first step of purifying the world.**

★ உலகிலுள்ள அழகை உற்று நோக்குவதே மூளையைத் தூய்மைப் படுத்துவதற்கான முதல் முயற்சியாகும்.

➔ **Culture does not make people. People make culture.**

★ பண்பாடு மக்களை உருவாக்காது; மக்களே பண்பாட்டை உருவாக்குகிறார்கள்.

➔ **A people without the knowledge of their past history and culture is like a tree without roots.**

★ தம் முன்னோரின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறியாத மக்கள், வேரற்ற மரம் போல்வர்.

➔ **A nation's culture resides in the hearts and in the soul of its people.**

★ ஒரு நாட்டின் பண்பாடு அந்நாட்டு மக்களின் உள்ளத்திலும் ஆன்மாவிலும் தங்கியுள்ளது.

## இயல் 4

**செய்திக்குக் கீழுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை மொழிபெயர்ப்புப் பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுக.**

➔ **The Chinese have no religious science. The practices of their religion (Buddhism) are derived from India. They believe that it is the Indians who brought idols to them and that the latter were their religious educators. In China and in India they believe in metempsychosis. The Chinese and Indians draw from the same religious principles different conclusions. In India medicine and philosophy are practiced. The Chinese practice medicine equally. Their chief treatment is cauterization. The Chinese practice astronomy but the Indians practice this science still more. Written by Abu Zayd Al Sirafi, traveller, 10th century. Foreign notices of South India by K.A. Neelakanda sastri**

★ சீனாவுக்கென்று தனியாக மதங்கள் இல்லை. இந்தியாவின் மதத்தை (பவுத்தம்) அவர்கள் கடைப்பிடிக்கின்றனர். சிலைகளைத் தங்களுக்கு அறிமுகம் செய்தோர் இந்தியர்கள் என்று நம்பும் சீனர்கள், இந்தியர்களே தங்களின் மத ஆசிரியர்கள் என்றும் கருதுகின்றனர். இந்தியாவிலும் சீனாவிலும் மரணத்துக்கு பின் மறுபிறப்பை நம்புகின்றனர். ஒரே மதக் கோட்பாடு இருந்தாலும், சீனர்களும் இந்தியர்களும் வெவ்வேறு தீர்மானங்களுக்கு வருகிறார்கள். இந்தியாவில் மருத்துவமும், தத்துவமும் நடைமுறையில் உள்ளன. அவர்களுக்குச் சமமாகச் சீனர்களும் மருத்துவத்தை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். 'தீய்த்தல்' அவர்களது பிரதான சிகிச்சை முறை. சீனர்கள் வானியல் சாஸ்திரப் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். ஆனால் இந்த அறிவியலை இந்தியர்கள் இன்னும் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர்.

★ Religion - மதம் Philosophy - தத்துவம் Medicine - மருத்துவம்

★ Science - அறிவியல் Idols - சிலைகள்

## இயல் 5

➔ **The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago they are being born every generation they will be born and reborn over and over again!**

**தமிழாக்கம்**

★ எல்லா நாடுகளிலும் உள்ள நாட்டுப்புறப் பாடல்களைப் போல் தமிழ்நாட்டிலும் நாட்டுப்புறப் பாடல்கள் குறிப்பிடும் படியான அழகுணர்ச்சிகளையும் கவித்தன்மைகளையும் கொண்டுள்ளன. ஆனால், அதில் மிகவும் தனிச்சிறப்பானது மண்வாசனையோடு இலக்கியச் சுவை நயமும் அதனோடு செறிந்து காணப்படுவது. இதற்குக் காரணம் தமிழ்மொழி பேசும் மக்களின் நீண்ட நெடிய வரலாறும், மிகச் சிறப்பான இலக்கிய மரபுமேயாகும். நாட்டுப்புறப் பாடல்கள் மிகவும் பழைமையானவை ஆயினும் வாழ்வில் இரண்டறக் கலந்து நவீன காலத்திற்கு ஏற்றாற்போல் தன்னைப் புதுப்பித்துக் கொள்கின்றன. நாட்டுப்புறப் பாடல்களின் தோற்றம் பல நூற்றாண்டுகள் பழமையானது. ஒவ்வொரு தலைமுறையிலும் தோன்றிக்கொண்டே இருப்பது, வரும் காலங்களிலும் மீண்டும் மீண்டும் தோன்றக்கூடிய தன்மை வாய்ந்தது. இதுவே தமிழ்நாட்டு நாட்டுப்புறப்பாடலின் தனிச்சிறப்பாகும்.

## இயல் 6

➔ **The oldest documented forms of art are visual arts, which include creation of images or objects in fields including today painting, sculpture, printmaking, photography and other visual media. Music, theatre, film, dance and other performing arts, as well as literature and other media such as interactive media, are included in a broader definition of art or the arts. Until the 17th century, art referred to any skill or mastery and was not differentiated from crafts or sciences. Art has had a great number of different functions throughout its history, making its purpose difficult to abstract or quantify to any single concept. This does not imply that the purpose of Art is "vague", but that it has had many unique, different reasons for being created.**

**தமிழாக்கம்**

★ பழங்காலத்தில் கலைகள் பல்வேறு வகையில் காட்சிப்படுத்தப்பட்டன. அவை இன்றைய காலத்தில் இருப்பதைப் போன்று ஓவியங்களாகவும், சிலைகளாகவும், அச்சு வடிவிலும், படங்களாகவும் இருந்தன. இசை, நாடகம், திரைப்படம், நடனம் மற்றும் நிகழ்த்துக்கலை, இலக்கியம் மற்றும் பிற ஊடகங்கள் என அனைத்தும் கலைகளில் அடங்கும். 17ஆம் நூற்றாண்டு வரை கலை என்பது அறிவியல் மற்றும் கைவினையிலிருந்து வேறுபடாத திறமை அல்லது நுட்பம் ஆகும். கலைக்கு வரலாற்றிடையே பல பரிமாணங்கள் உள்ளன. அதை எதுவென்று குறுகிய அளவில் இறுதியிட்டுக் காட்ட இயலாது. கலை என்பது ஏதோ ஒரு அர்த்தமற்ற பொருள் அன்று. கலைகளுக்கென்று தனித்தன்மையும், கலை உருவானதற்கான காரணமும் இருக்கும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இயல் 7

➔ **Balu:** Hi, Good evening.

➔ **Velu:** Hi Balu, Good evening.

➔ **Balu:** Yesterday you were watching the Republic day function the whole day.

➔ **Velu:** Yes, I was touched by one award ceremony.

➔ **Balu:** Which award?

➔ **Velu:** Param vir Chakra award, highest award for army personnel.

➔ **Balu:** Why were you touched?

➔ **Velu:** Most of the awards were received by the wives of soldiers posthumously.

➔ **Balu:** Why? What do you mean by posthumous?

➔ **Velu:** it means after death. Many soldiers had laid down their lives protecting the border of our Motherland. They have sacrificed their lives to save our Country. So that we can be free and safe.

**தமிழாக்கம்**

★ **பாலு:** மாலை வணக்கம்.

★ **வேலு:** மாலை வணக்கம், பாலு.

★ **பாலு:** நேற்று குடியரசு தினவிழா நிகழ்ச்சிகளை முழுவதுமாகப் பார்த்தாயா?

★ **வேலு:** ஆமாம்! விருது வழங்கும் விழா என்னை மிகவும் கவர்ந்தது.

★ **பாலு:** என்ன விருது?

★ **வேலு:** **'பரம்வீர் சக்கரா'** விருது. இராணுவத்தினருக்கு வழங்கப்படும் மிக உயரிய விருது.

★ **பாலு:** ஏன் அது உனக்கு மிகவும் பிடித்தது?

★ **வேலு:** பெரும்பாலான விருதுகளை இறந்துபோன இராணுவ வீரர்களின் மனைவிமார்கள் பெற்றுக்கொண்டனர்.

★ **பாலு:** ஏன்? எதற்காக இறந்த பிறகு விருது வழங்கப்பட்டது?

★ **வேலு:** பல வீரர்கள் நம் நாட்டின் எல்லையைக் காக்கும்போது, தாய்நாட்டைக் காப்பதற்காக இறந்தவர்கள். நம் நாட்டிற்காக தன் உயிரையே தியாகம் செய்தவர்கள். அவர்களால்தான் நாம் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க முடிகிறது.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல் 8

**தமிழாக்கம் தருக.**

➔ **An eye for a eye only ends up making the whole world blind.**

★ கண்ணுக்குக் கண் என்ற சொல் இந்த உலகத்தைக் குருடாக்கி விடும்.

➔ **You must be the change you wish to see in the world.**

★ இந்த உலகை அணுகும் விதத்தைக் கண்டிப்பாக மாற்ற வேண்டும்.

➔ **The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.**

★ கோழைகள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். மன்னித்தல் வலிமை மிக்கவர்களின் பண்பாகும்.

➔ **Nobody can hurt me without my permission.**

★ என் அனுமதியில்லாமல் என்னை யாரும் புண்படுத்த முடியாது.

➔ **You must not lose faith in humanity. Humanity is an ocean@ if a few drops of the ocean are dirty, the ocean does not become dirty. - Mahathma Gandi**

★ நீங்கள் மானுடத்தின்மீது இருக்கும் நம்பிக்கையை ஒரு காலமும் இழந்துவிடக்கூடாது. மானுடம் என்பது சமுத்திரம் போன்றது. சமுத்திரத்தில் சில துளி கழிவு கலந்தால் சமுத்திரம் முழுவதும் கழிவாகி விடாது. - மகாத்மா காந்தி

## சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

| | |
|---|---|
| ➔ **A crying child will get milk.** | அழுகின்ற குழந்தைதான் பால் குடிக்கும். |
| ➔ **Act is stronger than fiction** | கற்பனையை விட உண்மை விசித்திரமானது |
| ➔ **A bold attempt is half success.** | கடின முயற்சியே பாதி வெற்றி. |
| ➔ **Eagles do not catch flies** | புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது |
| ➔ **Take time by the fore lock** | காற்றுள்ள போதே தூற்றிக் கொள் |
| ➔ **A theif knows a theif as a wolf know a wolf.** | பாம்பின் கால் பாம்பு அறியும். |
| ➔ **After death the doctor.** | கண் கெட்டபின்னே சூரிய நமஸ்காரம். |
| ➔ **All are not saints that go to the church.** | வெளுத்ததெல்லாம் பாலாகுமா? |
| ➔ **As is the king, so all his subjects.** | மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி. |
| ➔ **A guilty conscience need no accuser.** | குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும். |
| ➔ **A hasty man never wants woe.** | ஆத்திரக்காரன் அறிவை இழப்பான். |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- A lamb at home and lion at chase. — பார்த்தால் பூனை, பாய்ந்தால் புலி.
- A law maker should not be a law breaker. — வேலியே பயிரை மேயலாமா?
- A little learning is a dangerous thing — அரை குறை படிப்பு ஆபத்தானது
- A little stream will drive a light nill. — சிறு துரும்பும் பல்குத்த உதவும்.
- A man of courage never wars weapons. — வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
- A Penny saved is a penny gained. — சிறுதுளி பெருவெள்ளம்.
- Birds of the same feather flock together. — இனம் இனத்தோடு சேரும்.
- Barking dogs seldom bite. — குரைக்கிற நாய் கடிக்காது.
- Be first at a feast and the last to slander — பந்திக்கு முந்து, படைக்கு பிந்து
- Behave Courteously. — மரியாதையுடன் நடந்துகொள்.
- Bend the twig bend the tree — ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?
- Blessings are not valued till they are gone — நிழலின் அருமை வெயிலில் தெரியும்
- Calm before storm — புயலுக்கு முன் அமைதி
- Calms after the storm. — புயலுக்கு பின் அமைதி.
- Convet all. lose all. — பேராசை பெருநஷ்டம்.
- Charity begins at home — தனக்குப் போகத்தான் தானமும் தர்மமும்
- Child is the father of the man. — விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.
- Cleanliness is next to godliness — தூய்மை கடவுள் தன்மைக்கு அடுத்த பண்பு
- Constant dripping wears away the stone — எறும்பு ஊர கல்லும் தேயும்
- Death keeps no calendar — ஆறிலும் சாவு நூறிலும் சாவு
- Delay of justice is injustice — தாமதிக்கப்பட்ட நீதி அநீதிக்குச் சமமாகும்
- Diamond cuts diamond — முள்ளை முள்ளால் எடு
- Diligence is the mother of good fortune — முயற்சி திருவினையாக்கும்
- Distance lends enchantment to the view — இக்கரைக்கு அக்கரை பச்சை
- Do as Romans do when you are in rome. — ஊருடன் ஒத்து வாழ்.
- Do not add fuel to the flame. — எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றாதே.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தோஸ்த் தமிழ் உரை + 1

| | |
|---|---|
| ➔ Work is worship | செய்யும் தொழிலே தெய்வம் |
| ➔ Work more, talk less. | பேச்சைக் குறை; உழைப்பைப் பெருக்கு. |
| ➔ Work while your work, play while you play | காலத்தை பயிர் செய் |
| ➔ Your Actions will nail You | தன் வினை தன்னைச் சுடும் |
| ➔ Youth must have its flying. | இளம் கன்று பயமறியாது. |
| ➔ Where there is a will there is a way. | மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. |
| ➔ Wealth is best known by want. | நிழலின் அருமை வெயிலில் தெரியும். |
| ➔ Well begun is half-done. | நல்ல தொடக்கமே பாதி வெற்றி. |
| ➔ Time is gold. | காலம் பொன் போன்றது. |
| ➔ Truth alone triumphs | வாய்மையே வெல்லும் |
| ➔ Union is strength | ஒற்றுமையே பலம் |
| ➔ Walls have ears | சுவற்றுக்கும் காது உண்டு |
| ➔ Think before you act | எண்ணித் துணிக கருமம் |
| ➔ Think before you speak. | சிந்தித்து பேசு; பேசியபின் சிந்திக்காதே! |
| ➔ Think every body alike | தன்னைப்போல பிறரை நினை |
| ➔ To the good people world appears good. | நல்லவர்களுக்கு நல்லதே நடக்கும். |
| ➔ Do well what you have to do. | செய்வன திருந்தச் செய். |
| ➔ Double charge will break even a cannon | அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் |
| ➔ East or west. home is best. | எலி வளையானாலும் தனி வளை வேண்டும். |
| ➔ Empty vessels make the greatest noise | குறை குடம் கூத்தாடும் |
| ➔ Even homer nods | யானைக்கும் அடி சறுக்கும் |
| ➔ Everything is good for something. | எல்லாம் நன்மைக்கே! |
| ➔ Excess of delight palls the appetite. | அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு. |
| ➔ Experience is the best teacher | அனுபவமே சிறந்த ஆசான் |
| ➔ Face is the index of the mind. | அகத்தின் அழகு முகத்தில் தெரியும். |
| ➔ Failure is the stepping stone to success. | தோல்வியே வெற்றிக்கு முதற்படி. |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| → Familiarity breeds contempt | பழக பழக பாலும் புளிக்கும் |
| → God is love | அன்பே கடவுள் |
| → Good and Bad are not due others | நன்றும் தீதும் பிறர் தர வாரா |
| → Haste makes waste | பதறிய காரியம் சிதறிப் போகும் |
| → He who hunts two hares loses both | பேராசை பேரு நட்டம் |
| → Health is wealth | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் |
| → Hoist your sail when the wind is fair | கற்றுள்ள போதே தூற்றிக் கொள் |
| → Habits die hard | தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் |
| → Knowledge is power | அறிவே ஆற்றல் |
| → Lamp at home and a lion at chase | பார்த்தல் பூனை, பாய்ந்தால் புலி |
| → Little drops of water make the mighty ocean | சிறு துளி பெரு வெள்ளம் |
| → Live and get live. | வாழு; வாழ விடு. |
| → Look before you leap | ஆழம் தெரியாமல் காலை விடாதே |
| → The law maker should not be a law breaker. | வேலியே பயிரை மேயலாமா? |
| → The old fox is caught at last | பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் |
| → The pot call the kettle black | ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை |
| → The proof of the pudding is in the eating | அப்பம் என்றால் பிட்டுக் காட்ட வேண்டும் |
| → The wearer knows where the shoe pinches | பாம்பின் கால் பாம்பறியும் |
| → There are two sides for every coin | நாணயத்துக்கு இரு பக்கம் உண்டு |
| → There is no smoke without fire | நெருப்பில்லாமல் புகையாது |
| → The face is the index of mind | அகத்தின் அழகு முகத்தில் தெரியும் |
| → Tha blind can not lead the blind | குருடனுக்கு குருடன் வழி காட்ட முடியுமா? |
| → Strike the iron while it is hot | காற்றுள்ள போதே தூற்றிக் கொள் |
| → Single tree makes no forest | தனி மரம் தோப்பாகாது |
| → No pain, No gain. | உழைப்பின்றி ஊதியம் இல்லை. |
| → Nothing is impossible to a willing heart | மனம் இருந்தால் மார்க்கம் உண்டு |
| → Many hands make work light | கூடி வாழ்ந்தால் கோடி நன்மை |
| → Blood is thicker than water | தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் |

மொழித்திறன் பயிற்சி

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



➔ For the busy man time passes quickly.
★ சுறுசுறுப்புடையோருக்குக் காலம் விரைவாகச் செல்கிறது.
➔ God stays long but strikes at last
★ அரசன் அன்று கொல்வான்ளு தெய்வம் நின்று கொல்லும்
➔ He that plants a tree, plats for prosperity
★ ஒரு மரத்தை நட்டாலே ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதற்க்குச் சமம்
➔ Mother and Motherland are greater than heaven
★ தாயும், தாய் நாடும் சொர்க்கத்தை விடச் சிறந்தவை
➔ Speech is silver silence is golden.
★ பேச்சு வெள்ளி போன்றதுளு மௌனம் பொன் போன்றது.
➔ The hand that rocks the cradle rules the world
★ தொட்டிலை ஆட்டும் கை தொல்லுகை ஆளும் கை
➔ The mills of God grind slow but sure
★ அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்
➔ The pen is mightier than the sword
★ பேனாவின் முனை வாள் முனையிலும் வலிமையானது
➔ To err is human to forgive is divine
★ தவறு செய்வது மனித இயல்பு மன்னிப்பது தெய்வத்தின் இயல்பு
➔ We live in deeds, not in years
★ எத்தனை நாள் வாழ்ந்தான் என்பதை விட எப்படி வாழ்ந்தான் என்பது மேல்
➔ Do not look at gift horse in the mouth
★ தானம் கொடுத்த மாட்டை பல் பிடித்துப் பார்க்காதே
➔ Do not rob Peter to pay Paul.
★ கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்காதே!

➔ Blue are the hills that are far away — இக்கரைக்கு அக்கரை பச்சை
➔ Too much of anything is food for nothing. — அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு.
➔ Do what you can with what you have where you are — வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
➔ Eat to live: do not live to eat — வாழ்வதற்காக சாப்பிடு; சாப்பிடுவதற்காக வாழாதே
➔ No news is good news — செய்தி ஏதும் இல்லை என்பது நல்ல செய்தியே
➔ Penury pinches all — பசிவந்தால் பத்தும் பறந்து போகும்

➔ A young twig is easier twisted than an old tree.

★ ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

➔ As you sow, so you reap

★ தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



➔ **Be friendly but not familiar**

★ அனைவருக்கும் நண்பனாக இரு. ஆனால் நெருங்கி பழகாதே

➔ **Be slow to promise but quick to perform**

★ ஆலோசித்து வாக்கு கொடு விரைந்து நிறைவேற்று

➔ **Beter pay the cook than the doctor**

★ வைத்தியனுக்கு கொடுப்பதை விட வானிகனுக்கு கொடு

➔ **Books and friends must be few but good**

★ நல்ல நண்பர்களும், நூல்களும் குறைவாக இருப்பது நலம்

➔ **Books and friends must be few but god**

★ நல்ல நண்பர்களும், நூல்களும் குறைவாக இருப்பது நலம்

➔ **Coming events cast their shadow before**

★ ஆனை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே

➔ **Contentment is more than a kingdom**

★ போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

➔ **Cowards die many times before their death**

★ வீரனுக்கு ஒரு முறை சாவு; கோழைக்கு தினந்தோறும் சாவு

➔ **Do not lock the stable door when the horse is gone**

★ கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்யதே

## பொன்மொழிகள்

➔ **“Make each day your masterpiece.”** **- John Wooden**

★ ஒவ்வொரு நாளையும், உங்களின் தலைசிறந்த நாளாக்குங்கள். - ஜான் உட்டன்

➔ **“If there is no struggle, there is no progress.”** **- Frederick Douglass**

★ “போராட்டம் இல்லை என்றால், எந்த முன்னேற்றமும் இல்லை.” - பிரடெரிக் டக்லஸ்

➔ **Only I can change my life. No one can do it for me.** **- Carol Burnett**

★ என் வாழ்க்கையை என்னால் மாற்ற முடியும். என்னை தவிர யாரும் அதை செய்ய முடியாது - காரல் பர்னெட்





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ **Poverty was the greatest motivating factor in my life.** **- Jimmy dean**

★ வறுமையே என் வாழ்வின் மிகப்பெரிய ஊக்குவிப்புக் காரணியாக இருந்தது. - ஜிம்மி டீன்

➔ **Pleasure in the job puts perfection in the work.** **- Aristotle**

★ நேர்த்தியான பணியே மகிழ்ச்சியான நிறைவை தருகிறது. - அரிஸ்டாட்டில்

➔ **Don't find fault, find a remedy.** **- Henry Ford**

★ தவறுகளைக் காணாதே, அதற்கான தீர்வுகளைக் காண் - ஹென்றி ஃபோர்ட்

➔ **Attitude is a little thing that makes a big difference.** **- Winston Churchill**

★ மனநிலை என்பது மிகவும் சிறியதுதான். அதனால் ஏற்படும் மாற்றம் மிகப் பெரியது. - வின்ஸ்டண்ட் சர்ச்சில்

➔ **Life is really simple, but we insist on making it complicated.** **- Confucius**

★ வாழ்க்கை மிகவும் எளியது. நாம்தான் அதை சிக்கலாக்கிக் கொள்கிறோம் - கன்ஃபூசியஸ்

➔ **To succeed in life, you need two things: ignorance and confidence.** **- Mark Twain**

★ வாழ்வில் வெற்றிபெற இரண்டு கூறுகள் தேவை. அவை, அறியாமையை அறிதல், நம்பிக்கை. - மார்க் வைன்

➔ **Honesty is the best policy.** **- Benjamin Franklin**

★ நேர்மையே சிறந்த கொள்கை. - பெஞ்சமின் ஃபிராங்களின்

➔ **Impossible is a word to be found only in the dictionary of fools.** **- Napoleon Bonaparte**

★ முடியாது என்ற வார்த்தையை முட்டாள்களின் அகராதியில் மட்டுமே காணமுடியும். - நெப்போலினன் போனபர்ட்

➔ **Experience is a good school. But the fees are high.** **- Heinrich Heine**

★ அனுபவம் நல்ல பள்ளிக்கூடம். ஆனால் அதன் கட்டனம் அதிகம். - ஹென்ரிச் ஹெயின்

➔ **"If you can dream it, you can do it."** **- Walt Disney**

★ உங்களால் கனவு காணமுடியும் என்றால் கண்ட கனவை நனவாக்கவும் உங்களால் முடியும். - வால்ட் டிஷ்னி

➔ **"A person who never made a mistake never tried anything new."** **- Albert Einstein**

★ ஒரு மனிதன் தவறுகளே செய்யவில்லை என்றால் அவர் புதிதாக எதையும் முயற்சிக்கவில்லை என்று பொருள் - ஆல்பர்ட் ஐன்ஸ்டியன்

➔ **"Change your thoughts and you change your world."** **- Norman Vincent Peale**

★ உங்கள் எண்ணங்களால் உங்கள் உலகை மாற்றிக்கொள்ளுங்கள். - நார்மன் வின்செண்ட் பீலே.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பத்தியைப் படித்து வினாக்கேற்ற விடை எழுதுக

### பாடநூலில் உள்ளவை

தமிழ் என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. தமிழ் என்ற சொல்லை, இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

'அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்' என்ற புறநானூற்றுப்பாடல் அடியில் தமிழ் என்னும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் 'பல்கலைப் புலமை' என்னும் பொருளில் ஆளப்பட்டடுள்ளது. 'தமிழ் கெழு கூடல்' என்றவிடத்திலும் 'கலைப்புலமை' என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் 'தமிழ் தழீஇய சாயலவர்' என்னும் இடத்து தமிழ் என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் தமிழ், பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் இவை பத்துமே 'மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்' என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் 'தமிழ்மாலை' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

(பண்பாட்டு அசைவுகள் - தொ.பரமசிவன்)

**வினாக்கள்**

**1) தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**

➔ தமிழ் என்ற சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் இனிமை, பண்பாடு, அகப்பொருள்

**2) பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.**

**பத்தியில் உள்ள அளபெடைகள்**

➔ அதூஉம் - இசைநிறையளபெடை, செய்யுளிசை அளபெடை

➔ தழீஇய - சொல்லிசையளபெடை

**3) தமிழ் எனறவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒருவரியில் குறிப்பிடுக.**

➔ தமிழ் என்றவுடன் நம் மனதில் தோன்றுவது தமிழின் இனிமை, எளிமை, புதுமை, தமிழ்மொழியில் உள்ள இலக்கிய இலக்கணங்கள்.

**4) திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**

➔ திருப்பாவையை ஆண்டாள் குறிப்பிடும் பெயர் தமிழ்மாலை, சங்கத் தமிழ்மாலை

**5) பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.**

➔ 1. தமிழின் பெருமை 2. தமிழின் பொருள் 3. நம் தமிழ்





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

## மாதிரி 1

தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. இயற்றமிழ் என்பது தமிழர் யாவர்மாட்டும் பொதுமையின் இருவகை வழக்கினும் இயங்குகின்ற வசனமும் செய்யுளும் ஆகும். இதன்கண் இலக்கியங்களும் இலக்கணங்களுமாகிய யாவும் அடங்கும்.

இயற்றமிழ், 'செந்தமிழ் கொடுந்தமிழ்' என்ற வகையினும் படுதலுமொக்கும். ஒப்பவே, செந்தமிழ் வசனநூல்களும், செந்தமிழ்ச் செய்யுள் நூல்களும், கொடுந்தமிழ் வசனநூல்களும் கொடுந்தமிழ்ச் செய்யுள் நூல்களும் இவ்வியற்றமிழின் கண் அடங்கும்.

தமிழிற் புலவரும் அல்லாரும் ஒத்தியங்காமையான், இப்பிரிவிற்கு இடமுண்டாயிற்று. தமிழ் வழங்கும் நாட்டிற்குள்ளும் இப்பிரிவு ஏற்படுவதாயிற்று. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு குறுநிலங்களும் கொடுந்தமிழ் நாட்டின்பாற்பட்டன.

**வினாக்கள்**

**1) தமிழ் மொழியில் உள்ள பிரிவுகள் எத்தனை? அவை யாவை?**

➔ தமிழ் மொழி மூன்று பிரிவுகளை உடையது. அவை: **இயல், இசை, நாடகம்.**

**2) 'இயற்றமிழ்' - இச்சொல்லைப் பிரித்து புணர்ச்சி விதி தருக.**

➔ இயற்றமிழ் - **இயல்** + **தமிழ்**

➔ '**லள வேற்றுமையில் றடவும்**' இயற் + றமிழ் = இயற்றமிழ்

**3) இயற்றமிழில் அடங்குபவை யாவை?**

➔ செய்யுளும் வசனமும் இயற்றமிழில் அடங்குபவை ஆகும்.

**4) இயற்றமிழில் செந்தமிழ் கொடுந்தமிழ் என பிரிவுகள் தோன்ற காரணம் யாது?**

➔ தமிழிற் புலவரும் அல்லாரும் ஒத்து இயங்காமையால், இயற்றமிழில் செந்தமிழ் கொடுந்தமிழ் என பிரிவுகள் தோன்றின.

**5) பத்தியில் அமைந்துள்ள உம்மைச் சொற்களைத் தொகுத்தெழுதுக.**

➔ வசனமும் செய்யுளும்; ➔ இலக்கியமும் இலக்கணமும்;

➔ செந்தமிழ் வசனநூல்களும் செந்தமிழ்ச் செய்யுள் நூல்களும் கொடுந்தமிழ் வசனநூல்களும் கொடுந்தமிழ்ச் செய்யுள் நூல்களும்; ➔ புலவரும் அல்லாரும்

## மாதிரி 2

ஒருவன் தான் பிறந்த நாட்டைத் தாய்போல் நேசிக்கலாம். ஆனால் அந்நேசத்தை மற்ற நாடுகளின் துன்பத்துக்குப் பயன்படுத்தலாகாது. இப்பொழுது நாட்டுப்பற்று அல்லது தேசபக்தி என்பது பிறநாட்டைத் துன்புறுத்தும் வழி நிகழ்ந்துவரல் கண்கூடு.

கடல்களும் மலைகளும் காடுகளும் பிறவும் நாடுகளைப் பிரிக்கின்றன. வாழ்வுக்கேற்ற பொருள்களை இயற்கை உதவுகிறது. அப்பொருள்களைப் பெற்றும் மாறியும் மனிதன் இன்பவாழ்வு நடத்துகின்றான்.

இப்பொழுது ஒரு நாட்டார் இன்னொரு நாட்டைப் பற்றி அதன் வளத்தைக் கவருவதிலேயே கருத்துக்கொண்டு வாழ்கிறார். இஃதோர் அறமாகவும் கருதப்படுகிறது. இம் மறத்தை அறமாகக் கருதுவது மடமை.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**வினாக்கள்**

**1) தற்காலத்தில் நாட்டுப்பற்று என்று கருதப்படுவது எது?**

➔ தற்காலத்தில் பிறநாட்டைத் துன்புறுத்துவதே நாட்டுப்பற்று அல்லது தேசபக்தி என்று கருதப்படுகிறது.

**2) 'வாழ்கிறார்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

➔ வாழ் + க் + ற் + ஆர் = வாழ்கிறார்

| பகுதி | சந்தி | இடைநிலை | விகாரம் | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|
| வாழ் | க் | ற் இறந்தகால இடைநிலை | - | - | ஆர் பலர்பால் வினைமுற்று விகுதி |

**3) நாட்டுப்பற்று - இச்சொல்லைப் பிரித்து புணர்ச்சி விதி தருக.**

➔ நாடு + பற்று

**4) பத்தியில் உள்ள உம்மைச் சொற்களை எழுதுக.**

➔ கடல்களும் மலைகளும் காடுகளும் பிறவும்

**5) ஏதேனும் இரண்டு உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**கிணற்றுத் தவளைப் போல**

➔ இனியன் உலக நிகழ்வுகள் தெரியாமல் கிணற்றுத் தவளைப் போல வாழ்ந்து வருகிறான்.

**குன்றின்மேலிட்ட விளக்குப் போல**

➔ கல்வியில் சிறந்து விளங்கிய வளவன் குன்றின்மேலிட்ட விளக்குப் போல பிரகாசித்தான்.

## மாதிரி 3

சங்கக் கால மக்கள் இல்வாழ்க்கையைப் பெரிதும் விரும்பியிருந்தார்கள். உண்பதற்கும் ஒழுங்காக வாழ்வதற்கும் ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவி மகிழ்வதற்கும் பிற உயிர்களுக்கு விருந்தோம்பி நன்மைகள் செய்வதற்கும் தாமும் எக்காலமும் ஆதரவோடிருப்பதற்கும் இல்வாழ்க்கையே வசதியானதென்பது அவர்கள் கருத்து.

யாரோடும் இனிமையாகப் பேசுதல், நடுவு நிலைமையாக இருத்தல், இயன்றவரையிற் பிறர்க்கு உதவிசெய்தல், பிறர் செய்த உதவியை எக்காரணங் கொண்டும் என்றும் மறவாதிருத்தல் முதலிய நல்லியல்புகளெல்லாம் அவர்களுடைய சிறந்த கொள்கைகளாகவும் பழக்கங்களாகவும் இருந்தன.

இல்வாழ்க்கையில் வாழ்வார்க்குப் பொருள் தேடுவது ஒரு கடமையாக இருக்கிறது. அதற்காக அவர்கள் பற்பல தொழில் வகைகளை மேற்கொண்டிருந்தார்கள். உழவு, வணிகம், நெசவு முதலியவை அத்தொழில் வகைகளிற் சில. இங்கே மலைகளும் காடுகளும் கடற்கரைகளும் வளமாக இருக்கின்றன. வெற்றுவெளிகளும் உண்டு.



**வினாக்கள்**

**1) சங்கக் கால மக்கள், நன்மைகள் செய்வதற்கும் எக்காலமும் ஆதரவோடிருப்பதற்கும் வசதியாக கருதியது யாது?**

➔ சங்கக் கால மக்கள், நன்மைகள் செய்வதற்கும் எக்காலமும் ஆதரவோடிருப்பதற்கும் வசதியாக கருதியது இல்வாழ்க்கையே ஆகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) சங்கக் கால மக்களின் சிறந்த கொள்கைகள் யாவை?**

➔ யாரோடும் இனிமையாகப் பேசுதல் ➔ நடுவு நிலைமையாக இருத்தல்

➔ இயன்றவரை பிறர்க்கு உதவிசெய்தல்

➔ பிறர் செய்த உதவியை எக்காரணங் கொண்டும் என்றும் மறவாதிருத்தல்

**3) 'விருந்தோம்பி' - இச்சொல்லைப் பிரித்து புணர்ச்சி விதி கூறுக.**

➔ விருந்தோம்பி = விருந்து + ஓம்பி

➔ விதி 1 - 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' விருந்த் + ஓம்பி

➔ விதி 2 - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' விருந்தோம்பி

**4) சங்கக் கால மக்கள் மேற்கொண்ட தொழில்களைக் கூறுக.**

➔ சங்கக் கால மக்கள் பற்பல தொழில் வகைகளை மேற்கொண்டிருந்தார்கள்.

➔ உழவு ➔ வணிகம் ➔ நெசவு முதலியவை அத்தொழில் வகைகளிற் சிலவாகும்.

**5) சங்கக் காலத்தில் இல்வாழ்க்கையில் வாழ்வார்க்குப் பொருள் தேடுவது ஒரு கடமையாக இருந்தது. இது போன்ற சில கடமைகளைக் கூறுக.**

➔ ஒருவனைச் சமூகத்திற்கு ஏற்றவனாகவும் நல்லவனாகவும் வளர்ப்பது பெற்றோரின் கடமை.

➔ மாணவர்களுக்கு சிறந்த ஒழுக்கங்களையும் கல்வியையும் கற்று தருவது ஆசிரியர்களின் கடமை.

➔ பிறந்த நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் வகையில் வாழ்வது தனிமனிதன் கடமை.

## மாதிரி 4

தமிழர்களின் பழமையையும் பெருமையையும் சிறப்பையும் அறிந்துகொள்ள அகழ்வாய்வுகள் உதவுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகாரில் நடைபெற்ற அகழ்வாய்வில் புத்த விகாரம் ஒன்றும் பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் முகத்துவாரக் கட்டடமும் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொற்கையிலும் உறையூரிலும் நடைபெற்ற அகழ்வாய்வில் கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டடப் பகுதிகள் கிடைத்தன. அவை அக்காலத்திய கட்டடங்களைப் பற்றித் தெளிவாகத் தெரிவிப்பனவாக இல்லை.

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கங்கைகொண்ட சோழபுரத்தின் பகுதியான உள்கோட்டையில் முதலாம் இராசேந்திர சோழன் எடுப்பித்து, வாழ்ந்த அரண்மனைப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முழுப் பகுதியும் வெளிப்படுத்தப்பட்டால் கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டில் மன்னர்களது அரண்மனை எவ்வடிவில் இருந்தது என்பதை உணர்ந்துகொள்ள உறுதுணையாக இருக்கும்.

**வினாக்கள்**

**1) அகழ்வாய்வின் தேவையைக் குறிப்பிடுக.**

➔ தமிழர்களின் பழமையையும் பெருமையையும் சிறப்பையும் அறிந்துகொள்ள உதவுகின்றன.

**2) பூம்புகாரில் நடைபெற்ற அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டவை யாவை?**

➔ சில ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகாரில் அகழ்வாய் மேற்கொள்ளப்பட்டது.

➔ புத்த விகாரமும் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் முகத்துவாரக் கட்டடமும் கண்டுபிடிக்கப்பட்டது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3) கி.பி.11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டடப் பகுதிகள் கிடைத்துள்ள இடங்கள் யாவை?**

➔ கொற்கை ➔ உறையூர்

**4) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டெடுக்கப்பட்டது யாது?**

➔ தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, கங்கைகொண்ட சோழபுரத்தில் ஆய்வு மேற்கொண்டது.

➔ இவ்வாய்வில், முதலாம் இராசேந்திர சோழன் வாழ்ந்த அரண்மனைப் பகுதி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**5) அகழ்வாய்வின் தேவைகளாக நீவிர் கருதுவனவற்றைக் கூறுக.**

➔ ஒரு நாட்டில் வாழ்ந்த மக்களின் பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை அறிந்துகொள்ள அகழ்வாய்வுகள் உதவுகின்றன.

➔ ஒரு நாட்டின் பழமையான வரலாற்றைத் தெரிந்துகொள்ளவும்,

➔ மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றி அறிந்துகொள்ளவும் அகழ்வாய்வுகள் பயன்படுகின்றன.

## மாதிரி 5

தமிழ்நாட்டில் ஆவானது (பசுவானது) தலைசிறந்து விளங்கியது. மக்கள்நாகரிகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு நிலைகளை உடையது. அவற்றுள் குறிஞ்சியிலேயே தமிழர்க்கு ஆவுடன் தொடர்பு இருந்திருத்தல் வேண்டும். ஏனெனில், ஆவானது குறிஞ்சி நிலத்திற்கே உரிய விலங்காகும்.

குறிஞ்சியை அடுத்த முல்லை நிலத்திலிருந்த ஆயர் ஆட்டையும் மாட்டையும் பெருவாரியாய் வளர்த்து அவற்றின் ஊனையும் பாலையும் உண்டு வாழ்ந்தனர். ஆவை மேய்ப்பவர் ஆயர் எனப் பெயர் பெற்றிருந்தார்.

மாட்டின் ஊனும் பாலும் மட்டுமல்ல. தோல், கொம்பு, வால், சாணம் போன்ற பிறவும் மக்களுக்குப் பயன்பட்டது. வீட்டைத் துப்புரவு செய்யவும் அடுப்பெரிக்கவும் பயிருக்கு உரம் இடவும் சாணம் உதவியது. சிறந்த உணவும் மருந்துமாகிய தயிரும் மோரும் வெண்ணெயும் நெய்யும் பாலில் இருந்து எடுக்கப்படுவன.

**வினாக்கள்**

**1) மக்கள் நாகரிகத்தின் நான்கு நிலைகள் யாவை?**

➔ குறிஞ்சி ➔ முல்லை ➔ மருதம் ➔ நெய்தல்

**2) தமிழர்க்கு ஆவுடனான தொடர்பு எப்பொழுது ஏற்பட்டிருக்க வேண்டும்? ஏன்?**

➔ தமிழர்க்கு ஆவுடனான தொடர்பு குறிஞ்சியிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும்.

➔ ஏனெனில், ஆவானது முதன் முதல் குறிஞ்சி நிலத்திற்கே உரிய விலங்காகும்.

**3) குறிஞ்சிக்கு அடுத்த நிலம் யாது? அங்கு வாழ்ந்த மக்கள் யாவர்?**

➔ குறிஞ்சிக்கு அடுத்து விளங்கிய நிலம் முல்லை நிலம் ஆகும்.

➔ முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் ஆயர் ஆவர். (ஆவை மேய்ப்பவர் ஆயர்)

**4) மாட்டிலிருந்து கிடைக்கும் பொருள்கள் யாவை?**

➔ ஊன் ➔ பால் ➔ தோல் ➔ கொம்பு ➔ வால் ➔ சாணம்

**5) மாட்டிலிருந்து கிடைக்கும் பொருள்களின் பயன்களைக் கூறுக.**

➔ வீட்டைத் துப்புரவு செய்யவும் அடுப்பெரிக்கவும் பயிருக்கு உரமாகவும் சாணம் பயன்படுகிறது.

➔ பாலில் இருந்து எடுக்கப்படும் தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவை சிறந்த உணவாகவும் மருந்தாகவும் உள்ளன.

தமிழ்ப் பொழிச்சுத்தி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# சான்றோர் சித்திரம்

**மகாவித்தவான் மீனாட்சிசுந்தரனார்**



தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பருக்குப் பின்னர், ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்தபின், வாராது வந்துதித்த புலமைக் கதிரவன் எனத் தமிழறிஞர்கள் போற்றிய தென்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார். திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள எண்ணெய்க் கிராமம் என்ற ஊரில் பிறந்த இவர் திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.

மீனாட்சி சுந்தரனார் தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு, வழிபட்டு, செவி திறந்து கற்றார். திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னைத் தாண்டவராயர், திருத் தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோல் பாடம் கற்றார். அவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூல் அவருடைய பெருமையை என்றும் உணர்த்தும். தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர். யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பா அந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ் பெற்றார். மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ் பாடிப் பெருமை அடைந்தார். உ.வே.சாமிநாதர், தியாகராசச் செட்டியார், குலாம் காதிறு நாவலர் போன்றோர் அவருடைய மாணவர்கள். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் அவர்களின் புகழ் தமிழ் உள்ளவரையிலும் வாழும்.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

**1) ஓய்ந்து கிடந்த பின் வாராது வந்து உதித்த புலமைக் கதிரவன் - இத்தொடரில் ஓய்ந்து, வாராது, வந்து, உதித்த ஆகிய சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு தருக.**

- ஓய்ந்து - வினையெச்சம்
- வாராது - எதிர்மறை வினையெச்சம்
- வந்து - உடன்பாட்டு வினையெச்சம்
- உதித்த - பெயரெச்சம்

**2) மேற்கண்ட பத்தியில் இடம் பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.**

**மேற்கண்ட பத்தியில் இடம் பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்கள்**

- புலமைக் கதிரவன் - உருவகத் தொடர்
- தேனுண்ணும் வண்டு போல் - உவமைத்தொடர்

**3) மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் - விடைக்கேற்ற வினாவை அமைக்க.**

- தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் யார்?

**4) பத்தியில் மொழிமுதல் எழுத்துக்களைக் கொண்டு அமைந்து சொற்களுள் எவையெவை வட சொற்கள் என்று காட்டுக.**

- சித்திரம் - ஓவியம்
- உதித்த - தோன்றிய
- புராணம் - பழங்கதை
- மகா - உயர்ந்த
- வித்துவான் - புலவன்
- கிராமம் - சிற்றூர்
- தலம் - இடம்
- திரிசிரபுரம் - முத்தலையூர்



மனிதனின் மன உறுதி மலைகளையும் தகர்த்தெறியும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- மீனாட்சி சுந்தரனார் - அங்கயற்கண்ணி அழகனார்
- சுப்பிரமணியார் - வைரமணியார்
- திரிபு - மாற்றம்
- யமக அந்தாதி - மடக்குச் சொற்றொடர் நிலை
- தியாகராசர் - ஈகையரசன்
- செட்டியார் - வணிகன்
- அந்தாதி - இறுதித் தொடக்கம் (சொற்றொடர் நிலை)

**5) விளங்கினார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

- சொல் - விளங்கினார்

| பகுதி | விகாரம் | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|
| விளங்கு | - | - | இன்<br>இறந்தகால இடைநிலை | - | ஆர்<br>ஆண்பால் வினைமுற்றுவிகுதி |

**ஆபிரகாம் பண்டிதர்**



'தமிழிசை இயக்கத்தின் தந்தை' என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகேயுள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெருவிருப்பம் கொண்டு, நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும் போதே சித்த மருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார்.

சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதைவிடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார். தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் 'பண்டிதர்' என அழைக்கத் தொடங்கினார். பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று 'சங்கீத வித்தியா மகாஜன சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கி, தமது சொந்தச் செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத் தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சகரம்' எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

**1) உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.**

- இயக்கத்தின், புகைப்படக்கலை, அச்சுக்கலை, சித்த மருத்துவம், பெருவிருப்பம், கிடைக்கும், திண்டுக்கல்லில், அழைக்கப்பட்டார், செலுத்தினார், மக்கள், வித்தியா, அமைப்பை, உருவாக்கி, நடத்தினார், இசைத்தமிழ், எழுபத்தோராண்டுகள், தமிழுக்கு

**2) வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.**

- கருணாமிர்த சாகரம்

**3) உடனிலை மெய்ம்மயக்கமாகவும், வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ள சொற்களை எழுதி, மெய்களை அடிக்கோடிடுக.**

**உடனிலை மெய்ம்மயக்கம் :**

- ➔ போற்றப்படும் ➔ அருகேயுள்ள ➔ என்னும் ➔ சிற்றூர்
- ➔ பணியாற்றும் ➔ கற்று ➔ உரையாற்றினார்

**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

- ➔ தந்தை ➔ பண்டிதர் ➔ சாம்பவர் ➔ பிறந்தவர்
- ➔ நுட்பங்களை ➔ பயின்றார் ➔ அன்புடன் ➔ பண்டுவர்
- ➔ ஆண்டுகள் ➔ பண்டிதர் ➔ தொடங்கினார் ➔ ஆழ்ந்து ➔ சங்கீத
- ➔ சங்கம் ➔ நடந்த ➔ சென்று ➔ தொண்டு ➔ செய்தவர்

**4) கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.**

அ) சங்கீதம் - இசை ஆ) வித்தியா - அறிவு

இ) மகாஜனம் - அதிகாரம் பெற்றவர் ஈ) சாகரம் - கடல்

**5) இலக்கணக் குறிப்பும் பகுபத உறுப்பிலக்கணமும் தருக.**

- ➔ பயின்றார் - பலர்பால் வினைமுற்று விகுதி
- ➔ தொடங்கினர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**6) பகுபத உறுப்பிலக்கணம்.**

| பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|
| பயில் | - | ல் (ன்) ஆனது பகுதி விகாரம் | ற் இறந்தகால இடைநிலை | - | ஆர் பலர்பால் வினைமுற்று விகுதி |
| தொடங்கு | - | - | இன் இறந்தகால இடைநிலை | - | ஆர் பலர்பால் வினைமுற்று விகுதி |

**சி.வை. தாமோதரனார்**



தமிழ்ப் பதிப்புலகத்தின் தலைமகன் என்று போற்றப்படும் சி.வை.தாமோதரனார் இலங்கை, யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டுக்கு வருகைபுரிந்து தம் இருபதாவது வயதிலேயே நீதிநெறி விளக்கம் என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தார். 1868ஆம் ஆண்டு தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு சேனாவரையர் உரையையும் பின்னரக் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்துப் புகழ் கொண்டார். அத்துடன் நில்லாது கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். ஆறாம் வாசகப் புத்தகம் முதலிய பள்ளிப்பாட நூல்களையும் எழுதினார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அவருடைய தமிழ்ப்பணியைக் கண்ட பொர்சிவல் பாதிரியார், அவரைத் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்ற இதழுக்கு ஆசிரியராக்கினார். அவ்வமயம் அவர் ஆங்கிலேயர் பலருக்கும் தமிழ் கற்றுத் தந்தார். அரசாங்கத்தாரால் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். பிறகு பி.எல். தேர்விலும் தேர்ச்சி பெற்று கும்பகோணத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி, 1884ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தாமோதரனார் எந்தப் பணி ஆற்றினாலும் தமது சொந்தப் பணியாகக் கருதி கடமையாற்றினார்.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

**1) மாநிலக்கல்லூரி - புணர்ச்சி விதி கூறுக.**

➔ விடை : மாநிலக்கல்லூரி - மாநிலம் + கல்லூரி

➔ "மவ்வீறு ஒற்றழிந்து உயிர்ஈறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரியவும் ஆகும்" (நன்னூல்)

**விளக்கம்**

➔ நிலைமொழியின் மகர ஈறு (ம்) கெட்டது.

➔ வருமொழி முதலில் உள்ள வல்லின எழுத்து (க்) மிக்குப் புணர்ந்தது.

**2) ஆசிரியராக்கினார் -** இதன் பகுதி

அ) ஆசு ஆ) ஆசிரி இ) ஆசிரியராக்கு ஈ) ஆசி

**விடை** - அ) ஆசு

**3) சிறு சிறு தொடர்களாக மாற்றி எழுதுக.**

➔ தாமோதரனார் நீதிநெறி விளக்கம் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்.

➔ கலித்தொகை, வீரசோழியம் உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்தார்.

➔ கட்டளை கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

**4) பெரும்புகழ் - இலக்கணக் குறிப்பு தருக.**

➔ பெரும்புகழ் - பண்புத்தொகை (பெருமையாகிய புகழ்)

**5) கல்லூரி, உயர்நீதிமன்றம், வரலாறு, பணி ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

| | | |
|---|---|---|
| ➔ கல்லூரி | - | COLLAGE |
| ➔ உயர்நீதிமன்றம் | - | HIGH COURT |
| ➔ வரலாறு | - | HISTORY |
| ➔ பணி | - | JOB |

# தோஸ்த் தமிழ் உரை + 1

**ஜி.யு. போப்**



செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் ஜி.யு. போப், 1839ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ் மொழியைப் பயிலத் தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார். அப்போதுதான் தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். ஐரோப்பியர், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்குரிய நூல் ஒன்றை (Tamil Hand Book) எழுதினார். ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார். பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார். எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கு நலம் அருளிய பெரியார் ஜி.யு. போப் ஆவார்.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

**1) இலக்கணக் குறிப்பு தருக. அ) பிறந்தார் ஆ) அருளிய**

➔ பிறந்தார் - பலர்பால் வினைமுற்று ➔ அருளிய - பெயரெச்சம்

**2) திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு. போப் - விடைக்கேற்ற வினாவை எழுதுக.**

➔ திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?

➔ ஜி.யு. போப் திருக்குறளை மொழிப்பெயர்த்ததற்கான காரணம் யாது?

**3) பதிப்பித்தார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

➔ பதிப்பித்தார் - பதிப்பி + த் + த் + ஆர்

| பகுதி | விகாரம் | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|
| பதிப்பி | - | த் | த்<br>இறந்தகால இடைநிலை | - | ஆர்<br>பலர்பால் வினைமுற்று விகுதி |

**4) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

➔ பள்ளிகூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்து துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

★ பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**5) பொருத்துக.**

| | |
|---|---|
| அ) தொல்காப்பியம் | - சங்க நூல் |
| ஆ) திருக்குறள் | - பக்தி நூல் |
| இ) புறநானூறு | - அற நூல் |
| ஈ) திருவாசகம் | - இலக்கண நூல் |

**விடை:**

| | |
|---|---|
| அ) தொல்காப்பியம் | - இலக்கண நூல் |
| ஆ) திருக்குறள் | - அற நூல் |
| இ) புறநானூறு | - சங்க நூல் |
| ஈ) திருவாசகம் | - பக்தி நூல் |

**இரசிக மணி டி.கே. சிதம்பரநாதர் (1882 - 1954)**



தமிழில் எல்லாம் உண்டு; தமிழின் கவிச் சுவைக்கு ஈடுமில்லை இணையுமில்லை; தமிழால் அறிவியல் மட்டுமன்று; அனைத்து இயல்களையும் கற்க முடியும் எனச் சான்றுகளுடன் எடுத்துச் சொன்ன பெருந்தகை இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர். இவர், தமது இலக்கிய இரசிகத் தன்மையால் தமிழுக்கும் தமிழருக்கும் புத்துணர்வு ஊட்டியவர். டி.கே.சி.யின் வீட்டுக் கூடத்தில் வட்டவடிமான தொட்டிக் கட்டி, ஞாயிறுதோறும் மாலை ஐந்து மணிக்குக் கூடிய கூட்டம் இலக்கியத்தைப் பற்றிப்பேசியது. அவ்வமைப்பு ‘வட்டதொட்டி’ என்றே பெயர் பெற்றது. டி.கே.சி. இலக்கியங்களின் நயங்களைச் சொல்லச் சொல்லக் கூட்டத்திலுள்ள அனைவரும் தங்களை மறந்து இலக்கியத்தில் திளைப்பர். தமிழின் இனிமை என்பது மட்டும் அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும். வழக்கறிஞராகத் தொழில்புரிவதை விடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார். தமிழ்க்கலைகள், தமிழ் இசை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் சுவையையும் மேன்மையையும் தனித்தன்மையையும் எடுத்துச் சொன்னார். கடிதங்களிலும் அவற்றையே வியந்து எழுதினார். அவர்தம் கடிதங்கள் இலக்கியத் தரம் கொண்டு புதிய இலக்கிய வகையாகவே கருதப்பட்டன. இதய ஒலி, கம்பர் யார்? முதலான நூல்களும் முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் ஆகியவற்றுக்கு எழுதிய உரையும் அவர்தம் இலக்கிய நுகர்வுக்கடலின் சில அலைகள் எனலாம். சென்னை மாநில மேலவையின் உறுப்பினராகவும் அறநிலையத் துறையின் ஆணையராகவும் திகழ்ந்த டி.கே.சி. ஏற்றிய இலக்கிய ஒளி தமிழ் அழகியலை வெளிச்சப்படுத்தியது.

**வினாக்களுக்கு விடையளிக்க :**

**1) அன்று, அல்ல என்பவற்றுக்கான பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

**அன்று:-**

➔ அன்று என்பது அஃறிணை ஒருமையில் பயன்படுத்தப்படும்.

➔ இது மரம் அன்று, அது பாம்பு அன்று

**அல்ல:-**

➔ அல்ல என்பது அஃறிணை பன்மையில் பயன்படுத்தப்படும்.

➔ அவை பறவைகள் அல்ல, இவை நல்ல பழங்கள் அல்ல.

**2) சொல்லச் சொல்ல, திளைப்பர் - இலக்கணக் குறிப்பு தருக.**

➔ சொல்லச் சொல்ல - அடுக்குத்தொடர்

➔ திளைப்பர் - வினையாலணையும் பெயர்

**3) ரசிகர் - தமிழ்ச்சொல் எழுதுக. மாநில மேலவை - ஆங்கிலக் கலைச்சொல் தருக.**

➔ ரசிகர் - சுவைஞர் ➔ மாநில மேலவை - Legislative Council

**4) வழக்கறிஞராகத் தொழில்புரிவதை விடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார் - விடைக்கேற்ற வினா அமைக்க.**

➔ டி.கே.சி. எதனை விரும்பினார்?

**5) மேலவை, புத்துணர்வு - இச்சொற்களின் புணர்ச்சி வகையைக் கண்டறிக.**

**மேலவை = மேல் + அவை**

➔ விதி 1 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே மேல்+அவை (ல்+அ) = மேலவை

**புத்துணர்வு = புதுமை + உணர்வு**

➔ பண்புப் பெயர் புணர்ச்சி

➔ விதி 1 - ஈறுபோதல் புது + உணர்வு

➔ விதி 2 - தன்னொற்று இரட்டல் புத்து + உணர்வு

➔ விதி 3 - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் புத்த் + உணர்வு

➔ விதி 4 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே புத்துணர்வு

**சங்கரதாசு சுவாமிகள்**



நாடகத்தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்த சங்கரதாசு சுவாமிகள், நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முதல்வராகவும் விளங்கினார். பெரும்புலவர்கள், சுவாமிகளின் பாடல் திறத்தையும் உரையாடல் தரத்தையும் உணர்ந்து நெஞ்சாரப் பாராட்டியுள்ளனர். இளமையில் புலவரேறு பழநி தண்ட பாணி சுவாமிகளைத் தேடிச் சென்று, தமிழறிவைப் பெற்ற இவர் தம்முடைய 16 ஆவது வயதிலேயே கவியாற்றல் பெற்று, வெண்பா, கலித்துறை இசைப்பாடல்களை இயற்றத் தொடங்கிவிட்டார். இரணியன், இராவணன், எமதருமன் ஆகிய வேடங்களில் நடித்துப் புகழடைந்தபோது அவருடைய வயது 24. வண்ணம், சந்தம் பாடுவதில் வல்லவராய் இருந்த சுவாமிகளின் 'சந்தக்குழிப்புகளின்' சொற்சிலம்பங்களைக் கண்டு அக்காலத்தில் மக்கள் வியப்புற்றனர்.

சங்கரதாஸ் சுவாமிகள் 'சமரச சன்மார்க்க சபை' என்னும் நாடகக் குழுவை உருவாக்கினார். இந்தக் குழுவில் பயிற்சி பெற்ற எஸ்.ஜி.கிட்டப்பா நாடகக் கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார். நாடக மேடை, நாகரிகம் குன்றிய நிலையில், மதுரை வந்த சுவாமிகள், 1918இல் 'தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை' என்னும் நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார். இங்கு உருவானவர்களே டி.கே.எஸ். சகோதரர்கள். நாடகத்தின் மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் தம் சுவைமிகுந்த பாடல், உரையாடல் வழியே உணர்த்திய சங்கரதாசு சுவாமிகளை நாடகத் துறைக் கலைஞர்கள் 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**வினாக்களுக்கு விடையளிக்க :**

**1) தமிழ்ச் சொல்லாக்குக:-**

- ➔ சன்மார்க்கம் - நன்னெறி ➔ வித்துவ பால சபை - கலை இளைஞர் மன்றம்

**2) நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள் - அடிக்கோடிட்ட வினையாலணையும் பெயரை வினைமுற்றாக்கித் தொடரை எழுதுக.**

- ➔ சங்கரதாசு சுவாமிகள் நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய் திகழ்ந்தார்.

**3) ஈட்டினார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

- ➔ ஈட்டினார் - ஈட்டு + இன் + ஆர்

| பகுதி | விகாரம் | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|
| ஈட்டு | - | த் | இன்<br>இறந்தகால இடைநிலை | - | ஆர்<br>பலர்பால் வினைமுற்று விகுதி |

**4) தன்னன்ன தானேன தன்னானே - இந்தச் சந்தத்தில் பொருள் பொதிந்த இரண்டு அடிகள் கொண்ட பாடல் எழுதுக.**

**தன்னன்ன தானேன தன்னானே!**
**தனத் தன்னன்ன தானேன தன்னானே!**

**தாய்மண்ணில் தோன்றிய தமிழர்களே!**
**நம் தமிழ்மொழி வளர்க்க வாரீரே!**

**வாய்மணம் வீசும் நம்தமிழை!**
**நாளும் வாழ்த்தி பாடிட வாரீரே!**

**தன்னன்ன தானேன தன்னானே!**
**தனத் தன்னன்ன தானேன தன்னானே!**

**5) தமிழ் நாடகத் தலைமையாசிரியர் - சிறப்புப் பெயருக்கான காரணத்தை அளிக்க.**

- ➔ சங்கரதாசு சுவாமிகள், நாடகத்தின் மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் உணர்த்தியவர்.
- ➔ எனவே, சங்கரதாசு சுவாமிகளை நாடகத்துறைக் கலைஞர்கள் 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' என்ற சிறப்புப் பெயரில் போற்றுகின்றனர்.

www.Padasalai.Net





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தோஸ்த் தமிழ் உரை +1

**மயிலை சீனி. வேங்கடசாமி**



தமிழ் மொழியில் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த செய்திகள், அளவுகடந்து உள்ளன. அவற்றை வெளிக் கொணர்ந்து, வீரிய உணர்வுடன் வெளியிட்டவர் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஆவார். அவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் புதிய புதிய செய்திகளைப் புலப்படுத்திய விந்தைப் படைப்புகள். இராமேசுவரத் தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்துபோன மருங்காப்பட்டினம் போன்ற தனி தன்மைகொண்ட அவர்தம் கட்டுரைகள் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சின. கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் போன்ற நூல்கள் அவர் நமக்கு வழங்கியுள்ள வரலாற்றுச் செல்வங்கள். அவருடைய 'களப்பிரர் காலத் தமிழகம்' என்னும் ஆய்வு நூல், இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட் களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி, வரலாற்றுத் தடத்தைச் செப்பனிட்டது.

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர் தன்னுணர்வால், உறுதியான உழைப்பால், தமிழ்ப்பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்றாசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்பு கொண்டவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980ஆம் ஆண்டு, 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்துவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்து போன தமிழ்நூல்கள் போன்ற பல நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை சீனி. வேங்கடசாமி அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

**வினாக்களுக்கு விடையளிக்க :**

**1) மறந்ததும் மறைந்ததும் - இதுபோன்ற இரண்டு தொடர்களை உருவாக்குக.**

➔ படித்ததும் படைத்ததும் ➔ விதித்ததும் விதைத்ததும்

➔ கரந்ததும் கரைந்ததும்

**2) அழிந்த வரலாறு, புதிய வெளிச்சம் - அடிக்கோடிட்ட சொற்களின் எச்ச வகைகளை எழுதுக.**

➔ அழிந்த வரலாறு - பெயரெச்சம் ➔ புதிய வெளிச்சம் - குறிப்பு பெயரெச்சம்

**3) அழியாச் சிறப்பிடம் - இலக்கணக்குறிப்புத் தருக.**

➔ அழியாச் சிறப்பிடம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**4) முதலிய, முதலான - பொருளறிந்து சொற்றொடர் அமைக்க.**

➔ மா, பலா, வாழை முதலிய முக்கனிகள் ஆகும்.

➔ தோட்டத்தில் தென்னை முதலான மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

**5) பத்தியில் உள்ள உயர்வு சிறப்பு உம்மையைக் கண்டு எழுதுக.**

➔ பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தோஸ்த் தமிழ் உரை + 1

**திரு.வி. கலியாணசுந்தரனார்**



'பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள்; நமது நாட்டை நோக்குங்கள்; நமது நாடு நாடாயிருக்கிறதா? தாய்முகம் நோக்குங்கள்; அவள் முகத்தில் அழகு காணோம். அவள் இதயம் துடிக்கிறது. சாதி வேற்றுமை, தீண்டாமை, பெண்ணடிமை, உட்பகை முதலிய நோய்கள் அவளை அரிக்கின்றன; எரிக்கின்றன; இந்நோய்களால் குருதியோட்டங்குன்றிச் சவலையுற்றுக் கிடக்கிறாள். இள ஞாயிற்றொளி நோக்கி நிற்கிறாள். இள ஞாயிறுகளே! உங்கள் தொண்டெனும் ஒளியே அவள் நோய்க்குரிய மருந்து. அவ்வொளி வீசி எழுங்கள்; எழுங்கள்' என்னும் இளமைவிருந்து நூலில் தமிழினைக் கட்டுக்குள் அடக்காமல் செழுமையுறச் செய்ய இளைஞர்களை அழைத்தவர் திரு.வி.க.

திரு.வி.க தம் தந்தையிடம் தொடக்கத்தில் கல்வி பயின்றார். வெஸ்லி பள்ளியில் படித்தபோது, நா. கதிரைவேல் என்பவரிடம் தமிழ்ப்படித்தார். பிறகு மயிலை தணிகாசலம் என்பவரிடம் தமிழோடு சைவ நூல்களையும் பயின்றார். தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படும் திரு.வி.க. பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், என் கடன் பணி செய்து கிடப்பதே, சைவத்திறவு, இந்தியாவும் விடுதலையும், பொதுமை வேட்டல், திருக்குறள் விரிவுரை முதலிய நூல்களை எழுதினார். சிறந்த மேடைப்பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கிய இவர் தேசபக்தன், நவசக்தி இதழ்களுக்கு ஆசிரியராக விளங்கினார். தமிழ்க் கவிஞர்களில் அரசியல் இயக்கங்களில் அதிகமான ஈடுபாடு கொண்டிருந்தார். தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சென்னை இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தார். இலக்கியப் பயிற்சியும் இசைப்பயிற்சியும் பெற்றவர்.

**வினாக்களுக்கு விடையளிக்க :**

**1) பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள் - ஒரே தொடராக மாற்றுக.**

➔ பொறுமை பூண்டு, அதன் ஆற்றலை உணர்ந்து உலகை நோக்குங்கள்.

**2) எவையேனும் இரண்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுச் சொற்களைப் பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.**

➔ பூணுங்கள் ➔ நோக்குங்கள் ➔ உணருங்கள்

**3) தமிழ்த்தென்றல் என்று திரு.வி.க அழைக்கப்படுகிறார் - இத்தொடரை செய்வினைத் தொடராக மாற்றுக.**

➔ திரு.வி.க தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படுகிறார்.

**4) ஞாயிற்றொளி - புணர்ச்சி விதி கூறுக.**

**ஞாயிற்றொளி = ஞாயிறு + ஒளி**

| | |
|---|---|
| ➔ 'நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் டறஒற்று இரட்டும்' | ஞாயிற்று + ஒளி |
| ➔ 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' | ஞாயிற் + ஒளி |
| ➔ 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' | ஞாயிற்றொளி |

**5) எண்ணும்மைத் தொடர்கள் இரண்டனை எடுத்து எழுதுக.**

➔ திரு.வி.க சிறந்த மேடைப்பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கியவர்.

➔ தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# எண்ணங்களை எழுத்தாக்குக



- இப்படம் நமக்கு உணர்த்துவது காடுகளை அழித்து காற்றைத் தேடுகிறோம் என்பதாகும்.
- மரங்கள் நமக்குப் பல பயன்களைத் தருகிறது.
- மரங்கள் இல்லையேல் காற்று இல்லை.
- மரங்கள் மண் அரிப்பைத் தடுத்து நிறுத்துகிறது.
- நம் மூச்சுக்காற்றிலிருந்து வெளியேறும் கரியமில வாயுவை எடுத்துக்கொண்டு பிராண வாயுவைத் தருகிறது.
- மழைப் பொழிவிற்கு முக்கிய காரணியாய் உள்ளது. நிழல் தருகிறது.
- உயிரினங்களுக்கு உணவளிக்கிறது.
- மரத்தை வெட்டுவதற்குத் தெரிந்த நமக்கு மரம் நடுவதற்குத் தெரிய வேண்டாமா?
- ஒரு மரத்தை வெட்டினால் நான்கு மரக்கன்றுகளை நட வேண்டும்.
- படத்தில் உள்ள மரம் நம்மைச்சுற்றியுள்ள அனைவரையும் அழித்து விட்டார்கள்.
- நம்மை எப்போது வெட்டப் போகிறார்களோ என்ற அச்சத்துடன் நிற்பதாக அமைக்கப்பட்டுள்ளது.
- மரங்கள் வெட்டுவதைத் தவிர்ப்போம். இயற்கையைப் பாதுகாப்போம்.



வேலை இல்லை என்பது மூடத்தனம்
நம் விரல்கள் பத்தும் மூலதனம்
தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்து வரும் காலம்.
நாம் தோய்வின்றி உழைத்திடுவோம் நாளும்.
கற்ற கல்விக்கே வேலை தேடுவது வேதனை தரும்.
ஒவ்வொரு துறையும் சூரியனின் கதிர்கள் போல் வாய்ப்பு தரும்.
தொழில்கள் பல விரிந்து வரும்.
வீட்டில் இருந்தால் தொல்லை வரும்.
ஆசிரியர் கையில் மாணவர்களின் எதிர்காலம்.
அதை அறிந்தால் நமக்கு நற்காலம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com





ஏ மனிதா!

நீ நெருங்கி விடக்கூடாது என்பதற்காகத் தான்

இத்தனை உயரத்தில் என் கூட்டை அமைத்தேன்.

நீ நெருங்கி விட்டாய்!

உன் திறமையை நான் பாராட்டுகிறேன்.

ஆனால், என் சின்னச்சிறு சிறகுகளை அசைத்து,

சிறுபொழுதும் ஓய்வு இன்றி, சுறுசுறுப்பாக இயங்கி,

ஆயிரமாயிரம் மலர்களிலே அமர்ந்து, பல இன்னல்களுக்கு

ஆட்பட்டு, இந்த கூட்டைக் கட்டினேனே

என் உழைப்பைப் பாராட்ட இங்கு யார் உளரோ?

வைகறைப் பொழுதிலே,

உயிர்களை எழுப்பும் பகலவன் தோன்றுகிறான்.

ஆற்றில் நீராட வந்த சிறுவன்,

மீன் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

அவன் முகத்தில்தான் எத்துணை மகிழ்ச்சி!

ஆனால், தாயை இழந்த குஞ்சுகளின் நிலை

குஞ்சுகளை இழந்த தாயின் நிலை - அதை

எண்ணிப் பார்க்க இங்கு யார் உளரோ?

பிடித்த மீனை விட்டுவிட்டால்

மீன்களும் மகிழ்ச்சி அடையுமே!





அன்பு நிறைந்த நண்பா

அங்குமிங்கும் நீ ஓடுவாய்

பண்பு நிறைந்த உலகில்

பாசம் நீ காட்டுவாய்

வம்பு தும்பு செய்துவிட்டு

வாலை நீ ஆட்டிடுவாய்

நம்பி உன்னைப் போற்றினால்

நன்றி மிகக் காட்டிடுவாய்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.**




பொருள் இலக்கணம் இரு வகைப்படும். அவை: அகப்பொருள், புறப்பொருள். அகப்பொருள் இலக்கணம் மூன்று வகைப்படும். அவை: முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள். நிலமும் பொழுதும் முதற்பொருள் ஆகும். பொழுது, சிறுபொழுது, பெரும்பொழுது என இரு வகைப்படும்.

## சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்




- "ஒரு நியாமான தேர்வுக்கு எல்லோரும் ஒரே விதமான
- சோதனையை எதிர்கொள்ள வேண்டும். தயவு செய்து எல்லோரும் அந்த மரத்தின் மீது ஏறுங்கள்" என்றார் இவர்களை நேர்க்காணலுக்கு அழைத்தவர்.

**ஒவ்வொருவரின் தனித்திறமைகள்**

- நாய் பொறுப்பாக வீட்டைக் பாதுகாக்கும். நன்றியுடன் மனிதரைப் பார்க்கும்.
- நீர் நாய் மிகவும் சுறுசுறுப்புடன் விளையாடும் தன்மையைக் கொண்டவை. மனிதர்களைக் கண்டால் கூச்ச சுபாவத்துடன் ஓடி ஒளிந்து விளையாட்டு காட்டும்.
- மீன் நீரில் நிமிடத்திற்கு நூறுமீட்டர் தூரம் நீந்தும். மனிதன் எறியும் கழிவுகள் மீன்கள் உண்டு கடலை தூய்மைப் படுத்தும்.
- யானை தன் வலிமையால் பல கிலோ எடைகளைத் தூக்கி உதவிடும்.
- பென்குயின் தண்ணிரீல் விளையாடும். குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டும்.
- குரங்கு மரத்தில் வேகமாக ஏறும் மரத்திற்கு மரம் தாவும்.
- பறவை மரத்திற்கு மரம் பறந்து இரை தேடி வாழும்.

**என் கருத்து**

- உண்மையில் இஃது ஓர் தேர்வா? உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறமைகள் உள்ளன.
- அதைத் தேர்வாளர்கள் கண்டறிந்து வெளிக்கொணரும் தேர்வுகளை நடத்த வேண்டும்.
- அப்போதுதான் வீடும் நாடும் முன்னேறும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



கருவிலிருந்து வந்த முட்டைகளின் முதுகில்

கணக்கிலடங்காக் காகித மூட்டைகள்

தெருவில் நடந்து வரும் பிஞ்சுகளின் பின்னால்

தேவையில்லா புத்தகக் கத்தைகள்

பறந்துதிரிய வேண்டிய பட்டாம் பூச்சிகளுக்கு

பள்ளி சிறை அளிக்கும் பரிசுகள்.

மறந்தும் இருந்து விடாதீர்கள் மானிடர்களே!

பிள்ளைகள் வீட்டின் தெய்வங்கள்





ஓடிஓடி
இரைதேடும்
பறவைகள்
ஓடும் நேரத்திலேயே
விதை விதைக்கும்
விவசாயிகள்
கூடிகூடி விளையாடும்
கூட்டுக்குடும்பத்தின்
குறும்பர்கள்
கூடாத எண்ணமுள்ள
மனிதக் குருடர்களின்
வழிகாட்டிகள்
ஐந்தறிவு மட்டுமே
உனக்கென்று
ஆறறிவென்பவை
பிதற்றுகின்றன.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தோஸ்த் தமிழ் உரை + 1



ஆங்கிலேயர் செய்த அடிமை வாழ்க்கை
அறிவியல் வளர்ச்சியிலும் தொடர்கின்றது - இனி
முறையாக நாட்டில் இறங்காமல் முடியாதலால்
முகநூலாக அவர்களின் அடிமை தொடர்கின்றது - நாளும்
பல்தேய்ப்பதை மறந்தாலும் மறப்பான் மனிதன்
செல்தேய்ப்பதை காலைமுதல் மறவான் . என்றும்
கையில் பையில் கட்டிலில் கழிவறையில்
தொட்டில் குழந்தைமுதல் தொடரும் தொல்லை
முன்பு கையில் தவழ்ந்து வந்த மழலை .
முதுகிலெறிய அழுக்காய் விடுவதாக இல்லை.



- ➔ கைப்பேசி மனிதனின் கட்டுப்பாட்டில் இயங்கியது.
- ➔ ஆனால், இன்று அந்நிலை மாறிவிட்டது.
- ➔ கைப்பேசி மனிதனைக் கட்டுப்படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.
- ➔ மனிதனின் பெரும்பாலான நேரத்தைத் திருடிவிட்டது.

- ➔ முகம் பார்த்து பழகிய நிலை மாறி, முகநூலில் பார்க்கும் நிலை வந்துவிட்டது.
- ➔ உறவுகளோடு கூடி சிரித்த நிலை மாறி, தனிமையில் சிரிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.
- ➔ மாற்றம் தேவைதான் அது மனிதனை முன்னேற்ற வேண்டுமே தவிர அடிமைப்படுத்தக் கூடாது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# படைப்பாற்றல்

## சித்திரகவி

### மாலைமாற்று

➔ மாலைமாற்று என்பது, ஒரு செய்யுளைத் தொடக்கத்திலிருந்து படித்தாலும், இறுதியிலிருந்து படித்தாலும் செய்யுள் மாறாமல் அமைவது ஆகும்.

➔ மாலையை எப்பக்கம் திரும்பினும் அது ஒரேதன்மைத்தாய் இருத்தல் போல, இச்செய்யுட்களும் எவ்வாறு மாற்றி வாசிப்பினும் ஒரே தன்மைத்தாய்இருத்தலின் மாலைமாற்று எனப்பட்டது.



**"நீவாத மாதவா தாமோக ராகமோ
தாவாத மாதவா நீ"**

இ - ள்: **நீவாத** - நீங்காத, **மா தவா** -பெரிய தவத்தையுடையாய்!, **தா மோக ராகமோ தாவாது** - மிக்க மயக்க வேட்கை கெடாது, (ஆதலால்) **அ மாது** -அழகிய மாதினுடைய, **அவா** - ஆசையை, **நீ**- நீக்குவாயாக.

**"வாயாயா நீகாவா யாதாமா தாமாதா
யாவாகா நீயாயா வா"**

இ - ள்: **வாயா யா** - எங்கட்குக் கிடையாதனயாவை?, **நீ காவாய்** - நீ அருள் புரிவாயாக, **யாது ஆம்** -என்னாம்?, **மாது ஆம்** - மாதாகிய இவள், **மா தா** - மிக்கவருத்தமாவள், **யா நீ ஆகா** - யாவை நினக்கு ஆகாதன?, **ஆயா வா** - ஆயனே நீ வருவாயாக.

**"பூவாளை நாறுநீ பூமேக லோகமே
பூநீறு நாளைவா பூ"**

இ - ள்: **பூவாளை** - இயல்பாய்ப்பூப்பில்லாதவளைக் கலந்து, **நாறும் நீ** - புலால் கமழும் நீ, **பூ மேகம் லோகம் ஏ** - எமக்குப் பூமழையும் பொன்மழையும் பொழியும் மேகமோ?, **பூ நீறு நாளை வா** - பூவும் திருநீறும் புனைந்து நாளைவா, **பூ** - இவள் இப்பொழுது பூப்பினளாய் இருக்கின்றாள்.

பூப்புனைதல் புலால் நாற்றம் நீங்க. திருநீறுபுனைதல் குற்றம் நீங்க.

### தேர்க்கவி

➔ சித்திரகவி வகைகளுள் ஒன்று தேர்க்கவி.

➔ தேர் வடிவத்தினுள் சொற்களை அமைத்துப் பாடுவது



**இருள்பொருதா வம்பலச்சித் தென்னுமுரு காநீ
டிருவிண்ணோர் தேடுமருந் தேமாண் - பொருவாச்சீர்
தேசுதருஞ் செந்திநறுந் தீர்த்தவிற லோங்குசிதா
வாசிறந்த மாவின் பருள்.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## படித்துப் பார்த்துப் படைக்க

பத்தாவது தடவையாக
விழுந்தவனுக்கு
முத்தமிட்டுச் சொன்னது பூமி
ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ

**ஈரோடு தமிழன்பன்**

எப்போதும் மத்தாப்பு
கொளுத்தி விளையாடுகிறது
மலையருவி

**கழனியூரன்**

★ பூ பூக்கப் பூக்க
வாடியது
பூக்காரியின் முகம்

★ வீட்டுக்குப் பெயர் அன்னை இல்லம்
அன்னை வாழ்வதோ
அனாதை இல்லம்

★ ஞாயிறுக்கும் உண்டு
ஞாயிற்றுக்கிழமை
நான் கண்டதில்லை
பெண்ணுக்கு!

## வரைபடம் கொண்டு விவரிக்க

நீங்கள் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். வழி தெரியாத ஒருவர், உங்களிடம் வந்து நகலத்திற்கு வழி கேட்கிறார். கீழ்க்காணும் வரைபடத்தைக் கொண்டு, அப்புதியவருக்கு வழிகாட்டுங்கள் .....



★ நீங்கள் பவணந்தி தெருவில் இடதுபுறமாகச் செல்லுங்கள்.

★ தெருவின் முடிவில் மேலைத் தேர்த் தெரு வரும். அங்கு இடதுபுறம் திரும்புங்கள்

★ அந்த தெருவில் சிறிது தூரம் சென்றால், அறம் வளர்த்த மாடத் தெரு பிரியும், அதில் நேராகச் செல்லுங்கள்.

★ நீங்கள் நேராகச் சென்றால், அறம் வளர்த்த மாடத் தெருவும் கீழைத் தேர்த் தெருவும் சந்திக்கும் இடத்தில் நகலகம் உள்ளது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## சொல்லெடுத்துத் தொடர் அமைக்க

**கீழுள்ள கட்டத்தினுள் நுழைந்து சொற்களை எடுத்தும் தேவையான சொற்களைச் சேர்த்தும் தொடரமைக்க. (அடைபட்ட பகுதியில் உள்ள சொற்களைத் தவிர்க்கவும்)**

(எ.கா.) மாணவர்கள் வகுப்பறையினுள் நுண்கலைகளையும் கற்க வேண்டும்.

★ மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்குத் தாமதமாக வருதல் கூடாது.

★ மாணவர்கள் தவறு செய்தால் மன்னிப்பு கேட்க வேண்டும்.

★ மாணவர்கள் நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும்.

★ மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணிக்கக் கூடாது.

★ மாணவர்கள் நற்சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

★ மாணவர்கள் கரும்பலகையைச் சேதப்படுத்தக் கூடாது.

★ பள்ளிப் படிப்போடு நுண்கலைகளையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

★ தினமும் விளையாடுவதனால், உடல் உறுதியடையும்.

★ மாணவர்கள் பட்டினியாக இருக்கக் கூடாது.

★ காமராசர் மதிய உணவு திட்டத்தைக் கொண்டு வந்தார்.

★ மாணவர்கள் தினமும் இறைவனை வழிபாடு செய்ய வேண்டும்.

★ மாணவர்கள் ஒழுக்கமின்றி நடக்கும்போது தண்டிக்கப்படுவார்கள்.

## கீழ்க்காண் விளம்பரத்தைப் பத்தியாக மாற்றி அமைக்க



**இயற்கை உணவுத் திருவிழா**

'உடல் வளர்த்தேன்! உயிர் வளர்த்தேன்!' என்ற திருமூலர் வாக்கினை மெய்ப்பிக்கும் இயற்கை உணவுத் திருவிழா. சென்னையில் உள்ள தீவுத்திடலில் தை மாதம் 5ஆம் தேதி முதல் 11ம் தேதி வரை நடைபெறவிருக்கிறது. இவ்விழா மாலை 6 மணி முதல் 10 மணி வரை நடைபெறும். இங்கு ஆவாரம்பூச் சாறு, குதிரைவாலிப் பொங்கல், வாழைப்பூ வடை, தினைப் பணியாரம், வல்லாரை அப்பளம், முடக்கத்தான் தோசை, தூதுவளைச் சாறு, சாமைப் பாயாசம், கேழ்வரகு உப்புமா, கம்புப் புட்டு, அகத்திப்பூ போண்டா, முள் முருங்கை அடை ஆகியவையும் இவை போன்ற இன்னும் பல உணவு வகைகளும் இங்கு கிடைக்கும்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அறிவிப்புப் பதாகை ஒன்றை உருவாக்குக

**அறிவிப்புப் பதாகை**

### சிறகுகள்

**சமூக அமைப்பு நடத்தும் 'தமிழ்ப்பண்பாட்டுக் கருத்தரங்கு'**

தலைப்பு - **'பண்பாடுகளால் வாழும் தமிழர்'**

கலந்துரையாட வருகின்றார் ★ சமூக ஆர்வலரும் கவிஞருமான **திருமதி அன்பரசி**

★ பங்குபெறுவோர் - சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள்

**பழம்பெரும் தமிழ்க்குடியே வருக!** **பார்போற்றும் தமிழ்ப்பண்பாட்டை மீட்க!**

நாள்: **ஜனவரி 13 (தை முதல் நாள்)** கிழமை: **ஞாயிறு**

இடம்: **பாரதிக் கலைக்கூட அரங்கு, (தெப்பக்குளம் அருகில்) மதுரை மாவட்டம்.**

ஒருங்கிணைப்பாளர்
**சிறகுகள் அமைப்பு**

இவண்
**இனியன்**

## கடிதம் எழுதுக

**நிகழ்ச்சி நிரல்**

**'அரியன கேள் புதியன செய்'**

(திங்கள் கூடுகை)

நேரம் : 2.30 பிற்பகல் இடம் : அரசு மேனிலைப்பள்ளி

2.30 தமிழ்த்தாய் வாழ்த்து

2.35 வரவேற்புரை - மாணவர் இலக்கியச் செல்வன்

2.40 தலைமையுரை - திரு. எழிலன், தலைமை ஆசிரியர்

'புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை'

3.45 நன்றியுரை - மாணவர் ஏஞ்சலின்

நாட்டுப்பண்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**விடுநர்**

கி. நறுமுகை,

மாணவர் மன்றத் தலைவர்,

அரசு மேனிலைப்பள்ளி,

திருவள்ளூர் மாவட்டம்.

**பெறுநர்**

மதிப்புமிகு. முதன்மையாசிரியர் அவர்கள்,

தினமலர் நாளிதழ்,

எழும்பூர்,

சென்னை - 600 007.

**பொருள்** : நாளிதழில் செய்தி இடம்பெற வேண்டி விண்ணப்பித்தல்

**மதிப்பிற்குரிய ஐயா,**

வணக்கம்.

எங்கள் அரசு மேனிலைப்பள்ளியில் 'புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை' எனும் தலைப்பில் பேச வருகை தரும் அன்பு உள்ளங்களை தங்கள் தினமலர் நாளிதழ் வாயிலாக வரவேற்பு நடத்தவும் அந்த நிகழ்ச்சிகளை நாளிதழ் வாயிலாகத் தெரிவிக்கவும் விரும்புகிறேன். அருள்கூர்ந்து எங்கள் பள்ளி சார்பில் நடத்தும் நிகழ்ச்சி நிரலினை தங்கள் நாளிதழில் செய்தியாக இடம்பெறவும், இன்றைய இலக்கிய நிகழ்ச்சிகள் என்னும் பகுதியில் முதன்மை நிகழ்ச்சியாக இடம்பெறவும் ஆவன செய்யுமாறு எங்கள் பள்ளி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
**கி. நறுமுகை**

**உறைமேல் முகவரி:-**

**பெறுநர்**

மதிப்புமிகு. முதன்மையாசிரியர் அவர்கள்,

தினமலர் நாளிதழ்,

எழும்பூர்,

சென்னை - 600 007.

## வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக

**குறிப்பு - இதை முதலில் படியுங்கள்**

- ➔ வினைமுற்று - **ன் - ள் - ர்** என முடிய வேண்டும்.
- ➔ பெயரெச்சம் - **அ** - **உம்** என முடிய வேண்டும்.
- ➔ வினையெச்சம் - **அ** - **இ** - **உ** என முடிய வேண்டும்.
- ➔ வினையால் அனையும் பெயர் - **அவன்** - **அவள்** - **அவர்** என முடிய வேண்டும்

### பாடநூலில் உள்ளவை

வேர்ச்சொல் - **வா**

- ➔ அருணா வீட்டுக்கு **வந்தாள்**. (வினைமுற்று)
- ➔ அங்கு **வந்த** பேருந்தில் அனைவரும் ஏறினர் (பெயரெச்சம்)
- ➔ கருணாகரன் மேடையில் **வந்து** நின்றார் (வினையெச்சம்)
- ➔ என்னைப் பார்க்க **வந்தவர்** என் தந்தையின் நண்பர் (வினையாலணையும் பெயர்)

வேர்ச்சொல் - **பேசு**

- ➔ கதிர்வேலன் மேடையில் **பேசினான்** (வினைமுற்று)
- ➔ மேடையில் **பேசிய** கதிர்வேலனை அனைவரும் பாராட்டினர் (பெயரெச்சம்)
- ➔ கதிர்வேலன் போட்டிக்காகப் **பேசிப்** பழகினான் (வினையெச்சம்)
- ➔ மேடையில் **பேசியவன்** கதிர்வேலன். (வினையாலணையும் பெயர்)

வேர்ச்சொல் - **தா**

- ➔ நறுமுகை எனக்குப் பரிசு **தந்தாள்** (வினைமுற்று)
- ➔ நறுமுகை **தந்த** பரிசு எனக்குப் பிடித்திருந்தது (பெயரெச்சம்)
- ➔ நறுமுகை இரண்டு பரிசையும் எனக்குத் **தந்து** விட்டாள் (வினையெச்சம்)
- ➔ எனக்குப் பரிசு **தந்தவள்** நறுமுகை (வினையாலணையும் பெயர்)

வேர்ச்சொல் - **ஓடு**

- ➔ நிலா மிதிவண்டி **ஓட்டினாள்** (வினைமுற்று)
- ➔ நிலா **ஓட்டிய** மிதிவண்டி அழகாக இருந்தது. (பெயரெச்சம்)
- ➔ நிலா மிதிவண்டியை வேகமாக **ஓட்டி** விழுந்தாள். (வினையெச்சம்)
- ➔ மிதிவண்டியை **ஓட்டியவள்** நிலா. (வினையாலணையும் பெயர்)

வேர்ச்சொல் - **பாடு**

- ➔ அபூர்வா பாட்டு **பாடினாள்** (வினைமுற்று)
- ➔ அபூர்வா **பாடிய** பாடல் அருமையாக இருந்தது (பெயரெச்சம்)
- ➔ அபூர்வா பாட்டு **பாடி** முடித்தாள் (வினையெச்சம்)
- ➔ மேடையில் **பாடியவன்** பாராட்டப்பட்டான். (வினையாலணையும் பெயர்)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி இலக்கணக் குறிப்பு உருவாக்குதல்

| வேர்ச்சொல் | தொழிற்பெயர் | வியங்கோள் வினைமுற்று | எதிர்மறை பெயரெச்சம் | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
|---|---|---|---|---|
| சிரி | சிரித்தல் | சிரிக்க | சிரிக்காத | சிரிக்கா |
| படி | படித்தல் | படிக்க | படிக்காத | படிக்கா |
| கா | காத்தல் | காக்க | காக்காத | காக்கா |
| பேசு | பேசுதல் | பேசுக | பேசாத | பேசா |
| செல் | செல்லுதல் | செல்க | செல்லாத | செல்லா |
| முயல் | முயலுதல் | முயல்க | முயலாத | முயலா |
| கொள் | கொள்ளுதல் | கொள்க | கொள்ளாத | கொள்ளா |
| பூ | பூத்தல் | பூக்க | பூக்காத | பூக்கா |
| பிழை | பிழைத்தல் | பிழைக்க | பிழைக்காத | பிழைக்கா |
| ஓது | ஓதுதல் | ஓதுக | ஓதாத | ஓதா |
| வாழ் | வாழ்தல் | வாழ்க | வாழாத | வாழா |
| ஒழி | ஒழிதல் | ஒழிக | ஒழியாத | ஒழியா |
| ஒடி | ஒடித்தல் | ஒடிக | ஒடியாத | ஒடியா |
| ஓடு | ஓடுதல் | ஓடுக | ஓடாத | ஓடா |
| பார் | பார்த்தல் | பார்க்க | பார்க்காத | பார்க்கா |
| எழு | எழுதுதல் | எழுதுக | எழுதாத | எழுதா |
| பாடு | பாடுதல் | பாடுக | பாடாத | பாடா |
| ஆடு | ஆடுதல் | ஆடுக | ஆடாத | ஆடா |
| நட | நடத்தல் | நடக்க | நடவாத | நடவா |
| தழு | தழுவுதல் | தழுவுக | தழுவாத | தழுவா |
| போற்று | போற்றுதல் | போற்றுக | போற்றாத | போற்றா |
| நீக்கு | நீக்குதல் | நீக்குக | நீக்காத | நீக்கா |
| மகிழ் | மகிழ்தல் | மகிழ்க | மகிழாத | மகிழா |
| தேய் | தேய்தல் | தேய்க | தேயாத | தேயா |
| விளை | விளைதல் | விளைக | விளையாத | விளையா |
| சரி | சரிதல் | சரிக | சரியாத | சரியா |
| எழுது | எழுதுதல் | எழுதுக | எழுதாத | எழுதா |
| கேள் | கேட்டல் | கேட்க | கேட்காத | கேட்கா |
| வை | வைத்தல் | வைக்க | வைக்காத | வைக்கா |
| ஆற்று | ஆற்றுதல் | ஆற்றுக | ஆற்றாத | ஆற்றா |
| விழி | விழித்தல் | விழிக்க | விழியாத | விழியா |
| தோன்று | தோன்றுதல் | தோன்றுக | தோன்றாத | தோன்றா |
| கூவு | கூவுதல் | கூவுக | கூவாத | கூவா |
| உழை | உழைத்தல் | உழைக்க | உழைக்காத | உழைக்கா |
| வனை | வனைதல் | வனைக | வனையாத | வனையா |

## புதிர்களில் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடிக்க

→ **கவின்கலை**

**விளக்கம்**

| | | |
|---|---|---|
| முதலிரண்டு பாட்டெழுதுபவரின் பட்டம் | - | **கவிஞர்** |
| இரண்டும் மூன்றுமோ பசுப்பால் என்பதன் பின் இறுதி | - | **ஆவின்** |
| கடைசி இரண்டெழுத்தோ மானினத்தில் ஒரு வகை | - | **கலை** |
| இரண்டும் ஐந்துமோ பொருளை விற்கத் தேவையாம் | - | **விலை** |
| | | **கவின் கலை** |

→ **முருங்கைக்காய்**

**விளக்கம்**

| | | |
|---|---|---|
| இறுதி இரண்டெழுத்தோ பழத்தின் முந்தைய பச்சை நிலை | - | **காய்** |
| தமிழ்க் கடவுளின் முற்பாதியை முதலிரு எழுத்தில் வைத்திருக்கும் | - | **முரு** |
| நடுவிலே ஓரெழுத்து ஒருமொழி | - | **கை** |
| அதற்கும் முன் பொட்டு வைத்த ஙகரம் | - | **ங்** |
| சேர்த்தால் காய் ஆவான் | - | **முருங்கைக்காய்** |

## கூடுதல் புதிர்கள்

**1) ஐந்தெழுத்துக்காரர்**

**முதல் மூன்று எழுத்து கலைமகளின் மறுபெயர்;**

**முதல் எழுத்தும் இறுதி எழுத்தும் இணைந்தால் உலகம்;**

**முதல் எழுத்தும் மூன்றாவது எழுத்தும் இணைந்தால் அரை;**

**இறுதி இரண்டு எழுத்துகள் வினாவாகும்; - அவர் யார்?**

→ **பாரதியார்**

**விளக்கம்**

| | | |
|---|---|---|
| முதல் மூன்று எழுத்து கலைமகளின் மறுபெயர் | - | **பாரதி** |
| முதல் எழுத்தும் இறுதி எழுத்தும் இணைந்தால் உலகம் | - | **பார்** |
| முதல் எழுத்தும் மூன்றாவது எழுத்தும் இணைந்தால் அரை | - | **பாதி** |
| இறுதி இரண்டு எழுத்துகள் வினாவாகும் | - | **யார்** |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2) நான்கெழுத்தில் கிடைப்பது**

**முதல் இரண்டு எழுத்துகள் மறைத்து வைக்கும்;**

**முதல் எழுத்தும் இறுதி எழுத்தும் இணைந்தால் பசுவிற்கு உணவாகும்;**

**முதல் எழுத்தும் இறுதி இரண்டு எழுத்துகளும் இணைந்து மழை கொடுக்கும்;**

**இறுதி மூன்று எழுத்துகள் பெண்ணைக் குறிக்கும்; - அது என்ன?**

➔ **புதையல்**

**விளக்கம்**

| | |
|---|---|
| முதல் இரண்டு எழுத்துகள் மறைத்து வைக்கும் | - **புதை** |
| முதல் எழுத்தும் இறுதி எழுத்தும் இணைந்தால் பசுவிற்கு உணவாகும் | - **புல்** |
| முதல் எழுத்தும் இறுதி இரண்டு எழுத்துகளும் இணைந்து மழை கொடுக்கும் | - **புயல்** |
| இறுதி மூன்று எழுத்துகள் பெண்ணைக் குறிக்கும் | - **தையல்** |

**3) ஆறெழுத்து ஊர்**

**முதல் இரண்டு எழுத்துகள் மரியாதை கொடுக்கும்;**

**அடுத்த இரண்டு எழுத்துகள் பசியைப் போக்கும்;**

**இறுதி இரண்டு எழுத்துகள் பாதுகாக்கும்;**

**ஆறும் இணைந்தால் அல்வா கிடைக்கும் - அது என்ன?**

➔ **திருநெல்வேலி**

**விளக்கம்**

| | |
|---|---|
| முதல் இரண்டு எழுத்துகள் மரியாதை கொடுக்கும் | - **திரு** |
| அடுத்த இரண்டு எழுத்துகள் பசியைப் போக்கும் | - **நெல்** |
| இறுதி இரண்டு எழுத்துகள் பாதுகாக்கும் | - **வேலி** |
| ஆறும் இணைந்தால் அல்வா கிடைக்கும் | - **திருநெல்வேலி** |

## புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)

**1) எலியும் நுழையும் : எழிலரசி கையும் நுழையும் --------------------**

**2) அடிக்கவும் செய்யலாம் : கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் --------------------**

**3) கண்ணிலும் எழுதலாம் : வெண்தாளிலும் எழுதலாம் --------------------**

**4) அறிவின் பெயரும் அதுதான் : அம்புலியின் பெயரும் அதுவேதான் ------------------**

**5) பூவின் உறுப்பும் நானே : புன்னகையின் பிறப்பிடமும் நானே --------------------**

**6) வண்டியையும் இயக்கும் : பெரும் கப்பலையும் தாங்கும் --------------------**

➔ வளை ➔ கம்பு ➔ மை

➔ மதி ➔ இதழ் ➔ ஆழி





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக

➔ தனிமொழி - அறிவு; தொடர்மொழி - வண்ண மயில்; பொதுமொழி - வைகை

➔ கார்காலம் - ஆவணி, புரட்டாசி; குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை; முன்பனிக்காலம் - மார்கழி, தை

➔ எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி

➔ எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை

➔ சேரன் - வில், சோழன் - புலி, பாண்டியன் - மீன்

## மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடிக்க

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கோ | ஸா | ல் | சு | யா | ம் | மா | ண் | பு | பெள |
| த் | ர | வ | வ | ஜ | ற | யா | ஜ | வி | த் |
| தா | த | னு | டி | வி | ன் | தி | வே | க் | த |
| ரி | ம | ப | ட் | டி | ம | ண் | ட | ப | ம |
| ர் | ம் | க | ந | ற் | றி | ணை | ல் | போ | ட |
| னா | ண | ண | ம் | பா | ர் | ப் | ர | த | கூ |
| ட | க | க் | க | ல | யா | ப | ம் | னா | க் |
| லா | க் | கா | த | பா | தி | ள் | ண | ர் | ளை |
| ல் | ல | ய | த் | ர | ர | ளி | ம | கு | ள் |
| க | இ | ன் | பொ | தி | பா | ம் | ச | ர | பி |

➔ கோத்தாரி

➔ சுவடி

➔ மாயா

➔ பௌத்தம்

➔ கணக்காயன்

➔ பாரதியார்

➔ சமணம்

➔ பட்டிமண்டபம்

➔ மதரஸா

➔ விஜயா

➔ மாண்பு

➔ கல்லாடனார்

➔ பொத்தகம்

➔ திண்ணைப்பள்ளி

➔ போதனார்

➔ நற்றிணை

➔ பனுவல்

➔ மன்றம்

➔ புவி

➔ இலக்கணம்

➔ பாலபாரதி

➔ வேடல்

➔ பிள்ளைக்கூடம்

➔ குமளி

(ஆப்பிள் பழம்)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பொ | ரு | ண் | மொ | ழி | க் | 2 கா | ஞ் | 3 சி | 4 ப |
| 5 த | | ர் | ம | ன | ச | ஞ் | 6 அ | த் | ஞ் |
| னி | | வூ | | ள் | | ச | ணி | தி | ச |
| ம | ம் | த | ழை | மி | | னை | மா | ரா | மு |
| க | ர | வா | 7 பி | ர | ச | ம் | ய் | வ | கி |
| னா | தி | ரு | யா | 8 பி | ல் | ட | 9 வே | ளி | |
| ர் | ந் | 10 தி | 11 கா | க் | த | 12 சீ | | 13 க | |
| 14 கு | ம | 15 வி | ட் | 16 ம | ன் | ற | ம் | ர் | ரி |
| யி | ரு | | | 17 எ | ழு | த் | து | ண | 18 கி |
| ல் | 19 தி | ரு | வா | ச | க | ம் | ன | ன் | 20 அ |

**விடைகள்**

**இடமிருந்து வலம் →**

1. மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளைக் கூறும் துறை (9) **பொருண்மொழிக்காஞ்சி**
7. தேன் - மற்றொரு சொல் (4) **பிரசம்**
15. புல்லின் இதழ்கள் - நூலாசிரியர் (4) **.விட்மன்**
16. கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடம் (4) **மன்றம்**
17. சி.சு. செல்லப்பா நடத்திய இதழ் (4) **எழுத்து**
19. ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பக்தி இலக்கியம் (6) **திருவாசகம்**

**வலமிருந்து இடம் ←** (ஓவல்)

6. யானை - வேறொரு சொல் (5) **அஞ்சனம்**
9. வந்தவாசிக்கு அருகில் சமணப்பள்ளி இருந்த ஊர் (3) **வேடல்**
12. உமறுப்புலவரை ஆதரித்தவர் (5) **சீதக்காதி**
20. கவிஞர் மீரா நடத்திய பதிப்பகம் (4) **அன்னம்**

**மேலிருந்து கீழ் ↓** (செவ்வகம்)

2. புதுமைப்பித்தனின் புகழ்பெற்ற சிறுகதை (4) **காஞ்சனை**
3. பாரதி நடத்த விரும்பிய கருத்துப்பட இதழ் (6) **சித்திரவாளி**
4. இளையராஜா உருவாக்கிய இராகம் (5) **பஞ்சமுகி**
5. நற்றிணை 153ஆவது பாடலை இயற்றியவர் (6) **தனிமகனார்**
6. அணுவைப்போல சிறுத்து நிற்கும் ஆற்றல் (3) **அணிமா**
12. இந்தச் சொல்லின் திரிபே சீறா (3) **சீறத்**
13. மகாபாரதத்தில் கொடை வீரன் (4) **கர்ணன்**
14. பாரதிதாசன் நடத்திய இதழ் (3) **குயில்**

**கீழிருந்து மேல் ↑** (அறுகோணம்)

7. தவறு - வேறொரு சொல் (2) **பிழை**
8. தருமு சிவராம் என்னும் புனைபெயரிலும் எழுதியவர் (4) **பிரமிள்**
9. மூங்கில் - மற்றொரு சொல் (2) **வேய்**
10. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் (6) **திருவாதவூர்**
11. ஐங்குறுநூறு பாடும் மலர்களில் ஒன்று (2) **காயா**
18. மலை என்றும் சொல்லலாம் (2) **கிரி**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## கட்டுரை எழுதுக

- ஒருவர் தம் உள்ளக் கருத்துகளை வெளியிடும் வாயில்களாக அமைவன, பேச்சும் எழுத்தும் ஆகும்.
- எழுதுதல் என்பது தனித்திறன்.
- ஒரு பொருளைப் பற்றி இலக்கண முறையில் கட்டுரைப்பது கட்டுரை.
- குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றி, ஒரு கட்டுக்கோப்புடன் யாவரையும் ஈர்க்கும் முறையில் அமைக்கப்படுவது 'கட்டுரை' ஆகும்.
- கட்டுரையில் முன்னுரை - பொருளுரை - முடிவுரை ஆகியவற்றைக் கொண்டு விளங்க வேண்டும்.
- முன்னுரையும் முடிவுரையும் ஒவ்வொரு பத்திக்குள் அமைய வேண்டும்.
- முன்னுரை என்பது, எழுதப் போகும் கருத்தை வகுத்துக் காட்டுவதாகும்.
- முடிவுரை என்பது கட்டுரையில் கூறிய கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாகும்.
- ஒரு கட்டுரையில் முன்னுரையையும் முடிவுரையையும் படித்தாலே கட்டுரையின் சிறப்புத் தன்மை விளங்க வேண்டும்.
- பொருளுரை என்பது, எடுத்துக்கொண்ட கருத்தைப் பல வழிகளில் விளக்கிக் கூறும் பகுதி ஆகும்.
- எடுத்துக்கொள்ளும் பொருளுக்கு ஏற்ப, உள் தலைப்புகள் பலவற்றைக் கொண்டதாகப் பொருளுரை விளங்க வேண்டும்.
- கட்டுரை சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நன்மொழி புணர்த்தல் முதலான அழகுகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**கட்டுரை எழுதுவதற்கான பொது விதிகள்:-**

- செய்திகளைத் திரட்டுதல்
- முறைப்படுத்துதல்
- தலைப்புக் கொடுத்தலும் பத்தி அமைத்தலும்
- மேற்கோள்கள் - பழமொழிகள் திரட்டுதல்
- பல்வகை வாக்கியங்களில் எழுதுதல்
- நடை அழகு
- நிறுத்தக் குறியீடுகள் பயன்படுத்தி எழுதுதல்
- நல்ல கருத்துகளை எடுத்தாளும் திறன்
- மீள் பார்வை செய்தல்
- நல்ல கையெழுத்தில் எழுதுதல்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**"பண்பாட்டைப் பாதுகாப்போம் - பகுத்தறிவுப் போற்றுவோம்" என்னும் பொருள்பட ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**தமிழ்முகம்**

- ‘தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு’ என்பதை உலகமே அறியும்.
- உலகிலேயே பண்பாட்டில் சிறந்தவர்கள் தமிழர்கள்.
- உலகப் பண்பாடுகளெல்லாம் தன்னைப் பண்படுத்திக் கொண்ட இடம் தமிழகம்.
- பாரில் பகுத்தறிவைப் பறைசாற்றிய பெருமை தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டுக்கும் தமிழினத்திற்கும் என்றென்றும் உண்டு.
- தமிழ்ப்பண்பாட்டுப் பாதுகாப்பையும் பகுத்தறிவைப் போற்றுமுகமாக இக் கட்டுரை விரிகின்றது

**தமிழகம்**

- பண்பாட்டைப் பாதுகாப்போம்!
- இருகரம் கூப்பி இறைவனை வணங்குவோம்.
- இன்முகத்துடன் விருந்தினரைப் போற்றுவோம்.
- இல்லை என்று சொல்லாமல் இரவலருக்கு உதவுவோம்.
- இனியமொழி பேசியே இன்புறுவோம்.
- இல்லறமே நல்லறம் என்போம்.
- மூத்தோர் சொல் அமிழ்தம் என்போம்.
- முன்னுரைத்த சொல் காப்போம்.
- அன்பின் வழியது வாழ்க்கை என்போம்.
- ஆசிரியரைப் போற்றுவோம்.
- கசடற்ற கல்வியைப் பெறுவோம்.
- காலத்தே கடமையைச் செய்வோம்.
- வந்தோரை வாழ்விப்போம்.
- வானோர்க்கு வந்தனைகள் செய்வோம்.
- தெள்ளறிவால் கவிதை படைப்போம்.
- தென்புலத்தாரை (இறந்தோரை) வழிபடுவோம்.
- பகுத்தறிவைப் போற்றுவோம்.
- மூட நம்பிக்கைகளை முட்டறுப்போம்.
- ‘முயலாமை’ பழக்கத்தை விட்டொழிப்போம்.
- கண்மூடி வழக்கத்தை வேரறுப்போம்.
- கடவுள் ஒன்றெனும் சொல்லுரைப்போம்.
- மதங்களுள் சிறந்தது மனிதம் என்போம்.
- மானுடத்தின் வாழ்வு அன்பென்போம்.
- அறத்தின் வழியது இல்லறமென்போம்.
- மறத்தின் வழியது மன்னிப்பென்போம்.
- பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவோம்.
- பகுத்தறிவை என்றும் போற்றுவோம்.

**முடிவுரை**

- பண்பாடும் பகுத்தறிவும் தமிழரின் சீரிய வாழ்வின் சிறப்புத் தன்மைகள். இவற்றை என்றென்றும் காப்போம்!

**பயிற்சி வினாக்கள்**

**1) இயற்கை வேளாண்மையின் தேவைக் குறித்து ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**2) நாட்டுப்புறக் கலைகளின் சிறப்புகள் குறித்து ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

www.Padasalai.Net





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## உரை எழுதுவோம்

**உன் பள்ளியில் திரு அப்துல்கலாம் அவர்களின் நினைவுதினம் கொண்டாடப்படுகிறது. பள்ளிக்கு அருகில் உள்ள கல்லூரியின் மாணவர்கள் திரட்டிய நிதியைக் கொண்டு பள்ளியின் உயர்வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் திருக்குறள் கையடக்கப் பிரதி ஒன்றும், நில வரைபடப் புத்தகம் ஒன்றும் பரிசளிக்கிறார்கள். அவர்களுக்குப் பள்ளியின் சார்பாக நன்றி கூற ஒருபக்க அளவில் நன்றியுரை ஒன்றை எழுதுக.**

விழாவினைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் தலைவர் அவர்களே! தலைமையாசிரியர் அவர்களே! ஆசிரியப் பெருமக்களே! உடன்பயிலும் மாணவத் தோழர்களே! உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

இன்றைய நாள் நம் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர்! இளைஞர்களின் எழுச்சி நாயகன்! அக்கினிச் சிறகு! ஏவுகணை நாயகன்! ஐயா அப்துல்கலாம் அவர்களின் நினைவுநாள் நிகழ்ச்சியில் நாம் பங்கேற்றுள்ளோம்.

இந்நிகழ்வில் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று உள்ளது. நம் பள்ளிக்கு அருகில் உள்ள கல்லூரி மாணவர்கள், நம் பள்ளியில் உயர்வகுப்பில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் திருக்குறள் புத்தகமும் நில வரைபடப்புத்தகமும் பரிசாக வழங்கியுள்ளனர். அப்துல்கலாம் அவர்களுக்கு மிக விருப்பமான தமிழ் நூல் திருக்குறள் ஆகும். ஆகவேதான் கல்லூரி மாணவர்கள் நாமும் படித்து அப்துல்கலாம் அவர்களைப் போல மிகப் பெரிய சாதனையாளர்களாக வரவேண்டும் என்ற எண்ணத்தில் நமக்கு இந்த புத்தகத்தை அளித்துள்ளனர். 'நன்றி மறப்பது நன்றன்று' என்பது வள்ளுவனின் வாக்கு. அதன்படி, நம் பள்ளி மாணவர்களுக்கு புத்தகம் வழங்கிய கல்லூரி மாணவர்களுக்கு என் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

விழாவில் பங்கேற்றுள்ள பெரியோர்களுக்கும் அறிஞர் பெருமக்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

## படித்துப்பார்த்துப் படைத்துக்காட்டுக

**உங்கள் பகுதி நூலகத்தில் வாசகர்களுக்கு நூலக உறுப்பினர் அட்டை வழங்க வருகைதரும் அறிஞரை அறிமுகம் செய்க.**

வாசிப்பை நேசிக்கும் வாசகப் பெருமக்களே! சான்றோர்களே! மாணவர்களே! பொதுமக்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

இன்று நம் பகுதி நூலகத்தில் புதிதாக இணைந்துள்ள வாசகர்களுக்கு உறுப்பினர் அட்டை வழங்கும் விழா நடைபெறுகிறது.

ஒரு மாணவன் தன் அறிவை வளர்த்துக் கொள்வதற்கு பள்ளிப் பாடங்கள் மட்டும் போதாது. பள்ளிப்படிப்போடு சேர்த்து பல நூல்களை வாசிக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவர்களின் அறிவை விரிவு செய்வதற்கு, நம் பகுதியில் உள்ள நூலகம் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

இன்றைய தினம் நூலகத்தில் இணைந்துள்ள புதிய உறுப்பினர்களுக்கு, உறுப்பினர் அட்டை வழங்கி, சிறப்புரையாற்றுவதற்காக ஓய்வு பெற்ற ஆசிரியர் ஐயா தி.க. பொன்னுசாமி அவர்கள் வருகை தந்துள்ளார்.

ஐயா அவர்கள் தமிழுக்கு அழியாத பல நூல்களைப் படைத்து அளித்துள்ளார். தமிழாசிரியராக பணியாற்றிய காலத்தில், மாணவர்களைத் தமிழ்த் தேனைப் பருக செய்தவர்.

பள்ளி மாணவர்களுக்குத் திருக்குறள் வகுப்புகளும் திருக்குறள் போட்டிகளும் நடத்தி, திருக்குறளைப் பரப்பி வருகின்றார். 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்ற ஔவையாரின் வாக்கிற்கேற்ப, தன் வாழ்நாள் முழுவதிலும் புத்தகங்களை வாசித்துக் கொண்டே இருப்பவர்.

ஐயா அவர்கள் நம் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கின்றது. அவரை வருக! வருக! என்று அன்புடன் வரவேற்கிறேன்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**மெய்ப்புத்திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன்விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.**

(பெயர், வயது, பாலினம், பிறந்த நாள், பெற்றோர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, அறிந்த மொழிகள், எடை, உயரம், குருதிவகை, கல்வித்தகுதி)

**விடுநர்**

க. முத்துக்குமார்,<br>
22/11, கட்டபொம்மன் தெரு,<br>
கயத்தாறு,<br>
தூத்துக்குடி - 628 431.

**பெறுநர்**

முதன்மையாசிரியர் அவர்கள்,<br>
தினமலர் நாளிதழ்,<br>
தூத்துக்குடி.

**பொருள்:** மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டுதல் - தொடர்பாக.

**மதிப்பிற்குரிய ஐயா,**

வணக்கம். தங்கள் நாளிதழில் பணிபுரிய மெய்ப்புத்திருத்துநர் தேவைப்படுவதாக வெளிவந்த விளம்பரத்தைப் பார்த்தேன். நான் அப்பணியில் சேருவதற்காக விண்ணப்பிக்கி-ன்றேன். இத்துடன் என்னுடைய தன்விவரப் பட்டியலையும் இணைந்துள்ளேன். நான் தங்கள் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தால், உங்கள் நிறுவனத்தின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு செயல்படுவேன் என்று உறுதியளிக்கின்றேன்.

இப்படிக்கு<br>
தங்கள் உண்மையுள்ள,<br>
க. முத்துக்குமார்

**தன் விவரக் குறிப்பு**

| | |
|---|---|
| **பெயர்** | : க. முத்துக்குமார் |
| **தந்தை பெயர்** | : ப. கதிர்வேல் |
| **பிறந்த தேதி** | : 12/07/1996 |
| **வயது** | : 23 |
| **கல்வித்தகுதி** | : இளங்கலை தமிழ் |
| **தாய்மொழி** | : தமிழ் |
| **அறிந்த மொழிகள்** | : தமிழ், ஆங்கிலம், இந்தி |
| **கூடுதல் பயிற்சி** | : தமிழ், ஆங்கிலம் - தட்டச்சு, அடிப்படைக் கணினிப் பயிற்சி (DTP) |
| **முகவரி** | : 22/11, கட்டபொம்மன் தெரு, கயத்தாறு, தூத்துக்குடி - 628 431. |
| **அலைபேசி** எண் | : 80000 00000 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## கீழ்க்காணும் பாடலின் முதலடியைக் கவனித்து, பிற அடிகளில் உள்ள சீர்களை ஒழுங்கு செய்க

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலேஊறுகின்றதீஞ்சுவைத்தண்ணீரே
உகந்ததண்ணீர்இடைமலர்ந்தசுகந்தமணமலரே
மேடையிலேவீசுகின்றமெல்லியபூங்காற்றே
மென்காற்றில்விளைசுகமேசுகத்திலுறும்பயனே
ஆடையிலேஎனைமணந்தமணவாளாபொதுவில்
ஆடுகின்றஅரசேஎன்அலங்கலணிந்தருளே.

**விடை:**

**கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த**
**குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே**
**ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே**
**உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே**
**மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே**
**மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே**
**ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்**
**ஆடுகின்ற அரசேஎன் அலங்கலணிந் தருளே.**

## சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

➔ திரியாது தோற்றம் நிலையின் அடங்கியான் மாணப் பெரிது மலையினும்

★ நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது.

➔ நாகாக்க ஆயினும் யாகாவார் காவாக்கால் பட்டு சொல்லிழுக்குப் சோகாப்பர்

★ யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

➔ உள்ளாறும் ஆறாதே தீயினால் சுட்டபுண் நாவினால் வடு சுட்ட

★ தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு.

➔ பொருளெல்லாம் தக்கார்க்கு தாளாற்றித் தந்த செய்தல் வேளாண்மை பொருட்டு

★ தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தல் பொருட்டு.

➔ உயிர்வாழ்வான் ஒத்த தறிவான் மற்றையான் படும் வைக்கப் செத்தாருள்

★ ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப் படும்.

➔ மரத்தற்றால் செல்வம் தப்பா மருந்தாகித்
யான்கண் படின் பெருந்தகை

★ மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

➔ புகழல்லால் உயர்ந்த உலகத்து ஒன்றா
நிற்பதொன்று பொன்றாது இல்

★ ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

➔ தோன்றுக அஃதிலார் புகழொடு தோன்றின்
தோன்றாமை தோன்றலின் நன்று

★ தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

➔ வேண்டியாங்கு செய்தவம் வேண்டிய எய்தலால்
முயலப் படும் ஈண்டு

★ வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

➔ சுடச்சுட பொன்போல் துன்பம் ஒளிவிடும்
நோற்கிற் சுடச்சுடரும் பவர்க்கு

★ சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

➔ செய்யப் படும் நாச்செற்று வாராமுன்
விக்குள்மேல் நல்வினை மேற்சென்று

★ நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

➔ பெருமை இன்றில்லை என்னும் உளனொருவன்
நெருநல் உடைத்துஇவ் வுலகு

★ நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

➔ வாழ்வது அறியார் கருதுப ஒருபொழுதும்
அல்ல பல கோடியும்

★ ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

➔ அதனின் இலன் யாதனின் நோதல்
நீங்கியான் அதனின் யாதனின்

★ யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

➔ பற்று பற்றுக விடற்கு பற்றினை
அப்பற்றைப் பற்றுக பற்றற்றான்

★ பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

➔ இன்பம் துன்பத்துள் ஈண்டும் கெடின்
இடையறாது அவாவென்னும் துன்பம்

★ இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

➔ இயற்கை அவாநீப்பின் அந்நிலையே ஆரா
தரும் இயற்கை பேரா

★ ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

➔ தன்வலியும் வினைவலியும் துணைவலியும் மாற்றான்
வலியும் தூக்கிச் செயல்

★ வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

➔ வியந்தான் அளவறியான் தன்னை அமைந்தாங்
கொழுகான் விரைந்து கெடும்

★ அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

➔ அச்சிறும் அப்பண்டம் சாகாடும் பீலிபெய்
மிகுத்துப் பெயின் சால

★ பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

➔ வாழாதான் வாழ்க்கை அளவறிந்து உளபோல
தோன்றாக் இல்லாகித் கெடும்

★ அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

➔ கருவியான் உளவோ அருவினை யென்ப
அறிந்து செயின் காலம்

★ அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

ஞானஒளி பதிப்பகம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பத்தியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக

கல்வி என்றால் என்ன? அது புத்தகங்களைப் படிப்பதா? அல்லது அது பலவிதமானதைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின்மூலம் மனவுறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுப் பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும். அக்கல்வி வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்துதல் என்பது. கல்வியின் நோக்கம் செய்திகளைப் பற்றிய அறிவைச் சேமிப்பதன்று. கல்வியின் நோக்கமே மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். மனவொருமைப்பாடே கல்வியின் அடிப்படை.

எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தும் அளவுக்கு அறிவு வளரும். இயற்கையால் மூடப்பட்டிருக்கும் அறிவுச்சுடரைப் பெறுவதற்கு இதுவொன்றே சிறந்த வழியாகும். மனிதன் தன் சக்தியை நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு வீண் செய்து விடுகிறான். இதனால்தான், அவன் அடிக்கடித் தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவறையும் செய்ய மாட்டான்.

மனிதனுக்கும் விலங்கிற்கும் உள்ள முக்கிய வேறுபாடு மனத்தை ஒருமுகப்படுத்துவதில்தான் இருக்கிறது. எத்துறையிலும் வெற்றி பெறுவது இதைப் பொறுத்துதான் இருக்கிறது. இசை, ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறச் செய்வது மன ஒருமைப்பாடுத்தான். மேலும், உலகத்தின் புதிர்களை மூடி வைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய வலிமை மாத்திரம் நாம் பெற வேண்டும். இவ்வலிமையை நமக்கு அளிக்கக்கூடியது மன ஒருமைப்பாடுதான். அதுவே கல்விக்கு அடிப்படையாகும்.

(கல்வி - சுவாமி விவேகானந்தர்)

**விடை:**

கல்வி என்பது பயிற்சியின் மூலம் மனவுறுதியின் வேகத்தையும் அது வெளிப்படும் தன்மையையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுப் பயன்தரும் வகையில் அமைப்பதாகும். கல்வியின் நோக்கமே மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். மனத்தை ஒருமுகப்படுத்தும் அளவிற்கு அறிவு வளரும். மனிதனுக்கும் விலங்கிற்கும் உள்ள முக்கிய வேறுபாடு மனத்தை ஒருமுகப்படுத்துவதில் தான் உள்ளது. எத்துறையிலும் வெற்றி பெறச் செய்வது மன ஒருமைப்பாடுதான். உலகத்தின் புதிர்களை மூடி வைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய வலிமையை நமக்கு அளிக்கக்கூடியது மன ஒருமைப்பாடுதான். அதுவே கல்விக்கு அடிப்படையாகும்.

### மாதிரி 1

தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளையுடையது. இயற்றமிழென்பது தமிழர் யாவர்மாட்டும் பொதுமையின் இருவகை வழக்கினும் இயங்குகின்ற வசனமுஞ் செய்யுளும் ஆகும். இதன்கண் இலக்கியங்களும் இலக்கணங்களும் அடங்கும். எனவே, இயற்றமிழ், 'செந்தமிழ் கொடுந்தமிழ்' என்ற வகையினும் படுதலுமொக்கும். ஒப்பவே, செந்தமிழ் வசனநூல்களும் செந்தமிழ்ச் செய்யுள் நூல்களும், கொடுந்தமிழ் வசனநூல்களும் கொடுந்தமிழ் செய்யுள் நூல்களும் இவ்வியற்றமிழின் கண் அடங்குமென்பதுதானே விளங்கும். தமிழில் புலவரும் அல்லாரும் ஒத்தியங்காமையான், இப்பிரிவிற்கு இடமுண்டாயிற்று. தமிழ் வழங்கும் நாட்டிற்குள்ளும் இப்பிரிவு ஏற்படுவதாயிற்று.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இசைத்தமிழென்பது, பண்ணொடு கலந்தும் தாளத்தொடு கூடியுமியங்கும் செந்தமிழ்ப் பாட்டுக்களாலும் கொடுந்தமிழ்ப் பாட்டுக்களானும் இயன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களும் ஆகும். இதன்கண், கீர்த்தனங்களும் வரிப்பாட்டுகளும் சிந்து, கும்மி, ஆனந்தக்களிப்பு, தெம்மாங்கு முதலியன அடங்கும். இயற்றமிழின் செய்யுட்கள் இசையெடுத்துத் தாளமறுத்துப் பாடப்படின், அவை இசைத் தமிழின்பாற்படும். முற்காலத்து வழங்கிய பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், தாளவகையோத்து முதலியனவும், இடைக்காலத்துத் தோன்றிய தேவாரம் முதலியனவும், இக்காலத்து இயங்குகின்ற கந்தபுராணக் கீர்த்தனை, பெரியபுராணக் கீர்த்தனை, சங்கீத சந்திரிகை முதலியனவும் இசைத்தமிழில் அடங்கும் இசைத்தமிழில்வழி நாடகத் தமிழிற்கு இயக்கமில்லை.

நாடகத்தமிழென்பது, கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய அவகாசமில்லாத வேலைக்காரர்களுக்கும் படிக்கத் தெரியாதவர்களுக்கும், நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது. அது கேட்போர்க்குங் காண்போர்க்கும் இன்பம் பயவாவிடின், சாமானிய சனங்கள் அதனை விரும்பிச் செல்லாராதலின் அஃது இன்பச் சுவையோடியல்வதாயிற்று. உலகத்தினியல்பினை உள்ளதை உள்ளவாறே புனைந்து காட்டுவது நாடகத் தமிழேயன்றி வேறில்லை. இயற்றமிழும் இசைத்தமிழும் சேர்ந்த வழியே நாடகத்தமிழ் பிறந்ததெனினும் நாடகத்தமிழிற்கு வேறு தனிப்பெருஞ் சிறப்புள்ளது. முன்னையன இரண்டும் கேள்வியின்பம் மட்டிலே பயப்பனவாய் நிற்கின்றன. இவ்விரண்டன் அடியாகப் பிறந்த நாடகத் தமிழோ கேள்வியின்பம் பயப்பதேயன்றிக் காட்சி இன்பமும் உடன்பயக்கின்றது.

**விடை**

**முத்தமிழ்**

தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. இயற்றமிழ் என்பது வசனமும் செய்யுளும் ஆகும். இதன்கண் இலக்கியங்களும் இலக்கணங்களும் அடங்கும். இயற்றமிழ் 'செந்தமிழ் கொடுந்தமிழ்' என இருவகையினுள்ளும் அடங்கும். இசைத் தமிழென்பது, பண்ணொடு கலந்தும் தாளத்தொடு கூடியும் இயங்கும் இயற்றமிழ் பாட்டுக்கள் ஆகும். கீர்த்தனங்கள், வரிப்பாட்டு, சிந்து, கும்மி, ஆனந்தக் களிப்பு, தெம்மாங்கு முதலியவை இதில் அடங்கும். பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், தாளவகையோத்து, தேவாரம் போன்றவை இசைத்தமிழ் நூல்களாகும். நாடகத்தமிழ் என்பது, கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய அவகாசமில்லாதவனுக்கும், படிக்கத் தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டுவதாகும். முந்தைய இரண்டும் கேள்வி இன்பம் மட்டும் பயக்கும். ஆனால், நாடகத்தமிழ் கேள்வி இன்பத்தோடு காட்சி இன்பமும் பயக்கும்.

**மாதிரி 2**

பிறப்பில் உயர்வு தாழ்வு கருதல் தவறு. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் பெருங்குற்றம் நமது நாட்டுக்கே சிறப்பாக உண்டு. எல்லாக் கொடுமைகளிலும் தலையாயது இக்கொடுமை. பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் உள்ளத்தில் சமரசச் சாயலும் படராது. நமது நாட்டிலுள்ள சாதிக்குறைபாட்டைக் களைய அவ்வப்போது தோன்றிய பெரியோர் பெருமுயற்சி செய்தார். அம்முயற்சிகள் யாவும் விழலுக்கிறைத்த நீராயின.

நமது நாட்டில் ஒரு பெருங்கொலை நீண்டகாலமாக நிகழ்ந்து வருகிறது. அக்கொலை உலகிற்குப் புலனாவதில்லை. அதாவது பெரியோர் அறிவுறுத்திய கொள்கைகளைக் குழி வெட்டிப் புதைத்து, அவர்தம் உருவத்துக்கு மட்டும் வந்தனை வழிபாடு செய்வது. இப்படி ஓர் ஒழுக்கம் நீண்ட நாள் வழக்கிலிருந்து வருகிறது.

இற்றைக்குச் சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னர்த் தமிழ் நாட்டில் வதிந்து மறைந்த நம் இராமலிங்க சுவாமிகள், சாதிமத வேறுபாடுகளைப் பலவுரையால் மறுத்துச் சமரச ஞானத்தை அறிவுறுத்திக் கோயில்களெல்லாஞ் சாதிக் கோயில்களாக மாறியது கண்டு, எல்லாரும் போந்து வழிபடுவதற்கெனச் சமரசக் கோயிலை அமைத்துச் சென்றார். சமரசம் என்பது நாடு, மொழி, சமயநெறி, சாதி முதலியவற்றில் கட்டுப்படாது கடந்து நிற்பது.

ஸ்ரீ ஆனந்தகுமார்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**விடை**

**சமரசம்**

எல்லாக் கொடுமைகளிலும் பெருங்கொடுமை பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவது. பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் உள்ளத்தில் சமரசச் சாயல் படராது. நமது நாட்டிலுள்ள சாதிக்குறைபாட்டைப் போக்க பல பெரியோர் முயற்சித்தனர். ஆனால், அவை வீணாகின. நம் நாட்டில் பெருங்கொலை ஒன்று நீண்டகாலமாக நடந்து வருகிறது. பெரியோரின் கருத்துகளைப் புதைத்துவிட்டு, அவர்களின் உருவத்துக்கு மட்டும் வழிபாடு செய்வது. சாதிமத வேறுபாடுகளை மறுத்துச் சமரசக் கோயிலை அமைத்தவர், வள்ளலார். சமரசம் என்பது நாடு, மொழி, சமயநெறி, சாதி முதலியவற்றில் கட்டுப்படாது கடந்து நிற்பது.

## மாதிரி 3

சங்கக் கால மக்கள் பற்பல இடங்களிலும் பற்பல தொழில்களை உடையவர்களாயிருந்தாலும் எல்லாரும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்ததுபோலவே ஒருவருக்கொருவர் சிறிதும் வேறுபாடில்லாமல் உயர்ந்த அன்பு வாழ்க்கையில் விளங்கியிருந்தனர். ‘எல்லாரும் இந்நாட்டு மக்கள்; எல்லாருக்கும் ஒரு தமிழ்மொழி உரியது; எல்லா ஊர்களும் ஓர் ஊர் போன்றனவே’ என்னும் ஒற்றுமை எண்ணம் அவர்களிடம் மேலோங்கியிருந்தது.

எல்லாரும் ஒன்றாக அமர்ந்து உணவு கொள்வார்கள். தமக்குள், கலந்த உறவோடு திருமணம் செய்துகொள்வதும் உண்டு. தமிழ் மக்களெல்லாரும் ஒருவருக்கொருவர் உறவினராகவே இருந்தனர். இதனால் அவர்களுக்கு எல்லாருடைய உதவிகளும்கிடைக்க இடமிருந்தது. நிலையான தொழி வகைகளாலும் கலையாத உறவின் முறைகளாலும் கவலை சிறிதுமின்றி மனவொற்றுமையாய் அவர்கள் மகிழ்ந்து வாழ்ந்திருந்தமை, அவர்களது களங்கமற்ற அழகிய உள்ளத்தை எடுத்துக் காட்டுகின்றது. தம்மோடு பழகியவர்கள் தமக்கு நஞ்சு ஊட்டினும், தம்மவர்கள் என்னுங் கண்ணோட்டத்தால் அதனை மறாமல் உண்டு, மேலும் அவர்களோடு பழகும் நோக்கமுடையவர்களாக அக்காலப் பெரியோர்கள் வாழ்ந்திருந்தார்களாம்.

இத்தகைய மேன்மையை அறியும்போது நமக்கு உள்ளம் மிக உருகுகின்றது. இத்தகைய கலந்த மனப்பான்மையையே அவர்கள் நாகரிகம் என்றும் கருதினார்களென்றால், அவர்கள் உள்ளமாட்சிமைதான் எவ்வளவு பெரிது! தம்மைப் போன்ற மக்களிடத்தில் உயிர்நேயம் என்பது இல்லாதவரை ‘நாகரிகர்’ என்று சொல்வதற்கு வழியில்லையன்றோ! ஆனால், சங்ககால முன்னோர்களோ, அவ்வகையில் நனி நாகரிகராய் விளங்கியிருந்தனர்!

**நாகரிக வாழ்க்கை**

சங்கக் கால மக்கள் பல்வேறு தொழில்களைச் செய்தாலும், ஒரு தாய் மக்களைப் போல ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். எல்லா நாடும், எல்லா மக்களும், எல்லா ஊரும் ஒன்றே என்று எண்ணினர். எல்லாரும் ஒன்றாக அமர்ந்து உண்டனர். கலந்த உறவோடு திருமணம் செய்துகொண்டனர். நிலையான தொழிலாலும் கலையாத உறவுகளாளும் மகிழ்வுடன் வாழ்ந்தனர். தம்மோடு நெருங்கிப் பழகியவர்கள் நஞ்சு ஊட்டினும், அதனை மறுக்காமல் உண்டனர். இத்தகைய கலந்த மனப்பான்மையே நாகரிகம் ஆகும். தம்மைப் போன்ற மக்களிடத்தில் உயிர்நேயம் இல்லாதவரை நாகரிகர் என்று சொல்ல இயலாது. ஆனால், சங்ககால முன்னோர்கள் நனி நாகரிகராய் வாழ்ந்துள்ளனர்.

## மாதிரி 4

உலகம் படிப்படியாக முன்னேறிவருகிறது. அதன் முன்னேற்றத்தை உணராத காரணத்தால் சிலர் முற்போக்கை எதிர்க்கிறார்கள். சிலர் உலகம் முன்போல் இல்லையே என்று எண்ணிச் சோர்வு அடைகிறார்கள். சிலர் தாம் விரும்புவது போல் இல்லையே என்று உலகத்தைப் பழிக்கிறார்கள்.

உலகம் முன்னேறுகிறது என்றால், மலையும் காடும் ஏதோ மாறுதல் அடைகின்றன என்பது கருத்து அன்று. உலகத்தில் உள்ள மக்களின் வாழ்வில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதே கருத்து ஆகும். இந்த முன்னேற்றத்திற்கு இடையிடையே பல நிலைகளில் மனிதர் தடுமாறியது உண்டு. தடுமாறித் தடுமாறிப் புதிய புதிய அறிவும் ஊக்கமும் பெற்று மனிதர் முன்னேறி வந்திருக்கின்றனர். அதுதான் நமக்கெல்லாம் நம்பிக்கையும் உறுதியும் அளித்து வருகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பள்ளிக்கூடத்துச் சிறுவன் ஒருவன் எழுதக் கற்றுக் கொண்ட பிறகு, பலகையும் பலப்பமும் தனக்குச் செய்த உதவியைப் போற்றுவது இயற்கை. ஆனால் எழுத்துக் கல்வி பெருமை உடையது என்று உணராமல், பலகையும் பலப்பமும் உயர்ந்தவை, சிறந்தவை என்று மயங்கினால், அதை அவனுடைய வாழ்வில் நேர்ந்த ஒரு தடுமாற்றம் என்றே கூற வேண்டும். அப்படிப்பட்ட தடுமாற்றங்கள் மனித வரலாற்றில் பல நேர்ந்தது உண்டு.

**முன்னேற்றம்**

உலகம் நாளுக்குநாள் முன்னேறி வருகிறது. அதன் முன்னேற்றத்தை உணராமல் சிலர் முற்போக்கை எதிர்க்கின்றனர். சிலர் உலகம் தாங்கள் விரும்பியது போல் இல்லை என்று பழிக்கிறார்கள். உலகம் முன்னேறுகிறது என்பது, மக்களின் வாழ்வில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன என்று பொருள். மனிதர்கள் நாள்தோறும் புது புது அறிவும் ஊக்கமும் பெற்று, முன்னேறி வருகின்றனர். அதில் சில தடுமாற்றங்களும் ஏற்படுகின்றன. பள்ளிக்கூடத்துச் சிறுவன் எழுத்துக் கல்வியைப் போற்றாமல், வெறும் பலகையையும் பலப்பத்தையும் போற்றுவது அவன் வாழ்வில் ஏற்பட்ட பெரும் தடுமாற்றம். அப்படிப்பட்ட தடுமாற்றங்கள் மனித வரலாற்றில் பல நேர்ந்தது உண்டு.

## மாதிரி 5

கி.பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் தமிழ்நாட்டின் கோயில் கட்டடக்கலையைப் பற்றி அறியமுடிகிறது. தமிழகத்தின் தென்பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பிள்ளையார்பட்டி என்னும் ஊரின் குடைவரைக் கோயிலே தமிழகத்தில் இன்று காணப்பெறும் குடைவரைக் கோயில்களுள் பழமையானதாகும். இது பாண்டியர்களது படைப்பாகும். இதனை அடுத்து, தமிழகத்தின் பல பகுதிகளில் குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல்லவர்கள், பாண்டியர்கள், அதியர், முத்தரையர் ஆகியோர் அமைத்தவைகளாகும். அவை கி.பி. 9 ஆம் நூற்றாண்டோடு குடைவரைக் கோயில்கள் அமைக்கும் பணி நின்று விட்டது.

தனித்தனி குன்றுகளைச் செதுக்கிக் கோயிலாக்கும் முறை பல்லவர், பாண்டியர் காலத்தில் இருந்திருக்கிறது. மாமல்லபுரத்தில் உள்ள ஐந்து ரதங்களும் கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயிலும் முறையே அவர்களது படைப்புகளாகும். இம்முறை கி.பி. 8 ஆம் நூற்றாண்டளவிலேயே நின்றுவிட்டது.

கற்களை ஒன்றோடு ஒன்றாக அடுக்கி அமைக்கும் கோயிற்பணி பல்லவர், பாண்டியர் காலந்தொட்டு ஏற்பட்டு இந்நாள் வரை தொடர்ந்து நிலவி வருகிறது. பல்லவர் காலத்துச் சிறந்தவைகளாக மாமல்லபுரத்துக் கடற்கரைக்கோயிலையும் காஞ்சிபுரத்துக் கைலாயநாதர் கோயிலையும் பாண்டியர் காலத்ததாகத் திருப்பத்தூர் திருத்தளிநாதர் கோயிலையும் சோழர் காலத்துச் சிறந்தவைகளாக நார்த்தாமலை விசயாலய சோழீச்சுரம், தஞ்சை இராசராசேச்சுரம் என்னும் தஞ்சைப் பெருவுடையார் கோயில், கங்கைகொண்ட சோழபுரத்துக் கங்கொண்ட சோழீச்சுரம், தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில், திரிபுவனம் திரிபுவனன வீரேச்சுரம் முதலானவற்றைக் காட்டலாம்.

**கோயில் கட்டடக்கலை**

தமிழகத்தில் கோயிற் கட்டக்கலைகள் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் காணப்படுகின்றன. பிள்ளையார்பட்டி என்னும் ஊரில் உள்ள குடைவரைக் கோயிலே தமிழகத்தில் உள்ள பழமையான குடைவரைக் கோயிலாகும். பல்லவர்கள், பாண்டியர்கள், அதியர் போன்றோர் குடைவரைக் கோயில்களை அமைத்தனர். தனித்தனிக் குன்றுகளைக் கோயிலாக்கும் முறை பல்லவர், பாண்டியர் காலத்தில் இருந்தது. மாமல்லபுர கோயில்களும், கழுகுமலை கோயில்களும் இம்முறையில் அமைக்கப்பட்டவை ஆகும். கற்களை ஒன்றோடு ஒன்றாக அடுக்கி அமைக்கும் கோயிற்பணி பல்லவர், பாண்டியர் காலம் முதல் இன்றுவரை நிலவி வருகிறது.

www.Padasalai.Net

ஏழாம் அறிவு ஆசிரியர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## குறிப்புகளைக் கொண்டு பத்தியாக எழுதுதல்

### மாதிரி 1

**பல்துறை வளர்ச்சி - மொழிபெயர்ப்பின் தேவை - ஊடகத்தின் வளர்ச்சி - விளம்பர மொழி - நாளிதழில் மொழிபெயர்ப்பு - அன்றாட பணிகளில் மொழிபெயர்ப்பு**

**மொழிபெயர்ப்பின் தேவைகள்**

பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. மொழிபெயர்ப்பு இல்லை என்றால் உலகம் முழுவதையும் இணைக்கக் கூடிய ஊடகத்தின் வளர்ச்சி இல்லை. தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ் என அனைத்து வகையான ஊடகங்களின் வளர்ச்சிக்கும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாக அமைகிறது. விளம்பர மொழிக்கு மொழி பெயர்ப்பு தேவைப்படுகிறது. நாம் நாள்தோறும் படிக்கும் நாளிதழ் படிப்பு மொழிபெயர்ப்பின் மூலமாகவே சாத்தியமாகிறது. காலை முதல் இரவு வரை நாம் மேற்கொள்ளும் அனைத்து வகையான பணிகளிலும் மொழிபெயர்ப்பு கட்டாயம் இடம்பெறுகின்றது.

### மாதிரி 2

**நாட்டுப்புறக் கலை - தெருக்கூத்து - பெயர்க் காரணம் - இசையுடன் கூடிய கலை - வெளிப்படும்விதம் - கோவில் சார்ந்த கலை - வேளாண்மை செய்பவரின் கலை - அருச்சுனன் தபசு - தெருக்கூத்தின் வளர்ச்சி - கதகளி.**

**தெருக்கூத்து**

நாட்டுப்புறக் கலைகளுள் முக்கியமான இடத்தைப் பெறும் கலை தெருக்கூத்து. இது, நிகழ்த்தும் இடத்தை மையமாகக் கொண்டு தெருக்கூத்து என்று பெயர் பெற்றது. தெருக்கூத்து இசையுடன் கூடிய உடல் அசைவியக்கத்துடன் தொடர்புடையது. திறந்தவெளியை ஆடுகளமாக்கி, ஒப்பனைகளுடன் இக்கலை வெளிப்படுத்தப்படுகிறது. தெருக்களில் நடத்தப்பட்ட இக்கலை, கோவில் சார்ந்த கலையாக வளர்ச்சிப் பெற்றுள்ளது. தெருக்கூத்து, வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்தது. அருச்சுனன் தபசு என்பது மழை வேண்டி நிகழ்த்தப்படும் கூத்தாகும். இன்றைய காலக்கட்டத்தில், தெருக்கூத்து பொழுதுபோக்குக் கூறுகளைப் பெற்று நாடகமாக வளர்ச்சியடைந்துள்ளது. தெருக்கூத்தின் செவ்வியல் வடிவமாக கதகளி திகழ்கிறது.

### மாதிரி 3

**பண்டைய தமிழர் வாழ்வு - வீரமும் கொடையும் - போரில் அறம் - கொடை சிறப்பு - அரசியல் அறம் - வணிக நோக்கற்ற அறம் - அறங்கூறவையம்.**

**பண்டைய தமிழர் வாழ்வு**

பண்டைய தமிழர் வாழ்வில் வீரமும் கொடையும் சிறப்பிடம் பெற்று திகழ்ந்தது. தங்களின் வீரத்தை வெளிப்படுத்தும் களமாகிய போர்க்களத்திலும் தமிழர்கள் அறத்தைப் பின்பற்றியே போரிட்டனர் என்ற செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. வாள் எடுத்துப் போரிட்ட கைகளினால் வாரி வழங்கியச் சிறப்பினை உடையவர்கள் பழந்தமிழர்கள். தன்னிடம் இல்லை என்று வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாமல் வழங்கி வந்தனர். மன்னன் அறம் தவறாமல், ஒருபக்கம் சாரா-மல் நடுநிலையாக நின்று ஆட்சி செலுத்தினான். தமிழர்கள் கொடுப்பதும் குறைவுபடாது கொள்வதும் மிகைபடாது வணிகம் செய்தனர். பல்வேறு கலங்களைப் பயன்படுத்தி திரைகடல் ஓடி திரவியம் தேடிவந்தனர். மக்களுக்கு நீதி வழங்குவதற்கு அறங்கூறவையம் என்ற அமைப்பை ஏற்படுத்தி வைத்திருந்தனர். உலகமே கண்டு வியக்கும் வண்ணம் பழந்தமிழர் வாழ்வு நடத்தினர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள உருவகங்களையும் உவமைகளையும் பட்டியலிடுக. உருவகங்களை உவமைகளாக மாற்றுக. உவமைகளை எவ்வகை உவமைகள் என்று எழுதுக.**

விழிச்சுடர் வாசலில் உட்கார்ந்திருந்தாள். அவளது எண்ணவலையில் மின்னல்களைப் போன்ற சொற்கள் தோன்றி மறைந்தன. அடுக்கிவைக்கப்படாத புத்தங்களைப்போலக் குழம்பிய எண்ணங்களை ஒழுங்குபடுத்த நினைத்தாள். நேரம் நத்தையைப்போல் மெதுவாக நகர்ந்தது. அண்ணாந்து பார்த்தாள். நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம் அம்மாவை நினைவூட்டியது. பூனைக்குட்டியைப்போல அம்மாவின் முந்தானைக்குள் சுருண்டுகொள்ள நினைத்தாள். பூனைக்குட்டியை மடியில் வைத்துக்கொண்டதைப்போல அம்மாவின் கதகதப்பை உணர்ந்தாள். பசிக்கயிற்றால் சுண்டிவிடப்பட்டவள், பூட்டியிருந்த வீட்டுக்கதவின்மேல் சாய்ந்தபடி அம்மாவின் வருகைக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

**உருவகங்கள்:-**

- **விழிச்சுடர்**
- **எண்ணவலை**
- **நீலப்பட்டு**
- **உடுத்திய வானம்**
- **பசிக்கயிறு**

**உவமைகள்:-**

- **மின்னல்களைப் போன்று**
- **அடுக்கி வைக்கப்படாத புத்தகங்கள் போல**
- **நத்தையைப் போல**
- **பூனைக்குட்டியைப் போல**

**உருவகம் - உவமை:-**

- **விழிச்சுடர் - சுடர்விழி**
- **எண்ணவலை - வலையெண்ணம்**
- **நீலப்பட்டு - பட்டுநீலம்**
- **பசிக்கயிறு - கயிற்றுப்பசி**

**உவமை - உவமையின் வகை:-**

- **விழிச்சுடர் - தொழில் உவமை**
- **எண்ணவலை - வடிவ உவமை**
- **நீலப்பட்டு - நிற உவமை**
- **பசிக்கயிறு - தொழில் உவமை**

**கதையைப் படித்துப் பொருளுணர்ந்து நிகழ்வை உரையாடலாக மாற்றுக. கதையில் காணலாகும்எவையேனும்ஐந்துபிறமொழிச்சொற்களுக்குஉரியதமிழ்ச்சொற்களைஎழுதுக.**

அலுவலகத்துக்குள் நுழைகையில் போன் அடித்தது. எடுத்துப் பேசினாள். மறுமுனையில் 'உடனே ஆபிஸ்க்கு லீவ் போட்டுட்டு என் ஆபிஸ்க்கு வா கவி. இன்ஷூரன்ஸ் பேப்பர்ல கையெழுத்து போடணும். உன் போட்டோவையும் சஞ்சுவின் போட்டோவையும் எடுத்துட்டு வா' என்று சொல்லி முடித்ததும் போனை துண்டித்தான் செந்தில். ஏற்கெனவே தன் ஆபிஸில் நடக்க இருக்கும் ஆடிட்-ஐ நினைத்துக் கொண்டிருந்த அவளுக்கு செந்திலின் போன் பதற்றத்தையும் குழப்பத்தையம் தந்தது. குழப்பத்துடன் போனை வைக்கையில் மறுபடியும் போன் ஒலித்தது. இம்முறை சஞ்சுவின் பள்ளி நம்பர். ஒரு நொடி பதற்றமாகிவிட்டது. எதற்கு அழைக்கிறார்களோ என்று பயந்தபடி போனை எடுத்தேன். போனில் சஞ்சுவின் குரல். 'அம்மா நான்தான்' என்றான். 'என்னடா உடம்புக்கு எதாவதா?' என்றேன் டென்ஷனை மறைத்தபடி. 'அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா. மிஸ் கிட்ட ஸ்பெஷல் பர்மிஷன் கேட்டு உனக்கு போன் பன்றேன். காலையிலேயே சொல்ல நினைச்சேன். மறந்திட்டேன். ஸாரிம்மா' என்றான். 'எதுக்குடா ஸாரி' என்றேன். 'இன்னிக்கு உனக்கு பர்த்டேம்மா. மறந்துட்டியா' என்றான். அட ஆமாம். ஜூலை பத்து. இப்படியா மறப்பேன். செந்தில்கூட நினைவில் வைத்து வாழ்த்தவில்லை. சஞ்சு கொஞ்சும் குரலில் 'ம்மா நைட்கூட ஞாபகம் இருந்துச்சு காலைல டக்குனு மறந்துட்டேன். சாரிம்மா ஹாப்பி பர்த்டே டூ யூ' என்றான். ஒரு நொடி எதுவும் பேச முடியாமல் திக்கிவிட்டேன். அவனே தொடர்ந்து 'அம்மா உனக்காக ஒரு சூரியகாந்திப்பூ வரைஞ்சி வச்சிருக்கேன். ஈவ்னிங் சீக்கிரமா வா தரேன் ஓகேவா?' என்றான்.

ஞானஒளி பதிப்பகம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

'தாங்க்ஸ்டா செல்லம், தாங்க்யூ ஸோ மச்' என்றேன். அந்த நாளின் சுமைகள் எல்லாம் கரைந்து மனசு நெகிழ்ந்து உருகியது. ரயில், அலுவலகம், செந்தில் என எல்லாம் மறைந்து போய், நானும் சஞ்சுவும் கைகள் கோர்த்து நடப்பதுபோல இருந்தது.

(கவி தன் அலுவலகத்திற்குள் நுழைகிறாள். அப்போது அழைப்பொலி கைப்பேசியில் எழுகிறது. கைப்பேசியை எடுத்து காதருகே வைத்து,)

**கவி:** ஹலோ! யார் பேசுறீங்க?

**செந்தில்:** நான்தான் கவி. உடனே ஆபிஸ்க்கு லீவ் போட்டுட்டு என் ஆபிஸ்க்கு வா கவி. இன்ஷூரன்ஸ் பேப்பர்ல கையெழுத்து போடணும். உன் போட்டோவையும் சஞ்சுவின் போட்டோவையும் எடுத்துட்டு வா.

**கவி:** (மனத்திற்குள்) என்ன இது! இப்படி திடீர்னு வரச் சொன்னா? என்ன ஆச்சோ?

(மறுபடியும் போன் ஒலிக்கிறது. இம்முறை சஞ்சுவின் பள்ளியில் இருந்து அழைப்பு வருகிறது.)

**சஞ்சு:** அம்மா! நான்தான் சஞ்சு!

**கவி:** என்னடா? உடம்பு ஏதாவது சரியில்லையா?

**சஞ்சு:** அதெல்லாம் ஒன்னும் இல்ல அம்மா. காலையில சொல்ல நினைச்சே. மறந்துட்டேன். சாரிமா!

**கவி:** எதுக்குடா சாரி சொல்ற?

**சஞ்சு:** இன்னிக்கு உனக்கு பர்த்டேம்மா. மறந்துட்டியா?

**கவி:** ஆமாம், இன்று ஜுலை பத்து. சே! நானே மறந்துட்டேனே! செந்தில் கூட நினைவில் வைத்து வாழ்த்தவில்லையே!

**சஞ்சு:** நேத்து நைட்கூட ஞாபகம் இருந்துச்சு. காலைல மறந்துட்டேன். சாரிம்மா. ஹாப்பி பர்த்டே டு யூ

(மகனின் வாழ்த்தொலி அவளை உறைய வைத்துவிட்டது.)

**சஞ்சு:** அம்மா! உனக்காக ஒரு சூரிய காந்திப்பூ வரைஞ்சு வச்சிருக்கேன். ஈவினிங் சீக்கிரம் வா, தரேன். ஓகேவா?

**கவி:** தாங்க்ஸ்டா செல்லம். தாங்க்யூ ஸோ மச்.

(அன்று அவளை அழுத்திக் கொண்டிருந்த சுமைகள் எல்லாம் கரைந்தன போல் அவள் உணர்ந்தாள். அலுவலகம், கணவர் என எல்லாம் மறைந்துவிட்ட நிலையில், தான் தன் மகன் சஞ்சுவுடன் கை கோத்து நடப்பது போல் உணர்ந்தாள்.)

| பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| போன் | **தொலைபேசி** |
| ஆபிஸ் | **அலுவலகம்** |
| லீவு | **விடுப்பு** |
| இன்ஷூரன்ஸ் | **காப்பீடு** |
| பேப்பர் | **தாள்** |
| போட்டோ | **புகைப்படம்** |

| நம்பர் | எண் |
|---|---|
| மிஸ் | **பெண் ஆசிரியர்** |
| ஸ்பெஷல் பர்மிஷன் | **சிறப்பு அனுமதி** |
| பர்த்டே | **பிறந்தநாள்** |
| நைட் | **இரவு** |
| ஈவ்னிங் | **மாலை** |
| தாங்க்யூ | **நன்றி** |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# அலகிடுதல்

★ **நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நிலை/யின் | நிரை நேர் | தேமா |
| திரி/யா/து | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| அடங்/கியான் | நிரை நிரை | கருவிளம் |
| தோற்/றம் | நேர் நேர் | தேமா |
| மலை/யினும் | நிரை நிரை | கருவிளம் |
| மா/ணப் | நேர் நேர் | தேமா |
| பெரி/து | நிரைபு | பிறப்பு |

→ இக்குறட்பா ‘பிறப்பு’ எனும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

★ **யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| யா/கா/வார் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| ஆ/யினும் | நிரை நேர் | புளிமா |
| நா/காக்/க | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| கா/வாக்/கால் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| சோ/காப்/பர் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| சொல்/லிழுக்/குப் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| பட்/டு | நேர்பு | காசு |

→ இக்குறட்பா ‘காசு’ எனும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

★ **தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| தீ/யினால் | நேர் நிரை | கூவிளம் |
| சுட்/டபுண் | நேர் நிரை | கூவிளம் |
| உள்/ளாறும் | நேர் நிரை | கூவிளம் |
| ஆ/றா/தே | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| நா/வினால் | நேர் நிரை | கூவிளம் |
| சுட்/ட | நேர் நேர் | தேமா |
| வடு | நிரை | மலர் |

→ இக்குறட்பா ‘மலர்’ எனும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

★ **ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன்று இல்.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| ஒன்/றா | நேர் நேர் | தேமா |
| உல/கத்/து | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| உயர்ந்/த | நிரை நேர் | புளிமா |
| புக/ழல்/லால் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| பொன்/றா/து | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| நிற்/பதொன்/று | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| இல் | நேர் | நாள் |

→ இக்குறட்பா ‘நாள்’ எனும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## நிற்க அதற்குத் தக

| **கோபம் வரும்போது.** | **உடலில் நிகழும் மாற்றங்கள்** | **மனதில் நிகழும் மாற்றங்கள்** | **நான் செய்ய வேண்டியது** |
|---|---|---|---|
| கோபத்தை உடனடியாக வெளிப்படுத்துவது | முகம் இயல்பு நிலையிலிருந்து மாறுதல் | பதற்றம் | கோபத்தைக் கட்டுப்படுத்திப் பொறுமையுடன் செயல்படுவேன் |
| உள்ளேயே ஒளித்துக் கொள்வது | கை கால் நடுக்கம் | தடுமாற்றம் | |
| அமைதியாவது | வியர்வை பெருகுதல் | தவறான முடிவெடுத்தல் | |
| எதிர்மறையாகக் காட்டுவது | தலை வலித்தல் | பொறுமை இழத்தல் | |

**முன்மாதிரியானவர்கள் என்று யாரைக் கருதுவீர்கள்? அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் நற்பண்புகளைக் குறிப்பிடுக.**

| **முன்மாதிரியானவர்கள்** | நான் விரும்பிய நற்பண்பு |
|---|---|
| **தந்தை** | நேரந்தவறாமை |
| **தொடக்கப்பள்ளி ஆசிரியர்** | எதற்கும் அஞ்சாமை |
| **உறவினர்** | எதையும் பெரிய துன்பமாக எண்ணாமை |

| **வேலைகள்** | **ஆண்** | **பெண்** | **இருவரும்** | **ஆண் / பெண் ஏதேனும் ஒன்றை மட்டும் தேர்வு செய்தால் அதற்கான காரணத்தை எழுதுக.** |
|---|---|---|---|---|
| பூ கட்டுவது | - | ★ | - | பூ கட்டுவது பொறுமையாகச் செய்ய வேண்யடிய செயல் எனவே ஆண்கள் அவ்வேளையைச் செய்வது கடினம். |
| கணினியில் பணி | - | - | ★ | - |
| காவலர் | ★ | - | - | பல்வேறு இடர்களை எதிர்க்கொள்ள நேரிடும். எனவே, பெண்கள் அவ் வேளையைச் செய்வது கடினம். |
| சமைப்பது | - | ★ | - | பெண்களால்தான் உணவை ஆரோக்கி யத்துடனும் சுவையுடனும் தயாரிக்க முடியும். |
| மருத்துவம் | - | - | ★ | - |
| வழக்கறிஞர் | - | - | ★ | - |
| வீட்டின் தூய்மை | - | - | ★ | - |
| தொழில் முனைவோர் | - | - | ★ | - |

**கல்வி நம்மைப் பண்படுத்த வேண்டும் நாம் பண்பட்டிருக்கிறோமா?**

| **கல்வியின் விளைவு** | **என்ன செய்தீர்கள் / செய்வீர்கள்?** |
|---|---|
| பெரியவர்களுக்கு மதிப்பளித்தல் | அவர்கள் எது கூறினாலும் நம் நன்மைக்கே என்று எண்ணுவேன். |
| பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்தல் | யார் எதைக் கூறினாலும் அதில் உள்ள உண்மை தன்மையை அறிந்துகொள்வேன். |
| பொறுமையைக் கடைப்பிடித்தல் | எந்த சூழலிலும் என் பொறுமையைக் கைவிடமாட்டேன். |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| தன்னை அறிதல், தன்னம்பிக்கை வளர்த்தல் | நான் எந்த துறையில் ஆர்வமாக உள்ளேன் என்பதை அறிந்து கொண்டு, அதில் என்னை ஈடுபடுத்திக் கொள்வேன். |
| சமத்துவம் பேணுதல் | யாரிடமும் பகைமை பாராட்டாமல் சமத்துவத்துடன் பழகுவேன். |
| உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் | எல்லா உயிர்களிடத்திலும் அன்புடன் பழகுவேன். |

| நாகரிகம் | கடைப்பிடிப்போம் |
|---|---|
| கலைவாணன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறான். கடைக்குச் சென்ற அவன் தாத்தா பை நிறையப் பொருள்களைத் தூக்கிக் கொண்டு வருகிறார், சுமை தாங்காது உதவிக்கு அழைக்கிறார். தொலைக்காட்சியில் வைத்தகண் வாங்காமல் நிகழ்ச்சி ஒன்றினைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவன் என்ன செய்ய வேண்டும்? | தான் பார்க்கும் நிகழ்ச்சியைச் சற்று நேரம் நிறுத்தி வைத்துவிட்டு, தாத்தாவிற்குச் சென்று உதவ வேண்டும். |
| உங்களது வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்திருக்கிறார். முன்னறிவிப்பின்றி வந்திருக்கும் அவர் மிகவும் களைப்புடன் காணப்படுகிறார். நீங்கள் அவரை எவ்விதம் வரவேற்பீர்கள்? | அவரை வரவேற்று, நல்ல முறையில் உபசரிப்பேன். |

**நம் நாட்டின் பெருமைகளில் ஒன்று தொன்மைச் சின்னங்கள். அவை நம் வரலாற்றைப் பறைசாற்றுபவை. அவற்றை அழியாமல் பாதுகாக்க நாம் என்ன செய்யப்போகிறோம்? பட்டியலிடுக.**

➔ பாரம்பரிய சின்னங்களைச் சேதப்படுத்தக் கூடாது. கோவில் சுவர்களில் கிறுக்கக் கூடாது.

➔ பாரம்பரியம் மிக்க இடங்களைப் பார்க்க போகும்போது, குப்பைகளைக் கொட்டக் கூடாது.

**உம்முடைய பொறுப்பை உணர்ந்து கட்டங்களை நிறைவு செய்க.**

| அடையாளம் | பெருமிதம் |
|---|---|
| இந்தியன் | ஒருமைப்பாட்டுணர்வுடன் சமூகக் கூட்டமைப்பில் இணைந்து வாழ்கிறேன். |
| தமிழன் | உலகின் பண்பட்ட நாகரிகத்தைச் சேர்ந்தவன். |
| மாணவன் | எதிர்கால இந்தியாவை உருவாக்கும் கடமை உடையவன். |
| மகன் / மகள் | என்னைப் பெற்றதற்காக பெருமைக் கொள்ளும்படி நடந்துகொள்வேன். |
| சகோதரன் / சகோதரி | உடன்பிறந்தவருக்கு எந்த நிலையிலும் துணை நிற்பேன். |
| தோழன் / தோழி | நட்புக்கு எந்த ஒரு தீங்கும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வேன். |

**மனித இனம் கூடிவாழும் இயல்புடையது. நாம் அன்றாடம் பலருடன் பழகக்கூடிய இன்றைய சூழலில் ஏற்படக்கூடிய சிறிய சிக்கல்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?**

| சிக்கல் | தீர்வு |
|---|---|
| பக்கத்து வீட்டுக்காரர், மிகச் சத்தமாகப் பாடல் கேட்டுக் கொண்டிருக்கிறார் | அவரிடம் சென்று சத்தத்தைக் குறைக்கும்படி அமைதியான முறையில் கூறுவேன். |
| நீங்கள் மட்டைப்பந்து போட்டியைப் பார்க்க வேண்டும் என்று விரும்பும் நேரத்தில் உங்கள் தங்கை தொலைக்காட்சித் தொடர் ஒன்றைப்பார்த்துக் கொண்டிருக்கிறார். | தங்கையிடம் என் விருப்பத்தைக் கூறுவேன். அவள் மறுத்துவிட்டால் விட்டுவிடுவேன். |
| உங்கள் அருகில் அமர்ந்திருக்கும் உங்கள் வகுப்புத் தோழர், உங்கள் மேசை மீது உணவினை இறைத்தபடி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். | அவ்வாறு செய்யக்கூடாது என்று அவன் புரிந்துக்கொள்ளும்படி பக்குவமாக எடுத்துக்கூறுவேன். |
| நீங்கள் அடுத்தநாள் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருக்கும்போது, உங்கள் வகுப்புத் தோழர், பாடத்தில் ஏற்பட்ட ஐயத்திற்காக உங்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கிறார். | அவனின் ஐயத்தை உடனடியாகத் தீர்த்துவிட்டு, என் படிப்பைத் தொடருவேன். |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# அறிவை விரிவு செய்

| நூற்பெயர் | ஆசிரியர் |
|---|---|
| நாடற்றவன் | அ. முத்துலிங்கம் |
| நல்ல தமிழ் எழுத வேண்டுமா? | அ.கி. பரந்தாமனார் |
| உயிர்த்தெழும் காலத்துக்காக | சு. வில்வரத்தினம் |
| இயற்கை வேளாண்மை | கோ. நம்மாழ்வார் |
| பனைமரமே பனைமரமே | ஆ. சிவசுப்பிரமணியன் |
| யானைகள் - அழியும் பேருயிர் | ச. முகமது அலி, க. யோகானந்த் |
| பறவை உலகம் | சலீம் அலி |
| Elephants: Majestic Creatures of the wild | Shoshani. J. |
| சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம் | ஆர். பாலகிருஷ்ணன் |
| காவடிச் சிந்து | அண்ணாமலையார் |
| வாடிவாசல் | சி.சு. செல்லப்பா |
| எழுத்து இதழ்த் தொகுப்பு | தொகுப்பாசிரியர் கி.அ. சச்சிதானந்தன் |
| அக்னிச்சிறகுகள் | அப்துல்கலாம் |
| அறிவியல் தமிழ் | வா.செ. குழந்தைசாமி |
| கணினியை விஞ்சும் மனித மூளை | கா. விசயரத்தினம் |
| மறைக்கப்பட்ட இந்தியா | எஸ். இராமகிருஷ்ணன் |
| பிரபஞ்சன் சிறுகதைகள் | பிரபஞ்சன் |
| சிவானந்த நடனம் | ஆனந்த குமாரசுவாமி |
| தஞ்சைப் பெருவுடையார் கோயில் - இராசராசேச்சுரம் - கோயில் நுட்பம் | குடவாயில்பாலசுப்பிரமணியன் |
| ஆத்மாநாம் கவிதைகள் | ஆத்மாநாம் |
| ஜீவா வாழ்க்கை வரலாறு | கே. பால தண்டாயுதம் |
| சொல்லாக்கம் | இ. மறைமலை |
| என் வாழ்க்கை என் கையில் | ஞாநி |
| மனிதவாழ்வை மாற்றியமைத்த கண்டுபிடிப்பாளர்கள் | ஆர்.கே.வி. கோபாலகிருஷ்ணன் |
| மொழிபெயர்ப்பு | அய்யாசாமி |
| புதுமைப்பித்தன் கட்டுரைகள் | புதுமைப்பித்தன் |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**புத்தகத்திலுள்ள அனைத்து விரைவுக் குறியீட்டுச் (QR Code) செய்திகளையும் காண இங்கே ஸ்கேன் செய்யவும்...**

## பொதுத்தேர்வுக்கான நேர மேலாண்மை

☞ மொத்த கால அளவு **15** நிமிடங்கள் + **180** நிமிடங்கள்

☞ வினாத்தாள் முழுவதையும் படிப்பதற்கு **15** நிமிடங்கள்

| வினாப் பகுதிகள் | விடைகளின் அளவு | நேரம் ஒதுக்கீடு |
|---|---|---|
| ஒரு மதிப்பெண் பகுதி<br>**14 x 1 = 14** | ஒற்றைச் சொல் | **14** நிமிடங்கள் |
| இரண்டு மதிப்பெண் பகுதி<br>**3+3+7 = 12 12X 2 = 24** | மூன்று வரிகள்<br>(18 சொற்கள் முதல்<br>22 சொற்கள் வரை) | ஒவ்வொரு விடைக்கும்<br>**4** நிமிடங்கள் ஆகும்.<br>**12X4 = 48** நிமிடங்கள் |
| நான்கு மதிப்பெண் பகுதி<br>**2+2+3 = 7** | ஆறு வரிகள்<br>(36 சொற்கள் முதல்<br>48 சொற்கள் வரை) | ஒவ்வொரு விடைக்கும் **8** நிமிடங்கள் ஆகும்<br>**7x8 = 56** நிமிடங்கள் |
| ஆறு மதிப்பெண் பகுதி<br>**1 + 1 + 1 =3** | இருபது வரிகள்<br>(80 சொற்கள் முதல்<br>120 சொற்கள் வரை) | ஒவ்வொரு விடைக்கும்<br>**15** நிமிடங்கள் ஆகும்<br>**15X3= 45** |
| மனப்பாடப்பகுதி<br>**1 + 1 = 2** | செய்யுள் பகுதி 4 அல்லது 6 வரிகள்<br>திருக்குறள் 2 வரிகள்<br>நூல்- ஆசிரியர் பெயர்கள்<br>பாவகை குறிப்பிடவும் | 4 வரிப்பாடலுக்கு **6** நிமிடம்<br>2 வரித்திருக்குறளுக்கு **4** நிமிடம்<br>பெயர்கள் பாவகைக்கு **2** நிமிடங்கள் |

☞ விடைகளைச் சரிபார்க்க **5** நிமிடங்கள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பொதுத் தேர்வு

## மாதிரி வினாத்தாள்

கால அளவு : 15 + 3.00 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள்: 90

குறிப்பு: அ) விடைகள் குறித்த அளவினதாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

ஆ) வினாத்தாளில் ஏதேனும் அச்சுப்பிழை இருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

இ) விடைகளுக்கு நீலம் அல்லது கருப்பு நிற எழுதுகோலை மட்டும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

**(அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**(ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14 x 1 = 14

1) “மலரில் ஆரளி இந்துளம் பாடும்” எனத் தொடங்கும் பாடலின் ஆசிரியர் ---------.

அ) பிரமிள் ஆ) பெரியவன் கவிராயர்

இ) அழகிய பெரியவன் ஈ) போதனார்

2) பின்வருவனவற்றுள் அப்துல் ரகுமானின் நூல் அல்லாததைத் தேர்ந்தெடுக்க.

அ) பால்வீதி ஆ) சேர தாண்டவம் இ) பித்தன் ஈ) ஆலாபனை

3) “போதியின் நிழலும் சிலுவையும் பிறையும்” - இவ்வடிகளில் இன்குலாப் வலியுறுத்துவது -------------.

அ) சகோதரத்துவம் ஆ) சமத்துவம் இ) மதப்பற்று ஈ) அறம்

4) “சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்” என்னும் நூலை இயற்றியவர்

அ) ஆர். பாலகிருஷ்ணன் ஆ) சுந்தர ராமசாமி

இ) இந்திரன் ஈ) எஸ்.கே. கோவிந்தசாமி

5) ஆனந்தரங்கர் காலத்தில் 1 ரூபாய் என்பது ------------------- .

அ) 60 காசு ஆ) 5 பணம் இ) 8 பணம் ஈ) 24 பணம்

6) திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டுவது ------------------ .

அ) பகுதி ஆ) விகுதி இ) சந்தி ஈ) சாரியை

7) பாக்களைப் ஓசையோடு பொருத்துக.

1) வெண்பா - i) துள்ளலோசை 2) ஆசிரியப்பா - ii) செப்பலோசை

3) கலிப்பா - iii) தூங்கலோசை 4) வஞ்சிப்பா - iv) அகவலோசை

அ) i, ii, iii, iv ஆ) iv, iii, ii, i இ) iii, ii, iv, i ஈ) ii, iv, i, iii

8) காட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்குபவை ---------------- .

அ) யானை ஆ) புலி இ) சிங்கம் ஈ) மான்

9) தேவாரத்தில் உள்ள பண்களின் எண்ணிக்கை ---------------- .

அ) 20 ஆ) 18 இ) 23 ஈ) 22

10) பின்வருவனவற்றுள் தன்மைப் பன்மை வினைமுற்றுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) மருண்டெனன் ஆ) ஆடுகம் இ) கற்றேன் ஈ) உரைத்தாய்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11) "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதி பொருந்தாத சொல்

அ) புகழெனின் ஆ) சிறுகோல் இ) பயமில்லை ஈ) நீரோடை

12) பின்வருவனவற்றுள் வேற்றுமொழிச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) கட்டணம் ஆ) விண்ணப்பம் இ) நடைமுறை ஈ) நகல்

13) 'Globalisation' என்பதன் தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) தனியார்மயமாதல் ஆ) தாராளமயமாதல்

இ) உலகமயமாதல் ஈ) பொருள்முதல் வாதம்

14) பின்வரும் மலரின் நிலைகளை வரிசைப்படுத்துக.

அ) அலர் - வீ - செம்மல் - அரும்பு - போது

ஆ) வீ - செம்மல் - அரும்பு - போது - அலர்

இ) செம்மல் - அரும்பு - போது - அலர் - வீ

ஈ) அரும்பு - போது - அலர் - வீ - செம்மல்

**பகுதி - II**

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** **12 x 2 = 24**

**பிரிவு - 1**

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15) நிறைமணி தந்தவள் யார்? ஏன்?

16) குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?

17) "குறமகள் காக்கும் ஏனல் புறமும் தருதியோ? வாழிய மழையே" - இவ்வடிகளில் அமைந்துள்ள இறைச்சிப் பொருள் யாது?

18) உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

**பிரிவு - 2**

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19) மதிப்புக்கூட்டுப் பொருள் என்றால் என்ன? ஏன் அவ்வாறு அது அழைக்கப்படுகிறது?

20) சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

21) இராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் பணியில் இருந்ததற்கான சான்றுகள் யாவை?

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) அலர்ந்து ஆ) பிரிந்தோர்

23) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) பொற்சிலம்பு ஆ) புறந்தருதல்

24) மயங்கொலிச் சொற்களின் பொருள் அறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

வலி வளி வழி

25) தொடரிலுள்ள மரபுப்பிழையை நீக்கி எழுதுக.

செழியன் சோறு தின்று, பழம் பருகி, பால் உண்டு, உறங்கினான்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

26) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

இளமையின் சிறகை முறிக்காத இனியச் சூழலில், பிள்ளைகளுக்குப் பிடித்தப் பள்ளிக்கூடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றொருக் கனவு அனைவருக்கும் இருக்கும்.

27) உரிய நிறுத்தற்குறியிட்டு எழுதுக.

பெரிய மரத்தடிக்குப் பக்கத்திலே நின்னுக்கிட்டிருக்கு கீழே விழுந்தா அடிபட்டிரும் அதக் கொஞ்சம் சதுப்புப் பகுதிக்குக் கொண்டு வரணும் மத்த யானைகள் விவரம் புரியாம ரெஸிஸ்ட் பண்ணும் என்றார் டாக்டர் கே

28) விடைக்கேற்ற வினா அமைக்க.

சிலப்பதிகாரத்தில் 11 வகையான ஆடற்கலைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதிலும் "வேளிர் ஆடல்" முக்கியமானது.

29) முற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

30) நான்கு வகை பாக்களையும் அவற்றின் ஓசைகளையும் கூறுக.

பகுதி III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க** **7 x 4 = 28**

**பிரிவு - 1**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31) சிறப்புப் பாயிரத்தின் இலக்கணத்தைக் கூறுக.

32) காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

33) தலைவி இல்லறம் நடத்திய பாங்கினை செவிலித்தாய்வழி நின்று விளக்குக.

34) "ஒன்றையும் சிறுமையாச் சிந்தனை செயாது" - விளக்குக.

**பிரிவு - 2**

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35) பேச்சுமொழி - எழுத்துமொழி வேறுபடுத்துக.

36) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

37) ஆனந்தரங்கர்ஒருவரலாற்றுஆசிரியர்என்பதைப்பாடப்பகுதிவழிஎடுத்துக்காட்டுக.

38) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

**குறிப்பு: காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் வினா எண். 42-க்குப் பதிலாக மாற்று வினா வழங்கப்படுகிறது.**

39) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு - இக்குறட்பாவில் பயின்றுவந்துள்ள அணியை விளக்குக.

(அல்லது) பொதுவியல் திணையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**40) இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏதேனும் மூன்று நயங்கள் மட்டும்)**

படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க!

கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க!

இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க!

இரவாமை அறம்என்னும் தமிழ்நாடு வாழ்க!

- பாரதியார்

**41) பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.**

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? (அல்லது) தனிமரம் தோப்பாகாது

**42) தமிழாக்கம் தருக.**

The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago they are being born every generation they will be born and reborn over and over again!

**காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.**

**பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் ஜி.யு. போப், 1839ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ் மொழியைப் பயிலத் தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார். அப்போதுதான் தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். ஐரோப்பியர், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்குரிய நூல் ஒன்றை (Tamil Hand Book) எழுதினார். ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார். பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார். எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கு நலம் அருளிய பெரியார் ஜி.யு. போப் ஆவார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**வினாக்கள்:**

1) இலக்கணக் குறிப்பு தருக. அ) பிறந்தார் ஆ) அருளிய
2) திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு. போப் - விடைக்கேற்ற வினாவை எழுதுக.
3) பதிப்பித்தார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
4) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

பள்ளிகூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்து துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

5) பொருத்துக.

அ) தொல்காப்பியம் - சங்க நூல்

ஆ) திருக்குறள் - பக்தி நூல்

இ) புறநானூறு - அற நூல்

ஈ) திருவாசகம் - இலக்கண நூல்

**பகுதி** - IV

**இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.** **3 x 6 = 18**

43) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க. (அல்லது)

தோழி தலைவனுக்குக் குறியிடத்தைக் கூறும் நயத்தை அகநானூற்றுப் பாடல்வழி விளக்குக.

44) தமிழகத்தில் ஐரோப்பியர்களின் கல்விப்பணி குறித்து எழுதுக. (அல்லது)

சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

45) யானை டாக்டர் கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் எழுதுக. (அல்லது)

பிம்பம் கதையை நாடக வடிவில் எழுதுக.

**பகுதி** - V

**46) அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 + 2 = 6**

அ) "அம்ம வாழி தோழி நம்மூர்ப்" - எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

ஆ) "யாதனின்" என தொடங்கும் குறளை எழுதுக.

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

**மாதிரி வினாத்தாளுக்கான விடைகளை**

**இணையத்தில் காண்க Scan QR Code ➔**

**தேர்வில் 100% மதிப்பெண் பெற்று வாழ்க என வாழ்த்துகின்றோம்**

**வாழ்க வளமுடன்!** **வாழ்க வையகம்!**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com